


# நிதியியல் அறிவு பற்றிய பாடவிதானம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# பாராட்டுதல்கள்

இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயமானது தரமான நிதியியல் பணிகளுக்கான பெறுவழிகளை உள்ளடக்குகின்ற வேளையில் எமது மக்கள்தொகையின் அனைத்து வகுப்பினர் மத்தியிலும் ஆக்கப்பூர்வமான பயன்பாட்டினை மேம்படுத்துகின்ற விதத்தில் வடிவமைக்கப்பட்ட மாறுதல்மிக்க கட்டமைப்பொன்றினை எடுத்துக்காட்டுகின்றது. பெறுவழியினை வசதிப்படுத்துவது மாத்திரமன்றி தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகங்கள் தமது பொருளாதார நல்வாழ்வை மேம்படுத்துகின்ற மற்றும் தாக்குப்பிடிக்கக்கூடியதன்மையினை வலுப்படுத்துகின்ற அறிந்த நிதியியல் தீர்மானங்களை மேற்கொள்கின்ற அனைவரையுமுள்ளடக்கிய நிதியியல் சூழமைவொன்றினைக் கட்டியெழுப்புவதற்கான எமது தேசத்தின் உறுதியான அர்ப்பணிப்பினை இவ்வுபாயம் பிரதிபலிக்கின்றது.

இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் குறிக்கோள்களை அனுசரித்து, இலங்கையின் நிதியியல் அறிவு வழிகாட்டலானது கவனமான முறையில் உருவாக்கப்பட்டு, 2024 மே மாதத்தில் உத்தியோகப்பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டமையானது நிதியியல் வசதிக்குட்படுத்தலினை நோக்கிய இலங்கையின் பயணத்தில் முக்கிய மைற்கல்லொன்றினை எடுத்துக்காட்டுகின்றது. ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட நான்கு உபாய தூண்களைச் சுற்றி கட்டமைக்கப்பட்ட சான்றுகள் அடிப்படையிலான நடவடிக்கைகளை எடுத்துக்காட்டி, இவ்வுபாய ஆவணம் முறைமைசார் நிதியியல் கல்விக்கான எமது நாட்டின் திட்ட அறிக்கையாக பணியாற்றுகின்றது. இங்கு எடுத்துரைக்கப்பட்டுள்ள நிதியியல் அறிவுப் பாடவிதானமானது, உள்ளடக்க உருவாக்கம் மற்றும் வேறுபட்ட கூறுகளை ஒன்றிணைக்கும் எண்ணக்கரு என்பவற்றின் கீழ் அடிப்படை அடைவொன்றினை எடுத்துக்காட்டுகின்றது. பல்வகை மக்கள்தொகை வகுப்பினர்கள் மற்றும் பொருளாதார சூழ்நிலைகளை உள்ளடக்கி, எமது தேசம் முழுவதும் ஒத்திசைவானதும், கலாசார ரீதியாக பொருத்தமானதும் மற்றும் கற்பித்தல் ரீதியாக சிறந்ததுமான நிதியியல் கல்வி வழங்கப்படுவதை உறுதிசெய்வதற்கு இத் தூண் குறிப்பாக பிரத்தியேகமாக அமைந்துள்ளது.

புதிய பாதையொன்றினை அமைக்கவிருக்கும் இம் முயற்சியை, மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களம் தலைமை வகித்துள்ளது. கோட்பாட்டு ரீதியான தெளிவையும் நடைமுறைசார்ந்த பொருத்தப்பாட்டையும் உறுதிசெய்வதில் ஏதுவாகவிருந்த பங்களிப்புகளை வழங்கிய களனி பல்கலைக்கழகத்தின் மேன்மைமிக்க கல்விசார் நிபுணத்துவத்தின் கூட்டுமுயற்சி, ஊக்க ஆற்றலையும் இப்பாடவிதான அபிவிருத்தி செயன்முறையையும் எடுத்துக்காட்டுகின்றது. நிதியியல் அறிவுத் திட்ட அறிக்கையின் வெற்றிக்கு இன்றியமையாததொன்றாகிய ஏனைய ஆர்வலர்களுடன் ஒன்றுசேர்ந்து, மத்திய வங்கியினுள் முக்கிய ஆர்வலர் திணைக்களங்களுடனான முனைப்பான கூட்டுமுயற்சியின் ஊடாக அபிவிருத்தி செயல்முறை கணிசமானளவு மெருகூட்டப்பட்டது. பல்வகை நோக்குகள், விசேடத்துவமிக்க அறிவு மற்றும் வேறுபட்ட அனுபவங்கள் போன்ற ஆற்றல்மிக்க கல்விசார் கட்டமைப்பொன்றினை உருவாக்குவதற்கு, இப் பங்குடைமை ஒட்டுமொத்த முறைமை அணுகுமுறையொன்றினை பிரதிபலிக்கின்றது.

யப்பான் அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்ட “ஊழலுக்கு எதிரான கொள்கை ஆதரவின் ஊடாக பொருளாதார ஆளுகையை மேம்படுத்தல” கருத்திட்டம் போன்ற யப்பான் குறைநிரப்பு வரவுசெலவு ஊடானவை உள்ளிட்ட இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்த்திட்டமானது, இந் நிதியியல் அறிவு பாடவிதானத்தின் அபிவிருத்தி மற்றும் வடிவமைப்பில் பெறுமதிமிக்க நிதியியல் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கியது. இடம்பெற்றுவரும் இப் பங்குடைமை ஊடாக முறைப்படுத்தப்பட்ட இவ் ஒத்துழைப்பு, பகிரப்பட்ட அபிவிருத்தி சவால்களை தீர்ப்பதிலும் நிதியியல் வசதிக்குட்படுத்தல் முயற்சிகளின் உலகளாவிய முக்கியத்துவத்தினை அடிக்கோடிட்டுக் காட்டுவதிலும், பன்னாட்டு ஒத்துழைப்பின் வலிமையை எடுத்தியெம்புகின்றது.

இப் பாடவிதானம் பலதரப்பட்ட கல்விசார் மற்றும் விழிப்புணர்வு தளங்கள் முழுவதும் ஈடுப்படுத்தப்படுவதற்காக உறுதியான தரப்படுத்தப்பட்ட வளமாக பணியாற்றும் விதத்தில் மிகவும் நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இப் பாடவிதானத்தின் கட்டமைப்பு பரந்தளவிலான நிதியியல் அறிவுத் தேவைகளை கூட்டாக தீர்க்கும் ஏழு உபாய ரீதியாக வடிவமைக்கப்பட்ட, வசதிக்குட்படுத்தும் அத்தியாயங்களை உள்ளடக்கியுள்ளது: பொருளாதாரச் சூழல், நிதியியல் சூழல், தனிப்பட்ட நிதி, நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான நிதியியல் முகாமைத்துவம், டிஜிட்டல் நிதியியல் அறிவு, நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு மற்றும் வரிகள் பற்றிய அறிவு.

இப் பாடவிதானம் வேகமாக பரிணமித்து வரும் நிதியியல் சூழமைவிற்கு ஏற்றவாறு இருப்பதற்காக, கிரமமான மீளாய்விற்கும் மேம்பாட்டிற்கும் உட்படும் ஒரு இயக்கவாற்றல்மிக்க, உயிர்ப்புள்ள ஆவணமாக கருதப்படுகின்றது. வளர்ந்து வரும் போக்குகள், தொழில்நுட்பவியல் புத்தாக்கங்கள், ஒழுங்குமுறைப்படுத்தல் மாற்றங்கள் மற்றும் நமது பல்வகை மக்கள்தொகை பரிணமிப்பதுடன் தொடர்புடைய தேவைகளுக்கு பொருத்தமானதாகவும், துல்லியமானதாகவும் மற்றும் பதிலளிக்கக்கூடியதாகவும் உள்ளடக்கம் காணப்படுதல், தொடர்ச்சியான மேம்பாட்டிற்கான எமது அர்ப்பணிப்பினை உறுதி செய்கின்றது. இப் பாடவிதானத்துடன் ஈடுபட்டுள்ள கல்வி புகட்டுவர்கள், கல்வி கற்பவர்கள், தொழிலில் ஈடுபடுபவர்கள் மற்றும் அனைத்து ஆர்வலர்களிடமிருந்தும் ஆக்கபூர்வமான பின்னூட்டல்கள், ஆலோசனைகள் மற்றும் அவதானிப்புகளை ஊக்குவிப்பதனூடாக நாம் வரவேற்கின்றோம். இலங்கை முழுவதும் நிதியியல் அறிவை மேம்படுத்துவதற்கான எமது கூட்டான பணியில் உங்கள் நுண்நோக்குகள் பெறுமதிமிக்கவை. உங்கள் நோக்குகளையும் ஆலோசனைகளையும் எங்களுடன் கெளைளநஉளூஉடிளட.டம எனும் மின்னஞ்சலினூடாக பகிர்ந்து கொள்ளுங்கள்.

# உள்ளடக்கம்


**அத்தியாயம் 1 பொருளாதாரச் சூழல்**

1.1. அறிமுகம் ........ 04
1.2 மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சி ........ 06
1.3 தொழிற்படை மற்றும் தொழிலின்மை ........ 07
1.4 பணவீக்கம் ........ 07
1.5 செலாவணி வீதம் ........ 08
1.6 வட்டி வீதங்கள் ........ 10
1.7 இறைக்கொள்கை ........ 10

**அத்தியாயம் 2: நிதியியல் சூழல்**

2.1 அறிமுகம் ........ 12
2.2 நிதியியல் சந்தைகள் ........ 14
2.3 நிதியியல் நிறுவனங்கள் ........ 14

**அத்தியாயம் 3. தனிப்பட்ட நிதி**

3.1 அறிமுகம் ........ 22
3.2 வருமானத்தை நிர்வகித்தல் ........ 26
3.3 செலவு முகாமைத்துவம் ........ 31
3.4 சேமிப்பு முகாமைத்துவம் ........ 35
3.5 முதலீட்டு முகாமைத்துவம் ........ 39
3.6 படுகடன் முகாமைத்துவம் ........ 50
3.7 தனிப்பட்ட பாதுகாப்பு ........ 59
3.8 தனிப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தினைத் தயாரித்தல் ........ 63

**அத்தியாயம் 4 நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான நிதியியல் முகாமைத்துவம்**

4.1 அறிமுகம் ........ 72
4.2 உமது சொந்த வியாபாரத்தினை தொடங்குதல் ........ 75
4.3 வியாபாரத்தின் செலவுகளை அடையாளம் காணுதல் ........ 78
4.4 நுண்பாக சிறிய நடுத்தரதொழில் முயற்சிகளுக்கான முதலீட்டுத் தீர்மானங்கள் ........ 83
4.5 நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான நிதியிடல் தீர்மானங்கள் ........ 85
4.6 வரவு செலவுத் திட்டமிடல் ........ 91
4.7 நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான நிதியியல் பதிவேடுகளைப் பேணுதல் ........ 93
4.8 நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு ..... 104

**அத்தியாயம் 5 டிஜிட்டல் நிதியியல் அறிவு**

5.1 அறிமுகம் ........ 105
5.2 டிஜிட்டல் நிதியியல் சேவைகள் ........ 107
5.3 இ-வர்த்தகம் ........ 120
5.4 டிஜிட்டல் வரவுசெலவுத் திட்டப்படுத்தல் கருவிகள் ........ 124

**அத்தியாயம் 6: நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு**

6.1 அறிமுகம் ........ 126
6.2 நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு ........ 126
6.3 பிரமிட் திட்டங்களைப் புரிந்துக் கொள்ளுதல் ........ 132

**அத்தியாயம் 07 வரிகள் பற்றிய அறிவு**

7.1 அறிமுகம் ........ 139
7.2 வரி அடையாள இலக்கம் ........ 143
7.3 வரிகளின் வகைகள் ........ 145
7.4 நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கான வரிவிதிப்பு ........ 149

இது ரத்நாயக்கவின் குடும்பம் அவர்கள் எமது சமுதாயத்தின் வேறுபட்ட வகிபாகங்களை பிரசன்னப்படுத்துகின்றனர். நாங்கள் இவர்களது பண்புகளை ஒவ்வொருவருக்கும் தேவையான நிதியியல் அறிவினைத் தெளிவுபடுத்த பயன்படுத்துவோம்.



# ரத்நாயக்கவின் குடும்பம்





**Mr. Anil Rathnayake**
is the father and head of the household. He is 50 years old and works as a manager in the private

**Mrs. Anusha Rathnayake**
is a full-time mother and housewife. She is 45 years old and does not hold a job.







**Ms. Gothami Rathnayake**
is the eldest child (daughter) in the family. At 22 years old, she is a qualified young woman working in the private sector.

**Mr. Dhananjaya Rathnayake**
is the second child (son) in the family. He is 20 years old and is considering starting his own business, as he is not interested in pursuing further education.

**Master Ayodya Rathnayake**
is the youngest child (son) in the family. He is 12 years old and is in grade 7 at school.

அத்தியாயம் 1

# பொருளாதாரச் சூழல்

## 1.1 அறிமுகம்

### கற்றல் பெறுபேறுகள்

- நாட்டின் பொருளாதார சூழலை வரையறை செய்து விளக்குதல்
- இலங்கையின் முக்கியமான பேரண்ட பொருளாதார மாறிகளைத் தெரிந்து கொள்ளுதல்.
- மொத்த உள்நாட்டு உற்பத்தி, தொழிற்படை மற்றும் தொழிலின்மை, பணவீக்கம் மற்றும் செலாவணி வீதம் ஆகிய பேரண்ட பொருளாதாரக் கோட்பாடுகளுடன் பரீட்சயமாக்கிக் கொள்ளுதல்.
- இலங்கையின் இறைக் கொள்கையினையும் பொதுப்படுகடனையும் புரிந்துகொள்ளுதல்
- பல்வேறு வகையான வரிகள் பற்றியும் பொருளாதாரத்திற்கான அவற்றின் முக்கியத்துவம் மற்றும் தாக்கம் பற்றியும் விபரித்தல்

பொருளாதாரச் சூழல், தனிப்பட்டவர்களின் வாழ்க்கை மற்றும் அவர்களுடன் சேர்ந்து காணப்படும் வியாபார செயலாற்றல்கள் இரண்டையும் பாதிக்கின்றது. பின்வருவன புகழ்பூத்த ஆசிரியர்களினால் தரப்பட்ட ஒரு சில வரைவிலக்கணங்களாகும்.

**“பொருளாதார சூழல், நுகர்வோர் கொள்வனவுச் சக்தி மற்றும் செலவிடல் மாதிரிகளை பாதிக்கும் காரணிகளை உள்ளடக்கியிருக்கிறது. இது வருமான மட்டங்கள் பணவீக்கம், தொழிலின்மை மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி என்பனவற்றை உள்ளடக்கி வியாபாரங்களும் நுகர்வோரும் முன்னேற்றம் காண்பதற்கான இயலாற்றலை வடிவமைக்கிறது.”**

*(பிலிப்கொட்லரின் சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்)*

**“பொருளாதாரச் சூழல் என்பது உற்பத்தி, நுகர்வு மற்றும் பொருளாதாரமொன்றிற்குள் முதலீட்டு தீர்மானங்கள் என்பன மீது தாக்கத்தினை செலுத்தும் வெளிப்புற பொருளாதார நிலைமைகளைக் குறிக்கிறது”**

*(போல் ஏ சாமுவேல்சனின் பொருளாதாரங்கள்: ஓர் அறிமுக பகுப்பாய்வு)*

**“பொருளாதார சூழலானது சந்தைக் கட்டமைப்புக்கள், பொருளாதார உறுதிப்பாடு, கைத்தொழில்கள் மற்றும் அவற்றின் இலாபத்தன்மைகளில் தாக்கத்தினை செலுத்துகின்ற போட்டித்தன்மை போன்ற பரந்த பேரண்டப் பொருளாதாரக் காரணிகளை உள்ளடக்கியிருக்கிறது.”**

*(மைக்கேல் ஈ போட்டரின் நாடுகளின் போட்டித்தன்மை வாய்ந்த அநுகூலங்கள்)*

மேற்குறிப்பிட்ட வரைவிலக்கணங்கள் வளர்ச்சி, குறைந்த பணவீக்கம் மற்றும் உறுதியான நிதியியல் சந்தைகள் என்பனவற்றை பண்புகளாகக் கொண்ட வலுவான பொருளாதார சூழலை நிறுவுவதுடன் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தக்ககூடிய உயர்ந்த தொழில் பாதுகாப்பு, சிறந்த ஊதியங்கள் மற்றும் கடன்களை அணுகுதல் போன்றவற்றுக்கு வழிவகுக்கிறது. மாறாக, உயர்ந்தளவான பணவீக்கம், மந்தம் அல்லது நிதியியலின் உறுதியற்றதன்மை ஆகிய பண்புகளைக் கொண்ட உறுதியற்ற பொருளாதார சூழல், தொழிலின்மை, குறைந்த கொள்வனவுச் சக்தி மற்றும் மக்களுக்கான பொருளாதார கஸ்டங்கள் என்பனவற்றைத் தோற்றுவிக்கிறது.



ரத்நாயக்காவின் குடும்பம் ஒவ்வொரு நாளும் இரவு உணவின்போது ஒவ்வொரு வரையும் சந்திப்பது வழக்கம். அவர்கள் இம்முறை பின்வரும் கலந்துரையாடலுடன் சந்திக்கின்றார்கள்.




குடும்பத்தின் மேற்குறிப்பிட்ட கலந்துரையாடல், நாட்டின் அடிப்படைப் பேரண்ட பொருளாதார காரணிகளைப் புரிந்துகொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றது. இத்தகைய காரணிகள் இலங்கையின் ஒவ்வொரு குடும்பத்தினதும் அல்லது எந்தவொரு தனிப்பட்டவரினதும் வாழ்க்கையினை பாதிப்பதாகக் காணப்படுகின்றன. நாங்கள் இலங்கையின் சில பொதுவான பேரண்டப் பொருளாதார மாறிகளை அடையாளம் காண்பதுடன் அம்மாறிகள் உங்கள் வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கிறது என்பதனையும் பார்ப்போம்.



## 1.2. மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சி

### மொத்த உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன?

மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது குறிப்பிட்டதொரு காலப்பகுதிக்குள் பொருளாதாரமொன்றில் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்துப் பொருட்கள் மற்றும் சேவைகளின் மொத்த பெறுமதியாகும். இது பொருளாதாரத்திலுள்ள அனைத்து பொருளாதார நடவடிக்கைகளினதும் கூட்டப்பட்ட பெறுமதிகளை உள்ளடக்குகிறது. மொ.உ.உற்பத்தி, வேறுபட்ட பொருளாதாரங்களின் அளவுகளை ஒப்பிடுவதற்கு பன்னாட்டு ரீதியாக பயன்படுத்தப்படுகின்ற முக்கியமானதொரு குறிக்காட்டியாகும்.

நாட்டின் புள்ளிவிபரவியல் முகவரான தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் இலங்கையின் தேசிய உற்பத்திப் புள்ளி விபரங்களைத் தொகுக்கிறது. தொகைமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் தேசிய வருமான புள்ளி விபரங்களை காலாண்டு மற்றும் ஆண்டு அடிப்படையில் வெளியிட்டு வருகிறது.

### பொருளாதார வளர்ச்சி என்றால் என்ன?

குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் பொருளாதார வளர்ச்சி என்பது முன்னைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியில் ஏற்படுகின்ற சதவீத மாற்றமாகும்.

மொ.உ.உற்பத்தியின் வளர்ச்சி உயர்ந்த உற்பத்தியுடன் இணைந்ததாக காணப்படுவதுடன் பொதுவாக வீட்டுத்துறையினராலும் நிறுவனங்களினாலும் உழைக்கப்பட்ட உயர்ந்த வருமானத்தினையும் அரசாங்கத்திற்கான வரி அரசிறையினையும் எடுத்துக்காட்டுகிறது. இது கூடுதலான தொழில் வாய்ப்புக்கள் மற்றும் குறைவடைந்த வறுமை என்பனவற்றுடனும் தொடர்புபட்டிருக்கிறது. எனவே, பொருளாதாரம் உறுதியானதொரு வீதத்தில் வளர்ச்சியடையும்போது அது நாட்டின் அதிகரித்த சுபீட்சமாக மாறும்.

### உண்மையான எதிர் பெயரளவு மொ.உ.உற்பத்தி

மொ.உ.உற்பத்தி வளர்ச்சியை பகுப்பாய்வு செய்யும்போது உற்பத்தியில் ஏற்பட்ட உண்மையான அதிகரிப்பின் காரணமாக ஏற்பட்ட மாற்றம் எவ்வளவு மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக ஏற்பட்ட மாற்றம் எவ்வளவு என்பதனை அளவிடுவது முக்கியமானதாகும். இதன் காரணமாக மொ.உ.உற்பத்தியை அளவிடுவதற்கு இரண்டு வழிகள் காணப்படுகின்றன. அவையாவன உண்மை மற்றும் பெயரளவு

### பெயரளவு மொ.உ.உற்பத்தி என்றால் என்ன?

பெயரளவு மொ.உ.உற்பத்தி, குறித்துரைக்கப்பட்டதொரு காலப்பகுதியில் பொருளாதாரமொன்றின் உற்பத்திகளினது மொத்தப் பெறுமதியினை அதேகாலப்பகுதயில் நிலவிய விலைகளின் நியதிகளில் அளவிடுகின்றது. இது தொகைமதிப்பு புள்ளிவிபரத்திணைக்களத்தின் வெளியீடுகளில் நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி என அழைக்கப்படுகின்றது.

### உண்மை மொ.உ.உற்பத்தி என்றால் என்ன?

பொருளாதாரத்தில் உற்பத்தியின் பெறுமதியினை தெரிந்துகொள்வதற்காக விலையின் மாற்றங்களினது தாக்கம் நீக்கப்படுகிறது. விலைகளினது மாற்றங்களின் தாக்கம் இல்லாமல் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளினது எண்ணிக்கையினது நியதிகளில் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு எவ்வளவு என்பதனை அறிந்துகொள்வது முக்கியமானதாகும். உண்மை மொ.உ.உற்பத்தியானது குறித்துரைக்கப்பட்டதொரு காலப்பகுதியில் பொருளாதாரமொன்றிலுள்ள உற்பத்திகளின் மொத்தப் பெறுமதியினை அடிப்படையாண்டு காலப்பகுதியில் நிலவிய விலைகளின் நியதிகளில் அளவிடுகின்றது. தற்பொழுது, உண்மை மொ.உ.உற்பத்தி எண்கள் 2015இல் நிலவிய விலைகளினை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்படுகின்றன. ஆகவே, நடைமுறை அடிப்படையாண்டு 2015 ஆகும். இதன் கருத்து யாதெனில் 2015 மற்றும் அதன் பின்னர் இது வரை பிரசுரிக்கப்பட்ட உண்மை மொ.உ.உற்பத்திபுள்ளி விபரங்கள் 2015 காலப்பகுதியில் நிலவிய விலைகளின் நியதிகளில் தெரிவிக்கப்படுகின்றன என்பதேயாகும். உண்மை மொ. உ.உற்பத்தி புள்ளி விபரங்கள் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்கள வெளியீடுகளில் நிலையான (2015) விலைகளில் மொ.உ.உற்பத்தி என அழைக்கப்படுகிறது. (2015 இலிருந்து விலைகள் நிலையாக காணப்படுகின்றது என அனுமானிக்கப்படுகிறது என்பதே கருத்தாகும்).

மொ.உ.உற்பத்தியின் வளர்ச்சி அல்லது பொருளாதாரத்தின் வளர்ச்சி பற்றி நாம் பேசும்போது, வழமையான நடைமுறை யாதெனில் உண்மை மொ.உ.உற்பத்தியில் ஏற்படும் மாற்றங்களை பரிசீலனையில் கொள்வதாகும். ஏனெனில் இது விலை அசைவுகளின் தாக்கத்தினை நீக்கியிருப்பதேயாகும்.

### தலைக்குரிய மொ.உ.உற்பத்தி என்றால் என்ன?

தலைக்குரிய மொ.உ.உற்பத்தி என்பது நாட்டில் ஆளொருவர் சராசரியாக ஆண்டொன்றில் எவ்வளவு உழைக்கின்றார் என்பதனை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படுகின்ற மிகப்பொதுவானதொரு குறிகாட்டியாகும். தலைக்குரிய மொ.உ.உற்பத்தி ஆண்டின் குறிப்பிட்டதொரு காலப்பகுதியின் அறிவிக்கப்பட்ட பெயரளவு மொ.உ.உற்பத்தியை அதே ஆண்டுப்பகுதியில் வசித்த மக்களின் மொத்த எண்ணிக்கையினால் வகுப்பதன் மூலம் பெறப்படுகின்றது. (இப்புள்ளிவிபரம் நடுவாண்டு குடித்தொகை என அழைக்கப்படுகிறது)

ஐ.அ.டொலர் நியதிகளில் தெரிவிக்கும்போது தலைக்குரிய மொ.உ.உற்பத்தி, நாட்டின் செல்வத்தினை அளவிடுவதற்கு பன்னாட்டு ரீதியாக பயன்படுத்தப்படுகின்ற குறிகாட்டியாக விளங்குகிறது. தாழ்ந்த, நடுத்தர மற்றும் உயர்வருமான நாடுகளின் பகுப்பாய்வு முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட தலைக்குரிய மொ.உ.உற்பத்தியின் வரம்புகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

## 1.3. தொழிற்படை மற்றும் தொழிலின்மை

### தொழிற்படை என்றால் என்ன?

பொருளாதாரமொன்றின் தொழிற்படை பொருளாதாரத்தில் அல்லது தொழில் வழங்கலில் கிடைக்கத்தக்கதாகவுள்ள தொழிலாளரின் தொகையினை பிரதிபலிக்கின்றது. தொழிற்படை குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் 15 வயதிற்கு மேற்பட்ட தொழிலிலுள்ள அல்லது தொழிலற்ற (ஆனால் வேலை தேடிக்கொண்டிருக்கின்ற) மக்களை உள்ளடக்குகின்றது. தொழிற்படை என்பது 15 வயதிற்கும் அதற்கு மேற்பட்ட வயதினைக் கொண்ட பொருளாதார ரீதியாக செயற்படுகின்ற குடித்தொகையினர் எனவும் அறியப்படுகின்றது.

15 வயதினை அல்லது அதற்குக் கூடுதலான வயதினைக் கொண்டவர்கள் தொழிலற்றவர்களாக இருந்து தொழிலொன்றினைப் பெற ஆர்வமின்றியிருப்பவர்கள் தொழிற்படையில் இல்லாதவர்களாக வகைப்படுத்தப்படுவதுடன் பொருளாதார ரீதியில் தொழிற்படாத குடித்தொகையினராகவும் இருக்கின்றார்கள் என்பதனைக் கவனிப்பது மிக முக்கியமானதாகும்.




#### தொழிலின்மை வீதம்

தொழிலின்மை வீதம் தொழிற்சந்தையின் நிலையினை பிரதிபலிப்பதனால் பொருளாதாரத்தின் ஆரோக்கியத்தின் குறிகாட்டியாக விளங்குகின்றது. இது தொழிலற்ற மற்றும் தொழில் எதிர்பார்த்துக் காத்திருக்கின்ற தொழிற்படையின் சதவீதமாகக் காணப்படுகிறது.

## 1.4 பணவீக்கம்

### பணவீக்கம் என்றால் என்ன?

பணவீக்கம் என்ற சொற்பதம் பொதுவாக பொருளாதாரத்திலுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளில் ஏற்படும் அதிகரிப்பினைக் குறிக்கிறது. ஏனெனில் இது பொருளாதார நிலையின் முக்கிய குறிகாட்டியொன்றாக இருப்பதனாலும் நாட்டிலுள்ள மக்களின் நலனோம்புகைகளை அவர்களது கொள்வனவுச் சக்தி ஊடாக நேரடியாக பாதிப்பதனாலும் பணவீக்கத்தினை அளவிடுவது முக்கியமானதாகும்.

### பணவீக்கம் எவ்வாறு அளவிடப்படுகிறது?

இருவேறுபட்ட காலப்பகுதிகளில் ஒரு பொருட்கள் சேவைகளின் கூடைக்கு நாம் செலுத்துகின்ற விலைகளில் ஏற்படும் சதவீத மாற்றங்களினால் அளவிடப்படுகிறது.

இப் பொருட்கள் சேவைகளது கூடையின் விலைகளை அளவிடுவதற்கு விலைச்சுட்டெண் அவசியமாகும். பணவீக்கத்தினை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படுகின்ற மிகப்பொதுவான விலைச்சுட்டெண் நுகர்வோர் விலைச்சுட்டெண் ஆகும். நு.வி.சு.ஆனது குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் (பொதுவாக ஆண்டொன்றின் மாதம் அல்லது காலாண்டு) சராசரி குடியிருப்பாளரொருவரினால் நுகரப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளினதும் கூடையின் மொத்த விலைகளை அளவிடுகிறது. இக்கூடையிலுள்ள பொருட்கள் வீட்டுத்துறையினரின் நுகர்வு மாதிரிகளைப் பொறுத்து காலப்போக்கில் மாற்றமடைகின்றன. இப்பொருட்களின் விலைகள் பொருளாதாரத்தின் கேள்வி மற்றும் நிரம்பல் நிலைமைகளுக்கேற்பவும் மாற்றமடைகின்றன.

எனவே, எவ்வாறு நாங்கள் பணவீக்கத்தினை அளவிடுவது? பணவீக்கம் என்பது இருகாலப்பகுதிகளுக்கிடையில் நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் சதவீதமாற்றமாகும். பணவீக்கத்தினை அளவிடுவதற்கு ஏதேனும் இரண்டு ஒப்பிடத்தக்க காலப்பகுதிகளை நாம் தெரிவுசெய்துகொள்ள முடியும். இலங்கையில் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் அலுவல்சார் பணவீக்க எண்தொகையினை வெளியிடுகின்றது. தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் ஒவ்வொரு மாதத்திற்குமான பணவீக்கத்தினை நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் மூன்று வேறுபட்ட சதவீத மாற்றங்களுடன் வெளியிடுகின்றது. இம்மூன்று வழிகளையும் பயன்படுத்தி 2024 யூனின் பணவீக்கம் எவ்வாறு அளவிடப்படுகின்றது என்பதனை உதாரணமாக எடுத்துக் கொள்வோம்.

*அட்டவணை ஓஓ: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் பணவீதத்தினை அளவிடுகின்ற மூன்று வேறுபட்ட முறைகள்*

| பணவீக்கத்தினை அளவிடல் | முதற்காலம் | இரண்டாம் காலம் |
|---|---|---|
| 2024 யூனில் ஆண்டிற்காண்டு பணவீக்கம் | யூன் 2023 | யூன் 2024 |
| 2024 யூனில் மாதத்திற்கு மாதம் பணவீக்கம் | மே 2024 | யூன் 2024 |
| 2024 யூனில் 12 மாத அசையும் சராசரி பணவீக்கம் | 2023 யூனில் முடிவடைந்த ஆண்டு | 2024 யூனில் முடிவடைந்த ஆண்டு |

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் இரண்டு நுகர்வோர் விலைச்சுட்டெண்களை வெளியிடுகிறது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் கொழும்பு மாவட்டத்தின் நகர்ப்புறங்களின் பொதுவான விலை மட்டத்தினையும் பணவீக்கத்தினையும் அளவிடுகின்றது. தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் முழு நாட்டினையும் உள்ளடக்குகிறது. தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் திரட்டப்பட்டு வெளியிடப்படுகின்ற இந்நுகர்வோர் விலைச்சுட்டெண் மற்றும் ஏனைய விலைச்சுட்டெண்கள் தொடர்பான மேலதிக தகவல்களுக்கு .. செய்து http://www.statistics.gov.lk. இனை பார்க்கவும்.

பணவீக்கத்துடன் தொடர்பான சில சொற்பதங்கள்: பெரும்பாலான நேரங்களில் நாங்கள் "பணவீக்கம்" என்ற சொல்பற்றி கேள்விப்படுகின்றோம். இது நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் ஏற்படும் அதிகரிப்பாகும். பணவீக்கத்துடன் தொடர்பான ஏனைய இரண்டு சொற்பதங்கள் காணப்படுகின்றன. பணவீக்க வீழ்ச்சி மற்றையது பணச்சுருக்கம். பணவீக்க வீழ்ச்சி என்பது பணவீக்கத்தில் ஏற்படும் வீழ்ச்சியாகும். வீழ்ச்சியடையும் பணவீக்க காலத்தில் விலைகள் இன்னமும் அதிகரித்துக் கொண்டிருக்கும் ஆனால் முன்னைய காலப்பகுதியைவிட மெதுவான வீதத்தில் இருக்கும். ஆகவே நுகர்வோர் விலைச்சுட்டெண்ணும் அதிகரிக்கும். பணவீக்கம் இன்னமும் நேர்க்கணியமாகவே இருக்கும், ஆனால் முன்னைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் சிறியளவில் இருக்கும் பணச்சுருக்கமென்பது நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் ஏற்படும் வீழ்ச்சியாகும். பணச்சுருக்க காலத்தில் விலைகள் குறைவடைந்தமையினால் பணவீக்கம் எதிர்கணியமாகத் திரும்பும்.

***tiuglk; …: gztPf;fk;>; gztPf;f tPo;r;rp kw;Wk; gzr;RUf;fk; gw;wpanjhU tpsf;fk;.***




| காலப்பகுதி | வருடம் 1 | | | | | | | | | | | | வருடம் 2 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சன | பெப் | மார் | ஏப் | மே | யூன் | யூலை | ஓக | செத் | ஓத் | நவெ | திச | சன | பெப் | மார் | ஏப் |
| மாதாந்த நு.வி.சு | | 112 | 115 | 120 | 126 | 134 | 144 | 152 | 156 | 158 | 155 | 150 | 147 | 145 | 147 | 151 |
| மாதத்திற்கு மாத பணவீக்கம் | | 1.8 | 2.7 | 4.3 | 5.0 | 6.3 | 7.5 | 5.6 | 2.6 | 1.3 | -1.9 | -3.2 | -2.0 | -1.4 | 1.4 | 2.7 |

பணவீக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்: பணவீக்கத்தின் மீது எக்காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதனைப் பார்ப்போம் பணவீக்கத்தின் மீது தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற மூன்று முக்கிய காரணிகளாக பொருளாதாரத்தின் கேள்வி, நிரம்பல் மற்றும் செலாவணி வீதம் என்பன காணப்படுகின்றன.

பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கேள்வி நிரம்பலுக்கும் அப்பால் அதிகரிக்குமிடத்து மிகையான கேள்வியின் காரணமாக விலைகள் அதிகரிக்கும். மறுபுறத்தில் குறிப்பிட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் நிரம்பல் மிகையாக காணப்படுமிடத்து விலைகள் வீழ்ச்சியடையக்கூடும். மேலும், பணவீக்க எதிர்பார்ப்புக்களும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்குமான கேள்வியின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தி விலைகள் மீது செல்வாக்கினை தோற்றுவிக்கும். மேலும் உலகளாவிய சந்தையில் காணப்படும் கேள்வி மற்றும் நிரம்பல் நிலைமைகளும் உள்நாட்டு நாணயத்தின் செலாவணி வீதங்களும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் விலைகளை அதிகரிக்கலாம். பொதுவாக, செலாவணி வீதத்தில் ஏற்படும் மாற்றத்தின் முழுமையான தாக்கம் உள்நாட்டு விலைகளின் மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தாது. செலாவணி வீத தளம்பல்களின் காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் உள்நாட்டு விலைகளில் ஏற்படும் மாற்றம் உள்நாட்டு விலைகளின் மீது செலாவணி வீதம் சுமத்தப்படுகின்ற மட்டத்தினைப் பொறுத்ததாகும்.

## 1.5. செலாவணி வீதம்

### செலாவணி வீதம் எதனை அளவிடுகின்றது?

செலாவணி வீதமானது ஒரு பொருளாதாரத்திலுள்ள எத்தனை நாணய அலகுகளை மற்றொரு பொருளாதாரத்திலுள்ள ஒரு நாணய அலகிற்காக மாற்ற வேண்டியிருக்கும் என்பதனை குறிக்கன்றது. ஆகவே செலாவணி வீதம் என்பது மற்றொரு நாணயத்தின் பெறுமதி தொடர்பான ஒரு நாணயத்தின் பெறுமதியாகும். இலகுவான முறையில் விளக்குவதாயின்,

[1] The DCS publishes the Producer Price Index which reflects the changes in prices received by producers of domestically produced agricultural produce, manufacturing goods and utilities.

மற்றொரு நாணயத்தினை பயன்படுத்தி நாம் ஒரு நாணயத்தினை வாங்குவதற்காக செலுத்தும் விலையாகும். உதாரணமாக ஒரு ஐக்கிய அமெரிக்க டொலரை வாங்குவதற்கு ரூ.300 எமக்குத் தேவையாயின் செலாவணி வீதம் ஐ.அ.டொலரொன்றுக்கு இலங்கை ரூபா 300 ஆகும். (மாறாக நாங்கள் டுமுசு ஒன்று ஐ.அ.டொலா் 0.267 எனக்குறிப்பிட முடியும்). சா்வதேச ரீதியாக டுமுசு என்ற சொற்பதம் இலங்கை ரூபாவினை அடையாளம் காணப் பயன்படுத்தப்படுகின்றது. இக்கலந்துரையாடலை இலகுபடுத்தும் பொருட்டு ஐ.அ.டொலரொன்றிற்கான டுமுசு என்ற செலாவணி வீதத்தினை மாட்டும் பயன்படுத்துவோம்.

செலாவணி வீதத்தினைப் பயன்படுத்தி ஒரு நாணயத்திலுள்ள பொருட்கள் அல்லது சேவைகள் மற்றொரு நாணயத்தில் எவ்வளவு பெறுமதியினைக் கொண்டிருக்கும் என்பதனை நாம் தீா்மானிக்க முடியும்

நாணயமொன்றின் பெறுமதி உயர்வு எதிர் தேய்மானம்: ஐ.அ.டொலரொன்றிற்கான இலங்கை ரூபாவின் செலாவணி வீதம் அதிகரிக்கும் போது ஐ.அ.டொலா் நியதிகளில் இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைகிறது. இச்சூழ்நிலை ரூபாவின் நாணய தேய்மானம் என அழைக்கப்படுகிறது. மறுபுறத்தில், ஐ.அ.டொலரொன்றுக்கான இலங்கை ரூபாவின் செலாவணி வீதம் வீழ்ச்சியடையுமாயின் ஐ.அ.டொலா் நியதிகளில் ரூபாவின் பெறுமதி உயா்வடைகின்றது. இது ரூபாவின் பெறுமதி உயர்வு எனப்படுகிறது.

*வரைபடம் ---: ரூபாவின் பெறுமதி ஏற்றம் பெறுமதியிறக்கம் விளக்கப்படுகிறது.*




செலாவணி வீதம் எவ்வாறு தீா்மானிக்கப்படுகிறது? இலங்கை ரூபா ஒரு மிதக்கின்ற நாணயமாகும். இதன் கருத்து யாதெனில் மற்றொரு நாணயத்தின் நியதிகளில் ரூபாவின் செலாவணி வீதம் அல்லது விலை வெளிநாட்டு செலாவணி சந்தையிலுள்ள வழங்கல் மற்றும் கேள்வி நிலைமைகளினால் தீா்மானிக்கப்படுகிறது.

மிதக்கின்ற செலாவணி வீத அமைப்பில், மத்திய வங்கி (நாணய மேலாண்மைச் சபை) சந்தை அடிப்படைகளினால் தூண்டப்படாத செலாவணி வீதத்தில் சடுதியாகவும் கடுமையாகவும் ஏற்படும் அசைவுகளைக் கட்டுப்படுத்துவதற்காக வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தலையிடலாம். இத்தலையீடுகள் சந்தையில் வெளிநாட்டு நாணயங்களின் கொள்வனவுகளாக (கேள்வியை அதிகரிப்பதற்கு) அல்லது விற்பனைகளாக (நிரம்பலை அதிகரிப்பதற்கு) இருக்கலாம். அத்தகைய நடவடிக்கைகள் பரந்தளவிலான பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்றன. மறுபுறத்தில், வெளிநாட்டு நாணய ஒதுக்கு முகாமைத்துவ தொழிற்பாடுகளுக்காக, வெளிநாட்டு செலாவணி கொள்வனவுகள் மற்றும் விற்பனைகளுடாக வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் நிரம்பல் மற்றும் கேள்வி நிலைமைகளில் மத்திய வங்கி செல்வாக்கினைக் கொண்டிருக்கக்கூடும். இடர்பாடான நேரங்களில் பயன்படுத்தும் நோக்கத்துடன் நல்ல நேரங்களில் ஒதுக்குகள் கட்டியெழுப்பப்படுகின்றன. இக்கருத்தில் செலாவணி வீதத்தில் எதிர்காலத்தில் ஏற்படும் மோசமான அசைவுகளை எதிர்நோக்குவதற்கான காப்புறுதியொன்றாக வெளிநாட்டு நாணய ஒதுக்குகள் கட்டியெழுப்பப்படுகின்றன.

மத்திய வங்கியின் தலையீடுகளுக்கும் மேலாக, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் கேள்வி மற்றும் நிரம்பலில் செல்வாக்கினைச் செலுத்தும் மேலும் பல காரணிகள் காணப்படுகின்றன.

ஏற்றுமதி வருவாய்கள், உள்முக பணவனுப்பல்கள், சுற்றுலா பயணிகளின் செலவிடல், முதலீடுகள் மற்றும் வெளிநாடுகளிலிருந்தான வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் போன்ற மூலங்களினூடாக வெளிநாட்டிலிருந்து நாணயங்கள் பாயும் போது வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் வெளிநாட்டு நாணயத்தின் நிரம்பல் அதிகரிக்கின்றது.

பொருட்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதிகள், வெளிநாட்டு நாணய படுகடன் கடப்பாடுகளின் நியதிகளில் வெளிநாட்டு தரப்பினர்களுக்கு செய்யப்பட்ட கொடுப்பனவுகள், வெளிநாடுகளில் இலங்கையினா் செய்யும் செலவிடல்கள் மற்றும் வெளிநாட்டவா்கள் தமது ரூபா முதலீடுகளை விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கைகளின் போது வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வெளிநாட்டு நாணயங்களுக்கான கேள்வி அதிகரிக்கின்றது.

சாதாரண சந்தைகளைப் போன்றே, வெளிநாட்டுச் செலாவணியின் நிரம்பல் வெளிநாட்டுச் செலாவணிக்கான கேள்வியை விஞ்சும்போது வெளிநாட்டு நாணயத்தின் விலை (ஐ.அ.டொலா் என வைத்துக்கொள்வோம்) வீழ்ச்சியடையும் ஐ.அ.டொலா் ஒன்றிற்கான இலங்கை ரூபாவில் செலாவணி வீதம் வீழ்ச்சியடைவதுடன் ரூபா உயர்வடைகின்றது. மறுபுறத்தில், வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் கேள்வியானது நிரம்பலை விஞ்சும்போது வெளிநாட்டு நாணயத்தின் விலை உயர்வடைந்து ஐ.அ.டொலா் ஒன்றிற்கான செலாவணி வீதம் அதிகரித்து ரூபா தேய்வடைகிறது.

கேள்வியையும் நிரம்பலையும் பாதிக்கின்ற இக்காரணிகள் ஒருபோதும் தனியாக நிகழ்வதில்லை என்பதனை கவனிப்பது முக்கியமானதாகும். மேலும், இக்காரணிகள் இலங்கைக்கும் ஏனைய நாடுகளுக்குமிடையிலான வட்டிவீத வேறுபாடுகள், முதலீட்டாளா்களின் மனோபாவம் மற்றும் அரசாங்கத்தின் கொள்கைகள் போன்ற பல ஏனைய நிலைமைகளினால் செல்வாக்கு செலுத்தப்படுகின்றன. ஆகவே, செலாவணி வீதம் பல்வேறு காரணிகளின் மூலமாக தீா்மானிக்கப்படுவதுடன் அவை வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் கேள்வியையும் நிரம்பலையும் ஒரே காலத்தில் பாதிக்கின்றன.

## 1.6. வட்டி வீதங்கள்

### வட்டி வீதம் என்றால் என்ன?

வட்டி வீதம் என்பது பணத்திற்காக நாம் கொடுக்கும் விலை என மிக சுலபமாக குறிப்பிடமுடியும். நீங்கள் பணத்தினைக் கடன்படுமிடத்து வட்டிவீதம் (அல்லது கடன்பாட்டுவீதம்) என்பது நீங்கள் கடன்பட்ட பணத்திற்காக நீங்கள் செலுத்தும் விலையாகும். மறுபுறத்தில் நீங்கள் பணத்தினைக் கடனாக வழங்குவீர்களாயின் வட்டிவீதம் (அல்லது கடன்வழங்குவீதம்) என்பது நீங்கள் கடனாக வழங்கிய பணத்திற்காக பெறும் விலையாகும். வங்கி வைப்புக்களில் பணத்தினை சேமிக்கும்போது சிறிது காலத்தின் பின்னர் நீங்கள் வைப்புச் செய்யப்பட்ட பணத்தினை விட கூடுதலான பணத்தினை பெறுவீர்கள் ஏனெனில் உங்கள் சேமிப்பிற்கு சேமிப்பு வீதம் பிரயோகிக்கப்படுகிறது. இதற்குப் பதிலாக வங்கி வைப்பாளர்களினால் சேமிக்கப்பட்ட பணத்தினை வியாபாரங்களுக்கு (இங்கு வங்கிகளின் வகிபாகம் நிதியியல் இடையேற்பாட்டாளர் என அழைக்கப்படுகிறது. நிதியியல் இடையேற்பாடு பற்றி இக்கைநூலின் பிற்பகுதியில் கலந்துரையாடப்படுகின்றது) வழங்குவதுடன் அவர்களது கடன்பாடுகள் மீது கடன்வழங்கல் வீதமொன்றை விதிக்கின்றது.

வட்டிவீதம் வீட்டுத்துறையினர் மற்றும் வியாபாரம் உள்ளிட்ட சமூகத்திலுள்ள அனைவரையும் பாதிக்கின்றது. வீட்டுத்துறையினரைப் பொறுத்தவரை வட்டிவீதங்கள் ஈட்டிற்கான கொடுப்பனவுகள், ஊர்திக்கடன், கடன் அட்டை மற்றும் கடன்பாடுகளுக்கான கொடுப்பனவுகளின் பின்னர் செலவிடுவதற்கு எவ்வளவு மிஞ்சுகிறது என்பதனை கணிசமான முறையில் பாதிக்கிறது. வட்டிவீதங்கள், வீட்டுத்துறையினரின் சேமிப்பினையும் செலவிடல் தீர்மானங்களையும் கூட பாதிக்கிறன. வட்டிவீதங்கள் கவர்ச்சிகரமானவையாக அமையின் வீட்டுத்துறையினர் அத்தியாவசிய பொருட்கள் மீதான செலவிடலின் பின்னர் கூடுதலானவற்றினை சேமிக்க நாட்டங் கொள்வர். வட்டிவீதங்கள் மிக்ககுறைவாக இருக்குமாயின் வீட்டுத்துறையினர் எதிர்காலத்திற்காக சேமிப்பதற்கு முயற்சிப்பதிலும் பார்க்க தற்பொழுது செலவிட்டு சந்தோசமாக இருக்கவே நாட்டம் கொள்வர். மேலும், ஓய்வுபெற்றவர்கள் அவர்களது ஆயுள்காலச் சேமிப்புக்களை துணை நிரப்பியாக வட்டியை உழைப்பதற்கு அல்லது முழுமையாக ஓய்வுக்கால வருமானங்களைப் பெற்றுக்கொள்ள பயன்படுத்துவர்.

வட்டிவீதங்கள் நிதியிடல் செலவினூடாக வியாபாரங்களை பாதிக்கின்றன. வட்டிவீதங்கள் குறைவாக இருக்குமாயின் வியாபாரங்கள் குறைந்த செலவில் கடன்படுவதற்கும் அவர்களது வியாபாரத்தினை அல்லது தொழில் முயற்சிகளை புதிய துறைகளுக்கு விரிவுபடுத்துவதற்கும் ஊக்குவிக்கும். வியாபாரம் முன்னேற்றமடைவதனால் அவை மக்களுக்கு தொழில் வாய்ப்புக்கள், கவர்ச்சிகரமான சம்பளங்கள் மற்றும் கூலிகள் மற்றும் முதலீடுகள் மீதான வருவாய் என்பனவூடாக நன்மை பயக்கும். மேம்பட்ட நடவடிக்கையூடாக முழுப்பொருளாதாரமும் நன்மையடையும். மறுபுறத்தில், வட்டி வீதம் மிக உயர்வாக இருக்குமாயின், வியாபாரங்கள் அவற்றின் நடவடிக்கைகளைக் கொண்டு நடத்த அல்லது அவற்றின் தொழிற்பாடுகளை விரிவுபடுத்த மிகுந்த செலவினை எதிர்நோக்கவேண்டியிருக்கும் இது பொருளாதாரத்தினை மெதுவாக்கும் அல்லது சுருங்கக்கூடச் செய்துவிடும்.

### உண்மையான வட்டிவீதம் என்றால் என்ன?

பொதுவாக குறிப்பிடப்படுகின்ற வட்டிவீதங்கள் பெயரளவு வட்டி வீதங்கள் என்றே அழைக்கப்படுகின்றன. உண்மை வட்டிவீதம் என்பது பணவீக்கத்திற்காக சீராக்கப்படுகின்ற பெயரளவு வட்டிவீதமாகும். இச்சீராக்கமானது, குறிப்பிடப்பட்ட வருடாந்த வட்டிவீதத்திலிருந்து நிலவுகின்ற பணவீக்க வீதத்தினை கழித்துக்கொள்வதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

உண்மை வட்டிவீதம் நேர்க்கணியமாக இருக்கும்போது மக்கள் தாம் சேமித்த பணம் மற்றும் ஈட்டிக் கொண்ட வட்டி மூலம் தற்போதையதை விட எதிர்காலத்தில் கூடுதலான பொருட்களை நுகரமுடியும். உண்மை வட்டி வீதம் எதிர்க்கணியமானதாக இருக்குமாயின், விலைகளில் ஏற்படுகின்ற அதிகரிப்பு சேமிப்பின் மீது நீங்கள் ஈட்டுகின்ற வட்டியைவிட கூடுதலானதாக இருக்குமாகையால், நீங்கள் தற்பொழுது நுகர்வதனை விட குறைந்தளவினை மாத்திரமே நுகரமுடியும் ஆகவே சேமிப்பு அல்லது முதலீட்டினைப் பற்றி தீர்மானிக்கும் போது உண்மையான வட்டிவீதம் பரிசீலனைக்குரிய முக்கியமானதொரு விடயமாக காணப்படும்.

### வட்டி வீதங்கள் எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றன?

பொருளாதாரத்திலுள்ள வட்டிவீதங்கள் மத்திய வங்கியின் கொள்கை தீர்மானங்களால் தீர்மானிக்கப்படுகிறது. சந்தை வட்டி வீதங்களில் செல்வாக்குச் செலுத்துவதற்கு மத்திய வங்கி பயன்படுத்துகின்ற கொள்கைக் கருவிகளின் தொகுதி நாணயக் கொள்கை என அழைக்கப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கியின் பிரதான குறிக்கோள் பணவீக்கத்தினை தாழ்ந்த மற்றும் உறுதியான மட்டத்தில் பேணுவதும் அதன்மூலம் பொருளாதாரத்தினை சுமூகமான முறையில் இயக்கச் செய்வதுமேயாகும். இக்குறிக்கோளை அடைவதற்கு மத்திய வங்கி பல்வேறு நாணயக் கொள்கைக் கருவிகளை பயன்படுத்துகிறது. எனினும் நாணயக் கொள்கை மாத்திரம் பொருளாதாரத்தில் வட்டி வீதங்களின் அசைவுகளை நிருவகிக்க முடியாது. வட்டி வீதங்களில் செல்வாக்குச் செலுத்துவதற்கு இடர்நேர்வுக் கட்டணம், பணவீக்கம், நிதியியல் துறைக் கொள்கைகள் மற்றும் இறைக் கொள்கை போன்ற பல்வேறு காரணிகள் வரிசையாகக் காணப்படுகின்றன. பொருளாதாரமொன்றின் பேரண்டப் பொருளாதாரத் தோற்றப்பாட்டில் செல்வாக்குச் செலுத்துகின்ற சக்திமிக்க கருவியொன்றாக இறைக்கொள்கை விளங்குகின்றது.

## 1.7 இறைக்கொள்கை

### இறைக்கொள்கை என்றால் என்ன?

இறைக்கொள்கை என்பது நாட்டு மக்களுக்கு சேவைகளை வழங்கும் அதேவேளை, பொருளாதாரத்தினை வடிவமைத்து முகாமை செய்வதற்கு அரசாங்கத்தினால் பயன்படுத்தப்படுகின்ற ஒரு கருவியாகும். இறைக்கொள்கையானது அரசாங்கத்தினால் அதன் வருமானம், வரிவிதிப்பு, செலவிடல் மற்றும் வருமானத்திற்கும் செலவுக்குமிடையிலான வேறுபாடுகளிலிருந்து தோன்றுகின்ற வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறையினை முகாமை செய்வதற்கான கடன்பாடு என்பன பற்றிய அதன் தீர்மானங்களுடன் தொடர்புபடுகிறது.

வரவுசெலவுத் திட்டமானது, நாட்டின் பிரஜைகளுக்கு பணிகளை வழங்குவதற்கான அரசாங்கத்தின் திட்டத்தினையும் அதற்கு எவ்வாறு நிதியிடப்படுகிறது என்பதனையும் விளக்குகிறது. வழமையாக அடுத்த நாட்காட்டி ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டம் முன்னைய ஆண்டு முடிவடைவதற்கு முன்னதாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு அதனால் ஒப்புதலளிக்கப்படல் வேண்டும்.

வரவுசெலவுத் திட்டம் இனிவரும் ஆண்டிற்கான நடவடிக்கைகள் தொடர்பான அரசாங்கத்தின் திட்டங்களையும் அத்தகைய நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதியிடல், இதில் எவ்வளவு அரச அரசிறையின் மூலம் பூர்த்தி செய்யப்படும், எவ்வளவு கடன்பாடுகளின் மூலம் பூர்த்தி செய்யப்படும் என்பன போன்ற விபரங்களைத் தெரிவிக்கிறது.

அரசாங்கத்தின் வருமானம் செலவிடலை விஞ்சுமாயின் அப்பொழுது வரவுசெலவுத் திட்ட மிகை காணப்படும் இல்லையெனில் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை காணப்படும். பற்றாக்குறை சந்தைக் கடன்பாடுகள் (உள்நாட்டு அல்லது பன்னாட்டு) மூலம் பூர்த்தி செய்யப்படும்.

### பொதுப் படுகடன்

**பொதுப் படுகடன் என்றால் என்ன?** பொதுப்படு கடன் என்பது அரசாங்கம் அதன் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு கடன்பாட்டாளர்களுக்கு குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் எவ்வளவு கடனைச் செலுத்தப்பட வேண்டியுள்ளது என்பதாகும்.

அரசாங்கத்தின் செலவிடல், வரிகள் மற்றும் வரியல்லாத வருமானம் மூலமாக சேகரிக்கப்பட்ட அரசிறையினை விஞ்சுப்பொழுது அரசாங்கம் பொதுமக்களுக்கு படுகடன் சாதனங்களை வழங்குகிறது. அரசாங்கம் தொடர்பான காலப்பகுதிக்குரிய வட்டியுடன் இக்கடன்கள் மீளச்செலுத்தப்படும் என்ற வாக்குறுதியுடன் திறைசேரி உண்டியல்கள், முறிகள் மற்றும் ஏனைய பிணையங்களை வழங்குகின்றது. முறி உடமையாளர்கள் (திறைசேரி உண்டியல்களையும் முறிகளையும் கொள்வனவு செய்த முதலீட்டாளர்கள்) காலாந்தர வட்டிக்கொடுப்பனவுகளையும் இறுதியாக முறியின் காலம் முடிவடைவதனைத் தொடர்ந்து முதல் தொகையும் மீளச்செலுத்தப்படும் என்ற எதிர்பார்ப்புடன் அரசாங்கத்திற்கு நிதியினை வழங்குகின்றனர். இம்முறி உடமையாளர்கள் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு தரப்பினர்கள் ஆகிய இரு தரப்பினர்களாகவும் இருக்கலாம்.

அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற படுகடன் சாதனங்களுக்குப் புறம்பாக, அரசாங்கத்தினால் கடன்படக்கூடிய பன்னாட்டு முகவர்கள் (உ-ம் பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் உலக வங்கி) மற்றும் கடன் வழங்குவதற்கு விரும்புகின்ற தனிப்பட்ட (இருபுடை கடன்வழங்குவோர்) அல்லது குழுமங்கள் (பல்புடை கடன்வழங்குவோர்) மற்றும் ஏனைய நாடுகள் போன்ற பல்வேறு மூலங்களிலிருந்தும் அரசாங்கம் கடன்படமுடியும்.

## வரிகள்:

**வரிகள் என்றால் என்ன?** வரி என்பது தனிப்பட்டவர்கள் அல்லது நிறுவனங்களின் மீது அரசாங்கத்தினால் விதிக்கப்படுகின்ற கட்டாய கொடுப்பனவொன்றாகும். வரிவிதிப்பு என்பது அரசாங்கத்தின் வருமானத்தினது முக்கிய மூலமாகும். வரிகள் பெரும்பாலும் முக்கியமாக அரச ஊழியர்களின் சம்பளங்கள், நலக் கவனிப்பு, கல்வி, சமூகப் பாதுகாப்பு மற்றும் வீதி அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு போன்ற அரச செலவினங்களைப் பூர்த்தி செய்வதற்கான நிதியினைத் திரட்டுவதற்காக ஒவ்வொரு நாட்டிலுமுள்ள அரசாங்கங்களினாலும் விதிக்கப்படுகின்றன.

### இலங்கையில் விதிக்கப்படுகின்ற வேறுபட்ட வரிகள்

- **தனியாள் வருமான வரி** : கூலிகள், சம்பளங்கள், மிகை ஊதியம், முதலீடுகளிலிருந்தான வருமானம் (வட்டி, பங்கிலாபம்) மற்றும் உண்மைத் சொத்து போன்ற ஏனைய வருமான மூலங்கள் என்பனவற்றிலிருந்து தனிப்பட்டவர்களினால் ஈட்டப்பட்ட வருமானத்தின் மீதான வரி

- **கம்பனி வருமான வரி:** வியாபாரங்கள் மற்றும் கம்பனிகளினால் ஈட்டப்படும் இலாபங்கள் மீதான வரி

- **பெறுமதி சேர் வரி:** இது பொருட்கள் அல்லது சேவைகளின் உற்பத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் அதன் நுகர்வுக்கு கூட்டப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் அவற்றின் மீது விதிக்கப்படுகின்ற நுகர்வு வரியாகும். பெறுமதி சேர் வரி என்பது மறைமுகமான வரியொன்றாகும். ஏனெனில் இறுதியாக வரியைச் சுமையினை தாங்கிக் கொள்கின்றவர்கள் நுகர்வோரேயன்றி அரசாங்கத்திற்கு அதனை அனுப்பிவைக்கின்ற நிறுவனங்களல்ல.

- **பிடித்துவைத்தல் வரி:** இவ்வகையிலான வரி வருமான மூலங்களில் கழிக்கப்படுகின்றது. வருமானத்தினை செலுத்துகின்ற நிறுவனம் வருமானத்தில் ஒரு பகுதியை பிடித்துவைத்திருந்து அதனை அரசாங்கத்திற்கு நேரடியாகச் செலுத்துகின்றது.

மேலும், அரசாங்கம் பல்வேறுபட்ட ஏனைய வரிகள், தீர்வைகள் மற்றும் விதிப்புக்களிலிருந்து அரசிறையினை சேகரிக்கிறது. தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்களிலிருந்தான வரிச் சேகரிப்புக்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகிறது. வரி வீதங்கள் பற்றிய விபரங்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணையத்தளத்தில் கிடைக்கக்கூடியதாகவுள்ளது: **https://www.ird.gov.lk/en/publications/SitePages/Tax_Chart_2324.aspx?menuid=1404?menuid=1603**

## வரிகளின் முக்கியத்துவம்

அரசாங்கம் தொழிற்படுவதற்கும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களூடாக பொதுமக்களுக்கு சேவைகளை வழங்குவதற்கும் தேவையான நிதியியல் மூலவளங்களை வரிகள் வழங்குகின்றன.

அரசாங்கம் தேசியப் பாதுகாப்பு, கல்வி, நலக்கவனிப்பு சட்ட நடைமுறைப்படுத்தல், ஒழுங்குவிதிகள் மற்றும் உட்கட்டமைப்பு போன்ற சேவைகளை வழங்குகின்றது. சமூகத்தின் பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்காக அரசாங்கம் பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களூடாக வருமான சமத்துவமின்மையினைக் குறைப்பதற்கும் சமூக சமத்துவத்தினை ஏற்படுத்துவதற்காகவும் செல்வத்தினை மீளப்பங்கீடு செய்கிறது. குறிப்பிட்ட விடயங்களில் அரசாங்கம் நிரம்பல் மற்றும் கேள்வி நிலைமைகள், தொழிற்படை மற்றும் உற்பத்தி போன்ற பொருளாதார சமமின்மைகளை கட்டுப்படுத்துவதற்கு வரிக் கொள்கைகளை பயன்படுத்துகிறது. உதாரணமாக, வரிக்குறைப்புக்கள் வீட்டுத் துறையினரின் செலவிடலை ஊக்குவித்து, உள்நாட்டுப் பொருளாதாரத்தில் கேள்வி அதிகரிக்க வழிவகுப்பதுடன் இதன் மூலம் உற்பத்தி தூண்டப்படுகிறது. அரசாங்கம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகளில் முதலீடு செய்வதுடன், நீடித்து நிலைத்திருக்கும் நடவடிக்கை முறைகளை மேம்படுத்தி, தேவையானவிடத்து அனர்த்த நிவாரணங்களையும் வழங்குகிறது. எனவே, வரிகள் நலனோம்புகைக் நன்கமைக்கப்பட்ட மற்றும் சிறந்த அரச பணிகள் என்பனவற்றினூடாக சமூகத்தின் பொதுவான நலனோம்புகைகளை உறுதிப்படுத்துவதற்கு வரிகள் நிதியினை வழங்குகின்றன. வரி அரசிறை இல்லாமல் பிரஜைகளுக்கு இப்பணிகளை வழங்குவதற்கு அரசாங்கம் கடன்பாடுகளை அல்லது அரச தொழில்முயற்சிகள் போன்ற அரசிறையின் வேறு மூலங்களை நாடவேண்டியிருக்கும் எனினும், அரச தொழில்முயற்சியாளர்களிடமிருந்தான அரசிறை போதுமானதாகயில்லை என்பதுடன் அதனை நம்பியிருக்கவும் முடியாது. மிகையான கடன்பாடுகளை வழக்கமாக்கிக் கொள்வது உறுதியற்ற தன்மையினை ஏற்படுத்தும் என்பதுடன் நீண்ட காலத்தில் நாட்டிற்கும் பொருளாதாரத்திற்கும் தீங்கினையும் விளைவிக்கும். எனவே வரிகள் அரசாங்க சேவைகள் நன்கு தொழிற்படுவதற்கான அடிப்படையினை வழங்குவதுடன் நிதிகள் முன்மதியுடன் பயன்படுத்தப்படுமாயின் சிறந்த சமூகத்திற்கு வழிவகுக்கும். நன்கு தொழிற்படுகின்ற அரச முறைமை பொருளாதாரத்தினையும் சமூகத்தினையும் பாதுகாத்துக் கொள்வதுடன் ஆதரவினையும், ஒன்றிற்கு ஒன்று ஆறுதலையும் அளிப்பதுடன் பெருந்தொற்று, மோதல் மற்றும் இயற்கை அனர்த்தம் போன்ற இடர்பாடான நிலைமைகளிலும் கூட மக்களுக்கு உத்தரவாதத்தினை வழங்குகிறது.

நாம் ஏற்கனவே கற்றுக் கொண்டவாறு, வரிகள் முக்கியமாக தனிப்பட்டவர்கள் மற்றும் நிறுவனங்களின் வருமானம் அல்லது செலவினங்களுடன் இணைந்து காணப்படுகின்றன. எனவே, பொருளாதாரத்தின் நடவடிக்கைகள் அதிகரிக்கும் போது அரசாங்கம் வழமையாக பொருளாதாரத்தின் வளர்ச்சி உத்வேகங்களுக்கு தீங்கின்றி கூடுதலான அரசிறையினை சேகரிக்க நாட்டம் கொள்ளும்.

அத்தியாயம் 2:

# நிதியியல் சூழல்

## 2.1 அறிமுகம்

### கற்றல் பெறுபேறுகள்

- நிதியியல் சூழலின் முக்கிய கூறுகளை வரைவிலக்கணப்படுத்தி அடையாளப்படுத்தல்.
- நிதியியல் சந்தைகளினதும் நிதியியல் நிறுவனங்களினதும் முக்கிய தொழிற்பாடுகளைப் புரிந்துகொள்ளல்.
- இலங்கை மத்திய வங்கியின் வகிபாகத்தை விபரித்தல்.
- இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகின்ற நிறுவனங்களை இனங்கண்டு அறிந்துகொள்ளல்.
- இலங்கையில் காணப்படுகின்ற ஏனைய நிதியியல் நிறுவனங்களை இனங்கண்டு புரிந்துகொள்ளல்.

பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணத்தின் பிரகாரம் □நிதியியல் சேவைகள்□ என்ற சொற்பதம் வாடிக்கையாளர்கள் அல்லது வணிகங்கள் நிதிசார்ந்த பொருட்களை எவ்வாறு பெற்றுக்கொள்கின்றன என்பதைக் குறிக்கின்றது. நிதியியல் தொழிற்துறையானது பொருளாதாரத்தின் மிக முக்கிய துறைகளில் ஒன்றாகும். நிதியியல் நிறுவனங்களும் சந்தைகளும் நாட்டின் பொருளாதாரச் சூழலில் முன்னணிச் செயற்பாட்டாளர்களாவார்கள்.

ஒவ்வொரு செயற்பாட்டாளரும் தமது வகிபாகங்களை நிறைவேற்றுவதற்கு அதற்கான தொழிற்பாடுகளைக் கொண்டுள்ளன. இலங்கையில் நிதியியல் சூழலில் முக்கியச் செயற்பாட்டாளர்களை வரைபடம் ஒஓ எடுத்துக்காட்டுகின்றது.



ரத்நாயக்காவின் குடும்பத்தில் பின்வரும் உரையாடல் இடம்பெற்றது.









## 2.2 நிதியியல் சந்தைகள்

**நிதியியல் சந்தையானது** வேறுபட்ட முதலீட்டாளர் விருப்பங்களின் அடிப்படையில் பணச் சந்தை மற்றும் மூலதனச் சந்தை என வகைப்படுத்தப்படலாம்.

### பணச் சந்தை

பணச் சந்தை என்பது குறுகிய கால வட்டியுடைய சொத்துக்களுக்கு, வழமையாக ஒரு ஆண்டு முதிர்ச்சிகளை விட குறைவுடன்கூடிய திறைசேரி உண்டியல்கள், வர்த்தகப் பத்திரங்கள், வைப்புச் சான்றிதழ்கள் மற்றும் குறுகியகால வங்கிகளுக்கிடையிலான கடன்பெறுதல் மற்றும் கடன்வழங்கல் போன்றவற்றிற்கானது. பொருளாதாரத்தில் திரவத்தன்மை முகாமைத்துவத்திற்கு பணச் சந்தை துணையளிக்கின்றது. உள்நாட்டு பணச் சந்தையிலுள்ள முன்னணி வழங்குநர்களாக அரசாங்கம், வங்கிகள் மற்றும் பட்டியலிடப்பட்ட கம்பனிகள் காணப்படுகின்றன. மாறாக, முன்னணி முதலீட்டாளர்களாக வங்கிகள், காப்புறுதிக் கம்பனிகள், ஓய்வூதிய மற்றும் சேமலாப நிதியங்கள் காணப்படுகின்றன. வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையும் பணச் சந்தையுடன் நெருக்கமாக இணையப்பெற்றுள்ளது. வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை என்பது வங்கிகளுக்கிடையில் நாணயங்கள் வர்த்தகப்படுத்தப்படுகின்ற இடமாகும்.

### மூலதனச் சந்தை

மூலதனச் சந்தையானது திறைசேரி முறிகள், தனிப்பட்ட படுகடன் பிணையங்கள் (முறிகள் மற்றும் தொகுதிக்கடன்கள்) மற்றும் பங்குரிமை மூலதனங்கள் (பங்குகள்) போன்ற நீண்டகால சொத்துக்களுக்கானது. மூலதனச் சந்தையின் முதன்மை நோக்கம் நீண்டகால நிதியங்களை திரட்டுவதை வசதிப்படுத்துவதாகும். மூலதனச் சந்தையின் முன்னணி வழங்குநர்களாக அரசாங்கம், வங்கிகள் மற்றும் தனியார் கம்பனிகள் காணப்படுகின்றன. மாறாக, முன்னணி முதலீட்டாளர்களாக ஓய்வூதிய மற்றும் சேமலாப நிதியங்களும் காப்புறுதிக் கம்பனிகளும் காணப்படுகின்றன.

நிதியியல் சந்தையானது வர்த்தகப்படுத்தப்படும் சாதனங்களின் பிரகாரம் படுகடன் மற்றும் பங்குரிமை மூலதனச் சந்தைகள் என வகைப்படுத்தலாம்.

### படுகடன் சந்தை

படுகடன் சந்தையானது நிலையான வருமானப் பிணையங்கள் சந்தை எனவும் அறியப்படுகின்றது. அதன் பிரிவுகளாக அரச பிணையங்கள் சந்தை (திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள்) அத்துடன் தனிப்பட்ட படுகடன் பிணையங்கள் சந்தை (வர்த்தகப் பத்திரம், தனிப்பட்ட முறிகள், தொகுதிக்கடன்கள்) என்பனவாகும்.

### பங்குரிமை மூலதனச் சந்தை

பங்குரிமை மூலதனச் சந்தையானது முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் இரண்டையும் கொண்டதாகும். முதலாந்தரச் சந்தையானது புதிய பங்குகள் மற்றும் படுகடன் பிணையங்கள் வழங்குதல்களுக்கான சந்தையாகும். மாறாக, இரண்டாந்தரச் சந்தை என்பது முதனிலை வழங்கல்களின் பின்னர் அத்தகைய பிணையங்கள் வர்த்தகப்படுத்தப்படுகின்ற சந்தையாகும்.

குறிப்பு: நிதியியல் சந்தைகள் பற்றிய விரிவான விளக்கம் தனிப்பட்ட நிதியியல் முகாமைத்துவத்தின் முதலீட்டு முகாமைத்துவப் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 2.3 நிதியியல் நிறுவனங்கள்

பல நிதியியல் நிறுவனங்கள் நிதி வழங்குநர்களுக்கும் நிதியை நாடுபவர்களுக்கும் இடையீட்டாளர்களாகச் செயற்படுகின்றன. இவற்றை இரு வகைகளின் கீழ் அதாவது, மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படுகின்ற நிறுவனங்கள் மற்றும் மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத மேற்பார்வை செய்யப்படாத நிறுவனங்கள் என்பதன் கீழ் அடையாளப்படுத்தலாம். மத்திய வங்கியின் வகிபாகம் மற்றும் இலங்கையிலுள்ள முக்கிய நிதியியல் நிறுவனங்கள் பற்றி பின்வரும் பிரிவு ஆராய்கின்றது.

## இலங்கை மத்திய வ ங்கி

பொருளாதாரத்தில் பணப்பாய்ச்சலை வசதிப்படுத்துகின்ற நிறுவனங்களின் வலையமைப்பை மேற்பார்வை செய்வதனால் நாட்டின் நிதியியல் முறைமையில் மத்திய வங்கி அடித்தளமாக விளங்குகின்றது. இதற்கு மேலதிகமாக மத்திய வங்கியானது நாட்டின் நாணயம், பண வழங்கல் மற்றும் வட்டி வீதங்கள் என்பவற்றை முகாமைசெய்வதற்கும் பொறுப்புடையதாகும். இந்நிறுவனம் பொதுவாக சுயாதீன அமைப்பாகத் தொழிற்படுகின்றது. இது, வெளிநபராலோ அல்லது அமைப்பாலோ அதன் தொழிற்பாடுகளை தலையீடின்றி தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அதனை இயலச்செய்கின்றது. மத்திய வங்கி அதன் சுயாதீனத்தைப் பேணுகின்ற அதேவேளை, அதன் கடமைகளின் செயலாற்றத்திற்கும், பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கும் பொறுப்புக்கூற வேண்டும்.

தேசத்தின் அதியுயர்மட்ட நிதியியல் நிறுவனம் என்ற வகையில் இலங்கை மத்திய வங்கி முக்கிய பொறுப்புக்களை கையாளுகின்றது. இலங்கை மத்திய வங்கியின் முதன்மைத் தொழிற்பாடுகளில் ஒன்று நாணயத்தை வெளியிடுவதும், நாணயக் கொள்கை செயற்பாடுகள் ஊடாக தேசிய பண நிரம்பலை கட்டுப்படுத்துவதுமாகும்.

திரவத்தன்மை என அழைக்கப்படுகின்ற, அதிக பணம் பொருளாதாரத்திற்குத் தேவைப்படுகின்ற போது மத்திய வங்கி அதன் தொழிற்பாடுகளூடாக அல்லது வட்டி வீதங்களைக் குறைப்பதன் மூலம் பண நிரம்பலை அதிகரிக்கலாம். குறைவான வட்டி வீதங்கள் பணத்தை கடன்பெறுவதற்கு, மக்களுக்கும் வியாபாரங்களுக்கும் மலிவானதாக்கி அவர்கள் அதிகமாக செலவிடுவதற்கு ஊக்கமளிக்கின்றன. இது பொருளாதாரம் மேம்படுவதற்கு உதவுகின்றது.

இதன் பின்னணியில், இவ்வட்டி வீதங்களை நிர்ணயிப்பதில் இலங்கை மத்திய வங்கி இன்றியமையாததாக விளங்குகின்றது. கொள்கை வட்டி வீதங்களை சீர்செய்வதன் மூலம் வங்கிகள் கடன்களுக்கு எவ்வளவு வட்டியை அறவிடுகின்றன, வைப்புகளுக்கு எவ்வளவு கொடுப்பனவு செய்கின்றன என்பதால் செல்வாக்குச் செலுத்துகின்றது. எடுத்துக்காட்டாக, மத்திய வங்கி வட்டி வீதங்களைக் குறைக்கின்ற போது கடன்பெறுவது மிகவும் வசதியாக அமைந்து பொருளாதார வளர்ச்சியை தூண்டுதலளிக்கின்றது.

மற்றொரு முக்கிய பொறுப்பு உரிமம்பெற்ற வங்கிகளையும் நிதியியல் நிறுவனங்களையும் ஒழுங்குமுறைப்படுத்துவதாகும். (இந்நிறுவனங்கள்) வாடிக்கையாளர்களைப் பாதுகாக்கின்ற மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டினைப் பேணுகின்ற இந்நிறுவனங்கள் ஏற்புடைய சட்டங்களுடன் இணங்கியொழுகுகின்றன என்றும் பணிப்புரைகளையும் விதிகளையும் பின்பற்றுகின்றன என்றும் மத்திய வங்கி உறுதிசெய்கின்றது. உதாரணமாக, வங்கியொன்று இடர்நேர்வுமிக்க கடன்களில் ஈடுபடுகின்றது என வைத்துக்கொண்டால் அத்தகைய சந்தர்ப்பத்தில் மத்திய வங்கி அவ் இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கான ஒழுங்குவிதிகளை விதித்து மக்களின் சேமிப்புக்களைப் பாதிக்கக்கூடிய வங்கி முறிவடைவதலிலிருந்து தடுப்பதற்கு உதவுகின்றது.

உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்று திரவத்தன்மை அழுத்தங்களை எதிர்கொள்ளுமாயின் இறுதிக்கடன்ஈவோன் என்ற வகையில் மத்திய வங்கி செயற்பட்டு அவற்றின் திரவத்தன்மைக் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு போராடுகின்ற வங்கிக்கு நிதியியல் ஆதரவை வழங்கும். நெருக்கடிமிக்க காலப்பகுதியில் மக்கள் மத்திய வங்கி மீது நம்பிக்கை கொண்டிருப்பதனால் வங்கித்தொழில் முறைமையில் பொதுமக்கள் நம்பிக்கையினைப் பேணுவதற்கு இத்தொழிற்பாடு உதவுகின்றது.

சுருக்கமாக, நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினைப் பேணுவதில் மத்திய வங்கியின் வகிபாகத்தை பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்:

- நிதியியல் முறைமையிலான பொதுமக்களின் நம்பிக்கையினை ஊக்குவித்துப் பேணுதல்.
- தனிப்பட்ட நிதியியல் நிறுவனங்களின் பாதுகாப்பினையும் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் மேம்படுத்தல்.
- நிதியியல் முறைமைக்கான இடர்நேர்வுகளைக் குறைப்பதன் மூலமாக, மற்றைய நிதியியல் ஒழுங்குமுறைப்படுத்துநர்களின் ஒத்துழைப்புடன், நிதியியல் முறைமையில் பொதுமக்களின் நம்பிக்கையினை உறுதிப்படுத்துதல்.
- இறுதிக் கடன் ஈவோனாக தொழிற்படல்.
- முறிவடைந்த நிதியியல் நிறுவனங்களைக் கலைக்கும் சந்தர்ப்பத்தில் ஒட்டுமொத்த நிதியியல் நிறுவனங்கள்.˙. பொருளாதாரத்திற்கு ஏற்படக்கூடிய மோசமான தாக்கங்களை குறைக்கும் விதத்தில் அவற்றை கலைத்தல்.
- நிதியியல் சந்தை உட்கட்டமைப்பினை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்தல்.

இலங்கை மத்திய வங்கியானது குறைந்த மற்றும் நிலையான பணவீக்கத்தைப் பேணுவதிலும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டை உறுதிசெய்வதற்கு நிதியியல் நிறுவனங்களை மேற்பார்வை செய்வதிலும் இன்றியமையாத பங்காற்றுகின்ற சுயாதீன நிறுவனமொன்றாகும். மாறுதலடைகின்ற பொருளாதார நிலைமைக்கு செயல்திறன் வாய்ந்த விதத்தில் எதிர்வினையாற்றி இறுதியாக பொதுமக்களுக்கு நன்மை பயப்பதில் சுயாதீனத் தீர்மானங்களை எடுப்பதற்கான அதன் இயலுமை உதவுகின்றது.

## இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட நிதியியல் நிறுவனங்கள்

பொருளாதாரத்தில் பணப் பாய்ச்சலை வசதிப்படுத்துகின்ற நிறுவனங்களைக் கொண்ட வலையமைப்பை இலங்கை மத்திய வங்கி மேற்பார்வை செய்கின்றது. நிதியியல் நிறுவன வலையமைப்பானது உரிமம்பெற்ற வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், பதிவுசெய்யப்பட்ட குத்தகைக்குவிடும் நிறுவனங்கள், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள், அரசாங்கப் பிணையங்களின் முதனிலை வணிகங்கள், வெளிநாட்டுச் செலாவணி அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், அதிகாரமளிக்கப்பட்ட பண மாற்றுநர்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகர்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

இந்நிறுவனங்கள் அத்தியாவசிய நிதியியல் சேவைகளை வழங்குவதுடன் பொருளாதார உறுதிப்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் பங்களிக்கின்றன. வெளிப்படைத் தன்மை, பாதுகாப்பு மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கை என்பவற்றை ஊக்குவிக்கின்ற அத்துடன் அனைத்து பங்குதாரர்களுக்கும் ஆற்றல்வாய்ந்த நிதியியல் சூழலைப் பேணி வளர்க்கின்ற ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிற்குள் அதிகாரமளிக்கப்பட்ட நிதியியல் நிறுவனங்கள் தொழிற்படுகின்றன என்பதனை இலங்கை மத்திய வங்கி உறுதிசெய்கின்றது. இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படுகின்ற முக்கிய அதிகாரமளிக்கப்பட்ட நிதியியல் நிறுவனங்களைக் காண்போம்.

## இலங்கையில் அதிகாரமளிக்கப்பட்ட நிதியியல் நிறுவனங்கள் பற்றிய கண்ணோட்டம்

நிதியியல் உலகில் பணத்தை முகாமைசெய்வதிலும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதிலும் பல்வேறு நிறுவனங்களும் இன்றியமையாத மற்றும் தனித்துவமான வகிபாகத்தை ஆற்றுகின்றன.

இலங்கையில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் வைப்புக்களை ஏற்று தனிப்பட்டவர்களுக்கும் வியாபாரங்களுக்கும் கடன்களை வழங்கி நிதியியல் முறைமையின் முதுகெலும்பை அமைக்கின்றது. நிதிக் கம்பனிகள், குத்தகைக்குவிடும் தாபனங்கள், நுண்பாக நிதிக் கம்பனிகள் போன்ற வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் தனிப்பட்ட கடன்கள், சொத்து குத்தகைக்குவிடல் போன்ற சிறப்பியல்புவாய்ந்த சேவைகளை வழங்கி குறிப்பான சந்தைத் தேவைகளை நிறைவுசெய்து நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிக்கின்றன.

அரசாங்கப் பிணையங்களில் முதனிலை வணிகர்கள் உள்ளடங்கலாக முதலீட்டு நிறுவனங்கள், நிதியங்களை பல்வேறு முதலீட்டு வாய்ப்புகளுக்கும் வழிப்படுத்தி பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கின்றன. அதிகாரமளிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி வணிகர்களும் பண மாற்றுநர்களும் நாணயப் பரிமாற்றத்தையும் பன்னாட்டுக் கொடுக்கல்வாங்கல்களையும் வசதிப்படுத்தி உலகளாவிய வர்த்தக ஈடுபாட்டினை இயலச்செய்கின்றனர்.

இந்நிறுவனங்களை இலங்கை மத்திய வங்கி மேற்பார்வை செய்வது உறுதிப்பாடு, வெளிப்படைத்தன்மை மற்றும் வாடிக்கையாளர் பாதுகாப்பு என்பவற்றை ஊக்குவிக்கின்ற கட்டமைப்பொன்றினுள் அவை தொழிற்படுவதை உறுதிசெய்வதற்காகும். இந்நிதியியல் அமைப்பு முறை வினைத்திறன் மிக்க பணப் பாய்ச்சலை இயலச்செய்து பொருளாதாரத்தின் அபிவிருத்திக்கு ஆதரவளிக்கின்றது. இந்நிறுவனங்களின் வகிபாகங்களைப் புரிந்துகொள்வது நிதியியல் முறைமை எவ்வாறு தொழிற்படுகின்றது மற்றும் நாளாந்த வாழ்வில் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பதை அறிந்துகொள்வதற்கு அவசியமாகும்.

இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படுகின்ற முக்கிய அதிகாரமளிக்கப்படுகின்ற நிதியியல் நிறுவனங்கள் பற்றி பின்வரும் பிரிவுகள் விபரித்து நிதியியல் தோற்ற அமைப்பிற்கான அவற்றின் வகிபாகங்களையும் பங்களிப்புக்களையும் எடுத்துக்காட்டுகின்றன.

## உரிமம்பெற்ற வங்கிகள்

உரிமம்பெறற் வங்கிகள் முறைசார்ந்த நிறுவனங்களாவதுடன் இலங்கையின் நிதியியல் முறைமையின் முதன்மைத் தூண்களாக விளங்கி கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் சேவைகளின் கணிசமானளவிற்கு வகைகூறுகின்றன. தூரப் பிரதேசங்களில் நீடித்த கிளை வலையமைப்புக்களைக் கொண்ட அரசிற்குச் சொந்தமான வங்கிகள், தமது நிலையங்களில் மிகவும் விசேடத்துவமிக்க சேவைகளை வழங்குகின்ற தனியார் வங்கிகள் போன்றவற்றை இவை உள்ளடக்குகின்றன.

இதற்கு மேலதிகமாக, இலங்கையிலும் தொழிற்பட்டு, வியாபாரங்களுக்கும் புலம்பெயர்ந்தவர்களுக்கும் சேவையளிக்கின்ற சர்வதேச வங்கிகள். இவ்வங்கிகள் அடிப்படை சேமிப்புக் கணக்குகள் தொடக்கம் சிக்கலான வர்த்தக நிதித் தீர்வுகள் வரை பல்வேறு சேவைகளை வழங்குகின்றன. வர்த்தக நிதியில் குறிப்பாக கவனம்செலுத்தி பல்வேறு வியாபார முறைகளுடன் அவை தொழிற்படுகின்றன.

## உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் (LFCs)

உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் சிறப்பியல்புமிக்க நிதியியல் இடையீட்டாளர்களாகப் பணியாற்றி வங்கிகள் முழுமையாகத் தீர்க்கமுடியாத விசேடத் தேவைகளுக்கு சேவையளிக்கின்றன. உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் நிலையான வைப்புகளுக்கு வர்த்தக வங்கிகளை விடவும் உயர்வான வட்டி வீதங்களை வழங்கி அவர்களது சேமிப்புக்களை உச்சப்படுத்துவதற்கு நாடுகின்றவர்களை ஈர்க்கின்றன. அவை மிகவும் நெகிழ்வுமிக்க நியதிகளில் கடன்களை வழங்கி சிறியளவிலான தயாரிப்பாளர் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு உதவுகின்றன. வங்கிகளுடன் ஒப்பிட்டு அவை எவ்வாறு தொழிற்படுகின்றன என்பதற்கு இலங்கையின் பின்னணியில் நாம் இரு குறிப்பான உதாரணங்களை அவதானிப்போம்.

## பதிவுசெய்யப்பட்ட குத்தகைக்குவிடும் தாபனங்கள்

இலங்கையிலுள்ள பதிவுசெய்யப்பட்ட குத்தகைக்குவிடும் தாபனங்கள் சிறப்பியல்புவாய்ந்த நிதியியல் நிறுவனங்களாக முதன்மையாக குத்தகைக்குவிடும் சேவைகளை வழங்குகின்றன. வாகனங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் போன்ற சொத்துக்களை குத்தகைக்குவிடுவதில் அவை வசதியளித்து உடனடியாக அவற்றைக் கொள்வனவு செய்யாது அவற்றைப் பயன்படுத்துவதற்கு வியாபாரங்களையும் தனிப்பட்டவர்களையும் இயலச்செய்கின்றன. அவற்றின் சேவைகள் பொதுவாக சொத்தின் சொத்தாண்மையை பிடித்து வைத்திருக்கின்ற மற்றும் அவற்றின் பயன்பாட்டிற்காக குத்தகை பெறுநர் கொடுப்பனவு செய்கின்ற தொழிற்பாடு சார்ந்த குத்தகைக்குவிடுதலை உள்ளடக்குகின்றது.

## உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள்

இவை மரபுசார்ந்த வங்கிச் சேவைகளுக்கு எளிதான பெறுவழியினைக் கொண்டிராத தனிப்பட்டவர்களையும் சிறிய வியாபாரங்களையும் சென்றடைகின்ற அடிப்படை மட்ட நிதியியல் நிறுவனங்களாகும். சில நிறுவனங்கள் கிராமிய பிரதேசங்களில் தொழில்முயற்சியாளர்களுக்கு சிறிய கடன்களை வழங்கி அவர்களின் வியாபாரங்களைத் தொடங்குவதற்கு அல்லது விரிவுபடுத்துவதற்கு உதவுகின்றன. இவை பொதுவாக பரந்த சந்தை பிரிவிற்கு சேவை வழங்காமை அல்லது பரந்தளவிலான நிதியியல் சேவைகளை வழங்காமை என்பதனால் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளிலிருந்து வேறுபடுகின்றன.

மறுகரத்தில், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் கிராமிய அல்லது பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரதேசங்களில் குறைந்த வருமானத்தைக் கொண்ட தனிப்பட்டவர்களுக்கும் நுண்பாக தொழில்முயற்சியாளர்களுக்கும் சேவையளிப்பதில் முதன்மையாகக் கவனம் செலுத்துகின்றன. அவற்றின் மைய வியாபாரம் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்கு அல்லது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு பொதுவாக பிணையுறுதியின்றி சிறிய கடன்களை வழங்குவதாகும். உதாரணமாக உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் அநுராதபுரத்தை அண்மித்த கிராமமொன்றில் கைத்தறி பின்னும் தொழிலைத் தொடங்குவதற்கு பெண்கள் குழுவொன்றிற்கு சிறிய கடனொன்றை வழங்கலாம் அல்லது பொலநறுவையிலுள்ள சிறியளவிலான விவசாயிகளுக்கு நுண்பாக காப்புறுதி உற்பத்திகளை வழங்கலாம். உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் போலன்றி உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. அவற்றின் நிதியிடல் பொதுவாகப் பங்குதாரர் மூலதனம், வங்கிகளிடமிருந்து அத்துடன் வேறுநிதியியல் நிறுவனங்களிடமிருந்து கடன்பெறுதல் சில சந்தர்ப்பங்களில் சர்வதேச கொடையாளிகள் அல்லது தாக்க முதலீட்டாளர்களிடமிருந்து பெறுதல் என்பவற்றிலிருந்தே கிடைக்கின்றன.

## முதனிலை வணிகர்கள்

அரசப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்கள் இலங்கையின் நிதியியல் முறைமையில் அத்தியாவசியமான மற்றும் தனித்துவமான பங்கினை ஆற்றுகின்றனர். இச்சிறப்பியல்புவாய்ந்த நிறுவனங்கள் வீதிகள், பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகளை நிர்மாணித்தல் போன்ற முக்கிய கருத்திட்டங்களுக்கு பணம் திரட்டுவதற்கு அரசாங்கத்திற்கு உதவுகின்றனர். காலப்போக்கில் கடன்பெற்ற பணத்தை வட்டியுடன் திருப்பிச்செலுத்துவதற்கு அரசாங்கத்திடமிருந்து அத்தியாவசியமான வாக்குறுதிகளுடன் அவர்கள் திறைசேரி முறிகள் மற்றும் உண்டியல்களை விற்பனை செய்வதனூடாக இதனைச் செய்கின்றனர்.

இம்முறிகளை மற்றும் உண்டியல்களை முதலீட்டாளர்கள் கொள்வனவு செய்கின்ற போது வட்டியினை உழைப்பதற்கான பாதுகாப்பான முதலீட்டிற்கான பரிமாற்றமாக அரசாங்கத்திற்கு அவர்கள் பணம் கடன் வழங்குகின்றனர். இம்முதன்மை வணிகர்களின் நடவடிக்கைகள் பொருளாதார வட்டி வீதங்களை நிர்ணயிப்பதனால் அவை முக்கியத்துவமிக்கவையாகும். இது, பணம் கடன்பெறுவதற்கு எவ்வளவு செலவாகின்றது என்பதில் செல்வாக்குச் செலுத்துகின்றது. எடுத்துக்காட்டாக, அரசப் பிணையங்கள் மீதான வட்டி வீதங்கள் உயர்வடையுமாயின் வீட்டுக் கடன்கள் மற்றும் வியாபார நிதியிடலுக்காக அவை அறவிடுகின்ற வீதங்களையும் வங்கிகள் உயர்த்தலாம். இதன்பொருள் முதனிலை வணிகர்களின் பணி மக்கள் வியாபாரங்கள் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதாரம் என்ற ஒவ்வொன்றிலும் தாக்கம் ஏற்படுத்தி தேசிய அபிவிருத்திக்கும் நிதியியல் உறுதிப்பாட்டிற்கும் அவற்றை இன்றியமையாதவையாக்குகின்றன.

## வெளிநாட்டுச் செலாவணியில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள்

வெளிநாட்டுச் செலாவணியில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் உலகளாவிய பொருளாதாரத்துடனான எமது இடைத்தொடர்புகளை வசதிப்படுத்துகின்றனர். அநேகமான வர்த்தக வங்கிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாகவிருந்து வெளிநாட்டு உழைப்புகளை உள்நாட்டு நாணயமாக மாற்றுவதற்கு வியாபாரங்களுக்கு முதலியவற்றை உதவியளித்து பன்னாட்டு பல்கலைக்கழகங்களுக்கான கட்டணங்களை கொடுப்பனவு செய்வதில் மாணவர்களுக்கு உதவுகின்றன. அதிகரித்தளவில் ஒன்றுடன் ஒன்று இணையப்பெற்ற பூகோள பொருளாதாரத்தில் அவர்களது சேவைகள் அத்தியாவசியமானவையாக விளங்குகின்றன.

## அதிகாரமளிக்கப்பட்ட பண மாற்றுனர்கள்

அதிகாரமளிக்கப்பட்ட பண மாற்றுனர்கள் இலங்கையின் நிதியியல் தோற்ற அமைப்பில் குறிப்பாக சுற்றுலாத் துறைக்கு ஆதரவளிப்பதில் அத்தியாவசியமானவர்களாக விளங்குகின்றனர். இச்சிறிய செலாவணி பணியகங்கள் அநேகமாக சுற்றுலாப் பிரதேசங்கள், விடுதிகள், விமான நிலையங்கள் மற்றும் வேறு சர்வதேச இடமாறல் நிலையங்கள் போன்றவற்றில் அமையப்பெற்று பயணிகளுக்கு நாணயப் பரிமாற்றல் சேவைகளை வழங்குவதில் விசேடத்துவம் பெறுகின்றனர்.

ஐக்கிய அமெரிக்க டொலர் அல்லது யூரோ போன்ற வெளிநாட்டு நாணயத்துடன் சுற்றுலாப் பயணிகள் இலங்கையினை வந்தடைகின்ற போது உணவைக் கொள்வனவு செய்வதற்கு தங்குமிடத்திற்கு மற்றும் ஞாபகார்த்தப் பொருட்களை வாங்குவதற்கு அவர்கள் பணத்தை இலங்கை ரூபா ஆக மாற்ற வேண்டும். போட்டிமிக்க வாங்குதல் மற்றும் விற்றல் வீதங்களில் சேவையினை வழங்குவதன் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட பண மாற்றுனர்கள் இச்செயன்முறைக்கு வசதியளிக்கின்றனர். உதாரணமாக சுற்றுலாப் பயணி ஒருவர் ஐ.அ.டொலர் 100 கொண்ட நாணயத்தை பரிமாற்றுவதாயின் பண மாற்றுநர் டொலர்களைக் கொள்வனவு செய்வதற்கான குறித்த வீதமொன்றினை வழங்குவார். பின்னர் வேறுபட்ட வீதத்தில் ரூபாவில் சமமான தொகையினை விற்பனை செய்து இலாபத்தை உறுதிசெய்கின்ற அதேவேளை வாடிக்கையாளருக்கு சேவையை வழங்குகின்றார்.

இச்செலாவணி வீதங்கள் சந்தை நிலைமைகளின் அடிப்படையில் தளம்பக்கூடியன எனவே பயணிகள் சிறந்த விலையினைப் பெறுவதற்கு வேறுபட்ட பண மாற்றுநர்களிடமிருந்து கிடைக்கும் வீதங்களை ஒப்பிட வேண்டும். வருகைத் தருபவர்களுக்கு அவர்களது பணத்தை இலகுவாக மாற்றுவதற்கு உதவுவதன் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட பண மாற்றுநர்கள் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் பணத்தை செலவிடுவதற்கு சுற்றுலாப் பயணிகளுக்கு மிகவும் சௌகரியத்தை ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். இதன்பயனாக இலங்கைப் பொருளாதாரத்திற்கு இன்றியமையாது காணப்படுகின்ற உள்நாட்டு வியாபாரங்களுக்கு ஆதரவளித்து சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கும் பங்களிக்கின்றனர்.

## அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகர்கள்

அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகர்கள் வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகளை முகாமைசெய்வதில் வங்கிகளுக்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் உதவுவதுடன் வங்கிகளுக்கிடையிலான கடன்வழங்கலை வசதிப்படுத்துகின்றனர். பொதுமக்களுடன் அவர்கள் நேரடியாக தொடர்பைக் கொண்டிருக்காவிடினும் நாணயச் சந்தையில் திரவத்தன்மையை உறுதிசெய்வதற்கு அவர்களது செயற்பாடுகள் அத்தியாவசியமானவையாக விளங்குகின்றன. நாணயக் கொடுக்கல்வாங்கல்களுக்கு சிறந்த வீதங்களைக் கண்டறிவதற்கு நிதியியல் நிறுவனங்களுக்கு அவர்கள் உதவி பொருளாதாரத்தில் ஒட்டுமொத்த செலாவணி மற்றும் வட்டி வீதங்களில் செல்வாக்குச் செலுத்துகின்றனர். இவ் அத்தியாவசிய சேவை வழங்குவதனூடாக அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகர்கள் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கும் வினைத்திறனுக்கும் பங்களித்து வியாபாரங்களையும் அதேபோன்று வாடிக்கையாளர்களையும் பாதிக்கின்ற பல்வேறு பொருளாதாரக் காரணிகளில் தாக்கம் செலுத்துகின்றனர்.

## நிதியங்களும் ஏனைய நிதியியல் நிறுவனங்களும்

நிதியங்களும் ஏனைய நிதியியல் நிறுவனங்களும் என்பது மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு மேற்பார்வை செய்யப்படாத நிறுவனங்களை கொண்டுள்ளன. காப்புறுதிக் கம்பனிகள் சிக்கன மற்றும் கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள், கிராமிய வங்கிகள், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் அத்துடன் கொடுகடன் தகவல் பணியகம் ஆகியவற்றை அவை உள்ளடக்குகின்றன.

## காப்புறுதிக் கம்பனிகள்

சாத்தியமான இழப்புகளுக்கெதிராக நிதியியல் பாதுகாப்பை வழங்குவதன் மூலம் இடர்நேர்வை முகாமைசெய்வதில் காப்புறுதிக் கம்பனிகள் இன்றியமையாதனவாக விளங்குகின்றன. விபத்துக்கள், நோய்கள், இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மரணம் போன்ற எதிர்பாராத நிகழ்வுகள் காரணமாக ஏற்படுகின்ற இழப்புகளுக்கும் செலவுகளுக்குமெதிராக அவை நிதியியல் பாதுகாப்பை வழங்குகின்றன. நிமால் மற்றும் அமிலா ஆகிய இரு நபர்கள் இருக்கின்றனர். ஒரு நாள் நிமாலின் பேக்கரியில் தீ பற்றி அவரது உபகரணங்கள், பொருட்கள் மற்றும் கட்டடம் ஆகியவற்றிற்கு கணிசமான சேதத்தை விளைவித்தது. நிமால் காப்புறுதியினைப் பெற்றுக்கொண்டிருக்காமையினால் செலவுகளை அவரே ஏற்று தனது பணத்திலிருந்து அனைத்து பழுதுபார்த்தல்கள் மற்றும் மாற்றீட்டுச் செலவுகளையும் மேற்கொள்ள வேண்டும். துரதிஷ்ட வசமாக மொத்தச் செலவு நிமால் பேக்கரியை மீண்டும் திறப்பதற்கு அவரால் இயலாதளவு மிக உயர்வாகக் காணப்பட்டு அவரது வியாபாரத்தை முடிவுறுத்தி அவரது வருமானத்தை இழப்பதற்கு இட்டுச்செல்கின்றது. அமிலாவும் இதேபோன்ற துரதிஷ்ட நிகழ்வொன்றைச் சந்திக்கின்றார். அவளது பேக்கரியும் தீயினால் சேதமாக்கப்படுகின்றது எனினும், அமிலா தீ பாதுகாப்புக் காப்புறுதியினைப் பெற்றிருக்கின்றாள். அவளது காப்புறுதி அவளது கட்டடத்தைப் பழுதுபார்த்து, உபகரணங்களை மாற்றீடு செய்து, அவளது பொருட்களை மீண்டும் கையிருப்பிற்குக் கொண்டுவருவதற்கான காப்பீட்டை வழங்குகின்றது. காப்புறுதியானது அவளது பேக்கரி பழுதுபார்த்தலுக்காக மூடப்பட்டிருக்கின்ற வேளையில் இழக்கின்ற வருமானத்திற்கும் காப்பீடளிக்கின்றது. இதன்பயனாக அமிலா கணிசமான நிதியியல் இழப்புக்களை எதிர்கொள்ளாது சில மாதங்களிலேயே அவளது பேக்கரியை மீளத்திறக்கக்கூடியதாக இருக்கின்றது. இவ்வுதாரணத்தில் அமிலாவின் காப்புறுதி நிதியியல் ரீதியாக வீழ்ச்சியடைவதிலிருந்து அவளைப் பாதுகாத்து அவளது வியாபாரத்தை மீட்டெடுத்து தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு இயலச்செய்கின்றது. மாறாக, நிமால் காப்புறுதியின்றி குறிப்பிடத்தக்க நிதியியல் கஸ்டங்களை அனுபவித்தார். காப்புறுதி எதிர்பாராத நிகழ்வுக்கெதிராக பாதுகாப்பளித்து நிதியியல் உறுதிப்பாட்டை எவ்வாறு வழங்குகின்றது என்பதை இது எடுத்துக்காட்டுகின்றது.

வேறுவிதத்தில் சொந்தப் பணத்திலிருந்து செலவிட வேண்டிய செலவுகளுக்கு காப்பீடளிப்பதன் மூலம் காப்புறுதி வழங்குநர் தனிப்பட்டவர்களுக்கு, குடும்பங்களுக்கு மற்றும் வியாபாரங்களுக்கு இடர்நேர்வுகளை முகாமைசெய்வதில் உதவுகின்றார். மற்றுமொரு உதாரணத்தைப் பார்க்கலாம். உங்களது வாகனத்தைச் செலுத்தி தற்செயலாக வேறொரு வாகனத்தை மோதிவிடுகின்றீர்கள். காப்புறுதியின்றி உங்களது கார் மற்றும் மற்றைய வாகனம் இரண்டிற்கும் ஏற்பட்ட சேதத்திற்கு நீங்கள் செலவிட வேண்டியிருக்கும் இது பல ஆயிரங்களைக் கொண்ட செலவாக அமையக்கூடும். எனினும், வாகனக் காப்புறுதியுடன் காப்புறுதிக் கம்பனி அநேகமான பழுதுபார்த்தல் செலவுகளுக்கு காப்பீடளித்து கணிசமான நிதியியல் சுமைக்கு தோள் கொடுத்து உங்களைக் காக்கும்.

இலங்கையில் காப்புறுதி தொழிற்துறையை உருவாக்கி மேற்பார்வை செய்து ஒழுங்குபடுத்துவதற்காக இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க காப்புறுதித் தொழில்துறை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட காப்புறுதித் தொழில்துறை ஒழுங்குபடுத்துநராகும். 2023 திசெம்பர் 31 அன்றளவில் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் 28 காப்புறுதி வழங்குநர்கள் பதிவுசெய்துள்ளனர். காப்புறுதி வியாபாரத்தில் இரு முக்கிய வகுப்புக்கள் காணப்படுகின்றன. அவை பொதுக் காப்புறுதி மற்றும் நீண்டகால காப்புறுதி என்பனவாகும். 14 கம்பனிகள் நீண்டகால காப்புறுதித் தொழில் ஈடுபடுவதுடன் 12 கம்பனிகள் பொதுக் காப்புறுதியில் மாத்திரம் ஈடுபடுகின்றனர். இரு கூட்டுக் கம்பனிகள் நீண்டகால காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி தொழில் இரண்டிலும் ஈடுபடுகின்றனர் (ஏவவிள:ஃஃ.சைஉ.பழஎ.டம.ஃ.எைளரயடஎந-உழஅியைநள.ஃ). பொதுக் காப்புறுதியானது காப்புறுதி ஒப்பந்ததாரரின் வாழ்க்கை ஆபத்து தவிர ஏதேனும் வேறு ஆபத்துக்களுக்கு காப்பீடளிக்கின்றது. ஆயுள் காப்புறுதி பிரதானமாக காப்புறுதி பெற்ற ஆளின் ஆயுள் ஆபத்திற்கு காப்பீடளிக்கின்றது.

நீண்டகால காப்புறுதி ஒப்பந்தங்களானவை ஆயுள், அங்கவீனம் மற்றும் பல வகை நட்ட உத்தரவாதம் வழங்குவதற்கான ஒப்பந்தங்கள், விபத்து மற்றும் நோய் நன்மைகள், நிரந்தர ஆரோக்கியம், மூலதன மீட்பு ஒப்பந்தங்கள், ஓய்வூதிய ஒப்பந்தங்கள் போன்றவற்றிற்கு காப்பீடளிக்கின்றது. நீண்டகால வியாபாரம் என்ற வரைவிலக்கணத்திற்குள் வராத அனைத்து காப்புறுதி வியாபாரங்களும் கடல்சார், வான் அல்லது இடமாறல் காப்புறுதி ஒப்பந்தம், தீ பாதுகாப்பு காப்புறுதி வியாபாரம், மோட்டார் வாகன காப்புறுதி வியாபாரம், மருத்துவக் காப்புறுதி வியாபாரம், தொழில்தருநர்களின் பொறுப்பு காப்புறுதி வியாபாரம், நானாவித காப்புறுதி வியாபாரம் ஆகியவற்றைக் கொண்டிருப்பதாக அத்துடன் உள்ளடக்குவதாகக் கொள்ளப்படுகின்றது. இக்காப்புறுதி உற்பத்திகள் பற்றிய பொதுவான நோக்கு கீழே தரப்பட்டுள்ளது.

.



**ஆயுள் காப்புறுதி:** காப்புறுதி ஒப்பந்த உடைமையாளர் மரணிப்பதன் மீது பயன்பெறுநர்களுக்கு நிதியியல் ஆதரவினை வழங்குகின்றது. தவணை, ஆயுள், முழு ஆயுள் மற்றும் ஒட்டுமொத்த ஆயுள் காப்புறுதி என்பவற்றை இவ்வகைகள் உள்ளடக்குகின்றன.



**மருத்துவக் காப்புறுதி:** மருத்துவச் செலவுகள், மருத்துவரிடம் வருகைதரல், வைத்தியசாலையில் தங்குதல், மருந்து வழங்கல் மற்றும் வேறு சுகாதாரக் கவனிப்பு தொடர்புபட்ட செலவுகள் என்பவற்றிற்கு காப்பீடளிக்கின்றது.



**கடல்சார், வான் அல்லது இடமாறல் காப்புறுதி பூட்கை:** கப்பல்கள், கப்பற்சரக்குகள், முனையங்கள், உற்பத்தி நாட்டிற்கும் சென்றடையும் இடத்திற்குமிடையில் கொண்டுசெல்லல் என்பவற்றின் இழப்பிற்கு அல்லது சேதத்திற்கு காப்பீடளிக்கின்றது.



**தீ பாதுகாப்புக் காப்புறுதி:** வதிவிட, வர்த்தக அல்லது கைத்தொழில் சார் ஆதனங்களுக்கு தீயினால் ஏற்படும் சேதங்களுக்கு மற்றும் இழப்புகளுக்கு காப்பீடளிக்கின்றது.



**மோட்டார் வாகனக் காப்புறுதி:** விபத்துக்கள், திருட்டு மற்றும் இயற்கை அனர்த்தங்கள் உள்ளடங்கலாக வாகனங்களுடன் தொடர்புடைய சேதங்களுக்கான காப்பீட்டை வழங்குகின்றது.



**தொழில்தருநரின் பொறுப்புக் காப்புறுதி:** பொதுப் பொறுப்புக் காப்புறுதி, உற்பத்திப் பொறுப்பு, தொழில்சார் நட்டோத்தரவாத காப்புறுதி, பணிப்பாளர்களின், அலுவலர்களின் நட்டோத்தரவாதம் அத்துடன் பணியாளர்களின் நட்ட ஈடு உள்ளடங்கலாக பல வகையான பொறுப்புக்களுக்கு காப்பீடளிக்கின்றது.

## காப்புறுதி எவ்வாறு தொழிற்படுகின்றது

ஒப்பந்த உடைமையாளர் என்பது காப்புறுதி பூட்கையொன்றை வைத்திருக்கின்ற ஆளொருவராவதுடன் எதிர்பாராத நிகழ்வொன்றி நிகழ்வதன் மீது சொல்லப்பட்ட காப்புறுதி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட உரிமைகளைப் பிரயோகிப்பதற்கான சிறப்புரிமையைக் கொண்டுள்ளார். ஒப்பந்த உடைமையாளர்கள் காப்பீட்டுக்கான கைமாறாக காப்புறுதிக் கம்பனிக்கு கட்டுப்பணங்களை (மாதாந்தம் அல்லது ஆண்டுதோறும்) செலுத்துகின்றார். காப்புறுதி வழங்குநர்கள் காப்புறுதிக் கணிப்பீட்டினூடாக காப்புறுதி செய்கின்ற ஆளின் அல்லது வியாபாரத்தின் இடர்நேர்வை மதிப்பிடுகின்றனர். உயர்வாக இடர்நேர்வு கணிக்கப்படுமாயின் கட்டுப்பணம் உயர்வானதாகவிருக்கும். காப்பீடு செய்யப்பட்ட நிகழ்வொன்றை (உதாரணம். விபத்து அல்லது நோய்) ஒப்பந்த உடைமையாளர் எதிர்கொள்கின்ற போது காப்புறுதிக் கம்பனியிடம் வாலை கோரிக்கையொன்றினை அவர் கோவைப்படுத்தலாம். அனுமதிக்கப்படுமாயின் காப்புறுதி வழங்குநர் ஒப்பந்த உடைமையாளருக்கு அல்லது ஏற்புடையவிடத்து மூன்றாம் தரப்பினருக்கு பூட்கையின் காப்பீட்டு வரையறைகள் வரை இழப்புகளுக்காக ஈடளிக்கின்றார்.

## சிக்கன மற்றும் கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள்

சிக்கன மற்றும் கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள் என்பன கிராமிய சேமிப்புக்களைத் திரட்டுகின்ற அத்துடன் வேண்டப்படுகின்ற போது அதன் உறுப்பினர்களுக்கு நிறுவனசாரா கொடுகடன் சந்தையில் (அதாவது பணம் கடன்வழங்குநர்கள்) நிலவுகின்ற வட்டி வீதங்களுக்கு மிகவும் குறைவான வீதங்களில் கடன் வசதிகளை வழங்குகின்ற கிராமிய மட்ட நிறுவனங்களாகும். வட்டி வீதங்கள் சிக்கன மற்றும் கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள் மத்தியில் வேறுபடுவதுடன் கடன்களின் அளவுகள் மீதான உயர்ந்தபட்ச வரையறைகளும் கடன்கள் வழங்கப்படுகின்ற நிபந்தனைகளும் சிக்கன மற்றும் கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள் மத்தியில் மாறுபடுகின்றன.

சிக்கன மற்றும் கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளூர் மட்டத்தில் தொழிற்படுகின்ற குறைந்த வருமானம் உழைக்கின்ற ஆட்களுடன் தன்னார்வமாகத் தொடர்புகளை ஏற்படுத்துகின்றன. சிக்கன மற்றும் கொடுகடன் கூட்டுறவுச் சங்கமொன்றின் உறுப்புரிமை பொதுவாக 40 தொடக்கம் 60 வரையான வீச்சில் காணப்படும், ஆயினும் சில சங்கங்கள் 150 ஆட்களை விஞ்சுகின்ற உறுப்புரிமையினைக் கொண்டிருக்கின்றன. சிக்கன மற்றும் கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள் அதன் சேவைகளைப் பயன்படுத்துகின்ற உறுப்பினர்களால் (நுகர்வோர் கூட்டுறவு அல்லது கொடுகடன் ஒன்றியம்), அங்கு பணியாற்றுகின்றவர்களால் (பணியாளர் கூட்டுறவு) அல்லது அங்கு வாழ்கின்றவர்களால் (வீடமைப்பு, கூட்டுறவு) சொந்தமாகக் கொள்ளப்படுகின்றன. தொழில்முயற்சியொன்றின் வெற்றியில் பொதுவான நலனை வேறுபட்ட வகுப்பினர் பகிருகின்ற போது இவ்வகுப்புக்கள் எவ்வாறு அவர்கள் ஒன்றாகப் பணியாற்றலாம் என்பதை ஒழுங்கமைப்பதற்கு கூட்டுறவு துணைச் சட்டங்களிலுள்ள வேறு உறுப்புரிமை வகுப்புக்களைப் பயன்படுத்தலாம் (பல பங்குதாரர் கூட்டுறவு).

இலங்கையிலுள்ள கூட்டுறவுத் துறை அரைநூற்றாண்டிற்கு மேல் அநேகமான மக்கள் தொகையின் நாளாந்த வாழ்வுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. அனைத்து கூட்டுறவுகளும் இலங்கையின் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சினால் நிர்வகிக்கப்படுகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் கூட்டுறவுகளின் தொழிற்பாடுகளை ஒழுங்குபடுத்துகின்றது. இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை நாட்டிலுள்ள கூட்டுறவுகளின் உயர்மட்ட நிறுவனமாகும். இலங்கையின் தேசிய கூட்டுறவுச் சபையானது கல்வி மற்றும் பயிற்சி, ஆலோசனை, வெளியீடு, ஒருங்கிணைப்பு மற்றும் சர்வதேச விவகாரங்கள் என்பவற்றை மேற்பார்வை செய்கின்றது.

ஆகவே, பல இலாப நோக்கமற்ற மற்றும் இலாப நோக்கு அமைப்புக்கள் கூட்டுறவு மாதிரியினைப் பின்பற்றலாம். மரபுசார்ந்த கட்டமைப்பிற்கும் கூட்டுறவுக் கட்டமைப்பிற்குமிடையிலான முக்கிய வேறுபாடு முன்னுரிமைகளின் ஒழுங்கில் அமைந்துள்ளது. அதாவது, கூட்டுறவு உற்பத்தித்திறன் மிக்க, தன்னிறைவு மற்றும் சமூக ரீதியான பொறுப்பு என்ற விதத்தில் அதன் உறுப்பினர்களின் தேவைகளை முதலில் நிறைவேற்றுவதாகும். கூட்டுறவுகள் தமக்கும் ஒருவருக்கொருவரும் உதவுதல், பொறுப்புக்களை ஏற்றல், நியாயமாகவிருத்தல், கூட்டாகப் பணியாற்றுதல் போன்ற விழுமியங்கள் மீது கட்டியெழுப்பப்படுகின்றன. கூட்டுறவுகளின் உறுப்பினர்கள் மிகவும் நேர்மையான வெளிப்படையான சமூக ரீதியாகப் பொறுப்புவாய்ந்த மற்றும் ஏனையோரைக் கவனிக்கின்றவர்களாக இருக்கின்றனர் என நம்பப்படுகின்றது. கூட்டுறவுகள் எவ்வாறு தொழிற்படுகின்றன மற்றும் தீர்மானங்களை மேற்கொள்கின்றன என்பதற்கு இவ்விழுமியங்கள் வழிகாட்டுகின்றன.

## கிராமிய வங்கிகள்

கிராமிய வங்கித் திட்டம் கிராமிய சேமிப்புக்களைத் திரட்டி கிராமியத் துறைக்கு கடன் வழங்குவதற்கு மக்கள் வங்கியினால் 1964இல் தொடங்கப்பட்டன. திட்டத்தின் குறிக்கோள் அவற்றின் வங்கித்தொழில் தொழிற்பாடுகளின் அபிவிருத்தியை வினைத்திறன் மிக்க துறைகளில் ஊக்குவிப்பதற்கும் அவர்களின் முகாமைத்துவ மற்றும் தொழிற்பாட்டு தரநியமங்களை உயர்த்துவதற்கும் உறுதியான முன்மொழிவுகளை கூட்டிணைப்பதன் மூலம் கிராமிய மட்டத்தில் ஆரம்ப கூட்டுறவுகளுக்கு உதவுவதாக அமைந்திருந்தது. நிறுவனசார் கட்டமைப்பிற்கு அமைவாக மக்கள் வங்கி உறுப்பினர்களுக்கு மீள் கடன் வழங்குவதற்கும் உபகரணங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்வதற்கும் நிதியளிப்பதற்குமான முற்பணங்கள் ஊடாக இச்சங்கங்களுக்கு உதவுகின்றது. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்துடனான கூட்டிணைப்புடன் மக்கள் வங்கி இச்சங்கங்கள் தமது தொடர்புடைய பிரதேசங்களில் அபிவிருத்தித் திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்துவதற்கு உதவுகின்றது.

கிராமிய வங்கிகள் வர்த்தக வங்கிகளல்ல எனினும் கடந்த மூன்று தசாப்பதங்களாக கிராமிய வங்கிகள் பல எண்ணிக்கைகளாக வளர்ச்சியடைந்து கிராமிய சனத்தொகையின் பாரிய பங்கினருக்கு அத்தியாவசிய வங்கிச் சேவைகளை வழங்குகின்றன. 1970இல் அரசாங்கத்தினால் தொடங்கப்பட்ட பல்நோக்கு கூட்டுறவுகள் கிராமிய வங்கித் திட்டத்தை தேசியளவில் விரிவுபடுத்துவதற்குத் தேவையான கட்டமைப்பினை ஏற்படுத்தியது. மாறாக, தொடக்க காலப்பகுதியில் மிகச் சில கூட்டுறவுகளே கிராமிய வங்கியொன்றாக இருப்பதற்குத் தகைமை பெற்றன. சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக் கணக்குகளூடாக சேமிப்புக்களைத் திரட்டுவதற்கு மேலதிகமாக இக்கிராமிய வங்கிகள் கிராமியத் துறைக்கு விசேடமாக உற்பத்தி, வீடமைப்பு, மின்னூட்டல், படுகடன் மீட்பு மற்றும் நுகர்வு மற்றும் எதிர்பாராதவை போன்றவற்றிற்கு

கடன் வசதிகளை வழங்குகின்றன. மேலும், கிராமிய வங்கிகள், மக்கள் வங்கியின் முகவர்களாக அடகுத் தொழிலையும் மேற்கொள்வதுடன் கொடுகடன் நிகழ்ச்சித்திட்டங்களை உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் செயற்பாடுகளுடன் ஒருங்கிணைப்பதிலும் உதவுகின்றன.

கிராமிய வங்கிகள் தனிப்பட்டவர்களுக்கும் கூட்டுறவு வாடிக்கையாளர்களுக்கும் பல வகையான வங்கித்தொழில் மற்றும் நிதியியல் சேவைகளை வழங்குகின்றன. கம்பனி மூன்று துறைகளில் தொழிற்படுகின்றது. அதாவது வர்த்தக, சில்லறை மற்றும் மொத்த விற்பனைப் பிரிவு என்பனவாகும். அதன் முக்கிய தொழில் நடவடிக்கைகள் வர்த்தக, சில்லறை மற்றும் மொத்த வங்கிச் சேவை ஆகும். சமூக ரீதியாகப் பொறுப்புமிக்க, இலாபகரமான விதத்தில் இலங்கையினுள் தாபிக்கப்பட்ட நாடாளவிய வலையமைப்பினூடாக கூட்டுறவு இயக்கத்திற்கும் வேறு தெரிவுசெய்யப்பட்ட வாடிக்கையாளர் வகுப்பினருக்கும் முதன்மையாக சிறந்த நிதியியல் சேவைகளை வங்கி வழங்குகின்றது.

## ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் என்பன ஓய்வுபெற்றதன் பின்னர் ஊழியர்களின் நிதியியல் நல்வாழ்வினைப் பேணுவதில் முக்கியமாக விளங்குகின்ற இலங்கையிலுள்ள கட்டாய சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களாகும்.

## ஊழியர் சேமலாப நிதியம் (EPF)

ஊழியர் சேமலாப நிதியம் 1958ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டதுடன் சட்டத்தின் மூலம் நிதியத்தின் உறுப்புரிமை அநேகமாக தனியார் மற்றும் சில அரசாங்கத் துறை ஊழியர்கள் வரை விரிவுபடுகின்றது. ஊழியரொருவரின் நிதியத்திற்கான பங்களிப்பு மாதாந்த சம்பளத்தின் 8 சதவீதமாகும். தொழில்தருநர் மாதாந்த சம்பளத்தில் 12 சதவீதத்தினைப் பங்களித்து மொத்தமாக 20 சதவீதமாக்குகின்றார். ஊழியர் சேமலாப நிதியம் நிதியத்தின் நிதியங்களை இலங்கை மத்திய வங்கி முகாமைசெய்கின்றது.

ஊழியர் சேமலாப நிதியம் ஓய்வு வயது காலப்பகுதியில் நிதியியல் சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு உதவுவது மாத்திரமன்றி தொழிலில் இருக்கின்ற போது ஊழியரொருவர் பயன்படுத்தக்கூடிய பல சேவைகளையும் வழங்குகின்றது. உறுப்பினர்கள் வீடமைப்புக் கடன்களுக்காக உத்தரவாத வசதியினைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருப்பதுடன் முன்கூட்டிய ஓய்வு நலன்களாக வீடமைப்பிற்கு மற்றும் மருத்துவத் தேவைகளை நிறைவுசெய்வதற்கு 30 சதவீதப் பகுதியளவான மீளெடுப்பையும் செய்யலாம். இதன்மூலம் ஊழியர் சேமலாப நிதியம் ஓய்வுக்கு முன்னர் வீடு பற்றிய அவர்களின் கனவை நனவாக்குவதற்கும் ஆரோக்கியப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் ஊழியர்களுக்கு உதவுகின்றது.

## உங்களது நன்மைகளுக்காக எப்போது மீளளிப்பை நீங்கள் கோரலாம்?

- ஓய்வு வயதை நீங்கள் எட்டி தொழில் முடிவடைகின்ற போது
- திருமணத்திற்காக தொழிலை விட்டுச்செல்கின்ற போது
- முழுமையாக இயலாத நிலை காரணமாக தொழிலை முடிவுறுத்தல்
- நிரந்தர வதிவிடத்திற்காக வெளிநாட்டிற்கு செல்வதன் மீது தொழிலை முடிவுறுத்தல்
- அரசாங்க அல்லது உள்ளூராட்சி சேவையில் நிரந்தர ஓய்வூதியம் பெறத்தக்க பதவியொன்றில் ஈடுபடுகின்ற போது
- அரசாங்க நிறுவனங்கள் கூட்டுத்தாபனங்களாகின்ற, கூட்டுத்தாபனங்கள் மூடப்படுகின்ற மற்றும் மிகையான அலுவலர்கள் குறைக்கப்படுகின்ற, தேசிய மயமாக்கப்படுகின்ற அத்துடன் கம்பனிகளாக மாற்றப்படுவதைத் தொடர்ந்து பதவி விலகுகின்ற போது நன்மைகளின் மீளளிப்பைப் பெற்றுக்கொள்ளல்.

மேலதிக விபரங்களுக்கு அவற்றின் வலைத்தளத்திற்குள் பிரவேசியுங்கள்: https://epf.lk/

## ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (ETF)

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் 1980ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 1981இல் தாபிக்கப்பட்டது. நிதியத்தை ஊழியர்களின் நம்பிக்கைப் பொறுப்புச் சபை நிர்வகிக்கின்றது. தற்போது ஊழியர் நம்பிக்கை நிதியச் சபை நிதி, பொருளாதார, தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் தொழிற்படுகின்றது. அரசாங்க ஓய்வூதியத்திட்டத்திற்கு உரித்தல்லாத அனைத்து பொதுத் துறை ஊழியர்களும் அனைத்து தனியார் துறை ஊழியர்களும் இந்நிதியத்தின் உறுப்பினர்களாவர். ஊழியர் சேமலாப நிதியத்தினைப் போலன்றி ஊழியரின்∴ உறுப்பினரின் சார்பில் தொழில்தருநர் மாத்திரம் பங்களிக்கின்றார். இங்கு ஊழியரொருவருக்கு மாதமொன்றிற்கு மொத்த உழைப்பின் 3 சதவீதம் தொழில்தருநரால் நிதியத்திற்கு அனுப்பப்படும். இது உறுப்பினருக்கான பங்களிப்பற்ற நன்மையாகும். சுயதொழில் செய்கின்றவர்களும் மற்றும் புலம்பெயர்ந்த பணியாளர்களும் சுயாதீனமாக நிதியத்திற்குப் பங்களிப்புச் செய்து உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு அவற்றின் வலைத்தளத்திற்குள் பிரவேசியுங்கள்: https://etfb.lk/

## இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை (SSB)

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையானது பாராளுமன்றின் 1996இல் 17ஆம் இலக்க சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டம் மற்றும் 1999இன் 33ஆம் இலக்க அதனைத் தொடர்ந்து திருத்தம் மூலம் தாபிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதிய மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன் திட்டங்கள் 2006 செத்தெம்பர் 25ஆம் திகதியிடப்பட்ட 1464∴5 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் அறிமுகப்படுத்தப்பட்டன. இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் வகிபாகம் அரசாங்க ஓய்வூதியத்திற்கு உரித்தல்லாதவர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நன்மைகளை வழங்குவதாகும்.

சங்கத்தின் எவையேனும் உறுப்பினர் தலைமை அலுவலகம், மாவட்ட அலுவலகங்கள் மற்றும் இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையின் பிரதேசச் செயலக அலுவலகங்கள், கிராம சேவையாளர் அலுவலகங்கள் அல்லது இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபை பொறுப்பு சாட்டியுள்ள எவரேனும் வேறு அலுவலர் போன்றோரிடமிருந்து உறுப்புரிமையைப் பெறலாம்.

மேலதிக விபரங்களுக்கு அவற்றின் வலைத்தளத்திற்குள் பிரவேசியுங்கள்: https://ssb.gov.lk/

## இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் (CRIB)

இலங்கை கொடுகடன் தகவல் பணியகமானது 1995இன் 8ஆம் இலக்க மற்றும் 2008இன் 42ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1990இன் 18ஆம் இலக்க இலங்கை கொடுகடன் தகவல் பணியகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கொடுகடன் தகவல் பணியகம் சுயாதீன நீதிச் சட்ட நிறுவனமாவதுடன் இலங்கை மத்திய வங்கியுடன் அரசாங்க  தனியார் பங்குடமையுடன் அதன் பங்குரிமை மூலதனத்தில் பாரிய பங்கினைக் கொண்டிருக்கின்றது. எஞ்சிய பங்குகள் பணியகத்தின் ஏனைய பங்குடமையாளர் உறுப்பினர்களிடையே உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தின் முதன்மை நியதிச்சட்டக் குறிக்கோள் இலங்கை கொடுகடன் தகவல் பணியகச் சட்டத்தின் மூலம் எடுத்துரைக்கப்பட்டவாறு இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தின் பங்குடமையாளர் உறுப்பு கடன் வழங்கும் நிறுவனங்களுக்கும் பொதுமக்களுக்கும் அதன் சட்ட ரீதியாக பொறுப்பாணை அளிக்கப்பட்ட பொறுப்புக்களை நிலைநாட்டுவதாகும். இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தின் சில முக்கிய தொழிற்பாடுகள் உள்ளடக்குவன.

- தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்து கொடுகடன் மற்றும் நிதியியல் தகவல்களை சேகரித்தல், ஒப்பிடுதல் மற்றும் தொகுத்தல்.
- அனுமதிக்கத்தக்க நோக்கங்களுக்காக கோரிக்கையின் பெயரில் கொடுகடன் மற்றும் நிதியியல் தகவல்களை தொடர்புடைய தரப்பினர்களுக்கு வழங்குதல்.
- கொடுகடன் தரப்படுத்தல் தொழிற்பாடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் அத்தகைய தரப்படுத்தல்களை வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முகவராண்மைகளுக்கு விற்பனை செய்தல்.
- பணியகத்தின் கடன்வழங்கல் மற்றும் கொடுகடன் வழங்குதல் நிறுவனங்களின் கோரிக்கையின் பெயரில் ஆட்களுக்கு கொடுகடன் புள்ளியிடலை வழங்குதல்.
- பணியகத்தின் பங்குடமையாளர் கடன்வழங்கல் நிறுவனங்களுக்கான ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கருத்திட்டங்களை மேற்கொள்ளுதல் மற்றும் கொடுகடன் வழங்கும் நிறுவனங்களைப் பங்கேற்கச்செய்தல்.
- அசையத்தக்கவைகளின் பாதுகாப்பு நலனைப் பதிவுசெய்வதற்கு பாதுகாப்பான கொடுக்கல்வாங்கல்களுக்காக கோவைப்படுத்தல் அலுவலகமொன்றைத் தொழிற்படுத்தல்.

## Credit Score

Credit Score is an advanced tool that lenders use to help them anticipate how likely they are to repay their loan on time. Credit scores are also sometimes called risk scores because they help lenders assess the risk, that you won't be able to repay the debt as agreed.

Your score today is a snapshot reflecting how you have handled debts in the past. Credit scoring is about predicting your future behavior based on how you have managed your debt in the past.

A credit score plays an important role when you want to apply for a financial product from a lending institution, such as a personal loan, mortgage, or credit card. Banks and other lending institutions may use your credit score to evaluate the credibility of your financial health. It helps them understand the risks they might face if they decide to lend money to you. Essentially, it is an indicator of your financial health.

CRIB Score is the first credit score introduced by the CRIB. It is a 3-digit number ranging from 250 to 900 calculated based on credit information reported by the registered banks and finance/leasing companies (the member lending institutions of the Bureau) in Sri Lanka. CRIB issues two types of Scores:

- CRIB Score - Individual
- CRIB Score - Corporate

'Consumer CRIB Score' report can be obtained directly from the Bureau or applied through a Banking institution.'Corporate CRIB Score' report can be obtained from the bureau, but applying ONLY through a banking institution.

**இலங்கை கொடுகடன் தகவல் பணியகக் கருவிகள் மற்றும் சேவைகள் பற்றிய கண்ணோட்டம்**

| கருவிகள்∴சேவை | விபரம் | நோக்கம் |
|---|---|---|
| **பொதுவான கொடுகடன் அறிக்கை** | கொடுகடன் நம்பகத்தன்மையின் ஒட்டுமொத்த நிலையினைப் பெறுவதற்கு தனிப்பட்டவர்களுக்கும் வியாபாரங்களுக்குமான அனைத்தையுமுள்ளடக்கிய கொடுகடன் வரலாறு | கடன்வழங்குநர்களுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்குமான அறிந்த கொடுகடன் தீர்மானங்கள், இடர்நேர்வு மதிப்பீடு மற்றும் தகவல் சமச்சீரின்மையைத் தணித்தல் |

**கடன்வழங்கும் நிறுவனத்திற்கான சேவைகள்**

| கருவிகள்∴சேவை | விபரம் | நோக்கம் |
|---|---|---|
| **General Credit Report** | Comprehensive credit history for individuals and businesses to derive an overall assessment on credit worthiness. | Informed credit decisions, risk assessment, and mitigation of information asymmetry for lenders. |

| கருவிகள்∴சேவை | விபரம் | நோக்கம் |
|---|---|---|
| **கொடுகடன் புள்ளி** | தனிப்பட்டவர் ஒருவரின் அல்லது வியாபாரமொன்றின் தவணை தவறும் சாத்தியம் மற்றும் கடன் தரநிலைகள் என்பவற்றை அளவிடுவதற்கு முக்கிய கொடுகடன் தரவுப் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்ட புள்ளிவிபர மாதிரியிலிருந்து பெறுவிக்கப்பட்ட எண்ணியல் பிரதிநிதித்துவம் | முன் கணிக்கத்தக்க கொடுகடன் இடர்நேர்வு மதிப்பீடு மற்றும் அனைவருக்குமான கொடுகடனை ஊக்குவித்தல் |

| கருவிகள்∴சேவை | விபரம் | நோக்கம் |
|---|---|---|
| **சொத்துப் பட்டியல் முகாமைத்துவம்** | நிகழ்நேர கொடுகடன் சொத்துப்பட்டியல் கண்காணித்தல் மற்றும் பகுப்பாய்விற்கான கருவிகள் | இடர்நேர்வு முகாமைத்துவம், செயலாற்றுகை உகப்பாக்கம் சாத்தியமான தவணை தவறுதல்களை முன்கூட்டிய கண்டுபிடித்தல் |

| கருவிகள்∴சேவை | விபரம் | நோக்கம் |
|---|---|---|
| **தொழில் பகுப்பாய்வு** | தரவினால் இயக்கப்படும் கொடுகடன் இடர்நேர்வு முன்நோக்கு, சூழ்நிலைப் பகுப்பாய்வு, செயலாற்றுகை எதிர்வுகூறல், இடர்நேர்வு, கடமை தவறுதல் மற்றும் சந்தை புள்ளிவிபரங்கள் முகாமைத்துவக் கருவி | பொருளாதாரமொன்றின் முன்னேற்றத்திற்காக முறைமை சார்ந்த கொடுகடன் இடர்நேர்வைத் தணித்தல் மற்றும் கொடுகடன் தீர்மானக் கட்டமைப்புக்களின் மேம்படுத்தல் |

| கருவிகள்∴சேவை | விபரம் | நோக்கம் |
|---|---|---|
| **கடன்பெறுநர் இடர்நேர்வு தகவல் குறிப்புக்கள்** | கொடுகடன் வரலாறு, மீள்கொடுப்பனவுப் போக்குகள் மற்றும் கடமை தவறுதல் விதங்கள் என்பன பற்றி குடித்தொகையுடன் சேர்த்து ஒன்றிணைந்த நுண்நோக்குகள் | ஒழுக்கம் சார்ந்த ஆபத்துக்களையும் பாதகமான தெரிவினையும் தவிர்த்தல். |

| கருவிகள்∴சேவை | விபரம் | நோக்கம் |
|---|---|---|
| **கண்காணிப்பு மற்றும் விழிப்பூட்டல் சேவை** | பணியகத்திற்கு சமர்ப்பிக்கின்ற தற்போதுள்ள கடன்பெறுநர்களின் நடத்தைகளை கிடைக்கப்பெறும் விழிப்பூட்டலையும் கண்காணித்தல் | இடர்நேர்வு முகாமைத்துவம், செயலாற்றல் மேம்படுத்துகை, மற்றும் சாத்தியமான தவணைத் தவறுதல்களை தொடக்கத்தில் கண்டறிதல். |

இக்கருவிகளையும் சேவைகளையும் அதன் சேவை வழங்கல்களுக்குள் ஒருங்கிணைப்பதன் மூலம் கொடுகடன் தகவல் பணியகத்தின் கடன்வழங்குநர்களுக்கு, கடன்பெறுநர்களுக்கு மற்றும் பரந்தளவில் பொருளாதாரத்திற்கு நன்மையயக்கின்ற சமநிலையான, வெளிப்படையான, வினைத்திறன் மிக்க கொடுகடன் முறைமையை இயலச் செய்கின்றது.

மேலதிக விபரங்களுக்கு அவற்றின் வலைத்தளத்திற்குள் பிரவேசியுங்கள்: https://www.crib.lk/

அத்தியாயம் 3

# தனிப்பட்ட நிதி

## 3.1 அறிமுகம்

### கற்றலின் பெறுபேறுகள்

- தனிப்பட்ட நிதியியல் முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தினை வரையறை செய்தல் மற்றும் விளங்கிக் கொள்ளுதல்.
- தனிப்பட்ட நிதியின் முக்கிய கூறுகளை அடையாளம் காணுதல்.

### தனிப்பட்ட நிதி

நிதியியல் விழிப்புணர்வு, அறிவு, தேர்ச்சி மனோபாவம் மற்றும் நடத்தை என்பனவற்றின் இணைந்த தன்மை தகவல்களின் அடிப்படையில் நிதியியல் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அவசியமானதாகும் என்பதுடன் இறுதியில் தனிப்பட்ட நிதியியல் நலனோம்புகை எய்தப்படுகிறது. (பொருளாதாரத்தின் ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பு 2020)

தனிப்பட்ட நிதி என்பது நிதியியல் சுயாதீனத்தையும் பாதுகாப்பினையும் எய்துவதற்காக உங்கள் பணத்தினையும் ஏனைய நிதியியல் சொத்துக்களையும் காத்திரமான முறையில் முகாமைப்படுத்துவது பற்றியதாகும். இது வரவுசெலவுத் திட்டப்படுத்தல், சேமிப்புக்கள், முதலீடுகள் மற்றும் கட்டுப்படுத்தும் செலவுகள் என்பனவற்றுடன் தொடர்புபடுவதுடன் தனிப்பட்டவர்களை அவர்களது குறுங்கால மற்றும் நீண்டகால தனிப்பட்ட இலக்குகளுக்கான வருமானம் மற்றும் திட்டத்திற்குள் வாழ்வதனை அனுமதிக்கிறது.



ரத்நாயக்க குடும்பம் அவர்களது மாலைத் தேநீர் நேரத்தில் பின்வரும் கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருக்கிறது






மேலே குறிப்பிட்டவாறு குடும்பமொன்றின் உண்மையான கலந்துரையாடலாகும். முக்கியமாக அவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட நிதியியல் மூலவளங்களை கொண்டிருக்கும்போது அல்லது அவர்களது நிதியினை காத்திரமான விதத்தில் முகாமைப்படுத்தாத போது இது ஏற்படுகிறது. ஏதேனும் குடும்பம் அல்லது எவரேனும்

தனிப்பட்டவர்கள் நிதியியல் இடர்பாடுகளை எதிர்நோக்கக்கூடும். எனினும், நீங்கள் நிதியியல் ரீதியாக அறிவுடையவர்களாக இருப்பின், திட்டமிடப்படாத அல்லது சடுதியான செலவினங்களை கையாளும் போதுகூட அத்தகைய பிரச்சனைகளை குறைந்த இடர்பாடுகளுடன் தீர்த்துக் கொள்ளமுடியும். குடும்பமொன்றினால் அல்லது தனிப்பட்டவரினால் எதிர்நோக்கப்படும் பொதுவான நிதியியல் பிரச்சனைகளை அடையாளம் காண்போம்.

- நிரந்தரமான வருமானம் அல்லது உறுதியான வருமானமில்லை
- செலவினங்களை ஈடுசெய்ய வருமானம் போதுமானதாக இல்லாமை
- குறைந்த சேமிப்பு
- அவசரகால செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம்
- நிதியியல் உறுதியற்றதன்மை காரணமாக மனஅழுத்தம்
- தனிப்பட்ட இலக்குகளை அல்லது கனவுகளை அடையமுடியாமல் இருப்பது

நிதியியல் அறிவினையும் நேர்க்கணியமான நிதியியல் நடத்தையினையும் மேம்படுத்துவதன் மூலம் நிதியியல் ரீதியில் சுதந்திரமானவராக மாறுவதற்கு முயற்சிக்கலாம்.

## நிதியியல் ரீதியாக சுயாதீனமான ஆளாக மாறுவதற்கான படிகள்

நிதியில் ரீதியாக சுயாதீனமான ஆளாக மாறுவதற்கு கீழே காட்டப்பட்டுள்ள மூன்று சுலபமான படிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

**படிமுறை 1: உங்களது தற்போதைய நிதியியல் நிலைமையினை அடையாளம் காணவும்**

உங்களுக்கு பின்வருவன பற்றி தெரிந்திருத்தல் வேண்டும்

- **உங்களது தற்போதைய மொத்த வருமானம்** - சம்பளங்கள், கூலிகள் அல்லது இலாபங்கள்
- **செலவுகளுக்கான மொத்தக் கடன்பாடுகள் -** வாழ்க்கைச் செலவு
- **கிடைக்கத்தக்க மொத்தச் சேமிப்புக்கள் -** நிலையான வைப்புக்கள், வங்கி கணக்கு மீதிகள் அல்லது ஏதேனும் காசு ஒதுக்குகள்
- **உங்களது சொந்தச் சொத்துக்களின் மொத்தப் பெறுமதி** - காணி, வீடு, உந்து ஊர்தி, தளபாடம்
- **நீங்கள் தீர்க்க வேண்டிய கடன்பாடுகளின் மொத்தப் பெறுமதி** - வங்கிக்கடன்கள், வாடகைக் கொடுப்பனவுகள், அல்லது ஏனைய பொறுப்புக்கள்

**படிமுறை 2: எதிர்காலத்தில் நீங்கள் அடையவிரும்புகின்ற வாழ்க்கையின் இலக்குகளை வரையறை செய்தல்**

உங்கள் இலக்குகளை கனவுகளை எதிர்பார்ப்புக்களை பட்டியலிடுங்கள்

- அடுத்த மூன்றாண்டுகளுக்குள் எய்தப்பட வேண்டிய இலக்குகள்
- எய்துவதற்கு மூன்றாண்டுகளுக்குக் கூடுதலாக தேவைப்படும் இலக்குகள்

**படிமுறை 3: உங்கள் வாழ்க்கை இலக்குகளை எய்துவதற்கான நடவடிக்கைத் திட்டத்தினை தயாரியுங்கள்**

உங்களுக்குத் தேவையானவை

- தங்களது தற்போதைய நிதியியல் நிலைமைக்கும் நீங்கள் விரும்புகின்ற இலக்கிற்குமிடையிலான இடைவெளியினை புரிந்துகொள்ளுதல் (படிமுறை 1 மற்றும் 2 இல் குறிப்பிடப்பட்டவை)
- உங்களின் நிலைமையினை மேம்படுத்துவதற்கும் இவ்விடைவெளியினை நிரப்புவதற்கும் உபாயங்களை அபிவிருத்தி செய்யுங்கள்
- மேலே குறிப்பிட்ட இலகுவான படிமுறைகள் உங்கள் நிதியினை எப்படி முகாமைப்படுத்த வேண்டும் என்பது தெளிவாக விபரிக்கின்றது.

## தனிப்பட்ட நிதிக் கூறுகள்

காத்திரமான முகாமைத்துவத்தினை தேவைப்படுத்துகின்ற ஐந்து தனிப்பட்டவரின் அல்லது குடும்பத்தின் நிதிக் கூறுகளை உள்ளடக்கியுள்ளது




**பணக்கார தந்தை வறிய தந்தை□ என்ற நூலின் ஆசிரியரான றொபார்ட் கியோசாகி, ஒருவர் எவ்வளவு பணத்தினை உழைக்கின்றார் என்பது முக்கியமல்ல. ஆனால் அவர் எவ்வளவு பணத்தினை வைத்திருக்கின்றார். அது ஒருவருக்கு எவ்வாறு கடினமாக வேலை செய்கிறது. அவ்வாள் எத்தனை தலைமுறையினருக்கு இதனை வைத்திருக்க யோசிக்கின்றார் என்பதற்கு அந்த ஆள் அவர்களது தனிப்பட்ட வாழ்நாள் இலக்குகளை அடைந்துகொள்வதனைத் தீர்மானிப்பதாக அமையும் எனக்குறிப்பிடுகின்றார்.**

இது தனிப்பட்ட ஆளின் செல்வத்தினை உருவாக்குவதற்குவதிலும் அதனைப் பாதுகாத்துக் கொள்வதிலும் தனிப்பட்ட நிதி எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றது என்பதனை எடுத்துக் காட்டுகிறது.

## 3.2 வருமானத்தை நிர்வகித்தல்

### கற்றல்களின் பெறுபேறு

- வேறுபட்ட குழுக்களை கவனத்திற் கொண்ட வருமான முகாமைத்துவத்தினையும் கிடைக்கத்தக்க வருமான மூலங்களையும் விளங்கிக் கொள்ளுதல்
- செயற்படாமல் கிடைக்கத்தக்க வருமானம் மற்றும் அதன் முக்கியத்துவம்

வருமானம் என்பது தனிப்பட்டவர் அல்லது வியாபார நிறுவனமொன்று அவர்கள் வழங்குகின்ற பொருட்கள் அல்லது பணிகள் அல்லது மூலதன முதலீட்டிற்கு பரிமாற்றாக பெறுகின்ற பணம் அல்லது பெறுமானமாகும்.

தனிப்பட்டவர்களின் வருமானமானது செலவுகளை ஈடுசெய்வது சேமிப்பது, முதலிடுவது மற்றும் படுகடன் முகாமைப்படுத்துவது தொடர்பான அவர்களது இயலாற்றலை தீர்மானிப்பதனால் வருமான முகாமைத்துவம் நிதியிடல் திட்டமிடலின் அத்திவாரமாக விளங்குகிறது. ஒருவரின் வருமானத்தின் தன்மையினை புரிந்து கொள்வதும் அதனைக் காத்திரமான விதத்தில் முகாமைப்படுத்துவதும் நிதியியல் உறுதித்தன்மைக்கும் எதிர்கால நிதியியல் இலக்குகளை எய்துவதற்கும் இன்றியமையாததாகும்.



Children of the Rathnayake family had the following conversation






இக்கலந்துரையாடல், வயது அல்லது பாலினை கருத்திற் கொள்ளாமல் ஒவ்வொருவருக்கும் ஏதாவதொரு வடிவில் வருமானத்தினை பெறவே விரும்புவர் என்பதனை துலாம்பரப்படுத்துகிறது.

உங்கள் வாழ்க்கை முறைகளை தீர்மானிப்பதற்கும் உதவும் என்பதனால் வலுவான நிதியியல் திட்டத்தினை கட்டியெழுப்புவதில் உங்கள் வருமானத்தினை புரிந்துகொள்வது முதல் படிமுறையாக இருக்கும்.

எனினும், உங்கள் நடைமுறை வருமானம் உங்கள் செலவினங்களை ஈடுசெய்யப் போதாமல் இருக்கலாம். இவ்விடைவெளியினை நிரப்புவதற்கு தனிப்பட்டவர்கள் அவர்களது பிரதான வருமான மூலத்திற்கும் புறம்பாக மாற்று வருமான உருவாக்க தேர்வுகளை பரிசீலனையில் கொள்ளமுடியும்.

## தனிப்பட்ட வருமானத்தின் முக்கிய மூலங்கள்

| | |
|---|---|
| **உழைக்கப்பட்ட வருமானம்** | இப்பணம் உங்கள் உழைப்பிற்கு பதிலாக பெறப்பட்டதாகும். இது சம்பளங்கள், கூலிகள், படிகள் பணிக்கொடைகள் மற்றும் தரகுகள் என்பனவற்றை உள்ளடக்குகிறது. பெரும்பாலான தனிப்பட்டவர்களைப் பொறுத்தவரை உழைக்கப்பட்ட வருமானம் என்பது அவர்களது வருமானத்தின் முக்கிய கூறாகும். |
| **வியாபார இலாபங்கள்** | வியாபாரத்திற்கான சொந்தக்காரர்களைப் பொறுத்தவரை அவர்களது வியாபாரத்திலிருந்தான இலாபம் அவர்களது வருமான மூலமாக கருதப்படுகிறது. |
| **முதலீட்டு வருமானம்** | இது கம்பனி பங்குகளில் செய்யப்பட்ட முதலீட்டின் மூலம் உழைக்கப்பட்ட பங்குமயமாக்கலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் முறிகள் அல்லது சேமிப்புக்களிலிருந்து ஈட்டப்பட்ட வட்டி மற்றும் சொத்துக்களிலிருந்தான வாடகை வருமானம் என்பனவற்றை உள்ளடக்குகிறது. |
| **அரசாங்க நன்மைகள்** | சில தனிப்பட்டவர்கள் அரசாங்கத்திடமிருந்து சமூக பாதுகாப்பு, குறைந்த வருமான நன்மைகள், மாற்றுத்திறனுக்கான கொடுப்பனவுகள் போன்ற பல்வேறு கொடுப்பனவுகளை பெறுகின்றனர். இது அவர்களது நிதியியல் தேவைகளை பூர்த்தி செய்ய உதவுகிறது. |
| **நானாவிதமான வருமானங்கள்** | இது ஒரே தடவையில் கிடைக்கக்கூடிய வெகுமதிகள், லொத்தர் பரிசுகள் அல்லது வாரிசுப் பணம் என்பனவற்றை உள்ளடக்குகிறது. |

## செயற்பாடற்ற மூலங்களிலிருந்து கிடைக்கத்தக்க வருமானத்தின் முக்கியத்துவம்

வருமானத்தினை பொதுவாக இரண்டு வகையாக வகைப்படுத்த முடியும். செயற்பாட்டு வருமானம் செயற்பாடற்ற வருமானம் என்பனவே அவை. செயற்பாட்டு வருமானம், நீங்கள் முழு நேர அடிப்படையில் அல்லது பகுதி நேர அடிப்படையில் நீங்கள் தீவிரமாக ஈடுபடும் உங்கள் வேலையூடாக உழைக்கப்படும் பணத்தினை குறிக்கிறது. மறுபுறத்தில் செயற்பாடற்ற பணம் என்பது சுலபமாக சிறிய முயற்சியுடன் அல்லது நாளாந்த அடிப்படையில் பெறப்படுகின்ற பணமாகும். இது ஏற்கனவே இருக்கின்ற மூலங்களிலிருந்து கிடைப்பதுடன் உங்கள் பக்கத்தில் தீவிரமற்ற செயற்பாட்டிற்கு தொடர்ச்சியாக வருமானம் கிடைக்கின்ற முறையாகும்.

**செயற்பாடற்ற வருமானம் உங்கள் செலவினங்களை விஞ்சும்போது நீங்கள் நிதியியல் சுதந்திரமானவராக மாறுவீர்கள்**

செயற்படா வருமானத்திற்கான உதாரணங்கள் புலமைச் சொத்து இணைந்த சந்தைப்படுத்தல் அல்லது சொத்துக்களிலிருந்தான வாடகை வருமானம் என்பனவற்றை உள்ளடக்குகிறது. இம்மூலங்கள் அரசிறையினை உருவாக்குவதற்கு சிறிய செயற்பாடு அல்லது செயற்பாடேதேவையில்லை.

மேலதிக வருமானத்தினை ஈட்டுவதற்கு நாம் கவனத்தில் கொள்கின்ற குழுமத்திற்கு பின்வருவன சில உதாரணங்களாகும்.

### மேலதிக வருமானத்தினை ஈட்டுவதற்கு சில சாத்தியமான வழிவகைகள்

| தொழில்புரியும் தனிப்பட்டவர்கள் | தொழில்புரியாத தனிப்பட்டவர்கள் | சிறுவர் |
|---|---|---|
| **ஒருவரின் தேர்ச்சி** மற்றும் நிபுணத்துவத்தின் அடிப்படையான சுயாதீனமான மற்றும் இணைய வழி வேலைகள் | **பகுதிநேர வேலைகள்** | பாக்கெட் பணம் |
| **சிறிய வியாபார உடமைகள்,** சில்லறை பணி வழங்கல் இணைய வழி வியாபாரங்கள் போன்றவை | **சுயவேலை வாய்ப்பு ஒருவரின்** தேர்ச்சி மற்றும் நிபுணத்துவத்தின் அடிப்படையாகக் கொண்டுள்ளது | காசு அன்பளிப்பு |
| **வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்பு** பாரம்பரிய, நவீன சேதன மற்றும் விலங்கு வளர்ப்பு பணிகள் | **நுண்பாக வியாபாரங்கள்** | உண்டியல் பணம் |
| **சுற்றுலாத் தொழில்துறை** தங்குமிட வசதிகளை வழங்குதல் சுற்றுலா விடுதிகளினதும் உணவகங்களிலும் பணியாற்றுதல் சுயதொழில் வழிகாட்டல்கள், மொழிபெயர்ப்பாளர்கள், ஓட்டுநர்கள் | **சுயாதீனமான மற்றும் இணைய வழி வேலை** ஒருவரின் தேர்ச்சி மற்றும் நிபுணத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டது | பெற்றோர் அல்லது நண்பர்களினால் காசிற்காக பரிமாற்றிக் கொள்ளப்படும் அன்பளிப்பு வவுச்சர்கள் வவுச்சர்கள் |
| **வாடகைக்கார் பணிகள்** மற்றும் விநியோகப் பணிகள் | **வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்பு** என்பன பாரம்பரியம், நவீன, சேதனம் மற்றும் விலங்கு வளர்ப்பு பண்ணை | மீதிப் பணம் |
| **திருப்திகரமான தன்மைகளை** உருவாக்குதல் மற்றும் சமூகவலைத் தளங்களின் செல்வாக்கு | **திருப்திகரமான தன்மைகளை** உருவாக்குதல் மற்றும் சமூக வலைத்தளங்களின் செல்வாக்கு | பழைய பொம்மைகளின் விற்பனை |

மேலே குறிப்பிடப்பட்ட வருமான உருவாக்க வழிமுறைகள் உங்கள் வருமானத்தினை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதற்கு ஒரு சில உதாரணங்கள் மட்டுமேயாகும். நீங்கள் தேர்ச்சி, அனுபவம், நிபுணத்துவம், தகைமைகள், உருவாக்க சிந்தனைகள் மற்றும் நேர்க்கணிய மனோபாவம் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு மேலதிக வருமானமொன்றினை எட்டுவதற்காக வேறுவழிகளையும் கண்டறியலாம்.

## வருமானத்தினை உருவாக்குவதற்குத் தேவையான தேர்ச்சிகள் மற்றும் மூலவளங்கள்

| வருமான மூலங்கள் | தேவைப்பாடுகள் |
|---|---|
| **தனியார்துறை மற்றும் அரசதுறை தொழில்நிலை** | • கல்வித் தகைமை (கள்)<br>• தொழில்சார் தகைமை (கள்)<br>• தொழில் பயிற்சி<br>• தொழில் அனுபவம்<br>• தேர்ச்சி மற்றும் நிபுணத்துவம்<br>• வயதுத் தேவைப்பாடு<br>• சட்ட தகைமை |
| **தொழில்முயற்சியாளர்** | • மூலதனத்தினை அணுகுதல்<br>• வியாபார தூண்டுதல்<br>• புத்தாக்கங்கள்<br>• சட்டத் தேவைப்பாடுகள்<br>• பௌதீக உட்கட்டமைப்பு<br>• மனித வளங்கள்<br>• ஏனைய மென் தேர்ச்சிகள் |
| **முதலீடுகள்** | • மூலதனம்<br>• நிதியியல் அறிவு<br>• இடர்நேர்வு மனோபாவம்<br>• ஏனைய மென் தேர்ச்சிகள |
| **சுயதொழில்** | • குறித்துரைக்கப்பட்ட தேர்ச்சி மற்றும் நிபுணத்துவம்<br>• தகைமைகள்<br>• அனுபவம்<br>• பழகிக்கொள்ளும் தன்மை<br>• காலக்கெடுவினைப் பூர்த்தி செய்தல் |
| **வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்பு** | • காணி மற்றும் கட்டிடங்கள்<br>• அறிவாற்றல்<br>• கருவிகள் மற்றும் சாதனங்கள்<br>• பொறி<br>• நிதியினை அனுபவிப்பதற்கான வசதிகள் |

## உங்கள் வருமானத்தினை உயர்த்துவதற்கான 7 வழிமுறைகள்

**1. நீங்கள் சிறப்பியல்பு பெற்ற துறையில் ஒரு நிபுணத்துவராக இருப்பது**

நீங்கள் நிபுணத்துவம் பெற்ற துறையினை அடையாளம் காண்பதுடன் தொடர்ச்சியான கற்பித்தலினூடாக உங்கள் தேர்ச்சியையும் அறிவையும் தொடர்ச்சியாக தரமுயர்த்தல் உங்கள் தனிப்பட்ட தேர்ச்சிகளை மேம்படுத்துகின்ற வேளையில் மற்றைய கேள்விக்குரிய தேர்ச்சிகளிலும் முதலீடுசெய்தல் வேண்டும். உங்கள் துறையில் வலுவான புகழையும் தனிப்பட்ட பெயரையும் நிலைநாட்டிக் கொள்ளுதல் வேண்டும்.

**2. உங்கள் சம்பளம் பற்றி பேரம் பேசுங்கள்**

முதலில், தொழில் துறையில் உங்கள் வகிபாகத்திற்கு கிடைக்கக்கூடிய சராசரி கொடுப்பனவு பற்றி ஆய்வொன்றினை நடாத்துங்கள், உங்கள் வேலை பற்றி குறிப்பிட்டு உங்கள் வேலை விபரங்களுக்கு அப்பாலும் அளவுக்கதிகமாக செயலாற்றுங்கள் பின்னர், சரியான நேரத்தில் உங்களுக்கான சம்பள அதிகரிப்பினை நியாயப்படுத்தும் விதத்தில் உங்கள் பங்களிப்பு பற்றி வெளிப்படுத்துங்கள் (செயலாற்ற மீளாய்வு போன்ற காலப்பகுதியில்)

**3. உங்கள் பிரதான வருமானத்திற்கு அப்பாலும் வளர்வதற்கான வாய்ப்புக்களை கண்டறியுங்கள்**

பகுதிநேர வேலை, சுயதொழில் அடிப்படையிலான வேலை மற்றும் நீங்கள் ஓய்வாக இருக்கும் போது ஆலோசனை வழங்கும் பணிகள் மற்றும் மாற்றுவழி வருமானப் பிரிவுகளின் சொத்துப் பட்டியலை அபிவிருத்தி செய்தல்.

**4. உங்களுடைய செயற்படா வருமானம் பற்றி சிந்தியுங்கள்**

வருமானமொன்றினை ஈட்டுவதற்கு குறைந்தபட்ச செயற்படும் வேலையானது தேவைப்படுமிடத்து செயற்படா வருமான வாய்ப்புக்களை கண்டறிதல். உங்களது செயற்படாத வருமானம் உங்கள் செலவினங்களை விஞ்சும் பொழுது நீங்கள் நிதியியல் சுதத்திரத்தினைப் பெற்றுக்கொள்கின்றீர்கள் என்பதனை நினைவில் வைத்திருங்கள்.

**5. தொழில் முயற்சியாண்மை மனோபாவத்தினை விருத்திசெய்தல்**

தனித்துவமான யோசனைகளை அறியமுறப்படுத்துகின்ற அல்லது புதிய வியாபார வாய்ப்புக்களைப் தொடர்வதற்கு சந்தையில் பூர்த்தி செய்யப்படாத தேவைகளை அடையாளம் காண்கின்ற வேளையில் தவறுகளிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளப்படுவதுடன் சவால்களை எதிர்த்து வெற்றிபெறுதலும் வேண்டும்.

**6. நேரத்தினை சிக்கனமாக முகாமைப்படுத்தல்**

வருமான உருவாக்கத்திற்கு நேரடியாக பங்களிக்கின்ற உயர்பெறுமதி கொண்ட நடவடிக்கைக்கு முன்னுரிமையளிக்கின்ற வேளையில் வேலையையும் குடும்பத்தோடு கழிக்கும் நேரத்தினையும் சமப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அளவுக்கதிகமாக சோர்வடையாமல் உற்பத்திகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**7. தொழில்சார் நிபுணர்களின் ஆலோசனைகளைப் பின்பற்றுதல்**

உங்கள் தொழில் குழுமத்திலும் உங்கள் வழிகாட்டியையும் அறிவுரையாளர்களையும் சரியான வழிகாட்டல்களை பெற்றுக்கொள்வதற்காக தொடர்பில் வைத்துக் கொள்வதற்கு மறவாதீர்கள். உங்கள் தேர்ச்சிகளை கிரமமாக மீளாய்வு செய்து கொள்வதுடன் தொழில்சார் அபிவிருத்தியை தொடர்வதினூடாக அதனை இற்றைப்படுத்திக் கொள்ளுங்கள்.

## 3.3 செலவு முகாமைத்துவம்

### கற்றலின் பெறுபேறுகள்

- தனிப்பட்ட செலவினங்களை எவ்வாறு முகாமைப்படுத்துவது என்பதனை விபரித்தல்
- தேவைக்கும் விருப்பத்திற்குமிடையிலான வேறுபாட்டினை புரிந்து கொள்ளுதல்
- உங்கள் செலவினங்களை முகாமைப்படுத்துவதற்கான உத்திகளை வெளிப்படுத்துங்கள்

செலவினங்கள் என்பது தனிப்பட்ட அல்லது குடும்பத்தின் பல்வேறுபட்ட விருப்பத்தினையும் தேவைகளையும் நிறைவேற்றுகின்ற பணமாகும்.

செலவின முகாமைத்துவம் என்பது நிதியியல் திட்டமிடலில் பிரதான கூறொன்றாகும். ஏனெனில் இது சேமிப்பு, முதலீடுகள் என்பனவற்றிற்கான பணத்தினை போதுமானளவில் ஒதுக்குவதற்கும் வினைத்திறன் மிக்க வருமான பயன்பாட்டிற்கு வழிவகுக்கின்ற ஏனைய நிதியியல் இலக்குகளுக்கும் உதவுகிறது. மோசமான செலவின் முகாமைத்துவத்தினைக் கொண்ட ஒருவர் நிதியியல் ரீதியாக பலவீனமான ஒருவராக மாறுவார்.



ஒரு சுறுசுறுப்பான காலை வேளையில் ரத்நாயக்கவின் குடும்ப வீட்டில் பின்வரும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.



ரத்னாயக்கவின் குடும்ப உறுப்பினர்கள் அந்நாளில் நிறைவேற்றிக்கொள்ளப்பட வேண்டிய பல தேவைகளை கொண்டிருக்கின்றனர் என்பது தெரிகிறது. அனுஷா அனேக செலவினங்களை இன்று மேற்கொள்ளவேண்டியிருக்கும். எனவே அவர் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். அனுஷா குடும்ப செலவினங்கள் தொடர்பில் பட்டியலொன்றினை தயாரிப்பாராயின் பணம் எங்கே போகிறது என்பது தொடர்பில் சிறந்த புரிதலொன்றினை பெற்றுக்கொள்ள முடியும்.

- அநேகமான மக்கள் அவர்கள் வாங்கத்தேவையில்லாத அல்லது அவர்களுக்கு அவசியமில்லாத பொருட்களின் மீதே பணத்தினை செலவிடுகின்றனர். பெரும்பாலும் மற்றையவர்களை கவர்வதற்கும் பொருட்களை வாங்குகின்றனர். நீங்கள் பணத்தினை செலவிட முனையும்போது உங்கள் உணர்வுகளை அலைபாய விடாதீர்கள்.
- நிதியியல் ரீதியில் சுயாதீனமான மக்கள் அவர்களது நண்பர்கள் தொலைபேசியை மாற்றினால் கூட கவலைப்படமாட்டார்கள். அவர்களது நண்பர்கள் ஒவ்வொரு வார இறுதியிலும் இரவு உணவிற்கு வெளியே போனாலும் கூட இது அவர்களைப் பாதிக்காது.
- உங்கள் செலவினம் உங்கள் வருமானத்தினை விஞ்சக்கூடாது என்பது மிகமுக்கியம். உங்கள் முன்னுரிமைகளை தீர்மானித்ததும் நீங்கள் எவ்வளவினைச் செலுத்தவேண்டியிருக்கும் என்பதனைத் தீர்மானிக்கவும். உமது திட்டம் உமது வருமானத்தினை விட கூடுதல் செலவினை கொண்டிருக்காது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

எங்கள் எல்லோருக்கும் தேவைகளும் விருப்பங்களும் காணப்படுகின்றன. உங்கள் தேவைக்கும் விருப்பத்திற்குமிடையிலான வேறுபாடுகளைத் தெரிந்துகொள்வது உங்களது செலவினங்களை முகாமைப்படுத்திக் கொள்ள முக்கியமானதாகும்.

## தேவைகள் மற்றும் விருப்பங்கள்

தவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றும் பொழுது செலவினங்கள் ஏற்படுவதனால் தேவைகளுக்கும் விருப்பங்களுக்குமிடையிலான வேறுபாடுகளை தெரிந்து கொள்வது இன்றியமையாததாகும். வெவ்வேறுபட்ட நூலாசிரியர்கள் தேவையினையும் விருப்பத்தினையும் எவ்வாறு வரையறை செய்திருக்கின்றனர் என்பது கீழே தரப்படுகிறது.

**'சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்'** (2016) என்ற நூலில் பிலிப் கொட்லர் தேவையினை உணவு, உடை மற்றும் புகலிடம் போன்ற மனிதன் உயிர் வாழ அவசியமான அடிப்படைத்தேவையென வரைவிலக்கணம் செய்கிறார். விருப்பங்கள் என்பது கலாச்சாரம் மற்றும் தேவைகள் எவ்வாறு பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதனை குறித்துரைக்கின்ற தனிப்பட்ட ஆளுமையினால் வடிவமைக்கப்படுபவை எனக்குறிப்பிடுகின்றனர். உதாரணமாக உணவிற்கான தேவையை பூர்த்தி செய்வதற்கு ஒருவருக்கு சோறும் கறியும் தேவைப்படும். மற்றொருவருக்கு பாண் தேவைப்படும் இவ்விருப்பங்கள் சந்தைப்படுத்தலூடான உணர்வின் தேவைப்பாடுகளுக்கு மாற்றியமைக்கின்றன என அவர் குறிப்பிடுகின்றார்.

“பொருளாதாரம்” (2015) என்ற நூலில் றிச்சர்ட் லிப்சி தேவையினை உயிர் வாழ்வதற்கான இன்றியமையாத பொருட்களுக்கு அல்லது மனித வாழ்வின் அடிப்படைத் தொழிற்பாடு எனவும் விருப்பம் என்பது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கான அல்லது திருப்தியைத்தரும் பொருட்கள் எனவும் ஆனால் அவசியமானதுமல்ல எனவும் வரைவிலக்கணம் செய்கிறார். மேலும் தேவைகள் மட்டுப்படுத்தப்படலாம் எனவும் ஆனால் விருப்பங்கள் மட்டுப்படுத்தப்படாதவை எனவும் சந்தைப் பொருளாதாரத்தில் நுகர்வோர் நடத்தைத் தூண்டுவன எனவும் குறிப்பிடுகின்றார்.

உங்கள் தேவைக்கும் (நீங்கள் உயிர் வாழ்வதற்கு கட்டாயம் தேவையான பொருட்கள்) உங்கள் விருப்பத்திற்கும் (நீங்கள் விரும்புகின்ற ஆனால் அவசியமில்லாத பொருட்கள்) இடையிலான வேறுபாட்டினை தெரிந்து கொள்வது, ஆடம்பரங்களை பரிசீலினையில் கொள்வதற்கு முன்னர் அடிப்படைத் தேவையினை பூர்த்தி செய்ய உங்களுக்கு உதவும். உதாரணமாக, தொலைக்காட்சி போன்ற புதிய இலத்திரனியல் பொருட்கள், செலவினமிக்க ஆடை போன்ற பொருட்கள், வெளியில் உணவிற்கு செல்லல் போன்றவற்றிற்கு பணத்தினை செலவிட முன்னர் உங்கள் பிள்ளைகளின் பாடப்புத்தகங்கள் வாங்கப்படுவதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

எனினும், ஏப்பிரகாம் மாஸ்லோ அவரது “செயலூக்கம் மற்றும் ஆளுமை” என்ற நூலில் (1954) தேவை பற்றிய மிகப்பரந்தளவிலான ஆய்வில் தேவைகள் வகைப்படுத்தப்பட்டு அடுக்கு வடிவில் காட்டப்பட்டுள்ளன. இங்கு தேவைகள் அடிப்படையானது என்று மாத்திரம் அடையாளம் காணப்படவில்லை. ஆனால் அவை மனித வாழ்வின் வேறுபட்ட கட்டங்களில் வேறுபட்ட வடிவங்களில் தோன்றுகின்றன. இப்பகுப்பாய்வானது “மாஸ்லோவின் தேவைகளின் அடுக்கு” என அழைக்கப்படுகின்றது. இது பிலிப் கொட்லரின் கருத்தான சந்தைப்படுத்துகின்ற மாற்றங்களின் தேவைகள் உணர்வுகளின் தேவைக்கு மாற்றப்படுகின்றன என்பதனை நிரூபிக்கிறது.

.

**தன்னியல் நிறைவுத்தேவைகள்**

**தன்னால் முடிந்த சாதனைகளை, தனது இயலுமைகளை அடைந்துக்கொள்வதற்கான விருப்பம்**

**மதிப்புத்தேவைகள்**

**தன்னம்பிக்கை மற்றும் சுதந்திரம், ஏனையவர்களிடமிருந்து கிடைக்கும் மரியாதையும் பாராட்டும்**




**அன்புத்தேவைகள்**

**நண்பர்கள், குடும்பம், சமூக குழுக்கள், சமுதாயம், நெருக்கமானவர்கள்**

**பாதுகாப்புத்தேவைகள்**

**பாதுகாப்பு, நிலைத்துநிற்றல் மற்றும் நல்வாழ்வு, சுகாதார மற்றும் நிதியியல் பாதுகாப்பு**

**உடலியல் தேவைகள்**

**உணவு, நீர், சுவாசம், உடற்சமநிலை, பாலியல் இனப்பெருக்கம்**

## உங்கள் செலவினங்களை முகாமைப்படுத்துவதற்கான 8 வழிகள்

### 1. உங்கள் தேவைகளின் மீது கவனம் செலுத்துங்கள் உங்கள் விருப்பங்கள் மீது அல்ல

நாம் உயிர்வாழ்வதற்கு எமக்கு காற்று, உணவு, நீர் மற்றும் புகலிடம் என்பன மிக அவசியம் என்பது நிரூபணமானதாகும். எனினும், எமக்கு தட்டையான திரையைக் கொண்ட தொலைக்காட்சி, அண்மைய திறன் தொலைபேசி, ஆடம்பரமான வீடு என்பனவும் எமக்கு தேவையாகவுள்ளன. பெரும்பாலும் தேவைகளின் கவனம் விருப்பங்களினால் அமுங்கிப்போய் விடுகிறது. இதன்மூலம் சிலவேளைகளில் இன்றியமையாத தேவைகள் விருப்பங்களுக்காக தியாகம் செய்யப்படுகின்றன. பகுத்தறிவற்ற முறையில் விருப்பங்களைக் கவனத்திற்கொண்டு ஓடுவது எமக்கு கணநேர மகிழ்ச்சியைக் கொடுக்கலாம். ஆனால் எமது தேவை அப்படியே திருதப்திபடமுடியாமல் இருக்கும். ஆகவே செலவிடும்போது தேவைகளுக்கு முன்னுரிமை கொடுப்பது இன்றியமையாததாகும்.

### 2. உங்கள் விருப்பங்களுக்கான திட்டம்

நீங்கள் உங்கள் விருப்பங்கள், ஆசைகள் மற்றும் கனவுகளை கைவிடத் தேவையில்லை. ஆனால் நீங்கள் திட்டமிட்டு உங்கள் விருப்பங்களை காத்திரமான முறையில் அடையமுடியும். சரியான வரவுசெலவுத் திட்டப்படுத்தல் பயன்மிக்க நிதியியல் திட்டமிடலுக்கு உதவக்கூடும்.

### 3. தீயபழக்கவழக்கங்களை நல்ல பழக்கவழக்கங்களாக மாற்றுங்கள்.

புகைத்தல், மதுவருந்துதல் மற்றும் தேவையற்ற செலவினங்களை சேமிப்பு போன்ற நல்ல பழக்கங்களுக்கு மாற்றுவது உங்கள் உடல் நலத்தினைப் பேணுவது மட்டுமன்றி பணத்தினையும் சேமிக்கும்.

4. **விலைக்கழிவு என்ற பொறிக்குள் வீழ்ந்து விடாதீர்கள்**

வர்த்தகர்களால் வழங்கப்படும் விலைக்கழிவுகள் உங்கள் வரவுசெலவுத் திட்டத்திற்கு சாதகமானதாக பார்க்கப்படலாம். எனினும் இதனை கவனமாக ஆராயுமிடத்து அவை உங்கள் வரவு செலவுத்திட்டத்திற்கு சாதகமாக அமையாது. கழிவிடலைப் பெறுவதற்காக உங்கள் தேவைக்கும் கூடுதலான பொருட்களை வாங்குவதற்கு உங்களைத் தூண்டும் (ஒன்றை வங்கினால் ஒன்று இலவசம் மற்றும் பல பொருட்கள் ஒன்றாக வாங்குவதற்கான சலுகை) கழிவுகள் நீங்கள் இதனை தவறவிட்டுவிடுவோமோ என்ற பயத்தினை உங்களுக்கு கொடுக்கலாம். இதன் விளைவாக இதனை தவறவிடுவதனை தவிர்க்கும் பொருட்டு உடனடியாக இதனை வாங்குவதற்கு உங்களை கட்டணப்படுத்தும். தொடர்பான காலப்பகுதியில் உங்களுக்கு தேவையான பொருட்களின் பட்டியலில் அப்பொருட்கள் இருந்தால் மட்டுமே கழிவுகளை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். இல்லையெனில் அது உங்கள் பணத்தினையும் வரவுசெலவுத் திட்டத்தையும் அழிக்கும்.

5. **உங்கள் நிதியியல் இலக்குகளை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்**

மனிதர்களென்ற ரீதியில் நாங்கள் எமது வரையறைகளையும் திட்டங்களையும் குறிப்பாக சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு பிரச்சாரங்களினால் கவரப்படும்போது மறந்து போவது இயல்பாகிவிடுகிறது. ஆகவே எப்பொழுதும் உங்கள் நிதியியல் இலக்குகளில் கவனஞ் செலுத்துங்கள்.

6. **தவணை முறைத்திட்டங்கள் பற்றி கவனமாயிருங்கள்**

தவணை முறைத்திட்டங்கள் என்பது தேவையற்ற பொருட்களை நீங்கள் வாங்கும்போது விழுந்துவிடக்கூடிய மற்றொரு பொறியாகும். உங்கள் வாழ்க்கைக்குத் தேவையான உயர்பெறுமதிகொண்ட பொருட்களை திருப்திகரமான முறையில் கவனமாகப் பயன்படுமிடத்து மட்டுமே தவணை முறைத் திட்டங்கள் நல்லனவாக இருக்கும். உதாரணம் தொலைக்காட்சிப் பெட்டி, குளிர்சாதனப் பெட்டி, ஊர்திகள், காணி, வீடு

7. **திட்டமிடப்படாத அவசரமான கொள்வனவுகளைத் தவிர்த்தல்**

பகுத்தறிவற்ற சிந்தனையினை அடிப்படையாகக் கொண்ட திட்டமிடப்படாத கொள்வனவுகள் உங்கள் வரவு செலவுத்திட்டத்தினை எதிர்மறையாகப் பாதிக்கும். முக்கியமாக மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் பிரச்சாரங்கள், கழிவுகள் மற்றும் சலுகைகள் போன்றவற்றினால் ஈர்க்கப்படும் போதே அவசரமான கொள்வனவுகள் இடம்பெறுகின்றன. அவசரமான கொள்வனவுகளை தவிர்ப்பதற்கு கணிசமான கொள்வனவுகளை செய்வதற்கு 24 மணித்தியாலம் அல்லது ஒரு வாரத்திற்கு முன்னர் அல்லது ஒரு மாதத்திற்குப் பின்னரான பொறுதிக் காலம் ஒன்றினை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும் பொறுதிக் காலத்தின் பின்னர் உங்கள் கொள்வனவு விருப்பங்களில் பெரும்பாலானவை மறைந்துபோய் விட்டமையினை நீங்கள் உணர்வீர்கள் இதன் மூலம் தேவையற்ற கொள்வனவுகளை நீங்கள் தவிர்த்தும் கொள்கிறீர்கள்.

8. **வழிகாட்டலொன்றாக 50:30:20 விதியினைப் பின்பற்றவும்.**

உங்கள் மொத்த வருமானத்தில்

50% உணவு, வீட்டு வாடகை உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளுக்கு

30% உங்கள் தேவைகளை திருப்திப்படுத்துவதற்கு

20% எதிர்கால பயன்பாடு மற்றும் நிதியியல் பாதுகாப்பிற்கான சேமிப்புக்கள் மற்றும் படுகடன் மீள்கொடுப்பனவுகளுக்கு

இவ்விகிதாசாரங்களைச் செலவுகள் மற்றும் தேவைப்பாடுகளை வகைப்படுத்துவதன் அடிப்படையில் உங்கள் முன்னுரிமைகளைத் தொடர்ந்து தீர்மானிக்க முடியும். எனினும் தேவையற்ற செலவினங்களைக் குறைப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். உங்கள் நிதியியல் இலக்குகளை மற்றும் முன்னுரிமைகளை அடிப்படையாகக் கொண்டு செலவுகளை எவ்வாறு குறைப்பது என்பதனை தெரிவு செய்யலாம்.

## செலவுகளை முகாமைப்படுத்துவதில் வீட்டுத் தலைவியால் நடைமுறைப்படுத்தக்கூடிய 4 தேவைப்பாடுகள்

இந்த 4 விடயங்களும் (குறைத்தல், மீளப்பயன்படுத்தல், மீள்சுற்றோட்டப்படுத்தல் மற்றும் மறுத்தல், சிக்கனப்படுத்தல் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டுள்ளன. சிக்கனம் என்பதன் பொருள் பணம் மற்றும் ஏனைய மூலவளங்களுடன் கூடிய சிக்கனம் மற்றும் பகுத்தறிவுடன் கூடிய விடயமாகும். உலகம் முழுவதிலுமுள்ள பல்வேறுபட்ட கலாச்சாரங்களுக்கிடையே மக்கள் பண்டைய காலத்திலிருந்து பெறுமானமிக்க சிக்கனத்தினுடையே இருந்திருக்கின்றனர். ஆகவே சேமிக்கவும் செலவினங்களை குறைப்பதற்குமான முதல் நடவடிக்கையாக வீட்டுச் சூழலில் சிக்கனமான வாழ்க்கை முறையை உருவாக்குவதாக இருக்கும்.

4 விடயங்களும் ஒழுங்கான படிமுறையொன்றில் மிகமுக்கியமான படிமுறைகளான தேவையற்ற செலவுகளை குறைத்தல், மீள்சுற்றோட்டப்படுத்தலுக்கு முன்னர் சாத்தியமானளவிற்கு குறைத்தல் மற்றும் மீளப் பயன்படுத்தல் என்பன தேவையற்ற செலவினங்களை குறைக்க உதவும்.

அனுஷா அவரது வீட்டில் சிக்கனத்தினை எவ்வாறு நடைமுறைப்படுத்துகின்றார் என்பதனைப் பார்ப்போம்.

### ● மீளப்பயன்படுத்தல்

மக்களில் சிலர் ஒவ்வொரு நிகழ்விற்கும் புதிய ஆடைகளையே அணிவர். (உதாரணமாக ஒவ்வொரு திருமணத்திற்கும் புதிய சேலைகளை அணிவர் ) இது உங்கள் செலவினை முகாமைத்துவத்தின் மீது மேலதிக சுமையினை உருவாக்கும். ஒரே உடையினை இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட கொண்டாட்டங்களுக்கு அணிவது செலவினங்களைப் கட்டுப்படுத்த உதவும். ஆடைகள் மற்றும் ஏனைய நுகர்வுப் பொருட்களை மூத்த சகோதரரிடமிருந்து இளைய சகோதரனுக்கும் அம்மாவிடமிருந்து மகளுக்கும் அப்பாவிடமிருந்து மகனுக்கும் மீளப் பயன்படுத்திக்கொள்ள முடியும். பல்வேறு வழிகளில் மீளப்பயன்படுத்தக்கூடிய பொருட்களை கண்டறிந்து அதற்கேற்ப அவற்றினை பயன்படுத்தமுடியும். இது அநேக கொள்வனவுத் தேவைப்பாடுகளை குறைக்கும்.

### ● மறுத்தல்

தேவையற்ற செலவினங்கள் அவை எவ்வளவு சிறியவையாக இருப்பினும் மறுத்துவிடலாம்.

### ● குறைத்தல்

உங்கள் விருப்பங்களைக் குறைத்து தேவைகளின் மீது மட்டும் கவனம் செலுத்துங்கள்

### மீள் சுழற்சிப்படுத்தல் மற்றும் பழைய உற்பத்தியை புதிய உற்பத்திக்கு மாற்றுதல்

மீள்சுழற்சிப்படுத்தல் என்பது நண்பகல் உணவிலிருந்து மிஞ்சிப் போன சோற்றினை இரவு உணவிற்கு பழைய சோறாக மாற்றுதல் பழைய ஆடைகளை சமையலறையினை சுத்திகரிக்கும் சிறிய துண்டுகளாக மற்றும் விரிப்புக்களாக பயன்படுத்தல்.

### கலந்துரையாடல்கள் மூலம் வீட்டு முகாமைத்துவ கலாச்சாரத்தினை மேற்கொள்ளுதல்

கலந்துரையாடுதல் மூலம் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் குடும்ப நிதியியல் நிலைமையினை அறிந்திருக்கச் செய்தல். உண்மையான சூழ்நிலை பற்றி ஒவ்வொருவரும் தெரிந்திருக்கும் போது அவர்கள் கேட்பதற்கும் செலவிடல் போன்றவற்றிற்கு முன்னரும் சிந்திப்பதற்கு நாட்டம் கொள்வார். குடும்ப உறுப்பினர்கள் விசேடமாக சிறுவர்கள் கலந்துரையாடவும் சேமிக்கவும் ஆடம்பரமான தேவைகளையும் விருப்புக்களையும் கைவிடவும் அவர்களை ஊக்குவிக்கும். அனைத்து குடும்ப உறுப்பினர்களையும் வரவு செலவுத்திட்டத்தினை தயாரிப்பதற்கு உள்ளடக்கவும்.

## 3.4 சேமிப்பு முகாமைத்துவம்

### கற்கின்ற பெறுபேறுகள்

- சேமிப்பு முகாமைத்துவத்தினையும் அதன் முக்கியத்துவத்தினையும் விளங்கிக் கொள்ளுதல்.
- சேமிப்பினை காத்திரமான முறையில் மேற்கொள்வதற்கான உபாயங்களை இனம் காணுதல்
- உங்கள் சேமிப்புக்களைத் திட்டமிடுவதற்கான துப்புக்களை தெரிந்துகொள்ளுதல்.

தனிப்பட்ட நிதியல், சேமிப்புக்கள் என்பது உடனடியாக செலவிடலுக்கானதைவிட எதிர்கால பயன்பாட்டிற்காக வேறாக ஒதுக்கி வைத்திருக்கும் உங்கள் வருமானத்தைக் குறிக்கிறது.

நிதியியல் பாதுகாப்பினைக் கட்டியெழுப்புவதிலும் குறுங்கால மற்றும் நீண்டகால நிதியியல் இலக்குகளை எய்துவதிலும் சேமிப்பு பழக்கங்கள் இன்றியமையாதனவாகும். சேமிப்புக்கள் அவசர காலங்களின்போது கணிசமான கொள்வனவிற்கான நிதி, பாதுகாப்பு வலையமைப்பொன்றினை வழங்குகிறது அல்லது நீங்கள் வீடு வாங்குதல், கல்விக்கு நிதியிடல் அல்லது ஓய்வுக் காலம் போன்ற முக்கிய மைல்கல்லினை அடைவதற்கு உதவுகிறது.



ரத்நாயக்கவின் வீட்டில் அம்மா - மகளுக்குமிடையிலான மிக விசேடமான உரையாடல் இதுவாகும்.




ரத்னாயக்க குடும்பம் சேமிப்புக்களின் முக்கியத்துவத்தினை புரிந்து கொண்டிருக்கின்றார்கள் போல் தெரிகிறது. சேமிப்புக்கள் நீண்ட காலத்திற்கு பலவழிகளில் உங்களுக்கு நன்மையளிக்கிறது. ஆகவே, சேமிப்பு பழக்கம் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு மாற்றப்படக் கூடியதாகவுள்ளது.

சேமிப்பு பணம் வங்கிக் கணக்கில் கூடுதலான விரிவினை ஏற்படுத்துவது என்பதனை மக்கள் அடிக்கடி மறந்துவிடுகின்றனர். ஆனாலும் முக்கியமான தேர்ச்சிகளை அது கற்பிக்கிறது. இது நன்கு அமைந்த நடைமுறையுடன் கூடிய சுயகட்டுப்பாடுகள் நீங்கள் வழிவகுப்பதற்கு அனுமதிப்பதுடன் உங்கள் எதிர்காலத்திற்கு திட்டமிடவும் உதவும்.

சேமிப்பு அநேக நன்மைகளை வழங்குகிறது அது சிறந்த வாழ்க்கையை அனுபவிப்பதற்கு எங்களை அனுமதிக்கும்.

**‘செலவீடலின் பின் எது மிஞ்சுகிறதோ அதனை சேமிக்க வேண்டாம். ஆனால் சேமித்தபின் எது மிஞ்சுகிறதோ அதனை செலவிடுங்கள்.’**

## சேமிப்பின் முக்கியத்துவம்

- **அவசரகாலத்திற்கு ஆயத்தமாக இருத்தல் மற்றும் படுகடனைத் தவிர்த்தல்** வாழ்க்கையில் எதுவும் நடக்கலாம். ஊகிக்க முடியாது. மோட்டார் வண்டியைத் திருத்தல் மருத்துவ அவசரகால தேவைகள் அல்லது தொழில் இழப்பு போன்ற எதிர்பாராத செலவுகளைக் கடனுக்குள் விழாமல் எதிர்கொள்வதற்கு சேமிப்புக்கள் உங்களுக்கு வலுவூட்டுகின்றன. நிதியியல் நிபுணர்கள் 3 இலிருந்து 6 மாதம் வரையிலான வாழ்க்கைச் செலவினை திரவச் சேமிப்பு கணக்கொன்றில் திடீரென ஏற்படும் நிதியியல் பின்னடைவுகளுக்காக தனியாக ஒதுக்கி வைக்குமாறு விதந்துரைக்கின்றனர். அவசரகால செலவுகளையும் பூர்த்தி செய்வதற்கு பணத்தினை கடன்படவேண்டியிருப்பின் மொத்த செலவுடன் கொடுகடன் வட்டிச் செலவும் கட்டணங்களும் சேர்க்கப்படும். ஆகவே சேமிப்பு இடர்பாடான நேரங்களில் நிதியின் மீது கூடுதலான கட்டுப்பாடுகளைப் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்துகிறது.
- **நிதியியல் சுயாதீனம்: குடும்ப சேமிப்புக்கள், குறிப்பாக வருமான மூலங்களில் தங்கியிருக்காதோருக்கு ஓரளவிலான பொருளாதார சுயாதீனத்திற்கு வழிபடுத்தக்கூடும்.** வீட்டினை நிருவகிப்பவர்கள், பள்ளிக்கூடப்பிள்ளைகள் அல்லது வேறு எவரேனும் ஆட்களுக்கு செலவிடத்தக்கதாக மற்றவர்களினால் பணம் வழங்கப்படும் போது அது சிறிய தொகையாக இருப்பினும் கூட அதனை சேமிக்கமுடியும். ஆகவே தங்கியிருப்பவர் அல்லது செயற்படாத வருமானம் ஈடுபடுபவர்கள் கூட இந்நிதியியல் உறுதிப்பாட்டிற்கு அடித்தளமிடமுடியும்.
- **செல்வத்தினைக் கட்டியெழுப்புதல் மற்றும் வாழ்க்கை இலக்குகளை எய்துதல்: சேமிப்புக்களைக் காலக்கிரமத்தில்** வருமானங்களை உருவாக்குதல் வாய்ப்புக்களில் முதலீடு செய்யும் போது எதிர்கால இலக்குகளுக்கு நிதியிட முடியும். (ஆடம்பரங்களை வாங்குதல், பாதுகாப்பான ஓய்வுகாலம்) கணிசமான சேமிப்புக்களைக் கொண்டுள்ள மக்கள் குறைவான நிதியியல் அழுத்தங்களையும் எதிர்காலம் பற்றிய நிச்சயமற்ற தன்மைகளையும் குறைந்தளவில் கொண்டிருப்பது அவர்களது மனநல நலனோம்புகைகளுக்கு பங்களிக்கும் எனவே சராசரி மனிதனின் செல்வத்தினை உருவாக்குவதற்கான அடிப்படை அத்திவாரம் சேமிப்புக்கள் மூலம் இடப்படுகிறது.
- **தேசிய அக்கறை:** உங்கள் சேமிப்பு நாட்டின் முதலீடுகளின் அதிகரிப்புகளுக்கு வழியமைப்பதன் மூலம் பொருளாதார உறுதிப்பாடின் மீதும் வளர்ச்சியின் மீதும் தாக்கத்தினைக் கொண்டிருக்கும்.

### சேமிப்புக்களை காத்திரமான முறையில் மேற்கொள்ள கட்டமைக்கப்பட்ட அணுகுமுறை

உங்கள் நடைமுறை வருமானங்களிலிருந்து காத்திரமான சேமிப்புக்களை மேற்கொள்வதற்கு ஒழுக்கவியல், உபாயத்திட்டமிடல் மற்றும் உங்களது நிதியியல் இலக்குகளை தெளிவாகப்புரிந்து கொள்ளல் என்பவை தேவைப்படுகின்றன.

**படிமுறை 1: சேமிப்பு இலக்குகளைத் தெளிவாக நிர்ணயித்தல்**

நிதியியல் இலக்குகளை நிர்ணயிப்பதன் மூலம் ஆரம்பியுங்கள். அவற்றை குறுங்காலத்திலிருந்து, நீண்ட காலங்களாக பிரித்துக் கொள்ளுங்கள்

| நேரக்கட்டமைப்பு | உதாரணங்கள் |
|---|---|
| குறுங்காலம் 1 இலிருந்து 3 ஆண்டுகள் | அவசர தேவை நிதியம் ஓய்வுவிடுமுறை, வீட்டைப்புதுப்பித்தல், கடனைச்செலுத்துதல் |
| நீண்டகாலம் - 3 ஆண்டுகளுக்கு மேல் | வீடு வாங்குதல், பிள்ளைகளின் உயர்கல்வி, ஓய்வுக்காலம் |

**படிமுறை 2: உங்கள் வரவு செலவுத் திட்டத்தினை அபிவிருத்தி செய்தல்**

எந்த ஒரு சேமிப்பு திட்டத்திற்கும் வரவு செலவுத்திட்டமே அடித்தளம்

- **மொத்த வருமானத்தினை கணித்தல்:** மாதாந்தம் நீங்கள் எவ்வளவு பணம் ஈட்டிக் கொள்கின்றீர்கள்.
- **செலவினங்களை அடையாளம் காணுதல்:** அனைத்து நிலையான செலவுகளையும் மாறுபடும் செலவுகளையும் பதிவுசெய்யுங்கள் (வாடகைச் செலவுகள், உணவுச் செலவுகள், பட்டியல்கள் போன்றவை)
- **சேமிப்பதற்கான வழிகளை அடையாளம் காணுதல்:** குறைக்கப்படக்கூடிய செலவினங்களையும் தவிர்க்கக்கூடிய தேவையற்ற செலவினங்களையும் கண்டறியுங்கள் - உதாரணங்கள் நுகர்விற்குப் பொறுப்புடையவை மற்றும் தவிர்க்கக்கூடிய அத்தியாவசியமற்ற செலவுகள் (பொழுதுபோக்கு, களியாட்டச் செலவுகள்)

**படிமுறை 3: உங்கள் அவசர தேவைகளுக்கான நிதியினைத் திட்டமிடல்**

அவசர தேவைகளுக்கான நிதிக்கு முன்னுரிமையளித்தல் வேண்டும். 3 அல்லது 6 மாத வாழ்க்கைச் செலவிற்குச் சமமான தொகையினைத் தனியாக சேமிப்பது புத்திசாலித்தனமானதாகும். சேமிப்பு கணக்கினூடாக இதனைச் செய்யலாம்.

- **சிறிய தொகையொன்றுடன் சேமிப்பினை ஆரம்பியுங்கள்:** ஆரம்ப இலக்கொன்றினை நிர்ணயிங்கள் (உதாரணமாக மாதமொன்றிற்கு ரூ.5000) அத்துடன் உங்கள் வருமான மட்டத்திற்கேற்ப சேமிப்புக்களைப் படிப்படியாக கட்டியெழுப்புங்கள்.
- **தன்னியக்கமான சேமிப்புக்கள்:** அவசர தேவை நிதியத்திற்காக தனிப்பட்ட சேமிப்பு கணக்கொன்றினை ஆரம்பித்து அக்கணக்கிலிருந்து தன்னியக்கமாக பணம் மாற்றம் செய்யும் முறையை ஏற்படுத்துங்கள். இதற்காக நீங்கள் வங்கியிலிருந்து ஆலோசனைகளையும் உதவியையும் பெறமுடியும். பணமாற்றலை இணைய வங்கித்தொழில் சேவையினூடாக அல்லது நிலையியற் கட்டளையூடாக மிகவிரைவில் செய்யமுடியும்.

**படிமுறை 4: சரியான சேமிப்பு அறிவுறுத்தலை பயன்படுத்துங்கள்**

- **சேமிப்பு கணக்குகள்:** நடுத்தர/ நீண்டகால இலக்குகளுக்காக குறுங்கால மற்றும் உயர்வருமான சேமிப்புகளுக்கான சிரமமான சேமிப்புக்கள்
- **ஒவ்வொரு (சேமிப்பு)** இலக்குகளுக்கும் தனித் தனியான சேமிப்பு கணக்குகளைப் பயன்படுத்துக்கள்

**படிமுறை 5: வருமானம் மற்றும் சேமிப்புக்களின் போக்குகளைக் கண்டறிந்து சேமிப்புத் திட்டங்களை திருத்துங்கள்**

- **மாதாந்த வரவுசெலவுத் திட்டத்தினை மீளாய்வு செய்தல்:** சேமிப்புக்கள் திட்டத்துடன் இணைத்து செல்கின்றதா என்பதனை உறுதிப்படுத்தி தேவைக்கேற்ப செலவிடல்/ சேமிப்புக்களைச் சீராக்குங்கள்
- **காலக்கிரமத்தில் சேமிப்புக்களை அதிகரியுங்கள்:** உங்களுக்கு பதிவியுயர்வு, படி அல்லது மேலதிகக் கொடுப்பனவு கிடைக்கும்போது அதன் ஒரு பகுதியை சேமியுங்கள் (மேலதிக வருமானத்தில் 50% வரை)

## உங்கள் சேமிப்பு திட்டத்திற்கான 6 ஆலோசனைகள்

- **உங்கள் செலவினங்களை முகாமைப்படுத்துங்கள்:** வருமானம் அதிகரிக்கின்றமைக்கேற்ப நீங்கள் செலவுகளை அதிகரிக்கப்படக்கூடாது. ஆனால் உங்கள் சமூக அந்தஸ்திற்கேற்ப உங்கள் வாழ்க்கைத் தரத்தினைப் பேணமுடியும்.
- **உங்களை நீங்களே செயலூக்கப்படுத்திக் கொள்ளுங்கள்:** உங்கள் சேமிப்பு இலக்குகளை மறக்க வேண்டாம். சேமிப்புக்களை தொடர்ந்து பார்த்தல் அல்லது உங்கள் சேமிப்பு முன்னேற்றத்தினை அல்லது கண்காணிப்பதன் மூலம் அவற்றை உங்கள் மனதில் பதித்துக் கொள்ளுங்கள்.
- **உங்கள் சாதனைகளுக்காக உங்களை நீங்களே பாராட்டிக் கொள்ளுங்கள்:** குறிப்பிட்ட சேமிப்பு மைல்கல்லை அடைந்ததன் பின்னர் சிறிய விருந்து கொண்டாட்டமொன்றினை ஏற்பாடு செய்வதன் மூலம் உங்களை நீங்கள் ஊக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட சேமிப்பு இலக்கினை அடைவது உண்மையான ஒரு செயலூக்கமாகும்.
- **சேமிப்பு கண்காணிப்பினை பயன்படுத்தல்:** சேமிப்பு கண்காணிப்பாளர் என்பது ஒரு கருவியாகும் அல்லது சேமிப்பு இலக்குகள் தொடர்பான முன்னேற்றத்திற்கான முறையாகும். கையினால் இற்றைப்படுத்தக்கூடிய புத்தகமொன்றினை அல்லது மென்பொருளை செல்லிட தொலைபேசிக்கு பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.
- **ஒழுங்குமுறைப்படுத்தப்படாத நிறுவனங்களை தவிர்த்தல்:** உங்கள் சேமிப்புக்கள் இழக்கப்படுவதனை தவிர்ப்பதற்காக, தொடர்பான மேற்பார்வை அதிகாரசபையினால் ஒழுங்கு முறைப்படுத்தப்படும் நிதியியல் நிறுவனங்களில் சேமிப்புக்களை வைத்திருத்தல் வேண்டும்.
- **முன்மதியுடைய விதத்தில் உங்கள் சேமிப்புக்களை பன்முகப்படுத்திக் கொள்ளுங்கள்:** நிதியியல் நிறுவனங்கள் சிறுவர் சேமிப்பு கணக்குகள், இளைஞர் சேமிப்புக் கணக்குகள், பெண்கள் சேமிப்பு கணக்குகள், ஓய்வு கால திட்டமிடல் சேமிப்புக் கணக்குகள் மற்றும் தவணை வைப்புகள் போன்ற பல்வேறுபட்ட சேமிப்பு சாதனங்களை வழங்குகின்றன. உங்களது சேமிப்பு இலக்குகளுக்கு ஏற்ப அவற்றைப் பயன்படுத்த முடியும் உங்கள் அனைத்து சேமிப்புக்களையும் ஒரு கணக்கில் வைத்திருப்பது உங்கள் சேமிப்பு இலக்குகளை அடைவதிலிருந்தும் உங்கள் கவனத்தினை திசைதிருப்பிவிடும்.

### சேமிப்புகளுக்கு அப்பாலும் சிந்தித்தல்

செலவிடலிலும் பார்க்க சேமிப்பிற்காக பணத்தினை ஒதுக்குவது செல்வந்தராக மாறுவதற்கான முதற்படியாகும். எனினும் சேமிப்பது மாத்திரம் உங்களை செல்வந்தராக்காது. சேமிப்பு உங்களுக்கு பாரிய தொகையான பணத்தினைத்தரும். இது சோம்பிக் கிடப்பின் பயனில்லை.

பணம் ஒரு சொத்து அதிலிருந்து நீங்கள் உழைக்க முடியும் அது இயல்பாகவே வளரும். ஆகவே பணத்திலிருந்து உண்மையான நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். முதலீட்டு வருமானம் மூலம் உங்கள் சேமிப்புக்களை பெருக்குவதற்கு பொருத்தமான பாதுகாப்பான முதலீடுகளைச் செய்தல் வேண்டும்.

# 3.5 முதலீட்டு முகாமைத்துவம்

## கற்றல் பெறுபேறுகள்

- முதலீட்டு முகாமைத்துவத்தினையும் அதன் முக்கியத்துவத்தினையும் விளங்கிக் கொள்ளுங்கள்
- இலங்கையிலுள்ள வேறுபட்ட வகையான முதலீட்டு வகைகளைத் தெரிந்துகொள்ளுதல்.
- முதலீட்டிற்காக பரிசீலித்துக் கொள்ளப்பட வேண்டிய முக்கிய காரணிகளை அடையாளம் காணுதல்.
- முதலீடுகள் மீதான இடர்நேர்வுகள் மற்றும் வருவாய்களுக்கிடையிலான தொடர்புகளை விளங்கிக் கொள்ளுதல்.
- பன்முகப்படுத்தல் முதலீட்டு இடர்நேர்வுகளை எவ்வாறு குறைக்கும் என்பதனைத் தெளிவுபடுத்தல்
- பணத்தின் நேரப்பெறுமானக் கோட்பாடுகளை புரிந்துகொள்ளுதல்
- தனி வட்டி மற்றும் கூட்டுவட்டி யோசனைகளை தெரிந்துகொள்ளுதல்
- தனிப்பட்ட நிதியிடலில் பணத்தின் நேரப் பெறுமதியின் பிரயோகத்தினை புரிந்துகொள்ளுதல்.
- கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரப் பங்குச் சந்தையினை தெரிந்துகொள்ளுங்கள்
- கொழும்பு பங்குப் பரிவர்த்தனைகளில் முதலீடு செய்வதற்கான வழிகாட்டல்களை தெரிந்துகொள்ளுதல்
- படுகடன் பிணையங்களை விளங்கிக் கொள்ளுதல்
- சரியான முதலீடுகளைத் தெரிவுசெய்வதற்கான ஆலோசனைகளை தெரிந்துகொள்ளுதல்

முதலீடுகள் என்பது எதிர்காலத்தில் வருமானமொன்றினை ஈட்டிக்கொள்ளுவதற்காக நிதியியல் சொத்துக்கள், செயற்றிட்டங்கள் அல்லது வியாபாரங்களில் உங்கள் பணத்தினை முதலீடு செய்வதனைக் குறிக்கிறது. முதலீடு செய்வதன் பிரதான குறிக்கோள் உங்கள் செல்வத்தினைப் பெருக்குவதும் எதிர்காலத்தில் உங்கள் நிதியில் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதுமேயாகும்.



ரத்நாயக்கவின் குடும்ப உறுப்பினர்களின் சுறுசுறுப்பான ஒரு நாளில் இரவு உணவு மேசையில் சந்தித்துக் கொள்கின்றார்கள்.






ரத்னாயக்க குடும்பத்தினைப் போன்றே பெரும்பாலான குடும்பங்கள் அவர்களின் வருமானத்தின் முக்கிய மூலங்களிலேயே தங்கியிருக்கின்றன. எனினும். உயர்வடைந்து செல்லும் செலவுகளுடன் இணங்கி செல்லும் விதத்தில் வழமையான சேமிப்புக்களிலும் பார்க்க விரைவான வேகத்தில் பணத்தினை வளரச் செய்வதற்காக முதலீடுகள் பற்றி நாம் பரிசீலனையில் கொள்ள வேண்டும். என்பதுடன் மேலதிக வேலை எதுவுமில்லாமல் மேலதிக வருமானத்தினை உருவாக்குதல் வேண்டும். இது விதைகளை நாட்டுவதனைப் போன்றதாகும். அதுப் படிப்படியாக வளர்ந்து எதிர்காலத்தில் வருமானத்திற்கான உறுதியான மூலமாக விளங்கும். பின்வரும் பிரிவு முதலீட்டின் முக்கியத்துவத்தினை விளக்குகிறது.

## முதலீட்டினை மேற்கொள்வதன் முக்கியத்துவம்

- **செல்வத்தினைக் கட்டியெழுப்புதல்:** காலக்கிரமத்தில் முதலீடுகள், உங்கள் பணத்தினை அதிகரிப்பதனையும் செல்வத்தினை அதிகரிப்பதனையும் இயலச் செய்யும்.
- **நிதியியல் இலக்குகளை எய்துதல்:** முதலீடுகளைச் செய்வது வீடுகள், காணிகளை வாங்குதல், கல்விக்கு நிதியிடல், ஊர்திகளை வாங்குதல் அல்லது ஓய்வு கால நிதியிடல் போன்ற பாரியளவிலான செலவினங்களுக்கு நிதியிடுவதற்கு தனிப்பட்டவர்களை அனுமதிக்கிறது.
- **பணவீக்கத்தினைத் தோற்கடித்தல்:** காலக்கிரமத்தில் பணவீக்கம் உங்கள் கொள்வனவுச் சக்தியை குறைத்து விடுகிறது. சிறந்த முதலீடொன்று பணவீக்கத்தின் தாக்கத்தினால் பாதிக்கப்படாமல் பணத்தினை நீங்கள் வைத்திருப்பதனை இயலுமைப்படுத்துகிறது.

## இலங்கையில் மிகப்பிரபல்யமான முதலீட்டு வாய்ப்புக்கள்

| முதலீட்டு வகை | விபரணம் |
|---|---|
| பங்குச் சந்தையில் முதலீடு | பங்குப் பரிவர்த்தனை என்பது சிறிய பங்குகளில் (இருப்புக்கள்) கம்பனியொன்றினை சொத்துடமையினை விற்பதற்கும் வாங்குவதற்குமான சந்தையாகும். கம்பனியின் பங்கொன்றினை ஆளொருவர் வாங்கும் போது அக்கம்பனியின் சொத்துடமையில் சிறிய பகுதியொன்றினை சுவீகரித்துக் கொள்கின்றார். கம்பனி வளர வளர அதன் பங்குகளின் பெறுமதியும் அதிகரிக்கும். அப்பொழுது நீங்கள் பங்குகளின் அனைத்துயுமோ அல்லது ஒரு பகுதியை விற்றுவிடுவதன் மூலம் மூலதன அல்லது பங்கிலாபத்தினை ஈட்டிக்கொள்ளலாம். |
| கம்பனி படுகடன் பிணையங்களில் முதலீடு | கம்பனி முறிகள் என்பது தனியார் துறைக்கும் பணிகளின் நடுத்தரகால அல்லது நீண்டகாலப் பிணையங்களாக இருப்பதுடன் வழங்குநர் வட்டியைச் செலுத்துவதற்கும் முதிர்ச்சியில் மூலதனத்தை மீளளிப்பதற்கும் கடப்பாடு கொண்டவராவார். கம்பனி படுகடன் பிணையங்கள் நிலையான வருமானத்தினை முதலீட்டாளர்களுக்கு வழங்குகிறது. |
| திறைசேரி உண்டியல் மற்றும் முறிகளில் முதலீடுகள் | இலங்கை அரசாங்கம், முக்கியமாக குறுங்கால படுகடன் சாதனங்கள், திறைசேரி உண்டியல், நடுத்தர மற்றும் நீண்டகால படுகடன் சந்தைகள் மற்றும் திறைசேரி முறிகள் ஊடாகவும் உள்நாட்டு நாணயப் படுகடனைத் திரட்டுகிறது. இணங்கிக் கொள்ளப்பட்ட காலத்தின் முடிவில் உண்டியல் அல்லது முறியில் முதலீடு செய்யப்பட்ட முதல் தொகை தொடர்பான வட்டியுடன் மீட்டுக்கொள்ளப்படுகின்றது. |
| சமவாய நிதியத்திலும் கூறு நம்பிக்கையிலும் முதலீடுகள் | இந்நிதியங்கள் முதலீட்டாளர்களின் சிறிய எண்ணிக்கையினரால் உருவாக்கப்படுகின்றதுடன், ஒப்பீட்டு ரீதியில் சிறிய தொகைப் பணமே பங்களிக்கப்படுகின்றது. சிறப்பியல்பு வாய்ந்த தேர்ச்சிகளும் இயலாற்றலும் கொண்ட நிபுணத்துவம் வாய்ந்த தொழில்சார் நிபுணர்கள் நிதியத்தினை முகாமைத்துவம் செய்கின்றனர். அந்நிதி முகாமையாளரினால் பங்குகள் முறிகள் போன்ற பல்வேறுபட்ட முதலீடுகளில் நிதியத்தினை முதலீடு செய்யப்படுவதுடன் அவ்வாறு முதலீடு செய்தவர்களுக்கு வட்டியை வழங்குகின்றது. நிபுணர்களை முதலீட்டின் இடர்நேர்வினை முகாமைப்படுத்துகின்றனர். |
| உண்மைச் சொத்துக்களின் கொள்வனவு | உண்மைச் சொத்து முதலீடு என்பதன் கருத்து வீடுகள், கட்டிடங்கள், காணி போன்றவற்றின் கொள்வனவில் முதலீடு செய்வதாகும். சொத்துக்களை வாடகைக்குவிடுவதன் மூலம் அல்லது குத்தகைக்கு விடுவதன் மூலம் அல்து பெறுமதி அதிகரித்ததன் பின்னர் கூடுதலான பணத்திற்கு விற்பதன் மூலம் வருமானத்தினை ஈட்டமுடியும். |
| பெறுமதியான பொருட்களைக் கொள்வனவு செய்தல் | தங்கம் மற்றும் வெள்ளி பெறுமதிமிக்க உலோகங்கள் போன்ற பெறுமதிமிக்க மூலப்பொருட்களை கொள்வனவு செய்தல் |
| வியாபாரத்தில் முதலீடு செய்தல் | புதிய வியாபாரங்களை ஆரம்பிப்பதில் அல்லது ஏற்கனவேயுள்ள வியாபாரங்களில் முதலீடுசெய்தல் உங்கள் முதலீட்டின் மீதான வருவாய் கம்பனியினால் உழைக்கப்பட்ட இலாபமாக இருக்கும். |
| காப்புறுதி ஒன்றைப் பெறல் | முதலீட்டு நோக்கங்களுக்காகவே விசேடமாக வடிவமைக்கப்பட்ட காப்புறுதிப் பொதியினை கொள்வனவு செய்தல். முதிர்ச்சிகளில் இது, ஆரம்ப முதலீட்டிலும் பார்க்க உயர்ந்த பெறுமதியினைத் தரும். |

## முதலீட்டினைச் செய்யும் போது பரிசீலனையில் கொள்ளப்படவேண்டிய காரணிகள்




### முதலீட்டின் குறிக்கோள்

முதலீட்டின் நோக்கம் வருமானத்தினை உருவாக்குதல், செல்வத்தினை பேணுதல் எதிர்காலத் தேவைகளுக்காக மூலதனத்தினை திரட்டுதல் போன்ற குறித்துரைக்கப்பட்ட நிதியியல் இலக்குகளை எய்துவது அல்லது ஓய்வுகாலம் அல்லது கல்விக்கான நிதியிடல் போன்ற நீண்ட கால குறிக்கோள்களை பூர்த்தி செய்வதாகும்.

### முதலீட்டிலிருந்தான வருவாய்

வருவாய் என்பது முதலீடொன்றின் மீது பெறப்படுகின்ற மொத்த நிதியியல் நன்மை அல்லது இழப்பாகும். இது முதலீட்டிலிருந்து உருவாக்கப்பட்ட ஏதேனும் வருமானத்தினையும் (பங்கிலாபம் அல்லது வட்டி போன்றவை) மற்றும் முதலீட்டின் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து தோன்றுகின்ற ஏதேனும் மூலதன நன்மை (அல்லது இழப்பினை) உள்ளடக்குகிறது.

வருவாயினை பின்வருமாறு விளக்கமுடியும்:

$$\text{வருவாய்} = \frac{(\text{இறுதிப்பெறுமதி} - \text{ஆரம்ப பெறுமதி}) + \text{வருமானம்}}{\text{ஆரம்ப பெறுமதி}}$$

இறுதிப்பெறுமதி காலமுடிவில் முதலீட்டின் சந்தைப் பெறுமதியாக இருக்குமிடத்து. ஆரம்பப் பெறுமதி என்பது காலத்தின் தொடக்கத்தில் முதலீட்டின் சந்தைப் பெறுமதியாகும். இதனை நாங்களும் முதலீட்டின் மூலதன இலாபம் என அழைக்கிறோம். வருமானம் என்பது பங்கிலாபம் அல்லது வட்டி போன்று முதலீட்டிலிருந்தான ஏதேனும் காசுப்பாய்ச்சலாகும்.

பணவீக்கம் முதலீட்டின் மீதான உண்மை வருவாயினை முக்கியமாக தீர்மானிக்குமொன்றாகும். இது எதிர்கால காசுப் பாய்ச்சலின் கொள்வனவுச் சக்தியைக் குறைத்து விடுகிறது. முதலீட்டின் எதிர்பார்க்கப்படும் இலாபத்தன்மையினை மதிப்பிடும்போது இதனை பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும் முதலீட்டின் மீதான வருவாய் வீதம் பொருளாதாரத்தில் தற்போது நிலவுகின்ற ∴ எதிர்பார்க்கப்படுகின்ற பணவீக்க வீதத்திலும் பார்க்க பெரிதாக இருத்தல்வேண்டும்.

### முதலீட்டின் வருவாய் கால இடைவெளி

வருவாய் காலஇடைவெளி காலாந்தர தன்மையினை விபரிக்கிறது. இதில் வருவாய் நாளாந்தம், மாதாந்தம், காலாண்டு அல்லது வருடாந்தம் போன்ற முதலீட்டிலிருந்து பெறப்படுகின்றது அல்லது பங்கிடப்படுகின்றது. இது சொத்துப் பட்டியல் திட்டமிடலிலும் (பல் முதலீடுகளைக் கொண்டிருத்தல்) காசுப் பாய்ச்சல் முகாமைத்துவத்திலும் முக்கிய காரணியாக விளங்குகிறது.

### முதலீட்டுடன் தொடர்பட்டுள்ள இடர்நேர்வு மற்றும் பாதுகாப்பு

இடர்நேர்வு என்பது குறிப்பிட்ட முதலீட்டுடன் சேர்ந்து காணப்படும் முதல் தொகையின் வருவாய் மற்றும் இழப்பின் சாத்தியமான வேறுபாடாகும். இது வழங்கும் நிறுவனத்தின் உறுதித் தன்மை, சந்தை நிலைமைகள், பொருளாதார நிகழ்வுகள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட முதலீட்டுப் பண்புகள் போன்ற பல்வேறு காரணங்களிலிருந்து தோன்றுகிறது. ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்புக்களைப் பின்பற்றுகின்ற மற்றும் வெளிப்படையான நிதியியல் வெளிப்படுத்துகைகளை கொண்டிருக்கின்ற கம்பனியொன்றினாலும் வழங்கப்படுகின்ற முதலீட்டுச் சாதனம் பாதுகாப்பானது எனக்கருதப்படலாம். அரசினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட சொத்துக்கள் மிகப் பாதுகாப்பானவை எனக் கருதப்படுகின்றன.

### முதலீட்டின் முதிர்ச்சிக் காலம்

முதிர்ச்சிக் காலம் என்பது முதலீடு ஒன்றின் அல்லது நிதியியல் சாதனமொன்றின் ஆயுள் காலமாகும். இதன் பின்னர் முதல் தொகை மீளச்செலுத்தப்படுகின்றதுடன் முதலீடும் நிறுத்தப்படுகிறது. இது காசுப் பாய்ச்சல்களுக்கான கால அளவினை நிர்ணயிப்பதுடன், இது, திரவத்தன்மையினையும் இடர்நேர்வினையும் மதிப்பிடுவதில் இன்றியமையாத காரணியாகவும் விளங்குகிறது.

### முதலீட்டின் வரித் தாக்கம்

முதலீடொன்றின் வரித் தாக்கமென்பது ஏற்புடைத்தான வரிச் சட்டத்தின் கீழ் முதலீடொன்றிலிருந்தான தேறிய வருவாய்மீது செல்வாக்குச் செலுத்தும் வரிக்கடப்பாடுகளின் அளவாகும்.

### முதலீட்டின் திரவத்தன்மை

திரவத்தன்மை என்பது சந்தைப் பெறுமதி கணித்ததாக விலையொன்றில் சொத்தொன்றினை விரைவாக வாங்குவதனை அல்லது விற்பதனை இயலுமைப்படுத்துவதாகும். இது குறைந்த பெறுமதி இழப்புடன் முதலீட்டினை காசாக இலகுவாக மாற்றுவதனை பிரதிபலிக்கிறது.

## முதலீடொன்றின் இடர்நேர்விற்கும் வருவாய்க்குமிடையிலான தொடர்புகள்

முதலீடு செய்தல் என்ற கருதுகோளில், இடர்நேர்வு ஒன்றில் முதலீடு செய்யப்பட்ட தொகையில் (முதலீடு செய்யப்பட்ட மொத்த தொகையாக இருக்கலாம்) இழக்கப்படுகின்ற தொகையாக இருக்கலாம் அல்லது தொடர்பான காலப்பகுதியில் முதலீடொன்றின் வருவாயின் தளம்பலாக இருக்கலாம். முதலீட்டு வருவாய் முதலீட்டு வருமானத்தினையும் மூலதன இலாபங்களையும் உள்ளடக்குகிறது.

முதலீட்டாளர்கள் கொள்வனவு என்பது மிக இடர்நேர்வினைக் கொண்ட முதலீடு என கருதும்போது அவர்களது முதலீட்டில் சில அல்லது எல்லாம் இழக்கப்படலாம் என்பதனை தெரிந்திருத்தல் வேண்டும். வருவாய் தளம்பல் என்பதன் கருத்து, எதிர்பார்க்கப்பட்ட வருவாயிலிருந்து உண்மையான வருவாயின் விலகல் என்பதாகும். இது நியம விலகலின் மூலம் அளவிடப்படுகிறது.

முதலீட்டு வருவாய் மூலதன இலாபம் மற்றும் பங்குலாபம் போன்ற பல்வேறு வடிவங்களில் வருகிறது. இதனை ஆரம்ப முதலீட்டுப் பெறுமதியின் சதவீதமாக விளக்கமுடியும்.

*உயர் இடர்நேர்வு முதலீடுகள் பொதுவாக முதலீட்டாளர்களுக்கு சிறந்த வருவாயினை வழங்குகின்ற வேளையில் குறைந்த இடர்நேர்வு முதலீடுகள் ஒப்பீட்டளவில் குறைந்த வருவாயே வழங்குகின்றன.*

பங்குப்பெறுமதியில் ஏற்படும் உயர் தளம்பல் காரணமாக பங்குச் சந்தையில் செய்யப்படும் முதலீடுகளை உயர் இடர்நேர்வு முதலீடுகளாக கருதமுடியும். எனினும் உயர் இடர்நேர்வினைக் கொண்ட முதலீடுகள் எப்பொழுதும் உயர்வருவாய்களை உருவாக்கமாட்டா. அது உண்மையில் முதலீட்டுடன் தொடர்பான "உயர் இடர்நேர்வு" களாகும். முதலீட்டாளர்கள் இரண்டு சூழ்நிலைகளுக்கும் அதாவது இலாபம் மற்றும் நட்டம் இரண்டிற்கும் தயாராக இருத்தல் வேண்டும். அரசதிறைசேரி முறிகளில் முதலீடு செய்வது பொதுவாக குறைந்த இடர்நேர்வினைக் கொண்ட முதலீடுகளாக அடையாளம் காணப்படுகின்றன. ஏனெனில் அரசாங்கம் அவற்றின் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறுவது சாத்தியமில்லை என்பதனால் இடர்நேர்வு மிகக்குறைவாகும்.




## முதலீட்டு இடர்நேர்வினை எவ்வாறு குறைக்கலாம்?

முதலீட்டு இடர்நேர்வினைக் குறைப்பது இடர்நேர்வு மூலங்களை புரிந்துகொள்வதுடனும் வேறுபட்ட சொத்துக்களிடையே அல்லது முதலீட்டு பங்குகளிடையே இடர்நேர்வினை பன்முகப்படுத்தும் உபாயங்களை கையாள்வதுடனும் தொடர்புபடுகிறது. சொத்துப்பட்டியல் கட்டமைப்பினை சீராக்கம் செய்வதன் மூலம் முதலீட்டாளர்கள் சாத்தியமான கணிசமான இழப்புக்களை குறைக்க முடியும் என்பதுடன் கூடுதலான உறுதியான வருவாய்களையும் உறுதிப்படுத்த முடியும்.

இடர்நேர்வினைக் குறைப்பதற்கான முக்கிய உபாயம் முதலீட்டுச் சொத்துப்பட்டியலை பேணுவதன் மூலம் முதலீடுகளை பன்முகப்படுத்துவதாகும்.

**பன்முகப்படுத்தல்**

பன்முகப்படுத்தல் என்பது சொத்துப்பட்டியலின் ஒட்டுமொத்த இடர்நேர்வினைக் குறைப்பதற்கு பல்வேறு சொத்துக்களில் முதலீடு செய்கின்ற ஒரு நடைமுறையாகும். கலப்புச் சொத்துக்களை உடைமையில் கொள்வது எந்த ஒரு முதலீட்டிலும் கணிசமான இழப்புக்களினால் ஏற்படும் இடர்நேர்வுகளைக் குறைத்து விடுகின்றது.

அமெரிக்க முதலீட்டாளரான வாரன் பவெட்டு **“உங்கள் அனைத்து முட்டைகளையும் ஒரு கூடைக்குள் வைக்காதீர்கள்.”** என்ற புகழ்பெற்ற மரபுத் தொடரின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றன. முட்டைகள் அதிகளவிற்கு உடைந்து விடக்கூடியவை. ஒரு கூடைக்குள் அவற்றையெல்லாம் வைப்பது விழுந்து விடுமாயின் உடைந்துபோகக்கூடிய தன்மையினைக் கொண்டுள்ளன.

குறைந்தபட்சம் ஒரு சில முட்டைகளாவது உடைந்து போகாமல் இருக்கக்கூடிய வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கு முட்டைகளை வெவ்வேறு கூடைகளில் வைத்தல் வேண்டும் என்பதுடன் அக்கூடைகளைக் கொண்டு செல்வதற்கு வேறுபட்ட மக்களிடமும் வழங்குதல் வேண்டும். இது போன்றே எல்லாப் பணங்களையும் ஒரே சொத்தில் முதலிடின், அது முதலீட்டின் முழுப்பெறுமதிகளையும் அழித்துவிடும்.

ஒரு கம்பனியின் பங்குகளில் முதலீட்டு சொத்துப்பட்டியலை வைத்திருப்பதிலும் பார்க்க கம்பனியின் பங்குகள், திறைசேரி முறிகள் மற்றும் உண்மைச் சொத்துக்களில் முதலீட்டுச் சொத்துப் பட்டியலை வைத்திருப்பது குறைந்தளவு தளம்பல்களையே ஏற்படுத்தும்.

வேறுபட்ட சொத்துக்கள் வேறுபட்ட சந்தை நிலைமைகளுக்கு வேறுபட்ட பிரதிபலிப்புக்களைக் காட்டுமென்பதனால் ஒரு சொத்தினால் காட்டப்படும் மோசமான பிரதிபலிப்புக்களை சொத்துப்பட்டியலிருந்த மற்றொரு சொத்தின் சாதகமான நடுத்தர பிரதிபலிப்புக்களினால் இழப்பீடு செய்யமுடியும். இது முதலீட்டாளர்கள் உறுதிப்படுத்தப்பட்ட முதலீட்டு வருவாய்களை பெறுவதற்கு வழிவகுக்கின்ற வேளையில் ஒட்டுமொத்த இடர்நேர்வுகளையும் குறைத்துவிடுகின்றது.

## பணத்தின் நேரப் பெறுமதி

பணத்தின் நேரப் பெறுமதி என்பது இப்பொழுதுள்ள ஒரு தொகைப் பணம் எதிர்காலத் திகதியொன்றில் அதுகொண்டிருக்கக்கூடிய பெறுமதியினை விட கூடுதலாக இருக்கும் என்ற கருத்தில் அமைந்திருக்கும் இடைப்பட்ட காலத்தில் வருவாய்ச் சாத்தியம் காரணமாக இது ஏற்படலாம். உதாரணமாக ரூ.5,000 தாளின் இன்றைய பெறுமதி ஓராண்டின் பின்னர் அத்தாளின் பெறுமதியிலிருந்து வேறுபடுகின்றது.

பணத்தின் நேரப்பெறுமதி நினைவில் வைத்திருக்க வேண்டிய முக்கியமான கருதுகோளாகும். ஏனெனில் உங்கள் பணம் ஒருமுறை முதலீடு செய்யப்படும் போது தொடர்பான காலப்பகுதியில் அது வளர்ச்சியடையும். சேமிப்பு கணக்கொன்றில் அல்லது நிலையான கணக்கொன்றில் நீங்கள் அவற்றை வைப்பிலிடினும் கூட பணமானது கூட்டுவட்டியை உழைப்பதுடன் முதலீட்டு வளர்ச்சியின் மீதான கூட்டுவட்டியின் தாக்கம் கணிசமானதாக இருக்கமுடியும்.

பிலிப்பின் பக்கத்தில், முதலீடு செய்யப்படாத பணம் காலப்போக்கில் பெறுமதியினை இழக்கும். நீங்கள் குழந்தையாக இருக்கும்போது ரூ.100 இற்கு வாங்கக்கூடிய இருந்ததை அதே ரூ.100 இற்கு இன்று எதனை வாங்கமுடியும் என்பதனை எண்ணிப்பாருங்கள். இதற்கு பணவீக்கமே காரணமாகும் என்பதுடன் வருவாயின் சாத்தியமான இழப்பு உங்கள் பணத்தின் பெறுமதியினை தேய்வடையச் செய்கிறது. நீங்கள் உங்கள் பணத்தினை 10 ஆண்டுகளுக்கு மெத்தையின் கீழ் வைத்திருப்பின் பணவீக்கத்தின் காரணமாக அதன்பெறுமதி குறைந்து போவது மட்டுமன்றி அது முதலீடு செய்யும் போது உழைத்திருக்கக்கூடிய வட்டியையும் இழப்பீர்கள்.

பணத்தின் நேரப்பெறுமதி நடைமுறையில் ஒவ்வொரு நிதி மற்றும் முதலீட்டு தீர்மானத்திற்குமான அடித்தளத்தினை வழங்குகின்ற கோட்பாடாக காணப்படுகின்றது. சம்பளத்தினை அடிப்படையாகக் கொண்டு கடன்களை எடுப்பதா அல்லது கொள்வனவு தீர்மானங்களை எடுப்பதா சிறந்த நிதியியல் நடவடிக்கை என்பதனை மதிப்பிடுவதற்கு பணத்தின் நேரப் பெறுமதியினை பயன்படுத்தமுடியும்.

## பணத்தின் நேரப்பெறுமதியின் கணிதம்

பணத்தின் நேரப் பெறுமதியினைக் கணிப்பதற்கு பின்வரும் மாறிகளை நீங்கள் புரிந்து கொள்வது அவசியம்.

### இற்றைப் பெறுமதி (PV)

இற்றைப் பெறுமதி என்பது இன்றைய பெறுமதி அல்லது நடைமுறைப் பெறுமதியாகும். இதனைப் பின்வருமாறு விளக்கமுடியும்.

### எதிர்காலப் பெறுமதி (FV)

எதிர்காலப் பெறுமதி என்பது தற்போதைய ஒரு தொகைப் பணம் (அல்லது சொத்து) எதிர்பார்க்கப்படும் வருவாயின் அடிப்படையில் அல்லது (வளர்ச்சிவீதம்) முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட எதிர்கால திகதியில் எவ்வளவு பெறுமதியாக இருக்கும் என்பதாகும்.

உதாரணமாக 20 சதவீதம் கொண்ட ஆண்டு வட்டி வீதத்துடன் ரூ.100,000 இனை இன்று முதலீடு செய்வீர்களாயின் எதிர்கால பெறுமதி ஓராண்டில் ரூ.120,000 ஆக இருக்கும்.

## கழிவு வீதம் (r)

கழிவு வீதம் என்பது சொத்தொன்றின் அல்லது முதலீடொன்றின் தற்போதைய பெறுமதியினை தீர்மானிக்கப் பயன்படுத்துகின்ற வருவாய் வீதமாகும். இன்னொரு விதத்தில் இதனை கூறுவதாயின் கழிவு வீதம் என்பது வருவாயாகும். முதலீட்டாளர் ஒருவர் உடனடியாக இதனை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக எதிர்காலத்தில் தொகையொன்றினை ஏற்றுக்கொள்வதன் மீது இழக்கக்கூடிய ஒரு தொகை எனக் குறிப்பிடலாம்.

## கூட்டுவட்டி கணிக்கப்படுகின்ற தடவைகள் (n)

கூட்டுவட்டி கணிக்கப்படுகின்ற தடவைகள் அல்லது வட்டி எவ்வளவு கால இடைவெளியில் மதிப்பிடப்படுகிறது என்பது எதிர்கால பெறுமதியில் கணிசமாக தாக்கத்தினை ஏற்படுத்தமுடியும். இவ்விடயத்தில் முதலீட்டாளரொருவர் வட்டி உழைக்கின்ற சொத்தொன்றில் பணத்தினை இடுவாராயின் இவ்வட்டியை மாதாந்த ரீதியாக அல்லது காலாண்டு ரீதியாக மதிப்பிட முடியும்.

நேரக்கோடு ஒன்றின் உதாரணத்தினை பின்வருமாறு காட்டமுடியும்.




## பணத்தின் நேரப் பெறுமதியினை எவ்வாறு கணிப்பது

உதாரணம்:

திரு. சமன் அவரின் முதலீட்டிலிருந்து பணத்தினை சேகரிப்பதற்கு இரண்டு தேர்வுகளை கொண்டிருக்கின்றார்.

**தேர்வு 1 :** ரூ. 4.5 மில்லியனை இன்று பெறுவது

**தேர்வு 2 :** ரூ. 5 மில்லியனை இன்றிலிருந்து இரண்டு ஆண்டுகளில் பெறுவது

இன்று ரூ.4.5 மில்லியனை வைத்திருப்பது இரண்டு ஆண்டுகளில் ரூ. 5 மில்லியனை வைத்திருப்பதிலிருந்தும் வேறுபடுவது பற்றி பணத்திற்கான நேரப்பெறுமதி எமக்கு கற்பித்திருக்கிறது. ஆனால் இத்தேர்வு அவருக்கு கூடுதலாக நன்மை பயக்குமா?

இன்று நீங்கள் வைத்திருக்கும் ரூ.4.5 மில்லியனை ஆண்டுதோறும் 6% இனை வழங்கும் கூட்டுவட்டியில் சேமிப்பு கணக்கில் வைப்பிலிடுகின்றார் என கற்பனை செய்யுங்கள்.

பின்வரும் சூத்திரத்தினை பயன்படுத்தி இப்பொழுதிலிருந்து இரண்டு ஆண்டுகாலத்தில் சேமிப்புக் கணக்குகளை நிலுவையினை நீங்கள் கணிக்க முடியும். இது மேலே ஆராயப்பட்ட மாறிகளை உள்ளடக்குகிறது.

**பணத்தின் எதிர்காலப் பெறுமதி = இற்றைப்பெறுமதி (1+ r) $^{(n)}$**

இங்கு r = கூட்டுவட்டி காலப்பகுதியொன்றிற்கான வருவாய் வீதம்

n = வட்டியில் கூட்டு வட்டிக் காலப்பகுதியின் எண்ணிக்கை

t = பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய நேரங்களின் எண்ணிக்கை

இதன்படி,
இரண்டு ஆண்டுகளின் பின்னர்
சேமிப்புக் கணக்குகளின்
பெறுமதி = 4,500,000 ((1 + 0.06) 2

= Rs 5,056,200

இது ரூ. 5,000,000 இலும் பார்க்க உயர்வானதாகும்.

ஆகவே ரூ. 4.5 மில்லியனை இன்று சேகரித்துக் கொள்வது இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் ரூ.5 மில்லியனை சேகரிப்பதிலும் பார்க்க திரு. சமனுக்கு நன்மையானதாகும்.

## கூட்டுவட்டி

இது ஏற்கனவே விதிக்கப்பட்ட வட்டியின் மீது மேலும் வட்டி விதிக்கப்படுவதனைக் குறிக்கிறது. உதாரணமாக ஆண்டிற்கு 8 சதவீத வட்டியை வழங்கும் சேமிப்பு கணக்கில் நீங்கள் ரூ.1,000 இனை வைப்புச் செய்வீர்களாயின் முதலாம் ஆண்டு முடிவில் இது 1,080 ரூபாவாகும். எனினும் இரண்டாவது ஆண்டுமுடிவில் ரூ.1,166.40 ஆகும். இங்கு இரண்டாவது ஆண்டுகாலப்பகுதியில் கூட்டப்படும் வட்டி முதலாம் ஆண்டினை விட உயர்வானதாகும். முதலாம் ஆண்டில் ரூ.80 இரண்டாம் ஆண்டில் ரூ.86.40

## தனிப்பட்ட நிதியில் பணத்திற்கான நேரப் பெறுமதியின் பிரயோகம்

### சேமிப்பு மற்றும் முதலீடுகள்

சேமிக்கப்பட்டு இன்று முதலீடு செய்யப்படும் ஒரு ரூபா நாளை சேமிக்கப்பட்டு முதலீடு செய்யப்படும் ஒரு ரூபாவினை விட பெறுமதி கூடியதாகும். தற்பொழுது சொத்துக்களில் நீங்கள் செய்யும் முதலீடு தொடர்பான காலப்பகுதியில் அதன்பெறுமதியினை அதிகரிக்கும்.

### படுகடன் முகாமைத்துவம்

உங்கள் கடனிலிருந்து இன்று நீக்கப்படும் ரூபா நாளை அல்லது பின்னர் எதிர்காலத்தில் நீக்கப்படும் ரூபாயிலும் பார்க்க குறைந்த செலவினைக் கொண்டதாகும்.

### ஓய்வுகால திட்டமிடல்

ஓய்வு காலத்திற்காக நீங்கள் திட்டமிடும்போது நீங்கள் கூட்டுவட்டியிலிருந்து நன்மை பெற முடியும் என்பதுடன் உங்களது இற்றைப் பெறுமதியினை மிக உயர்ந்த எதிர்காலப் பெறுமதிக்கு மாற்றமுடியும் ஆனால் நீங்கள் பணவீக்கத்தினைப் புரிந்துகொள்வது அவசியமாகும்.

### பணவீக்கமும் அதன் தாக்கமும்

பணவீக்கம் பணத்தின் நேரப் பெறுமதியினை பாதிக்கிறது. ஏனெனில் இது தொடர்பான காலப்பகுதியில் பணத்தின் கொள்வனவுச் சக்தி வீழ்ச்சியடையக் காரணமாகிறது. மறுசொற்களில் கூறுவதாயின் ஒரு ரூபாவின் இன்றைய பெறுமதி எதிர்காலத்தில் குறைந்த பெறுமதியினைக் கொண்டதாக இருக்கும்.

அக்கறையுடைய தரப்பினர் பணவீக்கத்திலும் பார்க்கக்கூடிய வீதத்தில் நேர்க்கணிய வருவாயினை உருவாக்கக்கூடிய விதத்தில் சொத்துக்களில் முதலீடுகளை மேற்கொள்வதன் மூலம் அவர்களின் கொள்வனவுச் சக்தியில் ஏற்படும் தவிர்க்கமுடியாத தேய்வுகளை வெற்றிகொள்ளக்கூடியவர்களாக இருக்கின்றனர்.

ஆகவே நாட்டின் பணவீக்க வீதத்தினை விட உங்கள் வருவாய் வீதம் கூடுதலாக இருக்கக்கூடிய விதத்தில் சொத்துக்களில் முதலீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

# பங்குச் சந்தையில் முதலீடுகள்

## பங்குப் பரிவர்த்தனை என்றால் என்ன?

பங்குப்பரிவர்த்தனை என்பது, சிறிய பங்குகளில் (இருப்புக்கள்) கம்பனியொன்றின் சொத்துடமையினை வாங்குவதற்கும் விற்பதற்குமான சந்தையாகும். கம்பனியொன்றின் பங்கொன்றினை நீங்கள் வாங்கும்போது கம்பனியின் சொத்துடமையின் ஒரு சிறு பாகத்தினை சுவீகரித்துக் கொள்கின்றனர். அதேநேரம் நீங்கள் கம்பனியின் சொந்தக்காரராக மாற்றப்படுகின்றீர்கள்.

## கொழும்பு பங்குப்பரிவர்த்தனை

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை இலங்கையிலுள்ள ஒரே ஒரு பங்குப்பரிவர்த்தனையாக இருப்பதுடன் அதன் பிரதான அலுவலகம் கொழும்பில் இருக்கிறது. அதன் கிளைகள் கண்டி, யாழ்ப்பாணம், நீர்கொழும்பு மாத்தறை, குருநாகல், அனுராதபுரம் மற்றும் இரத்தினபுரி ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. இது பங்குச் சந்தையில் பகிரங்கமாக பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பங்குகளை முதலீட்டாளர்கள் வாங்கக்கூடிய மற்றும் விற்கக்கூடிய தளமாக செயற்படுகின்றது. கொழும்பு பங்குப் பரிவர்த்தனை, முதலீடுகளுக்கு வசதியளிப்பதன் மூலமும் கம்பனிகள் வளர்வதற்குத் தேவையான மூலதனத்தினை அவற்றிற்கு வழங்குவதன் மூலமாகவும் நாட்டின் பொருளாதாரத்திற்கு மிக முக்கியமானதாக காணப்படுகின்றது. கொழும்பு பங்குப் பரிவர்த்தனை பற்றி கூடுதலாக அறிந்து கொள்வதற்கு நீங்கள் இவ்வெப்தளத்திற்கு விஜயம் செய்யுங்கள் (www.cse.lk)

## கொழும்பு பங்குப் பரிவர்த்தனை எவ்வாறு தொழிற்படுகிறது?

### 1. கம்பனிகளைப் பட்டியலிடல்:

பகிரங்க கம்பனிகள்: வியாபாரங்களுக்கு நிதிகளை திரட்டவேண்டிய தேவை ஏற்படும்போது அது ஆரம்ப பொது மக்களுக்கான வழங்களினூடாக விற்பனைக்காக அதன் பங்குகளை முன்வைக்கின்றன. இதன் கருத்து யாதெனில் கம்பனியின் சொத்துடமைப் பங்குகளை எவரும் வாங்கமுடியும் என்பதேயாகும். கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் கம்பனியொன்று பட்டியலிடுவதற்கு திட்டமிடுகிறது என எண்ணிக்கொள்வோம். இவ்விடயத்தில் நிதியியல் உறுதிப்பாடு மற்றும் வெளிப்படைத் தன்மையில் குறித்துரைக்கப்பட்ட பிரமாணங்களை பூர்த்திசெய்தல் வேண்டும்.

### 2. பங்குகளை வாங்குதல் மற்றும் விற்றல்

கம்பனியின் பங்குகள் பட்டியற்படுத்தப்பட்டதும் எந்தவொரு தனிப்பட்டவரினாலும் (முதலீட்டாளர்) அவற்றை வாங்கவும் விற்கவும் முடியும். முதலீட்டாளர்கள் வாங்குபவர்களுக்கும் விற்பவர்களுக்குமிடையிலுள்ள இடையேற்பாட்டாளர்களூடாகவும் பங்குகளை வாங்கமுடியும். முதலீட்டாளர்கள் சந்தைக் கட்டளைகள் (நடைமுறை விலையில் வாங்குதல்.'. விற்றல்) அல்லது மட்டுப்படுத்தப்பட்ட கட்டளைகள் (வாங்குவதற்கு விற்பதற்கான குறித்துரைக்கப்பட்ட விலைகளில்) போன்ற வேறுபட்ட கட்டளைகளை மேற்கொள்ளமுடியும்.

சந்தைக் கட்டளைக்கான உதாரணம்: பங்கின் நடைமுறைச் சந்தை விலைகளில் நீங்கள் வாங்கல் அல்லது விற்றலுக்கான கட்டளையினை மேற்கொள்வது

மட்டுப்படுத்தப்பட்ட கட்டளைக்கான உதாரணம்: முன்னரே தீர்மானிக்கப்பட்ட பங்கின் விலையில் வாங்கும் மற்றும் விற்கும் கட்டளையினை மேற்கொள்வது.

### 3. பங்கு விலை

பங்கின் விலைகள் நிரம்பல் மற்றும் கேள்வியினால் தீர்மானிக்கப்படுகின்றது. விற்பனைக்கு கிடைக்கத்தக்கவற்றிலும் பார்க்க கம்பனியின் பங்குகளுக்கான கேள்வி கூடுதலாக பெறப்படும்பொழுது கம்பனியின் பங்கு விலைகள் உயர்வடைக்கின்றன. மாறாக, வாங்குபவர்களின் கொள்வனவிற்கான ஈடுபாட்டிலும் பார்க்க கூடுதலான பங்குகள் காணப்படுமாயின் விலைகள் வீழ்ச்சியடையும் மேலும், நாட்டின் நாளாந்த அரசியல் நிலைமைகள் பொருளாதார நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்கள், முக்கிய முகாமைத்துவத்தின் தனி தீர்மானங்கள் மற்றும் கம்பனியின் எதிர்காலம் பற்றிய முதலீட்டாளர் மனோபாவங்களும் கூட விலை தொடர்பான தீர்மானங்களைப் பாதிக்கின்றன.

குறிப்பு: மேலதிகத் தகவல்களுக்கு கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் வெப்தளத்திற்கான கல்விசார் வீடியோக்களைப் பார்வையிடவும்.

### கொழும்பு பங்குப் பரிவர்த்தனைகளின் முதலாந்தரச் சந்தை

முதலாந்தரச் சந்தை என்பது பங்குகள் அல்லது முறிகள் முதற்தடவையாக விற்கப்படும் இடமாகும். இது பொதுமக்களுக்கான ஆரம்ப பங்கு வழங்கலினூடாக மேற்கொள்ளப்படுகிறது. கம்பனிக்கு மூலதனத்தினை திரட்டும் தேவை காணப்படும் பொழுது அது பொதுமக்களுக்கான ஆரம்ப பங்கு வழங்கலினூடாக பங்குச் சந்தைக்கு புதிய பங்குகளை வழங்கமுடியும். பெறுகைகள் உரிய கம்பனிக்கு போய்ச் சேர்ந்துவிடும். இப்பணத்தினை கம்பனியின் தற்றுணிவிற்கேற்ப மூலதன விரிவாக்கம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அல்லது படுகடன் மீள்கொள்வனவு போன்ற பல்வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்த முடியும்.

முதலாந்தரச் சந்தையில் பங்குகளின் விற்பனையாளராக குறிப்பிட்ட பங்குகளை வழங்கும் கம்பனியே இருக்கும்.

அவர்கள், ஆரம்ப பங்கு வழங்கல் விலைகளில் பங்குகளை வாங்கி, ஆரம்ப பங்குவழங்கலின் பின்னர் பங்குகளின் விலைகள் உயர்வடையுமிடத்து அத்தகைய பங்குகளை இரண்டாம் பங்குதரச் சந்தையில் விற்பனை செய்து இலாபமடையமுடியும்.

முதலீட்டு வங்கி ஆரம்ப பங்குவழங்களுக்காக அடிக்கடி மூலதனத்தினை வழங்குகிறது. இங்கு முதலீட்டு வங்கி கம்பனி ஓரளவு மூலதனத்தினைப் பெறுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் எஞ்சிய இருப்புக்களை வாங்கி மீள விற்பனை செய்கிறது. இது பொதுமக்களுக்கான ஆரம்ப வழங்களினூடாக மூலதனத்தினைத் திரட்டும் கம்பனிகளின் இயலாமையின் இடர்நேர்வினை குறைத்துவிடுகின்றது.

### கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் இரண்டாந்தரச் சந்தை

இரண்டாந்தரச் சந்தையில் முதலீட்டாளர்கள் ஏற்கனவே தாம் வைத்திருக்கும் பங்குகளை வாங்கவும் விற்கவும் முடியும்.

ஆரம்ப பங்குவழங்கலில் கொள்வனவு செய்யப்பட்ட பங்குகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை போன்ற பங்குப் பரிவர்த்தனையில் விற்பனையைத் தொடங்குகின்றன. வேறுபட்ட முதலீட்டாளர்கள் தம்மிடையே இப்பங்குகளை வாங்கவும் விற்கவும் முடியும். விலை குறைவாக இருக்கும்போது பங்குகளை வாங்கி விலை உயர்வாக இருக்கும் போது அதனை விற்கும் பொழுது இலாபம் அடையப்படுகிறது. இது மூலதன இலாபம் என அழைக்கப்படுகிறது. இது பங்குகளின் தேறிய கொள்வனவிற்கும் தேறிய விற்பனைக்குமிடையிலான நேர்க்கணிய வேறுபாடாகும்.

இரண்டாந்தரச் சந்தையில் பங்குகளின் விலைகள் நிரம்பல் மற்றும் கேள்வியின் அடிப்படையில் தளம்பலடைகின்றன. கம்பனியின் செயலாற்றும், சந்தை நிலைமைகள் மற்றும் பொருளாதாரக் குறிகாட்டிகள் போன்ற காரணிகளின் தாக்கமும் இவ்விலைகளை நிர்ணயிக்கின்றன.

இரண்டாந்தரச் சந்தை முதலீட்டாளர்களின் முதலீடுகளின் திரவத் தன்மையினை உறுதிப்படுத்துவதன் மூலம் முதலீட்டாளர்கள் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட திகதி வரும்வரை பங்குகளை வைத்திருக்காமல் பங்குகளை விரைவாக வாங்கவும் விற்கவும் அனுமதிக்கிறது. இது முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளை விரைவாக காசாக்கிக் கொள்வதனை இயலுமைப்படுத்துகிறது. கம்பனி இரண்டாந்தரச் சந்தையினூடாக பங்குகளை விற்பனை செய்வதிலிருந்தும் பணத்தினைப் பெற்றுக்கொள்வதில்லை.

**முதலாந்தரச் சந்தைக்கும் இரண்டாந்தரச் சந்தைக்குமிடையிலான முக்கியமான வேறுபாடுகள்**

| கூறுகள் | முதலாந்தரச் சந்தை | இரண்டாந்தரச் சந்தை |
|---|---|---|
| குறிக்கோள் | புதிய பிணக்குகளை/ பங்குகளை விற்றல் | ஏற்கனவே வழங்கப்பட்ட பிணையங்கள்/ பங்குகளை வாங்குதல் மற்றும் விற்றல் |
| மூலதனப் பாய்ச்சல் | நிதியம் நேரடியாக கம்பனிக்கு செல்கிறது | கம்பனிக்கு நிதிப் பாய்ச்சல் இல்லை. நிதியம் முதலீட்டாளர்களிடையே பரிமாற்றிக் கொள்ளப்படுகிறது |
| விலையைத் தீர்மானித்தல் | கம்பனியினாலும் ஒப்புறுதியாளர்களினாலும் தீர்மானிக்கப்படுகிறது | சந்தை விசைகளினால் தீர்மானிக்கப்படுகிறது (நிரம்பல் மற்றும் கேள்வி) |
| முதலீட்டாளர்களின் எதிர்வினையாற்றல் | முதலீட்டாளர்கள் கம்பனியிடமிருந்து நேரடியாக வாங்குகிறார்கள் | முதலீட்டாளர்கள் தம்மிடையே வர்த்தகம் செய்கின்றனர். |

## கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் முதலீடு செய்வதற்கான வழிகாட்டல்

**முதலாந்தர சந்தையில் புதிய பங்கு வழங்கல்களிலிருந்து (பொதுமக்களுக்கான ஆரம்பப் பங்கு வழங்கல்)**

- பங்குகளை வாங்க விரும்புகின்ற முதலீட்டாளரொருவர் பங்குத் தரகர் அல்லது கட்டுக்காப்பு வங்கியொன்றினூடாக மத்திய வைப்பக முறைமையில் பிணையங்கள் கணக்கொன்றினை திறத்தல் வேண்டும்.
- இங்கு அநேக உரிமம்பெற்ற வங்கித் தரகு நிறுவனங்கள் காணப்படுகின்றன: CSE - Co https://www.cse.lk/pages/trading-members/trading-members.component.html)
- வாடிக்கையாளர் கணக்கு திறத்தல் படிவங்களை சரியான முறையில் பூர்த்திசெய்து தொடர்பான நிரூபண ஆவணங்களுடன் (தேசிய அடையாள அட்டைப் பிரதி மற்றும் பட்டியல்களின் சான்றுகள்) பங்குத் தரகர்களிடம் அல்லது கட்டுக்காப்பு வங்கியிடம் சமர்ப்பித்தல் வேண்டும். சமர்ப்பிப்பதற்கு முன்னர் படிவத்திலுள்ள உள்ளடக்கத்தினை வாசித்து விளங்கிக் கொள்ளவும்
- மத்திய வைப்பக முறைமை, வாடிக்கையாளர் கணக்கு இலக்கத்தினை உருவாக்கும். மத்திய வைப்பக முறைமை கணக்கு திறக்கப்பட்டமையினை உறுதிப்படுத்தும் விதத்தில் பங்குத் தரகர்களுக்கு அல்லது கட்டுக்காப்பு வங்கி அவற்றை சமர்ப்பிக்கும்.
- கம்பனியொன்று பொதுமக்களுக்கான ஆரம்ப பங்குவழங்குநர்களினூடாக பங்குகளை வழங்க விரும்பும்பொழுது சாத்தியமான முதலீட்டாளர்களுக்காக செய்தித்தாள்கள், வெப்தளங்கள், வானொலி அலைவரிசைகள், தொலைக்காட்சிகளினூடாக விளம்பரங்களைச் செய்யும்.
- கம்பனிகள் “வாய்ப்புக்கள்” என அழைக்கப்படும் சிற்றேடொன்றினை பங்குவழங்கல்களுக்காக வெளியிடும். இதில் கம்பனி பற்றிய தகவல்கள் நிதியியல் நிலைமை திட்டங்கள் மற்றும் சலுகை என்பன உள்ளடக்கப்பட்டிருக்கும்.
- “வாய்ப்பு” ஒன்றினை, செலவுகளேதுமின்றி பங்குத்தரகர்/ கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் வழங்கல் முகாமையாளர், அதன் கிளைகள் மற்றும் வெப்தளம்/ வழங்கலுக்கான வங்கியாளர்/ பங்குகளை முன் வைக்கும் கம்பனி அல்லது கம்பனி குறிக்கின்ற இடங்களில் வழங்கல் திறக்கப்படுகின்றமைக்கு முன்னர் பெற்றுக் கொள்ளமுடியும்.
- பொதுமக்களுக்கான ஆரம்ப பங்குவழங்கல்களில் பங்குகளை கொள்வனவு செய்வதற்கு விண்ணப்பிப்பவர்கள் 18 வயதிற்கு மேற்பட்ட முதலீட்டாளர்களாக இருத்தல் வேண்டும்.
- “வாய்ப்பு” ஒன்றினை மிகக் கவனமாக வாசித்தல் வேண்டும் என்பதுடன் பங்குகளை கொள்வனவு செய்வதற்கான விண்ணப்பம் துல்லியமாகவும் தெளிவாகவும் பூர்த்தி செய்யப்படல் வேண்டும் அவசியமான விடத்து ஆலோசனைக்காக நிபுணரொருவருடன் ஆலோசிக்கலாம். விண்ணப்பப்படிவத்தில் உங்கள் மத்திய வைப்பக முறைமையின கணக்கு இலக்கத்தினையும் அடையாள அட்டை இலக்கத்தினையும் குறிப்பிடுவதற்கு மறக்க வேண்டாம் என்பதுடன் விண்ணப்பப் படிவத்தில் உங்கள் கையொப்பத்தினை இடவும் மறக்க வேண்டாம்.
- இப்படிவத்தினை தொடர்பான கம்பனி, வங்கித் தரகர்களுக்கு கட்டுக்காப்பு வங்கி அல்லது முகாமையாளருக்கு முகவரியிட்டு சேரவேண்டிய தொகைக்கு காசோலை அல்லது வங்கி வரைவு மூலமாக நேரடியாக அனுப்பி வைத்தல் வேண்டும். உதாரணமாக பங்கொன்றின் வழங்கல் விலையான ரூ.20.00 இல் 100 பங்குகளை கோருவீர்களாயின் நீங்கள் காசோலையினை∴ வரைவினை ரூ.2,000 இற்கு எழுதுதல் வேண்டும்.
- “வாய்ப்புக்கள்” திறக்கும் மற்றும் மூடும் நாட்களின் பங்கு வழங்கல் பற்றி குறிப்பிடும். விண்ணப்பப்படிவமும் காசோலை∴ வங்கி வரைபும் வழங்கல் முடிவுத்திகதிக்கு முன்னர் அனுப்பப்பட்டமையினை உறுதிப்படுத்தவும். முன்வைக்கப்பட்ட பங்குகளில் பார்க்க கூடுதலான வாங்குநர்களை கொண்டிருக்குமாயின் பங்குவழங்கல் திறந்த நாளிலே மூடப்படும்.
- பங்கு வழங்கல் மூடப்பட்டதனை உடனடுத்து கம்பனி பங்குகளுக்கான கேள்வியை மதிப்பீடு செய்யும், கம்பனி ஆரம்பத்தில் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டதிலும் பார்க்க கூடுதலான பங்குகளை முதலீட்டாளர்கள் கேட்பார்களாயின் (அதாவது மேலதிக உதவப்படும் சந்தர்ப்பங்களில்) அச்சந்தர்ப்பத்தில் கம்பனி அவர்களுக்கு எந்த வழியில் பங்குகளை விநியோகிக்க முடியும் என்பதனை அறிவிக்கும்.
- ஒதுக்கப்பட்ட பங்குகள் விண்ணப்பதாரியின் மத்திய வைப்பக முறைமைக் கணக்கில் இலத்திரனியியல் ரீதியாக வரவு வைக்கப்படும்.
- ஆரம்பப்பங்கு வழங்கல் முழுமையாக விற்றுத்தீர்ந்திருப்பதன் காரணமாக விண்ணப்பம் ஒரு பகுதிக்காக மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்குமிடத்து, மீளளிப்புக் கொடுப்பனவு விண்ணப்பதாரியினால் குறித்துரைக்கப்பட்டவாறு மேற்கொள்ளப்படும். உதாரணமாக பங்கொன்று ரூ.20.00 படி 1000 பங்குகளுக்கு நீங்கள் விண்ணப்பித்திருப்பின் (மொத்தப் பெறுமதி 20,000) மேலதிகமாக உதவப்பட்டமையின் காரணமாக நீங்கள் 600 பங்குகளை மட்டுமே பெறக்கூடும். கம்பனி 400 பங்குகளை (ரூ.8000) ஒதுக்கு பட்டியலின் முடிவுத் திகதி நீங்கலாக, முடிவடைந்த 10 சந்தை நாட்களுக்குள் (வேலைநாட்கள்) மீளளித்தல் வேண்டும்.
- அதன் பின்னர் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை பங்குளின் முதலாவது வர்த்தகப்படுத்தல் நாளினை அறிவிக்கும் பங்குகளின் வர்த்தகப்படுத்தல், ஆரம்ப பங்குவழங்கல் மூடப்பட்டதன் பின்னர் சந்தை நாட்களில் (வேலைநாட்கள்) தொடங்கும்.
- பங்குடமையாளர் தனது பங்குகளை விற்பதற்கு விரும்புவராயின் அவர் பங்குகள் பட்டியலிடப்பட்டதும் பங்குதாரர்களை தொடர்புகொண்டு பங்குகளை விற்பனை செய்வதற்கான அறிவுறுத்தல்களை வழங்கலாம்.
- முதற்தடவை முதலீட்டாளர்கள் ஆரம்ப பங்கு வழங்கலொன்றில் பங்குகளுக்கு விண்ணப்பிப்பதற்காக பங்குச் சந்தைக்கு வருகை தருவர். புதிதாக வருவோர் வியாபாரச் சூழல், நடப்பு முகாமைத்துவம், வரி ஊக்குவிப்புக்கள் எதிர்கால வருவாய்கள் மற்றும் பட்டியலிடவுள்ள கம்பனியின் மதிப்பீடு என்பனவற்றில் கவனம் செலுத்துதல் வேண்டும். இத்தகவல்களை முதலீட்டு ஆலோசனையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

### இரண்டாந்தரச் சந்தையில் பங்குகளை வாங்குதல் மற்றும் விற்றல்

இது, முதலாந்தர சந்தையின் ஆரம்ப வழங்கலுக்குப் பின்னர் முதலீட்டாளர் மற்றொரு முதலீட்டாளரிடமிருந்து பங்குகளை வாங்குவது அல்லது அவருக்கு விற்பனை செய்வதற்கான ஒரு சந்தையாகும். பங்கு தரகர்∴ கட்டுக் காப்பாளர்களூடாக மத்திய வைப்பக முறைமைக் கணக்குகளை திறப்பதற்காக அவர்களை கண்டுபிடித்தல் வேண்டும்.

### பங்குத் தரகர்களுடன் நீங்கள் எவ்வாறு கட்டளைகளை மேற்கொள்வது?

- ஏந்த ஒரு முதலீட்டாளரும் பங்குத் தரகர் கம்பனிகளூடாக ஒன்று அல்லது கூடுதலான மத்திய வைப்பக முறைமைக் கணக்குகளைப் பேணமுடியும்.
- பங்குத்தரகர் கம்பனி நீங்கள் பங்குகளை வாங்குவதற்கு/ விற்பனை செய்வதற்கு உங்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக முதலீட்டு ஆலோசனைகளையாளரை ஒதுக்கும்.
- நீங்கள் "சான்றுபடுத்தப்பட்ட முதலீட்டு ஆலோசனையாளர்" உடன் மாத்திரம் தொடர்பு கொள்வதனை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் அனைத்து முதலீட்டு ஆலோசனையாளர்களும் இத்தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.
- இரண்டாந்தரச் சந்தையில் வர்த்தகப்படுத்துவதற்காக நீங்கள் உங்கள் தரகரை தொலைபேசி, தொலைநகல், மின்அஞ்சல், நேரடியாக விஜயம் செய்தல் அல்லது இணையத்தளமூடாக தொடர்வுகொள்ளலாம்.
- நீங்கள் உங்கள் பங்குத்தரகரிடம் (முதலீட்டு ஆலோசகர்) கம்பனியின் பெயர், விலை மற்றும் நீங்கள் வாங்கவேண்டிய/ விற்கவேண்டிய பங்குளின் எண்ணிக்கை போன்றவற்றை வழங்கவேண்டும். முதலீட்டு ஆலோசனையாளர் எதனை வாங்க வேண்டும்/ விற்க வேண்டும் என்பது பற்றி உங்களுக்கு ஆலோசனை வழங்குவார்.
- முதலீட்டு ஆலோசகர் உங்கள் கட்டளைகளை சமர்ப்பிப்பார் எனினும் முதலீட்டாளர் வாங்கல்/ விற்றல் பற்றி தீர்மானித்தல் வேண்டும்.
- கட்டளை செய்முறைப்படுத்தப்பட்டதும் தேவைப்படுத்தப்பட்ட விலையில் கொள்வனவு செய்யக்கூடிய பங்குகள் பற்றி அவர் அறிவிப்பார்.
- கட்டளை நிறைவேற்றப்பட்டதும் நீங்கள் தரகரிடமிருந்து வாங்கிய/ விற்ற பங்குகளை நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள். இவ்வாவணம் உங்கள் ஒப்புதலுடன் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்களை உறுதிப்படுத்தும்.
- அடுத்த வர்த்தகப்படுத்தல் அமர்விற்கு முன்னதாக, தரகர் வாங்கப்பட்ட/ விற்கப்பட்ட குறிப்புக்களை வாடிக்கையாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.
- வாங்குநர் கொள்வனவின் பின்னர் 3 வேலைநாட்களுக்குள் (T+3) வாங்கிய பங்குகளுக்கான கொடுப்பனவினை செய்தல் வேண்டும். முதற்தடவையாக முதலீட்டாளர் பங்குகளை கொள்வனவு செய்வதற்கு முன்னதாக முற்பணமாக கொடுப்பனவுகளை செய்ய வேண்டியிருக்கும். விற்பனையாளர், விற்பனையின் பின்னர் 3ஆவது வர்த்தகப்படுத்தல் நாளன்று விற்றபங்குகளுக்கான கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வார்.
- எவரேனும் முதலீட்டாளர் அவரது தரகரை கொடுப்பனவுகள் ஏதுமின்றி வைப்பக முறைமையினூடாக மாற்றிக் கொள்ள முடியும்.
- பங்குகளை வாங்கியதன் பின்னர் முதலீட்டாளர் விரும்பிய காலப்பகுதிக்கு அப்பங்குகளை நிறுத்தியும் வைக்கமுடியும். முதலீட்டாளர் விற்கும் விலையினையும் விற்பதற்கான தீர்மானத்தினையும் தீர்மானிக்கின்றார். இத்தீர்மானத்திலிருந்து உமக்கு உதவுவதற்கு உங்கள் பங்குத்தரகரிடமிருந்து ஆராய்ச்சி அறிக்கையினைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- மத்திய வைப்பக முறைமை, குறிப்பிட்ட மாத காலப்பகுதியில் (மாதாந்தக் கூற்று) அத்தகைய கணக்குகள் செயற்பட்டிருப்பின் கணக்குடமையாளருக்கு மாதாந்தக் கூற்றுக்களை அனுப்பி வைத்தல் வேண்டும். மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் செயற்படுகின்ற கணக்கு குறைந்தபட்சம் ஒரு கொடுக்கல் வாங்கலையாவது கொண்டிருத்தல் வேண்டும். (கொள்வனவு/ விற்பனை/ வைப்பு/ எடுப்பனவு/ மாற்றல்)
- நீங்கள் கிரமமான முறையில் பங்கு விலைகளை பரிசோதித்து பார்த்தல் வேண்டுமென்பதுடன் சந்தை நடவடிக்கையினையும் அவதானித்தல் வேண்டும். நீங்கள் பங்குத் தரகருக்கு அழைப்புக்களை ஏற்படுத்துவதன் மூலமும் நாளாந்த செய்தித் தாள்களை பார்ப்பதன் மூலமும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையினை அணுகுவதன் மூலமும் றறற.உளந.டம அல்லது உங்கள் பங்குத் தரகரின் வெப்தளத்தினை அணுகுவதன் மூலமும் அல்லது மாத்தளை, கண்டி, குருநாகல், நீர்கொழும்பு, அனுராதபுரம், யாழ்ப்பாணம், இரத்தினபுரி மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய இடங்களிலுள்ள பங்குத்தரகர்கள் கிளைகளுக்கும் நீங்கள் விஜயம் செய்வதன் மூலமும் பெற்றுக்கொள்ளலாம்.
- முதலீட்டு ஆலோசகர் உங்களது அறிவுறுத்தல் இல்லாமல் பங்குகளை வாங்கவோ/ விற்கவோ முடியாது. ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின் பங்குத் தரகரும் கம்பனியின் இணங்குவிப்பு அலுவலரை உடனடியாகத் தொடர்பு கொள்வதனை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

## படுகடன் பிணையங்களில் முதலீடு செய்தல்

### முதலீட்டிற்காக கிடைக்கத்தக்க படுகடன் பிணையங்கள் யாவை?

**முக்கியமாக இரண்டு வகையான படுகடன் பிணையங்கள் கிடைக்கின்றன:**

1. கம்பனிச் சபைகளினால் வழங்கப்படும் படுகடன் பிணையங்கள்
2. அரசாங்கத்தினால் வழங்கப்படும் படுகடன் பிணையங்கள்

### கம்பனி சபைகளினால் வழங்கப்படும் படுகடன் பிணையங்கள்

#### கம்பனி முறிகள்

கம்பனி முறிகள் நடுத்தர கால அல்லது நீண்டகால கம்பனி முறிகளாக காணப்படுவதுடன் வழங்குனர் முதிர்ச்சியின் போது வட்டியையும் முதல் தொகையினையும் மீளளிப்பதற்கும் கடப்பாடுடையவராவார். சொத்துக்களினால் பிணையிடப்படாத கம்பனி முறிகள் தொகுதிக்கடன்கள் என அழைக்கப்படுகின்றன.

#### கம்பனித் தொகுதிக் கடன்கள்

தொகுதிக் கடன்கள் என்பது பிணையிடப்படாதது. நடுத்தர அல்லது நீண்ட காலத்தினைக் கொண்டது. வட்டியை உழைக்கும் இம்முறிகள் கம்பனிகள், வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களினால் வழங்கப்படுவதுடன் வழங்குனரின் பொதுவான கடனின் மூலமே உத்தரவாதப்படுத்தப்படுகின்றன. பாரிய, நன்கு நிறுவனப்பட்ட நிறுவனங்களே பொதுவாக தொகுதிக் கடன்களை வழங்குகின்றன. தொகுதிக் கடன் உடமையாளர்கள் கடன்வழங்குவோராக கருதப்படுவதுடன், வழங்கும் கம்பனி ஒடுக்கிவிடப்படும் சந்தர்ப்பமொன்றில் பங்குடமையாளர்களுக்கு முன்னதாக கொடுப்பனவுகளைப் பெற உரித்துடையவர்களாவர்.

#### வர்த்தக பத்திரச் சந்தை

வர்த்தகப் பத்திரங்கள் குறுங்காலத்தினை கொண்டவை: பிணையுறுதிப் படுத்தப்படாதவை, படுகடன் பிணையங்களாக இருப்பதுடன் இவை நிதிகளை திரட்சிப்படுத்துவதற்காக தனியார் துறைக் கம்பனிகளினால் வழங்கப்படுவதுடன் அவை வங்கிகளினாலும் ஏனைய நிதியியல் ஏற்பாட்டாளர்களினாலும் பயன்படுத்தப்படுகின்றன. வர்த்தகப் பத்திரங்கள் பொதுவாக நம்பகத் தன்மை கொண்ட (உயர்தரமிடப்பட்டவை) நிறுவனங்களினால் பாரிய பெறுமதி இலக்கங்களில் வழங்கப்படுவதுடன் மேலதிக வங்கிக் கொடுப்பனவு உத்தரவாதங்களையும் கொண்டுள்ளன. வர்த்தகப் பத்திரங்கள் வழமையாக கழிவிடலிலும் விற்கப்படுகின்றன எனினும் சில வட்டியைக் கொண்டனவாகும்.

## கம்பனிப் படுகடன் பிணையங்களில் முதலீடு செய்வதிலுள்ள நன்மைகள்

- காலாந்தர வட்டிக் கொடுப்பனவுகளின் மூலம் முதலீட்டாளர்கள் நிலையான வருமான வருவாய்களை பெறுகின்றனர்.
- அவர்களுக்கு வேறுபட்ட முதிர்ச்சிக் காலங்களுடனும் இடர்நேர்வு தோற்றப்பாடுகளுடன் கூடிய பன்முகத் தன்மை கொண்ட முதலீடுகளுக்கான வாய்ப்புக்கள் வழங்குகின்றன.
- முதலீட்டாளர்கள் உயர்ந்த விளைவினைக் கொண்டிருக்க முடியுமெனினும் பிணையங்களிலும் பார்க்க உயர்ந்த இடர்நேர்வினைக் கொண்டிருப்பர்.

## கம்பனி முறிகளில் முதலீடு செய்வதற்கான வழிகாட்டல்

கொழும்பு பங்கு பரிவர்த்தனை முதலீடுகளை போன்றது.

## அரசாங்கத்தினால் வழங்கப்படும் படுகடன் பிணையங்கள்

### திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள்

இலங்கை அரசாங்கம் வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்காக, உள்நாட்டு நாணய படுகடன்களை, முக்கியமாக குறுங்காலப் படுகடன் சாதனங்களான நடுத்தர மற்றும் நீண்டகாலப் படுகடன் சாதனங்களான திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளினூடாக திரட்டுகின்றது.

திறைசேரி உண்டியல் சந்தை உள்நாட்டு நாணயச் சந்தையின் ஒரு பகுதியாகும். உயர்ந்த திரவத்தன்மைப் பிணையங்களைக் கொண்ட திறைசேரி உண்டியல் திரவத் தன்மையின் மாற்று மூலமொன்றினை வழங்குகின்ற வேளையில் முதலீட்டின் மீது வருவாயினையும் உருவாக்குகிறது. ஆகவே திறைசேரி உண்டியல் சந்தையில் காணப்படும் வட்டிவீத அசைவு குறுங்கால படுகடன் சந்தைக்கான அடித்தள அளவீட்டு குறிகாட்டியினை வழங்குகிறது. மேலும் அளவிலும் திறைசேரி உண்டியல் சந்தை வட்டி வீதங்களிலும் ஏற்படும் மாற்றங்கள் நிதியியல் நிறுவனங்களின் செலவுகள், இலாபத்தன்மை மற்றும் திரவத்தன்மை என்பன மீது தாக்கத்தினைக் கொண்டிருக்கும்.

மத்திய வங்கி திறந்த சந்தை தொழிற்பாடுகளின் கீழ் திறைசேரி உண்டியல்களையும் முறிகளையும் பிணைஉறுதிகளாக ஏற்றுக்கொள்கிறது. மேலும் ஒழுங்குமுறைப்படுத்துனர் பொருளாதார உறுதிப்பாட்டினை அதிகரிப்பதற்கு நிதியியல் நிறுவனங்கள் செலுத்தத் தவறும் இடர்நேர்வற்ற முதலீடுகளுக்கு கணிசமான விதத்தில் வெளிப்படுத்தலை பேணவேண்டும் எனக்கேட்டுக்கொண்டது. மீள்கொடுப்பனவுடன் பின்னிப் பிணைந்து காணப்படும் உத்தரவாதத்தின் காரணமாக திறைசேரி உண்டியல்களும் திறைசேரி முறிகளும் செலுத்தத்தவறும் இடர்நேர்வற்றவனவாக கருதப்பட்டுவருவதனால் அவற்றின் முக்கியத்துவம் மேலும் வலுவடைந்திருக்கிறது. திறைசேரி உண்டியல்களும் முறிகளும் நாளாந்த சந்தை சொற்பதத்தில் அரச பிணையங்கள் என அழைக்கப்படுகின்றன.

### திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகள் சந்தை

இலங்கை அரசாங்கம் வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்காக முக்கியமாக உள்நாட்டு நாணயப் படுகடன்களை திரட்டுகிறது.

- திறைசேரி உண்டியல்கள் குறுங்காலப் படுகடன் சாதனங்களாக காணப்படுவதுடன் 1923ஆம் ஆண்டில் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச்சட்டத்தின் (திருத்தப்பட்டவாறு) கீழ் வழங்கப்படுகிறது.
- திறைசேரி முறிகள் நடுத்தரத்திலிருந்து நீண்ட கால படுகடன் சாதனங்களாக இருப்பதுடன் இது 1937 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறு) கீழ் வழங்கப்படுகிறது.

இலங்கை அரசாங்கத்தின் முகவர் என்ற ரீதியில் இலங்கை மத்திய வங்கி திறைசேரி உண்டியல் மற்றும் முறிகளின் வழங்கல்களுக்குப் பொறுப்பாக இருப்பதுடன் அதே போன்று வட்டி ∴ கூப்பன் கொடுப்பனவுகள் மற்றும் முதிர்ச்சியிலான கொடுப்பனவுகள் உள்ளிட்ட படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுடன் இணைந்த கொடுப்பனவுகளுக்கும் பொறுப்பானதாகும்.

திறைசேரி உண்டியல் சந்தை உள்நாட்டுப் பணச் சந்தைகளின் ஒரு பிரிவாகும்.திறைசேரி உண்டியல்களின் உயர்திரவத்தன்மை நிலையானது முதலீட்டாளர்களுக்கு திரவத்தன்மையின் மாற்று மூலமொன்றினை வழங்குகின்ற வேளையில் முதலீட்டின் மீது வருவாயினையும் ஊக்குவிக்கின்றது. ஆகவே திறைசேரி உண்டியல் சந்தையின் வட்டிவீத அசைவுகள் குறுங்கால கொடுகடன் சந்தைக்கான அடித்தள அளவுக்குறியீடொன்றினை வழங்குகின்றன. மேலும் திறைசேரி உண்டியல் சந்தையின் அளவுகளிலும் வீதங்களிலும் ஏற்படும் மாற்றங்கள் நிதியியல் நிறுவனங்களின் செலவு, இலாபத்தன்மை மற்றும் திரவத்தன்மை என்பன மீது தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

அரசாங்கத்தின் இயல்பான மீள்கொடுப்பனவு உத்தரவாதத்தின் காரணமாக திறைசேரி உண்டியல்களும் முறிகளும் செலுத்தத் தவறும் இடர்நேர்வுகளற்றனவாக காணப்படுகின்றன.

### இலங்கையில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் பண்புகள்

திறைசேரி உண்டியல்கள் 91 நாள், 182 நாள் மற்றும் 364 நாள் முதிர்ச்சிகளுடன் (முதலாந்தர ஏலங்களில் வழங்கப்பட்ட நியம முதிர்ச்சிகள்) வழங்கப்படுகின்ற வேளையில் திறைசேரி முறிகள் 1923 ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2-30 ஆண்டுகள் வரையான முதிர்ச்சிகளில் வழங்கப்படுகின்றன.

- திறைசேரி உண்டியல்கள் பொதுவாக கழிவிடலில் வழங்கப்படுவதுடன் முதிர்ச்சியில் முகப்புப் பெறுமதியில் மீளச் செலுத்தப்படுகின்றன.
- திறைசேரி முறிகள் அரையாண்டு கூப்பன் கொடுப்பனவுகளை கொண்டிருப்பதுடன் முதிர்ச்சியில் முகப்புப் பெறுமதியில் மீளச்செலுத்தப்படுகின்றன.
- திறைசேரி முறிகள் கழிவிடல், சமப்பெறுமதி அல்லது கட்டணத்தில் வழங்கப்பட முடியும்.
- சந்தை நிலவுகின்ற விளைவுவீதங்களினால் நிர்ணயிக்கப்படுகின்றது.
- இரண்டாந் தரச் சந்தையில் வர்த்தகப்படுத்தத்தக்கவை
- பத்திரங்களற்ற வடிவத்தில் வழங்கப்படுகின்றன.
- குறுங்கால நிதி திரட்டலுக்கான பிணையுறுதிகளாகவுள்ளன.

### திறைசேரி உண்டியல் மற்றும் முறிகளில் முதலீடு செய்வதிலுள்ள நன்மைகள்

- இது நாட்டினால் அல்லது அரசாங்கத்தினால் வழங்கப்படுவதன் காரணமாக செலுத்தத் தவறும் இடர்நேர்வு அற்றது எனக் கருதப்படுகிறது.
- திறைசேரி உண்டியலும் திறைசேரி முறிகளும் இரண்டாந்தரச் சந்தையில் வர்த்தகப்படுத்தத்தக்கவையாக இருப்பதனால் அவை உயர்ந்தளவிற்கு திரவப் பணச்சந்தை சாதனங்களாக காணப்படுகின்றன. வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் பெறப்படும் அனைத்து வட்டி பெறுகைகளும் முதிர்ச்சிப் பெறுகைகளும் முழுமையாக அவர்களின் தாய்நாட்டிற்கு அனுப்பப்படத்தக்கவையாகும்.

- கூட்டு முயற்சிகளை கொண்டிருப்பதற்கான சாத்தியங்களும் காணப்படுகின்றன.
- தற்போதைய சட்டங்களின் கீழ் அரச பிணையங்கள் பிடித்து வைத்தல் வரிக்கு உட்பட்டிருக்கவில்லை.
- இலங்கை மத்திய வங்கி இம்முதலீடுகளை மதிய வைப்பக முறைமையில் பாதுகாப்பாக பதிவு செய்கின்றதுடன் தன்னியக்கப்படுத்தப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்கள் முறைமையுடன் இணைக்கப்படுகின்றன.
- திறைசேரி உண்டியல்களையும் திறைசேரி முறிகளையும் எந்தவொரு நேரத்திலும் இரண்டாந்தரச் சந்தையிலிருந்து முதனிலை வணிகர்களூடாக, அல்லது உரிமம்பெற்ற வங்கிகளூடாக கொள்வனவு செய்யமுடியும். முதனிலை வணிகர்கள் முதலாந்தரச் சந்தையூடாக (ஆரம்ப வழங்கல்) அரச பிணையங்களின் வழங்கலுக்கு சந்தா வழங்குவதற்காக இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்படுகின்றனர். முதலாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களினதும் திறைசேரி முறிகளிலும் முதலீடு செய்ய விரும்பும் ஏனைய ஆட்கள் முதனிலை வணிகர்களூடாக விலைக்குறிப்பீடுகளை செய்வதன் மூலம் அவ்வாறு செய்யலாம்.
- பிணையங்கள் கணக்கொன்றினை மத்திய வைப்பக முறைமையில் (பரிவு செய்தல்) மத்திய வைப்பக முறைமையின் வணிகர் நேரடி பங்கேற்பாளர்களினால் முதலீட்டாளர் / முதலீட்டாளர்களின் பெயர்களில் உருவாக்கப்படுதல் வேண்டும்.
- திறைசேரி உண்டியல் மற்றும் முறிகளின் வட்டி மற்றும் முதிர்ச்சித் தொகைகள் தொடர்பான வணிகர் நேரடி பங்கேற்பாளர்கள் பேணுகின்ற முதலீட்டாளர் பிணையங்கள் கணக்கினூடாக முதலீட்டாளர் கணக்கிற்கு உரிய திகதியில் வரவு வைக்கப்படுகின்றன.

### திறைசேரி உண்டியல் மற்றும் முறிகள் மீதான தகவல்களைப் பெறுதல்

திறைசேரி உண்டியல் மற்றும் முறிகள் மற்றும் நிலவுகின்ற வட்டிவீதங்கள் தொடர்பாக கிடைக்கத்தக்க விபரங்களை உரிமம்பெற்ற வங்கிகள், முதனிலை வணிகர்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியிலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும். *(Government Securities Market | Central Bank of Sri Lanka).*

## சரியான முதலீட்டினை நீங்கள் தெரிவு செய்வதற்கான 7 ஆலோசனைகள்

**1. உங்கள் நிதியியல் இலக்குகளுக்குப் பொருத்தமான முதலீடுகளை தெரிவு செய்தல்**

உங்கள் நிதியியல் இலக்குகள் குறுங்காலத்திற்கானவையாக இருப்பின் நீங்கள் உயர் திரவத்தன்மையுடன் கூடிய குறுங்கால முதலீடுகளை (உதாரணமாக நிலையான வைப்புக்கள்) தெரிவு செய்தல் வேண்டும். நீண்டகால நிதியியல் இலக்குகளுக்காக குறைந்த திரவத்தன்மை கொண்ட உயர்ந்த வருவாய்களைக் கொண்ட முதலீட்டினை தெரிவு செய்தல் வேண்டும்

**2. முழுமையான உரிய விழிப்புக் கவனத்தினை மேற்கொள்ளுதல்**

நிறுவனமொன்றில் முதலீடு செய்வதற்கு முன்னர் அதன் நிதியியல் உறுதிப்பாடு, இலாபத் தன்மை மற்றும் திரவத்தன்மை, சந்தையின் உள்ளார்ந்த வளம் பணம் மற்றும் சட்ட அந்தஸ்து என்பனவற்றை பரிசோதித்தல் வேண்டும். மேலும் நீங்கள் அவர்களது கடந்த கால அறிக்கைகளை ஆராய்தல் வேண்டும். என்பதுடன் முதலீட்டு உலகத்தில் கடந்த ஆண்டுகளில் அவர்கள் பெற்றிருந்த கீர்த்தி பற்றியும் ஆராய்தல் வேண்டும்.

**3. கொடுகடன் நம்பகத்தன்மையினை மதிப்பிடல்**

தெரிவு செய்யயப்பட்ட முதலீடுகள் குறிப்பாக முறிகள் அல்லது படுகடன் சாதனங்கள் பற்றிய கொடுகடன் தரமிடலைப் பெறுதல் மூடிஸ் எஸ்அன்ட் பி, அல்லது பிட்ஜ் போன்ற முகவர்கள் வழங்குனரின் நிதியியல் கடப்பாடுகளை பூர்த்தி செய்யும் இயலாற்றலை எடுத்துக்காட்டுகின்ற தரமிடலை வழங்குகின்றன. (உயர்ந்த தரமிடல்கள் AAA அல்லது AA - தொடர்பான முதலீடுகள் மிகப் பாதுகாப்பானவையாக கருதப்படுகின்றன. குறைந்த தரமிடல்: உயர்ந்த இடர்நேர்வுகளை எடுத்துக் காட்டுவதுடன் அவற்றை மிக எச்சரிக்கையுடன் அணுகுதலும் வேண்டும்.)

**4. பிணையுறுதியைப் பரிசோதித்தல்**

பாதுகாப்பான முதலீடுகள் அதிகமாக பிணையுறுதியினால் உத்தரவாதப்படுத்தப்படுகின்றன. (பாதுகாப்பான சொத்துக்கள்) செலுத்தத்தவறும்பட்சத்தில் அது முதலீட்டாளர்களை பாதுகாக்கின்றது.

## சரியான முதலீட்டினை நீங்கள் தெரிவு செய்வதற்கான 7 ஆலோசனைகள்

**5. ஒழுங்குமுறைப்படுத்தல் இணங்குவிப்புக்களைச் சரிபார்த்தல்**

உங்கள் முதலீட்டுக் கம்பனி சட்டத்திற்கு மாறான பிணையங்கள் எதனையும் செய்யவில்லை என்பதனை உறுதிப்படுத்துக்கள். இது தொடர்பான அதிகாரிகளினால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு உள்நாட்டுச் சட்டங்களுடனும் ஒழுங்கு விதிகளுடன் இணங்கியிருத்தல் வேண்டும். உதாரணமாக கம்பனியானது பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, கொழும்பு பங்குப் பரிவர்த்தனை அல்லது இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**6. யதார்த்தமற்ற வாக்குறுதிகள் பற்றி கவனமாகயிருங்கள்**

சில முதலீடுகள் வழமைக்கு மாறாக குறைந்த இடர்நேர்வுகளுடன் உயர்ந்த வருவாய்கள் பற்றி வாக்குறுதியளிக்கின்றன. அத்தகைய வாய்ப்புக்கள் மோசடிகளாக அல்லது மறைமுகமான இடர்நேர்வுகளைக் கொண்டிருக்கும். ஆகவே வாக்குறுதியளிக்கப்பட்ட வருவாய்கள் சந்தைச் சராசரியினை விஞ்சியவையாக அல்லது நம்புவதற்கு கடினமானவையாக இருக்கின்றன.

**7. தொழில்சார் நிபுணர்களின் ஆலோசனையினைப் பெறுதல்**

பாதுகாப்பான முதலீடுகள் உங்கள் நிதியியல் குறிக்கோள்களுக்கும் இடர்நேர் தேவைப்பாட்டிற்கும் பொருத்தமாக இருக்கின்றதா என்பதனை மதிப்பிடுவதற்கு நிதியியல் ஆலோசகர்களின் அல்லது தொழில்சார் நிபுணர்களின் உதவியை நாடவும்.

# 3.6 படுகடன் முகாமைத்துவம்

## கற்றல் பெறுபேறுகள்

- படுகடனையும் படுகடனுக்கான தேவைகளையும் அடையாளம் காணுதல்
- படுகடனின் முறைசார்ந்த மற்றும் முறைசாரா மூலங்களை தெரிந்துகொள்ளுங்கள்
- கடன்பாட்டுத் தீர்மானங்களுக்காக பரிசீலிக்கப்பட வேண்டிய காரணிகளை விளங்கிக் கொள்ளுதல்
- வட்டிவீதங்களின் வகையைப் புரிந்துகொள்ளுதல்
- கடன் வழங்குவோரை கேட்க வேண்டிய கேள்விகளைத் தெரிந்து கொள்ளுதல்
- கொடுகடன் அட்டைகள் மற்றும் படுகடன்களை முகாமைப்படுத்துவதற்கான வழிகளைத் தெரிந்துகொள்ளுதல்.
- படுகடன்களை தவிர்ப்பதற்கும் பாதுகாப்பான கடன்பாடுகளுக்கான வழிகளைத் தெரிந்துகொள்ளுதல்.
- சிறந்த படுகடன்களையும் தீய படுகடன்களையும் தெரிந்து கொள்ளுதல்

படுகடன் என்பது நிதியியல் பொறுப்பாகும். இங்கு ஒரு தரப்பினர் பொதுவாக கடன்பாட்டாளர் அல்லது கடன்பெறுபவர் என அழைக்கப்படுபவர். பணத்தினை அல்லது வேறு ஏதேனும் மூலங்களை கடன்வழங்குபவர் அல்லது கொடுகடன் வழங்குபவர் என அழைக்கப்படும் இன்னொரு தரப்பினரிடமிருந்து கடன்பட்ட தொகையினை வட்டியுடன் சேர்த்து இணங்கிக்கொள்ளப்பட்ட காலப்பகுதிக்குள் மீளச் செலுத்தும் வாக்குறுதியுடன் கடன்படுவதாகும். படுகடன் என்பது நடவடிக்கைகளின் மீது அல்லது முதலீடுகளின் மீது செய்வதற்கு போதுமான நிதி உடனடியாக கிடைக்காத போது தனிப்பட்டவர்களினால் வியாபாரங்களினால் அல்லது அரசாங்கத்தினால் பயன்படுத்தப்படுகின்ற இன்றியமையாத கருவியோ ஒன்றாகும்.



ரத்னாயக்க குடும்பத்தினரின் உறுப்பினர்கள் இராப் போசன மேசையில் கலந்துரையாடுவதற்கு தனித்துவமான விடயமொன்று கிடைத்திருக்கிறது.









மேற்குறிப்பிட்ட கலந்துரையாடலில் மனகரி கடன் சுமையின் காரணமாக பிரச்சனையில் மாட்டிக்கொண்ட ஆளைப்பற்றி பேசுகின்றார். படுகடன்கள் எமது அவசர தேவைகளை நிதியிட எமக்கு உதவுகிறது எனினும் இதனை சரியான முறையில் முகாமைப்படுத்தாதுவிடின் நாங்களும் மனகரியின் அலுவலக நண்பரைப் போலவே பிரச்சனைக்குட்பட்டிருப்போம்.

**படுகடனின் கூறுகள்**

**படுகடன்**

**முதல் தொகை**
கடன்பட்ட தொகை

**வட்டி**
கடன்பாட்டிற்கான விலை

**பிணையுறுதி**
கட்டாயமில்லை. ஆனால் கடன் செலுத்தத் தவறுமிடத்து சட்ட நடவடிக்கைக்கு கடன் வழங்கியவருக்கு உதவும்

**மீள்கொடுப்பனவு நியதிகள்**
மீள்கொடுப்பனவு நிபந்தனைகள் கால இடைவெளி மற்றும் முதிர்ச்சித் திகதி

## கடன்பாட்டின் முக்கியத்துவம்

கடன்பாடுகள் தனிப்பட்டவர்களையும் நிறுவனங்களையும் நடைமுறைத் தேவைகளுக்கு எதிர்கால வருமானத்திற்குமிடையிலான இடைவெளியினை நிரப்புவதனை அனுமதிக்கின்றன. எனினும் நிதியியல் இடர்பாடுகளையும் மிகையான வட்டிச்செலவுகளையும் தவிர்ப்பதற்கு கவனமான முகாமைத்துவம் தேவைப்படுகிறது.

### கடன்பாடுகளினால் பூர்த்திசெய்யப்படுகின்ற தேவைகள்

பின்வருவன கடப்பாடுகளின் சில உதாரணங்களாகும்.

#### சொத்தொன்றினை கொள்வனவு செய்தல்

ஆளொருவருக்கு வீடொன்றினை காணியை அல்லது கட்டிடமொன்றினை வாங்கவேண்டும். ஆனால் இதனை முன்கூட்டியே செலுத்துவதற்கு போதியளவு சேமிப்பு அவரிடமில்லை. சொத்தினை கொள்வனவு செய்வதற்கு கடன் வசதியளிக்கிறது. சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு கடன்பாடுகளை பெறுவது சமூகத்தில் இன்று பொதுவான நிகழ்வாகும். ஏனெனில் இது தொடர்பான காலப்பகுதியில் செலவினை பரப்பிக் கொள்வதற்கு தனிப்பட்டவர்களை அனுமதிக்கின்ற வேளையில் பெறுமதிமிக்க சொத்துக்களை பெற்றுக்கொள்ளுவதற்கான நன்மைகளையும் அனுமதிக்கின்றது.

#### கல்விச் செலவுகள்

மாணவரொருவர் புகழ்பெற்ற பல்கலைக்கழகமொன்றில் கல்வி கற்பதற்கு விரும்புகின்றாராயினும் கல்விக்கும் வாழ்க்கைச் செலவிற்கும் நிதி போதுமானதாக இல்லை. மாணவர் கடன் கல்விக்கான தனிப்பட்டவரின் தேவைப்பாட்டிற்கு நிதியளிக்கிறது. ஆகவே கல்விக்கடன் தனிப்பட்டவர்கள் அவர்களது எதிர்கால வருவாய் வாய்ப்புக்களுக்கு நிதியிட உதவுகிறது. இது ஆயுள் காலம் முழுவதும் உயர்கல்வி என்ற ரீதியில் வருவாயினை வழங்குகிறது.

#### அவசியத் தேவைகள்

குடும்பமொன்றின் உறுப்பினருக்கு அவசர அறுவைச் சிகிச்சையொன்று தேவைப்படுகிறது. போதுமான பணமோ அல்லது காப்புறுதி பாதுகாப்போ இல்லாதுவிடின் தனிப்பட்ட கடன் மருத்துவ செலவுகளை ஈடுசெய்யும். ஆனால் இதனை மிகவும் கவனமாக பயன்படுத்தல் வேண்டும் என்பதுடன் நீண்ட கால நிதியியல் சிரமங்களை தவிர்ப்பதற்கு சாத்தியமானளவிற்கு விரைவாக மீளச்செலுத்திவிடுதல் வேண்டும்.

#### வியாபார நிதியிடல்

தொழில் முயற்சியாளரொருவர் அல்லது தொழில்முயற்சியாளராக வரவேண்டும் என விரும்புமொருவர் வியாபாரமொன்றினை ஆரம்பிக்க திட்டமிடுகிறார். ஆனால் சாதனங்களை கொள்வனவு செய்வதற்கும் இடத்தினை வாடகைக்கு பெறுவதற்கும் போதுமான பணமில்லை. நண்பர்கள் மற்றும் குடும்பங்களிலிருந்தான வியாபாரக் கடன்கள் அல்லது கடன்பாடுகள் வியாபாரத்தினை தொடருவதற்கான நிதிக்கான தேவையினை பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கலாம். படுகடன் நிதியிடல் சிறிய வியாபாரச் சொந்தக்களுக்கான சொத்துடமையினை நீர்த்துப்போகவிடாமல் வாய்ப்புக்களை இறுக பற்றிக்கொள்ள அவர்களை அனுமதிப்பதனால் அவர்களுக்கு இது மிக இன்றியமையாத மூலமாக விளங்குகின்றது.

#### ஊர்தியொன்றினைக் கொள்வனவு செய்தல்

தனிப்பட்ட ஒருவருக்கு நம்பகமானதும் சௌகரியமானதுமான போக்குவரத்து தேவையொன்று காணப்படுகின்றதெனினும் விரும்பிய ஊர்தியொன்றினை உடனடியாக கொள்வனவு செய்ய முடிவதில்லை. ஊர்திக்கடனினால் கொள்வனவிற்கு நிதியிடவும் தேவையைப் பூர்த்தி செய்யவும் முடியும். ஊர்தி போன்ற நீண்ட காலப் பாவனைப் பொருட்களுக்குமான கடன்கள் அவற்றின் மூலம் கொள்வனவு செய்யப்படும் சொத்துக்கள் உற்பத்தித் திறனையும் வாழ்க்கைத் தரத்தினையும் மேம்படுத்தும் பொழுது அவை நியாயப்படுத்தப்படுகின்றன.

#### படுகடன் திரட்சி

தனிப்பட்ட ஒருவர் பல்வேறுபட்ட உயர்வட்டியைக் கொண்ட படுகடன் அட்டைகளை வைத்திருக்குமிடத்து, குறைந்த வட்டிவீதத்தில் பெறப்பட்ட படுகடன் திரட்சி கடன்கள் கொடுப்பனவுகளை ஒழுங்குபடுத்தவும் ஒட்டுமொத்த கடன்பாட்டுச் செலவினைக் குறைக்கவும் உதவும். திரட்சிப்படுத்தப்படுகின்ற படுகடன் நிதியிடலை இலகுபடுத்துவதுடன் செலவினைக் குறைக்கின்ற தெனினும் மேலும் நிதியியல் சவால்களை தவிர்ப்பதற்கு ஒழுக்கவியல் சார்ந்த மீள்கொடுப்பனவினைத் தேவைப்படுத்துகின்றது.

#### வாழ்க்கைமுறை செலவுகள் அல்லது கொண்டாட்டங்கள்

சோடியொன்று திருமணத்திற்கு திட்டமிடும்போது, அனைத்து செலவுகளையும் ஈடுசெய்வதற்கு உடனடியாக போதுமானளவு நிதியம் கிடைக்காமல் போகலாம். தனிப்பட்ட கடன் அல்லது கொடுகடன் அட்டையின் பயன்பாடு இந்நிகழ்விற்கான காசுத்தேவைகளைப் பூர்த்தி செய்யும். தற்றுணிபு செலவினங்களுக்கான கடப்பாடுகள் தூண்டுதலளிப்பவனவாக இருப்பினும் எதிர்காலத்தில் தேவையற்ற நிதியியல் சுமைகளை தவிர்ப்பதற்கு மிக எச்சரிக்கையுடன் அணுகப்படல் வேண்டும்.

#### பொருளாதார சரிவுகளைச் சமாளித்தல்

வேலையை இழந்த தனிப்பட்ட நபரொருவர் மீண்டும் அத்தகையதொரு வேலையை பெறும் வரை வாழ்க்கைச் செலவினை ஈடுசெய்வது அவசியமாகும். இவ்விடயத்தில் தொடர் கொடுகடன் அட்டை நாளாந்த செலவுகளை முகாமைப்படுத்தும். குறுங்கால கடன்பாடுகள் நிதியியல் உறுதிப்பாடற்ற தன்மை காணப்படும் காலப்பகுதியில் பாதுகாப்பு வலையமைப்பினை வழங்குமெனினும் மிகப்பொறுப்புடன் முகாமைப்படுத்தப்படல் வேண்டும்.

# படுகடன் மூலங்கள்

## முறைசார்ந்த மூலங்கள்

### நிதியியல் நிறுவனங்கள்

பாரம்பரியமான வங்கிக்கடன்கள் தனிப்பட்ட ஒருவருக்கான மிகப்பொதுவான நிதியிடல் முறைகளில் ஒன்றாகும். கடன்பாட்டாளரின் கொடுகடன் நம்பகத்தன்மை மற்றும் பிணையுறுதிகளின் கிடைப்பனவு என்பனவற்றைப் பொறுத்து இக்கடன்கள் பாதுகாப்பானவை அல்லது பாதுகாப்பற்றவை எனக் கருதப்படமுடியும். கடன்பாட்டாளர் பிணையுறுதி பற்றி நிதியியல் நிறுவுனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தமுடியும். கடன்பாட்டாளருக்குச் சொந்தமான சொத்துக்களின் தன்மையினைப் பொறுத்து அதன் அடிப்படையில் நிதியியல் நிறுவனங்களினால் கடன்வசதிகள் வழங்கப்படும்.

உதாரணமாக இளம்வாலிபர் ஒருவர் உயர் கல்வியில் நிதியிடுவதற்காக அல்லது சிறிய குடித்தொழிலினை அடிப்படையிலும் கொண்ட வியாபாரத்தினைத் தொடங்க பிணையிடப்படாத கடனைப் பெறமுடியும். அனைத்து வங்கிகளும் நிதியியல் நிறுவனங்களும் போட்டித் தன்மை வாய்ந்த வட்டி வீதங்களிலும் நெகிழ்வுத் தன்மை வாய்ந்த மீள்கொடுப்பனவு நியதிகளிலும் பல்வேறு பட்ட கடன் சாதனங்களை வழங்குகின்றன. கடன்பாட்டு வசதிகளை வழங்குகின்ற உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் ஏனைய நிதியில் நிறுவனங்களினதும் பட்டியலைப் பெற மத்திய வங்கியின் வெப்தளத்தினை நீங்கள் பார்வையிட முடியும். (Authorized Financial Institutions | Central Bank of Sri Lanka)

### நுண்பாக நிதி

நுண்பாக நிதி நிறுவனங்கள் பாரம்பரிய வங்கித்தொழில் சேவைகளை அணுகமுடியாத தனிப்பட்டவர்களுக்காக பணியாற்றுகின்றன. இந்நிதிவளங்கள் சிறிய கடன்களை, பொதுவாக பிணையில்லாமல் உண்மையில் தாழ்ந்த வருமானம் பெறுபவர்களுக்கு வழங்குகின்றன. வர்த்தகர்கள் தமது இருப்புக்களை விரிவுபடுத்துவதற்காக அவர்களது வருவாய் வாய்ப்புக்களைக் கணிசமாக உத்வேகப்படுத்துவதற்காக கடன்களை பெறமுடியும். இலங்கை நுண்பாக நிதி நிறுவனங்கள் சேவையாளர் சங்கத்தின் வெப்தளம் (www.microfinance.lk) இலங்கையிலுள்ள அநேக நுண்பாக நிதி நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை தன்னகத்தே கொண்டுள்ளது.

### கடன் அட்டைகள்

நாளாந்த செலவினங்களுக்கும் பாரிய கொள்வவுகளுக்கும் கடன்அட்டைகள் சௌகரியமான நிதியிடல் முறையினை வழங்குகின்றன. எனினும், பொருத்தமான விதத்தில் அதனை முகாமைப்படுத்தாதுவிடின் உயர்வட்டிவீதத்தினைக் கொண்டதாக மாறிவிடும். அட்டை உடமையாளர் கடன்அட்டையினை அவசரகால மருத்துவ செலவினங்களுக்கு பயன்படுத்தலாம் என்பதுடன் மேலதிக விதிப்புக்களை தவிர்ப்பதற்கு வட்டியற்ற காலப்பகுதிக்குள் நிலுவைகளைச் செலுத்திவிடவேண்டும்.

### அரசாங்கத்தினால் நிதியிடப்படுகின்ற கடன்வழங்கல் திட்டங்கள்

குறித்துரைக்கப்பட்ட சமூக அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றுவதற்காக வேறுபட்ட அரசாங்கத்தினால் நிதியிடப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள் அல்லது அரச வங்கிகளின் ஒத்துழைப்புடன் அரசாங்கம் விசேட படுகடன் வசதிகளை நடைமுறைப்படுத்துகிறது. அத்தகைய படுகடன் வசதிகளுக்கு சமுர்த்திக் கடன்கள் ஒரு உதாரணமாகும். அத்தகைய கடன் நிகழ்ச்சித் திட்டங்கள் முக்கியமாக குறிப்பிட்ட வருமான எல்லைகளுக்குள் வரும் அல்லது புவியியல் பிரதேசத்திலுள்ள தனிப்பட்டவர்களுக்கும் குறைந்த வட்டியுடன் கூடிய கடன்களை வழங்குவதனை நோக்கமாகக் கொண்டனவாகும். கடன்பாட்டாளர்கள் உதவுதொகை வழங்கப்பட்ட வட்டிவீதங்களையும் அரச உத்தரவாதங்களையும் பெறமுடியும். எனினும் தகைமைப்பிரமாணம் பொருந்துவதாக இருத்தல் வேண்டும்.

### அடகு வைத்தல்

Borrowing money by pledging gold or jewelry as collateral from financial institutions and other pawning centers widely available all around the island. Pawning provides quick access to funds with relatively low risk; however, the borrower must pay high interest rates and take the risk of losing the pledged items if not repaid at the agreed time.

### தங்கக் கடன்கள்

Gold loans are secured loans where borrowers pledge their gold as collateral. Offered by banks and NBFCs, they provide quick approval, lower interest rates, and flexible repayment options. The loan amount depends on the gold's purity and weight. Since gold holds value, these loans are considered low-risk and accessible.

## முறைசாரா மூலங்கள்

### நண்பர்கள் மற்றும் குடும்பங்கள்

குறிப்பாக, சிறிய தொகைகள் அல்லது அவசிய தேவைகளுக்கு தனிப்பட்ட வலையமைப்பிலிருந்து கடன்படுவது பொதுவானதாகும். நண்பர்கள் குடும்பங்களிலிருந்தான கடன்பாடுகளின் அனுகூலம் யாதெனில் வட்டியோ அல்லது முறையான உடன்படிக்கையோ இல்லாமையேயாகும். எனினும் மீள்கொடுப்பனவு பிழைத்துப் போனால் உறவுமுறை சிரமத்திற்குள்ளாகிவிடும்.

### பணம் கடன் வழங்குனர்கள்

முறைசார்ந்த வங்கித்தொழில் முறைமைகளுக்கு வெளியே தொழிற்படுவதுடன் குறைந்தபட்ச ஆவணங்களுடன் விரைவாக கடன் பெறப்படுகிறது. இவர்கள் உடமை காசுக் கிடைப்பனவிற்கு வசதியளிக்கின்ற போதும் படுகடன், மிகக் கடுமையான உயர்ந்த வட்டி வீதங்களுக்கும் சாத்தியமான சுரண்டல்களுக்கும் உட்பட்டதாகும்.

### அடகுவைத்தல் (தங்கக்கடன்கள்)

தங்கத்தினை அல்லது ஆபரணங்களை உத்தரவாதமாகக் கொண்டு தீவு முழுவதிலும் பரந்தளவில் கிடைக்கக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் நிறுவனங்களிலிருந்தும் ஏனைய அடகுவைத்தல் நிலையங்களிலிருந்தும் பணத்தினை கடன்படமுடியும். அடகுவைத்தல் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த இடர்நேர்வுடன் நிதியினை விரைவாக வழங்குகிறது. எனினும் கடன்பாட்டாளர்கள் உயர்ந்த வட்டிவீதங்களை செலுத்த வேண்டியிருப்பதுடன் இணங்கிக் கொள்ளப்பட்ட நேரத்தில் மீளச் செலுத்தாதுவிடின் அடமானமாக வைக்கப்பட்ட பொருட்களை இழக்கும் இடர்நேர்வும் காணப்படுகிறது.

### டிஜிட்டல் கடன்வழங்கல் தளங்கள்

அவசரகால செயலிகளும் இணையவழிச் சேவைகளும் விரைந்த செய்முறைப்படுத்தல்களுடன் சிறிய கடன்களை வழங்குகின்றன. குறைந்தளவு அல்லது பூச்சிய காகித வேலைகளுடன் பணத்தினை உடனடியாக கடன்படமுடிகின்ற போதும் உயர்ந்த வட்டி வீதங்கள் விதிக்கப்படுவதற்கான சாத்தியங்கள் காணப்படுவதுடன் சிறிய தொகை பணத்தினை மட்டுமே கடன்படமுடியும். இன்று இத்தளத்தினூடாக அனேக மோசடிகள் இடம்பெறுவதனை கவனிப்பது முக்கியமானதாகும். டிஜிட்டல் கடன்வழங்கல் தளங்களிலிருந்தான மோசடிகளை குறைப்பதற்கு நீங்கள் கடன்படுவதற்கு முன்னதாக உரிய விழிப்புடன் கவன முறைகளை பூரணமாக மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். இக்குறிப்பிட்ட தளம் இலங்கை மத்திய வங்கியுடன் பதிவுசெய்யப்பட்டுள்ளதா என்பதனையும் இடம் சொந்தமான முகவரியினை கொண்டுள்ளதா என்பதனையும் நீங்கள் பரிசோதிக்க வேண்டும். மேலும் நீங்கள் அவர்களுடைய வாடிக்கையாளர் தரமிடல், மீளாய்வுகள், கட்டண கட்டமைப்பு, நியதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பனவற்றை பார்வையிடலாம்.

## கடன்பாட்டுத் தீர்மானங்களுக்காக பரிசீலிக்கப்பட வேண்டிய காரணிகள்

### கடன்பாட்டிற்கான மாற்றுவழிகள்

கடன்படுவதற்கு முன்னர், தனிப்பட்டவர்கள் ஒன்றில் மாற்று நிதியிடல் மூலங்கள், படுகடனை ஏற்படுத்தாமல் அவர்களது தேவையைப் பூர்த்தி செய்யப்படக்கூடியதாக இருக்குமா என்பது பற்றி மதிப்பிடல் வேண்டும்.

மற்றைய தேர்வு சேமிப்புக்களை பயன்படுத்தல், சொத்துக்களை விற்றல் அல்லது செலவுகளை பிற்போடுதல் போன்றனபற்றி கடன்படுவதனை தீர்மானிப்பதற்கு முன்னர் கண்டறிதல் வேண்டும்.

### கடன்பாட்டின் நோக்கம்

கடன்பாடுகள் சொத்துக்களை வாங்குதல், கல்விக்கு நிதியிடல் அல்லது அவசரகால தேவைகளை கட்டுப்படுத்தல் போன்ற தெளிவான, நியாயப்படுத்தக்கூடிய நோக்கத்தினை கொண்டதாக இருத்தல் வேண்டும். நோக்கம் கடனின் தொகை, மூலம், காலம் மற்றும் வகை என்பனவற்றை நிர்ணயிக்கிறது. கடன் நீண்ட கால நிதியியல் உறுதிப்பாட்டினையும் வளர்ச்சியையும் எய்துவதற்கான கருவியாக நோக்கப்பட வேண்டுமேயன்றி குறுங்கால விருப்பங்களை பூர்த்தி செய்வனவாக அமையக்கூடாது.

### மீள்கொடுப்பனவுகளை தாங்கிக் கொள்ளும் தன்மை

கடன்பாடுகள் தொடர்பான தீர்மானங்கள் கடன்பாட்டாளரின் நிதியியல் உறுதிப்பாட்டினை ஆபத்திற்குள்ளாக்காமல் மீள்கொடுப்பனவு கடப்பாடுகளை பூர்த்திசெய்யக்கூடிய இயலாற்றலை கடன்பாட்டாளர் கொண்டிருக்கின்றனரா என்பதனை பரிசீலனையில் கொள்ள வேண்டும். ஆகவே கடன்பாட்டாளர் வரவுசெலவுத் திட்டத்தில் சிரமத்தினை ஏற்படுத்தாமல் அல்லது இன்றியமையாத செலவினங்களை தியாகம் செய்யாமல் மீள்கொடுப்பனவுகளை மாதாந்தம் சௌகரியமான முறையில் முகாமைப்படுத்த முடியுமா என்பதனை கட்டாயம் மதிப்பீடு செய்தல் வேண்டும். உதாரணமாக ஆளொருவர் ஊர்தியொன்றினை வாங்குவதற்கு விரும்பும்பொழுது மாதாந்த வருமானத்தினையும் செலவினையும் கணிப்பதற்கு அடையாளம் கண்டுகொள்ள வேண்டும் என்பதுடன் எந்த வகையான ஊர்தியை தாங்கிக் கொள்ளக்கூடியதாக இருக்குமா என்பதனையும் கண்டறிதல் வேண்டும். இதன்மூலம் கடன் தொகையினை கடன் தவணைகளின் மீள்கொடுப்பனவுகளை கடன்பாட்டாளர் தாங்கக்கூடிய விதத்தில் அதன் அடிப்படையில் தீர்மானித்தல் வேண்டும்.

### வட்டிவீதங்களும் ஏனைய கடன்பாட்டுச் செலவுகளும்.

கடன்பாட்டுச் செலவினை குறைத்துக்கொள்வது ஆளொருவரின் நிதியியல் வினைத்திறனை பேணுவதற்கு இன்றியமையாததாகும். ஆகவே கடன்பாட்டாளர் கடன்படுவதற்கு மிகவும் செலவுச் சிக்கனமான தேர்வுகளையே தெரிவு செய்தல் வேண்டும். கடன்பாட்டாளரினால் உறப்படும் அனைத்துச் செலவுகளையும் அவரே செலுத்த வேண்டுமென்பதனால் வட்டிவீதங்கள் செய்முறைக் கட்டணங்கள் மற்றும் ஏனைய விதிப்புக்களை ஒப்பிட்டுப் பாாத்து கொள்ள வேண்டும். கடன்பட்ட நிதியத்தினை சிக்கனமாக பயன்படுத்துவதற்கு செலவுகளை குறைத்தல் வேண்டும். கடன்செய்முறைப்படுத்தல் நேரம் போன்ற காரணிகளை குறைந்த கடன்பாட்டுச் செலவு போன்றவற்றிற்காக விட்டுக் கொடுக்கலாம்.

### காலம் மற்றும் கடன் நியதிகள்

கடன் நியதிகளின் தேர்வுகளை கடன்பாட்டின் மொத்தச்செலவினை தாங்கிக் கொள்வதுடன் சமநிலைப்படுத்தப்படல் வேண்டும். கடனின் காலமும் நியதிகளும் கடன்பாட்டாளரின் நிதியியல் திட்டங்கள் மற்றும் மீள்கொடுப்பனவு இயலளவுடன் இசைந்திருத்தல் வேண்டும். நீண்டமுதிர்ச்சிக் காலத்துடன்கூடிய கடன்கள் குறைந்த மாதாந்த கொடுப்பனவுகளை கொண்டனவாகவும் மீள்கொடுப்பனவுக்காலம் நீடிக்கப்பட்டமையின் காரணமாக ஒட்டுமொத்த வட்டிச்செலவு உயர்வாகவும் இருக்கும்.

## ‘வட்டிவீதத்தினை’ விளங்கிக் கொள்ளுதல்



வட்டிவீதம் என்பது கடன்பட்ட நிதியத்திற்கு செலுத்தப்படுகின்ற விலையாகும். இது நிதியத்தின் பிரதான செலவாகும். மறுபுறத்தில் வட்டி, கடன் வழங்குபவரின் வருமானத்தினை குறிக்கிறது.

பின்வருவன வட்டிவீதங்களின் மூன்று முக்கிய வகைகளாகும். அவற்றைப் பற்றி தெரிந்து கொள்வது கடன்பாட்டாளருக்கு முக்கியமானதாகும்.

### பெயரளவு வட்டிவீதம்

பெயரளவு வட்டிவீதம் என்பது கடனொன்றின் உறப்பட்ட வட்டிவீதமாகும். இது கடன்பாட்டாளர் கடன்வழங்கியவர்களுக்கு அவர்களின் பணத்தினை பயன்படுத்துவதற்காக கடன்பாட்டாளர் கடன்வழங்கியவருக்கு செலுத்துகின்ற உண்மையான நாணய விலையாகும். கடன் மீதான பெயரளவு வீதம் 10 மூ மாக இருப்பின் கடன்பாட்டாளர் கடன்வழங்கியவரிடமிருந்து கடன்பட்ட ஒவ்வொரு ரூ.100 இற்கும் ரூ.10 இனை செலுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெயரளவு வட்டிவீதம் பொதுவாக 5மூ , 7மூ மற்றும் 10 மூ என வருடாந்த ரீதியாக தெரிவிக்கப்படுவதுடன் அவை கடன்தொகையின் சதவீதத்தில் பிரதிபலிக்கப்படுகின்றன. அவை குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கான வட்டி வீதமாகும்.

### உண்மை வட்டி வீதம்

பெயரளவு வீதத்தினைப் போலன்றி உண்மை வட்டிவீத காரணிகள் பணவீக்கத்தினைக் கணக்கில் எடுக்கின்றன அவர்கள் அவர்களது நிலைமையினை மீட்டுக் கொண்டதன் பின்னர் அவர்களது வாங்கும் சக்தியை மிக துல்லியமாக அளவிடுகின்றன. கடனின் வருடாந்த வட்டிவீதம் 10மூ மாகவும் பணவீக்க வீதம் 4மூ மாகவும் இருப்பின் உண்மை வட்டிவீதம் 6மூ மட்டுமேயாகும்.

உண்மை வட்டிவீதங்கள் என்பது தகவல்களை அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்களை மேற்கொள்ள, குறிப்பாக முதலீடுகள் மற்றும் கடன்கள் மீதான தீர்மானங்களை மேற்கொள்ள மிக முக்கியமானதாகும். கடன்பாட்டுச் செலவினங்களையும் முதலீட்டு வாய்ப்புக்களையும் மதிப்பிடும் பொழுது உண்மையான பொருளாதார தாக்கங்களைப் புரிந்துகொள்வதற்கும் முதலீடு அல்லது கடன்பாடுகளின் உண்மைச் செலவு மீதான வருமானத்தினை பணவீக்கம் எவ்வாறு பாதிக்கின்றது என்பதனையும் புரிந்துகொள்வதற்கும் உண்மை வட்டி வீதத்தினை பரிசீலனையில் கொள்வது இன்றியமையாததாகும்.

### பயனுறு வட்டிவீதம்

கடன்பாட்டாளர்கள் பயனுறுவட்டி வீதம் பற்றியும் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். இது கூட்டு வட்டிக் கோட்பாட்டினைப் பரிசீலனையில் கொள்கிறது. கணிதவியல் ரீதியாக பேசுவதாயின் பெயரளவு வீதத்திற்கும் பயனுறு வீதத்திற்கும் இடையில் வேறுபாடுகள் ∴ கடன்பாட்டிற்கான ஏற்புடைத்தான காலப்பகுதிக்கிடையே கூட்டுக் காலப்பகுதியில் அதிகரிக்கின்றன. இவ்வாறு தான் ஆணடுகளிற்கான பயனுறு வட்டி வீதம் கணிக்கப்படுகின்றது.

வருடாந்த பயனுறு வட்டிவீதம் (%) = $\left[\left(1+\frac{r}{n}\right) - 1\right] \times 100$

இதில்,

r = கடனின் பெயரளவு வட்டிவீதம்

n = ஆண்டொன்றிற்கான வட்டிக்கொடுப்பனவுகள் எண்ணிக்கை

## கடன்வழங்குபவரிடம் கட்டாயமாக கேட்கப்பட வேண்டிய கேள்விகள்

1. **வட்டி எவ்வாறு கணிக்கப்படுகிறது**

2. **நிலையான விதத்திலா அல்லது மாறுகின்ற விதத்திலா? ஒரே அடிப்படை அல்லது வீழ்ச்சியடைந்து செல்லும் அடிப்படை**

நிலையான வட்டிவீதம் கடன்காலம் முழுவதும் மாறாது தொடர்ந்து அப்படியே இருக்கும். மாறுகின்ற வட்டிவீதம், கடனின் காலப்பகுதியில் சந்தை வட்டிவீதங்களில் ஏற்படும் அதிகரிப்புக்களின் காரணமாக காலத்திற்கு காலம் அதிகரிக்கும்.

நிலையான வீதம் மாறுகின்ற வீதத்திலும் பார்க்க உயர்வாக இருக்கின்றபோதும் உங்களது எதிர்காலக் கொடுப்பனவுகளை துல்லியமாக ஊகித்துக்கொள்ள உங்களை அனுமதிக்கிறது. சந்தை வட்டிவீதங்கள் அதிகரிக்குமாயின் கடன்வழங்குபவர்களின் தற்றுணிவின்படி உயர்ந்த மாதாந்த கொடுப்பனவுகளை நீங்கள் செலுத்தவேண்டியிருக்குமென்பதனால் மாறும் வட்டிவீதங்கள் நீங்கள் கூடுதலான கொடுப்பனவுகளைச் செய்யவழிவகுக்கும்.

வட்டி ஒரே அடிப்படையில் அல்லது வீழ்ச்சியடைந்து செல்லும் அடிப்படையிலும் கணிக்கப்படுகிறது. 15 மூ வீழ்ச்சியடைந்து செல்லும் வட்டியுடனான கடன் 15 மூ ஒரே அடிப்படையிலான வட்டியிலும் பார்க்க குறைந்த செலவினையே உங்களுக்கு ஏற்படுத்தும்.

இதற்குக் காரணம் □வீழ்ச்சியடைந்து□ செல்லும் வட்டிவீதத்தில் நீங்கள் செலுத்தவேண்டிய தொகைக்கு மட்டுமே கடன்பாட்டாளருக்கு வட்டியைச் செலுத்தவேண்டியிருக்கும். அதேவேளை □ஒரே□ வட்டிவீதத்தில் நீங்கள் முழுத்தொகையினையும் செலுத்தி முடியும் வரை ஆரம்பத்தில் நீங்கள் பெற்ற கடன்தொகை முடிவதற்கும் வட்டியைச் செலுத்தவண்டியிருக்கும்.

3. **தவணைக் கொடுப்பனவுகளை நீங்கள் தவறவிடுமிடத்து விதிக்கப்படக்கூடிய தண்ட வட்டிவீதம் மற்றும் குற்றப்பணம் என்ன?**

4. **எவ்வளவு காலஇடைவெளியில் வட்டி செலுத்தப்படுகிறது?**

வட்டியை வருடாந்தம் அரை ஆண்டிற்கொருமுறை காலாண்டு, மாதாந்தம், வாராந்தம் அல்லது நாளாந்தம் செலுத்த முடியும். கொடுப்பனவுகளின் கால இடைவெளி நீண்டதாக இருப்பது கடன்பாடுகளின் மொத்த வட்டிச்செலவுகளைக் குறைக்கும் என்பதுடன் செலுத்துகின்ற தவணைப் பணத்தினை பெரிதாக்கும். கொடுப்பனவு காலஇடைவெளி குறுகியதாக இருப்பது கடன்பாட்டின் மொத்த வட்டிச் செலவினை அதிகரித்து செலுத்தப்படும் தவணைப் பணத்தினை சிறியதாக்கும். இது பயனுறு ஆண்டு வட்டிவீதத்தின் பெறுபேறாகும்.

5. **விதிக்கப்படக்கூடிய மேலதிக கட்டணங்கள் யாவை?**

சில கடன்கள் முன்கூட்டிய கட்டணம், முத்திரைத் தீர்வை முன்கூட்டிய கடன் மீள்கொடுப்பனவு மற்றும் கடன் செய்முறைப்படுத்தல் கட்டணம் என்பனவற்றை கொண்டிருக்கும். இது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தமுடியும் என்பதுடன் சில நிதியியல் நிறுவனங்கள் வாடிக்கையாளர் மனங்களைப் வெல்லும் பொருட்டு இவ்விதிப்புக்களை தள்ளுபடி செய்து விடுகின்றன.

6. **தேவைப்படும் பாதுகாப்பு அல்லது பிணையுறுதி மற்றும் உத்தரவாதங்கள் என்றால் என்ன? (உங்களுக்கு சொந்தமான எவையேனும்)**

உங்கள் கடன்களை நீங்கள் மீளச் செலுத்தத் தவறுமிடத்து கடன் வழங்கியவர் வழங்கப்பட்ட பிணையுறுதியை பொறுப்பேற்பதற்கு சட்டநடவடிக்கையினை எடுக்கக்கூடும் அல்லது உத்தரவாதம் வழங்கியவரை கடனை மீளச் செலுத்துமாறு கோரலாம். பிணை எதனையும் தேவைப்படுத்தாத கடன்வழங்குபவர்கள் மிக உயர்ந்த வட்டிவீதங்களை விதிப்பர். ஏனெனில் பிணை எதுவுமில்லாமல் கடனை வழங்குவது இடர்நேர்வு+மிக்கதாகும். பிணை எதுவுமில்லாமல் உங்களுக்கு கடன் வழங்கப்பட்டிருப்பின் கடனின் செலவு உட்பட, அனைத்து நியதிகள் மற்றும் நிபந்தனைகள் நீங்கள் புரிந்து கொண்டிருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

7. **கடன் காலம் முழுவதிலும் நீங்கள் மீளச் செலுத்த வேண்டியிருக்கும் மொத்த தொகை யாது?**

இது பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது,

கடன்பட்ட மொத்தத்தொகை ஃ முழுக்காலப் பகுதிக்குமான வட்டிச் செலவு ஃ ஏனைய கட்டணங்கள் அல்லது விதிப்புக்கள்

8. **கடன் எடுப்பதன் மீதான வரியின் தாக்கம் என்னவாக இருக்கும்?**

குறிப்பிட்ட கடன்களின் மீதான வட்டி மீதான வரி அனுமதிக்கத்தக்கதாக இருப்பதன் காரணமாக உண்மையான கடன் செலவு பெயரளவு வட்டிச் செலவிலும் பார்க்க குறைவாக இருக்கும்.

## கடன் அட்டையினை முகாமைப்படுத்தல்

கொடுகடன் அட்டை என்பது செல்லுபடியாகக்கூடிய உலகளாவிய ரீதியில் பரந்தளவிற்கு பயன்படுத்தப்படுகின்ற கொடுப்பனவு அட்டையாகும். வங்கியொன்று வழமையாக கொடுகடன் அட்டையினை வழங்கி கொடுகடன் அட்டை வைத்திருப்போர் அவசரதேவையின் போது பொருட்களை, சேவைகளை மற்றும் பணத்தினை கடன்படுவதற்கு அனுமதிக்கிறது. கடன்அட்டையினை பயன்படுத்திய பின்னர் மீள்கொடுப்பனவுத் தொகை கூற்றுடன் சேர்க்கப்படும். கொடுகடன் அட்டையினை பயனுள்ள முறையில் பயன்படுத்தினால் நீங்கள் வலுவான கொடுகடன் வரலாறொன்றினை உருவாக்கலாம். நிதியியல் வாய்ப்புக்களை அணுகலாம். நீண்ட கால நிதியியல் ஆரோக்கியத்திற்கு ஆதரவளிக்கலாம்.

## உங்கள் கொடுகடன் அட்டையினை முகாமைப்படுத்துவதற்கான 7 வழிகள்

1. **ஒவ்வொரு தடவையும் உரிய நேரத்தில் செலுத்துங்கள்**

   ஒவ்வொரு மாதமும் தீர்ப்பனவிற்காக வழங்கப்பட்டுள்ள உரிய திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கொடுகடன் அட்டைப் பட்டியல் தீர்ப்பனவு செய்யப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். உரிய நேரக் கொடுப்பனவுகள் கடன் அட்டை மீதான பிந்திய கட்டணங்கள், வட்டி விதிப்பு என்பனவற்றை தவிர்த்துவிடும் பிந்திய தீர்ப்பனவுகள் அல்லது பட்டியல் செலுத்தப்படாமல் போவதனை தவிர்ப்பதற்காக தன்னியக்க கொடுப்பனவுகள் அல்லது நினைவூட்டலை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

2. **குறைந்தபட்ச கொடுப்பனவிலும் பார்க்க முழுமையாகச் செலுத்துங்கள்**

   வட்டியைத் தவிர்க்கும் விதத்தில் முழு நிலுவைத் தொகைகளையும் முழுமையாக செலுத்துங்கள், முழுமையாக செலுத்த முடியாவிடின் பிந்திய கொடுப்பனவிற்கான கட்டணத்தினை தவிர்க்கும் விதத்தில் குறைந்தபட்சக் கொடுப்பனவிலும் பார்க்க கூடுதலான தொகையினை செலுத்த முயற்சியுங்கள். இவ்விடயத்தில் விதிக்கப்படும் வட்டி குறைவாக இருக்கும் என்பதுடன் படுகடன் தொகையும் குறைவாகவே இருக்கும்.

3. **எப்பொழுது அவசியமோ எப்பொழுது அவசரமோ அப்பொழுது மாத்திரம் உங்கள் கடன் அட்டையினைப் பயன்படுத்துங்கள்**

   கொடுப்பனவு அட்டை ஊடாக கொடுப்பனவுகளை செலுத்தும் போது இக்கொடுப்பனவு எவ்வளவிற்கு அவசியமானது என்ற கேள்வியை எப்பொழுதும் கேளுங்கள். இதனை நீங்கள் பிற்போட முடியுமா? உங்களால் தாங்கிக் கொள்ளக்கூடிய தொகையினை மட்டும் உடனடியாக செலுத்துக்கள். உங்கள் அவசிய தேவைகளையும் விருப்பங்களையும் வகைப்படுத்தி அதன்படியும் முன்மதியுடனும் உங்கள் கடன் அடடையினைப் பயன்படுத்துங்கள், கொடுகடன் அட்டையை வைத்திருக்கின்றோம் என்பதற்காக அதனைப் பயன்படுத்தாதீர்கள்.

4. **உங்களுக்கான சரியான கடன் அட்டையினைத் தெரிவு செய்யுங்கள்**

   பல்வேறு வகையான கடன் அட்டைகள் சந்தையில் கிடைக்கின்றன. நீங்கள் தெரிவுசெய்த கொடுகடன் அட்டை உங்கள் செலவிடல் பழக்கவழக்கங்களுக்கு பொருத்தமானது தான் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். தயவுசெய்து வருடாந்த கட்டணத்தின் செலவு, பிந்திய கொடுப்பனவிற்கான விதிப்புக்கள் காசினை மீளளிக்கும் வெகுமதிகள் மீட்டுக் கொள்ளத்தக்க புள்ளிகள் மற்றும் வட்டி வீதங்களைப் பரிசோதித்துக் கொள்ள மறந்துவிடாதீர்கள். நீங்கள் அடிக்கடி பயணம் செய்பவராக இருப்பின் நீங்கள் முன்னுரிமையளிக்கும் சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்களின் கவர்ச்சிகரமான கழிவுகளை வழங்கும் கொடுகடன் அட்டைகளைத் தெரிவு செய்யுங்கள்.

5. **அநேக கொடுகடன் அட்டைகளுக்கு விண்ணப்பிக்காதீர்கள்**

   அநேக கொடுகடன் அட்டைகளுக்கு விருப்பம் தெரிவிப்பது தேவையற்ற செலவிடல் மாதிரிகளுக்கு வழிவகுத்து உங்களை படுகடன் பொறிக்குள் தள்ளிவிடும். ஏனைய வங்கியிலிருந்து புதிய சலுகைகளை பெற்றுக் கொள்ளலாம் என்பதற்காக புதிய அட்டைகளுக்கு விண்ணப்பிக்காதீர்கள். அது உங்களது கொடுகடன் வரையறைகளை அதிகரித்துவிடும்.

6. **உங்கள் கொடுகடன் அட்டைக் கூற்றுக்களை ஆய்வு செய்ய மறக்காதீர்கள்**

   உங்கள் கூற்றுக்களை கிரமமாக பரிசோதிக்க மறக்க வேண்டாம். இது உங்கள் கொடுப்பனவு வரலாற்றினைத் தெரிந்துகொள்ள உதவும் என்பதுடன் உங்கள் கூற்றுக்களில் தவறுகளோ மோசடிகளோ இல்லை என்பதனையும் நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். நீங்கள் ஏதேனும் அங்கீகரிக்கப்படாத விடயங்களை காணுமிடத்து நீங்கள் வங்கிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

7. **காசு முற்பணங்களை தவிர்க்கவும்**

   காசு முற்பணங்கள் வழமையாக உயர் கட்டணங்களைக் கொண்டிருக்கும் என்பதுடன் வட்டிவீதம் நாளுக்கானதாக இருக்கும். இறுதி நடவடிக்கையாகவே அதனைப் பயன்படுத்தவும்.

## உமது படுகடனை முகாமைப்படுத்துவதற்கான உத்திகள்

காத்திரமான படுகடன் முகாமைத்துவம் நிதியியல் ஒழுங்கவியலையும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்களை மேற்கொள்வதனையும் முன்கூட்டிய உபாயங்களையும் தேவைப்படுத்துகிறது. இவ்வுத்திகளை பின்பற்றுவதன் மூலம் தனிப்பட்டவர்கள் படுகடன் செலவினைக் குறைக்க முடியும். என்பதுடன் அவர்களது நிதியியல் ஆரோக்கியத்தையும் பாதுகாக்க முடியும்.

### 1. அனைத்தையும் உள்ளடக்கும் வரவு செலவுத் திட்டமொன்றினை உருவாக்குதல்

அளவுக்கதிகமான செலவினங்களையும் கடன் கொடுப்பனவுகளை செலுத்தாது பின் தங்குவதனையும் தவிர்ப்பதற்கு வரவு செலவுத்திட்டமொன்றினை தயாரிப்பது அவசியமானதாகும். உதாரணமாக நீங்கள் கொடுப்பனவு செய்வதற்கு கடப்பாடு கொண்டுள்ள இன்றியமையாத செலவினங்களுக்கான நிதிகளை ஒதுக்குவதன் மூலம் வரவுசெலவுத்திட்டமொன்றினை நீங்கள் உருவாக்கிக் கொள்ள முடியும். உதாரணம்: மாதாந்த கடன் தவணைகள் உங்கள் செலவினங்களை முகாமைப்படுத்திக் கொண்டு வரவு செலவு திட்டத்திற்குள் இருப்பது உங்கள் படுகடனை தாமதமின்றி அல்லது தவணை தவறாது மீள்கொடுப்பனவு செய்ய உதவும்.

### 2. சரியான உபாயத்தினை பயன்படுத்தி படுகடனை முன்னுரிமைப்படுத்துங்கள்

பல்வேறு படுகடன்களை நீங்கள் வைத்திருப்பின், உயர்ந்த பட்ச வினைத்திறனுடன் படுகடன்களை எவ்வாறு மீள்கொடுப்பனவு செய்வது பற்றி தீர்மானிக்கவும். படுகடன் மீள் கொடுப்பனவுகளைத் திட்டமிடுவதற்கு பின்வரும் உபாயங்களைப் பின்பற்ற முடியும்.

- காலப்போக்கில் பணத்தினை சேமிப்பதற்காக உயர் வட்டிவீதங்களை கொண்ட கடன்களை முதலில் தீர்ப்பனவு செய்வது பற்றி கவனம் செலுத்துங்கள்

உதாரணமாக பின்வரும் படுகடன்களை நீங்கள் வைத்திருப்பின்

கொடுகடன் அட்டை: 25% வட்டியில் ரூ. 300,000

தனிப்பட்ட கடன்: 15% வட்டியில் ரூ. 500,000

ஊர்திக் கடன்: 10% வட்டியில் ரூ. 30,000,000

முதலில், தொடர்பான காலப்பகுதியில் வட்டிக்கொடுப்பனவுகளை குறைப்பதற்காக கொடுகடன் அட்டைமீது கவனம் செலுத்துதல் வேண்டும். ஏனெனில் இது உயர்ந்த வட்டிச் செலவினத்தினை ஏற்படுத்தும் அட்டைப் படுகடனை நீங்கள் தீர்ப்பனவு செய்ததும் உயர்ந்த வட்டியை உழைக்கும் படுகடன் செலுத்தப்பட்டுவிட்டமையினால் மாதாந்த வட்டிச் செலவு முன்னரைக் காட்டிலும் குறைவாகவே இருக்கும்.

- தன்னம்பிக்கையினையும் செயலூக்கத்தினையும் கட்டியெழுப்புவதற்கு சிறிய கடனுடன் ஆரம்பியுங்கள். படுகடன் மீள்கொடுப்பனவுச் சுமை தொடர்பில் இவ்வுபாயம் மனோ தத்துவ ரீதியாக நிவாரணமொன்றினை வழங்கும்.

உதாரணமாக உங்களிடம் மூன்று படுகடன்கள் இருக்குமாயின்:

25% வட்டியில் கடன்வழங்குனரிடமிருந்து ரூ.50,000 கொண்ட கடன்

15% வட்டியுடன் ரூ.400,000 கொண்ட தனிப்பட்ட கடன்கள்

10% வட்டியுடன் ரூ.20,000,000 கொண்ட ஊர்திக் கடன்

இம்முறையினைப் பயன்படுத்தி, உங்கள் படுகடனைக் குறைத்து கொண்டு வருகின்றீர்கள் என்ற உணர்வினை பெறும்விதத்தில் பணம் கடன் வழங்குனருடனான கடன்களை நீங்கள் தீர்ப்பனவு செய்யமுடியும்.

### 3. ஒன்றுதிரட்டப்பட்ட மற்றும் மீள்நிதியிடல் படுகடன்

மாதாந்த கொடுப்பனவுகளைக் குறைப்பதற்காக நிதியியல் நிறுவனங்கள் பல்வேறு படுகடன்களையும் ஒரு கடனாக குறைந்த வட்டியுடன் ஒருங்கிணைப்பதற்கான அல்லது ஏற்கனவேயுள்ள கடன்களுக்கு மீள்நிதியிடலை வழங்குவதற்கான வசதிகளை வழங்குகின்றன. படுகடன் திரட்சிப்படுத்தலும் மீள்நிதியிடலும் மீள்கொடுப்பனவினை இலகுபடுத்தி, ஒட்டுமொத்த படுகடன் செலவினை பொதுவாக குறைத்துவிடுகின்றன.

உதாரணமாக, உங்களிடம் தீர்ப்பனவு செய்வதற்கு பின்வரும் கடன்கள் இருக்குமாயின்

கடன் அட்டை: 25% வட்டியில் ரூ. 300,000

தனிப்பட்ட கடன்: 15% வட்டியில் ரூ. 500,000

ஊர்திக் கடன்: 10% வட்டியில் ரூ.30,000,000

மேற்குறிப்பிட்ட மூன்று படுகடன்களையும் தீர்ப்பனவு செய்வதற்குத் தேவையான தொகைக்குச் சமனான தனியொரு கடனை 12 மூ வட்டியில் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். அப்பொழுது நீங்கள் வேறுபட்ட வட்டி வீதங்களில் பல்வேறு படுகடன்களையும் செலுத்தத் தேவையில்லை ஒரே கடனுக்கு 12 மூ வட்டியைச் செலுத்தலாம். இதன் மூலம் உங்கள் அனைத்து படுகடன் கடப்பாடுகளும் குறைந்தவட்டி வீதத்தில் தனியொரு கடனாக திரட்டப்படுகின்றன.

எனினும், வேறுபட்ட நிதி நிறுவனங்களிலும் கிடைக்கத்தக்கதாகவுள்ள படுகடன் திரட்சித் தேர்வுகள் பற்றி ஆராய்ந்து மேலதிக கையாளல் கட்டணம் உட்பட மொத்தச் செலவினைச் சரிபார்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

### 4. கடன் வழங்குகின்றவர்களுடன் பேரம் பேசுதல்

நீங்கள் கடன் வழங்குனர்களுடன் தொடர்புகொண்டு குறைந்த வட்டிவீதங்கள் மற்றும் நீடிக்கப்பட்ட மீள்கொடுப்பனவுக் காலம் போன்ற சிறந்த நியதிகள் பற்றி பேரம் பேசலாம். இது செலுத்தத் தவறும் இடர்நேர்வினை குறைக்குமென்பதனால் கடன்வழங்குனர்களும் பேரப்பேச்சுக்கு இணங்குவர். கொடுப்பனவு தொடர்பான இடர்பாடுகளை முன்கூட்டியே கட்டுப்படுத்துவது இரு தரப்பினர்களுக்குமான செலுத்தத்தவறும் பிரச்சனைகளை தடுத்துவிடும்.

உதாரணமாக கடன்களை மீளச் செலுத்துவதில் உங்களுக்குள்ள நிதியியல் இடர்பாடுகள் பற்றி நீங்கள் வங்கிக்கு விளக்கும் விதத்தில் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி நீடிக்கப்பட்ட மீள்கொடுப்பனவுக் காலப்பகுதியொன்றுடன் குறைந்த வட்டிவீதங்களுக்கு மீள்கொடுப்பனவு நியதிகளை மீள ஒழுங்குசெய்துகொள்ளலாம்.

## படுகடனைத் தவிர்த்துக் கொள்வதற்கும் பாதுகாப்பான கடன்பாடுகளுக்குமான உத்திகள்

### 1. அவசரகால நிதியினைக் கட்டியெழுப்புதல்

உங்கள் வரவுசெலவுத் திட்டத்தில் எதிர்பாராத செலவுகளுக்கென தனியாக ஒரு தொகைப் பணத்தினை வைத்திருக்கமுடியும். இதனை ஒரு பழக்கமாகப் பின்பற்றுங்கள். இது அவசரகாலத்தின் போது கடன்பாடுகளின் மீது தங்கியிருப்பதனை குறைக்கும். இது, எதிர்பாராத செலவினங்கள் தோன்றும் போது செலவுமிக்க கடன்களுக்கான தேவையை தவிர்க்க உதவும்.

உதாரணமாக நீங்கள் திட்டமிடாத விதத்தில் உங்கள் ஊர்தி சடுதியாக பழுதடைந்து விடுமாயின் அப்பொழுது உயர்வட்டிவீதத்தினைக் கொண்ட விரைவுக் கடனை எதிர்பார்ப்பதிலும் பார்க்க ஊர்தியைத் திருத்திக் கொள்ள அவசரகால நிதியினை பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

2. உணர்ச்சி வசப்படும் செலவிடல்களை தவிருங்கள்

அத்தியாவசியமில்லாத அல்லது மனக்கிளர்ச்சி வாய்ந்த கொள்வனவுகளுக்காக கடன்படுவதற்கான முயற்சிகளை தவிர்க்கின்ற வேளையில் உயர்மட்ட கொள்வனவு ஒழுக்கவியலை பேணினாலொழிய உங்களால் படுகடனைத் தீர்ப்பனவு செய்யமுடியாது.

- **உயர்ந்த வட்டியைக் கொண்ட படுகடனை தவிருங்கள்**

உங்களுக்கு கடன்படுவதற்கான தேவையிருப்பினும் கூட, தனிப்பட்ட கடன்வழங்குநர்கள் அல்லது கொடுகடன் அட்டை போன்ற உயர்வட்டி வீதங்களைக் கொண்ட மூலங்களிலிருந்தான கடன்பாடுகளை மட்டுப்படுத்திக்கொள்ள முயலுங்கள். உயர்வட்டியைப் கொண்ட படுகடன்கள் விரைவாக ஒன்று திரளும். அது மீள்கொடுப்பனவினை கடினமாக்கிவிடும். நடைமுறையிலுள்ள உத்தி: கடன்பாட்டிற்குள்ள தேர்வுகளை ஒப்பிடுங்கள். பாதுகாப்பான கடன்கள் போன்ற குறைந்த வட்டிவீத மூலங்களுக்கு முன்னுரிமையளியுங்கள்.

- **கடன்பாடுகளின் மொத்தச் செலவினை விளங்கிக் கொள்ளுங்கள்**

கடன்பாடுகளுக்கு முன்னர் வட்டி, கட்டணம் மற்றும் மீள்கொடுப்பனவு நியதிகள் உட்பட கடனின் முழு நிதியியல் தாக்கம் பற்றி பரிசீலனையில் கொள்ளுங்கள். இத்தகவல்களை நீங்கள் கடன்வழங்குனரிடமிருந்து விசாரித்துக் கொள்ள முடியும் என்பதுடன் இது பற்றி நீங்களே தெளிவு பெற்றுக்கொள்ளுங்கள்.

உதாரணமாக, இரண்டு கடன்களின் தேர்வுகள் பற்றி நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்கலாம். ஒன்று குறைந்த வட்டிவீதம் ஆனால் உயர்ந்த கையாளல் கட்டணங்கள் மற்றையது கட்டணச்செலவும் இல்லை ஆனால் உயர்ந்த வட்டிவீதம் சிறந்த தேர்வினை தெரிவுசெய்வதற்கு நீங்கள் மொத்தச் செலவினை கணிக்க வேண்டும். மொத்தக் கடன்பாட்டுச் செலவினைக் கணிப்பதற்கு தற்பொழுது இணையவழி கடன் கணிப்பான்கள் உள்ளன.

### நல்ல கடன்பாடு எதிர் தீய கடன்பாடு

நல்ல கடன்பாடு என்பது உங்கள் செல்வத்தினை வளர்க்கக்கூடிய ஏதேனுமொன்றில் முதலிடுவதற்காக பணத்தினை கடன்படுவதாகும். நல்ல படுகடன் பொதுவாக குறைந்த வட்டியை கொண்டதாகயிருக்கும்.

உதாரணமாக கல்விக்கடன்கள், வீடமைப்புக் கடன்கள் மற்றும் வியாபாரக் கடன்களை வாங்குவதற்கு அல்லது உங்கள் நிதியியல் அல்லது உங்கள் நிதியியல் நிலைமையினை மேம்படுத்துவதற்காக பணத்தினை கடன்படுவதாகும்.

தீய கடன்பாடு குறிப்பாக உயர்வட்டியைக் கொண்டதாக அல்லது மீள்கொடுப்பனவிற்கு கடினமாக இருப்பதனால் உங்கள் நிதிகளில் குழப்பங்களை ஏற்படுத்திவிடும்.

உதாரணம் தேவையற்ற கொள்வனவுகளுக்காக வட்டியைக் கொண்ட கடன்அட்டைகள் பயன்படுத்துவதனை உள்ளடக்குகிறது.

**உங்கள் வாழ்க்கை இலக்குகளை எய்துவதற்கு படுகடன் சக்திவாய்ந்த கருவியாக இருக்கும், புத்திசாலித்தனமாகப் பயன்படுத்தப்பட்டால்**

# 3.7 தனிப்பட்ட பாதுகாப்பு



## கற்றலின் பெறுபேறுகள்

- காப்புறுதி மற்றும் ஓய்வுகால திட்டமிடலினூடாக தனிப்பட்ட பாதுகாப்பினை விளக்குதல்
- ஓய்வுகாலத் திட்டமிடலையும் அதன் முக்கிய படிமுறைகளையும் விபரித்தல்
- ஓய்வுகாலத் திட்டமிடலில் பணத்திற்கான நேரலை பெறுகையினை பிரயோகிப்பதனை விளக்குதல்.
- காப்புறுதிக் கோட்பாடுகளையும் அதன் முக்கியத்துவத்தினையும் விவரணப்படுத்தல்
- தனிப்பட்ட காப்புறுதியின் முக்கிய வகைகளை தெரிந்துகொள்ளுதல்
- சரியான காப்புறுதிக் கொள்கையினை தெரிவு செய்யும் போது பரிசீலனையில் கொள்ளவேண்டிய உத்திகள்.



தனிப்பட்ட பாதுகாப்பு என்பது, எதிர்காலத்தில் நிகழக்கூடிய எதிர்பார்க்கப்படாத சாத்தியமான மோசமான நிகழ்வுகளின் இடர்நேர்வுகளை அடையாளம் கண்டு கொள்வது என்பதனை குறிக்கிறது. இம்மோசமான நிகழ்வுகளை முன்கூட்டியே எதிர்கொள்வதற்கு நீங்கள் தயாராக இருப்பது அவசியமானதாகும். இப்பாதகமான நிகழ்வுகளுக்கெதிராக பாதுகாப்பு பெறுவதற்கு ஓய்வு காலத்திட்டமிடலும் அறிவுறுத்தலுமே மிகப்பொதுவான உபாயங்களாகும்.

## 3.7.1 ஓய்வுகாலத் திட்டமிடல்

ஓய்வுகாலத் திட்டமிடல் என்பது உங்களது பொன்போன்ற ஆண்டுகளுக்காக நிதியியல் சுயாதீனத்திற்காக தயாராகுவதனைக் குறிக்கிறது. தொழிலாளர் சட்டங்களின் படி, ஆளொருவர் உயர்ந்தபட்ச வயதுவரை தொழில்புரியமுடியும். அதே வயதை நீங்கள் அடைந்ததும் நீங்கள் உங்கள் நிரந்தர வேலையிலிருந்து விலகவேண்டிய தேவை காணப்படுகின்றது. உடலியல் ரீதியில் பொருத்தமற்றவராக அல்லது மருத்துவக் காரணங்களின் காரணமாக உங்களது வருமானம் வேறு ஏதேனும் மூலங்களிலிருந்து வந்திருப்பினும் கூட அதிக அளவில் சுறுசுறுப்பாக வருமானத்தினை ஈட்டுவதற்கு இன்னமும் காலம் எடுக்கும். உங்கள் நிதியியல் சுயாதீனத்தினை பேணுவதற்கு இந்நேரத்திற்காக திட்டமிடுவது மிக முக்கியமானதாகும்.

இது, நீங்கள் வேலை செய்வதனை நிறுத்தியதன் பின்னர், வாழ்க்கைச் செலவினை ஈடுசெய்வதற்காக போதுமான வருமானத்தினை வழங்கும் விதத்தில் சேமிப்பு மற்றும் முதலீட்டுத் திட்டங்களை உருவாக்குவதுடன் தொடர்புபடுகிறது. ஓய்வுகாலத்திட்டமிடல் நிதியியல் திட்டமிடலில் இன்றியமையாததொரு அம்சமாகும். ஓய்வு காலத்திட்டம் உங்கள் இலக்குகளை எய்துவதற்கு உங்களுக்கு உதவுவதுடன் சௌகரியமானதும் பாதுகாப்பானதுமான ஓய்வினையும் உறுதிப்படுத்துகிறது.

### உங்கள் ஓய்வுகாலத்திட்டமிடலுக்கான படிமுறைகள்

பின்வரும் அணுகுமுறைகள் ஓய்வுகாலத் திட்டமிடலுக்கான நடைமுறைப்படியான முறைகளை எடுத்துக்காட்டுகிறது

#### 1. உங்கள் ஓய்வுகால இலக்குகளை நிர்ணயம் செய்யுங்கள்

எப்பொழுது நீங்கள் ஓய்வுபெறப்போகிறீர்கள் என்பதனை தீர்மானிப்பதுடன் உங்கள் ஓய்வு கால வாழ்க்கையை நிறைவு செய்வதற்குத் தேவையான பெறுமதியினையும் மதிப்பீடு செய்ய வேண்டும் என்பதுடன் எதிர்பார்ப்புக்களும் இன்றியமையாதனவாகும். உங்கள் ஓய்வுகாலத் திட்டங்களை பரிசீலனையில் கொள்கின்றவேளையில் நீங்கள் எதிர்காலப் பணவீக்கவீதம் மற்றும் நலத்துறைக் கவனிப்பு போன்ற காரணிகளையும் எதிர்வுகூறல் வேண்டும்.

#### 2. உங்கள் தற்போதைய நிதியியல் நிலமையினை மதிப்பிடுங்கள்

உங்கள் சொத்துக்களை ஒன்றுசேர்த்து உங்கள் மொத்த படுகடன் அல்லது பொறுப்புக்களை கழிப்பதன் மூலம் உங்களது தற்போதைய செல்வத்தினை கணிக்க முடியும். மேலதிக மற்றும் செயற்படா வருமானங்கள் மற்றும் செலவுகள் உட்பட உங்கள் வருமானத்தினை மீளாய்வு செய்யுங்கள்

#### 3. சேமிப்புத்திட்டத்தினை உருவாக்குங்கள் ஆனால் உங்கள் ஓய்வுகால சேமிப்புக்களைத் தொடாதீர்கள்

உங்களுக்கு தேவையான இலக்குகளின் அடிப்படையில் சேமிப்புத் திட்டத்தினை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். சேமிப்பினை நேரகாலத்துடன் ஆரம்பிக்க முயற்சியுங்கள் உங்கள் ஓய்வுகால பொதியினை வளர்ப்பதற்கு கூட்டு வட்டிவீதத்தினை பயன்படுத்துங்கள். நீங்கள் அவற்றை நேரத்துடன் எடுப்பனவு செய்தால் எதிர்பார்த்த நன்மைகளை நீங்கள் பெற்றுக்கொள்ளமாட்டீர்கள்: மேலும் தொழில்தருநரின் ஓய்வுத்திட்டம் பற்றி அல்லது மற்றைய திட்டங்கள் பற்றி புரிந்துகொள்வது புத்திசாதுரியத்தனமாகும். ஓய்வூதிய திட்டத்தில் முதலீடு செய்வது செல்வத்தினை கட்டியெழுப்புவதற்கும் வருமானத்தினை உருவாக்குவதற்கும் இன்றியமையாததாகும்.

உங்கள் ஆய்வுகால சொத்துப்பட்டியலை கட்டியெழுப்புவதற்கு பங்குகள், முறிகள் பரஸ்பர நிதியங்கள், ஊ.சே.நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் உட்பட பல்வேறு வகையான முதலீடுகள் காணப்படுகின்றன.

ஒவ்வொரு முதலீட்டு தேர்வும் இடர்நேர்வுகளையும் வெகுமதிகளையும் கொண்டிருப்பதுடன் உங்கள் பணத்தினை முதலீடு செய்வதற்கு முன்னர் இவற்றை விளங்கிக் கொள்வது அவசியமானதாகும்.

#### 4. உங்கள் ஓய்வு காலத்திட்டத்தினை மீளாய்வு செய்து சீராக்குங்கள்

உங்கள் திட்டத்தினைத் தயாரித்தவுடன் நீங்கள் அதனை மீளாய்வு செய்வதுடன் உமது இறுதி இலக்கிலிருந்து ஏதனும் விலகல் காணப்படுகின்றதா என்பதனை பார்ப்பது அவசியமாகும். அவ்வாறு ஏதேனும் காணப்படுமாயின் அதனை அதற்கேற்ப திருத்திவிடவும்.

ஓய்வுகாலத்திட்டத்தில் பணத்தின் நேரப் பெறுமதியினை எவ்வாறு பயன்படுத்துவது

உங்கள் எடுப்பனவுகளையும் முதலீடுகளையும் திட்டமிடுவதற்கு பணத்தின் நேரப் பெறுமதியினை நீங்கள் பயன்படுத்தலாம்.

**சூழ்நிலை 1**

உங்கள் முதல் மாத சம்பளத்திலிருந்து மாதாந்தம் 8 மூ கூட்டுவட்டியைக் கொண்ட சேமிப்புக் கணக்கில் உமது ஓய்வு காலத்திற்காக, உமது வருமானத்திலிருந்து மாதாந்தம் ரூ. 1,000 இனை சேமிப்பதற்கு எண்ணியுள்ளீர்கள் என்று வைத்துக்கொள்வோம். உங்கள் ஓய்வு காலத்தில் நீங்கள் எவ்வளவினை சேமிக்க முடியும்.

இப்பொழுது நீங்கள் 20 வயதில் இருப்பதாகவும் 55 வயதில் ஓய்வுபெறவுள்ளதாகவும் அனுமானித்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் பின்வரும் சூத்திரத்தை பயன்படுத்த முடியும்.

$$\text{எதிர்காலப் பெறுமதி} = \text{மாதாந்தக் கொடுப்பனவு} \left[\frac{(1+(r/n))^{(n \times t)}-1}{(r/n)}\right]$$

இங்கு,

r = ஆண்டிற்கு வட்டிவீதம்

n = ஒரு வருடத்திற்குள் கூட்டு வட்டியின் எண்ணிக்கை

t = ஏற்புடைத்தான ஆண்டுகளின் எண்ணிக்கை

55 வயதில் வங்கி மீதி

$= 1000 * [(((1+ (.08/12))^{(12*35)}) - 1)/(.08/12)]$

= Rs 2,293,882.50

**சூழ்நிலை 2**

இப்பொழுது உங்களுக்கு வயது 30, 60 வயதில் ஓய்வுபெறுவீர்கள். உங்கள் மதிப்பீட்டின்படி ஓய்வின் போது உங்களுக்கு ரூ.10,000,000 தேவைப்படுகிறது. மாதாந்த கூட்டுவட்டியா 7 மூ இனை தரும் சேமிப்புக் கணக்கொன்றில் நீங்கள் எவ்வளவினைச் சேமிக்க வேண்டும்.

நீங்கள் பின்வரும் சூத்திரத்தினை பயன்படுத்தமுடியும்.

மாதாந்த சேமிப்புத் தொகை ஸ்ரீ ஆரம்பத்தில் அல்லது ஓய்வில் தேவைப்படும் தொகை

$$\text{மாதாந்த சேமிப்புத்தொகை} = \frac{\text{ஆரம்பத்தில் அல்லது ஓய்வில் தேவைப்படும் தொகை}}{\left[\frac{(1+(r/n))^{(n \times t)}-1}{(r/n)}\right]}$$

மாதாந்த சேமிப்புத்தொகை

$= 10,000,000 / [(((1+ (.07/12))^{(12*30)}) - 1)/(.07/12)]$

= Rs 8,196.92

**சூழ்நிலை 3**

ரூ.50,000,000 கொண்ட சேமிப்பு நிதியத்துடன் நீங்கள் 55 வயதில் ஓய்வுபெறவுள்ளீர்கள். ஓய்வுக் காலத்தின் போது 25 ஆண்டுகளுக்கு மாதாந்தம் சமமான தொகையொன்றினை எடுப்பனவு செய்ய நீங்கள் திட்டமிடுகின்றீர்கள. உங்கள் ஓய்வு கால நிதியம் தொடர்ச்சியாக ஆண்டிற்கு 7 சதவீதவட்டியை (கூட்டுவட்டி மாதாந்தம்) உழைப்பதாக அனுமானித்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு மாதமும் நீங்கள் எவ்வளவு தொகையினை எடுப்பனவு செய்யமுடியும்.

நீங்கள் பின்வரும் சூத்திரத்தினை பயன்படுத்தமுடியும்.

$$\text{மாதாந்த எடுப்பனவு} = \frac{\text{ஆரம்பத்தில் அல்லது ஓய்வில் கையிலுள்ள தொகை}}{\left[\frac{1 - (1 + (r/n))^{-(n\,x\,t)} - 1}{(r/n)}\right](1 + (r/n))}$$

ஓய்வுகாலத்தில் மாதாந்த எடுப்பனவு

=50,000,000/[(1-(1+(.07/12))-$^{(12*25)}$)/(.07/12))(1+(.07/12)]

= Rs 351,340.10

## 3.7.2 காப்புறுதி



காப்புறுதி மக்களுக்கு பாதுகாப்பு வலையமைப்பினையும் அவர்களது குடும்பங்களுக்கு பாதுகாப்பினையும் வழங்குகிறது. எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எதிர்பாராத நிதியியல் இழப்புக்களின் காரணமாக தனிப்பட்ட காப்புறுதிக் கொள்கைகள் தனிப்பட்டவர்களையும் குடும்பங்களையும் பாதுகாப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. அவை தனிப்பட்டவர் வாழ்க்கை, நலம், வருமானம் மற்றும் சொத்துக்கள் போன்ற காரணிகளை உள்ளடக்குகின்றன.




மேற்குறிப்பிட்ட கலந்துரையாடல் எமக்கு ஒன்றை ஞாபகப்படுத்துகிறது. நாங்கள் அதிகளவிற்கு நிச்சயமற்ற உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதில் அடுத்த கணம் என்ன நடக்கும் என்பதனை துல்லியமாக எவராலும் கணிக்க முடியாது. எங்கள் வாழ்க்கையில் எல்லோருக்கும் தேவையானது ஒன்றுதான். எங்கள் வாழ்க்கையில் என்ன பிரச்சனைகள் காணப்பட்டாலும் குடும்பங்களும் பெறுமதிமிக்க பொருட்களும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். என்பதேயாகும். இந்த நேரம் தான் காப்புறுதி எங்கள் வாழ்வில் கணிசமான வகிபாகத்தினை ஆற்றும் நேரமாகும்.

## தனிப்பட்ட காப்புறுதியின் முக்கியத்துவம்

- உங்கள் சொத்துக்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்

காப்புறுதி தனிப்பட்ட ஒருவரின் அல்லது குடும்பமொன்றினை உயர்பெறுமதி வாய்ந்த சொத்துக்களை பாதுகாத்துக் கொள்வதில் மைய வகிபாகமொன்றினை ஆற்றுகின்றது. சொத்தொன்றிலிருந்து தனிப்பட்டவர் அல்லது குடும்பம் கணிசமான நிதியியல் இழப்புக்களினால் பாதிக்கப்படும் போது இது நிதியியல் பாதுகாப்பாகத் தொழிற்படுகின்றது.

- உங்கள் குடும்பத்தினை பாதுகாத்துக் கொள்ளுங்கள

வருமான இழப்புக்களின் போது, மருத்துவ சிகிச்சையின் போது அல்லது வாழ்க்கை இழப்படும் போது உங்களை நம்பியிருப்பவர்கள் கவனமாக பாதுகாக்கப்படவேண்டும். இது, உங்கள் குடும்பம் குழம்பிப் போவதைக் குறைக்கவும் உதவும்.

- மனஅமைதி

காப்புறுதி உங்கள் இடர்நேர்வுகளை மூன்றாம் தரப்பினருக்கு மாற்றல் செய்ய உதவும் உபாயமாக விளங்குகின்றது. இது எதிர்பாராத சூழ்நிலைகளின் போது உங்கள் அழுத்தத்தினை குறைக்க உதவுகிறது.

### தனிப்பட்ட காப்புறுதியின் பொதுவான வகைகள்:

- **சுகாதாரக் காப்புறுதி:** மருத்துவ செலவினங்கள் வைத்தியசாலைகளில் தங்கியிருத்தல், அறுவை சிகிச்சைகள் மற்றும் வருமுன் காட்டும் கவனிப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்குகிறது.
- **ஆயுள் காப்புறுதி:** காப்புறுதி செய்தவர் மரணித்த பின்னர் நன்மை பெறுநர்களுக்கு நிதியியல் உதவிகளை வழங்குதல்
- **உடல் ஊனமுற்றவர்களுக்கான காப்புறுதி:** காப்புறுதி செய்யப்பட்டவர் சுகயீனம் அல்லது காயம் காரணமாக தொழில்புரிய முடியாமல் இருக்குமிடத்து அதற்கு பதிலாக வருமானத்தினை வழங்கல்
- **வீட்டுச் சொந்தக்காரர் காப்புறுதி :** சேதங்களிலிருந்து அல்லது களவுகளிலிருந்து வீடுகளையும் தனியாட்களுக்கு சொந்தமான பொருட்களையும் பாதுகாத்தல்
- **வாகனக் காப்புறுதி:** வாகனத்துடன் தொடர்பான சேதங்கள், களவுபோதல் மற்றும் விபத்துகளுக்கான பொறுப்பு என்பனவற்றை உள்ளடக்குகிறது.
- **பயணக் காப்புறுதி:** பயணத்தின் போது மருத்துவ அவசர தேவைகள் அல்லது பயணப் பொதிகள் தொலைந்து போதலுக்கெதிரான பாதுகாப்புக்கள்

### 4 சரியான காப்புறுதிக் கொள்கையை தெரிவுசெய்யும் போது பரிசீலனையில் கொள்ளப்படவேண்டிய உத்திகள

1) **சிறந்த காப்புறுதிக் கம்பனியை அடையாளம் காணல்**

அவர்களது கொடுகடன் தரமிடலின் மூலம் எடுத்துக்காட்டப்பட்டவாறு அவர்களது கொடுப்பனவு இயலாற்றல், நிபந்தனைகள் செயல்முறைகள் மற்றும் இழப்பீட்டினை செலுத்துவதற்கு அவர்கள் எடுக்கக்கூடிய காலம் என்பவற்றை பரிசீலித்தல்

2) **வேறுபட்ட காப்புறுதிக் கம்பனிகளிலிருந்து விலைக்குறிப்பீடுகளைப் பெறல்**

உங்கள் காப்புறுதித் தேவைகள் பற்றி அவர்களுடன் பேசுங்கள் தேர்வுகள் பற்றி கவனமாகச் சிந்தியுங்கள். அதன் பின்னர் உங்கள் தேவைகள் பூர்த்தி செய்யும் பூட்கைகளைத் தெரிவு செய்யுங்கள்.

3) **காப்புறுதி ஒப்பந்த ஆவணங்களுக்காக உங்களைப் பற்றியும் சரியான தகவல்களை வழங்குங்கள்**

சரியான தகவல்களை நீங்கள் வழங்கியிராவிடின் காப்புறுதிக் கம்பனி உங்கள் கோரல்களைச் செலுத்தாமலும் விடலாம்.

4) **உங்கள் காப்புறுதி ஒப்பந்தத்தினை கவனமாக வாசியுங்கள்**

உங்களால் புரிந்து கொள்ளப்படாத விடயங்கள் பற்றிக் கேளுங்கள். காப்புறுதி உள்ளடக்கம் மற்றும் நீங்கள் செலுத்த விருக்கும் கட்டுப்பணம் என்பன உள்ளிட்ட அனைத்து அம்சங்கள் தொடர்பிலும் திருப்தியடைந்த பின்னரே கையொப்பமிடுங்கள்

**நினைவில் வைத்திருக்கவேண்டிய அம்சங்கள்**

- காப்புறுதிக் கம்பனி நியாயமற்ற விதத்தில் உங்களுக்கு இழப்புக்களை வழங்க மறுத்திருக்கிறது அல்லது போதுமான இழப்பீட்டினை வழங்கவில்லை என நீங்கள் எண்ணுவதாக வைத்துக்கொள்வோம். இவ்விடயத்தில் நீங்கள் காப்புறுதிக் கம்பனிக்கு முறைப்பாட்டினைச் செய்யமுடியும்.
- காப்புறுதிக் கம்பனி உங்கள் முறைப்பாட்டினை பரிசீலனையில் கொள்ள மறுப்பதாக அல்லது உங்கள் முறைப்பாடு தொடர்பில் காப்புறுதிக் கம்பனி பதிலிறுக்கவில்லை என வைத்துக்கொள்வோம். அது பற்றி நீங்கள் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினை அல்லது இலங்கை காப்புறுதி குறைகேள் அதிகாரியினை அணுகலாம். அவர்களது சேவை கட்டணங்கள் எதுவுமற்றதாகும்.

For more details, visit Chapter on Personal Financial Management - Insurance.pdf

# 3.8 தனிப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தினைத் தயாரித்தல்

## கற்றலின் பெறுபேறுகள்

- தனிப்பட்ட வரவு செலவுத் திட்டத் தயாரிப்புக்கள் புரிந்துகொள்ளுதல் மற்றும் வரவுசெலவுத்திட்டத்தினை தயாரிப்பதன் முக்கியத்துவத்தினைப் புரிந்துகொள்ளல்
- தனிப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தினை தயாரிப்பதற்குத் தேவையான முக்கிய படிமுறைகளை விளக்குதல்

ஒரு தனிப்பட்ட வரவுசெலவுத்திட்டமென்பது குறிப்பிட்ட காலப்பகுதிக்கு, வழமையாக வாரம் அல்லது மாதமொன்றிற்கு உங்கள் வருமானத்தினையும் செலவுகளையும் கவனத்திற்கொண்டு தயாரிக்கப்பட்ட நிதியியல் திட்டமொன்றாகும். இது அவசரகாலத் தேவை, கல்வி அல்லது ஓய்வுகாலத் தேவை போன்ற சேமிப்பு பணத்திற்கான அல்லது எதிர்கால இலக்குகளுக்கான முதலீட்டுக்கென ஒதுக்கப்பட்ட தொகையின் ஒரு பகுதியை உள்ளடக்கிறது. எதிர்காலத்திற்காக வரவு செலவுத் திட்டத்தினை தயாரிப்பது (அடுத்தமாதம் அல்லது அடுத்த வருடத்திற்காகவும் இருக்கலாம் ) உங்கள் பணத்தினை பல்வேறு வழிகளில் முகாமைப்படுத்தும்.



ரத்நாயக்க குடும்பம் அவர்களது இராப்போசனத்தின் போது பின்வரும் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தது.






இக்கலந்துரையாடலில், அனுஷா தான் செலவிடும் அனைத்து செலவுகளையும் குறித்து வைத்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டார் என்பதனை கவனிக்க முடிகிறது. பிள்ளைகள் இதனால் கவரப்பட்டிருப்பதுடன் அனுஷாவின் புதிய பணியினை எவ்வாறு மேலும் மேம்படுத்தப்படலாம் என்பதற்கு யோசனையும் தெரிவிக்கின்றார்கள். உங்கள் செலவினங்களையும் குறித்து வைத்துக் கொள்வது நல்ல யோசனையல்லவா?

உங்கள் வருமானத்தினையும் செலவுகளையும் அடியொற்றிப் பேணிவருவது நிதியியல் ரீதியான அறிவினைப் பெற்றுக்கொள்வதற்கு சிறந்த சமிக்ஞையாகும். தனிப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தினை தயாரிப்பதில் இது முக்கியமானதொரு கூறாகும். நாளாந்த வாழ்வில் உங்கள் பணத்தினை முகாமைப்படுத்திக்கொள்ள இது ஒரு நல்ல ஆரம்பமாகும்.

## தனிப்பட்ட வரவுசெலவுத் திட்டமொன்றினை தயாரிப்பதன் முக்கியத்துவம்

### வருமானம் மற்றும் செலவினங்களை கவனமாக கையாள உதவும்

வரவுசெலவுத் திட்டம் அனைத்து வருமான மூலங்களையும் செலவினங்களையும் பதிவுசெய்வதுடன் செலவுகளை வகைப்படுத்திக் கொள்ளவும் உதவுகிறது. இது உங்கள் பணம் எங்கே போகின்றது என்பதனை அடையாளம் கண்டு கொள்ளவும் உங்களை இயலுமைப்படுத்துகிறது. இது தேவையற்ற செலவினங்களைக் கட்டுப்படுத்தவும் நிதியியல் மூலவளங்கள் வினைத்திறன்மிக்க முறையில் பயன்படுத்துவதற்கும் உதவுவதனால் செலவுகளை கண்காணிக்க இது முக்கியமானதாகவிருக்கிறது.

### நிதியியல் இலக்குகளை எய்துவதற்கு உதவியளிக்கிறது

வரவுசெலவுத்திட்டம் வீடு, கல்வி, படுகடன்களிலிருந்து மீளுதல் அல்லது ஓய்வுபெறுதல் என்பனவற்றிற்கான சேமிப்பு போன்றவற்றுடன் குறுங்கால மற்றும் நீண்டகால நிதியியல் குறிக்கோள்களின் செலவிடல்களுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. எந்தெந்த விடயங்கள் இன்றியமையாதனவோ அவற்றை நோக்கி மூலவளங்கள் நெறிப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு வரவுசெலவுத் திட்டத்தினை தயாரிப்பது முக்கியமானதாகும். வரவுசெலவுத் திட்டம் நிதியியல் இலக்குகளை செயலுறுப் பெறும் படிமுறைக்கு மாறுவதன் மூலம் விரும்பத்தக்க பெறுபேறுகளை நோக்கி முன்னேறுவதனை உறுதிப்படுத்துகின்றது.

## இது படுகடன் ஒன்றுதிரள்வதனை தடுப்பதுடன் படுகடன் தீர்ப்பனவுகளுக்கும் உதவுகிறது

வரவுசெலவுத் திட்டம் தனிப்பட்டவர்கள் செலவிடல் வரையறைகளை நிர்ணயிப்பதன் மூலம் அவர்களது வருமானத்திற்குள்ளேயே வாழ்வதனை உறுதிப்படுத்துகிறது. படுகடனுக்கும் நிதியியல் உறுதிப்பாட்டின் இடையூறுக்கும் வழிவகுக்கும் அளவுக்கு மீறிய செலவிடல்களை தவிர்க்க மிக முக்கியமானதாகும். மறுபுறத்தில், வரவுசெலவுத் திட்டமானது குறைந்தளவு நிதியியல் அழுத்தங்களுடன் படுகடனிலிருந்து வெளியேறுவதற்கான இலக்குகளை நிர்ணயிப்பதன் மூலம் தற்போது வெளிநிற்கின்ற படுகடனை கண்காணிப்பதற்கும் முகாமைப்படுத்துவதற்கும் உதவுகிறது.

## சேமிப்பு மற்றும் அவசரகால நிதியம்

வரவுசெலவுத் திட்டம் சேமிப்பிற்கான வழிகளை அமைத்துக் கொடுப்பதன் மூலம் நிதியியல் பாதுகாப்பினை வழங்குவதுடன் அவசர காலத்தின் போது படுகடன் மீது தங்கியிருப்பதனையும் குறைப்பதனால் சேமிப்புக்கான பிரத்தியேக ஒதுக்குகளையும் உள்ளடக்குகிறது.

## தீர்மானங்கள் சிறந்த முறையில் எடுக்கப்படுவதனையும் ஊக்குவிக்கிறது

வரவுசெலவுத் திட்டம் நிதியியல் மூலவளங்கள், தகவல்களை அடிப்படையாகக் கொண்ட செலவிடல்களை இயலுமைப்படுத்தி சேமிப்பு மற்றும் முதலீட்டுத் தீர்மானங்கள் போன்றவற்றை தெளிவுபடுத்துகிறது. வரவுசெலவுத் திட்டம் உணர்வுபூர்வமான தீர்மானங்களை எடுப்பதனை தவிர்ப்பதுடன் முன்னுரிமை விடயங்களின் மீது கவனத்தினையும் செலுத்துகிறது. உங்கள் நிதியியல் தீர்மானங்கள் உங்கள் வரவு செலவுத்திட்டத்தினால் வழங்கப்படும் வழிகாட்டலினூடாக தனிப்பட்ட பெறுமானம் மற்றும் முன்னுரிமைகளுடன் சிறந்த முறையில் இணைக்கப்பட்டிருக்கும்.

## வாழ்வின் மாற்றங்களுக்கு தயாராகுதல்

வரவுசெலவுத் திட்டங்கள் கடைப்பிடிக்கக்கூடியனவாகவும் திருமணம், பெற்றோரின் பாசம் அல்லது பதவி மாற்றங்கள் போன்ற வாழ்வில் இடம்பெறும் அம்சங்களையும் உள்ளடக்குகிறது. இம்மாற்றங்களுக்கு தயாராவது ஏற்பாட்டுக் காலத்தில் நிதியியல் உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்தும்.

## நிதியியல் ஒழுக்கவிதிகளை மேம்படுத்தல்

கிரமமான வரவுசெலவு திட்டப்படுத்தல் கவனமாக திட்டமிடல் பழக்க வழக்கங்களையும் செலவிடல்களையும் வளர்த்தெடுக்கும். வரவுசெலவுத் திட்டம் உங்கள் வருமானத்திற்குள் வாழ்வதனை வலுப்படுத்தும் என்பதுடன் தேவைக்கேற்ப பொருட்களை முன்னுரிமைப்படுத்தவும் உதவும். நீங்கள் நிதியியல் எல்லைகளை நிர்ணயிப்பதுடன் வரவுசெலவுத் திட்டத்தினூடாக பெறப்பட்ட செலவிடல் ஒழுங்குகளை மனதில் வைத்துக்கொள்வதனையும் உறுதிப்படுத்துகிறது.

## வரவுசெலவுத் திட்டத்தினை எவ்வாறு தயாரிப்பது

**படிமுறை 1**

நடைமுறை வருமானங்கள் மற்றும் செலவினங்களின் விளக்கத்தினை வைத்திருங்கள்

- உங்கள் வருமான வழிகள் அனைத்தையும் பட்டியலிடுங்கள்
- ரூபா பெறுமதியுடன்கூடிய தொடர்பான கால இடைவெளிகளை அடையாளம் காணுதல்
- உங்கள் வருமானத்தினை பின்வருமாறு வகைப்படுத்துங்கள்

**தனிப்பட்ட வருமானங்களின் வகைப்படுத்தலின் ஒரு உதாரணம்**

| வருமான மூலங்கள் | வருமானத்தின் அந்தஸ்து செயற்படுவது.˙. செயற்படாதது | வருமானத்தின் கால இடைவெளி வாராந்தம்.˙. மாதாந்தம் வாராந்தம்.˙. நாளாந்தம | தொகை (ரூ.) |
|---|---|---|---|
| **நிலையான வருமானங்கள்:** | | | |
| கூலிகள் மற்றும் சம்பளங்கள் | செயற்படுவது | மாதாந்தம் | |
| ஓய்வூதிய வருமானம் | செயற்படாதது | மாதாந்தம் | |
| வாடகை வருமானம் | செயற்படாதது | மாதாந்தம் | |
| நிலையான வைப்புக்களிலிருந்தான வட்டி வருமானம் | செயற்படாதது | மாதாந்தம் | |
| அரசாங்கத்திமிருந்தான உதவி (சமுர்த்தி அஸ்வாசும, வயதுமுதிர்ந்தோருக்கான படி, உடல் ஊனமுற்றோர்களுக்கான படி போன்றவை) | செயற்படாதது | மாதாந்தம் | |
| குடும்ப வருமானங்கள் (உதாரணம்: தாயார் அவரது மகனிடமிருந்து மாதாந்தம் ரூ.10,000 பெறுகிறார்) | செயற்படாதது | மாதாந்தம் | |
| | | | |
| **மாறுகின்ற வருமானங்கள்:** | | | |
| பகுதிநேரக் கொடுப்பனவு | செயற்படுவது | * | ** |
| தரகுகள் | செயற்படுவது | * | ** |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | செயற்படுவது | * | ** |
| பங்கிலாபம் மூலதன வருமானம் | செயற்படாதது | * | ** |
| போனஸ் | செயற்படாதது | * | ** |
| வியாபார இலாபம் | செயற்படுவது | * | ** |
| பகுதிநேர வேலை | செயற்படுவது | * | ** |
| வேளாண்மையிலிருந்தான வருமானம் | செயற்படுவது | * | ** |

* மாறுபடும் வருமானங்களின் கால இடைவெளி தொழில் தருநர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்குமிடையிலான தொடர்பான ஒப்பந்தத்தினை அல்லது வேலைச் செயலாற்றத்தினை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படும்.

** மாறுபடும் மூலங்களிலிருந்தான சராசரி வருமானத்தினை முன்னைய அனுபவம் வானிலை நிலைகள் போன்றவற்றின் அடிப்படையில் குறிப்பிட்ட காலப்பகுதிக்காக நிர்ணயிக்கமுடியும்.

- மொத்த வருமானத்தினை கணித்தல். நீங்கள் உங்கள் மாறும் வருமானத்தினை அளவுக்கதிகமாக குறிப்பிடவில்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
- உங்கள் அனைத்துச் செலவினங்களையும் பின்வருமாறு பட்டியலிடுங்கள்

**தனிப்பட்ட மற்றும் குடும்ப செலவினங்களின் வகைப்படுத்தலுக்கான ஒரு உதாரணம்**

| செலவின விடயங்கள் | செலவினத்தின் கால இடைவெளி வாராந்தம் / மாதாந்தம் வாராந்தம் / நாளாந்தம் | தொகை (ரூ.) |
|---|---|---|
| **நிலையான செலவினம்:** | | |
| வாடகை | மாதாந்தம் | |
| பள்ளிக்கூட வான் / அலுவலகப் போக்குவரத்துக் கட்டணம் | மாதாந்தம் | |
| கடன் தவணைப்பணம் | மாதாந்தம் | |
| காப்புறுதித் தவணைப்பணம் | மாதாந்தம் | |
| பிள்ளைகளின் நாளாந்த கவனிப்புக் கட்டணம் | மாதாந்தம் | |
| டியூசன் கட்டணம் | மாதாந்தம் | |
| பொதுவசதிகள் பட்டியல் | மாதாந்தம் | |
| நிலையான வருமானத்தின் வரிவிதிப்பு | மாதாந்தம் | |
| | | |
| **மாறுகின்ற செலவினங்கள்:** | | |
| உணவு | * | ** |
| வீட்டுத்துறைச் செலவினங்கள் | * | ** |
| பொதுப் பயன்பாட்டு பட்டியல்கள் மாறும் கூறுகள் | * | ** |
| எரிபொருள் செலவு | * | ** |
| தனிப்பட்ட கவனிப்பு மற்றும் சுகாதாரம் (தலைமுடி வெட்டல் போன்றவை) | * | ** |
| மருத்துவச் செலவினங்கள் | * | ** |
| ஆடை மற்றும் துணைப் பொருட்கள் | * | ** |
| பொழுதுபோக்கு (திரையரங்கு, ஒன்றுகூடல், சுற்றுலா) | * | ** |
| அன்பளிப்பு மற்றும் நன்கொடை | * | ** |
| ஊர்திகளின் பராமரிப்பு (சேவைச் செலவு) | * | ** |
| மாறுபடும் வருமானங்கள் மீதான வரிவிதிப்பு | * | ** |
| மருத்துவச் செலவினங்கள் | * | ** |

**குறிப்பு:** இது செலவினப் பட்டியலின் உதாரணம் மாத்திரமே. சாத்தியமானளவிற்கு கூடுதலான விபரங்களுடன் கூடியளவிற்கு துல்லியமான விதத்தில் நீங்கள் ஒரு வரைபடத்தினை தயாரித்துக் கொள்ளலாம். உங்கள் செலவுப் பட்டியலை அடையாளம் கண்டு இறுதிப்படுத்துவதற்காக ஆரம்பத்தில் ஒரு வாரத்திற்கு அல்லது மாதத்திற்கான உங்கள் செலவினப் பட்டியலை பேணமுடியும். இவை மிகையானதாகவோ குறைவானதாகவோ இருக்கக்கூடாது.

* உங்களின் நுகர்வு மற்றும் வாங்கும் பழக்கம் என்பனவற்றினைப் பொறுத்து எவ்வளவு கால இடைவெளியில் இச்செலவினங்கள் உறப்படுகின்றன என்பதனை நீங்கள் தீர்மானிக்க வேண்டும்.

** ஒவ்வொரு செலவின வகைக்குமான சராசரி பெறுமதியினை குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கான (மாதமொன்றிற்கானதாக இருக்கலாம்) நுகர்வு மற்றும் வாங்கும் பழக்கவழக்கம் என்பன தொடர்பான உங்கள் அவதானிப்புக்களின் அடிப்படையில் பெறமுடியும்.

படிமுறை 2

### உங்கள் வருமானத்தினை உங்கள் செலவினங்களுடன் பொருத்துக்கள்

- காலத்தினை தீர்மானியுங்கள் இது மாதமாகவோ வாரமாகவோ இருக்கலாம். உங்களது வருமானமும் பெரும்பாலான ஒரு நிலையான மூலங்களிலானவையாக இருப்பின் நீங்கள் மாதாந்த வரவு செலவுத் திட்டத்தினை பயன்படுத்தலாம். உங்கள் வருமானத்தில் பெரும்பாலானவை பல்வேறுபட்ட மூலங்களிலிருந்தவையாக இருப்பின் நீங்கள் வாராந்த வரவு செயற்றிட்டத்தினை தயாரிக்க முடியும்.
- குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கான சராசரி வருமானத்தினையும் சராசரி செலவின் பெறுமதியினையும் தீர்மானிக்கவும்.
- இடைவெளியின் தன்மையினை அடையாளம் காணுங்கள்

படிமுறை 3

### உங்கள் நிதியியல் இலக்குகளை பட்டியலிடுங்கள்

- எய்தப்படும் நேரங்களுக்கேற்ப இவ்விலக்குகளை அடையாளம் காணுங்கள்..
  - **குறுங்கால இலக்குகள்:** உடனடியாக, குறுகிய காலத்தில் ஓராண்டுக்குள் அல்லது மூன்றாண்டுக்கு முன்னதாக உங்களினதும் உங்கள் குடும்ப உறுப்பினர்களினதும் தேவை மற்றும் விருப்பங்களின் அடிப்படையில் இலக்குகளை நிறைவேற்றுவது அவசியமாகும். இது ஏதேனும் தேவையாக எதிர்பார்ப்பாக அல்லது விருப்பமாக இருக்கலாம்.
  - **உதாரணங்கள்:** அவசரகால நிதியினைக் கட்டியெழுப்புதல், கடனொன்றினைத் தீர்ப்பனவு செய்தல், விடுமுறைகளை எடுத்தல், கல்வி இலக்குகளை நிர்ணயித்தல் போன்றவை.
  - **நீண்டகால இலக்குகள்:** நிறைவேற்றுவதற்கு நீண்ட காலம் தேவைப்படுகின்ற இலக்குகள் ஏதேனும் தேவை, எதிர்பார்ப்புக்கள் அல்லது மூன்றாண்டுகளில் மேற்கொள்ளக்கூடிய விருப்புக்கள்.
  - **உதாரணங்கள்:** வீடொன்று, வியாபாரமொன்று, ஊர்தியொன்று, ஓய்வுகாலம், பிள்ளைகளின் உயர்கல்வி, வியாபாரமொன்றினை தொடங்குதல் போன்றவை
- உங்கள் இலக்குகள் யதார்த்தமானவை என்பதனை உறுதிப்படுத்துங்கள்.
- குறுங்கால மற்றும் நீண்டகால பின்னணியில் உங்கள் இலக்குகளை முன்னுரிமைப்படுத்துங்கள்

படிமுறை 4

நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடையும் விதத்தில் உங்கள் நிதியியல் திட்டங்களைத் தயாரியுங்கள்

- ஒவ்வொரு இலக்கினதும் செலவினைத் தீர்மானியுங்கள்
- இலக்குகளை நிறைவேற்றுவதற்கு அவை தொடர்பான செலவுகளுடனும் சேவைகள் அல்லது சாதனங்களின் தரம் போன்ற ஏனைய காரணிகளுடன் நீங்கள் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியதுடன் மாற்று ஏற்பாடுகள் பற்றியும் கண்டறிவதுடன் உங்களுக்கான சரியான தேர்வுகளையும் தெரிவு செய்தல் வேண்டும்.
  - **உதாரணங்கள்:** இலக்கு உங்கள் பிள்ளைகளுக்கான உயர்கல்விக்காக இருப்பின் நீங்கள் அது பற்றி விளங்கிக் கொண்டு தீர்மானித்தல் வேண்டும்.
  - பிள்ளை விரும்புகின்ற நிகழ்ச்சித் திட்டம்
  - வேறுபட்ட பல்கலைக்கழகங்களிலுள்ள நிகழ்ச்சித் திட்டங்களின் செலவு
  - ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் தரம் மற்றும் கீர்த்தி
  - கற்கின்ற வசதிகள்
  - உங்களின் தற்போதைய நிதியியல் நிலைமையின் அடிப்படையில் தாங்கிக் கொள்ளக்கூடிய தன்மை
- மேற்குறிப்பிட்ட இலக்குகளை எய்துவதற்கு சேமிப்பு இலக்குகளை நிர்ணயித்தல்
- சேமிப்பு இலக்குகளை மேற்கொள்ளும் போது யதார்த்தமாக இருக்கும்
- உங்கள் வருமான மாதிரி மற்றும் தொகைகளுக்கு இணங்க சரியான நேரத்தில் ஒதுக்குகளை தயாரியுங்கள். நீங்கள் நாளாந்தம், வாராந்தம் அல்லது மாதாந்தம் சேமிக்கலாம்.
- எந்த திட்டம் உங்களுக்கு சிறந்தது பொருத்தமானது என்பதனை தீர்மானியுங்கள்
- சேமிப்பு இலக்குகளை எய்துவதற்கு சேமிப்பு வழிகளைத் தீர்மானியுங்கள்.
  - அத்தியாவசியமில்லாத செலவுகளைக் குறைத்தல், செலவுகளைத் தவிர்த்தல்
  - உங்களின் தற்போதைய தேவைகள் மற்றும் விருப்பங்கள் பற்றி மனோதத்துவ ரீதியான ஆய்வுகளை நடத்துதல். உங்களது வருமானம் வாழ்க்கை முறை, முன்னுரிமைகள் மற்றும் கடப்பாடுகள் என்பனவற்றின் அடிப்படையில் அத்தகைய தேவைகளையும் விருப்பங்களையும் கைவிடலாம் என்பது பற்றி நீங்கள் கண்டறிய முடியும். உங்களது தற்போதைய செலவிடல் மாதிரிகளை புத்திசாலித்தனமாக குறைப்பது பற்றி நீங்கள் ஆராய்வது அவசியமாகும். இதுவும் உங்கள் வாழ்க்கை முறையில் மாற்றங்களுக்கு வழிவகுக்கலாம் என்பதுடன் நீங்களாகவே மனோதத்துவ ரீதியாக இவற்றைத் தயாரித்துக் கொள்ளலாம்.
  - தவிர்க்க முடியாத அத்தியாவசிய செலவினங்களுக்காக யதார்த்த பூர்வமான செலவிடல் வரையறைகளை ஏற்படுத்துதல்.
  - உங்கள் செல்வத்தினை உயர்த்தும் வரை, உங்கள் எதிர்கால இலாபத்தினை அடைவதற்காக உங்களின் தற்போதைய நுகர்வுகளை கைவிடவேண்டியிருக்கும்.
  - செலவினங்களை கைவிடுவதற்காக செலவிடல் வரையறைகளைத் தீர்மானிக்கும்போது தயவுசெய்து உங்கள் குடும்பத்துடன் கலந்துரையாடி அவர்களையும் இதில் ஈடுபாடு கொள்ளச் செய்யுங்கள். இது திட்டத்தினை மன அமைதியுடன் செய்வதற்கு உங்களுக்கு உதவும்.
  - சேமிப்பிற்காக புதிய மேலதிக வருமானத்தினை ஒதுக்குங்கள்.
  - வருமானத்தினை ஈட்டுவதற்கு புதிய வழிகளை கண்டறிந்து உங்கள் சேமிப்பு இலக்குகள் நிறைவேற்றுவதற்காக மட்டும் ஒதுக்குங்கள். உங்கள் நடைமுறைச் செலவினங்களுக்காக ஒதுக்க வேண்டாம்.
- உங்களது அனைத்து வருமானங்கள், செலவினங்கள் (குறைக்கப்பட்டமையின் மூலமும் செலவிடல் வரையறைகள் மூலமும் திருத்தப்பட்டது) சேமிப்பு இலக்குகள் உள்ளிட்ட உங்கள் வரவுசெலவுத் திட்டத்தினை தயாரித்தல். பின்வருவன வரவுசெலவுத் திட்டத்திற்கான ஒரு உதாரணமாகும்.

மாதிரி தனிப்பட்ட வரவுசெலவுத் திட்டம்

| மாதம் :<br>ஆண்டு: | | வரவுசெலவுத் திட்டத்தின் தொகை |
|---|---|---|
| **வருமானம்** | | |
| சம்பளம் | | |
| மேலதிக நேரம் | | |
| மேலதிக வருமானங்கள் | | |
| **மொத்த வருமானங்கள்** | | |
| **சேமிப்புக்கள்** | | |
| சேமிப்பு இலக்கு 1 (அவசரகால நிதியம்) | | |
| சேமிப்பு இலக்கு 2 (உயர்கல்வி) | | |
| **மொத்த சேமிப்புக்கள்** | | |
| **செலவினங்கள்** | | |
| **உணவு** | மளிகைச் சாமான்கள் | |
| | காய்கறிகள் | |
| | பழங்கள் | |
| | சிற்றுண்டிகள் | |
| **வீட்டுத்துறை** | சவர்க்காரம்.'. சுத்திகரிப்புத் திரவங்கள் போன்றவை | |
| **கல்வி** | ரியூசன் கட்டணம் | |
| | எழுது கருவிகள் | |
| | பாடசாலை வழங்கல்கள் | |
| | சீருடைகள் | |
| **போக்குவரத்து** | எரிபொருள் | |
| | வாடகைக்கார் கட்டணம் | |
| | பேருந்துக் கட்டணம் | |
| | வாகனங்களின் பேணல் | |
| **மருத்துவம்** | மருத்துவர் ஆலோசனை | |
| | மருந்துகள் | |

| மாதம் :<br>ஆண்டு: | | வரவுசெலவுத் திட்டத்தின் தொகை |
|---|---|---|
| நிலையான கடப்பாடுகள் | வாடகை | |
| | காப்புறுதி | |
| | கடன் தவணைகள் | |
| | காப்புறுதிக் கட்டணம் | |
| | பாடசாலைக் கட்டணம் | |
| | பாடசாலை வான் | |
| | ஓய்வூதிய நிதியத்திற்கான பங்களிப்பு | |
| | அலுவலகப் போக்குவரத்து | |
| பொழுதுபோக்கு | திரைப்படம் | |
| | சாப்பாடு | |
| | பயணம் | |
| | உடற்பயிற்சி / விளையாட்டுக் கழகம் | |
| ஏனையவை | ஆடைகள் | |
| | கொடுகடன் அட்டை கொடுப்பனவுகள் | |
| | பிள்ளைகளின் சேமிப்பு கணக்கிற்கான மாற்றல் | |
| | அறக்கட்டளை | |
| | அவ்வப்போது செய்யும் ஏனைய செலவுகள் (திருமணம், மரணம், தானம் போன்றவை) | |
| **மொத்தச் செலவுகள்** | | |

* சேமிப்புக்களை மொத்தத்திலும் உள்ளடக்க முடியும்.

**குறிப்பு:** இது ஒரு மாதிரி மட்டுமேயாகும். நீங்கள் உங்கள் வரவுசெலவுத் திட்டத்தினை உங்கள் செயலாற்றல் மற்றும் வருமானம் மற்றும் செலவினங்களின் வகைப்படுத்தலுக்கேற்ப வடிவமைத்து உருவாக்கிக் கொள்ள முடியும்.

**படிமுறை 5**

**உங்கள் வரவுசெலவுத் திட்டத்தினை கிரமமாக கண்காணித்து மீளாய்வு செய்யுங்கள்**

- ஒவ்வொரு காலமும் முடிவடைந்த பின்னர் உண்மையில் நடந்தவையையும் வரவுசெலவுத் திட்டத்தினையும் ஒப்பிடுங்கள்.
- வரவுசெலவுத்திட்டத்தினை எய்துவதற்கு நீங்கள் தவறிவிடின், அதற்கான சாத்தியமான காரணங்களை அடையாளம் கண்டு சரிசெய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.
- வரவுசெலவுத் திட்டத்தினை அனைத்து குடும்ப உறுப்பினர்களுக்கும் பார்க்கும் விதத்தில் பகிர்ந்துகொண்டு அவர்களுக்கும் இதனை தெரியப்படுத்தி இதனை எய்தும் விதத்தில் ஈடுபாடு கொள்ளச் செய்யவும்.
- அனைத்து குடும்ப உறுப்பினர்களுக்கும் அவர்கள் நாளாந்தம் மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்யும் விதத்தில் அவர்களிடையே அப்பழக்கத்தினை விருத்திசெய்தல்.
- வரவுசெலவுத் திட்டத்தினை எய்துவதற்கு குடும்ப உறுப்பினர்கள் பொறுப்புக்கூறக் கூடியவர்களாக இருக்கச் செய்யதல்.
- செலவிடல் வரையறைகள் பற்றியும் செல்லிடத் தொலைபேசி எச்சரிக்கை, கொடுகடன் அட்டை வரையறை சேமிப்புக்கான நிலையியற் கட்டளை போன்ற செலவினங்களைக் குறைப்பது பற்றி மக்களுக்கு நினைவூட்டல்களுக்கு நடவடிக்கைகளை எடுத்தல்.
- தேவையான பொழுது உங்கள் வரவுசெலவுத் திட்டத்தினை திருத்தி இற்றைப்படுத்திக் கொள்ளுங்கள்
  - உதாரணமாக சம்பள அதிகரிப்பு அல்லது மேலதிக வருமானமொன்றினை நீங்கள் பெறும் பொழுது நீங்கள் உள்ள சேமிப்பு இலக்குகளை அதிகரிக்கலாம்.
  - பணவீக்கம் போன்ற பொருளாதார சூழல்களில் ஏற்படும் மாற்றம் காரணமாக உங்களுக்கு வரவுசெலவுத் திட்டத்தினை மாற்றவேண்டிய தேவை ஏற்படும்.
  - வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்கள், மூத்த பிள்ளை படிப்பு முடிந்து தொழிலொன்றை பெற்றிருக்கின்றான், மற்றப்பிள்ளை தகைமையினைப் பெறுவதற்காக வெளிநாடுசென்று கல்வியைத் தொடர்கின்றான், குடும்ப உறுப்பினர்களிலொருவர் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருப்பதாக அடையாளம் காணப்பட்டிருக்கிறார்.

## அத்தியாயம் முழுமையடைகிறது

இவ்வத்தியாயம், தனிப்பட்ட நிதியியல் முகாமைத்துவம் பற்றி தீர்மானிப்பதில் நிதியியல் அறிவின் வகிபாகம் பற்றி கவனம் செலுத்துகிறது. நினைவில் வைத்திருக்கவேண்டிய முக்கிய அம்சங்களாவன:

- தனிப்பட்ட நிதி முகாமைத்துவத்தின் முக்கிய கூறுகளாக வருமானம் செலவினங்கள், சேமிப்புக்கள், முதலீடுகள், படுகடன் மற்றும் பாதுகாப்பு என்பன காணப்படுகின்றன.
- தொழில்நிலை, தொழில்முயற்சியாண்மை, பகுதிநேரவேலை, வேளாண்மை மற்றும் விலங்கு வளர்ப்பு போன்ற வருமானம் ஈட்டும் வாய்ப்புபொன்றின் கிடைப்பனவினை அடையாளம் காணுதல். அதேபோன்று தகைமைகள் பயிற்சி மற்றும் அனுபவம் மற்றும் மென்மையான தேர்ச்சி என்பன வருமானத்தினை முகாமைப்படுத்துவதற்கு அவசியமானவையாகும்.
- செயற்படா வருமானம் வருமானத்தினை மேம்படுத்துவதற்கு இன்றியமையாததாகக் காணப்படுவதுடன் வாழ்க்கையின் அழுத்தத்தினையும் குறைக்கிறது. உங்களுடைய செயற்படா வருமானம் உங்களுடைய செலவினங்களை விஞ்சும்போது நீங்கள் நிதியியல் ரீதியில் சுதந்திரமானவராக மாறுகின்றீர்கள்.
- உங்கள் செலவினங்கள் உங்கள் வருமானத்தினை விஞ்சக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. உங்கள் முன்னுரிமைகள் பற்றி தீர்மான மெடுத்ததும் நீங்கள் எவ்வளவினை செலுத்த வேண்டும் என்பன தீர்மானியுங்கள். உமது திட்டம் நீர் உழைப்பதிலும் பார்க்க கூடுதலான செலவினை ஏற்படுத்தக்கூடாது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- பல்வேறுபட்ட செலவினங்களையும் வகைப்படுத்தல்களையும் அடையாளம் காண்பதும் வருமான மட்டங்களின் அடிப்படையில் அவற்றிற்கு முன்னுரிமையளிப்பதும் இன்றியமையாததாகும். செலவினத்தின் மனோதத்துவ ரீதியான பகுப்பாய்வு, ஏப்பிரகாம் மாஸ்லோவின்படி மனித தேவைகளின் ஒழுங்குவரிசை, செலவிடல் மட்டங்களை புரிந்து கொள்வதற்கு உதவுதல், தேவை மற்றும் விருப்பம் என்பனவற்றை தெளிவாகப்புரிந்து கொள்வது சிறந்த செலவின முகாமைத்துவத்திற்கான உத்திகளைப் பின்பற்றுவதற்கு இன்றியமையானதாகும்.
- சேமிப்பு பணம் வெறுமனே விரிவான வங்கிக் கணக்கினை மட்டும் கட்டியெழுப்புமொன்றல்ல. இது ஏனைய இன்றியமையாத தேர்ச்சிகளையும் கற்பிக்கிறது. இது நன்கறிந்த நிலையில் நீங்கள் இருப்பதனையும் சுய கட்டுப்பாடுகளை நீங்கள் பின்பற்றுவதற்கும் உங்களை அனுமதிப்பதுடன் உங்கள் எதிர்காலத்தினை திட்டமிடவும் உதவுகிறது.
- ஆற்றல்வாய்ந்ததும் கடுமையானதுமான சேமிப்புத் திட்டத்தினை பின்பற்றுவது அவசரகால நெருக்கடிகளை எதிர்நோக்குவதற்கும் அனைத்து நிதியியல் இலக்குகளை நிறைவேற்றவும் உதவுகிறது.
- முதலீடுகளில் குறிக்கோள், இடர்நேர்வு மற்றும் பாதுகாப்பு, வருவாய் திரவத்தன்மை, வருவாய்க்காலம், வரி மற்றும் முதிர்ச்சிக் காலம் போன்ற அநேக காரணிகளை பரிசீலனையில் கொள்ளவேண்டும்.
- முதலீடுகளை மேற்கொள்வது உங்கள் நிதியியல் சுயாதீனத்தினை மேம்படுத்துவதுவதுடன் செல்வத்தினை உறுதிப்படுத்துவதற்கும் வழிவகுக்கிறது. இலங்கையில் கிடைக்கக்கூடிய பங்குகள், முறிகள், சமவாய நிதியம், உண்மைச்சொத்து, தொழில்முயற்சியாண்மை மற்றும் வங்கிக் கணக்குகள் போன்ற முதலீட்டு வாய்ப்புக்களை அடையாளம் காண்பதும் சரியான முதலீட்டு கருவிகளை தெரிவுசெய்வதும் தொடர்பான இடர்நேர்வுகளையும் வருமானங்களையும் ஒப்பிடுவதும் செல்வத்தினைக் கட்டியெழுப்புவதற்கும் அதன்மூலம் நிதியியல் இலக்குகளை எய்துவதற்கும் உதவுகிறது.
- பணத்தின் நேரப்பெறுமதி முதலீட்டுத் தேர்வுகளை பகுப்பாய்வு செய்வதற்கு இன்றியமையாததொரு கருவியாகும். கூட்டுவட்டியின் தன்மையினை அடையாளம் காண்பது முதலீட்டின் பெறுமதியினை உயர்த்த உதவும்.
- படுகடன் என்பது நிதியிடலின் மிக முக்கியமான மூலமாக இருப்பதுடன் எதிர்கால இலக்குகளை தாமதமின்றி எய்தவும் உதவுகிறது. படுகடனை சரியான முறையில் முகாமைப்படுத்துவது படுகடன் பொறிகளில் சிக்குவதனைத் தவிப்பதற்கு இன்றியமையாததாகும்.
- காப்புறுதி எதிர்கால இடர்நேர்வுகளையும் நிச்சயமற்ற தன்மைகளையும் பாதுகாப்பதுடன் ஆற்றல்வாய்ந்த ஓய்வுகால திட்டமிடல் வயதுமுதிர்ந்தவர்களுக்காக அமைதியான மற்றும் சுயாதீனமான ஓய்வுகாலத்தினையும் உறுதிப்படுத்தும்.
- வருமானங்கள், செலவினங்கள், சேமிப்புக்கள் மற்றும் படுகடன் என்பவற்றைத் திட்டமிடுவதற்கு வரவுசெலவுத்திட்டம் வலிமைமிகுந்த கருவியாக காணப்படுகிறது.

அத்தியாயம் 4

# நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான நிதியியல் முகாமைத்துவம்

## 4.1. அறிமுகம்

### கற்றலின் பெறுபேறுகள்

- நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான நிதியியல் அறிவின் முக்கியத்துவத்தினை விளங்கிக் கொள்ளுதல்.
- புதிய வியாபாரத்தினை ஆரம்பிப்பதற்கான நான்கு படிமுறைகள் பற்றி ஆராய்தல்.
- வியாபாரத்திட்டத்தினை அபிவிருத்தி செய்கின்றமையின் முக்கியத்துவத்தினை விளங்கிக் கொள்ளுதல்.

நிதியியல் அறிவு வெற்றிகரமான வியாபாரமொன்றின் அத்திவாரமாகும். இது வரவுசெலவுத் திட்டப்படுத்தல், காசுப் பாய்ச்சல் முகாமைத்துவம் மற்றும் முதலீட்டு மதிப்பீடு போன்ற நிதியியல் முகாமைத்துவத்தின் முக்கிய கோட்பாடுகளை ஆரம்பத்திலிருந்தே விளங்கிக் கொள்வதற்கு தொழில் முயற்சியாண்மையாளர்களுக்கு உதவுவதன் மூலம் அவர்களதுவியாபாரங்கள் பற்றிய தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வழியமைக்கிறது.

நிதியியலறிவு வியாபாரத்தினை ஆரம்பிக்கும்போது தொழில் முயற்சியாளர்கள் ஆரம்ப செலவுகளை மதிப்பிடுவதற்கும் வளங்களை காத்திரமான முறையில் ஒதுக்குவதற்கும் பொருத்தமான நிதியியல் முறையினை தெரிவு செய்யவும் உதவுகிறது. இது, எதிர்கால வருமானங்கள் மற்றும் செலவுகளை எதிர்வு கூறுவதன் மூலம் வியாபார மாதிரியின் சாத்தியத் தன்மையினையும் மதிப்பிடுகின்றது.

வியாபாரம் உறுதித் தன்மையுடன் தொழிற்படத் தொடங்கியதும் நிதியியல் அறிவு இன்னமும் முக்கியமானதொன்றாக மாறிவிடுகின்றது. இது தொழில் முயற்சியாளர்கள் அவர்களது திரவத் தன்மையினையும் கடனையும் முகாமைப்படுத்த உதவுகின்ற வேளையில் வியாபார இலாபத்தன்மையினையும் உச்சப்படுத்துகிறது. மேலும், இது வியாபாரங்கள் நீடித்து நிலைத்திருக்கும் முதலீடுகளூடாகவும் இடர்நேர்வுகளை முகாமைப்படுத்துவதன் மூலமும் வளர அனுமதிக்கிறது.

தனஞ்ஜய ரத்நாயக்க தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிநிதித்துவ அலுவலரை அவரது சொந்த நகரத்திலுள்ள பிரதேச செயலகத்தில் சந்திக்கின்றார்.






மேற்குறிப்பிட்ட கலந்துரையாடலில் வியாபாரத்தினை நீங்கள் தொடங்குவது மனக்கிளர்ச்சியை ஏற்படுத்துவது மட்டுமன்றி சவால்மிக்க பயணமும் கூட. இது திட்டமிடல், மன உறுதி மற்றும் உபாய அணுகுமுறை தீவிரமான கவனம் என்பனவற்றைத் தேவைப்படுத்துகிறது.

உங்கள் நிறுவனத்தினை இலங்கையில் ஆரம்பிப்பது சவால்மிக்க பணியொன்றாக இருக்கும். வியாபாரத்தினை எவ்வாறு தொடங்குவது, இச்செயல்முறையின் பிரதான நடவடிக்கை, எவ்வாறு நிதியிடுவது என்பன தொடர்பில் உங்களிடம் பல கேள்விகள் இருக்கலாம்.

தொழில்முயற்சியாண்மையும் கூட இடர்நேர்வுகளுடனும் வெகுமதிகளுடனுமே வருகின்றன. இது உங்களது எதிர்காலத்திற்கு தனித்துவமான தொழில் பாதையொன்றினை உருவாக்குகிறது. மேலும், உங்கள் நிதியியல் வெற்றி மேலும் பலரை அவர்களது சொந்த வியாபார் ஆரம்பிபதற்கு தூண்டுதலாக அமையலாம்.

இருக்கும் இவ்வழி காட்டலிலுள்ள பின்வரும் படிமுறைகள் உங்களின் விரும்பிய வியாபாரக் கனவினை அடைய உங்களுக்கு உதவும்.

## உமது சொந்த வியாபாரத்தினை தொடங்குவதற்கான 4 படிமுறைகள்

**படிமுறை 1 : உமது வியாபார யோசனையை விரிவுபடுத்தல்**

ஒரு வியாபார திட்டத்தினை தயார்செய்வது செய்வது என்பது வெற்றிகரமான வியாபாரத்தினை தொடங்குவதனை நோக்கிய முதல் நடவடிக்கையாகும். இது அறிவு, புத்தாக்கம் மற்றும் தொடர்பான தேர்ச்சி என்பனவற்றை இணைக்கின்ற ஒரு உருவாக்க செயன்முறையாகும். ஒரு சிறந்த வியாபாரத்திட்டமானது சாத்தியமானதாகவும், தனித்துவமானதாகவும் மற்றும் உங்கள் விருப்பம் மற்றும் வாடிக்கையாளர் தேவை என்பனவற்றைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

ஒரு வியாபாரத்திட்டம் ஆரம்பத்தில் மிக நேர்த்தியாக இருப்பது அரிதாகும். சந்தைப் பதிலிறுப்பு, வளர்ந்துவரும் போக்குகள், வாடிக்கையாளர் தேவைகள் மற்றும் தொழில்நுட்ப மாற்றங்கள் என்பவற்றின் அடிப்படையில் உங்கள் யோசனையைத் திருத்தியமைத்து மேம்படுத்துவதில் திறந்தமனதுடன் இருங்கள்.

**படிமுறை 2: தரவுகளை ஒன்றுதிரட்டல் மற்றும் பகுப்பாய்வு செய்தல்.**

உங்கள் வியாபாரத்திட்டங்களை அடையாளம் கண்டதும் நீங்கள் உங்கள் உள்ளக மற்றும் வெளியக வியாபார சூழ்நிலைகளை தெரிந்திருத்தல் வேண்டும். இது உங்கள் உத்தேச வியாபாரத்தின் பரந்தளவு ஆராய்ச்சிகளை அல்லது பின்னணி ஆய்வுகளை தேவைப்படுத்துகின்றது.

**நீங்கள் ஆய்வு செய்யவேண்டிய காரணிகளில் சில வருமாறு.**

- உத்தேச உற்பத்தி அல்லது சேவையின் தற்போதைய செலவுக் கட்டமைப்பு
- போட்டித் தன்மையின் நிலை (போட்டியாளர்களின் எண்ணிக்கை, அவர்களது பலங்களையும் பலவீனங்களையும் அவர்களது பெறுமானம் மிக்க பிரேரணைகள், புதிய சந்தைகளின் போக்கு, வாடிக்கையாளர் தேவை, முன்னுரிமைகள் மற்றும் கொள்வனவு நடத்தை)
- நடைமுறையிலுள்ள விலையிடல் உபாயங்கள் மற்றும் உற்பத்தியின் இலாபத் தன்மை
- உத்தேச வியாபாரத்தின் மீதான தற்போதைய தொழில்நுட்பங்கள், மற்றும் புதிய தொழில்நுட்பவியல் போக்குகள்
- புதிய வியாபாரத்தின் மீது பணவீக்கம், வட்டி மற்றும் செலாவணி வீதம் போன்ற தற்போது நிலவும் பேரண்டப் பொருளாதார மாறிகளின் தாக்கத்தினைப் புரிந்துகொள்ளுதல்.
- சந்தையில் புதிய வாய்ப்புக்களுக்கான சாத்தியம் மற்றும் நீங்கள் முன்வைக்கின்ற உற்பத்திகளை எவ்வாறு வேறுபடுத்தல்.
- ஆரம்ப முதலீட்டுச் செலவினைப் புரிந்துகொள்ளுதல் மற்றும் நிறுவனத்தின் கிடைக்கத்தக்க நிதியிடல் முறைகளை மதிப்பிடல்.
- நிறுவனத்தின் இலாப நட்டமற்ற புள்ளியைக் கணித்தல்
- திருப்பிச் செலுத்தும் காலம், தேறிய இற்றைப் பெறுமதி, வருவாயின் உள்ளக வருவாய் வீதம் கழிவிடப்பட்ட மீள்செலுத்துதல் மற்றும் முதலீட்டின் வருவாய் போன்ற முதலீட்டு மதிப்பீட்டினை பயன்படுத்தி புதிய முதலீட்டினை மதிப்பிடல் மற்றும் நியாயப்படுத்தல்.
- வியாபாரத்தின் வேறுபட்ட வடிவங்கள் மற்றும் புதிய கம்பனியொன்றினை நிறுவுவதற்கான சட்டத் தேவைப்பாடுகளைப் புரிந்துகொள்ளுதல்
- உத்தேச வியாபாரத்தின் அரசியல் மற்றும் சமூக சூழலின் தாக்கம்
- வியாபாரத்துடன் சேர்ந்து காணப்படும் இடர்நேர்வுகளையும் அவற்றை வெற்றிகொள்ளவதற்கான நடைமுறை உபாயங்களையும் விளங்கிக்கொள்ளுதல்.
- நிறுவனத்தின் எதிர்பார்க்கப்பட்ட பெறுமானம் மற்றும் எதிர்கால வியாபார அபிலாசைகளை புரிந்துகொள்ளுதல்.

**படிமுறை 3 ஒரு வியாபாரத் திட்டத்தினைத் தயாரித்தல்**

உங்கள் வியாபார யோசனைகளை அபிவிருத்தி செய்து, தரவுகளை ஒன்றுதிரட்டி பகுப்பாய்வுகளை நிறைவுசெய்ததும் நீங்கள் வியாபாரத் திட்டத்தினை வரைபுசெய்தல் வேண்டும். வியாபாரத் திட்டமானது நிறுவனத்தின் வழிகாட்டலை உருவாக்கியதும் இதனால் கவரப்பட்ட முதலீட்டாளர்கள் அல்லது நிதியியல் ஏற்பாட்டாளர்கள் இதற்கு நிதியிட உதவுவர். இதுவும் நிறுவனத்தின் இலக்குகளையும் குறிக்கோள்களையும் எய்துவதற்கான உபாயத்தினைக் காட்டும்.

**சிறப்பாக தயாரிக்கப்பட்ட வியாபாரத் திட்டம் பின்வரும் பிரிவுகளை உள்ளடக்குகிறது.**

- பணி, தொலைநோக்கு மற்றும் இலக்குகள்
- வியாபாரக் கட்டமைப்பினையும் முகாமைத்துவக் குழுவினையும் எடுத்துக் காட்டுகிறது.
- வியாபாரம், உற்பத்தி மற்றும் சேவைகளின் தன்மை
- போட்டியாளர்கள், அவர்களது பலம் மற்றும் பலயீனம் மற்றும் சந்தை நியாயப்படுத்தல் மற்றும் இலக்கிடல் சந்தை என்பனவற்றை அடையாளம் காணும் போட்டிப் பகுப்பாய்வுகள்
- முன்மொழிவுகளை மதிப்பிடல்
- தொழிற்பாட்டு உபாயங்கள்
- சந்தைப்படுத்தல் அணுகுமுறை

- நிதியியல் எறிவுகள்
- இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் வியாபார பாதுகாப்பு

வியாபார தொலைநோக்குகளையும் பங்குடமையாளர்களின் ஆற்றல் வாய்ந்த தன்மையினையும் தொடர்வூட்டுவதற்கு நன்கு வடிவமைக்கப்பட்ட வியாபாரத்திட்டம் இன்றியமையாததாகும்.

**படிமுறை 04 நடைமுறைப்படுத்துதல் மற்றும் மீளாய்வுசெய்தல்**

இக்கட்டத்தில் நாம் வியாபாரத் திட்டத்தினை தெளிவான உபாயத்துடன் கூடிய செயற்றிட்டமாக நடைமுறைப்படுத்துவது இன்றியமையாததாகும். நடைமுறைப்படுத்தப்படவுள்ள முக்கிய நடவடிக்கைகளில் சிலவருமாறு,

- உங்கள் வியாபாரத்தினைத் பதிவுசெய்து தேவையான உரிமங்களை அல்லது அனுமதிகளை பெறுகின்ற வேளையில், தொடர்பான சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கி நடத்தல்.
- வியாபாரங்களில் முதலீடு செய்தல் மற்றும் நிதியிடல்.
- சரியான தகைமையுடையவர்கள் பணிக்குக் பெற்றுக்கொண்டு வியாபாரத் தொழிற்பாடுகளை கொண்டு நடாத்துவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு, முறைமைகள் மற்றும் செய்முறைகளை நிறுவுதல்.
- விழிப்புணர்வினை உருவாக்குவதற்கும் வாடிக்கையாளர்களைக் கவர்வதற்குமாக சந்தைப்படுத்தல் உபாயங்களை நிறைவேற்றுதல்.
- தொழிற்படு மூலதன முகாமைத்துவம் மற்றும் வியாபாரத்தின் திரவத்தன்மையினை முகாமைப்படுத்தல்.
- நிதியியல் பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல்.
- வியாபாரத்தின் விநியோக தீர்மானங்கள்

## 4.2. உங்கள் வியாபாரத்தினை எவ்வாறு உருவாக்குவது

உங்கள் சொந்த வியாபாரங்களை ஆரம்பிப்பதற்கு நீங்கள் ஆர்வமுடையவராக இருப்பின், குறித்த வியாபாரத்தினை உருவாக்குவது உங்களுக்கு பொருத்தமுடையதாக இருக்குமா என்பதனைத் தெரிந்து கொள்வது மிக முக்கியமானதாகும். வேறுபட்ட வியாபாரங்கள் அவற்றின் சொத்துடமை மற்றும் சட்டபூர்வதன்மை என்பனவற்றின் அடிப்படையில் வேறுபட்ட வடிவங்களைக் கொண்டிருக்கும்.



### கற்றலின் பெறுபேறுகள்

- சொத்துடமை மற்றும் சட்ட பூர்வத்தன்மை என்பனவற்றின் அடிப்படையில் வியாபாரத்தின் நான்கு முக்கிய வகைகளையும் அடையாளம் காணுதல்.
- ஒவ்வொரு வியாபார வடிவத்திற்குமான சொத்துடமை, சட்டபூர்வத் தன்மை திரவத்தன்மையின் அளவு, பதிவுசெய்தல் மற்றும் தொடர்பான சட்டங்கள் என்பன பற்றி கலந்துரையாடுதல்.
- ஒவ்வொரு வியாபார வடிவத்திற்குமான வரிக்கடப்பாடுகளை புரிந்துகொள்ளுதல்.



தனஞ்சய தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலருடன் தனது கலந்துரையாடலை தொடர்கிறார்கள்.




உரிமை வியாபார மூலதனத்திற்கான பங்களிப்பாளர்களைப் பொறுத்ததாகும். மூலதனம் என்பது வியாபாரத் தொழிற்பாடுகளுக்கு சொந்தக்காரரினால்∵ சொந்தக்காரர்களினால் செய்யப்படுகின்ற முதலீடொன்றாகும். சட்டபூர்வ தன்மைச சட்டம் பதிவுசெய்தல், வியாபாரம் பொறுப்புக்களை தீர்ப்பதற்கு அதன் சொந்தக்காரர்களினால் வழங்கப்படும் பொறுப்பாண்மை மற்றும் தொடர்பான சட்டங்கள் என்பனவற்றிற்கு முன்னரான சட்டபூர்வ பிரச்சனைகளை எடுத்துக் காட்டுகிறது.

சொத்துடமை மற்றும் சட்டபூர்வ தன்மை என்பனவற்றின் அடிப்படையில் வியாபாரத்தின் மூன்று முக்கிய வகைகளை அடையாளம் காண்போம்.

- தனியுடமை
- பங்குடமை
- வரையறுக்கப்பட்ட கம்பனிகள்



**நான் பிரத்தியேக சொந்தக்காரராக இருக்க வேண்டும்**

→ **தனியுடமை**

→ **தனிப்பட்ட வரையறுக்கப்பட்ட கம்பனிகள்**



**நான் எனது வியாபாரத்தின் சொந்தக்காரர்களாக எனது நண்பர்களையும் குடும்பத்தினையும் இணைக்க விரும்புகிறேன்**

→ **பங்குடமை**

→ **தனிப்பட்ட ∴ பகிரங்க வரையறுக்கப்பட்ட கம்பனி**

**பின்வரும் அட்டவணை வியாபார அமைப்புக்களின் வேறுபட்ட வகைகளையும் காட்டி ஒப்பீடு செய்கிறது**

**அட்டவணை: வியாபார அமைப்புக்களின் வேறுபட்ட வகைகளை ஒப்பீடு செய்கிறது.**

| வியாபார வடிவம் | சொத்துடமை | சட்டபூர்வத் தன்மை | பொறுப்புக்களின் அளவு | பதிவு செய்தல் | பதிவுசெய்தலின் வேறுபட்ட சட்டங்கள் |
|---|---|---|---|---|---|
| தனியுடமை | ஒரு உரிமையாளர் மாத்திரம்.<br><br>வியாபாரத்தின் உரிமையாளரை அடையாளம் காணுதல்.<br><br>உரிமையாளர் தனியாக இலாபத்தினை.'. இழப்புக்களை அனுபவிப்பார். | வியாபாரத்திற்கு சட்டபூர்வ அடையாளம் இல்லை. உரிமையாளர் சட்டத்தின் முன்னர் வியாபாரத்தினை பிரசன்னப்படுத்தல் வேண்டும்.<br><br>உரிமையாளரின் பெயரில் இது இருத்தல் வேண்டும். | உரிமையாளர் வியாபாரப் பொறுப்புக்களை ஏற்படுத்த பொறுப்புடையவராவர். அவர்களது சொத்துக்களையும் பயன்படுத்தும் தேவை காணப்படுகிறது. | பதிவுசெய்தல் கட்டாயமானதல்ல. எனினும் வியாபாரம் அமைந்துள்ள பிரதேசத்தின் மாகாண சபையில் தனியுடமை வியாபாரத்தினை பதிவு செய்யலாம். பதிவு செய்தல் முகவரி | ஏற்புடைத்தான தன்மை |
| பங்குடமை | இரண்டு அல்லது கூடுதலான சொந்தக்காரர்கள்.<br><br>சொந்தக்காரர்கள் பங்குடமையர்களாக அடையாளம் காணப்படுகின்றனர்.<br><br>இலாபம்.'. நட்டம் பதிவுசெயதலின் போது இணங்கிக்கொள்ளப்பட்டவாறு பங்காளர்களிடையே பகிரப்படுகிறது. | வியாபாரத்திற்கு சட்டபூர்வ அடையாளமில்லை<br><br>பங்குடமையாளர் சட்டத்தின் முன் வியாபாரத்தினை பிரசன்னப்படுத்த வேண்டும்.<br><br>பங்குடமையாளர் பெயரில் இதனை பயன்படுத்தமுடியும். | பங்குடமையின் பொறுப்புக்களுக்கு பங்குடமையாளர்களின் கூட்டாக பொறுப்புடையவர்களாவர். | மூலதனம் ரூ.1,000 இனை விஞ்சுமாயின் பதிவுசெய்தல் கட்டமாயமானதாகும். வியாபார பதிவு முகவரி அமைந்துள்ள பிரதேசத்தின் மாகாண சபையில் பங்குடமை வியாபாரத்தினை நீங்கள் பதிவுசெய்ய முடியும். | 1890 இன் பங்குடமைச் சட்டம்<br><br>வியாபாரமொன்றினைப் பதிவுசெய்தல் (1987 இன் இல.207) |
| ீசளையவந டுைஅவைநன உழஅியலெ | ுழநெ ழச அழசந ழறநெசள.<br><br>வுாந ழறநெச (ள) யசந ைநெவெகைநைன யள ளூயசநாழடனநசள.<br><br>ுழடெல ய ிியசவ ழக வாந ிசழகவைள றடைட டிந ளாயசநன யஅழபெ ளாயசநாழடனநசள யள னைஎனைநனௌ. | வுாந டிரளைநௌள ளை ைநெவெகைநைன யள ய ளநியசயவந ிநசளழெ ைெ டநபயட அயவவநசள. | ளூயசநாழடனநசள றடைட டிந டயையடிடந கழச வாந டிரளைநௌள ழடெல ரி வழ வாந ளாயசந ழக உயிவையட. | சுநபளைவசயவழைெ ளை உழஅிரடளழசல றவைா வாந சுநபளைவசயச ழக ஊழஅியநைௌ.<br><br>சுநபளைவசயவழைெ உயெ டிந னழநெ ழடெைநெ.<br><br>ஏளைவை: ாவவிள:..'..'.றறற. னசஉ.பழஎ.டம.'. | ஊழஅியநைௌ யுஉவ லே. 07 ழக 2007 |

உங்கள் நகர சபை அல்லது மாவட்ட செயலகத்திலிருந்து வியாபாரப்பெயர்ப்பதிவு மற்றும் வர்த்தக சான்றிதழ் என்பனவற்றைப் பெற்றுக் கொள்வதனை உறுதிப்படுத்துங்கள். மேலும், பொருத்தமான அரச அதிகாரசபைகளுடன் பதிவுசெய்தலும் உங்கள் வியாபாரத்திற்கு தேவையான ஏதேனும் உரிமங்கள் அல்லது அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதும் மிக முக்கியமானவையாகும். இந்நடவடிக்கை சட்ட இணங்குவிப்புக்களை உறுதிப்படுத்துவதுடன் மிகமுக்கியமான ஆர்வமுடைய தரப்பினர்களான வாடிக்கையாளர் முதலீட்டாளர் மற்றும் வழங்குணர்களுடைய வியாபார நம்பகத் தன்மையும் நிறுவுகிறது.

வணிகத்தினுடைய அளவு மற்றும் வியாபாரப்புரள்வின் அடிப்படையில், நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களை வகைப்படுத்துவதற்கு இலங்கையில் பின்வரும் அளவுகோல்கள் காணப்படுகின்றன.

| அளவு ∴ பிரிவு | அளவுகோல் | நடுத்தர | சிறிய | நுண்பாகம் |
|---|---|---|---|---|
| உற்பத்தி | வருடாந்த புரள்வு | ரூ. 351 மில் - 1 பில் | ரூ. 21-350 மில் | ரூ. 20 மில் அல்லது ரூ. 20 மில்லியனுக்கு குறைவு |
| | ஊழியர்களின் எண்ணிக்கை | 51 - 200 | 10-50 | 10 இலும் குறைவு |
| உற்பத்தி | வருடாந்த புரள்வு | ரூ. 351 மில் - 1 பில் | ரூ. 21-350 மில் | ரூ. 20 மில் அல்லது ரூ. 20 மில்லியனுக்கு குறைவு |
| | ஊழியர்களின் எண்ணிக்கை | 51-200 | 5-50 | 5 இலும் குறைவு |

## வேறுபட்ட வகை வியாபாரங்களின் வரிக் கடப்பாடுகளைப் புரிந்துகொள்ளுதல்

நிதியியல் ஆண்டிற்காக வரி விதிக்கத்தக்க வியாபார இலாபங்களைக் கொண்ட அனைத்து வியாபாரங்களும் ஆண்டிற்கான வருமான வரிச்சட்ட மதிப்பீடு என அறியப்படும் தொகையினை அவர்களது இலாபத்தின் மீது செலுத்தல் வேண்டும். வரிவிதிகளும் ஒழுங்கு விதிகளும் கிரமமான மாற்றங்களுக்கு உட்பட்டவையாகும். இற்றைப்படுத்தப்பட்ட வரித் தகவல்களை பெறுவதற்கு https://www.ird.gov.lk/ இனை பார்வையிடவும்.

**உங்கள் வியாபாரத்தின் அடிப்படையில் பொறுப்பு பின்வருமாறு ஏற்படும்:**

| | |
|---|---|
| தனியுடமை | வியாபாரத்தின் வரிவிதிக்கத்தக்க இலாபம் வருமான வரிக் கணிப்பீட்டின்போது அதன் உரிமையாளருடைய வருமான மூலமாக அடையாளம் காணப்படும். (இது வருமான வரிச்சட்டத்தில் உரிமையாளரின் மதிப்பிடத்தக்க வருமானத்தினை ஒரு பகுதியாக அடையாளம் காணப்படுகிறது).<br><br>ஆகவே, உரிமையாளரின் மொத்த வரிவிதிக்கத்தக்க வருமானம் (வியாபார இலாபம் உற்பட) வருமான வரிக்கு பொறுப்புடையதாக இருப்பின் மாத்தரம் வியாபார இலாபம் வருமான வரிக்கு உட்படும்.<br><br>வியாபாரம் நட்டமடைந்திருப்பின், அது அடுத்த ஆண்டிற்கு முன்கொண்டு செல்லப்படும் அல்லது உரிமையாளரின் மதிப்பிடத்தக்க வருமானத்திற்கு எதிராக எதிரீடு செய்யப்படும். |
| பங்குடமை | பங்குடமையொன்றின் வரிவதிக்கத்தக்க இலாபத்திற்குக் நிறுவனமென்ற ரீதியில் வருமான வரியினை செலுத்தவேண்டும்.<br><br>பங்குடமையின் வரிவிதிக்கத்தக்க இலாபம் அவர்களது இலாப-பகிர்வு விகிதத்தின்படி பங்குடமையாளர்கள் பகிரப்படும் என்பதுடன் அவர்களது வருமான வரி விதிப்பில் வருமான மூலங்களின் ஒரு பகுதியாகவும் பரிசீலனை செய்யப்படும்.<br><br>ஒரே இலாபத்திற்கு இரு தடவைகள் வரி விதிக்கப்படுவதனை தவிர்ப்பதற்காக பங்குடமையாளர்களினால் செலுத்தப்படும் மொத்த வரிகள் பங்குடமையாளர்களிடையே பகிரப்படவிருப்பது, அத்தகைய கொடுப்பனவுகளை அவர்களது தனிப்பட்ட வருமான வரி பொறுப்புக்களிடமிருந்து கழித்துக்கொள்ள அவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். |
| பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகள் (தனியார்∴ பொது) | கம்பனிகள் அவற்றின் வரிவிதிக்கத்தக் இலாபத்தின் மீது வரிவிதிக்கத்தக்கனவையாகும்.<br><br>சில வியாபாரங்கள் கைத்தொழிலின் அடிப்படையில் (உதாரணமாக குடிவகை மற்றும் புகையிலை வியாபாரங்கள்) பொதுவான வரி வீதங்களிலும் பார்க்க விசேட வரிவீதங்கள் செலுத்தப் பொறுப்புடையனவாகும். |

உங்கள் வியாபார வருமானத்தின் அடிப்படையில் இலங்கையில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்காக உங்கள் வியாபாரத்தினைப் பதிவுசெய்தல் வேண்டும். மேலதிக தகவல்களுக்கு https://www.ird.gov.lk/ ,id ghu;itaplTk;.

## 4.3. வியாபாரத்தின் செலவுகளை அடையாளம் காணுதல்

உங்கள் வியாபாரத்தின் ஒரே குறிக்கோள் இலாபத்தினை உருவாக்குவதேயாகும். இதனை அடைவதற்கு நீங்கள் உங்கள் உற்பத்திகளை அல்லது சேவைகளை வாங்கிய, தயாரித்த அல்லது வழங்கிய உண்மையான செலவிலும் பார்க்க உயர்ந்த விலைக்கே கட்டாயம் விற்றல் வேண்டும்.



### கற்றலின் பெறுபேறுகள்

- உங்கள் வியாபாரத்தின் செலவுகளைப் பகுப்பாய்வு செய்வதின் முக்கியத்துவத்தினைப் புரிந்துகொள்ளுதல்.
- செலவுக் கோட்பாடுகள் பற்றி கலந்துரையாடுதல் மற்றும் கண்டறியக்கூடிய தன்மை மற்றும் நடத்தையை அடிப்படையாகக் கொண்டு செலவினை வகைப்படுத்தல்.
- உதாரணங்களைப் பயன்படுத்தி அலகொன்றிற்கான செலவினை எவ்வாறு கணிப்பிடுவதென்பதனை கற்றுக் கொள்ளுதல்.
- இலாப நட்டமற்ற புள்ளிக் கோட்பாடு பற்றி உதாரணத்துடன் கலந்துரையாடல்
- உற்பத்தியின் விலையினை நிர்ணயிக்கும் போது பரிசீலிக்கப்படவேண்டிய காரணிகளை அடையாளம் காணவும்
- நுண்பாக சிறிய நடுததர தொழில்முயற்சிகளினால் கடைப்பிடிக்கப்படுகின்ற பொதுவான விலையிடல் உபாயங்களை தெரிந்துகொள்ளுதல்



தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகார சபை அலுவலருக்கும் தனஞ்சயவிற்குமிடையிலான கலந்துரையாடல் வருகை தந்த ஒருவரினால் தடங்கலுக்குள்ளானது.




## தொழில்முயற்சியாளரொருவர் வியாபாரத்தின் செலவுகளை ஏன் பகுப்பாய்வு செய்து கொள்ளுதல் வேண்டும்?

1. வளங்களின் வினைத்திறன்: நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் பெரும்பாலும் மட்டுப்படுத்தப்பட்ட மூலதனங்களுடனேயே தொழிற்படுகின்றன வியாபாரவளங்களை காத்திரமான விதத்தில் முகாமைசெய்துகொண்டு செலவினை மீதப்படுத்தும் வாய்ப்புக்களை அடையாளங்காணவும் செலவுப் பகுப்பாய்வு உதவுகின்றது.

2. விலையீட்டுத் தீர்மானங்கள்: உண்மையான செலவுகளைக் கணிப்பதற்கும் உற்பத்திகளின் துல்லியமான விலைகள் நிர்ணயிப்பதற்கும் நிலையான, மாறத்தக்க, மற்றும் ஏனைய செலவுகளை புரிந்துகொள்வது இன்றியமையாததாகும்.

3. இலாபத்தன்மைப் பகுப்பாய்வு: செலவுப் பகுப்பாய்வு நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் ஒவ்வொரு உற்பத்தியினதும் இலாபத்தன்மையினை தீர்மானிப்பதற்கு உதவுவதுடன் உயர்இலாபம் தரும் உற்பத்திகளின் மீது கவனம் செலுத்தவும் உதவுகிறது.

4. மேம்பட்ட தீர்மானங்களை மேற்கொள்ளுதல்: நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் நிலையத்தில் தயாரிப்பதா, வெளியாட்களூடாக பொருட்களை தயார்செய்வதா அல்லது விரிவுபடுத்தப்பட்ட தொழிற்பாடுகள் மூலமாகவா பொருட்களைப் பெறுவது அல்லது உற்பத்திகளை நிறுத்ததுவதா என்பது பற்றி தீர்மானித்தல் வேண்டும். இத்தீர்மானங்களுக்காக செலவுப் பகுப்பாய்வுகள் தேவையான தகவல்களை வழங்குகின்றன.

5. வரவுசெலவுத் திட்டப்படுத்தல் மற்றும் திட்டமிடுதல்: செலவுப் பகுப்பாய்வு காத்திரமான வரவுசெலவுத்திட்டப்படுத்தலுக்கு அடித்தளத்தினை உருவாக்குகிறது. குறுங்கால மற்றும் நீண்டகால தொழிற்பாடுகளுக்கான திட்டமிடலுக்கும் நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கு உதவியளிக்கிறது.

6. கண்காணிப்பு மற்றும் மாற்றப் பகுப்பாய்வு: நுண்பாக, சிறிய, மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் நிறுவனத்தின் நிதியியல் செயலாற்றத்தினை கண்காணிப்பதற்கும் மிகையான செலவுகளை முகாமைப்படுத்தவும் முடியும் என்பதுடன் மிகையான செலவுகளைத் தடுக்கவும் முடியும். வியாபாரம் ஏதேனும் சாதகமற்ற மாற்றத்தினைனை கண்டறியுமாயின் அவற்றைக் குறைப்பதற்கு முன்கூட்டிய வழிமுறைகளை எடுக்கமுடியும்.

## செலவு என்றால் என்ன?.

இலாபத்தினை ஈட்டுவதற்காக உற்பத்தியைச் செய்வதற்கும் விற்பனை செய்வதற்காக ஏற்படுகின்ற உண்மையான அல்லது பெயரளவிலான செலவினங்களாகும்.

**தனஞ்ஜயவின் உணவகத்திற்கு பின்வருவன சாத்தியமான செலவுகளாக காணப்படுகின்றன**

- நிலையத்துக்கான வாடகைச் செலவு
- மின்வலுப் பட்டியல்
- நீர்ப் பட்டியல்
- வியாபாரப் பதிவுக்கட்டணம்
- வாடகை உடன்படிக்கைக்கான சட்டக் கட்டணம்
- உணவைத் தயாரிப்பதற்கான சுவையூட்டிகளின் செலவு (அரிசி, மரக்கறிகள், மீன் இறைச்சி, முட்டை மற்றும் நறுமணப் பொருட்கள் போன்றவை)
- அலுவலர்களுக்குச் செலுத்தப்படுகின்ற சம்பளம். (ஷெப், காசாளர், சுத்திகரிப்பாளர், உணவு பறிமாறுபவர்கள் போன்றவர்கள்.)
- சமயலறைச் சாதனங்களின் செலவு
- உணவு மேசைப் பொருட்களின் செலவு
- உணவுத் தட்டுகள் மற்றும் கறிவட்டில்களுக்கான செலவு.
- சமையல் எரிவாயுச் செலவு
- தளபாடங்களின் செலவு (மேசை மற்றும் கதிரை)
- சந்தைப்படுத்தல் செலவு (விளம்பரங்கள்)
- உள்ளக அலங்காரங்களின் செலவு
- தளபாடங்களின் தேய்மானம்
- கடனின் வட்டி

## உங்கள் வியாபாரத்தின் செலவுகளை எவ்வாறு வகைப்படுத்துவது

உங்கள் வியாபாரத்தின் சாத்தியமான அனைத்து செலவு விடயங்களையும் நீங்கள் அடையாளம் கண்டதும் இச்செலவுகளை நீங்கள் பலவழிகளில் வகைப்படுத்த முடியும். மிகப் பொதுவாக பயன்படுத்தப்படுவதும் மிக முக்கியமானதுமான வகைகள் வருமாறு:

1. **கண்டறியக்கூடிய தன்மையின் மூலம்:** இவ்வகைப்படுத்தலானது வியாபாரத்தின் இறுதி உற்பத்தி தொடர்பில் கண்டுபிடிக்கக்கூடியவற்றின் அளவினை அடிப்படையாகக் கொண்டதாகும்.

2. **நடத்தையின் மூலம் :** இவ்வகைப்படுத்தல் நடவடிக்கை மட்டத்திலுள்ள (உற்பத்தி செய்யப்பட்ட அல்லது விற்பனை செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை) மாற்றங்கள் தொடர்பில் செலவு எவ்வாறு மாற்றமடைகின்றது என்பதனை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

## கண்டறியக்கூடிய தன்மையின் அடிப்படையில் செலவுகளை வகைப்படுத்தல்

இறுதி உற்பத்திக்கான செலவுகளைக் கண்டுபிடிக்கும் தன்மையின் படி இரண்டு வகையான செலவுகள் காணப்படுகின்றன.

1. **நேரடிச் செலவுகள்:** நேரடிச் செலவுகளை தயாரிக்கப்பட்ட உற்பத்தி சேவைகளுடன் மிகச் சுலபமாக அடையாளம் காணமுடியும். இவை தயாரிப்பு வியாபாரத்தின் முக்கிய செலவுகளாக இருப்பதுடன் இச்செலவுகள் உறப்படாமல் உற்பத்திகளை மேற்கொள்ளவோ பணிகளை வழங்கவோ முடியாது.

   **உதாரணம்:** உணவகம்: உற்பத்தியானது பரிமாறப்படுகின்ற உணவே ஆகும்.

   - உணவு விடயங்களின் உட்சேர்க்கைகள். (அரிசி, மா, காய்கறிகள், மீன், கோழி இறைச்சி, வாசனைப் பொருட்கள், எண்ணெய் போன்றவை) ☐ இவை மூலப்பொருள் செலவு என அழைக்கப்படுகின்றது.
   - சமையற்காரர்களுக்கான செலவு - இவை தொழிலாளர் செலவு என அழைக்கப்படும்.
   - ஏனைய செலவுகள் இவை உற்பத்தகளுடன் நேரடியாகத் தொடர்புகின்றன. (தாளிலான கைத்துடைக்கும் துண்டுகள், பொதிகள் மற்றும் சுட்டுத்துண்டுகள் போன்றவை) இவை நேரடியான மேந்தலைச் செலவுகள் என அழைக்கப்படுகின்றன).

2. **மறைமுகச் செலவுகள்.:** மறைமுக மேன்தலைச் செலவுகள்: இச்செலவினங்கள் பொருட்களை அல்லது பணிகளை உற்பத்தி செய்வதுடன் நேரடியாக தொடர்புபடுவதில்லை. மறைமுகமான செலவுகளை உற்பத்தியில் இலகுவாக கண்டறிய முடியாது.

   **உதாரணம்:** உணவகம், உற்பத்தி பரிமாறப்படும் உணவாகும்.

   காசாளர் சம்பளம், வாடகை, மின்பட்டியல், மற்றும் விளம்பரச் செலவு என்பன தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் உணவு விடயங்களின் எண்ணிக்கைக்கேற்ப மாற்றமடைவதில்லை.

## நடத்தையின் மூலம் செலவுகளை வகைப்படுத்தல்

நடத்தையின் படியான செலவு வகைப்படுத்தல்கள் செலவுகளை பின்வருமாறு வகைப்படுத்தப்படுத்துகிறது.:

1. **மாறுகின்ற செலவு:** மாறுகின்ற செலவு உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கையிற்கேற்ப வேறுபடுகின்றது.

   **உதாரணம்:** உணவகம்: உற்பத்தி பரிமாறப்படும் உணவாகும். னுசைநஉவ அயவநசயைட: சஉைநஇ எநபநவயடிடநள. குளைாஇ அநயவஇ நபபள

   **நேரடி மூலப்பொருட்கள்:** அரிசி, காய்கறிகள், மீன், இறைச்சி, முட்டை

   **நேரடி தொழிலாளர்:** துண்டுவீத அடிப்படையில் செலுத்தப்படுகிறது.

   **நேரடி தொழிலாளர்:** ஒரு தட்டுச் சோற்றிற்காக செலுத்தப்படும் கூலி (சமையற்காரரின் மாதாந்த சம்பளமல்ல)

2. **நிலையான செலவு:** நிலையான செலவு குறுங்காலத்தில் வியாபார உற்பத்திகளின் அலகுகளினதும் எண்ணிக்கைக்கேற்ப மாறுவதில்லை.

   **உதாரணம்:** உணவகம்: உற்பத்தி உற்பத்தியானது பரிமாறப்படுகின்ற உணவே ஆகும். மறைமுகமான செலவு உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் அலகுகளின் எண்ணிக்கைக்கேற்ப வேறுபடாது.

   வாடகை செலவு, காசாளர் சம்பளம் மற்றும் சுத்திகரிப்பாளர் சம்பளம் என்பன தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் ஒரு கோப்பை சோறின் எண்ணிக்கையிற்கேற்ப வேறுபடாது.

3. **அரை மாறும் செலவு.:** செலவு மாறுபடும் மற்றும் நிலையான கூறுகள் இரண்டினையுமம் கொண்டிருக்கிறது.

   **உதாரணம்:** மின்வலுப் பட்டியல் நிலையான வாடகை கூறொன்றினையே கொண்டிருக்கிறது. அது உற்பத்தி செய்யப்படும் அல்லது விற்கப்படும் அலகுகளின் எண்ணிக்கைக்கேற்ப மாற்றமடைவதில்லை. எனினும், மின்வலு பாவனைக்கான கட்டணம் வியாபாரத் தொழிற்பாடுகளின் நேரம், நடவடிக்கை மட்டம் என்பனவற்றின் தாக்கத்திற்குட்படுகிறது. இம்மாறும் தன்மையானது வியாபாரத்தின் தன்மை மற்றும் மின்வலு எவ்வாறு பாவிக்கப்படுகின்றது என்பவற்றில் தங்கியிருக்கிறது.

**வியாபாரத் தொழிற்பாட்டுச் செலவு அல்ல.**

| **செலவுவிடயம்: பகுப்பாய்வு** | **கண்டறியும் தன்மை** | | | | **நடத்தை** | | |
|---|---|---|---|---|---|---|---|
| | **நேரடி** | | | **மறைமுகம்** | **மாறும்** | **நிலையானது** | **அரைமாறும்** |
| | **மூலப்பொருள்** | **தொழிலாளர்** | **செலவு** | | | | |
| வாடகைச் செலவு | | | | ✓ | | ✓ | |
| மின்பட்டியல் | | | | ✓ | | | ✓ |
| நீர்ப்பட்டியல் | | | | ✓ | | | ✓ |
| வியாபாரப் பதிவுக் கட்டணம் | வியாபாரத் தொழிற்பாட்டுச் செலவு அல்ல. | | | | | | |
| வாடகை உடன்படிக்கைக்கான சட்ட கட்டணம் | வியாபாரத் தொழிற்பாட்டுச் செலவு அல்ல. | | | | | | |
| உணவு தயாரிப்பதற்கான சேர்மானங்கள் (அரிசி, காய்கறிகள், மீன், இறைச்சி, முட்டை, வாசனைத் திரவியங்கள் எண்ணை போன்றவை) | ✓ | | | | ✓ | | |
| அலுவலர்களுக்கு செலுத்தப்படும் சம்பளங்கள், சமையற்காரர், காசாளர், சுத்திகரிப்பாளர், பரிமாறுபவர் போன்றவர்கள் | | | | ✓ | | ✓ | |
| சமையலறைச் சாதனங்களின் செலவு | வியாபாரத் தொழிற்பாட்டுச் செலவு அல்ல. | | | | | | |
| உணவு மேசைகளின் பொருட்கள் | வியாபாரத் தொழிற்பாட்டுச் செலவு அல்ல. | | | | | | |
| உணவுத் தட்டுக்கள், கோப்பைகளின் செலவு | வியாபாரத் தொழிற்பாட்டுச் செலவு அல்ல. | | | | | | |
| சமையல் எரிவாயுவின் செலவு | | | | ✓ | ✓ | | |
| தளபாடங்களின் செலவு (மேசை மற்றும் கதிரை) | வியாபாரத் தொழிற்பாட்டுச் செலவு அல்ல. | | | | | | |
| சந்தைப்படுத்தல் செலவு (விளம்பரம்) | | | | ✓ | | ✓ | |
| உள்ளக வடிவமைப்புச் செலவு | வியாபாரத் தொழிற்பாட்டுச் செலவு அல்ல. | | | | | | |
| தளபாடங்களின் தேய்மானம் | | | | ✓ | | ✓ | |
| கடன் தவணைகள் (கடன்பெறப்பட்டிருப்பின் மூலதனத்தினைக் கண்டறிதல்) | | | | ✓ | | ✓ | |

## அலகொன்றிற்கான செலவினை எவ்வாறு கணிப்பது

அலகொன்றிற்கான செலவினைக் கணிப்பதற்கு அலகொன்றிற்கான மாறும் செலவினைக் கணிப்பதே இலகுவான வழியாகும்.

| | |
|---|---|
| அலகொன்றிற்கான மூலப்பொருட்களின் செலவு | xxx |
| அலகொன்றிலிருந்தான தொழிலாளர் செலவு | xxx (தொழிலாளருக்கு துண்டு வீதத்தில் செலுத்தப்படுமிடத்து மாத்திரம் |
| அலகொன்றிற்கான நேரடிச் செலவினங்கள் | xxx |
| அலகொன்றிற்கான மொத்த மாறும் செலவு | xxx |

**உதாரணம்:** தனஞ்சயவின் உணவகத்தில் ஒரு கோப்பை சோறு மற்றும் கறிக்கான மாறும் செலவினை பின்வருமாறு கணிக்கமுடியும்.

**நேரடி மூலப்பொருள் செலவு:**

| | |
|---|---|
| அரிசி (ரூ.230 கி.கிராம் இது ஓ 0.125 கி.கிராம்) | 28.75 |
| மூன்று காய்கறிகள் (ரூ. 400∴கி.கிராம் ஓ 0.04 கி.கிராம் ஓ 3) | 48.00 |
| பருப்பு (ரூ. 300∴ கி.கிராம் ஓ 0.03 கி.கிராம்) | 09.00 |
| முட்டையொன்று | 45.00 |
| கோப்பையொன்றுக்கு மொத்த நேரடி மூலப்பொருள் செலவு | 130.75 |

துப்பு: நேரடித் தொழிலாளர் செலவினை இங்கே பிரயோகிக்க முடியாது. ஏனெனில் சமைக்கவோ அல்லது சமையற்காரருக்கோ, நடைமுறையில் துண்டு வேலை அடிப்படையில் சம்பளம் செலுத்தப்படுவதில்லை விற்கப்பட்ட தட்டுக்களின் எண்ணிக்கையினைக் கருத்திற்கொள்ளாது மாதாந்த சம்பளம் செலுத்தப்படுகிறது.

ஆகவே தட்டு ஒன்றிற்கான சோறின் மாறும் செலவு = ரூ. 130.75

தனஞ்ஜய ஒரு தட்டு சோற்றினை ரூ.350 இற்கு விற்பனை செய்வாராயின் ஒரு தட்டு சோற்றிலிருந்து அவருக்கு கிடைக்கும் பங்களிப்பு ரூ.219.25 (350-130.75) ஆகும். எனினும், இது அவரின் இறுதி இலாபமல்ல. இறுதி இலாபத்தினை கண்டறிவதற்கு அவர் அவரது மேன்தலைச் செலவுகளை பங்களிப்பிலிருந்து கழித்தல் வேண்டும்.

| | |
|---|---|
| **தட்டொன்றிற்கான விற்பனை விலை** | 350.00 |
| **தட்டொன்றிற்கான மாறும் செலவு** | 130.75 |

தட்டொன்றிற்கான பங்களிப்பு 219.25 (விற்பனை விலை - (மாத்திரம்) மாறும் செலவு)

## இலாபநட்டமற்ற புள்ளி அலகுகள்

இலாபநட்டமற்ற புள்ளி என்பது வியாபாரத்தின் மொத்த செலவினை ஈடுசெய்வதற்கு விற்கப்பட வேண்டிய அலகுகளின் எண்ணிக்கை

தனஞ்சய, இயல்பான வாடகை சமையல் வாயு, சம்பளங்கள், பொதுப்பயன்பாடு பட்டியல்கள் போன்ற நிலையான மறைமுக செலவுகள் அனைத்தையும் ஈடுசெய்வதற்கு எத்தனை தட்டுக்களை விற்பனை செய்ய வேண்டும் என்பதனை கணிக்க முடியும்.

**வியாபாரத்தின் மொத்த நிலையான செலவு = அலகுகளில் இலாப நட்டமற்ற புள்ளி**

## அலகொன்றின் பங்களிப்பு

தனஞ்ஜயவின் உணவகம் மாதமொன்றிற்கு ரூ.150,000 கொண்ட மொத்த நிலையான செலவினை (வாடகை, சம்பளங்கள், பயன்பாட்டுப் பட்டியல் போன்றவை உட்பட) ஏற்படுத்துமாயின் அவரின் மொத்த செலவினை ஈடுசெய்ய விற்கவேண்டிய தட்டுக்களின் எண்ணிக்கை

150,000/219.25 = 685 **மாதமொன்றிற்கு** 685 **தட்டுக்கள்**

## இலாப - நட்டமற்ற பெறுமதி: விற்பனைகள்

**இலாப - நட்டமற்ற பெறுமதி ஸ்ரீ அலகுகளில் இலாப நட்டமற்ற புள்ளி ஓ எதிர்பார்க்கப்படும் விற்பனை**

விலை மேற்குறிப்பிட்ட உணவில் மாதாந்தம் 685 தட்டுக்களை விற்பனை செய்யும்போது அவர் மாதாந்த செலவினை ஈடுசெய்யமுடியும்.

ஆகவே இலாப நட்டமற்ற புள்ளிகள் பெறுமதி = 685 தட்டுக்கள்ழு X &. 350/- (விற்பனை விலை) = Rs239,750/=

**இலக்கிடப்பட்ட இலாபம்**

ஏதேனும் தட்டுக்களை மேலதிகமாக விற்பனை செய்யும்போது வியாபாரத்திற்கான இலாபம் ஏற்படத் தொடங்குகிறது.

தனஞ்ஜய மாதமொன்றிற்கு ரூ.100,000 இலாபத்தினை ஈட்டவேண்டுமாயின் அவர்

(150,000+100,000)/219.25=1,141 தட்டுக்களை விற்கவேண்டியிருக்கும்.

மேலேயுள்ள உதாரணத்தில் எடுத்துக்காட்டப்பட்டவாறு, தீர்மானங்களை எடுக்கும்போது வியாபாரத்தின் செலவுகளை பகுப்பாய்வு செய்வதிலிருந்து தொழில்முயற்சியாளரொருவர் கணிசமான நன்மைகளைப் பெறமுடியும்.

## உங்கள் உற்பத்திகளுக்கு எவ்வாறு விலையிடுவது

**உங்கள் உற்பத்திக்கான விலையினை நிர்ணயிக்கும் போது பரிசீலனையில் கொள்ளப்படவேண்டிய காரணிகள்**

- **இலக்கு சந்தையை விளங்கிக் கொள்ளுதல்:** உங்கள் இலக்கு சந்தையாளர் யார் அவர்களின் தேவை என்ன? உங்கள் உற்பத்திக்கு அவர்கள் எவ்வளவினை செலுத்தவிரும்புவர். இலக்கு வாடிக்கையாளர்கள் தாங்கிக் கொள்ளக்கூடிய விலைகளை நிர்ணயிப்பதற்கு, இலக்கு சந்தையை சிறந்த முறையில் விளங்கிக் கொள்வது மிக இன்றியமையாததாகும்.

- **உங்கள் உற்பத்தி அல்லது சேவைகளை கொள்ளுதல்:** இதன் தனித்துவமான பண்புகளும் நன்மைகளும் யாவை? போட்டியுடன் இதனை எவ்வாறு ஒப்பிடலாம். இதன் பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு உங்கள் விலைகளை நியாயப்படுத்தக்கூடியவாராக நீங்கள் இருத்தல் வேண்டும்.

- **உங்கள் செலவுகளின் வகை :** உங்கள் நிலையான செலவுகள் யாவை? உங்கள் மாறும் செலவுகள் என்ன? உங்கள் விலைகள் உங்கள் செலவுகளை ஈடுசெய்வதனையும் நீங்கள் இலாபமடைவதனையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

- **உங்கள் போட்டித் தன்மையினைப் பகுப்பாய்வு செய்தல்:** போட்டியாளர் விலைகள் யாவை? அவர்களது உபாயங்கள் யாவை? உங்கள் விலைகளை நிர்ணயிப்பதற்கு முன்னர் உங்கள் போட்டியாளர் பற்றியும் அவர்களின் உபாயங்கள் பற்றியும முழுமையாக தெரிந்துகொள்ளுதல் வேண்டும்.

- **நெகிழ்ச்சித் தன்மையுடன் இருங்கள்:** உங்கள் வியாபாரம் வளர்ச்சியடைந்து மாற்றங்களுக்கு உள்ளாகும் போது உங்கள் விலையிடல் உபாயமும் காலப்போக்கில் மாற்றமடையக்கூடும்.

**வியாபாரங்களினால் கடைப்பிடிக்கப்படும் பொதுவான விலையிடல் உபாயம்**

- **உள்ளிணைக்கும் விலையிடல்:** இவ் உபாயமானது உங்கள் போட்டியாளர்களை விடக் குறைந்த செலவிடல் பொருட்களை வழங்குவதன் மூலம் புதிய வாடிக்கையாளர்களை கவரும்விதத்தில் விலைகளை நிர்ணயிப்பதுடன் தொடர்படுகிறது. தீவிரமான விலைப் போட்டியைக் கொண்டுள்ள சந்தையொன்றுக்குள் புதிய வியாபாரங்கள் அல்லது வியாபாரங்கள் நுழைவதற்கு முயற்சிப்பதற்கு சிறந்த உபாயமாக இருக்கக்கூடும்.

- **செலவைக் கூட்டிய விலையிடல் என்பது:** பாரம்பரியமான விலையிடல் உபாயமாகும். இதில் வியாபாரமானது அதன் உற்பத்திச்செலவினை கணிப்பதுடன் எதிர்பார்க்கப்படும் குறிப்பிட்ட இலாபம் இதனுடன் கூட்டப்படுகிறது..

- **பெறுமதியினை அடிப்படையிலான விலையிடல்:** இவ்வுபாயத்தில் உங்கள் உற்பத்தி அல்லது சேவைகளின் கண்ணோட்ட பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு நிறுவனம் விலையினை நிர்ணயிக்கிறது.

- **மிகை விலையிடல்:** இவ்வுபாயமானது பிரத்தியேக தன்மைகளை உருவாக்குவதற்காக உயர்விலைகளை நிர்ணயிப்பதுடன் தொடர்படுகிறது. இவ்வுபாயமானது ஆடம்பரப்பொருட்களையும் சேவைகளையும் விற்பனை செய்யும். வியாபாரத்திற்கு சிறந்ததாக இருக்கக்கூடும்.

## 4.4. நுண்பாக சிறிய நடுத்தரதொழில் முயற்சிகளுக்கான முதலீட்டுத் தீர்மானங்கள்

நிறுவனமொன்றின் செல்வத்தினை உச்சப்படுத்துவதற்கு முதலீட்டுத் தீர்மானங்கள் திறவுகோலாக அமைக்கின்றன. நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சியொன்றினை ஏற்படுத்துவதும் முதலீட்டுத் தீர்மானமேயாகும். முதலீட்டுத் தீர்மானங்ள் அதிகளவு இடர்நேர்களுடன் தொடர்பானவையாகும். தொழில்முயற்சியாளரொருவர் வியாபாரமொன்றில் முதலீடு செய்வதன் மூலம் ஏற்கனவே இடர்நேர்வுகளை ஏற்றுக்கொள்கிறார். முதலீட்டுத் தீர்மானங்களை முதலீட்டின் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் இலாபத்தன்மையினையும் புரிந்துகொள்வதற்காக பொருத்தமான முதலீட்டு மதிப்பீடுகளின் மூலம் தொடர்வது அவசியமாகும்.



### கற்றலின் பெறுபேறுகள்

- முதலீடுகளின் மதிப்பீட்டிற்கு தேவையான முக்கிய தகவல்களைப் புரிந்து கொள்ளுதல்
- தரமான முதலீட்டு மதிப்பீட்டு தொழில்நுணுக்கங்களை அடையாளம் காணுதல்.
- முதலிடொன்றினை எவ்வாறு மதிப்பிடுவதென்பதனை உதாரணமொன்றுடன கற்றுக் கொள்ளுதல்.
- முதலீட்டு மதிப்பீட்டின் முக்கிய வரையறைகளை தெரிந்துகொள்ளுதல்.



தனஞ்சய பிரதேச செயலகத்தில் தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலருடன் தொடர்ந்தும் கலந்துரையாடல்களில் ஈடுபடுகின்றார்.




### முதலீடுகளின் மதிப்பீட்டிற்கு தேவைப்படும் தகவல்கள்

- **முதலீட்டின் பெறுமதி -** இது ஆரம்ப முதலீட்டின் பெறுமதியாகும். முதலீட்டின் மொத்தச் செலவு இதன் மீது நீங்கள் எவ்வளவினைச் செலவிட வேண்டியிருக்கும் என்பதன் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது.
- **எதிர்கால காசுப்பாய்ச்சல் -** முதலீட்டிலிருந்து நீங்கள் எதிர்கால காசு உட் பாய்ச்சல்களையும் வெளிப்பாய்ச்சல்களையும் எறிவுசெய்யக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும். அதன் கருத்து யாதெனில், முதலீட்டிலிருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்கால வருமானங்களையும் வருமானத்தினை ஈட்டுவதற்கு ஏற்படக்கூடிய செலவினங்களையும் நீங்கள் மதிப்பிடக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும் என்பதேயாகும்.

- **முதலீட்டுடன் சேர்ந்து காணப்படும் இடர்நேர்வு -** இடர்நேர்வு மதிப்பீட்டின் நோக்கம் முதலீடொன்றுடன் சேர்ந்து காணப்படக்கூடிய சாத்தியமான இடர்நேர்வுகளை அடையாளம் கண்டு வகைப்படுத்துவதாகும்.

## பொதுவான முதலீட்டினை மதிப்பிடுவதற்கான பொதுவான நுட்பங்கள்

### 1. மீளப்பெறும் காலம்

மீளப்பெறும் காலம் என்பது முதலீடொன்று அதன் பணத்தினை அறவிட்டுக் கொள்வதற்கு தேவைப்படும் காலமாகும். இது முக்கியமாக ஆண்டுகளிலும் மாதங்களிலும் குறிப்பிடப்படுகின்றது. மீளப்பெறும் காலம் குறுகியதாகும் போது முதலீடு கவர்ச்சிகரமானதாக மாறுகிறது. மீளப்பெறும் காலத்தினை தீர்மானித்துக் கொள்வது எவருக்கும் உதவியாக அமையும் என்பதுடன் ஆரம்ப மூலதனத்தினை சராசரி காசுப்பாய்ச்சல்களினால் வகுப்பதன் மூலம் கண்டுகொள்ள முடியும்.

### 2. தேறிய இற்றைப் பெறுமதி

தேறிய இற்றைப்பெறுமதி என்பது எதிர்கால காசுப்பாய்ச்சலின் இற்றைப்பெறுமதிக்கும் தொடர்பான காலப்பகுதியின் வெளிப்பாய்ச்சல்களுக்குமிடையிலான வேறுபாடாகும். எதிர்கால காசுப்பாய்ச்சலின் இற்றைப்பெறுமதிகளை பணத்தின் நேரப்பெறுமதியினை பயன்படுத்துவது (முன்னர் தனிப்பட்ட நிதி அத்தியாயத்தில் விளக்கப்பட்டிருக்கிறது) கணிக்கப்படுகிறது. இற்றைப்பெறுமதியினை கணிப்பதற்கு சரியான கழிவிடல் வீதம் பயன்படுத்தப்படுதல் வேண்டும். நேர்க்கணியமான தேறிய இற்றைப்பெறுமதியுடன்கூடிய செயற்றிட்டங்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வேளையில் எதிர்மறையான தேறிய இற்றைப்பெறுமதிகள் நிராகரிக்கப்படல் வேண்டும்.

### 3. கழிவிடப்பட்ட மீளப்பெறும் காலம்

கழிவிடப்பட்ட மீளப்பெறும் காலமானது முதலீட்டின் ஆரம்பச் செலவினை அளவிட்டுக் கொள்வதற்கு முதலீட்டின் கழிவிடப்பட்ட காசுப்பாய்ச்சலுக்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதனை தீர்மானிக்கிறது. மீளப்பெறும் காலத்தின் முக்கியமான பின்னடைவினை தவிர்ப்பதற்காக கணிக்கப்படுகின்றது. இது முதலீட்டின் அறவிடல் காலமொன்றினை கணிக்கும்போது பணத்தின் நேரப்பெறுமதியினை பரிசீலனையில் கொள்வதில்லை. ஆகவே கழிவிடப்பட்ட மீளப்பெறும் காலம் நியம மீளப்பெறும் காலத்தினைவிட கூடியளவிற்கு துல்லியமானதாகும்.

**உதாரணம்:** தனஞ்ஜயவின் உணவகத்திற்கான முதலீட்டினை மதிப்பிடல்

**படிமுறை 1:** தகவல்களைத் திரட்டுதல்

தனஞ்ஜய, முறைசார்ந்த மற்றும் முறைசாராத சந்தை ஆராய்ச்சிகளை நடத்துவதன் மூலம் கணியம் சார்ந்த மற்றும் தரம் சார்ந்த தகவல்களைத் திரட்டுவதற்கு தீர்மானித்தார். அவர் அவரது நகரத்திலுள்ள அனைத்து உணவகங்களுக்கும் சென்று அவற்றின் ஊழியர்களுடன் முறைசாராத கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

பின்னர் அவர் பிரதேச செயலகத்தின் தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகார சபையின் செயலாளரைச் சந்தித்து ஆலோசனைகளை பெற்றுக்கொண்டார்.

வுநஜெ ௩ந அநவ வுந னைைளைழையெட ளநஉசநவயசயைவந□ள நேுனுயு ளநஉசநவயசயைவ யனெ ழடிவயனைநென யனளஎைஉந.

**படிமுறை 2:** ஆரம்ப திட்டமிடல்

ஆரம்பத்தில் எந்த வகையான உற்பத்திகளை விற்பனை செய்யமுடியும் என்பதனை தனஞ்ஜய தீர்மானித்துக் கொண்டார். அவர் உணவகத்திற்குள் தேவையான தளபாடங்கள், சமையலறைப் பொருட்கள், சாப்பாட்டு மேசைப் பொருட்கள் மற்றும் ஏனைய பௌதிகச் சொத்துக்களை பட்டியலிட்டுக் கொண்டார். அப்பட்டியலின் அடிப்படையில் முதலீட்டின் ஆரம்ப செலவினையும் அத்துடன் வியாபாரத்தினை பதிவுசெய்தல், வாடகை உடன்படிக்கை தொடர்பான சட்டம் தொடர்பான கட்டணங்களையும் சேர்த்துக் கணித்துக் கொண்டார்.

**படிமுறை 3:** தொழிற்பாட்டுத் திட்டமிடல்

தனஞ்ஜயவின் ஆராய்ச்சியின் அடிப்படையில் வாரமொன்றிற்கு 250 தட்டுச்சோறு மற்றும் கறியினை விற்பனை செய்யத் திட்டமிட்டார்.

எதிர்பார்க்கப்பட்ட கேள்வி: வாரமொன்றிற்கு 250 தட்டுச் சோறு மற்றும் கறி

இதன்படி முதல் ஆண்டிற்கான அவரின் காசும் பாய்ச்சல் ஊகம் :

| | |
|---|---|
| விற்பனை வருமானம் (காசுப் பாய்ச்சல்) = 250 x ரூ. 350 x 52 வாரம் = | ரூ. 4,550,000 |
| மாறும் செலவு (காசுப் பாய்ச்சல்) = 250 x ரூ. 130 x 52 வாரம் = | ரூ. (1,690,000) |
| நிலையான செலவு (காசுப் வெளிப்பாய்ச்சல்) = 100,000 x 12 மாதம் = | ரூ. (1,200,000) |
| Net cashflow per year = | ரூ. 1,660,000 |

தனஞ்ஜய, அவரின் உணவகத்தினை ஆரம்பிப்பதற்கு ரூ.2,000,000 தேவைப்படும் என்பதனை கண்டறிந்து கொண்டார்.

**படிமுறை 3:** செயற்றிட்ட மதிப்பீடு

**மீளப்பெறும் காலம்**

| | |
|---|---|
| மீளப்பெறும் காலம் = | ஆரம்ப முதலீடு ∴ சராசரி வருடாந்த தேறிய காசுப் பாய்ச்சல் |
| | = 2,000,000 / 1,660,000 = 1.2048 ஆண்டுகள் |
| | = 1.2048 x 12 = 14.46 மாதங்கள் |

மீளப்பெறும் காலம் ஏறத்தாழ 14.5 மாதங்களாகும். இதன்கருத்து தனஞ்ஜய அவரின் முதலீட்டினை 14.5 மாதங்களில் அறவிட்டுக் கொள்ளலாம் என்பதாகும்.

## தேறிய இற்றைப்பெறுமதி

தனஞ்ஜய மேற்குறிப்பிட்ட எதிர்வுகூறல்கள் அடுத்த மூன்று ஆண்டுகளுக்குத் தொடரும் என அனுமானிக்கின்றார். தேறிய காசுப் பாய்ச்சல்கள், கழிவிடல் வீதமென அழைக்கப்படும் மூலதனச்செலவில் கழிவிடப்படுகிறது. மூலதன செலவு மூலதனப் பிரிவின் விலையில் காட்டப்படுகிறது.

தனஞ்ஜய அவரது கடனை 15மூ வட்டி வீதத்திலமைந்த கடனொன்றின் மூலமாக நிதியிட்டிருப்பாராயின் அவரது வியாபார முதலீட்டின் தேறிய இற்றைப்பெறுமதி பின்வருமாறு கணிக்கப்படும்.

| ஆண்டு | காசுப்பாய்ச்சல் | கழிவிடல் காரணி 15 ழு இல் | இற்றைப்பெறுமதி |
|---|---|---|---|
| 0 (ஆரம்பம்) | (2,000,000) | $(1+0\ .15)^0$ | $(2,000,000)/\ (1+\ .15)^0 = (2,000,000)$ |
| 1 | 1,660,000 | $(1+0.15)^1$ | $1,660,000/\ (1+0.15)^1 = 1,443,478$ |
| 2 | 1,660,000 | $(1+0.15)^2$ | $1,660,000/\ (1+0.15)^2 = 1,255,198$ |
| 3 | 1,660,000 | $(1+0.15)^3$ | $1,660,000/\ (1+0.15)^3 = 1,091,477$ |
| **தேறிய இற்றைப்பெறுமதி** | | | **1,790,154** |

இம்முதலீட்டின் தேறிய இற்றைப்பெறுமதி நேர்க்கணிய பெறுமதியினை கொண்டதாகும். ஆகவே இது ஆற்றல்வாய்ந்த செயற்றிட்டமாகும்.

### கழிவிடப்பட்ட மீளப்பெறல் காலம்

| ஆண்டு | காசுப்பாய்ச்சல் | கழிவிடல் காரணி 15 % இல் | இற்றைப்பெறுமதி |
|---|---|---|---|
| 0 (ஆரம்பம்) | (2,000,000) | $(1+0\ .15)^0$ | $(2,000,000)/\ (1+\ .15)^0 = (2,000,000)$ |
| 1 | 1,660,000 | $(1+0.15)^1$ | $1,660,000/\ (1+0.15)^1 = 1,443,478$ |
| 2 | 1,660,000 | $(1+0.15)^2$ | $1,660,000/\ (1+0.15)^2 = 1,255,198$ |
| 3 | 1,660,000 | $(1+0.15)^3$ | $1,660,000/\ (1+0.15)^3 = 1,091,477$ |

| | |
|---|---|
| **கழிவிடப்பட்ட மீளப்பெறல் காலம் =** | **1.631 ஆண்டுகள் (31.57 மாதங்கள்)** |
| மொத்த முதலீடு | ரூ. 2,000,000 |
| ஆண்டு 1 இற்றைப்பெறுமதி | (ரூ.1,443,478) |
| மீதி | ரூ. 556,522 |
| ஆகவே கழிவிடப்பட்ட மீளப்பெறல் காலம் பின்வருமாறு = 1 ஆண்டு மற்றும் 0.4434 ஆண்டுகள் (556,522/ 1,255,198) = | **1.4434 years** |

### முதலீட்டு மதிப்பீட்டின் வரையறைகள்

- காசுப்பாய்ச்சல் எறிவுகளின் துல்லியத் தன்மை
- உரிய கழிவிடல் காரணிகள்
- கால ஊகங்களின் துல்லியத் தன்மை
- வியாபார தொழிற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்துகின்ற ஏனைய சூழல் காரணிகளை புறக்கணித்தல்

# 4.5. நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான நிதியிடல் தீர்மானங்கள்

நுண்பாக சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான நிதியிடல் தீர்மானங்கள், நிதியின் பொருத்தமான மூலங்களை தெரிவுசெய்தல், மூலதனக் கட்டமைப்பு மற்றும் வியாபாரத் தொழிற்பாடுகளையும் வளர்ச்சித் தேவைகளையும் பூர்த்திசெய்வதற்கான நிதியிடல் காலம் என்பனவற்றுடன் தொடர்புபடுகிறது. இத்தீர்மானங்கள் மிக இன்றியமையாதனவாகும். ஏனெனில், நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சிகள் பெரும்பாலும் மூலவள தடங்கல்களின் கீழேயே தொழிற்படுவதுடன், பாரிய தொழில்முயற்சிகளுடன் ஒப்பிடுகையில் மூலதனச் சந்தைகளை அணுகுவதற்கான அணுகு வசதியும் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதுமே காரணமாகும்.



## கற்றலின் பெறுபேறுகள்

- நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான குறுங்கால மற்றும் நீண்டகால நிதியிடல் மூலங்களை விளங்கிக் கொள்ளுதல்.
- உரிமை நிதியிடல் மற்றும் படுகடன் நிதியிடலின் அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் தெரிந்து கொள்ளுதல்.
- நிதியியல் செலவுக் கோட்பாட்டினை விளங்கிக் கொள்ளுதல்
- உதாரணத்துடன் நிதிச்செலவினை எவ்வாறு கணிப்பது என்பதனை கற்றுக்கொள்ளுதல்.
- உங்கள் நிதி முறையினை தெரிவுசெய்வதற்கு முன்னர் விடையளிக்கப்படவேண்டிய கேள்விகளை அடையாளம் காணுதல்



தனஞ்ஜய அவரின் சாத்தியமான வியாபார யோசனைக்கு மூலதனத்தினை கண்டுகொள்வதற்கு அவரின் குடும்பத்தினது உதவியை எதிர்பார்க்கின்றார்.




**நிதியிடல் தீர்மானங்களை இரண்டு வழிகளில் வலியுறுத்தமுடியும்.**

1. **நீண்டகால நிதியிடல்** இது வியாபாரத்தினைத் தொடங்குவதற்கும் எதிர்காலத்தில் வியாபாரத்தினை விரிவாக்குவதற்கும் தேவையான மூலதனத்தினை பூர்த்திசெய்வதுடன் தொடர்புபடுகிறது.

2. **குறுங்கால நிதியிபிடல்** இது தீர்மானங்கள் நாளாந்த வியாபாரத் தொழிற்பாடுகளுக்குத் தேவையான நிதிகளை முகாமைப்படுத்துவதுடன் தொடர்புபடுகிறது. இது தொழிற்படு மூலதன முகாமைத்துவம் என அழைக்கப்படுகிறது.

### நீண்டகால நிதியிடல் தீர்மானங்கள் (மூலதன தீர்மானங்கள்)

நிதி மூலவளங்களை அடையாளம் கண்டு தேர்வு செய்வதன் மூலம் நிதியியல் செலவினை (மூலதனச்செலவு) மிகக்குறைப்பது நிதியிடல் தீர்மானங்களில் மிக முக்கியமானதாகும். வியாபாரமொன்று பங்குரிமை மூலதனம் மற்றும் படுகடன் மூலங்களிலிருந்து முக்கியமாக நிதியினைப் பெற்றுக்கொள்கிறது.

### உரிமை மூலதன நிதியிடல்

உரிமையாளர்களினால் வழங்கப்படும் அனைத்து நிதிகளும் பொருளாதார மூலங்களும் உரிமை மூலதனம் என அழைக்கப்படுகிறது.

1. **சொந்தக்காரரின் சேமிப்புக்கள்:** பெரும்பாலான நுண்பாக சிறிய நடுத்தர தொழில் முயற்சிகள் ஆரம்ப மூலதனத்திற்கும் வியாபார விரிவாக்கங்களுக்கும் உரிமையாளர்களின் சேமிப்பு நிதியின் மீதே தங்கியிருக்கின்றன. உரிமையாளர்களின் கோரல்களாக காணப்படும் வியாபாரத்தின் பிடித்து வைக்கப்பட்ட இலாபத்தினையும் விரிவுபடுத்தல்களுக்காக மீளவும் பயன்படுத்தமுடியும்.

2. **அன்புக்குரியவர்களின் பணம்:** குடும்ப உறுப்பினர்களினால் அல்லது நண்பர்களினால் மீள்கொடுப்பனவினை எதிர்பார்க்காமல் வழங்கப்படும் நிதியிடல் என்பதுடன் வியாபாரத்தில் முதலீடு செய்வதற்கு ஒதுக்கப்பட்ட பணம் அல்லது ஏதேனும் வருமானமாகும். பெரும்பாலும் பெற்றோர், செல்வம் மிகுந்த உறவினர் அல்லது நண்பர்கள்.

3. **ஏஞ்சல் முதலீட்டாளர்கள்:** ஏஞ்சல் முதலீட்டாளர்கள் வியாபாரத்தினை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப பணத்தினை வழங்குகின்றதனால் வழமையாக கம்பனியிலுள்ள சொத்துரிமை பங்குரிமை மூலதனத்திற்காக இது பரிமாற்றம் செய்யப்படுகிறது. அவர்கள் கடன்களை வழங்குவதில்லை. அவர்கள் தாம் விரும்புகின்ற யோசனைகளில் முதலீடு செய்கின்றனர். வியாபாரம் அபிவிருத்தியடையத் தொடங்குகின்ற வேளையில் மாத்திரம் அவர்கள் பிரதிபலன்களை எதிர்பார்ப்பர்.

## படுகடன் நிதியிடல்

கடன்வழங்குவோர் அல்லது முதலீட்டாளர்களிடமிருந்து கடன்படுவதன் மூலம் திரட்டப்படுகின்ற வியாபார நிதியிடல்களை வட்டியுடன் மீளச்செலுத்த வேண்டியிருக்கும்.

1. வங்கிகள்: எந்த ஒரு வர்த்தக வங்கியும் ஏனைய நிதியியல் நிறுவனங்களும் நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு வெவ்வேறுபட்ட கடன்திட்டங்களை வழங்குகின்றன. தொடர்பான நிதியியல் நிறுவனங்களுக்கு விஜயம் செய்வதன் மூலம் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

2. நுண்பாக நிதி: நுண்பாக நிதிக் கடன்கள் பொதுவாக பாரம்பரியமான வங்கிகளினால் கடன்வழங்கப்படாத தனிப்பட்டவர்களுக்கும் சிறிய வியாபாரங்களுக்குமாக வடிவமைக்கப்பட்டவையாகும். இக்கடன்கள் வழமையாக நுண்பாக நிதி நிறுவனங்கள் என அறியவரும் சிறப்பியல்பு வாய்ந்த நிதியில் பணி வழங்குவோரினால் வழங்கப்படுகின்றன. எனினும், ஏனைய பல நிதியியல் நிறுவனங்கள் ஆரம்ப வியாபாரத்திற்காக நுண்பாக நிதியினை வழங்குகின்றன. (இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நுண்பாக நிதி நிறுவனங்களின் பட்டியல் ாவவிள:.்..். றறற.உடிளட.பழள.டம.்.நெ.்.யரவாழசணைநன-கயெஉெயைட-ைளெவவைரவழைளெ.்.டைஉநளெநன-அைஉசழகயெஉெந-உழஅியெைநள )

3. அரசாங்கத்தினால் நிதியிடப்பட்ட கடன்கள்: அரசாங்கத்தினால் - நிதியிடப்பட்ட சிறிய வியாபாரக் கடன்கள் அரசாங்க முகவர்களினால் உத்தரவாதப்படுத்தப்படுவதுடன் கடன்கள் தகைமைவாய்ந்த கடன்வழங்குநர்களினால் வழங்கப்படுகின்றன. இவை சிறிய வியாபாரங்கள் குறைந்த இடர்நேர்வுகளுடன் கூடியளவு ஒழிவுமறைவற்ற நியதிகளுடன் அவர்களுக்கு தேவையான நிதியிடலைப் பெற்றுக் கொள்ளும்விதத்தில் வழங்கப்படுகின்றன.

   (கூடுதலான தகவல்களுக்கு: https://www.treasury.gov.lk/web/frequently-asked-questions/section/msme%20loans)

#### உரிமை மூலதன நிதியிடலின் அனுகூலங்கள்

மூலதனத்தினை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கின்ற நுண்பாக சிறிய நடுத்தர மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கான உரிமை மூலதன நிதியிடலில் பின்வருவன உற்பட அனேக அனுகூலங்கள் காணப்படுகின்றன.:

- இதில் மீள்கொடுப்பனவு கடப்பாடுகள் எதுவுமில்லை.
- இதில் மேலதிக நிதியியல் சுமைகள் எதுவுமில்லை. அத்துடன் பாதுகாப்பானது.
- கம்பனியானது நிபுணத்துவமும் தொடர்புகளும் கொண்ட முதலீட்டாளர்களை அணுகுவதற்கான தன்மைகளை கொண்டிருக்கிறது.
- உரிமை மூலதனத்திற்கான படுகடன் விகிதம் வீழ்ச்சியடைவதன் மூலமும் கொடுகடன் புள்ளியிடலின் மூலமும் கம்பனியின் ஆரோக்கியத்தை மேம்படுத்தமுடியும்.
- பட்டியலிடுவதனூடாக கணிசமான உரிமை மூலதனத்தினை அணுகுவதற்கான இயலாற்றல்.

## உரிமை மூலதனத்தின் நிதியிடலின் பிரதிகூலங்கள்

மூலதனத்தினை அதிகரிப்பதற்கான மற்றைய முறைகளுடன் ஒப்பிடுகையில் உரிமை மூலதன நிதியிடல் பிரதிகூலங்களைக் கொண்டிருக்கிறது. அவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

- கம்பனி ஏற்கனவே கொண்டுள்ள சொத்துடமை நீர்த்துப் போகச் செய்யப்படும்.
- தீர்மானங்களை மேற்கொள்ளளும் வேளையில் முகாமைத்துவம் புதிய முதலீட்டாளர்களுடன் ஆலோசனைகளை மேற்கொள்ள நிர்பந்தப்படுகிறது.
- உயர்ந்த இடர்நேர்வுகளின் காரணமாக உரிமைமூலதனத்தின் செலவு படுகடன் நிதியிடலும் பார்க்க கூடுதலாக காணப்படுகிறது.
- கடன்வழங்குபவர்களிலும் பார்க்க முதலீட்டாளரொருவர் கூடுதலான சவால்களை கூடுதலாக எதிர்நோக்குகின்றார்.
- பட்டியலினூடான நிதியிடல் செலவு கூடியதாகவும் நேரமெடுப்பதாகவும் காணப்படுகிறது.

## படுகடன் நிதியிடலின் அனுகூலங்கள்

மூலதனத்தினை திரட்டுவதற்கு எதிர்பார்க்கின்ற நுண்பாக, சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு படுகடன் நிதியிடலில் பின்வருவம் அனுகூலங்கள் காணப்படுகின்றன.

- வியாபாரத் தொழிற்பாடுகளின் மீது கடன்வழங்குனர் எவ்வித கட்டுப்பாடுகளையும் கொண்டிருப்பதில்லை.
- சொத்துடமை நீர்த்துப்போவதனை தடைசெய்கிறது.
- படுகடன் மீது செலுத்தப்படுகின்ற வட்டி பெரும்பாலான சூழ்நிலைகளில் வரிக்கழிவினைக் கொண்டதாகவிருக்கிறது. எனவே அவர்கள் வரி நன்மைகளை அனுபவிக்கக்கூடியதாகவுள்ளது.
- பங்குகளை வழங்குவதுடன் ஒப்பிடுகையில் படுகடன் ஏற்பாடுகளை அணுகுவது இலகுவானது.

## படுகடன் நிதியிடலின் பிரதிகூலங்கள்

பங்குரிமை மூலதன நிதியிடலுடன் ஒப்பிடுகையில் படுகடன் நிதியிடல் பின்வரும் பிரதிகூலங்களை கொண்டிருக்கிறது.:

- கடன்வழங்கல் உடன்படிக்கைகள் மீதான நிதியிடல் ஒப்பந்தங்கள் கடன்பாட்டாளர்களின் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளை மட்டுப்படுத்தக்கூடும்.
- அதிகளவில் வெளிநிற்கின்ற படுகடன் வியாபாரங்களின் நிதியியல் இடர்நேர்வுகளை அதிகரிக்கும்.
- வியாபார சொந்தக்காரர்கள் கடன்களை தனிப்பட்ட முறையில் உத்தவரவாதப்படுத்துமாறு கோரலாம்.
- கொடுப்பனவுகள் தவணை தவறுவதன் விளைவாக சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படலாம்.
- படுகடனை அணுகக்கூடிய தன்மை வியாபார பிணையுறுதிகளின் பெறுமதியினை அல்லது நிலையான சொத்துக்களின் பெறுமதியினை மட்டுப்படுத்தக்கூடும்.

## நிதியிடலுக்கான செலவு (மூலதனத்துக்கான செலவு)

வியாபாரத்திற்கான பங்களிக்கின்ற விதத்தில் எந்த ஒரு நிதியிடலும் அன்பளிப்பாகக் கிடைப்பதில்லை. ஊரிமையாளர்களின் நிதி மூலதனமாகப் பயன்படுத்தப்பட்டாலும் கூட அதற்கும் செலவு காணப்படுகிறது. மூலதனத்தின் செலவினை அடையாளம் காணப்பது மூலதனத்தின் மூலங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. வியாபாரத்திற்கு பயன்படுத்தப்பட்ட மூலதனத்திற்காக செலுத்தப்படவேண்டிய விலை எங்கே?

## படுகடன் மூலதனத்தின் செலவு

படுகடன் நிதியிடல் செலவுகள் என்பது நிதிகளை கடன்படும்போது வியாபாரங்களினால் உறப்படுகின்ற வட்டி மற்றும் ஏனைய செலவுகள் என வரையறை செய்யப்படுகிறது. அவை □கடனபாட்டுச் செலவுகள்□ எனவும் அழைக்கபடுகின்றன.

நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான உண்மையான கடன்பாட்டாளர் செலவு வட்டிவீதங்கள் மற்றும் செய்முறைக்கட்டணங்கள் போன்ற பொதுவாக கவனம் செலுத்தப்படுகின்ற செலவுகளுக்கும் அப்பால் விரிவடைகிறது.

**படுகடன் செலவின் முக்கிய கூறுகளின் வகைப்படுத்தல் வருமாறு:**

- **வட்டி வீதங்கள்:** இது கடன்பாட்டின் முதன்மைச் செலவாக இருப்பதுடன் பொதுவாக வருடாந்த சதவீதத்தில் விளங்கப்படுகிறது.
- **செயல்முறைப்படுத்தல் கட்டணங்கள்:** ஆவணப்படுத்தல் மற்றும் நிருவாகச் செலவுகள் உட்பட கடனை செய்முறைப்படுத்துவதற்காக கடன்வழங்குனர்களினால் விதிக்கப்படும் கட்டணங்கள்
- **முன்கூட்டியே தீர்ப்பனவு செய்வதற்கான தண்டங்கள்:** அட்டவணையிடப்பட்ட காலப்பகுதிக்கு முன்னதாக கடன்களை கடன்பாட்டாளர்கள் மீளச்செலுத்துமிடத்து கட்டணங்கள் விதிக்கப்படுகின்றன.
- **பிணையுறுதித் தேவைப்பாடுகள்:** சொத்து, ஊர்திகள் போன்ற சில கடன்களுக்கு பிணையுறுதிகள் தேவைப்படுகின்றன. இதற்காக நீங்கள் மதிப்பீட்டு அறிக்கைகள், உரித்துக் காப்புறுதி மற்றும் ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் என்பனவற்றை பெற்றுக்கொள்ள வேண்டும்.
- **கடன்காப்புறுதி:** சில நேரங்களில் கடன் காப்புறுதி குறித்துரைக்கப்பட்ட இடர்நேர்வுகளிலிருந்து கடன்பாட்டாளரை பாதுகாக்கும் நோக்குடன் தேவைப்படுத்தப்படுகிறது. இது கடனின் ஒட்டு மொத்தச் செலவினை அதிகரிக்கிறது.
- **தாமதக் கொடுப்பனவுக் கட்டணங்கள்:** தவறவிடப்பட்ட அல்லது தாமதக் கொடுப்பனவுகளுக்கான தண்டங்கள் கடன்பாடுகளின் மொத்தச்செலவுகளை அதிகரிக்கின்றன.
- **மற்றைய மறைமுகக் கட்டணங்கள்:** ஏதேனும் மேலதிக கட்டணங்கள் அல்லது விதிப்புக்கள் கடன் உடன்படிக்கையில் தெளிவாக குறிப்பிடப்படுவதில்லை. ஆனால், இது ஒட்டு மொத்த செலவின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும்.

**"கடன்பாடுகளின் சொத்துச் செலவினை துல்லியமாக மதிப்பிடுவதும் தகவல்களின் அடிப்படையில் நிதியியல் தீர்மானங்களை எடுப்பதும் நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு மிக இன்றியமையாததாகும்."**

## மூலதனத்திற்கான உரிமை மூலதனத்தின் செலவு

பல்வேறு சூத்திரங்களும் கொள்கைகளும் பங்குரிமை மூலதனத்தின் செலவினை அடையாளம் காணுகின்றன. எனினும், நுண்பாக சிறிய நடுத்தர தொழில் முயற்சிகள் பின்வரும் முறைகளைப் பயன்படுத்தி அவற்றின் நிதியியல் செலவினைக் கணிக்கமுடியும்.

## சொந்தக்காரரின் சேமிப்புக்கள் அன்புப்பணம் மற்றும் நீண்டகால மூலதனம்

காலாந்தர வருமானத்தினை செலுத்தவேண்டிய கடப்பாடு எதுவுமில்லை. இந்நிதியங்களுடன் செய்முறைக் கட்டணங்கள் எதுவும் தொடர்புபடவில்லை. எனினும் இந்நிதிகள் செலவுகள் அற்ற வையல்ல எனினும் அமையச் செலவொன்று காணப்படுகிறது.

அமையச் செலவு என்பது கைவிடப்பட்ட நன்மையாகும். இது தெரிவுசெய்யப்பட்டதிலும் பார்க்க தெரிவு ஒன்றிலிருந்து விடுபட்டதினால் இழக்கப்பட்ட நன்மை ஆகும் . உங்கள் சேமிப்புக்களை வியாபாரத்திற்காக பயன்படுத்தும்போது நிலையான வைப்புக்களில் முதலீடுசெய்வதன் மூலம் கிடைக்கும் வட்டி வருமானத்தினை இழக்கவேண்டியிருக்கும்.

உரிமை மூலதனத்தின் அமையச் செலவு வியாபாரத்திற்கான நிதிகளை வழங்கிய ஆளினால் பெறப்படுகிறது. எனினும் கம்பனி அதன் பிடித்துவைக்கப்பட்ட இலாபத்தினை வளர்வதற்கு பயன்படுத்துமாயின் (முதலீடுகள்) அப்பொழுது வியாபாரம் அமையச் செலவினைத் தாங்கிக் கொள்கிறது.

## உங்கள் வியாபாரத்திற்காக மூலதனச் செலவினை நீங்கள் எவ்வாறு கணித்துக்கொள்வீர்கள்?

வியாபாரத்தின் மூலதனம் பின்வருவன பற்றி உள்ளடக்குகிறது.

1. உரிமை மூலதனம் மாத்திரம்
2. படுகடன் மாத்திரம்
3. உரிமை மூலதனம் மற்றும் படுகடன் இரண்டும்

**மூலதனம், உரிமை மூலதனத்தினை மாத்திரம் உள்ளடக்கியிருக்குமிடத்து:**

**மூலதனத்தின் செலவு** = உரிமை **மூலதனத்தின் செலவு**

உரிமை **மூலதனத்தின் செலவு** = உரிமையாளரின் சேமிப்பு∴ அன்புக்குரியவர்களின் பணம்∴ நீண்டகால மூலதனம்

**துப்பு:** அமையச் செலவு என்பது கைவிடப்பட்ட நன்மையின் பெறுமதியாகும். அது வியாபாரத்தில் செய்யப்பட்ட முதலீடு தவிர்ந்த தேர்வொன்றிலிருந்து பெறப்பட்டதாகும். இலங்கையில் வங்கியொன்றில் வைப்புச் செய்யப்பட்ட பணம் வட்டியைச் செலுத்துகிறது. ஆகவே வியாபாரத்தில் (உரிமை மூலதனம்) முதலீடு செய்யப்பட்ட நிதியத்தின் கைவிடப்பட்ட நன்மை என்பது உள்ளடக்கப்பட்டிருக்கக்கூடிய வட்டி வருமானமொன்றாகும். அமையச் செலவு என்பது வட்டி வருமானமாகும். ஆகவே உரிமை

**மூலதனத்தின் செலவு = சராசரி சேமிப்புக்களின் வட்டிவீதம்**

**உதாரணம்:** நீங்கள் உங்கள் வியாபாரத்திற்கு ரூ.100,000 இனை முதலீடு செய்யின் இது வட்டியொன்றில் நிலையான வைப்பிலிடப்பட்டிருப்பின் அது உங்களுக்கு ஆண்டொன்றிற்கு 10 மூ வட்டியை வழங்கியிருக்கும்.

உங்கள் வியாபாரத்தின் மூலதனம் = ரூ. 100,000

மூலதனத்தின் மூலம் = உரிமை மூலதனம்

மூலதனச் செலவு = ஆண்டொன்றிற்கு 10மூ (நிலையான வைப்பிலிருந்து இழக்கப்பட்ட வருமானம்)

**மூலதனம் படுகடனை மாத்திரம் உள்ளடக்கியிருக்குமாயின்:**

**மூலதனச் செலவு = படுகடன் செலவு**

**படுகடன் செலவு = கடன் வட்டி**

**துப்பு:** கடன் வங்கியிலிருந்து பெறப்பட்டிருக்கும்போது (அல்லது ஏதேனும் நிதியியல் நிறுவனம்) வட்டி செலுத்தப்பட வேண்டியிருக்கும். அது மூலதனத்தின் செலவாகும் (படுகடன்). எனினும் உங்கள் வியாபாரம் அரசாங்கத்திற்கு வரியினை செலுத்தும்போது, வரியாக செலுத்தப்படும் தொகையானது கடனுறுக்கான வட்டியை கழித்த பின்பே கணக்கிலப்படுகிறது. இங்கு வட்டிக் கொடுப்பனவு ஓரளவு வரியை சேமிக்கிறது.

**ஆகவே,**

**படுகடன் செலவு = கடன் வட்டிவீதம் ஓ (1-வரிவீதம்)**

**உதாரணம்:** நீங்கள் ரூ.100,000 இனை முதலீடு செய்திருப்பின் அது 15மூ பட்டியலில் பெறப்பட்டிருப்பின் வங்கியொன்றிலிருந்து வியாபாரம் அதன் இலாபத்தில் 25 மூ இனை செலுத்த வேண்டியிருக்கும்.

வியாபாரத்தின் மூலதனம் = ரூ. 100,000

மூலதனத்தின் மூலம் = கடன்

மூலதனத்தின் செலவு = 15% x (1-25%) = ஆண்டொன்றிற்கு 11.25%

**மூலதனமானது உரிமை மூலதனம் மற்றும் படுகடன் இரண்டினையும் உள்ளடக்கியிருப்பின்**

மூலதனத்தின் செலவு உரிமை மூலதனம் மற்றும் படுகடன் இரண்டினதும் சராசரி நிறையேற்றப்பட்ட செலவாக இருக்கும்.

மூலதனச் செலவு = [(உரிமை மூலதனத்தின் செலவு x உரிமை மூலதனம்) + (படுகடன் செலவு + படுகடன் மூலதனம;)] / மொத்த மூலதனம்

**உதாரணம்:** 8மூ வட்டியை வழங்கும் உங்கள் சேமிப்பு கணக்கிலிருந்து ரூ.50,000 இனையும் 20% இல் அமைந்த வங்கிகளிடமிருந்து ரூ.50,000 இனையும் நீங்கள் முதலீடு செய்யின் வியாபாரம் இலாபத்தின் மீது 25% வரியினை செலுத்தவேண்டியிருக்கும்.

மூலதனச் செலவு = [(50,000 x 8%) + (50,000 x (20% x (1- 25%))] / 100,000

% லதனச் செலவு = Rs 4,000 + 7,500 ஆண்டொன்றிற்கு

% லதனச் செலவு = (11,500/100,000) x 100 = **11.5% ஆண்டொன்றிற்**

## Short-term Financing Decisions / Working Capital Management

Short-term financing refers to obtaining funds to meet immediate financial needs or cover short-term obligations. Businesses commonly use it to manage cash flow fluctuations, finance working capital requirements, or seek short-term investment opportunities.



Dhananjaya meets the shopkeeper next to his residence.




## Importance of managing short-term finance

Short-term sources of funds are essential for day-to-day business operations. They provide the necessary liquidity to cover payroll, inventory purchases, and utility bills.

Further, businesses often face seasonal fluctuations in demand. Short-term financing helps bridge the gap between revenue cycles. Sometimes, businesses require immediate funds to manage unexpected situations such as events, equipment breakdowns, natural disasters, or supply chain disruptions.

Moreover, when the business environment changes rapidly, short-term financing provides the flexibility to adapt to market shifts, manage suppliers and customers, and strengthen business relationships.

## Sources of Short-term finance for MSMEs

### 1. Trade credit:

Trade credit involves buying goods or services from suppliers on credit terms. The buyer receives the goods immediately but pays the supplier later (usually within 30 to 90 days).

Example: A retailer purchases inventory from a wholesaler and agrees to pay the invoice amount within 60 days.

### 2. Bank overdrafts:

A bank overdraft allows a business to withdraw more funds from its checking account than the available balance. The bank charges interest on the overdrawn amount.

Example: A small business faces a temporary cash shortage and uses an overdraft facility to cover payroll expenses.

### 3. Short-term loans:

Businesses can obtain short-term loans from banks, finance companies, or private lenders. These loans have fixed terms (e.g., 3 months, 6 months) and are repaid with interest.

Example: A startup secures a 6-month loan to purchase equipment for a new project.

### 4. Factoring:

Factoring involves selling accounts receivable (unpaid invoices) to a third party (a factor) at a discount. The factor provides immediate cash and assumes the risk of collecting dues from customers.

Example: To improve cash flow, a textile manufacturer sells outstanding invoices to a factoring company.

### 5. Inventory financing:

MSMEs can pledge their inventory as collateral to obtain short-term loans. Lenders assess the value of the inventory and provide funds accordingly.

Example: An electronics retailer uses inventory financing to purchase popular or high-demand products before the holiday season.

*It is important to note that choosing the method of financing depends on factors like the cost of finance, the urgency of the need for finance, and the business's creditworthiness or credit score.*

உங்கள் நிதியிடல் முறையினை தெரிவு செய்வதற்கு முன்னர் விடையளிக்கப்பட வேண்டிய கேள்விகள்

### 1. நிதியிடலுக்கான நோக்கம் மற்றும் மீளச் செலுத்துவதற்கான இயலாற்றல்

நிதியிடலுக்கான முக்கிய காரணத்தினை விளங்கிக் கொள்வது மிக இன்றியமையாததாகும். உதாரணங்கள்: புதிய முதலீட்டு வாய்ப்புக்கள், தொழிற்படு மூலதன தேவைப்பாடுகள், மற்றொரு கடனை மீள செலுத்துதல். இவ்வேளைகளில் முதலீடு ஆபத்தானதாகவும் உறுதியான வருவாய்களை உறுதிப்படுத்தாததாகவும் இருக்கும். எனவே திருப்பிச் செலுத்துவதற்கு கடினமாக இருக்கக்கூடிய கடன்களை கடன்படுவது புத்திசாலித்தனமாக இருக்காது இங்கு, உரிமை மூலதன நிதியிடல் நிறுவனத்திற்கு பாதுகாப்பான தேர்வாக இருக்கும்.

### 2. எந்தவிதமான மூலத்தினைக் கொண்ட நிதியிடலை கம்பனி அணுகுவது சுலபமாக இருக்கும்?

உரிமை மூலதனத்தினை வழங்குமொருவரை கண்டறிவது கூடியளவிற்கு சிக்கலானதாக இருக்குமென்பதால் படுகடன் நிதியிடல் வியாபாரத்திற்கு இலகுவானதாக இருக்கும். இதன் உயர்இடர்நேர்வு காரணமாக தனிப்பட்ட முதலீட்டாளர்கள் நிறுவனத்திடமிருந்து கணிசமான வருவாயினை எதிர்பார்ப்பர். எனினும், கம்பனிகளின் ஆரம்ப கட்டத்தில் பாரம்பரியமான படுகடன் நிதியிடல் கிடைக்காது.

### 3. அசல் சொந்தக்காரர்கள் கம்பனியின் கட்டுப்பாட்டினை பேணமுடியுமா?

உரிமை மூலதன நிதியிடலில், வியாபாரத்தின் சொந்தக் கம்பனியின் சொத்துடமையினை புதிய உடமையாளர்களுடன் கட்டாயமாக பகிர்ந்துகொள்ளுதல் வேண்டும். எனினும், பாரம்பரியமான படுகடன் நிதியிடலை பயன்படுத்துகின்ற வேளையில் சொந்தக்காரர் நீர்த்துப் போகாத முழுமையான சொத்துடமையினைப் பேணமுடியும்.

### 4. வியாபாரத்தின் தொலைநோக்குடன் புதிய முதலீட்டாளரின் இலக்கினை இணைக்க முடியுமா?

வியாபாரச் சொந்தக்காரர்கள் வியாபார இலக்குகளை மாற்றமின்றிவிட்டுவிடுவது அவசியமானதாகும். வியாபார சொந்தக்காரர்கள் உடன்பாட்டினை முடிவுறுத்துவதற்கு முன்னர் புதிய முதலீட்டாளர்களின் அபிலாசைகளை தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

### 5. நிதியிடுவதற்கு இது சரியான நேரமா?

வியாபாரங்களுக்கு அவற்றின் நிதியிடல் தேவைப்பாடுகள் பற்றியும் எப்பொழுதும் அவற்றை அணுகுதல் வேண்டும் என்பது பற்றியும் தெரிந்திருத்தல் வேண்டும் உதாரணமாக படுகடன் நிதியிடலுக்கு சூழல் சாதகமானதாகவும் வட்டிவீதம் குறைவாகவும் இருக்கும் வேளையில் படுகடன் நிதியிடல் கூடியளவிற்கு பொருத்தமுடையதாகயிருக்கும்.

# 4.6. வரவு செலவுத் திட்டமிடல்

## கற்றலின் பெறுபேறுகள்

- உங்கள் வியாபாரத்திற்கான வரவுசெலவுத் திட்டத்தின் முக்கியமான நன்மைகளைப் புரிந்துகொள்ளுதல் நுண்பாக சிறிய நடுத்தரத்தொழில் முயற்சிகளுக்கான நிதியிடல்
- நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான வரவுசெலவுத் திட்டத்தினை அபிவிருத்தி செய்வதற்கான அடிப்படை நடவடிக்கைகளை அடையாளம் காணுதல்.
- நிதியியல் அறிவுடன் நுண்பாக சிறிய நடுத்தரத் தொழில் முயற்சிகளை முகாமைப்படுத்துவதற்கான வழிகளை விளங்கிக் கொள்ளுதல்.

வரையறை செய்யப்பட்ட காலப்பகுதிக்கு முன்னதாக தயாரிக்கப்பட்டு ஒப்புதலளிக்கப்பட்ட நாணய நியதிகளிலமைந்த கணியப்படுத்தப்பட்ட திட்டமொன்று வழமையாக உருவாக்கப்பட வேண்டிய திட்டமிடப்பட்ட வருமானத்தினையும் அத்துடன்∴ அல்லது அக்காலப்பகுதியில் உறப்படக்கூடிய செலவினத்தையும் குறிப்பிட்ட குறிக்கோளினை அடைவதற்கு பயன்படுத்தப்படக்கூடிய மூலதனத்தையும் காட்டுகிறது.

CIMA (UK)

வரவுசெலவுத் திட்டமென்பது உங்கள் இலக்குகளை அடைவதற்கு தீர்மானிப்பதற்கானதும் திட்டமிடுவதற்கானதும் மற்றும் பணத்தினை பயன்படுத்துவதற்கானதுமான ஒரு கருவியாகும். இது, உங்கள் பணத்தினை எவ்வாறு புத்திசாலித்தனமாக செலவிடுவது மற்றும் உங்கள் இலக்கினை அடைவதற்கு சேமிப்பது என்பனவற்றைத் தீர்மானிக்க உதவுகிறது.

வரவு செலவுத்திட்டம் உங்கள் வியாபாரத்தின் வெற்றியை அளவிட உங்களுக்கு உதவுகிறது. இது உங்களது ஒட்டுமொத்த வியாபாரத் திட்டமிடலின் ஒரு பகுதியாக இருத்தல் வேண்டும்.



அனில் மற்றும் தனஞ்ஜய ஆகியோர் வங்கி முகாமையாளரின் அறையில் இருக்கின்றனர்.





காசுப்பாய்ச்சலை ஊகிப்பதற்கும் தவிர்ப்பதற்கும் உங்களுக்கு உதவுகிறது.



கடன் மீள்கொடுப்பனவு உபாயத்தினை எடுத்துவிளங்குகிறது



தேவையான துறைகளை விரைவாக எடுத்துக்காட்டுகிறது



உங்கள் தொழிற்பாடுகள் தொழிற்படுவதற்கு உங்களுக்கு உதவுகிறது



எதிர்காலத்தினை எறிவுசெய்யவும் தொழிற்படுத்தவும் உங்களுக்கு உதவுகின்றது

## உங்கள் வியாபாரங்களை வரவுசெலவுத் திட்டப்படுத்துவதன் மூலம் கிடைக்கும் முக்கிய நன்மைகள்

பெரும்பாலான நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் முறைசார்ந்த வரவுசெலவுத்திட்டமொன்றினை வரைவதில் தோல்வி கண்டுள்ளமையினை ஆராய்ச்சிகள் கண்டறிந்துள்ளன. எனவே அவை கடுமையான காசுப் பாய்ச்சல் நெருக்கடிகளினால் பாதிக்கப்படுவது ஆச்சரியமானதல்ல. உங்கள் வருமானம், செலவுகள் சேமிப்புக்கள், படுகடன் மற்றும் முதலீடுகள் என்பனவற்றை வெற்றிகரமாக முகாமைப்படுத்துவதற்கான திறவுகோல் தெளிவான வியாபாரத் திட்டமொன்றினை தயாரிப்பதும் அதனை கடைப்பிடிப்பதுமேயாகும். இப்பயணத்தில் வரவுசெலவுத் திட்டத்தினை அபிவிருத்தி செய்வது வெற்றிகரமான வியாபாரத்தில் இன்றியமையாத வகிபாகமொன்றினை ஆற்றுகிறது.

நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சியொன்றிற்கான வரவுசெலவுத்திட்டத்தினை தயாரிப்பது எதிர்பார்க்கப்படும் வருமானம், செலவினங்கள், காசுப்பாய்ச்சல் மற்றும் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்கான இலாபம் என்பனவற்றை எடுத்துக்காட்டும் நிதியியல் திட்டமொன்றினை உருவாக்குவதுடன் தொடர்புபடுகிறது. இங்கே கட்டம்கட்டமாக வழிகாட்டல் தரப்படுகிறது.

### 1. உங்கள் வருமானத்தினை மதிப்பிடல்

வியாபாரமொன்று உற்பத்திகளின் விற்பனை மற்றும் சேவைகள் முதலீட்டு வருமானங்கள் கொடைகள் போன்ற அநேக வருமானத்துறைகளைக் கொண்டிருக்கிறது. விற்கப்படுகின்ற விலைகளை மதிப்பிடுவதும் ஒவ்வொரு வருமான மூலத்திற்குமான அளவுகளை எறிவுசெய்வதும் நிறுவனம் எதிர்காலத்திற்கான ஒன்றுதிரண்ட வருமானத்தினை மதிப்பிட உதவும்.

இச்செய்முறையில் வியாபாரம் கடந்தகால பெறுபேறுகள், பருவகால ரீதியில் மாறுபடும் தன்மை மற்றும் சந்தைப்போக்குகள் பகுப்பாய்வு செய்வது அவசியமாகும். அதன் வருமான இலக்குகளை நிர்ணயிப்பதற்கு பழமைவாய்ந்த யதார்த்தபூர்வமான அணுகுமுறையொன்றினைப் பின்பற்றுதல் வேண்டும்.

### 2. நிலையான மற்றும் மாறும் செலவுகளை அடையாளம் காணுதல்

இப்படிமுறையில் வியாபாரமானது சாத்தியமான அனைத்து தொழிற்பாட்டுச் செலவினைங்களையும் பட்டியலிடுகிறது. இது முக்கியமாக செலவுகளை நிலையான, மாறுகின்ற மற்றும் கலப்பு செலவுகள் என வகைப்படுத்துதல் வேண்டும்.

நிலையான செலவுகள் என்பது உற்பத்தி அலகுகளில் ஏற்படும் மாற்றத்தினை கவனத்திற்கொள்ளாது தொடர்பான காலப்பகுதியும் நிலையாக காணப்படும் செலவுகளாகும். உதாரணங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

- வாடகை அல்லது குத்தகைக் கொடுப்பனவுகள்
- அலுவலர்களுக்கான சம்பளங்கள்
- காப்புறுதிக் கொடுப்பனவுகள்
- கடன் மீள்கொடுப்பனவுகள்
- சந்தாக்கள் அல்லது மென்பொருள் கட்டணங்கள்

மாறும் செலவுகள் வியாபாரத்தின் செயற்படுகின்ற மட்டங்களுடன் சேர்ந்து நேரடியாக தளம்பலுறுகின்றன. உதாரணங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- மூலப்பொருட்களின் கொள்வனவுகள்
- கப்பற்படுத்தல் மற்றும் விநியோகச் செலவுகள்
- தரகுகளை அடிப்படையாகக் கொண்ட கூலிகள்
- பயன்பாடுகளுடன் மாறுகின்ற பயன்பாட்டுச் செலவுகள்

கலப்புச்செலவு நிலையான செலவு மற்றும் மாறும் செலவு என்பன இணைந்த செலவுகளை காட்டுகின்றன. உதாரணங்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- நிலையான வாடகைகளுடன் கூடிய பொதுப்பயன்பாட்டு வசதிகள் அவற்றின் பயன்பாட்டுடன் சேர்ந்து மாறுகின்றன.
- நிலையான கூலிகளுடன் கூடிய சம்பளங்கள் மேலதிக நேரச் செலவுகளுடன் சேர்ந்து மாறுகின்றன.

மேலும், வியாபாரங்கள் அவற்றின் சாதனங்கள் கட்டிடங்கள், பொறிகள், ஊர்திகள், தளபாடங்கள் கணனிகள் போன்ற எதிர்கால மூலதன செலவினங்களை மதிப்பிடுவது அவசியமாகும்.

இதன் அடிப்படையில் நிறுவனம் எதிர்காலத்திற்கான செலவு இலக்குகளை நிர்ணயிக்க முடியும்.

### 3. இலாப இலக்குகளை மதிப்பிடல்

வியாபாரங்கள் தமது வருமானம் செலவின இலக்குகளை நிர்ணயித்ததும் அவை வருமானத்திலிருந்து தொழிற்பாட்டு செலவினங்களை கழிப்பதன் மூலம் எதிர்காலத்திற்கான நிறுவனங்களின் இலாப இலக்குகளை மதிப்பிட முடியும்.

வியாபாரங்கள் குறிப்பிட்ட இலக்குகளை கொண்டிருக்குமாயின் அது மதிப்பிடப்பட்ட செலவுகளையும் வருமானங்களையும் அவற்றிற்கேற்ப மீள ஆராய்ந்து சீராக்குதல் வேண்டும்.

### 4. காசுப்பாய்ச்சலை மதிப்பிடுதல் மற்றும் சீராக்குதல்

வியாபாரமானது குறிப்பிட்டதொரு காலப்பகுதிக்காக மதிப்பிடப்பட்ட காசுப்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல் என்பனவற்றுடன் வரவுசெலவுத் திட்டமொன்றினை உருவாக்குதல் வேண்டும். இது நிறுவனம் எதிர்கால காசுப்பற்றாக்குறைகளையும் மிகைகளையும் எதிர்வுகூறுவதற்கும் அவற்றை வெற்றிகொள்வதற்கான உபாயத்தினை ஆரம்பிப்பதற்கும் நிறுவனத்தினை இயலுமைப்படுத்தும்.

### 5. கிரமமான மீளாய்வு மற்றும் சீராக்கல்

வியாபாரங்கள் தமது வரவு செலவுத்திட்டங்களை நிர்ணயித்து அவற்றின் தொழிற்பாடுகளை நிறைவேற்றத் தொடங்கியதும் உண்மையான செலவு

மற்றும் வருமானங்களுடன் வரவுசெலவுத் திட்டத்துடன் தொடர்பான அனைத்து விடயங்களையும் மீளாய்வு செய்வது மிக முக்கியமானதாகும். இது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் அனைத்து நிறுவனங்களினதும் சாதகமான மற்றும் பாதகமான மாறிகளை அடையாளம் காண வழிவகுக்கும். மேலும், இது பாதகமான மாறிகளின் அடிப்படைக் காரணத்தினைப் பகுப்பாய்வு செய்ய உதவுவதுடன் அவற்றை நிலைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் உதவும்.

மேலும் வியாபாரம் பொருளாதாரம் மற்றும் வியாபார சூழ்நிலைகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் தொடர்பில் விழிப்பாக இருக்கவேண்டும் என்பதுடன் வரவு செலவுத் திட்டங்களையும் காலத்திற்கு காலம் சீர்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

### நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் தொழிற்பாடுகளுக்கான நிதியியல் அறிவினை பயன்படுத்தல்

இலங்கையில் நிதியியல் அறிவு நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளில் இன்றியமையாத வகிபாகமொன்றினை ஆற்றுகிறது. இது ஆயுள் வட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் நிறுவனத்தினை நேரடியாக பாதிக்கிறது. உங்கள் வியாபார யோசனைகளை தெளிவான வியாபாரத் திட்டமொன்றிற்கு மாற்றிக் கொண்டதும் அடுத்த கட்டம் யாதெனில் தொழிற்பாடுகளை ஆரம்பித்து தொழிற்படுத்திச் செல்வதேயாகும். நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் நிச்சயமற்ற சூழல் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட மூலவளங்களுடன் வியாபாரத்தினை நடத்திச் செல்லும் நேரத்திலையே சவால்களை எதிர்நோக்குகின்றனர். நிதியியல் அறிவு முக்கியமாக பின்வரும் துறைகளில் வியாபாரத்தினை நடத்திச் செல்லும் போது நுண்பாக சிறிய நடுத்தரதொழில் முயற்சிகளுக்கு உதவுகிறது.

### நிதியியல் அறிவுடன் உங்கள் நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளை முகாமைப்படுத்துவதற்கான 6 வழிகள்

**1 உங்கள் காசுப்பாய்ச்சலை முகாமைப்படுத்தல்**

நிதியியல் அறிவு உங்கள் காசுப்பாய்ச்சல் மாதிரிகளைப் புரிந்துகொள்வதற்கும் காசு உள்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல் முகாமைப்படுத்தவும் காசுப் பற்றாக்குறைகளைத் தவிர்ப்பதற்கும் உங்களுக்கு உதவும். இது உங்கள் வியாபாரத்தின் நாளாந்த தொழிற்பாடுகள் சுமூகமாக இடம்பெறுவதற்கும் நீண்டகால வெற்றிகளைப் பெறவும் உங்களுக்கு உதவும்.

**2 திட்டமிடல் மற்றும் வரவுசெலவுத் திட்டப்படுத்தல்**

நிதியியல் அறிவுக் கோட்பாடுகள் உங்கள் நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சிகள் அவற்றின் குறுங்கால மற்றும் நீண்டகால இலக்குகளையும் குறிக்கோள்களையும் எய்துவதற்கு ஏற்றவிதத்தில் யதார்த்தமான வரவு செலவுத்திட்டத்தினை ஏற்படுத்த வழிகாட்டும். இது வருமானம் பாய்ச்சல்களை எதிர்வுகூறுவதனையும் இலாப இலக்குகளை எய்துவதற்கு செலவினங்களை முகாமைப்படுத்துவதனையும் உள்ளடக்குகிறது.

**3 உங்கள் இலாபத் தன்மையினை பகுப்பாய்வுசெய்து உத்வேகப்படுத்துவது மற்றும் உங்கள் திரவத்தன்மையினை முகாமைப்படுத்துவது**

நிதியியல் அறிவு உங்கள் அனைத்து வியாபார கொடுக்கல்வாங்கல்களையும் பதிவுசெய்வதற்கும் நிதியியல் கூற்றுக்களை தயாரிப்பதற்கும் உதவுவதுடன் நிறுவனத்தின் பொருளாதார செயல்திறன்களையும் நிலைமைகளையும் புரிந்து கொள்ளவும் உங்களை இயலுமைப்படுத்துகிறது. இது நிறுவனத்தின் இலாபத்தன்மையினை பகுப்பாய்வு செய்வதற்கும் நிதியியல் விகிதங்களைப் பயன்படுத்தி ஒவ்வொரு உற்பத்தி மற்றும் சேவைகளுக்கான இலாபத்தினை உருவாக்குவதற்கான அதன் இயலாற்றலை அளவிடுவதனையும் அனுமதிக்கிறது. இறுதியாக இது உங்கள் திரவத்தன்மை நிலையினை அளவிடவும் முகாமைப்படுத்தவும் உதவுகிறது.

**4 கொடுகடன் மற்றும் படுகடன் முகாமைத்துவம்**

சிறிய வியாபாரங்களின் சொந்தக்காரர்களுக்கு நிதியிடல் அடிக்கடி தேவைப்படுகிறது. நிதியியல் அறிவு வேறுபட்ட நிதியியல் தேர்வுகளை மதிப்பீடு செய்வதற்கும் வட்டிச்செலவுகளைக் கணிக்கவும் படுகடனை முகாமைப்படுத்துவதற்கும் ஏற்ற அறிவினை வழங்குகிறது.

**5 உங்கள் சட்ட இணங்குவிப்புக்களையும் வரிவினைத்திறனையும் முகாமை செய்க**

நிதியியல் அறிவு உங்கள் நிறுவனத்தின் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளையும் வரிக்கடப்பாடுகளையும் புரிந்துகொள்ளவும் முகாமைப்படுத்தவும் உங்களுக்கு உதவுகிறது.

**6 உங்கள் முதலீட்டு வாய்ப்புக்களை மதிப்பிடல்**

நிதியியல் அறிவு பல்வேறுபட்ட கருவிகள் மற்றும் தொழில்நுணுக்கங்களினூடாக சாத்தியமான முதலீட்டு வாய்ப்புக்களை மதிப்பிடவும் உங்கள் நிறுவனத்தின் செல்வத்தினை உச்சப்படுத்துவதற்காக தகவல்களை அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்களை மேற்கொள்ளவும் உங்களுக்கு உதவும்.

## 4.7. குறுங்கால நிதி ∴ தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

குறுங்கால நிதியிடல் என்பது உடனடி நிதியியல் தேவைகளை பூர்த்திசெய்வதற்கான அல்லது குறுங்கால கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான நிதியினை பெற்றுக்கொள்வதனை குறிக்கிறது. வியாபாரங்கள் பொதுவாக, காசுப்பாய்ச்சல் தளம்பல்களை முகாமைப்படுத்துவதற்கும் தொழிற்படு மூலதன தேவைப்பாடுகளை நிதியிடவும் அல்லது குறுங்கால முதலீட்டு வாய்ப்புக்களை மேற்கொள்ளவும் பயன்படுத்தப்படுத்துகின்றன.



### கற்றலின் பெறுபேறுகள்

- நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளுக்காக பதிவேடுகளை பேணும் முக்கியத்துவத்தினை விளக்கிக் கொள்ளுதல்.
- நுண்பாக வியாபாரமொன்றில் நிதியியல் பதிவேடுகளை பேணுவதற்கான அடிப்படைப் படிமுறைகளை அடையாளம் காணுதல்.
- சிறிய நடுத்தரதொழில்முயற்சி வியாபாரமொன்றில் நிதியியல் பதிவேடுகளை பேணுவதற்கான அடிப்படை முறைகளை அடையாளம் காணுதல்.
- இரட்டைப் பதிவுமுறைமையினைப் பயன்படுத்தி கொடுக்கல்வாங்கலை எவ்வாறு பதிவுசெய்வது என்பதனை பயின்று கொள்ளுதல்.
- பேரேட்டுக் கணக்குகளை சுருக்கப்படுத்தல், வியாபார மாதிரி நிலுவையினையும் நிதியியல் கூற்றுக்களையும் எவ்வாறு தயாரித்தல் என்பனவற்றை பயின்று கொள்ளுதல்.
- நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான இடர்நேர்வு முகாமைத்துவம் கோட்பாடு பற்றி கலந்துரையாடல்
- நுண்பாக சிறிய நடுத்தரதொழில்முயற்சிகளுக்கான காத்திரமான இடர்நேர்வு முகாமைத்துவமொன்றை உருவாக்குவதற்கான படிமுறையினை அடையாளம் காணுதல்.
- நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான காப்புறுதியின் நன்மைகளைத் தெரிந்துகொள்ளுதல்.

வியாபாரத் தொழிற்பாடுகள் பற்றி மேலும் அறிந்து கொள்வதற்காக தனஞ்ஜய கடைக்காரருடன் விசாரணைகளில் ஈடுபடுகின்றார்.




## நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான பதிவேடுகளைப் பேணுவதன் முக்கியத்துவம்

- உங்கள் காசுப் பாய்ச்சலை முகாமைப்படுத்தல்

காசும் திரவச்சொத்துக்களும் வியாபாரமொன்றின் முக்கிய அம்சங்களாகும். பதிவேடுகளைப் பேணுதல் இச்சொத்துக்களின் அனைத்து அசைவுகளையும் தொடர்ச்சியாக பேணுவதன் மூலம் அவற்றினை வினைத்திறனுடன் முகாமைப்படுத்துவதற்கு வியாபாரத்தினை அனுமதிக்கிறது. பதிவேடுகளை பேணுவது நிறுவனத்தின் காசுப்பாய்ச்சலை முகாமைப்படுத்துவதற்கு கணிசமாக உதவுகின்றதுடன் வியாபார நிதிகளை துல்லியமாக எறிவு செய்வதற்கான தகவல்களையும் வழங்குகிறது.

- தற்போதைய மற்றும் எதிர்கால வியாபாரத் தீர்மானங்களுக்கும் உதவுகிறது

உங்கள் வியாபாரத்திலுள்ள ஒவ்வொரு ரூபாவும் மிக முக்கியமானது என்பதனால் அதனை மிகக் கவனமாக செலவளித்தல் வேண்டும். ஆகவே உங்கள் பணம் எங்கிருந்து வருகிறது என்பதனையும் எவ்வாறு அதனை செலவளிக்க வேண்டும் என்பதனையும் விளங்கிக் கொள்வது இன்றியமையாததாகும். நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சியொன்றின் சொந்தக்காரர் என்ற ரீதியில் உமது வியாபாரத்தின் எதிர்கால எறிவுகளை துல்லியமாக மேற்கொள்ளவும் உங்கள் வியாபார இலாபங்களை வளர்த்துக்கொள்ளவும் இத்தகவல்களை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

- மோசடிகளை அல்லது களவுகளைத் தடுத்தல்.

சரியான கணக்கீட்டு முறையினைப் பேணுவது மோசடி மற்றும் தவறுகளைத் தடுக்கின்ற செயல்முறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு உங்களை இயலுமைப்படுத்துகிறது.

- உங்கள் வரிகளைச் செலுத்துங்கள் சட்டங்களுக்கு இணங்கி நடவுங்கள்

சரியான கணக்கீட்டு நடைமுறைகளைப் பேணுவது உங்கள் வரிகளை துல்லியமாக செலுத்துவதற்கு உங்களை இயலுமைப்படுத்தும்.

மேலும், வியாபாரங்கள் அரசாங்கத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுவதற்கு முழுமையான கணக்கீட்டு முறைமை மிக இன்றியமையாததாகும்.

## நுண்பாக வியாபாரமொன்றில் நிதியியல் பதிவேடுகளைப் பேணுவதற்கான அடிப்படை படிமுறைகள்

**படிமுறை 1**

வியாபாரத்தில் இடம்பெறும் அனைத்து கொடுக்கல்வாங்கல்களையும் பதிவுசெய்தல், இத்தகவல்களை சரியான கணக்கீட்டு பதிவுத் தகவல்களைளோ அல்லது பிரதான பதிவேடுகளோ பின்பற்றப்படாமல் ஒற்றைப்பதிவில் பதிவுசெய்ய முடியும். ஏனெனில் நுண்பாக மட்டத்திலுள்ள வியாபாரம் செய்யுமொருவரினால் இதனை விளங்கிக் கொள்வது கஷ்டமாகும்.

**படிமுறை 2**

கொடுக்கல்வாங்கல்களின் பட்டியலை கணக்குகளின் ஐந்து முக்கிய வகைகளுக்குள் வகைப்படுத்துவது அவசியமாகும். வருமானம், செலவு, உரிமைமிமை மூலதனம், பொறுப்புக்கள் மற்றும் சொத்துக்கள். கணக்குகளின் இம்முக்கிய வளங்களை உதாரணங்களுடன் விளங்கிக் கொள்ளவேண்டும்.

1) **வருமானங்கள் ∴ வருவாய்:** வருவாய் என்பது அனைத்து கொடுக்கல்களினதும் சேவைகளினதும் விற்பனைகளினதும் பெறுமதியாகும் என்பதுடன் வருமானங்கள் வியாபாரங்களினால் பெறப்படும் அல்லது அங்கீகரிக்கப்படுபவையாகும். ஒவ்வொரு வருமானத்தினையும் தனித்தனியாகப் பதிவுசெய்வது முக்கியமானதாகும். நுஒயஅிடநள:

- வியாபாரத்தின் விற்பனை வருவாய்
- நிலையான வைப்புக்களிலிருந்தான வட்டி வருமானம்
- வியாபார கட்டத்திலுள்ள மேலதிக இடவசதியை வாடகைக்கு விடுவதன் மூலம் பெறப்படுத்துகின்ற வாடகை வருமானம்
- 

2) **செலவினங்கள்:** செலவினம் என்பது பணத்தினை செலவிடுவது மற்றும் வருமானத்தினை ஈட்டும் விதத்தில் வியாபாரத்திற்கு ஏற்படும் செலவு என்பதாகும். ஒவ்வொரு வகைச் செலவினத்தினையும் தனித்தனியாக பதிவுசெய்வது முக்கியமானதாகும்.

**உதாரணங்கள்:**

- அலுவலரின் சம்பளங்கள்
- கட்டிடத்தின் வாடகை
- விற்பனைகளின் செலவு (விற்கப்பட்ட பொருட்களின் கொள்வனவுப் பெறுமதி)
- பொதுப் பயன்பாடுகள்
- விளம்பரப்படுத்தல்கள்
- போக்குவரத்து
- கடன்வட்டி

3) **சொத்துக்கள்:** சொத்துக்கள் என்பது வியாபாரமொன்றிற்குச் சொந்தமான அல்லது அதனால் கட்டுப்படுத்தப்படுகின்ற வளங்களாகும். இவை எதிர்கால பொருளாதார நன்மைகளை உருவாக்கும்.

**உதாரணங்கள்:**

- கையிலுள்ள∴ வங்கியிலுள்ள காசு
- இருப்பு (விற்பனை செய்யப்படாத பொருட்களின் இருப்பு)
- வர்த்தக வருமதிகள்
- ஏனைய வருமதிகள் (வாடகை வருமானம்)
- செலவினங்களின் முன்கூட்டிய கொடுப்பனவுகள் ∴ முன்கூட்டிய தீர்ப்பனவுகள்
- காணி மற்றும் கட்டிடங்கள்
- பொறிகள்
- சாதனங்கள், பொருத்துக்கள் மற்றும் பொருத்திகள்
- தளபாடங்கள்
- ஊர்திகள்

4) **பொறுப்புக்கள்:** பொறுப்புக்கள் என்பது வியாபாரத்தின் கடன்பாடுகள் என சுலபமாக குறிப்பிடலாம். அவை கடப்பாடுகளாக இருப்பதுடன் நிறுவனத்தின் எதிர்கால பொருளாதார நன்மைகளுக்காக தியாகம் செய்யப்படும்.

**உதாரணங்கள்:**

- கொடுப்படத்தக்க வர்த்தகம்
- செலவினங்களின் ஏனைய கொடுபடத்தக்கவை
- வங்கி மேலதிகப் பற்று
- கடன்கள்

5) நுஙரவைல ளை உயடடநன வாந ழறநெச□ள உழவெசஙைரவழைெ ழச வாந எயடரந வாயவ வாந ழறநெச ளைெநளவநன வை வாந டிரளைநெளள. ஐாநெ வாந ழறநெச ளைநெஉவள அழசந உயிவையட கசழஅ வஹைஅந வழ வஹைஅநஇ வாந நஙரவைல எயடரந ஐடைட ளைஉசநயளந யனெ டிந சநனரஉநன ஐாநெ ாந ரளநள யளளநவள கழச ாளை ிநசளழயெட ரளந (னசயறபைள).

**உதாரணம்:**

- மூலதனம்

இந்த ஐந்து முக்கிய கணக்குகளும் கணக்கீட்டு சமன்பாடுகளிலிருந்து பெறப்பட்டன. இவை நிதியியல் கணக்கீட்டின் அடிப்படைகளாகும். சமன்பாடு குறிப்பிட்டதொரு நேரத்தில் வியாபாரத்தின் சொத்துக்கள் மற்றும் செலவினங்களின் ஒன்றுதிரண்ட பெறுமதி பொறுப்புக்கள், வருமானம் மற்றும் பங்குரிமை மூலதனம் என்பனவற்றின் ஒன்றுசேர்ந்த பெறுமதிக்கு சமமாக இருத்தல் வேண்டும் எனக்குறிப்பிடுகிறது. இதனை பின்வருமானறு குறிப்பிடமுடியும்.

**சொத்துக்கள் + செலவுகள் = பங்குரிமை மூலதனம் +பொறுப்புக்கள் + வருமானங்கள்**

**படிமுறை 3:** வியாபாரம் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களின் தாக்கத்தினை அடையாளம் காணுதல்

வியாபாரமொன்றில் இடம்பெறுகின்ற ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலும் இரண்டு அம்சங்களை அல்லது இரண்டு தாங்கங்களை கொண்டிருக்கும். இதுவும் கணக்குகளின் இரட்டை அம்சங்கள் என அழைக்கப்படுகின்றன. உதாரணமாக சொந்தக்காரர் வியாபாரத்திற்கு பணத்தினை பங்களிக்கின்றபோது காசுச் சொத்துக்களும் உரிமை மூலதனமும் அதிகரிக்கும். வியாபாரங்கள் கடன்படும்போது (சொத்து) மற்றும் வங்கிக்கடன் (பொறுப்பு) என்பன அதிகரிக்கும். காசு நிறுவனம் அதன் பொறுப்புக்களை தீர்க்கும்போது காசு (சொத்துக்கள்) மற்றும் வங்கிக்கடன்கள் (பொறுப்புக்கள்) குறைவடையும். ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல்களின் முடிவிலும் கணக்கீட்டு சமநியமங்களின் இரு பக்கங்களும் சமமாக இருப்பதனை கவனிப்பது முக்கியமானதாகும்.

பின்வரும் அட்டவணை தொழிற்பாடுகளின் முதல்வாரத்தின் போது தனஞ்ஜயவின் உணவகத்தின் அடிப்படை கொடுக்கல்வாங்கல் வருமானம், செலவு, சொத்து, பொறுப்புக்கள் மற்றும் பங்குரிமை மூலதனம் என்பன மீது எவ்வாறு தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன என்பதனை பின்வரும் அட்டவணை எடுத்துக்காட்டுகின்றது.

| கொடுக்கல்வாங்கல் | வருமானம் | | செலவுகள் | | | சொத்து | | | | பொறுப்புக்கள் | | பங்கிலாபம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | விற்பனை வருமானம் | ஏனைய வருமானங்கள் | விற்பனைகளின் செலவு | போக்குவரத்துச் செலவு | சம்பளங்கள் | காசு ∴ வங்கி மீதி | மூலப்பொருட்கள் இருப்பு | பெறத்தக்க வர்த்தகம் | தளபாடம் மற்றும் சாதனம் | வர்த்தகக் கொடுக்கத்தக்கவை | வங்கிக் கடன் | மூலதனம் |
| 1) சொந்தக்காரர் வியாபாரத்திற்கென ரூ.100,000 இனை ஒதுக்கியுள்ளார் | | | | | | + 100,000 | | | | | | + 100,000 |
| 2) தளபாடங்களையும் சாதனங்களையும் ரூ.50,000 இற்கு கொள்வனவு செய்திருக்கிறார். | | | | | | - 50,000 | | | + 50,000 | | | |
| 3) உணவினைச் சமைப்பதற்காக ரூ.15,000 காசிற்கு சுவையூட்டிகளை கொள்வனவு செய்தார். | | | | | | - 10,000 | + 10,000 | | | | | |
| 4) உணவினைச் சமைப்பதற்காக ரூ.100,000 கடனிற்கு சுவையூட்டிகளை கொள்வனவு செய்தார். | | | | | | | + 15,000 | | | + 15,000 | | |
| 5) ரூ. 350இற்கு 100 உணவுப் பொதிகள் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு உணவுப் பொதிக்கான செலவு ரூ.220 கொடுப்பனவினை பின்னர் செலுத்துவதாக வாடிக்கையாளர் உறுதியளித்துள்ளார். | + 35,000 | | + 22,000 | | | +35,000 | -22,000 | | | | | |
| 6) 10 உணவுப் பொதிகள் ரூ.350 இற்கு விற்கப்பட்டது. இதன் செலவு உணவுப் பொதியொன்றுக்கு ரூ.220 கொடுப்பனவினை பின்னர் செலுத்துவதாக வாடிக்கையாளர் உறுதியளித்துள்ளார். | + 3,500 | | + 2,200 | | | | - 2,200 | + 3,500 | | | | |
| 7) ஐந்து வாடிக்கையாளர் கடனுக்கு வாங்கிய பொதிகளுக்கான பணத்தினைச் செலுத்தவில்லை (ரூ.350 ஒ 5) | | | | | | +1,750 | | - 1,750 | | | | |
| 8) மொத்த விற்பனையாளருக்கு ரூ.10,000 செலுத்தப்பட்டது. | | | | | | - 0,000 | | | | - 10,000 | | |
| 9) வங்கியிலிருந்து பெறத்தக்க கடன் ரூ.500,000 | | | | | | + 500,000 | | | | | + 500,000 | |
| 10) செலுத்தப்பட்டது | | | | + 500 | + 10,000 | - | 500 | | | | | |
| 11) முச்சில்லு வண்டிக் கட்டணம் ரூ.500 | - | - 10,000 | | | | | | | | | | |
| 12) சம்பளங்கள் ரூ.10,000 | 38,500 | 0 | 24,200 | 500 | 10,000 | 556,250 | 800 | 1,750 | 50,000 | 5,000 | 500,000 | 100,000 |
| மொத்தம் | **38,500** | | **34,700** | | | **608,800** | | | | **505,000** | | **100,000** |

மூ ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல் வகையினதும் விபரமான விபரணம் கீழே தரப்படுகிறது.

1. **வியாபாரத்திற்கு ஒதுக்கப்பட்ட ஆரம்ப நிதி:** நிதியின் இத்தொகை வியாபாரத்தில் உங்கள் முதலீடாகும் என்பதுடன் இது "மூலதனம" எனவும் அழைக்கப்படுகிறது. இது வியாபாரத்திற்கான முதலாவது காசு உட்பாய்ச்சலாகும். இது வியாபாரத் தொழிற்பாடுகளிலிருந்தான வருமானம் அல்ல. இது வெறுமனே வியாபாரத்திற்கான காசுத் தூண்டுதலேயாகும்.

2. **வியாபாரத் தொழிற்பாடுகளை நடாத்திச் செல்வதற்கு அவசியமான தளபாடங்கள், கருவிகள், பொறிகள் மற்றும் கருவிகளின் கொள்வனவு:** இது வியாபாரத்திலிருந்தான வெளிப்பாய்ச்சலாகும். இவை வியாபாரத் தொழிற்பாடுகளின் செலவினங்கள் அல்ல, எனவே இலாபத்தினை கணிக்கும்போது இவை பரிசீலனையில் கொள்ளப்படுவதில்லை. இச்செலவினங்கள் வியாபாரத்திற்கு அவசியமான சொத்துக்களை கொள்வனவு செய்யும்போது ஏற்படுகின்றன. எனவே இவை நிலையான சொத்துக்களின் கொள்வனவுகளாக இருக்கும்.

3. **விற்பதற்கான உற்பத்திகள் அல்லது பொருட்களுக்கான மூலப்பொருட்களின் கொள்வனவிற்காக செலுத்தப்படும் காசு என்பது வியாபாரத்திலிருந்தான காசு வெளிப்பாய்ச்சல் எனப்படுகிறது.** கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருட்கள் வியாபாரத்தின் சொத்தொன்றாக கருதப்படுகின்றது. எனினும், முடிவடைந்த உற்பத்திகள் விற்றுத்தீர்ந்ததும் விற்கப்பட்ட உற்பத்திகளைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்களின் செலவிற்கு மாற்றப்படுகின்றது. இது உற்பத்திச் செலவு.'. விற்பனைச் செலவு என அழைக்கப்படுகின்றது.

4. **கொடுகடன் நியதிகளில் பொருட்களின் உற்பத்திக்கான மூலப்பொருட்களின் கொள்வனவு:** வியாபாரத்திலிருந்து காசு வெளிப்பாய்ச்சல் எதுவும் காணப்படவில்லை. இதற்குப் பதிலாக பொறுப்புக்கள், வியாபார சென்மதிகள் உருவாக்கப்படுகின்றன. கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருட்கள் காசினை அடிப்படையாகக் கொண்ட கொள்வனவுகளாக இருப்பதனால் வியாபாரத்தின் சொத்துக்களாக கருதப்படுகின்றன. எனினும் உற்பத்திகள் விற்கப்பட்டதும் விற்கப்பட்ட உற்பத்திகளைத் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்களின் செலவு செலவினமொன்றாக மாற்றப்பட்டு உற்பத்திச் செலவு.'. விற்பனைச் செலவு என அழைக்கப்படுகிறது.

5. **உற்பத்தி செய்யப்பட்ட (அல்லது கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள்) பொருட்களை காசிற்கு விற்பனை செய்தல்)** இது வியாபாரத்திற்கான காசு உட்பாய்ச்சலாகவும் வியாபாரத்தினால் உருவாக்கப்படும் வருமானமொன்றாகவும் விளங்கி விற்பனை வருமானமாக அடையாளம் காணப்படுகின்றது. இது முடிவடைந்த உற்பத்திகளின் விற்பனையாகும்.

6. **கடன் நியதிகளில் விற்கப்படுகின்ற உற்பத்திகளின் விற்பனை (அல்லது கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள்)** வியாபாரத்திற்கான காசுப்பாய்ச்சல் எதுவும் காணப்படவில்லை. பதிலாக, பெறத்தக்க வர்த்தகம் (சொத்தொன்று) என்பது வியாபாரத்தில் உருவாக்கப்படுகின்றதொன்றாகும். எனினும், விற்பனை வருமானம் கொடுகடன் நியதிகளில் கூட உருவாக்கப்படுவதுடன், முடிவடைந்த உற்பத்திகள் விற்பனை செய்யப்பட்டதும் அவ்வுற்பத்திகளைத் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்களின் செலவு உற்பத்திச் செலவு.'. விற்பனைச் செலவு என அழைக்கப்படும் செலவினமொன்றிற்கு மாற்றப்படுகின்றது.

7. **கொடுகடன் மீது கொள்வனவு செய்த வாடிக்கையாளர்களின் (வியாபார வருமதிகள்)** காசுத் தீர்ப்பனவு இது வியாபாரத்திற்கான காசு உட்பாய்ச்சலாகும். அத்துடன் பெறத்தக்க வர்த்தகத் தொகையின் கிடைப்பனவு குறைவடைகின்றது. இது வருமானமொன்றல்ல.

8. **கொடுகடன் மூலம் (வியாபார கொடுப்பனவுகள்)** நாம் பொருட்களை எவரிடமிருந்து கொள்வனவு செய்கின்றமோ அந்த வழங்குனருக்கான காசினை தீர்ப்பனவு செய்தல். இது வியாபாரத்திடமிருந்தான காசு வெளிப்பாய்ச்சலாகும். அத்துடன் கொடுபடத்தக்க வர்த்தகத் தொகை வீழ்ச்சியடைகிறது. இது செலவிடலொன்றல்ல.

9. **வங்கியிலிருந்து கடனை பெற்றுக் கொள்ளுதல்** (அல்லது வேறு எவரேனும் கடன்வழங்குனரிடமிருந்து) இது வியாபாரத்திற்கான காசு உட்பாய்ச்சலாகும். கடனை மீண்டும் செலுத்துவதற்கான கடப்பாட்டினை வியாபாரம் கொண்டிருக்குமாயின் இது வியாபாரத்தின் பொறுப்பாகும்.

10. **சம்பளங்கள், பொதுப்பயன்பாட்டு பட்டியல், வாடகை, போக்குவரத்துச் செலவு** (பேருந்துக் கட்டணம், பாரவண்டிகளுக்கான வாடகைக் கட்டணம் எரிபொருள் செலவு) விளம்பரங்கள் போன்றவை பல்வேறு செலவுகளுக்காக காசினை செலுத்துதல் என்பன வியாபாரத்தினைக் கொண்டு நடத்துவதில் முக்கியமானதொரு பகுதியாக காணப்படுகிறது. இச்செலவினங்கள் காசாக செலுத்தப்படும் போது வியாபாரம் காசுப்பாய்ச்சல்களைக் காட்டுகிறது.

**படிமுறை 4:** உங்கள் இலாபத்தினைக் கணித்தல்

உங்கள் பதிவேடுகளை துல்லியமான முறையில் மேலேயுள்ள அட்டவணையின்படி பேணுவீர்களாயின் நிரல்களை கூட்டி நிறுவனத்தின் சொத்துக்கள் செலவுகள், வருமானங்கள், பொறுப்புக்கள் மற்றும் குறிப்பிட்ட காலப்பகுதிக்கான உரிமை மூலதனம் என்பனவற்றின் மொத்தப் பெறுமதியினை கண்டுகொள்ளலாம். பின்னர் நீங்கள் பின்வரும் சூத்திரத்தினைப் பயன்படுத்தி வியாபாரத்தின் இலாப நட்டங்களை கணிக்கமுடியும்.

**மொத்த இலாபம் = காலத்திற்குரிய மொத்த வருமானம் - மொத்த செலவினங்கள்**

**முதல் வாரத்திற்கான இலாபம் = முதல் வாரத்தின் வருமானம் - முதல் வாரத்தில் ஏற்பட்ட செலவினம்**

**முதல் வாரத்திற்கான இலாபம் = 38,500 – 34,700 = 3,800**

இவ்விலாப எண்தொகை வியாபாரத்தில் கிடைக்கத்தக்கதாகவுள்ள காசு நிலுவையிலிருந்தும் வேறுபடுகின்றது. இதற்கு காரணம் நிறுவனமானது கடன் கொடுக்கல்வாங்கல்களையும் நவீன கணக்கீட்டில் ஒன்றுசேர்ந்த கோட்பாட்டினையும் பின்பற்றுவததேயாகும். அட்டவணை பின்வருவனவற்றையும் காட்டுகிறது.

- குறிப்பிட்ட கால முடிவில் நிறுவனத்தின் மொத்த சொத்துக்களையும் ஒவ்வொரு சொத்தினதும் பெறுமதியினையும்
- குறிப்பிட்ட கால முடிவில் நிறுவனத்தின் பொறுப்புக்களையும் ஒவ்வொரு பொறுப்புக்களின் பெறுமதியினையும்
- குறிப்பிட்ட காலமுடிவில் நிறுவனத்தின் பங்குரிமை மூலதனத்தின் பெறுமதியினையும்
- காசு நிரல் காலப்பகுதியில் காசு உட்பாய்ச்சல்களையும் வியாபாரத் தொழிற்பாடுகளிலுள்ள வெளிப்பாய்ச்சல்களையும்

இவ்விலகுவான அட்டவணை உங்களது வியாபார இலாபங்களை புரிந்து கொள்வதற்கும் நிறுவனத்தின் நிதியில் நிலைமையினை (உரிமை மூலதனம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்) அடையாளம் காணவும் உதவும் என்பதனை கவனிப்பது முக்கிமானதாகும். மேலும், இது காலமுடிவில் நிறுவனத்தின் திரவத்தன்மை நிலைமையினை (காசுநிலைமை) புரிந்துகொள்வதனையும் இயலச் செய்கிறது.

மேலேயுள்ள பதிவேடுகளை பேணும்முறை நுண்பாக மட்ட வியாபாரங்களுக்கும் தொடக்க நிலுவையிலுள்ள சிறிய அளவு வியாபாரங்களுக்கும் ஏற்றுக்கொள்ளத்தக்கது என்பது கவனிக்கத்தக்கதாகும். வியாபாரம் வளர்ச்சியடையும் போது நீங்கள் பொருத்தமான நிதியியல் கணக்கீட்டு செய்முறையான, ஒன்றில் கையால் செய்யப்படும் அல்லது தன்னியக்கமான nra;Kiwf;F khwyhk;.

## சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்களுக்கான நிதியியல் பதிவேடுகளைத் தயாரித்தல்

வியாபாரம் வளர்ச்சியடையும் போது சரியான கணக்கீட்டு முறையினை பேணுவது மிக இன்றியமையாததாகும். இக்கட்டத்தில் நிறுவனம் அதன் நிதியியல் பதிவேடுகளை பேணுவதற்கு இரட்டைப் பதிவு முறைமையினை பின்பற்றுதல் வேண்டும். முதலில் வியாபாரமொன்று அதன் அனைத்து கொடுக்கல்வாங்கல் தொடர்பிலுமான பதிவேடுகளை பேணுதல் வேண்டும் என்பதுடன் தொடர்பான தகவல்களை காணக்குகளைத் தயாரிக்கும் போது அப்பதிவுகளிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். கொடுக்கல்வாங்கல்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பதிவேடுகள் கால ஒழுங்கிலும் திகதியடிப்படையில் பேணப்படவேண்டும். இதன் மூலம் கொடுக்கல்வாங்கல்களை குறிப்பிட்ட காலப்பகுதியுடன் (உதாரணம்: நாளாந்தம், வாராந்தம், மாதாந்தம், வருடாந்தம்) தொடர்பானதாக அமையமுடியும்.

இப்பிரிவு சிறிய மற்றும் நடுத்தர வியாபார மக்களுக்கு இரண்டைப் பதிவு கணக்குப் பதிவினை அறிமுகப்படுத்துகிறது. இது கணக்குகளின் தயாரிப்பில் ஒரு மூலக்கல்லாக அமையும்.

### பெயரளவு பேரேடு அல்லது பொதுப்பேரேடு

பெயரளவு பேரேடு என்பது வியாபாரத்தின் நிதியியல் அலுவல்களை சுருக்கமாக பதிவு செய்கின்ற கணக்கீடாகும். இது சொத்துக்கள், பொறுப்புக்கள், மூலதனம், வருமானம் மற்றும் செலவினம் ஒவ்வொன்றுக்குமான கணக்குகளை உள்ளடக்குகிறது. இது பல்வேறுபட்ட கணக்குகளை உள்ளடக்குவதுடன் ஒவ்வொன்றும் அதற்கான நோக்கம், பெயர் மற்றும் அடையாள குறியீடு என்பனவற்றை கொண்டிருக்கிறது.

### முறைசார்ந்த பேரேட்டுக்கணக்கு

பேரேட்டுக்கணக்கு இரண்டு பக்கங்களை கொண்டிருப்பதுடன் மேலே தலையங்கத்தினையும் கொண்டிருக்கும் அத்துடன் இது வு கணக்கு என வழக்கமாக அழைக்கப்படும். இது உண்மையான ஏட்டில் வைத்திருக்கப்படுமாயின் அதன் வடிவம் பின்வருமாறு இருக்கும்

| பற்று | | கணக்கின் பெயர் | | | | வரவு | |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி | விபரம் | தொடர்பு | (ரூ.) | திகதி | விபரம் | தொடர்பு | (ரூ.) |
| | | | | | | | |

### இரட்டைப் பதிவு கணக்குப் பதிவு

இரட்டைப் பதிவு கணக்குப் பதிவு முறை என்பது ஒவ்வொரு வரவும் அதற்குச் சமமான செலவினைக் கொண்டிருக்கும் என்பதாகும். மறு சொற்களில் கூறுவதாயின் ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலும் இரண்டு தாக்கங்களைக் கொண்டிருக்கும் என்பதாகும். அதாவது வரவின் தாக்கம். மற்றும் செலவின் தாக்கம் இவ்விரட்டைத் தாக்கம் ஏட்டில் பற்று மற்றும் வரவு பதிவுகளாக பதிவுசெய்யப்படுகின்றன.

கணக்கீட்டு சமன்பாட்டினை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்

**சொத்துக்கள் + செலவினங்கள் = மூலதனம் + பொறுப்புக்கள் + வருமானம்**

சமன்பாட்டின் படி, மொத்தப் பொறுப்புக்கள் ூ மூலதனம் ூ வருமானம் எப்பொழுதும் மொத்தச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு சமமாகவே இருக்கும். ஆகவே மொத்தச் சொத்துக்கள் அல்லது செலவினங்களில் மாற்றத்தினை ஏற்படுத்தும் ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள் மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் வருமானம் ூ மூலதனத்திலும் மாற்றத்தினை ஏற்படுத்துதல் வேண்டும்

### இரட்டைப்பதிவு கணக்குப் பதிவின் விதிகள்

அடிப்படை விதி என்பது சொத்துக்கள் மற்றும் செலவினக் கணக்குகள் வரவு மீதிகளையும் பொறுப்பு மூலதனம் மற்றும் வருமானக்




ஆகவே சொத்துக்கள் மற்றும் செலவுகள் அதிகரிக்கும் போது, வரவுப் பதிவுகள் தொடர்பான கணக்குகளுக்கு செய்யப்படுகின்றன

### சொத்து அல்லது செலவுக் கணக்கில் அதிகரிப்பு




இது போன்று சொத்து மற்றும் செலவில் ஏற்படும் வீழ்ச்சி செலவுப் பதிவாகும்.

**சொத்து அல்லது செலவுக் கணக்கில் வீழ்ச்சி**




வருமானம், பொறுப்புக்கள் மற்றும் மூலதனம் அதிகரிக்கும் போது அது தொடர்பான கணக்கில் அது செலவுப் பதிவாக இருக்கும்.

**வருமானம், பொறுப்பு அல்லது மூலதன கணக்கின் அதிகரிப்பு**




இதேபோன்று வருமானம், பொறுப்புக்கள் மற்றும் மூலதனத்தில் ஏற்படும் வீழ்ச்சி வரவுப் பதிவாகும்.

**வருமானம், பொறுப்பு அல்லது மூலதனக் கணக்கில் ஏற்பட்ட வீழ்ச்சி**




**விதிகளின் சுருக்கம்**



| Accounts | To record | The entry in the account |
|---|---|---|
| Assets | an increase | Debit |
| | a decrease | Credit |
| Liabilities | an increase | Credit |
| | a decrease | Debit |
| Income | an increase | Credit |
| | a decrease | Debit |
| Expenses | an increase | Debit |
| | a decrease | Credit |
| Capital | an increase | Credit |
| | a decrease | Debit |

அடிப்படை விதியாதெனில் ஒவ்வொரு நிதியியல் கொடுக்கல்வாங்கலும் இரண்டு கணக்கீட்டு பதிவுகளுக்கும் அதிகரிப்பினை வழங்குகின்றன. ஒன்று வரவு மற்றையது செலவு. ஆகவே பெயரளவு ஏட்டில் வரவுப் பதிவுகளின் மொத்தப் பெறுமதி எப்பொழுதும் செலவுப் பதிவுகளின் மொத்தப் பெறுமதிக்கு சமமாகவே இருக்கும்.

பின்வரும் உதாரணங்களை பயன்படுத்துவதன் மூலம் இரட்டைப் பதிவு முறைமை பற்றி கூடுதலாக பயில்வோம்.

**1) திரு. தனஞ்ஜய ரூ.100,000 முதலீட்டுடன் வியாபாரமொன்றினை ஆரம்பிக்கின்றார்.**

இவ்வுதாரணத்தில், ஆரம்ப முதலீடு, வியாபார மூலதனம் அதிகரிப்பதுடன் மூலதனம் கணக்கில் செலவு வைக்கப்படுகிறது. மூலதனம் காசு நியதிகளில் கம்பனிக்கு அறிமுகப்படுத்தப்படும் போது சொத்துக்கள் (சொத்தொன்றுள்ள காசு) அதிகரிப்பதுடன் காசுக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

காசுக் A/c (Dr) 100,000
மூலதனக் A/c (Cr) 100,000

| Assets | + | Expenses | = | Income | + | Liabilities | + | Capital |
|---|---|---|---|---|---|---|---|---|
| increased | | | = | | | | | increased |

**Asset (Cash) account**

| Debit | Credit |
|---|---|
| Capital 100,000 | |

**Capital account**

| Debit | Credit |
|---|---|
| | Cash 100,000 |

**2) வியாபாரம் ரூ.25,000 பெறுமதியான தளபாடத்தினை காசு நியதிகளில் வாங்கியது**

இக்கொடுக்கல்வாங்கல்களில், சொத்துக்கள் (காசு) வீழ்ச்சியடைந்ததுடன் சொத்துக்கள் (தளபாடம்) அதிகரித்தன.

Furniture a/c (Dr) 25,000
Cash a/c (Cr) 25,000

| Assets | + | Expenses | = | Income | + | Liabilities | + | Capital |
|---|---|---|---|---|---|---|---|---|
| Decreased Cash 25,000<br>Increased Furniture 25,000 | | | | | | | | |

**Asset(Furniture) account**

| Dr | Cr |
|---|---|
| Cash 25,000 | |

**Asset(Cash) account**

| Dr | Cr |
|---|---|
| | Furniture 25,000 |

**3) வியாபாரம் ரூ.25,000 பெறுமதியான பொருட்களை கடன்நியதிகளில் வாங்கியது**

இக்கொடுக்கல்வாங்கல்கள் சொத்துக்களை அதிகரித்ததுடன் (இருப்பு) பொறுப்புக்களை உருவாக்கியது. (கடன்வழங்கியவர்)

இருப்பு (Dr) 25,000
கடன்வழங்கியவர் (Cr) 25,000

| Assets | + | Expenses | = | Income | + | Liabilities | + | Capital |
|---|---|---|---|---|---|---|---|---|
| Increased Inventories 25,000 | | | | | | Increased Creditors 25,000 | | |

**Asset(Inventory) account**

| Dr | Cr |
|---|---|
| Creditors 25,000 | |

**Liability(Creditors) account**

| Dr | Cr |
|---|---|
| | Inventory 25,000 |

**4) வியாபாரம் காசு நியதிகளில் ரூ.5,000 இற்கான பொருட்களை விற்பனை செய்ததுடன் விற்பனைச் செலவு ரூ.3,500 ஆகும்.**

இக்கொடுக்கல்வாங்கல்களில் இரண்டு பிரிவுகள் காணப்படுகின்றன.

1. விற்பனைப் பெறுமதியினைப் பதிவுசெய்தல்
2. விற்பனைச் செலவுப் பெறுமதியினைப் பதிவுசெய்தல்

**விற்பனைப் பெறுமதியினைப் பதிவுசெய்தல்**

பொருட்களை விற்பனை செய்யும்போது காசு அதிகரிப்பதுடன் வருமானம் உருவாக்கப்படுகிறது.

காசு (Dr) 5,000
விற்பனை (Cr) 5,000

**விற்பனை செலவு பெறுமதியினைப் பதிவுசெய்தல்**

அதேநேரம் பொருட்கள் விற்பனை அதிகரிப்பின் காரணமாக இருப்புக்கள் குறைவடைகின்றதுடன் விற்பனைச் செலவினை அடையாளம் காணவேண்டியிருக்கும். ஆகவே தனியான கணக்கொன்றாக விற்பனைச் செலவு பற்று வைக்கப்படுகிறது.

விற்பனைச் செலவு (Dr) 3,500
இருப்பு (Cr) 3,500

| Assets | + | Expenses | = | Income | + | Liabilities | + | Capital |
|---|---|---|---|---|---|---|---|---|
| Increased Cash 5,000 | | | | Increased Sales 5,000 | | | | |
| Decreased Inventory 3,500 | | Increased COS 3,500 | | | | | | |

**Asset(Cash) account**

| Dr | | | Cr |
|---|---|---|---|
| Sales | 5,000 | | |

**Income (Sales) account**

| Dr | | | Cr |
|---|---|---|---|
| | | Cash | 5,000 |

**(Asset) Inventory account**

| Dr | | | Cr |
|---|---|---|---|
| | | COS | 3,500 |

**(Expense) Cost of Sales account**

| Dr | | | Cr |
|---|---|---|---|
| Inventory | 3,500 | | |

5) **வியாபாரம் செலுத்திய வாடகை ரூ.2,000**

இக்கொடுக்கல்வாங்கலில், செலவுகள் (வாடகை) அதிகரித்ததுடன் சொத்துக்கள் (காசு) வீழ்ச்சியடைந்தன.

| | |
|---|---|
| வாடகைச் செலவு | (Dr) 2,000 |
| காசு | (Cr) 2,000 |

| Assets | + | Expenses | = | Income | + | Liabilities | + | Capital |
|---|---|---|---|---|---|---|---|---|
| Decreased (Cash 2,000) | | Increased Rent 2,000 | | | | | | |

**Asset(Cash) account**

| Dr | | | Cr |
|---|---|---|---|
| | | Rent | 2,000 |

**Expenses (Rent) account**

| Dr | | | Cr |
|---|---|---|---|
| Cash | 2,000 | | |

6) **வியாபாரம் கடன் நியதிகளில் ரூ.15,000 இற்கு பொருட்களை விற்பனை செய்தது. பொருட்களின் செலவு ரூ.10,500 ஆகும்.**

இக்கொடுக்கல்வாங்கல்களில இரண்டு பிரிவுகள் காணப்படுகின்றன. எனவே நான்கு தாக்கங்கள் காணப்படுகின்றன.

**விற்பனைப் பெறுமதியினைப் பதிவுசெய்தல்**

பொருட்கள் கடன் நியதிகளில் விற்பனை செய்யப்படும்போது வருமானம் உருவாக்கப்படுகிறது. எனினும் வியாபாரத்தினால் காசு பெறப்படுவதில்லை. என்பதுடன் எதிர்காலத்தில் பெறப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே படுகடனாளிகள் என அழைக்கப்படும் சொத்து (பெறத்தக்க கணக்குகள்) உருவாக்கப்படுகிறது.

| | |
|---|---|
| படுகடனாளிகள் | (Dr) 15,000 |
| விற்பனைகள் | (Cr) 15,000 |

**விற்பனை செலவு பெறுமதியினைப் பதிவுசெய்தல்**

அதேநேரம், பொருட்கள் விற்பனை செய்யப்பட்டமையின் காரணமாக இருப்புக்கள் வீழ்ச்சியடைந்ததுடன் விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் விலைகளும் விற்பனைச் செலவினை அதிகரிக்கும்

| | |
|---|---|
| விற்பனைச் செலவு | (Dr) 10,500 |
| இருப்பு | (Cr) 10,500 |

| Assets | + | Expenses | = | Income | + | Liabilities | + | Capital |
|---|---|---|---|---|---|---|---|---|
| Increased Debtors 15,000 | | | | Increase Sales 15,000 | | | | |
| Decreased (Inventory 10,500) | | Increased COS 10,500 | | | | | | |

**(Asset) Debtors (accounts receivable) account**

| Dr | | | Cr |
|---|---|---|---|
| Sales | 15,000 | | |

**(Income) Sales account**

| Dr | | | Cr |
|---|---|---|---|
| | | Debtors | 15,000 |

**(Asset) Inventory account**

| Dr | | | Cr |
|---|---|---|---|
| | | COS | 10,500 |

**(Expense) Cost of Sales account**

| Dr | | | Cr |
|---|---|---|---|
| Inventory | 10,500 | | |

7) **வியாபாரம் ரூ.1,200 பெறுமதியான விற்பனைத் திரும்பல்களை பெற்றது. இப்பொருட்கள் காசு நியதிகளில் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் விற்பனைச்செலவு ரூ.800 ஆகக் காணப்பட்டது.**

இக்கொடுக்கல்வாங்கல்களை நான்கு தாக்கங்களை கொண்டிருக்கிறது. இரண்டு விற்பனைப் பெறுமதிகள் மீதும் இரண்டு விற்பனை செலவுகள் மீதும் காண்பட்டது.

முதலாவது வருமானம் குறைவடையும், காசு திருப்பப்படும் (விற்பனைகள் திருப்பப்படுவதன் காரணமாக) ஆகவே விற்பனை திரும்பல் கணக்கு திருப்பப்பட்ட விற்பனைப் பெறுமதி வரவு வைக்கப்படுவதுடன் காசுக் கணக்கில் செலவு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| விற்பனைத் திரும்பல் கணக்கு | A/c | (Dr) 1,200 |
| காசுக் கணக்கு | A/c | (Cr) 1,200 |

இப்பொழுது பொருட்கள் மீண்டும் பெறப்பட்டமைக்கிணங்க இருப்புக்களை அதிகரிக்க வேண்டிய தேவை காணப்படுகிறது. எனவே விற்பனைச் செலவினையும் கட்டாயம் குறைக்கவேண்டியிருக்கும். இதன் விளைவாக, திருப்பப்பட்ட பொருட்களின் விலைகள் இருப்புக் கணக்கில் வரவு வைக்கப்படும் என்பதுடன் விற்பனைச் செலவுக்கணக்கு செலவு வைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| இருப்புக் கணக்கு | A/c | (Dr) 800 |
| விற்பனைச் செலவு | A/c | (Cr) 800 |

| Assets | + | Expenses | = | Income | + | Liabilities | + | Capital |
|---|---|---|---|---|---|---|---|---|
| Decreased (Cash 1,200) | | | | Decreased (Sales 1,200) | | | | |
| Increased Inventory 800 | | Decreased (COS 800) | | | | | | |

**(Income) Sales Returns account**

| Dr | | | Cr |
|---|---|---|---|
| Cash | 1,200 | | |

**(Assets) Cash Account**

| Dr | | | Cr |
|---|---|---|---|
| | | Sales Returns | 1,200 |

**(Asset) Stock account**

| Dr | | | Cr |
|---|---|---|---|
| COS | 800 | | |

**(Expenses) COS account**

| Dr | | | Cr |
|---|---|---|---|
| | | Stock | 800 |

**8) சொந்தக்காரர் வியாபார காசு எடுப்பனவிலிருந்து சொந்தப் பயன்பாட்டிற்காக ரூ.2,500 இனை எடுக்கின்றார்**

காசு (சொத்துக்கள்) மற்றும் மூலதனம் (எடுப்பனவுகள்) இரண்டும் இக்கொடுக்கல்வாங்கல்களில் குறைவடைகின்றன.

| | |
|---|---|
| எடுப்பனவுகள் | (Dr) 2,500 |
| காசு | (Cr) 2,500 |

| Assets | + | Expenses | = | Income | + | Liabilities | + | Capital |
|---|---|---|---|---|---|---|---|---|
| Decreased (Cash 2,500) | | | = | | | | | Decreased (Drawings 2,500) |

**(Asset) Cash account**

| Dr | | Cr | |
|---|---|---|---|
| | | Drawings | 2,500 |

**(Capital) Drawings account**

| Dr | | Cr | |
|---|---|---|---|
| Cash | 2,500 | | |

**9) வியாபாரம் ரூ.50,000 கொண்ட வங்கிக் கடனை பெற்றிருக்கிறது**

காசு (சொத்துக்கள்) மற்றும் பொறுப்புக்கள் (வங்கிக் கடன்) இக்கொடுக்கல்வாங்கல்களில் அதிகரித்திருக்கின்றன.

| | |
|---|---|
| காசு | (Dr) 50,000 |
| வங்கிக் கடன் | (Cr) 50,000 |

| Assets | + | Expenses | = | Income | + | Liabilities | + | Capital |
|---|---|---|---|---|---|---|---|---|
| Increased Cash 50,000 | | | = | | | Increased Bank loan 50,000 | | |

**(Asset) Cash account**

| Dr | | Cr | |
|---|---|---|---|
| Bank loan | 50,000 | | |

**(Liability) Bank loan account**

| Dr | | Cr | |
|---|---|---|---|
| | | Cash | 50,000 |

**10) வியாபாரம் ரூ.50,000 காசினைச் செலுத்தி கட்டிடம் ஒன்றினை வாங்கியுள்ளது.**

இக்கொடுக்கல்வாங்கலில் கட்டடம் வாங்கப்பட்டமையினால் சொத்து அதிகரித்துள்ளது. காசு செலுத்தப்பட்டமையினால் குறைவடைந்துள்ளது.

| | |
|---|---|
| கட்டிடம் | (Dr) 50,000 |
| காசு | (Cr) 50,000 |

| Assets | + | Expenses | = | Income | + | Liabilities | + | Capital |
|---|---|---|---|---|---|---|---|---|
| Decreased (Cash 50,000) Increased Building 50,000 | | | | | | | | |

**(Asset) Cash account**

| Dr | | Cr | |
|---|---|---|---|
| | | Buildings | 50,000 |

**(Asset) Buildings account**

| Dr | | Cr | |
|---|---|---|---|
| Cash | 50,000 | | |

**11) கட்டிடத்தினை வாடகைக்கு வழங்கியதன் மூலம் வியாபாரம் ரூ. 10,000 இனை வாடகை வருமானமாகப் பெற்றது.**

இக்கொடுக்கல்வாங்கலில் காசு மற்றும் வாடகை வருமானம் இரண்டும் அதிகரித்தன

| | |
|---|---|
| காசு | (Dr) 10,000 |
| வாடகை வருமானம் | (Cr) 10,000 |

| Assets | + | Expenses | = | Income | + | Liabilities | + | Capital |
|---|---|---|---|---|---|---|---|---|
| Increased Cash 10,000 | | | | Increased Rent income 10,000 | | | | |

**(Asset) Cash account**

| Dr | | Cr | |
|---|---|---|---|
| Rent | 10,000 | | |

**(Income) Rent Income account**

| Dr | | Cr | |
|---|---|---|---|
| | | Cash | 10,000 |

## பேரேட்டுக் கணக்கினைச் சமநிலைப்படுத்தல்

கணக்கீட்டுக் காலப்பகுதியின் முடிவில், ஒவ்வொரு நிறுவனத்தினதும் பேரேட்டுக் கணக்கின் சுருக்கமொன்றினை அல்லது இறுதி மீதியினை பெற்றுக்கொள்வது அவசியமாகும். முதலில் நாம் கணக்கில் அனைத்து பற்றுக்களினையும் அனைத்து செலவுகளையும் மொத்தமாக்குதல் அவசியம். மொத்தப் வரவுகள் மொத்த செலவுகளை விஞ்சுமாயின், அது கணக்கின் மீதான வரவு மீதி என அழைக்கப்படும். செலவுகள், வரவுகளை விஞ்சுமாயின் கணக்கு செலவு மீதியை கொண்டிருக்கிறது எனப்படும். பேரேட்டுக்கணக்கு ஒவ்வொரு பதிவினை மாத்திரம் கொண்டிருக்குமாயின், ஒவ்வொரு கணக்கினதும் மீதியினைப் பெற மொத்தப்படுத்தத் தேவையில்லை.

சமநிலைப்படுத்திய பின்னர் பின்வரும் ஏட்டுக்கணக்கினைப் பார்க்கவும்

**சொத்து (காசு) கணக்கு**

| வரவு | | | செலவு |
|---|---|---|---|
| (1) ) மூலதனம் | 100,000 | (2) தளபாடம் | 25,000 |
| (4) விற்பனைகள் | 5,000 | (5) வாடகை செலவினங்கள் | 2,000 |
| (5) வங்கிக்கடன் | 50,000 | (7) விற்பனைகளின் திரும்பல் | 1,200 |
| (11) வாடகை வருமானம் | 10,000 | (8) எடுப்பனவுகள் | 2,500 |
| | | (10) கட்டிடம் | 50,000 |
| | | மீதி ப.்வ | 84,300 |
| | 165,000 | | 165,000 |
| முன் கொண்டு வரப்பட்ட மீதி | **84,300** | | |

நாங்கள் அனைத்து பேரேட்டுக்கணக்குகளையும் சமநிலைப்படுத்தியதும் பரீட்சை மீதியை தயாரிப்பதன் மூலம் அவற்றின் கணித முறையிலான துல்லியத் தன்மையினை நாம் பரிசோதிக்க முடியும். இது, நிறுவனத்தின் பேரேட்டுக் கணக்கு மீதிகளின் பட்டியலாகும். பரீட்சை மீதிப்படிவம் கீழே தரப்படுகிறது.

**202ஒ திசெம்பர் 31இல் உள்ளவாறு பரீட்சை மீதி**

| கணக்கின் பெயர் | வரவு | ஊசநனவை |
|---|---|---|
| சொத்துக் கணக்கு | | nryT |
| செலவுகள் கணக்கு | XX | |
| பொறுப்புக் கணக்கு | | Xx |
| வருமானக் கணக்கு | | XXX |
| பங்குரிமை மூலதனம் கணக்கு | | XXX |
| | XXX | XXX |

பரீட்சை மீதியின் வரவுமற்றும் செலவுப் பக்கங்கள் சமமாக காணப்படும் போது நாம் கணக்கு கணித ரீதியாக துல்லியமாக இருக்கிறது என்ற முடிவிற்கு வரலாம். பின்னர் நாம் இறுதி இருப்பு, ஒன்று சேர்ந்தவை மற்றும் முன்கொடுப்பனவுகள் தவறுகளை திருத்துதல், தேய்மானம் மற்றும் ஏனைய ஏற்பாடுகள் போன்ற கணக்கீட்டு சீராக்கங்களைச் செய்வது அவசியமாகும்.

**சிறிய நடுத்தர தொழில்முயற்சி வியாபாரங்களுக்கான நிதியியல் கூற்றுக்களைத் தயாரித்தல்**

ஆண்டிற்காக நீங்கள் வைத்திருக்கும் பதிவேடுகளையும் ஆவண மூலங்களையும் அடிப்படையாகக் கொண்டு நிதியியல் கூற்றுக்கள் என அறியப்படும் இறுதிக் கணக்குகளை கணக்காளர் தயாரிப்பார்.

1. **வருமானக் கூற்றுக்கள் -** இக்கூற்று ஆண்டுப் பகுதியின் வருமானம் மற்றும் செலவுகளையும் ஆண்டின் இறுதியில் வியாபாரத்தின் தேறிய இலாபத்தினையும் காட்டுகின்றது.

2. **நிதியியல் நிலைமைக் கூற்று -** இக்கூற்று, ஆண்டின் இறுதியில் சொந்தக்காரரின் வியாபார மூலதனம் உட்பட சொத்துக்கள் மற்றும் பெறுமதிகளைக் காட்டுகின்றது.

3. **காசுப் பாய்ச்சல் கூற்று -** ஆண்டுப் பகுதியில் வங்கியிலுள்ள பணம், தொழிற்பாடுகள் முதலீடுகள் மற்றும் நிதியிடல் நடவடிக்கைகள் உட்பட வியாபாரம் அதன் காசினை எவ்வாறு முகாமைப்படுத்துகின்றது என்பதனை காட்டுகின்றது.

4. **பங்குரிமை மூலதனத்தில் ஏற்படும் மாற்றங்களின் கூற்று (கம்பனிகளுக்கு மாத்திரம் பொருந்தும்) -** இக்கூற்று இவ்வாண்டுப்பகுதியில் பங்குடமையாளர் மூலதனத்தினை எவ்வாறு திறத்தல், ஒதுக்குகள் மற்றும் தேறிய இலாபங்களில் ஏற்படும் மாற்றங்களைக் காட்டுகிறது

2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்படி, அனைத்து கம்பனிகளும் அவற்றின் நிதியியல் கூற்றுக்களை சுயாதீனமான கணக்காய்வாளர் ஒருவர் மூலம் கணக்காய்வு செய்து கொள்ளுதல் வேண்டும். கணக்காய்வு நிதியியல் கூற்றுக்களிலுள்ள தகவல்களின் நம்பகத்தன்மையினை அதிகரிக்கும் என்பதுடன் பங்குடமையாளர்களினதும் ஏனைய முதலீட்டாளர்களினதும் நம்பிக்கையினையும் அதிகரிக்கும் எனினும் தனியுடமைக்கும் பங்குடமைக்கும் நிதியியல் கூற்றுக்களை கணக்காய்வு செய்வது கட்டாயமானதல்ல.

வருமானக்கூற்று மற்றும் நிதியியல் நிலைமைக்கூற்று (ஐந்தொகை) படிவம் கீழே காட்டப்பட்டுள்ளது.

**XXXXXX காலமுடிவிற்கான வருமானக்கூற்று**

| | Rs. 000 |
|---|---|
| வருமானம் | 98,000 |
| விற்பனைச் செலவு | (73,500) |
| மொத்த இலாபம் | 24,500 |
| தொழிற்பாட்டுச் செலவு | (17,150) |
| தொழிற்பாட்டு இலாபம் | 7,350 |
| நிதிச் செலவு | (1,400) |
| வரிக்கு முன்னரான இலாபம் | 5,950 |
| வருமான வரி | (1,750) |
| ஆண்டிற்கான இலாபம் | 4,200 |

**XXXXXX திகதியிலுள்ளவாறு நிதியியல் நிலமைக்கூற்று**

| | Rs. 000 | Rs.000 |
|---|---|---|
| **Assets** | | |
| **Non-current assets** | | |
| Property and shop fittings | | 53,550 |
| | | |
| **Current Assets** | | |
| Inventory | 17,850 | |
| Bank | 1,750 | 19,600 |
| **Total assets** | | 73,150 |
| | | |
| **Equity and liabilities** | | |
| Equity | | 46,550 |
| **Non-current liabilities** | | |
| Loan | | 14,000 |
| | | |
| **Current liabilities** | | |
| Trade payables | 9,450 | |
| Current tax payable | 3,150 | 12,600 |
| **Total equity and liabilities** | | 73,150 |

# 4.8. நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு

சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்கள் தொடர்ச்சியாக இடர்நேர்வுகளுக்கு உள்ளாகிவருகின்றன. இவ்விடர்நேர்வுகள் நாளாந்த தொழிற்பாடுகளை நேரடியாக பாதிக்கக்கூடும். இதன் விளைவாக வியாபாரத்தின் வருமானம் வீழ்ச்சியடையலாம் அல்லது செலவினங்கள் அதிகரிக்கலாம் இறுதியில் விரும்புகின்ற இலக்குகள் அடையப்படாமல் போகலாம். சில இடர்நேர்வுகள் வியாபாரம் முறிவடைந்து போகின்ற அளவிற்கு கடுமையானதாகவும் இருக்கக்கூடும்.

பெரும்பாலான வியாபாரங்களின் சொந்தக்காரர்கள் சில இடர்நேர்வுகளிலிருந்து பாதுகாப்பு பெற காப்புறுதியை பயன்படுத்த முடியும் என்பதனை அறிந்து வைத்திருக்கின்றனர். எனினும் அனைத்து வியாபாரங்களும் வேறு பல அபாயங்களை எதிர்நோக்குகின்றன. அவற்றில் சிலவற்றை கண்டு கொள்வதில்லை அல்லது புறக்கணித்துவிடுகின்றன. ஒவ்வொரு வியாபாரமும் முகாமைப்படுத்தப்படாத இடர்நேர்வுகளிலிருந்து சாத்தியமான இழப்புகளுக்கு உட்பட்டே இருக்கின்றன. ஆற்றல் வாய்ந்த இடர்நேர்வு முகாமைத்துவம் ஏற்படக்கூடிய குறித்துரைக்கப்பட்ட சம்பவங்கள் குறிப்பிடக்கூடிய நிகழ்தகவினை குறைத்தல் வேண்டும். இது இடம்பெறுமானால் ஆற்றல்வாய்ந்த இடர்நேர்வு முகாமைத்துவம் இதன் தாக்கத்தினைக் குறைத்து வியாபாரத்தின் செல்வம் பாதுகாக்கப்படுவதற்கு உதவும்.

#### நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சியொன்றிற்காக காத்திரமான இடர்நேர்வு முகாமைத்துவத்தினை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள்

1) எந்தவொரு வியாபாரத்திற்குமான முதல் நடவடிக்கை நிதியியல் தொழிற்பாட்டு, கீர்த்தி, இணங்குவிப்பு இயற்கை மற்றும் வியாபார இடர்நேர்வு என்பன உட்பட இடையூறுகளை ஏற்படுத்தக்கூடிய அல்லது அதற்குக் காரணமாக அமையக்கூடிய சாத்தியமான இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதாகும்.

2) வியாபாரம் இடர்நேர்வுகளை அடையாளம் கண்டதும் அவற்றை ஏற்படக்கூடிய நிகழ்தகவு மற்றும் தாக்க விதிகளில் அவற்றை பகுப்பாய்வு செய்தல் வேண்டும்

சாத்தியமான தன்மை என்பது இடர்நேர்வுகள் நிகழக்கூடிய வாய்ப்பினை அல்லது நிகழ்வுத்தன்மையினை குறிப்பிடுகிறது. இது தொழில்களிலுள்ள நடுத்தர அல்லது உயர்நிகழ்தகவாக இருக்கமுடியும்.

தாக்கம் என்பது வியாபாரத்தில் சேதங்களை ஏற்படுத்தக்கூடிய சாத்தியங்களை கொண்டிருக்கிறது என்பதாகும். இதன் தாக்கம் குறைவானதாக, நடுத்தரமானதாக அல்லது உயர்வானதாகவும் ரூபா பெறுமதியில் அளவிடத்தக்கதாகவும் இருக்கமுடியும்.

மேற்குறிப்பிட்ட அளவுகளின் அடிப்படையில் வியாபாரம், இடர்நேர்வு அளவுமுறை ஒன்றினை உருவாக்கிக்கொள்ள வேண்டும். இவ்வளவுமுறை வியாபாரங்களின் நெருக்கடியான இடர்நேர்வுகளை அடையாளம் காணும்.

3) இடர்நேர்வு அளவுமுறையின் அடிப்படையில், வியாபாரம் நிறுவனத்திற்கு பெரும்பாலும் ஏற்படக்கூடிய மிகவும் செலவினை ஏற்படுத்தக்கூடிய இடர்நேர்வுகளை கவனித்தல் வேண்டும்.

4) இடர்நேர்வுகளுக்கு பதிலிறுத்தும் திட்டமொன்றினை உருவாக்குதல், வியாபாரங்கள் தடங்கலற்ற திட்டமொன்றினையும் நடவடிக்கை முறைகளையும் அவற்றின் அனைத்து உயர் முன்னுரிமை வாய்ந்த இடர்நேர்வுகளுக்குமாக தயாரித்துக்கொள்ள வேண்டும். அத்தகைய இடர்நேர்வுகளை தெளிவான வகிபாகத்தினையும் பொறுப்புக்களையும் ஒப்படைப்பதன் மூலம் கையாள்வது முக்கியமானதாகும். மேலும் வியாபாரமானது அத்தகைய திட்டங்களை அவற்றின் ஆர்வமுடைய தரப்பினருக்கு தொடர்பூட்டுதல் வேண்டும்.

இடர்நேர்வுகளை கையாள்வதற்கு மிகப்பொதுவான உபாயங்களாக பின்வருவன இருக்கக்கூடும்.

தவிர்த்தல்: தேவையற்ற இடர்நேர்வுகளை உருவாக்கக்கூடிய நடவடிக்கைகளைத் தவிர்த்தல்.

**குறைத்தல்:** ஏற்படக்கூடிய அல்லது சாத்தியமான இடர்நேர்வுகளை குறைப்பதற்கான பாதுகாப்புக்களை நடைமுறைப்படுத்தல்

**மாற்றல்:** காப்புறுதி அல்லது பங்குடமையூடாக இடர்நேர்வினை நகர்த்துதல்

**ஏற்றுக்கொள்ளல்:** இடர்நேர்வினை முகாமைப்படுத்த தயாராகுதல் (குறைந்த சாத்தியத்தினைக் கொண்ட இடர்நேர்வினை ஏற்றுக்கொள்ளுதல்)

5) **கண்காணிப்பு மற்றும் மீளாய்வு**

இடர்நேர்வினை முகாமைப்படுத்துவதென்பது தொடர்ச்சியானதொரு செய்முறையாகும். முடிவில்லாத ஒரு பயணமாகும். வியாபார சூழல் மாற்றமடையும்பொழுது இடர்நேர்வுத் தன்னியக்கமாகவே மாற்றமடையும். ஆகவே வியாபாரங்கள் அவற்றின் இடர்நேர்வு முகாமைத்துவத் திட்டங்களை மிக நெருக்கமாக கண்காணித்து மீளாய்வு செய்தல் வேண்டும்.

### நுண்பாக சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான அறிவுறுத்தல் நன்மைகள்

முன்னைய பிரிவில், காப்புறுதியை இடர்நேர்விற்கு பதிலிறுத்தும் உபாயமாக எவ்வாறு பயன்படுத்தமுடியும் என்பது பற்றி நாம் கலந்துரையாடினோம். இதில் வியாபாரம் அதன் இடர்நேர்வினை மூன்றாம் தரப்பினருக்கு மாற்றல்செய்யமுடியும். இடர்நேர்விற்கெதிராக வியாபாரத்தினை பாதுகாப்பதற்கு மிக முக்கியமான வழிகளிலொன்று போதுமான காப்புறுதியினைக் கொண்டிருப்பதாகும். காப்புறுதியின் மூலம், இவ்விடர்நேர்வுகளை நீங்கள் காப்புறுதிசெய்ய வேண்டும், எவற்றை வியாபாரத்தினால் அல்லது அதன் சொந்தக்காரர்களினால் பாதுகாக்கப்படமுடியும் என்பதனை நீங்கள் தீர்மானித்தல் வேண்டும்

பின்வரும் அட்டவணை காப்புறுதிப் எல்லைகளையும் பொதுவான வகையினையும் அது உள்ளடக்குவனவற்றையும் காட்டுகின்றது.

| காப்புறுதி வகை | எவற்றை அது உள்ளடக்குகிறது |
|---|---|
| சொத்துக் காப்புறுதி | கட்டிடம், இருப்பு மற்றும் சாதனம் போன்ற பௌதீக சொத்துக்கள் தாக்கங்கள் |
| வியாபாரத் தடங்கல்கள் | தீ, வெள்ளம் அல்லது இயற்கை அனர்த்தம் போன்ற சம்பவங்களின் காரணமாக ஏற்படும் வருமான இழப்பு |
| தொழிலாளர் இழப்பீடு | வேலையுடன் தொடர்புபட்ட விதத்தில் ஊழியர்கள் காயமடைதல் அல்லது நோய் வாய்ப்படுதல் |
| தொழில்சார் நிபுணத்துவ பொறுப்பு | தொழில்சார் நிபுணத்துவச் சேவைகளில் தவறு அல்லது அக்கறையின்மை. |
| இணையவழிக் குற்றப்பொறுப்பு | இணையவழி குற்றதாக்குதல்கள், தரவு மீறப்படுதல் |
| உற்பத்திப்பொறுப்பு | குறைபாடுடைய அல்லது தீங்கு பயக்கும் உற்பத்திகளின் காரணமாக ஏற்படும் சேதங்கள் |
| வாகனக் காப்புறுதி | வியாபார நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் |
| முக்கிய ஆட்களின் காப்புறுதி | முக்கியமான ஊழியரின் அல்லது சொந்தக்காரரின் மரணம் அல்லது தொழ-ில்புரிய இயலாமல் போவதன் காரணமாக ஏற்படும் நிதியியல் இழப்பு |

காப்புறுதியாளரொருவரை தேர்வுசெய்யும்போது வியாபாரமானது பல காரணிகளை பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும். முதலாவது காப்புறுதி பாதுகாப்பு தேவைப்படும் இடர்நேர்வுகளை அவர்கள் அடையாளம் காணுதல் வேண்டும். பின்னர் அப்பிரதேசத்திலுள்ள அவர்கள் காப்புறுதிக் கம்பனிகள் பற்றி விசாரித்து (இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு) பணத்துக்கான பெறுமதியினை வழங்கும் சரியான காப்புறுதியினைத் தெரிவுசெய்தல் வேண்டும். மேலும், வியாபாரமானது கோரல்களின் போது ஏற்படக்கூடிய ஆச்சரியங்களைத் தவிர்ப்பதற்கு காப்புறுதி பாதுகாப்பு வரையறை விலகல்கள் மற்றும் கழிவிடப்படக்கூடியவைகள் போன்றன பற்றி மீளாய்வு செய்வது அவசியமானதாகும். இறுதியாக காப்புறுதிப் பாதுகாப்பு அவர்களின் வளர்ந்துவரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மீளாய்வு செய்யப்படல் வேண்டும்.

அத்தியாயம் 5

# டிஜிட்டல் நிதியியல் அறிவு

## 5.1 அறிமுகம்

### பயில்கின்ற பெறுபேறுகள்

- தீர்வு ஒன்றாக காசினைப் பயன்படுத்துவதனதும் டிஜிட்டல் நிதியினை பயன்படுத்துவதனதும் வசதிகளை புரிந்துகொள்ளுதல்.
- டிஜிட்டல் கொடுப்பனவுகளைப் பயன்படுத்திக் கொள்வதன் தேசிய முக்கியத்துவத்தினை விளங்கிக் கொள்ளுதல்
- டிஜிட்டல் நிதியியல் சேவைகளின் கிடைக்கத்தக்க அனைத்து மாதிரிகளையும் அடையாளம் காணுதல்.
- டிஜிட்டல் நிதியியல் சேவைகளை பயன்படுத்துகின்ற வேளையில் பாதுகாப்பினையும் கட்டுக்காப்பினையும் ஊக்குவிக்கின்ற சிறந்த நடைமுறைகளை அடையாளம் காணுதல்
- வழமையான கொடுக்கல்வாங்கல்களுக்காக டிஜிட்டல் நிதியில் சேவையின் பல்வேறுபட்ட வகைகளையும் பயன்படுத்தல்.

### டிஜிட்டல் நிதியியல் அறிவு

டிஜிட்டல் நிதியியல் அறிவு என்பது நிதியியல் சாதனங்களையும் சேவைகளையும் அணுகுவதற்கும், முகாமைப்படுத்துவதற்கும் அவை பற்றிய சிறந்த அறிவுடன் தீர்மானங்களை மேற்கொள்ளவும் டிஜிட்டல் தளம்களை, கருவிகளை மற்றும் தொழில்நுட்பங்களை வினைத்திறனுடன் பயன்படுத்திக் கொள்வதற்கான இயலாற்றல் என கருதப்படுகின்ற வேளையில், இணைய வழி பாதுகாப்பு மற்றும் தரவு பற்றிய இரகசியத் தன்மை போன்ற கரிசனைகளுடன் தொடர்பான விடயங்களையும் அறிந்து கொள்வதாகும். நிதியியல் தத்துவங்களைப் புரிந்துகொள்வதற்கு டிஜிட்டல் தேர்ச்சிகளில் கவனம் செலுத்துவதன் மூலம் இது நிதியியல் நலனோம்புகைகளையும் டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு வசதியளிப்பதனையும் ஊக்குவிக்குகிறது.

**டிஜிட்டல் நிதியியல் அறிவினை, டிஜிட்டல் அறிவு மற்றும் நிதியியல் அறிவின் மையப்புள்ளி என புரிந்துகொள்ள முடியும். இது தனிப்பட்டவர்களுக்கு பின்வரும் வசதிகளை வழங்கும்:**

- டிஜிட்டல் நிதியியல் கருவிகளுக்கும் தளம்களுக்கும் வழிகாட்டுதல்
- தகவல்களின் அடிப்படையில் நிதியியல் தீர்மானங்களை மேற்கொள்ளுதல்
- டிஜிட்டல் இடர்நேர்வுகளை (உ-ம்: மோசடி இணையவழிப் பாதுகாப்பு) புரிந்துகொள்ளுதல் மற்றும் தணித்தல்

ரத்நாயக்க குடும்பம் அண்மையில் காலை உணவை [illegible] கொள்ளும் வேளையில் பின்வரு[illegible] [illegible]ந்துரை[illegible] இடம்பெற்[illegible]






இது போன்ற கலந்துரையாடல்கள் இன்று அனேக குடும்பங்களில் இடம்பெறுகின்றன. விசேடமாக வயதான மற்றும் இளைய தலைமுறையிருக்கிடையே டிஜிட்டல் அறிவு இடைவெளியினை பரிசீலனையில் கொள்ளும்போது இடம்பெறுகிறது. இவ்விடயத்தில் பெற்றோர் டிஜிட்டல் சாதனங்களை பயன்படுத்த தயக்கம் காட்டுகின்றனர். காரணம் அவற்றின் தொழிற்பாடு பற்றி இவர்களுக்கு போதிய பரிட்சயம் இல்லாமையும் பாதுகாப்பு பண்புகளும் இவற்றின் நன்மைகள் பற்றிய மட்டுப்படுத்தப்பட்ட அறிவுமே காரணமாகும்.

இளந்தலைமுறையினர் கொடுப்பனவுகள், சேமிப்புக்கள் மற்றும் செலவிடல் விடயங்களுக்கு டிஜிட்டல் சாதனங்களையும் செயல்களையும் மிகச் சௌகரியமான விதத்தில் பயன்படுத்திக் கொள்கின்றனர். இலங்கை நிதியியல் அறிவுத் தூதுவர்கள் என்ற ரீதியில் வயது வந்தவர்களிடையே டிஜிட்டல் தீர்வுகளை கடைபிடிக்கச் செய்யும் ஊக்குவிக்குக்களைத் தீவிரமாக மேற்கொள்ள முடிகிறது.

சரியான வழிகாட்டல்களையும் நம்பிக்கையினையும் கட்டியெழுப்புவதன் மூலம் (உ-ம் தனஞ்ஜய பாதுகாப்புப் பண்புகளை எடுத்துக்காட்டியமை) வயது வந்த தலைமுறையினரும் படிப்படியாக டிஜிட்டல் நிதியியல் சாதனங்களைப் பயன்படுத்த முடியும்.

### டிஜிட்டல் நிதியியல் அறிவின் நன்மைகள்

- **வசதிகள்:** தன்னியக்க முறையிலான கொடுப்பனவுகள் மற்றும் தண்டங்கள் தவிர்க்கப்படுகின்றன.
- **செலவுகளின் சேமிப்பு:** அளவுக்கதிகமான செலவிடல்கள் தவிர்க்கப்படுகின்றன.
- **பாதுகாப்பு விழிப்புணர்வு:** உறுதிப்படுத்தல்களுடன் பாதுகாப்பான செயலிகளை பயன்படுத்தல்
- **வரவுசெலவுத் திட்டத்தினை முகாமைப்படுத்தல்:** செலவுகளை காத்திரமான முறையில் முகாமைப்படுத்தல்
- **சேமிப்புச் சாதனங்கள்:** நிதியியல் இலக்குகளுக்காக சேமிப்புக்களை தன்னியக்கமாக பேணுதல்

## 5.2 டிஜிட்டல் நிதியியல் சேவைகள்

### கற்றலின் பெறுபேறுகள்

- வங்கித் தொழிலில் டிஜிட்டல் மாற்றங்களைப் புரிந்துகொள்ளுதல்
- டிஜிட்டல் வங்கித்தொழிலை வரையறை செய்தல்
- டிஜிட்டல் வங்கித்தொழில் மாதிரிகளை வேறுபடுத்தல்
- இணைய வழி வங்கிக் கணக்குகளை திறப்பது பற்றியும் முகாமைப்படுத்துவது பற்றியும் புரிந்துகொள்ளுதல்
- டிஜிட்டல் வங்கித்தொழில் அனுகூலங்களை கிரகித்துக் கொள்ளுதல்
- டிஜிட்டல் கொடுப்பனவுகளை வரையறை செய்தல்
- டிஜிட்டல் கொடுப்பனவு முறைமைகளின் பல்வேறு வகைகளையும் அடையாளம் காணுதல்
- பிரபல்யமான டிஜிட்டல் கொடுப்பனவு முறைகளையும் சாதனங்களையும் விளங்கிக் கொள்ளுதல்
- நிதியியல் அணுகு தன்மையினைப் பரிவர்த்தனை செய்வதில் டிஜிட்டல் முதலீட்டு சாதனங்களின் வகிபாகத்தினை புரிந்துகொள்ளுதல்
- இலங்கையில் பங்கு வர்த்தகம் மற்றும் சமவாய நிதிகளுக்காக பிரபல்யமான டிஜிட்டல் தளம்களை அடையாளம் காணுதல்
- நவீன நிதியியல் முறைமைகளில் பொதுப் பேரேட்டுத் தொழில்நுட்பம் மற்றும் கிரிப்ரோ நாணயங்களின் உள்ளார்ந்த வளத்தினை அங்கீகரித்தல்
- டிஜிட்டல் முதலீட்டு சாதனங்களுடன் இணைந்து காணப்படும் நன்மைகள் மற்றும் இடர்நேர்வுகளை மதிப்பிடல்

### டிஜிட்டல் நிதியியல் சேவைகள்

என்பது கொடுப்பனவுகள், சேமிப்புக்கள், கொடுகடன் காப்புறுதி மற்றும் முதலீடுகள் போன்ற பரந்த வீச்சியிலான நிதியியல் சேவைகளையும் செல்லிடத் தொலைபேசி, கணனிகள் மற்றும் ஏனைய டிஜிட்டல் கருவிகள் உட்பட டிஜிட்டல் தொலைவு வழிமுறைகளுடாக விநியோகித்தலையும் அணுகுதல்களையும் குறிப்பிடுகிறது. அவை டிஜிட்டல் கொடுப்பனவுகள், சேமிப்புக்கள், கொடுகடன் காப்புறுதி மற்றும் முதலீடுகள் போன்ற சேவைகளை உள்ளடக்குவதுடன் நிதியியல் வசதிக்குட்படுத்தல் முயற்சிகளின் உலகளாவிய மூலக்கற்களாகவும் காணப்படுகின்றன.

## டிஜிட்டல் நிதியியல் சேவைகள் எதிர் பாரம்பரிய நிதியியல் சேவைகள்

டிஜிட்டல் நிதியியல் சேவைகள் காசுக் கொடுப்பனவுகள் அல்லது வங்கிக்கிளைக்கு விஜயம் செய்தல் போன்ற நேரடியாக அணுகத்தக்க பாரம்பரிய நிதியியல் சேவைகள் போன்ற அவை தொடர்பாக மிகக் கூடுதலான அனுகூலங்களை வழங்குகின்றன.

பாரம்பரிய முறையில், காசில் கொடுப்பனவுகளை செய்வதற்கு வாங்குபவர் காசினையும் நாணயங்களையும் விற்பவருக்கு வழங்குவார். இது கிராமப் புறங்களிலிருந்து மக்கள் நீண்ட தூரங்களுக்கு பயணம் செய்யும் தேவையினையும் கணிசமான செலவுகளையும் ஏற்படுத்துவதுடன் அவர்களின் நேரத்தினை வீணடிப்பதுடன் களவு போன்ற இடர்நேர்வுகளையும் தோற்றுவிக்கிறது.

உலகளாவிய மயப்படுத்தல் மற்றும் உயர்வடைந்துவரும் டிஜிட்டல் மயப்படுத்தலின் தற்போதைய நிலையினை கருத்திற்கொண்டு, பெரும்பாலான பாரம்பரிய நிதியியல் சேவைகள் தொழில்நுட்பத்தினை அடிப்படையாகக் கொண்ட டிஜிட்டல் நிதியியல் பணிகளினால் பரந்தளவிற்கு பதிலீடு செய்யப்பட்டு வருகின்றன.

| பாரம்பரிய நிதியியல் பணிகள் | டிஜிட்டல் நிதியியல் பணிகள் |
|---|---|
| வங்கிகளுக்கு நேரடியாக செல்லல் வாடிக்கையாளரை நேரடியாகச் சந்திக்கும் வங்கித்தொழில் | செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் |
| பாரம்பரியக் கடன்கள் | பின்டெக் கடன்வழங்கல் தளம்கள் |
| பாரம்பரிய நாணயம் | கிறிப்ரோ நாணயம் |
| காசு கொடுக்கல்வாங்கல்கள் | கணனிகளூடாக கொடுப்பனவுகளைப் பகிர்ந்துகொள்ளுதல் |
| பௌதீக ரீதியான வலட்டுக்கள் | டிஜிட்டல் வலட்டுக்கள் |
| பாரம்பரிய நிதியியல் ஆலோசகர்கள் | ரோபோ - ஆலோசனையாளர்கள் |

## டிஜிட்டல் நிதியியல் சேவைகளின் முக்கியத்துவம்

கடன்கள் மற்றும் வங்கித்தொழில் போன்ற நிதியியல் சேவைகளை அணுகுவது ஆட்களுக்கு விசேடமாக பொருளாதார ரீதியில் வலுவுடையவர்களாக மாறுகின்ற பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு உதவுவதில் குறிப்பிடத்தக்க வகிபாகத்தினை ஆற்றுகின்றன. முறைசார்ந்த நிதியியல் சேவைகளை உங்களினால் பயன்படுத்தமுடியாதவிடின் (வங்கியொன்றிலிருந்து கடனொன்றினைப் பெறுகின்றமை போன்றவை) நீங்கள் நிதியியல் ரீதியில் பணியினைப் பெறாதவர் அல்லது புறந்தள்ளப்பட்டவர்கள் என கருதப்படுகின்றார். இலங்கையில் அனேகமான மக்கள் செல்லிட தொலைபேசிகளை வைத்திருக்கின்றனர். இதனை நிதியியல் சேவைகளை அணுகுவதற்கும் பயன்படுத்தமுடியும். திறன்வாய்ந்த சாதனங்களை (தொலைபேசி, லப்டொப் அல்லது திறன் கைக்கடிகாரங்கள்) அநேகமான மக்கள் வைத்திருக்கின்ற போதும் அவற்றை அவர்கள் பின்வருவனவற்றிற்கு பயன்படுத்துவதில்லை.

- பணத்தினை அனுப்புவதற்கு அல்லது பெறுவதற்கு
- பட்டியல்களைப் பெறுவதற்கு
- செல்லிடத் தொலைபேசி கொடுப்பனவுகளைச் செய்வதற்கு
- செலவிடல் பழக்கவழக்கங்களை பரிசோதிப்பதற்கு
- கொடுகடன் புள்ளிகளைப் பார்ப்பதற்கு
- முதலீடுகள் தொடர்பான ஆலோசனைகளை பெறுவதற்கு

பிரதான காரணம் அநேகமான மக்களுக்கு தொழில்நுட்பவியல் மற்றும் நிதியியலில் போதுமான அறிவோ அல்லது தேர்ச்சிகளோ இல்லாமையாகும். போதுமான அறிவு இல்லாமை அவர்கள் உள்நாட்டு பொருளாதாரத்துடன் முழுமையாக ஈடுபாடு கொள்வதனைத் தடுத்துவிடுகிறது.

இலகுவான வழி என்னவென்றால் உங்கள் டிஜிட்டல் சாதனங்களைப் பயன்படுத்தி நிதியியல் சேவைகளுடன் இணைப்புக்களை மேற்கொண்டு உங்கள் நிதியியல் தேவைகளை அலுவல்சார் நிறுவனங்களூடாக பூர்த்தி செய்வதற்கு அவற்றை இலகுவாகவும் சௌகரியமாகவும் பயன்படுத்திக் கொள்வதாகும்.

## பல்வேறுபட்ட டிஜிட்டல் நிதியியல் சேவைகள்

டிஜிட்டல் நிதியியல் சேவைகள், எமது நாளாந்த தனிப்பட்ட மற்றும் வியாபார நிதியியல் முகாமைத்துவ நடவடிக்கைகளில் பின்வரும் வழிகளில் பயன்படுத்திக் கொள்ள எமக்கு உதவுகிறது.

1. தன்னியக்க கூற்றுப் பொறிகள்
2. டிஜிட்டல் வங்கித்தொழில்
3. டிஜிட்டல் கொடுப்பனவுகள்
4. டிஜிட்டல் நாணயங்கள்
5. டிஜிட்டல் முதலீட்டுக் கருவிகள்

## தன்னியக்க கூற்றுப்பொறிகள்

தன்னியக்க கூற்றுப்பொறி என்பது கணனி மயப்படுத்தப்பட்டதொரு கருவியாகும். அது பல்வேறுபட்ட ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட நிதியியல் சேவைகளை வழங்குகின்றது.

தன்னியக்க கூற்றுப்பொறி யுவுஆ எனப் பொதுவாக அறியப்படுவதுடன் நவீன சமூகத்தில் பிரபஞ்சத்தினையும் பிரதிபலிக்கின்றதுடன் தனிப்பட்டவர்கள் அவர்களது நிதியினை அணுகும் வசதியை வழங்குவதுடன் 24 மணி நேரமும் வேறுபட்ட நிதியியல் சேவைகளையும் வழங்குகிறது.



அனுஷாவும் மனகரியும் தமது சொந்த நகரத்தில் பொருள் கொள்வனவில் ஈடுபடுகின்றனர்.

| | | |
|---|---|---|
| **மனகரி** | : | முதலில் எனது சப்பாத்தை வாங்குவோம் |
| **அனுஷா** | : | அதற்கு முன்னர் நாட்கள் வங்கிக்குப் போய் காசை எடுக்கவேண்டும் |
| **மனகரி** | : | அம்மா நீங்கள் ஏன் யுவுஆ அட்டையைப் பயன்படுத்தக்கூடாது |
| **அனுஷா** | : | அட கடவுளே அது மேலதிக கட்டணங்களை அல்லவா ஏற்படுத்தும் |
| **மனகரி** | : | அதுசரி இப்பொழுது இதனை எனக்கு சொல்லுங்கள் அம்மா. யுவுஆ அட்டையை நீங்கள் செலுத்தும் கட்டணம், வங்கிக்கு போவதற்காக நீங்கள் செலுத்தும் பஸ் அட்டையை பயன்படுத்தும்போது கொடுக்கல்வாங்கல்களுக்காக நீங்கள் கட்டணத்தினையும் பார்க்கையில் எது கூடுதலானது? |

மேற்குறிப்பிட்ட கலந்துரையாடல் ஏரிஎம் சேவையினை பயன்படுத்துவதில் காணப்படும் செலவு நன்மைகளை பகுப்பாய்வு செய்வதில் காணப்படும் நிதியியல் அறிவு போதாமையினை எடுத்துக்காட்டுகிறது.

## ஏரிஎம் அட்டைகளை பயன்படுத்துவதிலுள்ள நன்மைகள்

1. **முழுநேரமும் கிடைக்கும் தன்மை:** ஏரிஎம் வங்கித்தொழில் சேவைகளை எந்தவொரு நேரத்திலும் வழங்கக்கூடியதாக இருப்பினும் அவசரமான மீள்எடுப்பனவுகளுக்கும் அவர்களுக்கும் வசதியளிக்கின்றது.
2. **உலகளாவிய ரீதியில் அனுகக்கூடிய தன்மை:** ஏரிஎம் அநேகமான இடங்களில் கிடைக்கத்தக்கதாக இருப்பதுடன் மக்கள் அப்பணிகளை இலகுவில் பெற்றுக்கொள்ளவும் அனுமதிக்கிறது.
3. **குறைவடைந்த வங்கி வரிசைகள்:** வங்கிக் கிளைகளில் நீண்ட வரிசையில் வெகுநேரம் காத்திருக்கும் தேவைகுறைவடைய ஏரிஎம் உதவுகிறது.
4. **விரைவான கொடுக்கல்வாங்கல்கள்:** ஏரிஎம் இனைப் பயன்படுத்தி எடுப்பனவுகளையும் வங்கித்தொழில் சேவைகளையும் விரைவாக மேற்கொள்ளமுடியும்.
5. **விரல் நுனியில் பல்வேறுபட்ட வங்கித்தொழில் சேவைகளைப் பெறமுடிகிறது:** ஏரிஎம் காசு மீளப்பெறுகைகளுக்கும் மேலதிகமாக, மீதி பற்றிய விசாரணைகள் மற்றும் பொதுப்பட்டியல் கொடுப்பனவுகள் உள்ளிட்டவற்றை வழங்குகிறது.

## ஏரிஎம் எப்படித் தொழிற்படுகிறது என்பது பற்றிய படிப்படியான விளக்கம்

**படிமுறை 1** : ஏரிஎம் அட்டை நுழைத்தல்

**படிமுறை 2** : மொழியினைத் தெரிவுசெய்தல்

**படிமுறை 3** : 4-இலக்கம் கொண்ட உங்களது தனிப்பட்ட அடையாள இலக்கத்தினைப் பதிதல்

**படிமுறை 4** : சேவையின் வகையினைத் தெரிவுசெய்தல்

- எடுப்பனவு
- பல்பட்டியலிடப்பட்ட கணக்கிலிருந்தான எடுப்பனவு
- சிறு அறிக்கை
- நிலுவை பற்றிய விசாரணை
- மாற்றல்
- மற்றைய அட்டைக்கான மாற்றல்
- விரைவான காசு
- தனிப்பட்ட அடையாள இலக்கத்தினை மாற்றுதல்

**படிமுறை 5:** கணக்கின் வகையினைத் தெரிவு செய்தல்

**படிமுறை 6:** எடுப்பனவு செய்யும் தொகையை பதியவும் (நீங்கள் காசு எடுப்பனவு செய்யவேண்டுமெனில்)

**படிமுறை 7:** காசினை எடுத்துக் கொள்ளலாம்

**படிமுறை 8:** தேவையாயின் அச்சிட்ட பற்றுச்சீட்டை எடுக்கவம்

**படிமுறை 9:** அட்டையை எடுக்கவும்

**இப்படிமுறை வங்கிக்கு வங்கியும் ஏரிஎம் இற்கு ஏரிஎம் மும் சிறிதளவில் வேறுபடலாம்.*

## தன்னியக்க கூற்றுப் பொறியினைப் பாதுகாப்பாக பயன்படுத்துவதற்கான உத்திகள்

- **உங்கள் தனிப்பட்ட அடையாள இலக்கத்தினைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்:** உங்கள் தனிப்பட்ட அடையாள இலக்கத்தினை இரகசியமாக வைத்துக்கொள்ளுங்கள். எவருடனும் இதனை பகிர்ந்து கொள்ளவேண்டாம்.
- **ஏரிஎம் இனைப் பரிசோதித்தல்:** ஏரிஎம் இனைப் பயன்படுத்த முன்னர் வழமைக்கு மாறான ஏதேனும் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளனவா என்பதனை பரிசோதிக்கவும் அட்டைத் தகவல்களை களவாடுவதற்காக அவற்றைப் பயன்படுத்தலாம்.

- **பாதுகாப்பான அமைப்பிடம்:** நன்கு மூடிய சுறுசுறுப்பாக இயங்குகின்ற இடங்களிலுள்ள ஏரிஎம் களைப் பயன்படுத்தவும் உங்களுக்கு அவசரமில்லையாயின் தனியாக மையப்படுத்தப்பட்ட இடங்களிலுள்ள தனியான எந்திரங்களைப் பயன்படுத்துவதனைத் தவிர்த்துக்கொள்ளவும்.
- **விசைப் பலகையை மறைத்துக் கொள்ளுதல்:** மற்றவர்கள் பார்ப்பதனை தவிர்ப்பதற்காக பதியும்போது உங்கள் தனிப்பட்ட அடையாள இலக்கத்தினை மறைத்துக் கொள்ளுங்கள்
- **ஏரிஎம் இனை பயன்படுத்துவதற்கு புதியவர்களிடமிருந்து உதவியை** எதிர்பார்க்க வேண்டாம்.
- **ஏரிஎம் அட்டை தொலைந்திருக்குமிடத்து, மோசடி அல்லது ஏதேனும்** அவசரகாலத்தின் போது உதவிக்காக உடனடியாக வங்கியை தொடர்பகொள்ளவும்.

## டிஜிட்டல் வங்கித்தொழில்

வங்கித்தொழில் தொழில்துறை ஆழமான டிஜிட்டல் மாற்றங்களுக்கு உட்பட்டு வருகின்றதுடன், நிதியியல் சேவைகள் எவ்வாறு வழங்கப்பட வேண்டும் நுகரப்பட வேண்டும் என்பது பற்றியும் மீள்வடிவமைக்கப்பட்டு வருகின்றது. இவ்டிஜிட்டல் புரட்சியில் முக்கியமான சாண்டு காரணிகளாக இருந்தவற்றுள் ஒன்று சுறுசுறுப்பான நிதியியல் சேவைகளிடையே தனிப் பயனாக்கப்பட்ட கேள்வி வளர்ந்து வருவதாகும். இளைய தலைமுறையினர் அவர்களது வளர்ந்துவரும் தேவைகளுக்கு சேவையாற்ற தடங்கலற்ற நுண்ணறிவு மிக்க வங்கித்தொழில் அனுபவங்களை எதிர்பார்க்கின்றனர்.

**டிஜிட்டல் வங்கித்தொழில்** என்பது பாரம்பரிய வங்கித்தொழில் சேவைகளை இலத்திரனியல் தளம்களுடாக வழங்குகின்ற செய்முறையாகும் என குறிப்பிடப்படுகிறது. இது வாடிக்கையாளர்கள் வங்கிக் கிளைகளுக்கு நேரடியாக செல்லாமல் நிதியியல் சாதனங்களையும சேவைகளையும் இணையவழியில் பெற்றுக்கொள்வதனை இயலுமைப்படுத்துகிறது.



த்நாயக்க குடும்பம் ஒரு நாள் மாலை பின்வரும் கலந்துரையாடலில் ஈடுபட்டது.






இக்குடும்பக் கலந்துரையாடல் டிஜிட்டல் வங்கித்தொழில் பற்றிய வளர்ந்துவரும் ஆர்வத்தினை எடுத்துக்காட்டுகின்றது. எனினும் விழிப்புணர்வு போதாமல் இருப்பதனையும் இது பிரதிபலிக்கிறது. அனேகர் இன்னமும் இவற்றின் செய்முறைகள் பற்றியும் அவற்றுடன் தொடர்பான நன்மைகள் பற்றியும் அறிந்திருக்கவில்லை.

## Benefits of using ATMs

டிஜிட்டல் வங்கித்தொழில் பல்வேறுபட்ட வகைகளை உள்ளடக்குகிறது. அவையாவன இணையவழி வங்கித்தொழில் மற்றும் செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில். மேலும் பல்வேறுபட்ட டிஜிட்டல் மாக்கங்கள் ஒருங்கிணைக்கப்படுகின்றமையானது வங்கிகளுக்கு நேரடியாகச் செல்லாமல் 24.:.7 நேர நிதியியல் சேவைகளை பெறுவதற்கும் காகிதாதிகளின் பரிசோதனை , வைப்புப் பற்றுத் துண்டுகள் அல்லது வளப்பிரதி பெறுகைகள் இல்லாமல் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கு உங்களை அனுமதிக்கிறது. வங்கிகள் வங்கித்தொழில் வசதிகளை வழங்குவதற்கு செல்லிடத் தொலைபேசி செயலிகளை பயன்படுத்த தொடங்கியிருப்பதனால் செல்லிட தொலைபேசி வங்கித் தொழில் அபிவிருத்தி டிஜிட்டல் வங்கித்தொழிலில் குறிப்பிடத்தக்க மைல்கல்லாக கருதப்படுகிறது.

டிஜிட்டல் வங்கித்தொழிலின் பரிணாம வளர்ச்சியுடன் இணையவழி வங்கித்தொழில் கணக்குகளை ஏற்படுத்தி முகாமைப்படுத்துவது தனிப்பட்டவர்கள் மற்றும் வியாபாரங்களுக்கான இன்றியமையாத தேர்ச்சியொன்றாக மாறியிருக்கிறது. இணையவழி வங்கித்தொழில், உங்களின் கணனி அல்லது செல்லிடத் தொலைபேசியூடாக சௌகரியங்களை வழங்குகின்றதுடன் நீங்கள் வங்கித்தொழில் வசதிகளை எந்தவொரு நேரத்திலும் எந்தவொரு இடத்திலும் அணுகுவதனை அனுமதிக்கிறது.

டிஜிட்டல் வங்கித்தொழிலில், உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுங்கள் என்பது வங்கிகளும் நிதியியல் நிறுவனங்களும் வாடிக்கையாளர் கணக்குகளைத் திறக்க முன்னர் அல்லது வங்கித்தொழில் சேவைகளை அணுகுவதற்கு முன்னர் வாடிக்கையாளர்களின் அடையாளத்தினை சரிபார்த்துக் கொள்ளும் செய்முறையொன்றினை குறிக்கிறது. மோசடி, பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதம் போன்ற ஏனைய சட்டத்திற்கு மாறான நடவடிக்கைகளையும் இதனூடாக தடுக்கமுடியும்.

### டிஜிட்டல் வங்கித்தொழிலில் உங்கள் வாடிக்கையாளரை தெரிந்துகொள்ளுபவரின் முக்கிய அம்சங்கள்

- **அடையாளத்தினைச் சரிபார்த்தல்:** வாடிக்கையாளர்கள் அவர்களது அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு அவர்களது அலுவல்சார் அடையாள ஆவணங்களை வழங்குதல் வேண்டும். (உ-ம் : தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு அல்லது ஓட்டுநர் உரிமம்)
- **முகவரியைச் சரிபார்த்தல்:** வதிவிடத்தினை நிரூபிப்பதற்கான பொதுவசதிகள் பயன்பாட்டுப் பட்டியல் அல்லது வங்கிக் கூற்றுக்களை வங்கிகள் கோர முடியும்.
- **உயிரியல் சான்றுப்படுத்தல்கள்:** சில வங்கிகள் வாடிக்கையாளரைச் சரிபார்ப்பதற்காக முக வடிவத்தினை அங்கீகரித்தல், விரல் அடையாளங்களை நுண்ணாய்வு செய்தல் அல்லது கண் அடையாளம் என்பனவற்றைப் பயன்படுத்துகின்றன.
- **பணம் தூயதாக்கலுக்கெதிரான இணங்குவிப்பு:** உங்கள் வாடிக்கையாளரை தெரிந்துகொள்ளுங்கள் வாடிக்கையாளர்கள் பணம் தூயதாக்கல் அல்லது வேறு நிதியியல் குற்றங்களில் ஈடுபடவில்லை என்பதனை உறுதிப்படுத்துகிறது.
- **தொடர்ந்தியங்கும் கண்காணிப்பு:** சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகளை கண்டறிவதற்காக வங்கிகள் கொடுக்கல்வாங்கல்களையும் வாடிக்கையாளர் நடத்தைகளையும் வங்கிகள் தொடர்ச்சியாக கண்காணிக்கின்றன.

### டிஜிட்டல் வங்கித்தொழிலின் நன்மைகள்

- **கொடுக்கல்வாங்கல் வரலாற்றினை பார்த்துக் கொள்வதனை இயலுமைப்படுத்துகிறது:** இணையவழி கணக்குகள் வைப்புக்கள், மீளப்பெறுகைகள், மாற்றல்கள் மற்றும் கொடுப்பனவுகள் உட்பட அனைத்து கொடுக்கல்வாங்கல்களையும் பதிவுசெய்கிறது.
- **இணையவழி கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளுதல்:** குடும்பம், நண்பர்கள் அல்லது தனிப்பட்டவர்களுக்கு கொடுப்பனவுகளை செய்வதன் மூலம் நேருக்கு நேர் மாற்றல்கள் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல்களுக்குமான உசாவுகைகள் உட்பட நீங்கள் கொடுப்பனவுகளை கண்காணிக்கவும் முகாமைப்படுத்தவும் முடியும்.
- **கணக்கு மீதிகள் சரிபார்க்கப்படுவது இயலுமைப்படுத்தப்படுகிறது:** உங்களது கணக்கு மீதிகள் உங்கள் எதிர்பார்ப்புக்களுடன் சரியாக இருப்பது உறுதிப்படுத்துவதுடன் முன்னர் இடம்பெற்ற ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்களும் கண்டறியப்படுகின்றன.

- பொதுவசதிப் பட்டியல்கள், உதவு தொகைகளுக்கான பட்டியல் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## இணைய வழி வங்கிக் கணக்கொன்றினை திறப்பதற்கு பின்பற்றப்பட வேண்டிய படிமுறைகள்:

1. உங்கள் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யக்கூடிய வங்கியொன்றினை முதலில் தெரிவுசெய்தல் வேண்டும்.
2. இணையவழி வங்கிக் கணக்கினை திறப்பதற்கு தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் (தனிப்பட்ட அடையாளப்படுத்தல் ஆவணங்கள் மற்றும் கணக்கினைத் திறப்பதற்கான விண்ணப்பப்படிவம்)
3. புதிய கணக்கிற்கு நிதியிடல் (வங்கி மாற்றல் அல்லது காசு வைப்பிலிடல் மூலமாக)
4. மின்னஞ்சல் அல்லது குறுஞ்செய்தி சேவை ஊடான எச்சரிக்கை அறிவித்தல்கள்: கணக்கு உடமையாளர் குறைந்த மீதிகள் பாரிய கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கொடுப்பனவு செலுத்தவேண்டிய திகதிகள் போன்ற கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் ஏனைய குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கான அறிவித்தல்களைப் பெறலாம். அவ்வப்போது இடம்பெறும் அனைத்து கொடுக்கல்வாங்கல்களையும் நீங்கள் அறிந்து கொள்ளமுடியும் என்பதனால் இது உங்கள் இணையவழிக் கணக்கின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துகிறது.
5. உங்கள் கணக்கினை புகுபதிகை செய்வதற்கு கிடைக்கத்தக்க சாதனமொன்றினை (திறன்தொலைபேசி, ஏதேனும் கணனி அல்லது டெப்லெட்) பயன்படுத்தமுடியுமை என்பதால் சுலபமாகவும் விரைவாகவும் வங்கிப் பணிகளை பெற்றுக்கொள்ளலாம்.

கணக்கொன்றினை ஏற்படுத்திக் கொண்டதும் உச்ச நன்மைகளைப் பெற்றுக்கொள்ள அதனை காத்திரமாக முகாமைப்படுத்துவது மிக இன்றியமையாததாகும்.

செல்லிடத் தொலைபேசியொன்றினை அல்லது லெப்டொப் ஒன்றின நீங்கள பயன்படுத்துவீர்களாயின் அப்பொழுது நீங்கள் தொடர்பான வங்கியினால் வழங்கப்படும் தனியான வங்கித்தொழில் பிரயோகத்தினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இது விடயங்களைச் சுலபமாக்கும்.

## வங்கித்தொழில் வெப் நுழைவு வழி:ஃசெயலி மற்றும் செல்லிடத் தொலைபேசி கொடுப்பனவு செயலிகள்



வங்கித்தொழில் வெப் நுழைவு வழித் செயலி என்பது வங்கிகளினால் வழங்கப்படுகின்ற இணையவழித் தளத்தினை குறிக்கிறது. இது அவர்களது வாடிக்கையாளர் அவர்களது சொந்த வீடுகளில் சௌகரியமாக இருந்து கொண்டே பரந்தளவிலான வங்கித்தொழில் நடவடிக்கைகளை ஆற்றுவதனை அனுமதிக்கிறது. மேலும், செல்லிடத் தொலைபேசி கொடுப்பனவு செயலிகள் என்பது திறன் தொலைபேசிகளில் நிறுவப்படுகின்ற பிரயோகங்கள் என்பதனால் செல்லிட தொலைபேசிச் சாதனங்களை பயன்படுத்தி நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை செய்வதற்கு பயன்படுத்துனர்களை இயலச்செய்கிறது.



மாலைப்பொழுதொன்றில் ரத்நாயக்க குடும்பத்தில் பின்வரும் கலந்துரையாடல் இடம்பெறுகிறது



இக்குடும்பத்தின் கலந்துரையாடல் வங்கித்தொழில் வெப்நுழைவு வழி செயலி∴ மற்றும் செல்லிடத் தொலைபேசி கொடுப்பனவு செயலி பற்றிய வளர்ந்துவரும் ஆர்வத்தினை எடுத்துக்காட்டுகிறது. இருப்பினும் இச்செய்முறைகள் பற்றியும் இதனோடு தொடர்புபட்ட நன்மைகள் பற்றியும் போதுமான விழிப்புணர்வினை கொண்டிராமையினை இது பிரதிபலிக்கிறது. செல்லிடத் தொலைபேசி கொடுப்பனவு செயலிகளை வங்கியினால் வழங்கப்படும் செயலியொன்றினூடாகவே அணுகமுடியும். இவற்றை பதிவிறக்கம் செய்து கொள்வதற்கு இவை ஐஓஎஸ் (அப்பிள்) மற்றும் அன்றொயிட் சாதனங்களை மற்றும் செயல்கள் நிதியத்திலுள்ள திறன் தொலைபேசிகளில் கிடைக்கத்தக்கதாக இருக்கும். வாடிக்கையாளர்கள் வங்கித்தொழில் வெப் நுழைவுவழி / செயலி மற்றும் செல்லிடத் தொலைபேசி செயலியூடாக பல்வேறு சேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியும். செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழில் செயலி விரைவானதும் வசதியானதும் இலகுவானதுமான வங்கித்தொழிலை மேற்கொள்வதற்கு பரந்த வீச்சிலான பண்புகளை வழங்குகிறது.

## உங்கள் வங்கித்தொழில் செயலியை அல்லது செல்லிடத் தொலைபேசி கொடுப்பனவு செயலியை ஏற்படுத்திக் கொள்ளப்படுவதற்கான படிமுறை:

1. அப்பிள் செயலி களஞ்சியத்திலிருந்து அல்லது கூகிள் பிளே களஞ்சியத்திலிருந்து அலுவல்சார் வங்கித்தொழில்/ கொடுப்பனவு செயலியை பதிவிறக்கம் செய்யவும்.
2. நீங்கள் புதிய பயன்படுத்துனராக இருப்பின் நீங்களாகவே பதிவுசெய்யலாம் (இணையவழி வங்கித்தொழிலுக்கு நீங்கள் ஏற்கனவே பதிவு செய்திருப்பின் புகுபதிகையில் ஆதார சான்றுகளை (பயன்படுத்துனர் பெயர், மற்றும் கடவுச் சொல் பயன்படுத்துங்கள்)
3. வங்கியின் உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுங்கள் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்காக உங்கள் அடையாளத்தினை உறுதி செய்யும் பொருட்டு வங்கி பல்வேறு கேள்விகளையும் கேட்கலாம்.
4. பாதுகாப்பான அணுகுமுறைக்காக தனிப்பட்ட அடையாள இலக்கம் கடவுச் சொல்லை உருவாக்குதல் மற்றும் உயிரினவியல் உறுதிப்படுத்தல் அல்லது பல் காரணி உறுதிபாட்டினை இயலுமைப்படுத்தல் (ஜஸ்பே பின்டென் செயலி வலட்டினைக் கொண்டிருப்பதில்லை) நேரடியாக வங்கிக் கணக்கொன்றுடன் இணைக்கப்படுகிறது.
5. வங்கிகளினதும் நிதிக் கம்பனிகளினதும் கொடுப்பனவு செயலிகள், வலட்டுக்களை அல்லது கணக்கினை திறக்கும் வசதியை கொண்டிருக்கின்றன.

கணக்கு ஏற்படுத்தப்பட்டவுடன் நன்மைகளை உச்சப்படுத்திக் கொள்வதற்கேற்ற விதத்தில் அதன் காத்திரமான நன்மைகளை முகாமைப்படுத்துவது மிக முக்கியமானதாகும்.

## வங்கித்தொழில் செயல்கள்∴ செல்லிட தொலைபேசி கொடுப்பனவுச் செயலிகளின் நன்மைகள்

- கொடுக்கல்வாங்கல் வரலாற்றினைப் பார்ப்பதனை இயலுமைப்படுத்துகிறது.
- நிதிய மாற்றல்களையும் பட்டியல் கொடுப்பனவுகளையும் மேற்கொள்ளுதல்.
- கணக்கு மீதிகளை பார்ப்பதனை இயலுமைப்படுத்துகிறது.
- நிலையான மற்றும் சேமிப்பு வைப்புக்களைத் திறத்தல்
- கடந்தகால காலமாதாந்த கூற்றுக்களை அணுகக்கூடிய தன்மை
- வாடிக்கையாளர் விசாரணைகளை கையாள்வதற்கு வாடிக்கையாளர்களுக்கு அது தரவினையும் உரையாடல் வசதிகளையும் வழங்குகிறது.

செல்லிடத் தொலைபேசி கொடுப்பனவுச் செயலி சௌகரியத்தினை வழங்குவதுடன் வங்கிக்கு நேரடியாகச் சொல்லாமலேயே இணையவழி இணைப்புடன் எங்கே இருந்து கொண்டும் 24∴7 மணிநேரமும் உங்கள் கணக்குகளை முகாமைப்படுத்துவதற்கு உங்களை அனுமதிக்கிறது. மேலும், பட்டியல் கொடுப்பனவுகள் நிதிய மாற்றல்கள் மற்றும் காசோலை வைப்புக்கள் போன்ற போன்ற கொடுக்கல்வாங்கல்களைக் கூட கிளைக்கு அல்லது ஏரிஎம் இற்கு விஜயம் செய்வதன் மூலம் ஏற்படும் தாமதமெதுவும் இல்லாமல் விரைவாக மேற்கொள்ளமுடியும்.

## டிஜிட்டல் கொடுப்பனவுகள்

டிஜிட்டல் கொடுப்பனவுகள் தனிப்பட்டவர்களும் வியாபாரங்களும் கொடுக்கல்வாங்கல்களை எவ்வாறு செய்யவேண்டும் என்பதனை மாற்றியமைத்திருக்கிறது. விரைவுத் தன்மையினையும் சௌகரியமான தன்மையினையும் பாதுகாப்பினையும் வழங்கியிருக்கிறது.

டிஜிட்டல் கொடுப்பனவு என்பது பௌதீக வடிவிலான காசினைப் பரிவர்த்தனை செய்யாமல் டிஜிட்டல் மார்க்கங்களினூடாக கொடுக்கல்வாங்கல்களை இலத்திரனியல் ரீதியாக மேற்கொள்வதனைக் குறிக்கிறது. இக்கொடுப்பனவுகள் செல்லிட தொலைபேசி செயலிகள், வெப்தளம் அல்லது தொடர்புகளற்ற தொழில்நுட்பம் போன்ற டிஜிட்டல் மார்க்கங்களினூடான நிதியங்களின் மாற்றல்கள் வணிகக்கொடுப்பனவுகள் அரசாங்க கொடுப்பனவுகள் மற்றும் பணவனுப்பல்கள் என்பனவற்றுடன் தொடர்புபடுகின்றன.

## டிஜிட்டல் கொடுப்பனவு முறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன

1. **கொடுப்பனவு அட்டைகள்**

   கொடுப்பனவு அட்டைகள் (ஏரிஎம் / கொடுகடன் / பற்று / பெறுமதி சேர்க்கப்பட்ட அட்டைகள் ) அட்டை உடமையாளர்கள் அட்டையுடன் இணைக்கப்பட்டுள்ள அல்லது பெறுமதி சேமிக்கப்பட்ட அட்டையுடன் இணைக்கப்பட்டுள்ள கணக்குகளை அணுகுவதனையும் பொருட்கள் மற்றும் பணிகளுக்காக காசினைப் பெறுவதனையும் அல்லது கொடுப்பனவுகளை செய்வதனையும் இயலுமைப்படுத்துகிறது.

2. **இணையத்தள வங்கித்தொழில்**

   செல்லிடத்தொலைபேசிகள் மற்றும் கணனிகள் போன்ற பல்வேறுபட்ட சாதனங்களுடாக இணையத்தளத்தினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படவிருக்கும் கொடுப்பனவுகளையும் ஏனைய வங்கித்தொழில் கொடுக்கல்வாங்கல்களையும் இயலுமைப்படுத்துகிறது.

3. **செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவு பிரயோகங்கள்**

   இது ஒரு மென்பொருள் பிரயோகமாகும். இது செல்லிடத் தொலைபேசிக் கருவிகளில் இயக்கக்கூடியது. இது பொதுப்பயன்பாட்டு பட்டியல், நிதிய மாற்றல்கள் மற்றும் ஏனைய வங்கித்தொழில் கொடுக்கல்வாங்கல்கள் என்பனவற்றை மேற்கொள்வதற்கு இயலுமைப்படுத்துகிறது.

4. **கியூஆர் குறியீடு**

   திறன் தொலைபேசி செயலியைப் பயன்படுத்தி கியூஆர் குறியீட்டினைப் ஸ்கான் செய்வதன் மூலம் கொடுக்கல்வாங்கல்கள் முன்டுெடுக்கப்படுகின்றன.

5. **செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட இ-பணம்**

   செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட இ-பண முறைமையில் பதிவு செய்யப்பட்டுள்ள வாடிக்கையாளர்கள் இ-பண முகவர்களுக்கு கொடுப்பனவுகளை செய்வதன் மூலம் செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட இ-பணத்தினை கொள்வனவு செய்யமுடியும்.

6. **விற்பனை மையம் - கியூஆர் மற்றும் அட்டைகள்**

   விற்பனை மைய முறைமைகள் வாடிக்கையாளர் கொடுக்கல்வாங்கல்களை செய்முறைப்படுத்துவதற்காக வணிகர்களினால் பயன்படுத்தப்படுகின்ற கருவிகளாகும். அவர்கள் கியூஆர் குறியீடுகள் மற்றும் அட்டைகள் உட்பட பல்வேறுபட்ட முறைகளினூடாக கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்கின்றனர்.

7. **அரச கொடுப்பனவுகள்**

   அரச கொடுப்பனவுகள் என்பது அரச நிறுவனங்களுக்கு செய்யப்படுகின்ற பல்வேறுபட்ட சேவைகள், வரிகள், சுங்கத் தீர்வைகள், குற்றப்பணம் மற்றும் ஏனைய கடப்பாடுகள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களை குறிக்கிறது. இக்கொடுப்பனவுகளை இணையவழி, நுழைவுவழி, வங்கிக் கணக்குகள் கோவ்பே மற்றும் லங்கா பே இணைய வழி கொடுப்பனவுத் தளம் இணைய வழி நுழைவு வழி உட்பட பல்வேறு மார்க்கங்களுடாக மேற்கொள்ளமுடியும்.

**8. கொடுப்பனவு பரிவர்த்தனைப் பெயர்**

லங்கா பே இணைய வழி கொடுப்பனவுத் தளத்தின் இப்பண்பு பயன்படுத்துனர்கள் அவர்களது செல்லிடத் தொலைபேசி இலக்கங்களுக்கு நேரடியாக கொடுப்பனவுகளை செலுத்த அனுமதிக்கிறது. பயன்படுத்துனர்கள் அவர்கள் வங்கி கணக்குகளுக்காக தனிப்பயனாக்கப்பட்ட புனை பெயர்களை உருவாக்கமுடியும். கொடுப்பனவு செய்பவருடன் செல்லிட கொடுப்பனவுகளை வழங்கமுடியும் என்பதுடன் தடங்கலற்ற கொடுப்பனவுகளை செய்யமுடியும்.

**9. இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமை**

இக்கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை இலங்கை மத்திய வங்கியினால் முகாமைப்படுத்தப்படுகின்றது. இது, வங்கிகளுக்கும் ஏனைய நிதியியல் நிறுவனங்களுக்குமிடையிலான அதே நேர நிதிய மாற்றங்களுக்கு வசதியளிக்கின்றது. நிறுவனங்கள், சம்பளங்கள் போன்ற தொகைவடிவிலான மாற்றங்களைச் செய்வதற்கு இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையினை பயன்படுத்துகின்றன.

**10. ஜஸ்ட்பே வெப்தளம்**

இது லங்கா பேயினால் உருவாக்கப்பட்ட இணையவழி கொடுப்பனவுத் தளமொன்றாகும். இது தடங்கலற்ற பாதுகாப்பான கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிப்பதற்காக வடிவமைக்கப்பட்டதாகும். ஜஸ்ட்பேயினூடாக பயன்படுத்துனர்கள் ஏதேனும் வங்கிக் கணக்குகினை இணைப்பதன் மூலம் மூன்றாம் தரப்பினரின் செயலியைப் பயன்படுத்தி வங்கி மாற்றல்களை அல்லது லங்கா கியூஆர் கொடுப்பனவுகளை செய்யமுடியும்.

**11. பேமீ**

லங்கா பேயினால் உருவாக்கப்பட்ட இப்புத்தாக்க கொடுப்பனவுத் தீர்ப்பனவுமுறை இலகுவான மற்றும் பாதுகாப்பான கொடுக்கல்வாங்கல்களுக்காக வடிவமைக்கப்பட்டதொன்றாகும். இது பயன்படுத்துனர்கள் அவர்கள் விரும்புகின்ற செயலியினூடாக பெறுபவர் பயன்படுத்தக்கூடிய கொடுப்பனவு இணைமொன்றிற்கு கொடுப்பனவுகளை அனுப்புவதற்கு அனுமதிக்கிறது.

**12. லங்காகியூஆர்**

இலங்கையில் லங்கா கியூஆர் என்பது உள்நாட்டு கொடுப்பனவுகளுக்கு தேசிய நியமம் வாய்ந்ததொன்றாகும். ஏதேனும் லங்கா கியூஆர் உறுதிப்படுத்தியிருக்கும் செல்லிடத்தொலைபேசி கொடுப்பனவு பிரயோகத்தினை பதிவிறக்கம் செய்வதன் மூலம் லங்காகியூஆர் குறியீட்டினை காட்சிப்படுத்தியிருக்கும் வணிகர்களுக்கு ஏதேனும் வங்கியின் தனிப்பட்ட ஒருவரின் சேமிப்பு நடைமுறைக் கணக்கினை கிடைக்கச் செய்வதன் மூலம் எந்தவொரு ஆளும் கொடுப்பனவுகளையும் செய்யமுடியும்.

ஜஸ்ட்பேயும் லங்காகியூஆரும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து செயற்படக்கூடியவை. ஆகவே பயன்படுத்துனர்கள் எந்த செயலியையும் பயன்படுத்தமுடியும் என்பதுடன் அவர்களது வங்கியையும் உறுதிப்படுத்தல்களையும் இணைப்புச் செய்யமுடியும்.

## லங்கா கியூஆர் நன்மைகள்

1. வணிகருக்கு விசேடமான சாதனங்கள் எதுவும் தேவையில்லை. வாடிக்கையாளருக்கு ஒரு திறன் தொலைபேசி மட்டுமே தேவையாகும். வணிகர்கள் அவர்கள் கொடுப்பனவுகளை பெறும்போது குறுந்தகவல்களை பெறுவதற்கு ஒரு அடிப்படை வசதியைக் கொண்ட தொலைபேசியைப் பயன்படுத்தமுடியும்.
2. வாடிக்கையாளருக்கு பெரிய சௌகரியம் - காசினை ∴ அட்டையினை கொண்டு திரியத் தேவையில்லை. செல்லிடத் தொலைபேசி மட்டுமே போதும்
3. பயன்படுத்துவதற்கு விரைவானது சுலபமானது
4. அட்டைக் கொடுப்பனவுகளுடன் ஒப்பிடுகையில் பணிகளுக்கு குறைந்த செலவினையே ஏற்படுத்தும்.



ரத்னாயக்க குடும்பம் மாலைவேளையில் பின்வரும் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தது.

**தனஞ்ஜய:** “மனகரி கடைகளில் நான் பார்த்த சதுர வடிவிலான பெட்டி போன்ற பொருள் என்ன? ஒவ்வொருவரும் அதனை ஸ்கான் செய்கிறார்களே”

**மனகரி:** ஆம் அப்பா, அவை கியூஆர் குறியீடு எனப்படும். உங்கள் தொலைபேசியைப் பயன்படுத்தி கொடுப்பனவுகளை விரைவாகச் செய்யலாம் அல்லது தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**அனுகூஷ:** அப்ப, காசினைக் கொண்டு திரிவதற்குப் பதிலாக இந்த மாதிரியினை ஸ்கான் செய்யலாம். இது எப்படித் தொழிற்படுகிறது.

**மனகரி:** “சரிதான், அம்மா நீங்கள் ஒரு கொடுப்பனவு செயலியை திறவுங்கள் குறியீட்டினை ஸ்கான் செய்யுங்கள், தொகையை பதியுங்கள், கொடுப்பனவினை உறுதிப்படுத்துங்கள். இது மிகச் சிறந்த விரைவான வசதி நிறைந்ததொன்றாகும்”.

**அயோத்தியா:** அதன் ஒலி இனிமையானது. கியூஆர் குறியீட்டின் மூலம் நீங்கள் வேறு எதனையெல்லாம் செய்யலாம்?

**மனகரி:** ஏராளமான விடயங்களை செய்யலாம். சில உணவகங்கள் அவற்றை உணவுப் பட்டியல் விபரங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றன. நீங்கள் களஞ்சியங்களிலுள்ள பொருட்களின் விலைகளை பரிசோதித்துக்கொள்ளமுடியும். அல்லது அவற்றைப் பாதுகாப்பாக செயல்களில் பதிகை செய்துகொள்ளமுடியும்.

**தனஞ்ஜய:** “எனது கடையில் ஏராளமான நேரத்தினை சேமிக்கச் செய்யும் கொடுப்பனவுகளுக்காக நான் இதனை ஏற்படுத்திக் கொள்ளமுடியும் என நீங்கள் நினைக்கிறீர்களா?”

**மனகரி:** "நிச்சயமாக அப்பா இதனை பொருந்திக் கொள்வது சுலபமானது. வாடிக்கையாளரும் இவ்வங்கியை விரும்புவர்"

**அயோத்தியா:** இப்பொழுது நான் ஆர்வமாக இருக்கிறேன். எவ்வாறு ஸ்கான் பண்ணுவது என்பதனை எனக்கு காட்டமுடியுமா? எங்கு நான் இந்த கொடுப்பனவுச் செயலியைப் பார்க்கலாம்."

**மனகரி:** "உண்மையாக, தங்கச்சி கியூஆர் குறியீட்டினைப் பார்த்து அவற்றின் பயன்பாட்டினைப் பரீட்சித்துப் பார்க்கலாம்."

இக்குடும்பத்தின் கலந்துரையாடல் கியூ ஆர் குறியீடு தொடர்பான அதிகரித்துவரும் ஆர்வத்தினை எடுத்துக்காட்டுகிறது. இருப்பினும் இன்னும் அநேகர் இதன் தொழிற்பாடுகள் பற்றியும் அதனுடன் தொடர்பான நன்மைகள் பற்றியும் போதுமான விழிப்புணர்வினை பெறவில்லை என்பதனை இது காட்டுகிறது.

## விரைந்த பதிலிறுப்பு (ஞசு) குறியீட்டுக் கொடுப்பனவு

கியூஆர் குறியீட்டுக் கொடுப்பனவுகள் கொடுப்பனவுகளை முன்னெடுப்பதற்கும் முடித்து வைப்பதற்குமான இரண்டு பரிணாம எந்திரங்களினால் வாசிக்கப்படக்கூடிய பட்டைக் குறியீட்டுடன் தொடர்புபடுகிறது. கியூஆர் குறியீடு கொடுப்பனவு விபரங்கள் வணிகர் தகவல்களை அல்லது கொடுப்பனவு நுழைவு வழிக்கான இணைப்பு போன்ற தரவுகளை களஞ்சியப்படுத்தி வைத்திருப்பதுடன் இதனை கொடுப்பனவு செயலியை பயன்படுத்தி திறன் தொலைபேசி கமரா மூலம் ஸ்கான் செய்யமுடியும். கியூஆர் குறியீட்டு கொடுப்பனவுகள் பௌதீகவடிவிலான காசு அல்லது அட்டைகளின் தேவையை இல்லாமல் செய்கின்றன. கொடுப்பனவுகளை தடங்கலின்றி விரைவாகச் செய்வதற்கு உங்களுக்கு திறன் தொலைபேசி மட்டுமே தேவையாகும்.

## இரண்டு வகையான கியூஆர் குறியீடுகள் காணப்படுகின்றன

1. நிலையான கியூஆர் குறியீடுகள்: இக்குறியீடுகள் நிலையானவை அத்துடன் உருவாக்கப்பட்டதன் பின்னர் திருத்தியமைக்கப்படமுடியாதவை. அவை சில கடைகளில் அல்லது விற்பனைப் பீடங்களில் திரும்ப திரும்ப கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்கு அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன. உங்களுக்கு கொடுப்பனவுகளைச் செய்யவேண்டிய தேவையிருப்பின் நீங்கள் கியூஆர் குறியீட்டினை ஸ்கான் செய்து கொடுப்பனவுகளுக்கு முன்னதாக கொடுக்கல்வாங்கல் தொகையினை கையினால் பதிதல் வேண்டும்.

2. இயக்கவாற்றல் வாய்ந்த கியூஆர் குறியீடுகள்: இக்குறியீடுகள் ஒவ்வொரு கொடுக்கல்வாங்கல்களுக்குமாக தனித்துவமாக உருவாக்குவதுடன் தொகை போன்ற குறித்துரைக்கப்பட்ட கொடுப்பனவு விபரங்களையும் கொண்டிருக்கின்றன. இவை கூடியளவு பாதுகாப்பினையும் தன்னியக்க தன்மையினையும் கொண்டிருப்பதுடன் கையினால் செய்யப்படும் தவறுகளையும் குறைத்துவிடுகின்றன.

## லங்கா கியூஆர் கொடுப்பனவுகளுக்களை பின்பற்றுவதற்கான படிமுறை

### வாடிக்கையாளர்களுக்காக

1. கொடுப்பனவுச் செயலியைக் திறத்தல்: லங்கா கியூஆர் குறியீட்டுக் கொடுப்பனவுகளுக்கு ஆதரவளிக்கின்ற செல்லிடத் தொலைபேசிக் கொடுப்பனவு செயலியைத் திறத்தல்.

2. கியூஆர் குறியீட்டினை ஸ்கான் செய்தல்: செயலியின் திறன் தொலைபேசிக் கமராவைப் பயன்படுத்தி வணிகர் லங்கா கியூஆர் குறியீட்டினைக் காட்டுகின்றார்.

3. கொடுப்பனவு விபரங்களை உருதிப்படுத்தல்: செயலி வணிகரின் பெயர் மற்றும் கொடுப்பனவுத் தொகை என்பன உள்ளிட்ட கொடுப்பனவு விபரங்களை காட்டுகிறது. (இயக்கவாற்றல் கியூஆர் குறியீட்டினை பயன்படுத்துவதாக இருப்பின். நிலையான கியூஆர் ஆக இருப்பின் வாடிக்கையாளர் தொகையினை தட்டச்சு செய்தல் வேண்டும்)

4. கொடுப்பனவினை நிறைவு செய்தல்: அநேகமாக உயிரின உறுதிப்படுத்தல் (கைவிரல் அடையாளம் அல்லது முகத்தோற்றத்தினை அங்கீகரித்தல்) அல்லது தனிப்பட்ட அடையாள இலக்கத்தினைப் பயன்படுத்தி நீங்கள் கொடுப்பனவினை உறுதிப்படுத்தி அங்கீகாரமளித்தல் வேண்டும்.

5. உறுதிப்படுத்தலை பெற்றுக் கொள்ளுதல்: வெற்றிகரமான கொடுப்பனவு பற்றிய உறுதிப்படுத்தலை நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள்.

### வணிகர்களுக்காக

1. லங்கா கியூஆர் குறியீட்டினை உருவாக்குதல் அல்லது காட்சிப்படுத்தல்: வணிகர் என்ற ரீதியில் நீங்கள் ஒன்றில் மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதற்காக நிலையான கியூஆர் குறியீட்டினை (உ-ம் வெளிச்செல்லும் கருமபீடத்தில் கைவிரல் அச்சிடப்பட்ட குறியீடு) அல்லது ஒவ்வொரு குறித்துரைக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்கும் இயக்கவாற்றல் கியூஆர் குறியீட்டினை உருவாக்குதல்.

2. ஸ்கான் செய்தல் மற்றும் உருதிப்படுத்தல்: வாடிக்கையாளர் லங்கா கியூஆர் குறியீட்டினை ஸ்கான் செய்து கொடுப்பனவை செலுத்தியதும் அவர்களது கொடுப்பனவு முறைமையிலிருந்து உறுதிப்படுத்தல் அறிவித்தலில் நீங்கள் பெறுவீர்கள் (இலங்கையில் அனைத்துக் கொடுப்பனவு கியூஆர்களும் லங்கா கியூஆர் நியம இணங்குவிப்பை கொண்டவையாக இருத்தல் வேண்டும். இது இவற்றைப் பரிவர்த்தனை செய்து பயன்படுத்துகின்றது. ஏதேனும் லங்கா கியூஆர் இயலுமைப்படுத்தப்பட்ட செயலியையும் எந்தஒரு லங்கா கியூஆர் இனையும் ஸ்கான் செய்யமுடியும்)

- கியூஆர் குறியீடுகளை எந்தவொரு திறன் தொலைபேசியினாலும் ஸ்கான் செய்ய முடிவதன் காரணமாக முடிவது அவை வாடிக்கையாளர்களையும் வணிகர்களையும் அணுகச் செய்கிறது.
- கணக்கினை அதிகாரமளிப்படாதவர்கள் அணுகுவதனை தடைசெய்வதற்கு, கொடுப்பனவு செயலிகள் வாடிக்கையாளர்களை தனிப்பட்ட அடையாள இலக்கம் உடலியல் அடையாளங்கள் கைவிரல் அடையாளம், (முக அடையாளம்) அல்லது ஒரே தடவையிலான கடவுச்சொல் போன்ற பல் காரணி உறுதிப்படுத்தல்களை தேவைப்படுத்துகின்றன.

## ஏனைய பிரபல்யமான டிஜிட்டல் கொடுப்பனவு முறைகள் மற்றும் சாதனங்கள்

கியூஆர் குறியீட்டுக் கொடுப்பனவுகளுக்கும் புறம்பாக, வாடிக்கையாளர்களும் வியாபாரங்களும் கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துவதற்காக வேறு பல டிஜிட்டல் கொடுப்பனவு முறைகளையும் பயன்படுத்துகின்றன.

| செல்லிடத் தொலைபேசி வலட்டுகள் | இருவருக்கிடையிலான p2p கொடுப்பனவுகள் | Buy | இப்பொழுது வாங்குங்கள் பின்னர் கொடுப்பனவு செய்யுங்கள் | கொடுப்பனவு அட்டைகள் | நேரடிப் பற்று |
|---|---|---|---|---|---|
| இச்செல்லிட தொலைபேசி வலட்டுக்கள் உங்கள் கடன் பற்று மற்றும் முன்கூட்டியே செலுத்தப்பட்ட அட்டைகளின் விபரத்தினை உங்கள் சாதனங்களில் பாதுகாப்பாக சேமித்து வைக்கின்றன. | இருவருக்கிடையிலான கொடுப்பனவுகள் என்பது வங்ககளினதோ அல்லது பௌதீக வடிவிலான காசோ இல்லாமல் டிஜிட்டல் தளமூடாக இரண்டு ஆட்களுக்கிடையில் மின்னஞ்சல் முகவரி அல்லது தொலைபேசி இலக்கம் இல்லாமல்) பணத்தினை மாற்றல் செய்வது. “2 கொடுப்பனவுகள் பிரிக்கப்பட்ட பட்டியல்கள் நண்பர்களுக்கான கொடுப்பனவுகள் அல்லது சிறிய வியாபாரங்களுக்கான கொடுப்பனவுகளுக்கு பிரபல்யமானவையாகும். | இப்பொழுது வாங்குங்கள் பின்னர் கொடுப்பனவு செய்யுங்கள் சேவை பாரம்பரியமான கொடுப்பனவு அட்டை இல்லாமல் தவணை அடிப்படையில் கொடுப்பனவு செய்ய உங்களை அனுமதிக்கிறது. | கொடுப்பனவு அட்டைகளை கடன், பற்று பெறுமதி சேமிக்கப்பட்ட அட்டை) விற்பனை மைய முனைக்கோடிகளினதும் கொடுப்பனவிற்காக பயன்படுத்தமுடியும். சில்லறை அமைவிடங்களில் அட்டைக் கொடுப்பனவுகளுக்கு மின்னியல் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன எந்த ஒரு நாளிலும் எந்த ஒரு நேரத்திலும் ஏரிளம் கொடுப்பனவை நீங்கள் பயன்படுத்தலாம் கொடுப்பனவு அட்டைகளை பொருட்கள் மற்றும் சேவைகளின் தொடர்பானவற்றிற்கு இணையவழி ஊடாக பயன்படுத்த முடியும். இணையவழி ஊடாக ஒரு வணிக இணையவழி வணிக நிலைமைகள்) இணையவழி கொடுப்பனவு அட்டையினை பயன்படுத்த முடியும். மத்திய சேமிப்பில் தங்கியிராமல் மூலவளங்களையும் தகவல்களையும் சாதனங்களிடையே அல்லது பயன்படுத்துனர்களிடையே பகிர்ந்து கொள்ளவும். | இது ஒரு வசதியாகும். இதில் வாடிக்கையாளரின் அறிவுறுத்தலின்படி மூன்றாம் தரப்பினரின் நிதியியல் நிறுவனம் (உ-ம் மின்சபை நீர் வழங்கல் சபை) என்பன வாடிக்கையாளர் கணக்கிலிருந்து மின்பட்டியல் தீர்ப்பனவு.'. நீர்ப்பட்டியல் தீர்ப்பனவு என்பனவற்றிற்காக வாடிக்கையாளர் கணக்கிலிருந்து பணத்தினை எடுக்கலாம். வாடிக்கையாளர் முன்னெடுப்பு இல்லாமலேயே கொடுப்பனவு ஒவ்வொரு தடவையும் உறப்படுகிறது. பயன்படுத்துனர்களிடையே பகிர்ந்து கொள்ளவும். | This is a facility where, as per the instructions of a customer, the financial institution of a third party (e.g., Electricity Board, Water Board) pulls a certain amount of funds from the customer's account for recurring payments such as electricity bill settlement/ water bill settlement, without the customer having to initiate the payment each time it becomes due. |
| இணக்கமான முனைக்கோடியில் தொலைபேசியை இலகுவாகப் பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் தொடர்புகளற்ற கொடுப்பனவுகளைச் செய்யலாம். | | இப்பொழுது வாங்குங்கள் பின்னர் செலுத்துங்கள் சேவை இரண்டுமாத கால பகுதியில் வட்டி இல்லாமல் முன்று தவணைகளில் உங்கள கொள்வனவுகளை பிரித்துச் செலுத்துவதற்கு உங்களை அனுமதிக்கிறது. | | | |
| உ-ம் பிறைமி எம் காஷ் (மொபிடெல்லினால் தொழிற்படுத்தப்படுவது) ஈஷிகாஷ் (டயலொகினால் ஏற்படுத்தப்படுகிறது) வங்கி ஒருங்கிணைக்கப்பட்ட செயலி (தே.சே.வங்கி, என்டிபீ, நியோஸ், கியூ கொடுப்பனவு செயலி, சம்பத் பிபே, பீப்பின்ஸ் எச்என்பீ சோலோ, ஸ்மாட்பே, செலான் பே, பிறைமி)<br><br>வெளிநாட்டில் நன்கறிந்த கொடுப்பனவுச் செயலி சம்சூங், அப்பிள் கூகிள் பே | உ-ம்: பொதுவான ஆக்கப்பட்ட இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி, மற்றும் ஜஸ்ட்பே இவை இலங்கையில் கொடுப்பனவுகளை செயலி “2 மாற்றல்களுக்க வசதியளிக்கிறது. | உ-ம் கோகோ செயலி | உ-ம்: விசா, மாஸ்டர் அட்டை, அமெக்ஸ் மற்றும் யூனியன் பே போன்ற பன்னாட்டு அட்டை திட்டங்களின் கீழ் வங்கிகள் கொடுப்பனவு அட்டைகளை வழங்குகின்றன. | | |

## டிஜிட்டல் நாணயங்கள் : கிறிப்ரோ நாணயங்கள் மற்றும் பேரேட்டுத் தொழில்நுட்பம்

டிஜிட்டல் நாணயங்கள் என்பது டிஜிட்டல் வடிவில் காணப்படும் நிதியியல் சொத்தாகும். அதனை கொடுக்கல்வாங்கல்கள், முதலீடுகள் அல்லது ஏனைய நிதியியல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தமுடியும்.

கிறிப்ரோ நாணயங்கள் டிஜிட்டல் நாணயங்களின் துணைப் பிரிவாகும். இவை டிஜிட்டல் அல்லது மெய்நிகர் நாணயங்களாக இருப்பதுடன் மறைக்குறியீடு ஊடாக பாதுகாக்கப்படுகிறதுடன் வங்கிகள் போன்ற மத்திய அதிகார சபைகளினால் சுதந்திரமாக தொழிற்படுத்தப்படுகின்றன. இப்பரவலாக்கப்பட்ட தன்மை பாரம்பரிய நாணயங்களிலிருந்து இதனை வேறுபடுத்துகின்றது.



ரத்நாயக்க குடும்பம் தொலைக்காட்சியில் செய்தியைப் பார்த்துக் கொண்டே பின்வரும் கலந்துரையாடலில் ஈடுபட்டிருக்கிறது.




இக்கலந்துரையாடல் அனேக மக்கள் இது பற்றி ஆர்வமாக இருப்பதனையும் டிஜிட்டல் நாணயம் பற்றி போதியளவு தெளிவுபற்றவர்களாக இருப்பதனையும் காட்டுகிறது. இவற்றின் பொருட்டான கலந்துரையாடல்களுக்கு இன்னொரு மேடையை ஏற்படுத்தவேண்டும். அடிப்படைத் தொழில்நுட்பம் இடர்நேர்வு மற்றும் வாய்ப்புக்கள் பற்றி தகவல்களின் அடிப்படையிலான தீர்மானங்களை எடுக்கமுன் டிஜிட்டல் நாணயங்களை புரிந்துகொள்வது அவசியம்.

இலங்கை மத்திய வங்கி கிறிப்ரோ நாணயங்கள் என பொதுவாக அறியப்படும் மெய் நிகர் நாணயங்களுடன் இணைந்த இடர் நேர்வுகள் பற்றி பொதுமக்களுக்கு தொடர்ச்சியாக எச்சரிக்கைகளை விடுத்துவருகின்றது. இந்த டிஜிட்டல் சொத்துக்கள் இலங்கையில் சட்ட பூர்வமானவையாக அங்கீகரிக்கப்படவில்லை என்பதுடன் ஒழுங்குமுறையான பாதுகாப்பு இல்லாமலேதான் தொழிற்படுகின்றன. இலங்கை மத்திய வங்கி கிறிப்ரோ நாணயங்கள் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத முதலீட்டு சாதனங்கள் எனவும் இலங்கையில் சொத்து வகையொன்றாக கருதப்படவில்லை என்பதனையும் வலியுறுத்துகின்றது.

### இலங்கை மத்திய வங்கி அனேக கரிசனைக்குரிய விடயங்களை எடுத்துக்காட்டுகிறது:

- ஒழுங்குமுறைப்படுத்தல் நிலை: கிறிப்ரோ நாணயங்கள் இலங்கையில் சட்ட பூர்வ நாணயமாக அங்கீகரிக்கப்படவில்லை என்பதனால் ஒழுங்குமுறைப்படுத்தல் பாதுகாப்பு இல்லை.
- நிதியியல் மோசடிகள்: கிறிப்ரோ நாணயங்களை அடிப்படையாகக் கொண்டு உயர்ந்த வருமானத்தினை பெறமுடியும் என வாக்குறுதியளிக்கின்ற அனேக நிதியியல் மோசடிகள் அதிகரித்து வருகின்றன. இத்தகைய மோசடிகள் தனிப்பட்டவர்கள் மோசடிமிகுந்த கிறிப்ரோ நாணயத் திட்டங்களில் முதலீடு செய்வதில் அவர்களைத் தூண்டுவதுடன் இது கணிசமான நிதியியல் இழப்புகளுக்கும் வழிவகுக்கின்றது.
- ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரமளித்தல்: இலங்கை மத்திய வங்கி, ஆரம்ப நாணய வழங்கல், கிறிப்ரோ நாணய வார்ப்புத் தொழிற்பாடுகள், பரிமாற்றம் அல்லது முதலீட்டு ஆலொசனைச் சேவை உட்பட கிறிப்ரோ நாணயத்துடன் தொடர்பான திட்டங்களைத் தொழிற்படுத்த எந்தவொரு தனிப்பட்டவர்களுக்கும் அல்லது வியாபாரங்களுக்கும் உரிமமோ அங்கீகாரமோ வழங்கவில்லை.

இவ்விடர்நேர்வுகளை கருத்திற்கொண்டு இலங்கை மத்திய வங்கி சாத்தியமான நிதியியல் இழப்புக்களையும் சட்ட ரீதியான விளைவுகளையும் தவிர்க்கும் விதத்தில் கிறிப்ரோ நாணய கொடுக்கல் வாங்கல்களிலிருந்தும் எச்சரிக்கையுடன் விலகியிருக்குமாறு மத்திய வங்கி ஆலோசனை வழங்குகிறது.

### டிஜிட்டல் முதலீட்டு சாதனங்கள்

டிஜிட்டல் முதலீட்டுச் சாதனங்கள் பொதுமக்களினால் முகாமைப்படுத்தக்கூடிய முதலீடு செய்யக்கூடிய அவற்றின் நிதியியல் சொத்துக்களை டிஜிட்டல் முறையில் கண்காணிக்கக்கூடிய தொழில்நுட்ப ரீதியான மற்றும் தளங்களைக் கொண்டவை.

இவை, அணுகக்கூடிய தன்மையினையும் நிதியியல் சந்தைகளில் பங்கேற்பதற்கும் பரந்த வீச்சிலான முதலீட்டுத் தேர்வுகளையும் வழங்குவதற்கும் தரவினை அடிப்படையாகக் கொண்ட நுண்ணறிவினை வழங்கக்கூடியதும் பயன்படுத்துனர் சினேகபூர்வ வழிகளையும் வழங்குகிறது.

டிஜிட்டல் முதலீட்டு சாதனங்களின் பரிணாம வளர்ச்சி, இலங்கையில் நிதியியல் சந்தையினை கணிசமானளவிற்கு மாற்றியமைத்திருப்பதுடன் பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டு வாய்ப்புக்களை கண்டறிவதற்கு ஏற்றவிதத்தில் தனிப்பட்டவர்களுக்கு வசதியானதும் அணுகக்கூடியதுமான வழிகளை வழங்குகிறது.



ரத்நாயக்க குடும்பம் அண்மைய விடுமுறையின் போது பின்வரும் கலந்துரையாடலை மேற்கொண்டது.

**அனில்:** "உனக்குத் தெரியுமா அனுஷா, உங்கள் தொலைபேசியிலிருந்து நேரடியாக பங்குகளில் முதலீடு செய்ய உங்களால் முடியும்"

**அனுஷா:** "உண்மையாகவா இது மிக வசதியானதே. எவ்வாறு இதனைத் தொடங்குவது?"

**மனகரி:** "அம்மா, எனது நண்பர் விதந்துரைத்த செயலி ஒன்றினையே நான் பயன்படுத்துகின்றேன் உங்கள் பங்குகளை வர்த்தகம் செய்யக்கூட முடியும் என்பதுடன் சமவாய நிதியத்தில் கூட முதலீடு செய்யலாம். இவையெல்லாம் தற்பொழுது டிஜிட்டலில் கிடைக்கின்றன.!"

தனஞ்ஜய: "நான் இதுபற்றியும் பார்க்க வேண்டும். எனது வியாபாரத்திற்கான சேமிப்பினை அதிகரிப்பதற்கு இது சிறந்த வழியாக இருக்கும்."

**அயோத்தியா:** "இதனை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றி உனக்கு கற்பிக்கின்றதா? எனக்கு சிறியதொரு உதவி தேவையாக இருக்கக்கூடும்."

**அனுஷா:** "குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் ஆர்வமாக இருக்கிறார்கள் போல் தெரிகிறது. சிறந்த டிஜிட்டல் கருவிகள் பற்றி எல்லோருமாக சேர்ந்து கண்டறிவோம்.!"

இக்குடும்பத்தின் கலந்துரையாடல் டிஜிட்டல் முதலீட்டு சாதனங்கள் பற்றி வளர்ந்துவரும் ஆர்வத்தினை எடுத்துக்காட்டுகிறது. எனினும் இதன் செய்முறை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட தளம் பற்றிய போதுமான அறிவினை பொதுமக்கள் கொண்டிருக்கவில்லை என்பதனையும் எடுத்துக்காட்டுகின்றது.

அனேகமான தனிப்பட்டவர்கள் டிஜிட்டல் முறையில் முதலீடுகளை எவ்வாறு ஆரம்பிப்பது என்பது பற்றி அல்லது இதனுடன் இணைந்த இடர்நேர்வு மற்றும் நன்மைகள் பற்றி இன்னமும் நிச்சயமற்ற தன்மையினை கொண்டிருக்கின்றனர். இக்கருவிகளை பயன்படுத்துவதன் மூலம் தனிப்பட்டவர்கள் தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்வது பற்றி கற்றுக்கொள்ள முடியும். அவற்றின் நிதியியல் பெறுபேறுகளை உயர்த்துவதற்கு டிஜிட்டல் தளத்தினை பயன்படுத்திக் கொள்கின்ற வேளையில் இவ்வறிவு இடைவெளி கட்டுப்படுத்தப்படுகிறது.

இப்பிரிவு, இலங்கையிலுள்ள மிகப் பிரபல்யமான டிஜிட்டல் முதலீட்டுக் கருவிகளை கண்டறிவதுடன் பின்வரும் விடயங்களின் மீதும் கவனம் செலுத்துகின்றது.

- பங்கு வர்த்தகப்படுத்தல் தளம்பல்கள்
- சமவாய நிதிய தளம்பல்கள், அத்துடன்
- மாற்று முதலீட்டு தொழில்நுட்பங்கள்

## பங்கு வர்த்தகப்படுத்தல் தளம்பல்கள்

இலங்கை பங்குத்தரகர்கள் முக்கியமாக இரண்டு அதேநேர வர்த்தகப்படுத்தல் தளம்களை அதாவது நேரடி எவ்எண் மற்றும் ஏ வர்த்தகம் என்பன பற்றிப் பயன்படுத்துகின்றனர். இத்தளம்களை வெப்பினைத் தளமாகக்கி கொண்ட இடைமுகம் மற்றும் செல்லிட பிரயோகங்கள் ஊடாக அணுக கூடியதாக இருப்பது கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட பிணையங்களின் தடங்கலற்ற வர்த்தகப்படுத்தலை இயலுமைப்படுத்துகிறது.

**இத்தளம்பளின் முக்கிய பண்புகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:**

- **முன்னேற்றம் கண்ட பட்டயப்படுத்தல் கருவிகள்:** முதலீட்டாளர்களுக்கு தொழில்நுட்ப மற்றும் பகுப்பாய்வு நுண்ணறிவினை வழங்குகிறது.
- **சந்தைத்தரவு மற்றும் பகுப்பாய்வு:** தகவல்களை அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்களை எடுப்பதற்கு அதேநேர சந்தை இற்றைப்படுத்தல்களை வழங்குகிறது.
- **வர்த்தக நிறைவேற்றம்:** பங்குகள் மற்றும் ஏனைய பட்டியலிடப்பட்ட பிணையங்களுக்காக வாங்குதல் மற்றும் விற்றல் கட்டளைகளுக்கு வசதியளிக்கப்படுகிறது.
- **சொத்துப்பட்டியல் முகாமைத்துவம்:** முதலீடுகளை கண்காணிப்பதற்கான பண்புகள் மற்றும் வரலாற்றுத் தரவுகளை அணுகுதல்.

இத்தளம்கள் தீவிரமான வர்த்தகங்களுக்கும் ஆழமான சந்தைப் பகுப்பாய்வுகளை எதிர்பார்க்கும் முதலீட்டாளர்களுக்கும் முன்னேற்றம் கண்ட வர்த்தக இயலாற்றல்களுக்கும் நன்மை பயக்கிறது.

கூடிய தகவல்களுக்கு கொழும்பு பங்குபரிவர்த்தனைக்கு விஜயம் செய்யுங்கள் https://www.cse.lk

## சமவாய நிதியத் தளங்கள்

இலங்கையிலுள்ள அனேகமான சொத்து முகாமைத்துவக் கம்பனிகள் சமவாய நிதிய முதலீடுகளை முகாமைப்படுத்துவதற்கு டிஜிட்டல் தளம்களை வழங்குகின்றன. சமவாய நிதியம் என்பது தொழில்சார் நிபுணத்துவ ரீதியில் முகாமைப்படுத்தப்படுகின்ற முதலீட்டு நிறுவனமாகும். அது பணத்தினை பல்வேறு முதலீட்டாளர்களிடமிருந்து பங்குகள், முறிகள் அல்லது ஏனைய சொத்துக்கள் போன்ற பன்முகப்படுத்தப்பட்ட நிதியியல் சாதனங்களில் முதலீடு செய்வதற்காக பணத்தினை திரட்டுகிறது. இதனை அணுகுவது சுலபமாக இருப்பது, தொழில்சார் நிபுணத்துவ முகாமைத்துவம் மற்றும் இடர்நேர்வு பன்முகப்படுத்தல் என்பனவற்றின் காரணமாக இது அனுபவமற்ற மற்றும் அனுபவமுடைய முதலீட்டாளர்களுக்கு பொருத்தமுடையதாக காணப்படுவதனால் இது விரும்பத்தக்க முதலீட்டு முறையாக கருதப்படுகிறது.

## சமவாய நிதிய தளத்தின் முக்கிய தொழிற்பாடுகள்

| தொழிற்பாடு | விவரணம் |
|---|---|
| கொள்வனவு அலகுகள் | டிஜிட்டல் இடைமுகங்களூடாக சமவாய நிதிய அலகுகளை வாங்குவதற்கு அனுமதித்தல் |
| ஆளி நிதியங்கள் | உச்சமட்ட வருவாய்களுக்காக நிதியங்களுக்கிடையில் அசைவுகளை இயலுமைப்படுத்தல் |
| மீட்பு அலகுகள் | சுலபமான முறையில் முதலீடுகளிலிருந்து காசினை எடுப்பதற்கான இயலுமையினை வழியில் |
| சொத்துப் பட்டியல் கண்காணிப்பு | நிதியத்தின் செயலாற்றத்தினை கண்டறிதல் மற்றும் தீர்மானங்களை எடுப்பதற்கான நுண்ணறிவுகளை வழங்குகிறது. |

கூடுதலான தகவல்களுக்கு Mutual Funds Section on CSE. இற்கு விஜயம் செய்யுங்கள்

# 5.3. இ-வர்த்தகம்

## கற்றலின் பெறுபேறுகள்

- இ-வர்த்தகத்தினை வரையறை செய்தல் மற்றும் இ-வர்த்தகம் தளம்களின் பல்வேறு வகைகளை அடையாளம் காணுதல்
- முக்கியமான மூலங்களை விபரித்தல் மற்றும் இணையவழி பொருட்கொள்வனவுகளுடன் தொடர்பான படிமுறைகளை புரிந்துகொள்ளுதல்
- இணையவழி பொருட்கொள்வனவில் கிடைக்கத்தக்கதாகவுள்ள வேறுபட்ட டிஜிட்டல் கொடுப்பனவு முறைகளை விளங்கிக் கொள்ளுதல்
- பாதுகாப்பான இணையவழி பொருட்கொள்வனவிற்கான முக்கிய பாதுகாப்பு நடைமுறைகளை அடையாளம் கண்டு சிறந்த நடைமுறைகளைப் பிரயோகித்தல்

## வர்த்தகம்

இ-வர்த்தகம் (இலத்திரனியல் வர்த்தகம்) அல்லது இலகுவான வடிவத்தில் குறிப்பிடுவதாயின் இணையவழி பொருள் கொள்வனவு என்பது இணையத்தினைப் பயன்படுத்தி பொருட்களையும் சேவைகளையும் வாங்குவதனையும் விற்பதனையும் குறிக்கிறது. இது இணையவழி சந்தைகளூடாக உற்பத்திகளை கொள்வனவு செய்வதிலிருந்து நிதியியல் கொடுக்கல்வாங்கல்களை டிஜிட்டல் முறையில் மேற்கொள்வது வரையிலான பரந்த நடவடிக்கைகளைக் குறிப்பிடுகிறது.



ரத்நாயக்க குடும்பம் மாலை தேநீர் வேளையின்போது பின்வரும் கலந்துரையாடலில்

| | |
|---|---|
| **அனில்:** | இணையவழி பொருள் கொள்வனவு பற்றி முயற்சித்து பார்க்கவேண்டும் என நான் யோசிக்கின்றேன். உண்மையில் இதற்கு முன் நான் எப்பொருளையும் இணையவழியில் வாங்கவில்லை. இதனைத் தொடங்குவதற்கு முன்னர் நான் எவற்றையெல்லாம் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். |
| **அனுகூஷா:** | இது நல்ல விடயம் தான் அனில். நீ முதலில் புகழ்பெற்ற வெப்தளங்களைத் தெரிவுசெய்வது அவசியமாகும். |
| **மனகரி:** | ஆம் எந்த வெப்தளம் பாதுகாப்பானது என்பதனை உறுதிப்படுத்தவும். வெப்தள முகவரியில் HTTPS இனைக் கவனிக்கவும். |
| **அயோத்தியா:** | அப்பா, பல்வேறு நல்ல விடயங்களை இணையவழியில் பார்க்கமுடியும். எந்தவொரு பொருளையும் வாங்குவதற்கு முன் வாடிக்கையாளர் கருத்துக்களை நான் எப்பொழுதும் பார்ப்பேன். இது இப்பொருள்பற்றி மற்றையவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதனை அறிந்துகொள்ள உதவும் |
| **அனில்:** | கொடுப்பனவுகள் பற்றி என்ன நினைக்கின்றீர்கள் எனது கடன் அட்டையினை இணைய வழியில் பயன்படுத்துவது பாதுகாப்பானதா? |
| **அனுகூஷா:** | நீங்கள் புகழ்பெற்ற தளங்களிலிருந்து கொள்வனவு செய்வீர்களாயின் அது பொதுவாக பாதுகாப்பானது தான் பெரும்பாலான இலங்கை வெப்தளங்களில் நீங்கள் கடன்அட்டையினை∴ பற்று அட்டைகளைப் பயன்படுத்தி கொள்வனவுகளை செய்யும்போது, கொடுப்பனவு செய்முறையினை தொடங்குவதற்கு முன்னர் உங்கள் பதிவுசெய்யப்பட்ட தொலைபேசியில் ஒரு தடவைக்கான கடவுச் சொல்லினை நீங்கள் பெற்றுக் கொள்ளமுடியும். இது உங்கள் பாதுகாப்பான பயன்பாட்டினை உறுதிப்படுத்தும். நீங்கள் பே பில் போன்ற கொடுப்பனவுச் சேவைகளையும் பயன்படுத்தலாம். இது வாங்குனர்களுக்கு பாதுகாப்பினை வழங்கும். |

**தனஞ்ஜய:** அத்துடன் விநியோக நேரம் மற்றும் செலவுகளையும் மறந்துவிட வேண்டாம். சில சமயங்களில் பொருள் மிக மலிவாக இருக்கும். ஆனால் அப்பயன்படுத்தல் செலவு மிக அதிகமாக இருக்கும். உங்கள் கொள்வனவினை இறுதிப்படுத்துவதற்கு முன்னர் மொத்தச் செலவினையும் பரிசோதித்துக் கொள்ளவும்.

**அனில்:** இவை அனைத்தும் மிக உதவி காரணமானவை. மளிகைச் சமான்களையும் நாளாந்த பொருட்களையும் இணையவழியில் கொள்வனவு செய்ய முடியுமா?

**அனுகூஷ:** நிச்சயமாக, அநேக சிறப்பு அங்காடிகள் தற்பொழுது இணையவழி களஞ்சியங்களை கொண்டுள்ளன. இது நேரத்தினை மிச்சப்படுத்தியதுடன் களந்திருக்கின்றது போன்றே இணையவழி வணிகத்திலும் நீங்கள் அதே பொருட்களை கண்டுகொள்ள முடியும். உங்கள் அட்டவணைக்கேற்ப விநியோக நேரத்தினை சோதித்து உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

**மனகரி:** உங்கள் கணக்குகளுக்காக வலுவானதும் தனித்துவமான கடவுச் சொற்களை உருவாக்குவதனை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். நம்பிக்கையற்ற தளம்பளுடன் தனிப்பட்ட தகவல்களை பகிர்ந்து கொள்ளவேண்டாம்.

**அனில்:** உங்கள் துப்புகளுக்கெல்லாம் நன்றி. இப்பொழுது இ-வர்த்தகம் பற்றி முயற்சிப்பது தொடர்பில் எனக்கு நம்பிக்கை வந்தாயிற்று. நான் சிறிய விடயங்களில் ஆரம்பித்து எப்படிப் போகிறது என பார்க்கப் போகிறேன்.

**அனுகூஷ:** அது நல்ல திட்டம் தான். போதுமான நேரத்தினை எடுத்துக் கொண்டு இச்செயல்முறையில் ஈடுபடுவீர்கள். அப்பொழுது நீங்கள் இணையவழி கொள்வனவில் உள்ள வசதியை உணர்வீர்கள்.

இக்கலந்துரையாடலானது இணையவழி பொருள் கொள்வனவு வழங்குகின்ற ஒப்பிடமுடியாத வசதிகளை எடுத்துக் காட்டுகிறது. டிஜிட்டல் வங்கித்தொழிலும் கொடுப்பனவுகளும் அதிகரித்ததன் காரணமாக இ-வர்த்தகம் எமது வாழ்வில் இன்றியமையாத கூறாக மாறிவிட்டது. இணையவழி கொள்வனவுகளை கடைப்பிடிப்பது தொழில்நுட்பத்தினைக் கொண்ட உலகில் அவசியமானது ஏனெனில் இதனை தவிர்ப்பது நீண்டகால நடைமுறைக்கு சாத்தியமாகாது

இந்நன்மைகள் எல்லாம் இருக்கின்ற போதும், இணையவழி பொருள் கொள்வனவுகள் குறிப்பிட்ட பாதுகாப்பு இடர்நேர்வுகளைக் காட்டுகின்றன. இச்சாத்தியமான பிரச்சனைகளை அறிந்து கொள்வதும் அவற்றை தணிப்பதற்கு பொருத்தமான வழிமுறைகளை எடுப்பதும் மிக முக்கியமானதாகும். இது தொடர்பில் நீங்கள் சரியான அறிவினைப் பெற்றுக் கொள்வதும் உங்களை நீங்களே எவ்வாறு பாதுகாத்துக் கொள்வதனை விளங்கிக் கொள்வதன் மூலம் இணையவழி கொள்வனவுகளிலுள்ள அனுகூலங்களை நீங்கள் அனுபவிக்கக்கூடியதாக இருக்கின்ற வேளையில் இடர்நேர்வுகளையும் குறைத்துக்கொள்ளலாம்.

**கொடுக்கல்வாங்கல் தன்மைகளின் அடிப்படையில் ஆறு முக்கிய இ-வர்த்தக தளம்பல்கள் காணப்படுகின்றன.**

1. **வாடிக்கையாளர்களுக்கான வியாபாரம் (B2C):** கம்பனிகள் உற்பத்திகளை அல்லது சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக விற்பனை செய்கின்றன.

2. **வியாபாரத்திற்கு வியாபாரம் (B2B):** வியாபாரங்கள் பொருட்கள் அல்லது சேவைகளை மற்றொரு வியாபாரத்திற்கு விற்பனை செய்தல். இவ்வகையிலான இ-வர்த்தகம் மொத்த விற்பனை அல்லது தொகை வடிவிலான கொள்வனவுகளுடன் தொடர்புபடுகின்றன.

3. **வாடிக்கையாளர்களுக்கு வாடிக்கையாளர் வர்த்தகம்** (C2C): தனிப்பட்டவர்கள் சாதனங்களை அல்லது சேவைகளை மற்றைய தனிப்பட்டவர்களுக்கு தளம்களினூடாக விற்பனை செய்கின்றனர். உ-ம்: யுசைடிடெ

4. **சமூக இ-வர்த்தகம்** (C2C): சமூக ஈ-வர்த்தகம் சமூக வலைத்தளம்களினாலும் இணைய வழி சமூக உறவுமுறைகளினாலும் இயலுமைப்படுத்தப்படுகின்றன. உதாரணம்: முகநூல் சந்தையிடங்கள்

5. **எம்-வர்த்தகம்:** இணையவழி கொடுக்கல் வாங்கல்களை இயலுமைப்படுத்துவதற்காக செல்லிட தொலைபேசி சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

6. **உள்ளூர் இ-வர்த்தகம்:** இ-வர்த்தகம் புவியியல் அமைவிடத்தினை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகளின் மீது கவனம் செலுத்துகிறது. உதாரணம்: ஊபர், பிக்மி

## இணையவழி பொருள் கொள்வனவு

இ-வர்த்தகத்தின் ஒரு பகுதியாவுள்ள இணையவழி பொருட்களின் வாங்கல்விற்றல் இணைய வழியில் உற்பத்திகள் அல்லது சேவைகளை வெளிப்படையாக தேடுவதுடனும் டிஜிட்டல் தளங்களை பயன்படுத்துவதுடனும் தொடர்புபடுகிறது.

## அடிப்படை மூலங்கள் இணையவழி வாங்கல் விற்றல்

**உற்பத்திகளின் பட்டியலிடல்**
உற்பத்திகளின் விபரங்கள் விவரணங்கள், பிம்பத் தோற்றம் மாதிரிக் குறிப்புக்கள் மற்றும் விலைகள்

**வாங்கல்விற்றலுக்கு பயன்படும் தள்ளுவண்டிகள்**
பயன்படுத்துனர்கள் அவர்கள் வாங்கும் பொருட்கள் கொண்டுசெல்வதற்கும் வெளியேறும் இடத்திற்கு கொண்டு செல்வதற்கும் உதவுகின்ற மெய்நிகர் தள்ளு வண்டிகள்

**பயன்பெறுனர் கணக்குகள்**
கணக்குகளை உருவாக்குவதற்கான பயன்படுத்துனர்களுக்குள்ள தேர்வுகளை கண்டறியும் ஒழுங்குகள் மற்றும் கொள்வனவு வரலாறு

**தேர்வுசெய்தல் மற்றும் வடிகட்டும் தேர்வுகள்**
வகைகள், விலைவீச்சுக்கள் மற்றும் ஏனைய முன்னுரிமைகளின் அடிப்படையில் உற்பத்திகளை கண்டறிய உதவும் கருவிகள்

**கொடுப்பனவு நுழைவு வழிகள்**
கடன்அட்டை ∴ பற்று அட்டைகள் டிஜிட்டல் வலட்டுகள் ஊடான கொடுப்பனவுகள் அல்லது வங்கி மாற்றல்கள் ஊடான கொடுப்பனவு செய்முறைகளை மேற்கொள்ளும் பாதுகாப்புத் தளம்பல்கள்

**ஒழுங்கினைக் கண்டறிதல்**
விநியோகத்திற்கு அனுப்புகின்றதிலிருந்து கட்டளைகளின் நிலையினைக் கண்காணிக்கும் இயலாற்றல்

## இணையவழி வாங்கல் விற்றலில் வாடிக்கையாளர் பின்பற்ற வேண்டிய படிமுறைகள்

**படிமுறை 1: உலாவுதல் மற்றும் தேடுதல் -** இ-வர்த்தகப் பக்கத்திலுள்ள பல்வேறு வகைகளினூடாக விசைப்பலகை அல்லது உலாவுதலைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்கள் பொருட்களை தேட முடியும். தேடல் வடிகட்டிகள் வர்த்தக நாமம், விலை அல்லது உற்பத்தி பற்றிய விபரங்களின் அடிப்படையில் பெறுபேறுகளை சுருக்குவதன் மூலம் உதவமுடியும்.

**படிமுறை 2: உற்பத்தியை தெரிவுசெய்தல் -** உற்பத்தியை தெரிவு செய்தும் வாடிக்கையாளர் விவரணங்கள், பிம்பத் தோற்றம் மற்றும் பயன்படுத்துனர் அபிப்பிராயம் என்பன தொடர்பான விபரங்களை பார்வையிடமுடியும். அவர்கள் தமது தேவைகளுக்குப் பொருத்தமானவாறு எது சிறந்தது என்பதனை தீர்மானிப்பதற்கு தோற்றம், விலைகள் மற்றும் அபிப்பிராயங்களை ஆராய்ந்து அதன் அடிப்படையில் உற்பத்திகளின் வேறுபாடுகளை ஒப்பிட்டுப் பார்க்க முடியும்..

**படிமுறை 3: தள்ளு வண்டியில் ஏற்றி வெளியே கொண்டு செல்லல் -** உற்பத்தியைத் தெரிவு செய்த பின்னர் வடிக்கையாளர்கள் தமது மெய்நிகர் கொள்வனவில் இவற்றையும் சேர்த்துக் கொண்டு தள்ளுவண்டியில் ஏற்றியபின் தொடர்ந்தும் கொள்வனவு செய்யலாம் அல்லது வெளியேறலாம்.

**படிமுறை 4: கொடுப்பனவுகளை செய்தல்-** வாடிக்கையாளர்கள் பொருட்களைத் தெரிவு செய்தபின்னர் மெய்நிகர் கொள்வனவு தள்ளு வண்டியில் பொருட்களை ஏற்றிக்கொண்டு வெளியேறலாம் ˙ அவர்கள் கப்பற்படுத்தல் விபரங்களை வழங்கவேண்டும் என்பதுடன் கொடுப்பனவு மாதிரியினையும் தெரிவுசெய்தல் வேண்டும். இ-வர்த்தக தளம் கடன்அட்டை ∴ பற்று அட்டைகள், வங்கி மாற்றல்கள் மற்றும் டிஜிட்டல் வலட்டுக்கள் போன்ற பல்வேறுபட்ட கொடுப்பனவுத் தேர்வுகளை வழங்குகிறது.

**படிமுறை 5: கொள்வனவு கட்டளைகளை உறுதிப்படுத்தல் மற்றும் விநியோகம் -** கொடுப்பனவின் பின்னர் வாடிக்கையாளர் விநியோகம் எதிர்பார்க்கப்படும் நேரம் பற்றிய விபரங்களுடன் கொள்வனவுக் கட்டளையினை பெறுவர். அவர்கள் அவர்களது வாசனைப்பொருட்கள் அடைவும் வரை தளமூடாக கட்டளையின் நிலையினை பின் தொடரமுடியும்.

## இ-வர்த்தகத்தில் டிஜிட்டல் கொடுப்பனவுத் தேர்வுகள்

னுபைவையட ியலஅநவௌ யசந நளளநவெயைட வழ வாந ந-உழஅஅநசஉந நஉழளலளவநஅஇ ிசழஎனைபைெ ளநஉரசந யனெ நககைஉநைவெ வசயளெயஉவழைெ உழஅிடநவழைெ அநவாழனள.

### டிஜிட்டல் கொடுப்பனவுத் தேர்வுகள்



**கடன் மற்றும் பற்று அட்டைகள்**
விசா, மாஸ்டர் அட்டை மற்றும் அமெக்ஸ் அட்டைகள் தளம்களிடையே பரந்த அளவிற்கு ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.



**வங்கி மாற்றல்கள்**
வங்கியாளர்களிடமிருந்து விற்பனையாளர் கணக்கிற்கு நேரடியாக மாற்றுதல்



**டிஜிட்டல் வலட்டுக்கள்**
பிறிமி, ஈஷிகாஷ் மற்றும் ஐபே போன்ற தளம்கள் பணத்தினை டிஜிட்டல் முறையில் சேமிக்க பயன்படுத்துதலை அனுமதிப்பதுடன் கொடுக்கல் வாங்கல்களையும் சுலபமாக்குகிறது.



**விநியோகம் தொடர்பான**
கியூஆர் குறியீடு ஸ்கான் செய்யக்கூடிய குறியீடு உறுதிப்படுத்தலை கண்டறியும் செய்முறை தொடர்புகளற்ற உறுதிப்படுத்தல் மற்றும் விநியோக தகவல்களை வழங்குதல் என்பன பற்றி ஒழுங்குமுறைப்படுத்தப் பயன்படுகிறது.

## பாதுகாப்பான இணையவழி பொருட் கொள்வனவிற்கான 7 துப்புக்கள்

இணையவழி பொருட் கொள்ளவனவுகள் வசதியையும் பல்வேறு வகையான பொருட்களையும் வழங்குகின்ற வேளையில் மோசடிகளைத் தவிர்ப்பதற்கும் பாதுகாப்பான கொள்வன்வு அனுபவங்களை உறுதிப்படுத்துவதற்கும் பாதுகாப்பான நடைமுறைகளைப் பின்பற்றுவது மிக முக்கியமானதாகும்.

1. **நம்பிக்கை மிகுந்த வெப்தளம்களிருந்தான கொள்வனவு:** சிறந்த அபிப்பிராயங்களுடன் கூடிய புகழ்பெற்ற தளம்களை தெரிவுசெய்தல் மற்றும் பாதுகாப்பான கொடுப்பனவுத் தேர்வுகள்

2. **ருசுடு இல் உள்ள ர்வுவீளு இனைப் பரிசோதித்தல்:** தரவுகளைப் பாதுகாப்பதற்காக ர்வுவீளு இனை பயன்படுத்தும் தளத்தினை உறுதிப்படுத்தல் (ருசுடு இற்கு முன்பாக ஆமைப் பூட்டு அடையாளம்)

3. **வலுவான கடவுச் சொற்களைப் பயன்படுத்துதல்:** அதிகாரமற்றவர்கள் அணுகுவதனை தடுப்பதற்காக உங்கள் இ-வர்த்தக கணக்குகளுக்காக வலுவான, தனித்துவமான கடவுச் சொற்களைப் பயன்படுத்துதல்.

4. **ஒரு தடவைக்கான கடவுச் சொற்களுடன் கூடிய கொடுப்பனவுகளைச் சரிபார்த்தல்:** கொடுப்பனவின் போது உங்கள் பதிவு செய்யப்பட்ட செல்லிடத் தொலைபேசிக்கு அல்லது மின்னஞ்சலுக்கு அனுப்பப்பட்ட ஒரு தடவைக்கான கடவுச் சொல் கொடுக்கல்வாங்கல்களை உறுதிப்படுத்துவதற்காக பதிவுசெய்யப்படுவதுடன் அதிகாரமளிக்கப்படாத அணுகுதல்களையும் தடைசெய்கிறது.

5. **பகிரங்க வைபை தவிர்த்தல்:** பாதுகாக்கப்படாத பகிரங்க வைபை வலையமைப்பு ஊடறுப்பினை மேற்கொள்ளக்கூடிய தன்மையினை கொண்டுள்ளமையினால் அவற்றினை கொள்வனவு செய்யவேண்டாம்.

6. **ஏமாற்று நடவடிக்கைகளை அறிந்திருத்தல்:** சந்தேகத்திற்குரிய இணைப்புக்களை கிளிக் செய்ய வேண்டாம் அல்லது தனிப்பட்ட தகவல்களை மின்னஞ்சல் அல்லது உரையில் பகிர்ந்து கொள்ளவேண்டாம்.

7. **பொருட்களைத் திருப்பிக்கொடுத்தல் மற்றும் மீளளிப்பினை பெறும் கொள்வனவுகளை வாசித்தல்:** கொள்வனவினை செய்ய முன்னர் திருப்பிக்கொடுத்தல், மாற்றுதல், மீளளிப்பு தொடர்பான தளம்களின் கொள்கைகளை புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

# 5.4. டிஜிட்டல் வரவுசெலவுத் திட்டப்படுத்தல் கருவிகள்

நிதியியல் நலனோம்புகைக்கு காத்திரமான தனிப்பட்ட நிதி முகாமைத்துவம் இன்றியமையாததாகும். டிஜிட்டல் வரவு செலவுத்திட்டப்படுத்தல் கருவிகள், வரவுசெலவுத் திட்டங்களைத் தொடர்தல், செலவுகளை கண்காணித்தல் மற்றும் நிதியியல் இலக்குகளை அடைதல் என்பனவற்றிற்கு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறையொன்றினை வழங்குகின்றன.

தனிப்பட்ட வரவுசெலவுத் திட்டப்படுத்தல் கருவிகள் மீதான மேலதிக தகவல்களுக்கு வாந டீரனபநவவைெ சுநளழரசஉநள யவ வாந ஊநவெசயட டீயமெ ழக ளுசை டுயமெய. வினைப் பார்க்கவும்.

### டிஜிட்டல் வரவுசெலவுத் திட்டப்படுத்தல் கருவிகளின் அனுகூலங்கள்

- வீடமைப்பு, மளிகைப்பொருட்கள், பொழுதுபோக்குகள் மற்றும் சேமிப்புக்கள் போன்ற செலவிடல் வகைகளிடையே வருமானத்தினை ஒதுக்குதல்
- நிதியியல் ஒழுக்கத்தினை உறுதிப்படுத்தி அளவுக்கதிகமான செலவைத் தவிர்த்தல்

### டிஜிட்டல் வரவுசெலவுத் திட்டப்படுத்தல் கருவிகள்

| பண்பு | விவரணம் |
|---|---|
| செலவினங்களைக் கண்டறிதல் | தன்னியக்கமான வகைப்படுத்தல் அதேநேர இற்றைப்படுத்தலுக்கு அனுப்புதல் மற்றும் அறிக்கைகளை வழங்குதல் |
| நிதியியல் இலக்குகளை நிர்ணயித்தல் | இலக்குகளை உருவாக்குதல், தன்னியக்கப்படுத்தப்பட்ட சேமிப்புக்கள்,மற்றும் முன்னேற்றங்களை கண்கூடாகப் பார்ப்பதற்கும் ஆதரவளித்தல். |
| சேமிப்பு ஒதுக்குகள் | அவசரகாலத் தேவைகள் மற்றும் இலக்குகளுக்காக காத்திரமான விதத்தில் நிதிகளை ஒதுக்குவதற்கு உதவியளித்தல் |

## டிஜிட்டல் வரவுசெலவுத் திட்டப்படுத்தல் கருவிகளைத் திறன் சார்ந்தமுறையில் பயன்படுத்துவதற்கான 5 உத்திகள்

1. **யதார்த்த பூர்வமான வரவுசெலவுத் திட்டத்தினைத் தயாரித்தல்:** உங்கள் வரவுசெலவுத்திட்டம் உங்கள் வருமானத்தினையும் சாத்தியமான செலவினங்களையும் பிரதிபலிப்பதனை உறுதிப்படுத்துங்கள்.

2. **தன்னியக்கமான சேமிப்புக்கள்:** சேமிப்பு இலக்குகளை நோக்கி நிதி தொடர்ச்சியாக ஒதுக்கப்படும் விதத்தில் வரவு செலவுத் திட்டத்திலுள்ள கருவிகளின் பண்பினை தன்னியக்கமாக பயன்படுத்துங்கள்.

3. **அறிக்கைகளை கிரமமாக மீளாய்வு செய்தல்:** உள்ளக விடயங்களைப் பகுப்பாய்வு செய்து கருவிகள் பற்றி அறிக்கையிடுவது உங்கள் செலவிடல் பழக்க வழக்கங்களை புரிந்துகொள்ளச் செய்யும்.

4. **செலவினங்களைத் துல்லியமாக வகைப்படுத்தல்:** உங்கள் பணம் எங்கே செல்கிறது என்பதனை விளங்கிக் கொள்வதற்கு செலவினங்களை சரியான முறையில் வகைப்படுத்தல் வேண்டும்.

5. **வாழ்க்கை மாற்றங்களுக்கு வரவுசெலவுத் திட்டத்தினை இற்றைப்படுத்தல்:** வருமானம் அல்லது செலவில் கணிசமான மாற்றங்கள் நிகழும்போது உங்கள் வரவு செலவுத்திட்டத்தினை சரியான முறையில் சீராக்கிக் கொள்ளுங்கள்.

**டிஜிட்டல் சாதனங்கள் உங்களை நிதியியல் ரீதியில் திறன் படைத்தவர்களாகுவதற்கான 4 வழிகள்**

### 1. உங்கள் வரவு செயற்றிட்டத்தினை இலகுவாக தயாரிப்பதற்கு

செல்லிடத் தொலைபேசி செயலி உங்கள் கடன் அட்டைகள் மற்றும் வங்கிக் கணக்குகளை தொடர்புபடுத்துகின்றது. உங்கள் கொடுக்கல்வாங்கல்களை பதிவிறக்கம் செய்து அவற்றை தொகுதிகளாகப் பிரித்து வரவுசெலவுத் திட்ட வகைகளாக்குகிறது. அத்தகைய பிரயோகங்களும் உங்கள் நிதிகளை முகாமைப்படுத்துவதில் உங்களுக்கு உதவக்கூடிய கருவிகளைக் கொண்டுள்ளன.

### 2. கடன்களை விரைவாக செலுத்துவதற்கு

நாளாந்தம் சிறிய தொகைகளை சேமித்து அதன் மூலம் மதாந்தம் மேதிகக் கொடுப்பனவுகளை செய்வதன் மூலம் கடன்களிலிருந்து நீங்கள் விரைவாக மீட்பதற்கு உங்களுக்கு உதவும் விதத்தில் சில பிரயோகங்கள் வடிவமைக்கப்படுகின்றன. இந்த பிரயோகங்கள் உங்கள் சேமிப்பு கணக்குகளுடன் இணைக்கப்படுகின்றன. உதாரணமாக, உங்கள் கடன் அட்டைக்கு சேரவேண்டிய தொகையினை அல்லது தனிப்பட்ட கடனைச் செலுத்துதல்.

### 3. மீண்டெழும் செலவினங்களைக் குறைத்தல்

குறிப்பிட்ட பிரயோகங்கள் மீண்டெழும் செலவினங்களைக் குறைப்பதற்காக உங்களுக்கு உதவுவதற்காக வடிவமைக்கப்பட்ட பண்புகளுடன்கூடிய வரவுசெலவுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. உங்கள் வங்கியுடன் இணைக்கப்பட்ட பின்னர் உங்கள கணக்குகளை பரிசோதியுங்கள் செயல் கொடுக்கல்வாங்கல்களையும் மீதிகளையும் பதிவிறக்கம் செய்து உங்கள் செலவிடல்களை கண்டறியச் செய்வது செலவிடல் தொடர்பான உள்ளக விடயங்களை வழங்குவதன் மூலம் வரவுசெலவுத் திட்டத்தினை உருவாக்குவதற்கான தேர்வினை வழங்குகிறது.

### 4. தன்னியக்க முறையில் முதலீடு செய்வதற்கு உங்களை ஊக்குவித்தல்

முதலீடு செய்வதற்கு உங்களை அனுமதிக்கக்கூடிய புகழ்பெற்ற செயலியை அல்லது தளத்தினை தெரிவுசெய்யுங்கள். இவை கொழும்பு பங்குப் பரிவர்த்தனை போன்ற தரகு செயலிகளாகவும் இருக்கலாம். இத்தளம்கள் பங்குகள், முறிகள், சமவாய நிதியங்கள், ஊழியர் நம்பிக்கை நிதியம், உண்மைச் சொத்து அல்லது கிறிப்ரோ நாணயம் போன்ற விடயங்களில் உங்கள் தொலைபேசியிலிருந்து அல்லது கணனியிலிருந்து நேரடியாக முதலீடு செய்ய வசதியளிக்கிறது.

அத்தியாயம் 6

# நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு

## 6.1 அறிமுகம்

### கற்றலின் பெறுபேறுகள்

- நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கோட்பாட்டினை விளக்கிக் கொள்ளுதல்
- நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பின் முக்கியத்துவத்தினை அடையாளம் காணுதல்
- இலங்கையில் நிதியில் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பினைக் கற்றல்
- நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு தொடர்பில் நிதியியல் சேவை வழங்குநர்களின் பொறுப்புக்களைத் தெரிந்துகொள்ளுதல்
- நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு பற்றிய வாடிக்கையாளரின் உரிமை மற்றும் பொறுப்புக்கள் பற்றி தெரிந்து கொள்ளுதல்.

**நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு என்றால் என்ன?**

நிதியியல் சேவை வழங்குநர்களினால் வழங்கப்படுகின்ற நிதியில் சாதனங்கள் மற்றும் சேவைகளை இலகுவாக அணுகக்கூடியதாக இருப்பது உங்கள் வாழ்க்கையை சௌகரியமாக்கியிருக்கிறது. அத்தகைய நிதியியல் சாதனங்களையும் சேவைகளையும் தீங்குகள், நியாயமற்ற மற்றும் பொறுப்புக்களற்ற வியாபார நடத்தைகளேதுமின்றி சௌகரியமாக பயன்படுத்தவும். அனுபவிக்கவும் கூடிய இயலாற்றலை அறிந்திருப்பது மிக இன்றியமையாததாகும்.

## 6.2 நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு

நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு கட்டமைப்பென்பது நிதியியல் சேவை வழங்குநர்களினால் வழங்கப்படுகின்ற நிதியியல் சாதனங்கள் மற்றும் சேவைகளுடன் எதிர்வினையாற்றும் போது நிதியியல் வாடிக்கையாளர்களின் உரிமைகளையும் நலவுரித்துக்களையும் பாதுகாப்பதற்காக வடிவமைக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் மற்றும் நடவடிக்கைகளைக் குறிக்கிறது.

நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு கட்டமைப்பின் பிரதான இலக்கு யாதெனில் நிதியியல் வாடிக்கையாளர்கள் நியாயமான, வெளிப்படையான மற்றும் பாதுகாப்பான நிதியியல் சேவைகளை அணுகக்கூடியதாக இருப்பதனை உறுதிப்படுத்துகின்ற வேளையில் அவர்களை மோசடி, பாரபட்சம், சுரண்டல், நியாயமற்ற மற்றும் பொறுப்பற்ற வியாபார நடத்தைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வதேயாகும்.

அனில் அவரது பழைய அலுவலக நண்பர்களான சரத், கமால் மற்றும் சமன் ஆகியோரை உணவகமொன்றில் சந்தித்துக் கொள்கிறார்.









மேற்குறிப்பிட்ட கலந்துரையாடல், குருட்டுத்தனமாக கடன் உடன்படிக்கைகளில் கையொப்பமிடும் இடர்நேர்வுகளையும் உங்கள் அனைத்து செல்வங்களும் அழிந்துபோகும் என்பதனையும் அழுத்தமாக குறிப்பிடுகின்றது. ஆகவே நிதியியல் வாடிக்கையாளர்களுக்கு இலங்கையின் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு கட்டமைப்பு பற்றி அறிவூட்டுவது மிக முக்கியமானதொன்றாகும்.

## நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பின் முக்கியத்துவம்

நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பின் முக்கியத்துவம் மிகப்பரந்தது என்பதுடன் தனிப்பட்ட நிதியியல் வாடிக்கையாளர்களுக்கும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கும் மிக இன்றியமையாததுமாகும். நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு ஏன் இன்றியமையாதது என்பதற்கு இங்கே முக்கியமான சில காரணிகள் தரப்படுகின்றன.

- நிதியியல் வாடிக்கையாளர்கள் நியாயமாக நடத்தப்படுவதனை உறுதிப்படுத்துகிறது: நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு, நிதியியல் நிறுவனங்கள் நிதியியல் வாடிக்கையாளர்களை நியாயமாக நடத்துவதனை உறுதிப்படுத்துகிறது.

- நிதியியல் சுரண்டலைத் தடுக்கிறது: நிதியியல் சாதனங்களும் சேவைகளும் சிக்கல்வாய்ந்தவைகளாக இருக்கக்கூடும். போதுமான பாதுகாப்பு இல்லாவிடின் பொருத்தமற்ற நிதியியல் சாதனங்களினாலும் சேவைகளினாலும் பாதிக்கப்படக்கூடும்.

- பிணக்குகளைத் தீர்ப்பதற்கு வினைத்திறன்மிக்க தீர்வுகளை வழங்கல்: வாடிக்கையாளர்களுக்கும் நிதியில் நிறுவனங்களுக்குமிடையில் பிணக்குகள் ஏற்படுமிடத்து, நியாயமானதும் வினைத்திறன்மிக்கதுமான தீர்வுக்கு நுகர்வோர் பொறிமுறை வழிவகைகளை வழங்கும்.

- வாடிக்கையாளர் இரகசியத் தன்மை மற்றும் தரவுப்பாதுகாப்பு: நிதியியல் நிறுவனங்கள், நிதியியல் வாடிக்கையாளர்களின் உணர்வுபூர்வமான தனிப்பட்ட மற்றும் நிதியியல் தகவல்களைக் கையாளுவதனால் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புச் சட்டங்கள் அத்தகைய தரவுகளைத் திருட்டு, தவறான பயன்பாடு அல்லது அதிகாரமளிக்கப்படாதவர்கள் அதனை அணுகுவதனைத் தவிர்க்கும் விதத்தில் அவற்றைப் பாதுகாப்பதற்கு வலுவான பாதுகாப்பு வழிமுறைகளை நடைமுறைக்கிடுமாறு நிதியியல் நிறுவனங்களை கேட்டுக்கொள்கின்றன.

- நிதியியல் அறிவினையும் கல்வினையும் ஊக்குவித்தல் : நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு வாடிக்கையாளர்களிடையே நிதியியல் அறிவினை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. நிதியியல் சாதனங்களின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள், வட்டிவீதங்கள், கட்டணங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றிய விழிப்புணர்வினை பேணி வளர்ப்பதன் மூலம் வாடிக்கையாளர்கள் தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இயலுமைப்படுத்துகின்றனர்.

- நிதியியல் வசதிக்குட்படுத்தலை மேம்படுத்தல்: நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு, குறைந்த வருவாய் பெறும் தனிப்பட்டவர்கள், பராயமடையாதோர், வயது முதிர்ந்தவர்கள் போன்ற வசதிகளற்ற மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடித்தொகையினர் தாங்கிக் கொள்ளக்கூடிய பொருத்தமான நிதியியல் சாதனங்களை பெற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்துகிறது.

- நிதியியல் முறைமையில் நம்பகத் தன்மையினை கட்டியெழுப்புதல்: நிதியியல் வாடிக்கையாளர்கள் தமது உரிமைகளும் நலம்புரித்துக்களும் பாதுகாக்கப்பட்டு உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளன என்பதனை உணரும்போது அவர்கள் கூடுதலான நம்பகத்தன்மையினை பெறுவதுடன் நிதியியல் முறைமையிலும் பங்கேற்பர்.

- நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் ஆதரவளித்தல்: வாடிக்கையாளர்கள் அவர்களது நிதியியல் வணிகத்தில் நம்பிக்கை கொள்ளும்போது அவர்கள் சேமிப்பு, முதலீடு மற்றும் செலவிடலில் கூடுதலானளவிற்கு ஈடுபடக்கூடுமென்பதனால் அவையெல்லாம் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டும்.

நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதுடன் உறுதித்தன்மை, நியாயமான தன்மை மற்றும் நிதியியல் வசதிக்குட்படுத்தல் முறைமை என்பனவற்றின் அடிப்படைக் கூறாகவும் கருதப்படுகிறது. குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளும் கட்டமைப்புக்களும் நாட்டிற்கு நாடு வேறுபடுவதுடன் நிதியியல்

வாடிக்கையாளர்கள் நியாயமான முறையில் நடத்தப்படுவதனையும் பாதுகாப்பான, வெளிப்படையான மற்றும் சமத்துவமான முறையில் நிதியியல் சேவைகளை அணுகக்கூடியதாக இருப்பதனையும் உறுதிப்படுத்துகின்ற விதத்தில் அநேக சர்வதேச நியாயாதிக்கங்களினால் உலகளாவிய நியமங்கள் உறுதிப்படுத்தப்படுகின்றன.

முக்கியமாக, உலக வங்கி நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிப்பதற்கும் பொருளாதார அபிவிருத்தியை ஆதரவளிப்பதற்கும் தீங்குபயக்கும் நிதியியல் சாதனங்கள் மற்றும் சேவைகளிலிருந்து வாடிக்கையாளர்களைப் பாதுகாப்பதற்குமான இன்றியமையாத மூலமொன்றாக நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பினை எடுத்துக்காட்டுகின்றது. இது நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பிற்கு சிறந்த நடைமுறைகளை அபிவிருத்தி செய்திருக்கிறது. இது நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பின் கோட்பாடுகள் தொடர்பில் கொள்கை வகுப்பாளர்களுக்கும் நிதியியல் ஒழுங்குமுறைப்படுப்படுத்துனர்களுக்கும் வழிகாட்டும் உலகளாவிய கட்டமைப்பினை வழங்குகின்றது.

இலங்கையில் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு, நம்பகத் தன்மை, வெளிப்படைத் தன்மை மற்றும் நியாயமான தன்மை என்பனவற்றை ஊக்குவிப்பதற்கான இன்றியமையாத மூலமொன்றாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டுகளில் இலங்கை உலகளாவிய சிறந்த நடைமுறைகளுடன் இசைந்து செல்கின்ற விதத்தில் பல்வேறுபட்ட பணிப்புரைகள் மற்றும் ஒழுங்குவிதிகளூடாக நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பினை வலுப்படுத்துவது தொடர்பில் முன்னேற்றங்களை அடைந்தவேளையில் உள்நாட்டுத் தேவைகளும் சவால்களும் கட்டுப்படுத்தப்பட்டன.

**நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட முக்கிய பணிப்புரைகளையும் ஒழுங்குவிதிகளையும் பின்வருமாறு பட்டியலிடலாம்:**

- 2025ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள்
- 2011ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க வங்கித்தொழில் (உரிமம்பெற்ற வங்கிகளின் வாடிக்கையாளர் சாசனம்) சட்டப் பணிப்புரை.
- 2018 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டப் (நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு கட்டமைப்பு) பணிப்புரை.
- 2018 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதிக்குத்தகைக்குவிடல் சட்டப் (நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு கட்டமைப்பு) பணிப்புரை
- 2022ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க வங்கித் தொழில் சட்ட பணிப்புரைகள்: (வாடிக்கையாளர் சாசனத்திற்கான பின்னிணைப்பு: - விசேட தேவைகளையுடைய வாடிக்கையாளர்கள் வங்கித்தொழில் பணிகளை அணுகுவதற்கான சாசனம்

நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புத் தொடர்பான மேற்குறிப்பிட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் பணிப்புரைகளின் படி, இலங்கை மத்திய வங்கி நிதியியல் வாடிக்கையாளர்களைப் பாதுகாப்பதற்காக விசேடமாக 2023இல் அனைத்துமுள்ளடக்கிய நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் 2023இன் 1ஆம் இலக்க நிதியியல் வாடிக்கையாளர் ஒழுங்குவிதிகளையும் அபிவிருத்தி செய்வதற்கான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் சட்டக் கட்டமைப்பினை நிறுவுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்தது.

## நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள்

இந்நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளின் கீழ் நிதியியல் பணிகளை வழங்குபவர்களுடன் எதிர்வினையாற்றும் பொழுது உங்கள் நலம்புரித்துக்களை பாதுகாப்பதற்கும் உதவுகின்ற பல்வேறுபட்ட பாதுகாப்புக்களுக்கு நீங்கள் தகைமையுடைவர்களாகிறீர்கள்.

### ▶ நான் ஒரு நிதியியல் வாடிக்கையாளரா?

அ. தற்பொழுது நிதியியல் சாதனங்களையும் சேவைகளையும் பயன்படுத்துபவராக இருப்பின்.

ஆ. நிதியியல் சாதனங்களையும் சேவைகளையும் பயன்படுத்தியவராக இருப்பின்

இ. நிதியியல் சேவை வழங்குநர்களினால் வழங்கப்படும் நிதியியல் சாதனங்களையும் சேவைகளையும் பயன்படுத்த எதிர்பார்ப்பவராயின் நீங்கள் ஒரு நிதியியல் வாடிக்கையாளரே.

### ▶ நிதியியல் சேவையினை வழங்குவோர் என்போர் யார்?

நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளின் படி, பின்வரும் நிதியியல் நிறுவனங்கள் நிதியியல் பணிகளை வழங்குபவர்களாக கருதப்படுகின்றன.

- உரிமம்பெற்ற வங்கிகள்
- உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்
- சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகள்
- உரிமம்பெற்ற நுண்பாக நிதிக்கம்பனிகள்
- அதிகாரமளிக்கப்பட்ட முதனிலை வணிகர்கள்
- அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்கள்
- கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளின் பங்கேற்பாளர்கள்

### ▶ நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு பற்றிய நிதியியல் சேவைகளை வழங்குவோரின் பொறுப்புக்கள்

நிதியியல் வாடிக்கையாளர் நியாயமான முறையில் நடத்தப்படுகின்றனர் வெளிப்படையான தகவல்களை அணுகக்கூடியவர்களாக இருக்கின்றனர் மற்றும் நிதியியல் சேவைகள் துறையிலுள்ள தீங்குகள் மற்றும் ஏனைய இடர்நேர்வுகளிலிருந்து பாதுகாக்கப்படுகின்றனர் என்பதனை உறுதிப்படுத்துவது நிதியியல் சேவை வழங்குநர்களுக்கு மிக இன்றியமையாததாகும். மேலும், அவர்களது பொறுப்புக்கள் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குகளின் கோட்பாடுகளுடன் இணைந்திருக்கின்றன. நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு பற்றிய நிதியியல் சேவை வழங்குவோரின் பிரதான கடமைகள் கீழே தரப்படுகின்றன.

- நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கொள்கைகளையும் நடைமுறைகளையும் கடைப்பிடித்தல்
- ஆரம்ப நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கு மூத்த அலுவலரை நியமித்தல்
- நிறுவனத்திற்குள்ளே நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பினை காத்திரமான விதத்தில் நடைமுறைக்கிடப்படுவதனை உறுதிப்படுத்தல்.
- அனைத்து அலுவலர்களும் எப்பொழுது நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு பற்றி தெரிந்திருப்பதனையும் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதனையும் உறுதிப்படுத்தல்.

### ▶ நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளின் முக்கிய கோட்பாடுகள்

நிதியியல் வாடிக்கையாளர்கள் நியாயமற்ற விதத்தில் நடப்படுவதனையும் வெளிப்படையானதும் புரிந்து கொள்ளக்கூடியதுமான நிதியியல் சாதனங்களை அணுகக்கூடியதாக இருப்பதனையும் தீங்குகளிலிருந்து பாதுகாக்கப்படுவதனையும் உறுதிப்படுத்துகின்ற வீதத்தில் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளின் முக்கிய கோட்பாடுகளை வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. இக்கோட்பாடுகள் இலங்கையிலுள்ள நிதியியல் சேவைதுறையின் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு கட்டமைப்பின் உருவாக்கம் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கான அடிப்படையாக செயற்படுகின்றன. குறிப்பிட்ட ஒழுங்குவிதிகள் நியாயாதிக்கங்களுக்கேற்ப வேறுபடுகின்ற வேளையில், நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கோட்பாடுகளை இயற்றிய நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள், முக்கியமாக பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

- நியாயமான முறையில் நடத்துதல் மற்றும் பொறுப்புமிக்க வியாபார நடத்தை
- வெளிப்படுத்துகை மற்றும் வெளிப்படைத் தன்மை

- முறைப்பாடுகளைக் கையாளுதல் மற்றும் நிவாரணப் பொறிமுறை
- நிதியியல் வாடிக்கையாளர்களின் சொத்துக்களையும் தகவல்களையும் பாதுகாத்தல்

நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக் கோட்பாடுகளை வாடிக்கையாளர் உரிமைகளாக நோக்கமுடியும். இக்கோட்பாடுகள், இலங்கையிலுள்ள நிதியியல் முறைமைக்குள் வாடிக்கையாளரின் உரிமைகளை நிலைநிறுத்தவும் பாதுகாப்பதற்குமாக வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. இலங்கை மத்திய வங்கி நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தும் போது, அவை இலங்கையிலுள்ள நிதியியல் சேவைகளை வழங்குவோரினால் முன்வைக்கப்படும் நிதியியல் சாதனங்களையும் சேவைகளையும் அணுகி பயன்படுத்தும் போது நீங்கள் குறிப்பிட்ட உரிமைகளை கொண்டிருப்பதனை அங்கீகரிக்கின்றன.

நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளின் கீழ் உங்கள் நிதியியல் தேவைகளுக்காக நிதியியல் சேவை வழங்குபவருடன் எதிர்வினையாற்றும் போது உங்கள் நலம்புரித்துக்களைப் பாதுகாப்பதற்கும் உதவுகின்ற பல்வேறு உரிமைகளுக்கு நீங்கள் தகைமையுடையவர்களாக இருக்கின்றீர்கள். முக்கியமான பாதுகாப்புக்களாவன:

### 1. நியாயமாக நடத்துதல் மற்றும் பொறுப்புமிக்க வியாபார நடத்தை

நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குகள், நிதியியல் வாடிக்கையாளர்களின் வருமானம், உடலியல் இயலாற்றல், பால் அல்லது ஏதேனும் சமூக அந்தஸ்து என்பனவற்றை கருத்திற்கொள்ளாது சமமானதும் நியாயமானதுமான நிதியியல் சேவைகளை பெறுவதற்கான உரிமைகளை அவர்கள் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்துகிறது.

**இதற்கமைய நீங்கள் பின்வருவனவற்றிற்கு தகைமையுடையவர்களாக இருப்பீர்கள்.**

- சாதனங்கள் அல்லது சேவைகளின் வட்டிவீதம், கட்டணம், விதிப்புக்கள் அல்லது நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் மாற்றங்களை செய்வதற்கு முன்னர் அறிவித்தல்களைப் பெறுவதற்கு
- ஒப்பந்தங்களுக்கு மாற்றங்களை செய்யும்பொழுது தகவல்களைப் பெறுவதற்கு
- ஒப்பந்தங்களுக்கு நியாயமற்ற நியதிகளை சேகரிப்பதிலிருந்து நிதியியல் பணி வழங்குவோரைத் தடுப்பதற்கு அத்துடன்
- சாதனமொன்றினை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் சரியான வழிகாட்டலொன்றினை பெற்றுக்கொள்வதற்கு.

**மேலும் நீங்கள் பின்வருவனவற்றிலிருந்து பாதுகாக்கப்படுகின்றீர்கள்.**

- பகிரங்கமான கள்ளத்தனங்கள்
- தீவிரமான சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரப்படுத்தல்
- தொல்லைப்படுத்தல் அல்லது மிரட்டுதல்.
- நிதியியல் சேவைகளை வழங்குபவர்கள் வாடிக்கையாளர்களின் குடும்ப உறுப்பினர்களை அல்லது அலுவலகத்தினைத் தேவையற்ற விதத்தில் தொடர்பு கொள்ளுதல்.

**குறிப்பாக நீங்கள் மாற்றுத்திறனாளியாக இருக்குமிடத்து நீங்கள் பின்வருவனவற்றிற்கு உரிமை உடையவர்களாவீர்கள்.**

- நிதியியல் பணி வழங்குவோரினால் பேணப்படும் அனைத்து வெப்தளங்களையும் செல்லிடத் தொலைபேசி பிரயோகங்களையும் அணுகுவதற்கு
- அணுகத்தக்க விதத்தில் ஆவணங்களைக் கோருவதற்கு
- கையொப்பமாக பெருவிரல் அடையாளத்தினைப் பயன்படுத்துவதற்கு அத்துடன்
- தனிப்பட்ட உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு'

இதன்படி, இவ்வுரிமைகள், நீங்கள் நிதியியல் சாதனங்கள் மற்றும் சேவைகளை நியாயமான விதத்திலும் வெளிப்படையான முறையிலும் பாதுகாப்பான விதத்திலும் அணுகக்கூடியதாக இருப்பதனை உறுதிப்படுத்துகின்றன.

### 2. வெளிப்படைத்தன்மை மற்றும் வெளிப்படுத்துகை

தகவல்களின் அடிப்படையில் நிதியியல் தீர்மானங்களை எடுப்பதற்கு உங்களுக்கு சரியான தகவல்கள் தேவையென்பதனால் வெளிப்படைத் தன்மை மற்றும் வெளிப்படுத்துகை ஒழுங்குவிதிகள் தொடர்பில் நீங்கள் பின்வரும் உரிமைகளை கொண்டிருக்கின்றீர்கள்.

- சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் போன்ற உங்கள் விருப்பத்திற்குரிய மொழியில் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை
- நீங்கள் செய்து கொண்டுள்ள கடன் உடன்படிக்கையுடன் தொடர்பான வட்டி வீதங்கள், அனைத்து கட்டணங்கள் மற்றும் விதிப்புக்கள் மீதான விபரங்களைப் பெறுவதற்கான உரிமைகள்
- ஒப்பந்தங்களில் நுழைவதற்கு முன்னர் அனைத்து ஒப்பந்தங்கள் தொடர்பான நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மீதுமான தகவல்களை பெறுவதற்கான உரிமை.

**மேலும், நிதியியல் சேவைகளை வழங்குவோர் நிதியியல் சாதனங்கள் மற்றும் சேவைகளுக்கான ஒப்பந்தங்கள்:**

- தெளிவாகவும் புரிந்துகொள்வதற்கு இலகுவானதாகவும் பின்வருவனவற்றை உள்ளடக்கியும் இருத்தல் வேண்டும்.
- வாடிக்கையாளர் உரிமைகளையும் பொறுப்புக்களையும் பற்றிய விளக்கம்'
- அவற்றுடன் இணைந்த ஏதேனும் இடர்நேர்வுகளின் விபரங்கள்'
- வட்டி வீதங்கள், கட்டணங்கள் மற்றும் விதிப்புக்கள் மீதான தகவல்கள்'
- வாடிக்கையாளர்களுக்கு உதவும் விதத்தில் ஒப்பந்தம் பற்றிய தகவல்கள்

நிதியியல் வாடிக்கையாளர் என்ற ரீதியில் நிதியியல் சேவை வழங்குவோரினால் முன்வைக்கப்படும் அனைத்து சாதனங்கள் மற்றும் சேவைகள் பற்றிய தகவல்களைக் கண்டறிவதற்கு நீங்கள் இரண்டு முக்கிய மூலங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- தொடர்பான நிதியியல் சேவை வழங்குபவரின் அலுவல்சார் வெப்தளம்
- முக்கியமான விடயங்களைக் கொண்ட ஆவணம் (இது வாடிக்கையாளர்களுக்கு முக்கியமான தகவல்களை வழங்குவதற்காக ஒவ்வொரு சாதனங்கள் அல்லது சேவைகள் மீது நிதியியல் சேவை வழங்குபவரினால் தயாரிக்கப்படுகின்ற ஆவணமாகும். இது உங்களுக்கு கிடைக்கச் செய்யப்படல் வேண்டும்.

இவ்வெளிப்படுத்துகை மற்றும் வெளிப்படைத்தன்மைகளின் கீழ், நிதியியல் சேவை வழங்குபவர்கள் முன்வைக்கின்ற சாதனங்கள் சேவைகள் தொடர்பான முழுவிபரங்களையும் புரிந்துகொள்ளும் விதத்தில் இலகுவான வழியில் வெளிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுவதனால், இப்பாதுகாப்புக்கள் தகவல்களின் அடிப்படையில் நீங்கள் தீர்மானமெடுப்பதனை இயலச் செய்வதனையும் தெளிவற்ற அல்லது மறைமுகமாக நியதிகளினால் தவறாக வழிநடாத்தப்படாமல் இருப்பதனையும் உறுதிப்படுத்துகின்றது.

### 3. முறைப்பாடுகளைக் கையாளுதல் மற்றும் நிவாரணப் பொறிமுறை

உங்கள் நிதியியல் பணிவழங்குவோர் உங்களுக்கு பிழையானவற்றை செய்திருப்பின் நீங்கள் முறைப்பாடுகளைத் தாக்கல் செய்யவும் நிவாரணங்களை எதிர்பார்க்கவும் முடியும். இது முறைப்பாடுகளையும் மனக்குறைகளையும் கட்டுப்படுத்துவதற்கான தெளிவானதும் வினைத்திறன் மிக்கதுமான அணுகுவசதிகளையும், பிணக்குகளைத் தீர்க்கும் பொறிமுறைக்கு மாற்று ஏற்பாடாக அத்தகைய முறைப்பாடுகளுக்கும் அப்பால் செல்லக்கூடிய தேர்வுகளையும் உள்ளடக்கியிருக்கிறது.

இதன்கீழ்,

- பல்அலைவரிசைகளைப் பயன்படுத்தல் மூலமும்
- கட்டணங்களேது மில்லாமலும்

நிதியியல் சேவைகளை வழங்குவரினால் உங்கள் உரிமைகள்

மீறப்படுவதெற்கெதிராக நீங்கள் செயற்படமுடியும். இதற்கமைய தொடர்பான நிதியியல் சேவை வழங்குபவர்களுக்கு எதிராக முறைப்பாட்டினைச் செய்யமுடியும். அத்துடன் தாக்கல்செய்யப்பட்ட உங்கள் முறைப்பாடுகள் தொடர்பில் நீங்கள்

- உங்கள் முறைப்பாடுகளை கையாளுகின்ற அலுவலர்∴ அலுவலர்களை விபரங்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம் நியாயமானதொரு காலப்பகுதிக்குள் அது தொடர்பான விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.
- 21 கலண்டர் நாட்களுக்குள் உங்கள் பிரச்சனைகளுக்கு தீர்வு காணுங்கள்.
- உங்கள் முறைப்பாட்டிற்கான நிவாரணத்தினை நிதியியல் சேவையை வழங்க முடியாமல் இருப்பின் நிதியியல் சேவை வழங்குபவரிடமிருந்து தெளிவுபடுத்தலைப் பெற்றுக்கொள்ளவும்.
- தொடர்பான நிதியியல் சேவை வழங்குனரின் முறைப்பாடு கையாளல் செய்முறைகள் தொடர்பில் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல்.

நிதியியல் சேவை வழங்குனரின் பதிலிறுப்பு தொடர்பில் நீர் திருப்திப்படவில்லையாயின் அல்லது உமது முறைப்பாட்டினை நிதியியல் சேவை வழங்குநர் தேவையான விதத்தில் கவனிக்கவில்லையாயின் நீங்கள் உமது முறைப்பாட்டினை இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கமுடியும்.

நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம் மத்திய வங்கியின் கீழ் நிறுவப்பட்ட முதன்மைவாய்ந்த திணைக்களமாக விளங்குவதுடன் வாடிக்கையாளரினால் தாக்கல்செய்யப்பட்ட நிதியியல் வாடிக்கையாளர் முறைப்பாடுகளைக் கையாள்வதற்கான அதிகாரமும் வழங்கப்பட்டிருக்கிறது.

இதற்கமைய, உங்கள் முறைப்பாடுகளை நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களத்திற்கு fcrd@cbsl.lk. மின்னஞ்சல் மூலமாக சமர்ப்பிக்கமுடியும். அத்தகைய முறைப்பாட்டினை நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களத்திற்குச் செய்யும் வேளையில் பின்வரும் காரணிகளை மனதில் வைத்திருப்பது அவசியமானதாகும்.

- உங்கள் முறைப்பாடு உரிமம்பெற்ற நிதியியல் நிறுவனங்களுடன் தொடர்பானதாக இருத்தல் வேண்டும்.
- தொடர்பான நிதியியல் சேவை வழங்குபவரிடம் செய்யப்பட்ட ஆரம்ப முறைப்பாட்டின் விபரங்களை நாம் கட்டாயம் வழங்குதல் வேண்டும்.
- நிதியியல் பணி வழங்குபவரிடம் ஆரம்ப முறைப்பாட்டினைச் செய்ததன் பின்னர் ஓராண்டினை விஞ்சுவதற்கு முன்னர் உங்கள் முறைப்பாட்டினைச் செய்தல்வேண்டும்.
- ஏதேனும் தேவையற்ற செல்வாக்கினை நீங்கள் பயன்படுத்துவீர்களாயின் அல்லது குறிப்பிட்ட முறைப்பாடு தொடர்பில் ஏதேனும் சட்ட நடவடிக்கையினை எடுப்பீர்களாயின் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணை நிறுத்தப்படக்கூடும்.
- நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களத்தில் செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் நீங்கள் எடுக்கின்ற ஏதேனும் சட்ட நடவடிக்கைகளை தடைசெய்யாது.

மேலும், நிதியியல் வாடிக்கையாளர் என்ற ரீதியில் 1935 என்ற நேரடி இலக்கத்திற்கு அழைப்பை எடுப்பதன் மூலம் நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு தொடர்பாக கூடுதலான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் அல்லது இலங்கை மத்திய வங்கியின் அலுவல்சார் வெப்தளத்தின் மீது காணமுடியும்.

இதன்படி, இப்பாதுகாப்பானது வாடிக்கையாளர்கள் நிதியியல் நிறுவனங்கள் அவர்களது மோசமான சேவைகளுக்கு அல்லது அவர்களின் உரிமைகள் மீறப்பட்டமைக்கு நிதியியல் நிறுவனங்கள் பொறுப்புக்கூற வேண்டியதனை உறுதிப்படுத்தப்படுவதுடன் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கும் அவசியமானவிடத்து இழப்பீட்டினைப் பெறுவதற்கும் தெளிவான வழிகளைக் கொண்டிருக்கின்றனர்.

## 4. நிதியியல் வாடிக்கையாளரின் சொத்துக்கள் மற்றும் தகவல்களை பாதுகாத்தல்

இது தொடர்பில், உமது தனிப்பட்ட மற்றும் நிதியியல் தரவுகளையும் சொத்துக்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கான உரிமையினைக் கொண்டிருக்கின்றீர்கள். இவ்வொழுங்குவிதிகளின் படி உங்கள் தரவுகள்

- அதிகாரமளிக்கப்படாத அணுகுதல்கள்
- திருத்தங்கள்
- வெளிப்படுத்துகைகள்
- நிதியியல் நிறுவனங்களின் தொழிலாளர்களினால் இழைக்கப்படும் சேதம் இழப்புக்கள் அல்லது என்பவற்றிலிருந்து பாதுகாக்கப்படுகின்றன.

அவற்றிற்குப் புறம்பாக, உங்கள் இரகசிய தன்மையினைப் பேணுவதற்கான உரிமையினையும் நீங்கள் கொண்டிருக்கின்றீர்கள். சட்டம் அனுமதித்தாலொழிய உங்கள் சம்மதமின்றி நிதியியல் சேவை வழங்குநர்களின் ஊழியர்கள் எவரும் உங்கள் தனிப்பட்ட தகவல்களை மூன்றாம் தரப்பினருடன் பகிர்ந்துகொள்ளக்கூடாது. நிதியியல் சேவை வழங்குபவரினால் வைத்திருக்கப்படும் தனிப்பட்ட தகவல்கள் ஏதேனும் துல்லியமற்ற தன்மை காணப்படுமாயின் அவற்றை திருத்தியமைக்குமாறு கோருவதற்கு நீங்கள் உரித்துடையவராவீர்கள்.

மேற்குறிப்பிட்டவற்றை கவனத்திற்கொள்கையில், இந்நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளின் கீழ் இலங்கையில் நிதியியல் முறைமையின் தீங்குகள் நியாயமற்றதன்மை அல்லது ஏமாற்று நடவடிக்கைகளிலிருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக வடிவமைக்கப்பட்ட பரந்தளவிலான உரிமைகள் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இப்பாதுகாப்புக்கள் நீங்கள் நியாயமான விதத்தில் நடத்தப்படுவதனையும், வெளிப்படையான தகவல்களை அணுகக்கூடியதாக இருப்பதனையும் தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்களை எடுக்கக்கூடியதாக இருப்பதனையும் முறைப்பாடுகளுக்கு தீர்வு காண்பதற்கான வழிவகைகளைக் கொண்டிருப்பதனையும் தேவையானவிடத்து நிவாரணங்களை கோரக்கூடியதாகவுள்ளமையினையும் உறுதிப்படுத்துகின்றன. இப்பாதுகாப்புக்கள் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பில் அடிக்கடி உள்ளடக்கப்படுவதனால் நிதியியல் சேவை வழங்குவோர் இலங்கையிலுள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்குமான பாதுகாப்பான, மிகச்சமத்துவமான கூடியளவு ஒப்புரவான நிதியியல் சூழலை உருவாக்குவதற்கு உதவுகின்றனர்.

**நிதியியல் சாதனங்களைப் பயன்படுத்துகின்றபோது நிதியியல் வாடிக்கையாளர்களுக்குள்ள பொதுவான பொறுப்புக்கள்**

நிதியியல் சாதனங்களையும் சேவைகளையும் பயன்படுத்தும்போது நிதியியல் வாடிக்கையாளர்களும் பொறுப்புக்களை கொண்டிருக்கின்றனர். இப்பொறுப்புக்கள் நீங்கள் தகவல்களை அடிப்படையாகக் கொண்ட தீர்மானங்கள் எடுப்பதனையும் நிதியியல் சேவைகளை பொறுப்புடன் பயன்படுத்துவதனையும் உங்கள் நிதியியல் நலனோம்புகைகள் பேணப்படுவதனையும் உறுதிப்படுத்துகின்றன. நிதியியல் வாடிக்கையாளர்களின் முக்கிய பொறுப்புக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன:

- உங்களினால் தாங்கிக்கொள்ளக்கூடிய மீதி கொடுப்பனவு வரையறைக்கு அப்பால் கடன்படுவதிலிருந்து விலகியிருத்தல்.
- மீள்கொடுப்பனவுகள் அல்லது மாதாந்த தவணைக் கொடுப்பனவுகள் நிலுவைக்குச் செல்வதனை ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.
- கடன்களை மீளச்செலுத்துவதில் உங்களுக்கு இடர்பாடுகளேற்படின் அதனை நிதியியல் சேவை வழங்குநருக்கு அறிவிப்பது அவசியமாகும்.
- முகவரி மற்றும் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் போன்ற உங்கள் தகவல்களில் மாற்றம் ஏற்படுமாயின் அதுபற்றி நிதியியல் சேவை வழங்குநருக்கு அதுபற்றி அறிவித்தல்வேண்டும்
- ஒப்பந்தத்திற்குள் நுழைவதற்கு முன்னர் நீங்கள் வழங்கப்பட்ட சாதனங்கள் ∴ சேவைகள் பற்றி பூரணமான அறிவினையும் புரிதல்களையும் கொண்டிருத்தல்.
- ஏதேனும் ஆவணங்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் அதனைக் கவனமாக வாசிக்கவும்.
- நீங்கள் எந்தவொரு வெற்றுக்காகிதத்திலும் கையொப்பமிடவேண்டாம். வங்கிகளுடனான அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களினதும் உரிய கவனத்துடன் செயற்படல் வேண்டும்.

# 6.2. பிரமிட் திட்டங்களைப் புரிந்துக் கொள்ளுதல்

## கற்றல் பெறுபேறுகள்

- பிரமிட் திட்டங்களை இனங்காணுதல்.
- பிரமிட் திட்டங்கள் எவ்வாறு செயற்படுகின்றது என்பதை புரிந்துக்கொள்ளுதல்.
- இலங்கையில் சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்புக்களை இனங்காணுதல்.
- மேம்படுத்தப்பட்ட நிதியியல் அறிவினூடாக பிரமிட் திட்டங்களுக்கு எதிரான மீளெழுச்சியை உருவாக்குதல்.

## பிரமிட் திட்டங்கள் என்றால் என்ன?

திட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான பங்கேற்பாளர்களை இணைப்பதனூடாகவோ அல்லது திட்டத்திலிருக்கும் பங்கேற்பாளர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புகளில் ஏற்படும் அதிகரிப்பின் அடிப்படையிலோ உறுப்பினர்களுக்கு நன்மை கிடைக்கப்பெறுகின்ற திட்டம் பிரமிட் திட்டம் எனப்படும்.

### பிரமிட் திட்டங்கள் எவ்வாறு செயற்படுகின்றது?

இதனை உதாரணமொன்றின் மூலமாக உற்று நோக்குவோம்.

நேற்று காலை தனஞ்சய தனது பாடசாலை நண்பரான சகுனவை சந்தித்தார். மாதாந்தம் பல ஆயிரங்கள் ஈட்டக்கூடிய சுவாரசியமான வியாபார முயற்சியொன்றிற்கு சகுன அவரை அறிமுகப்படுத்தினார். அத்திட்டம் எவ்வாறு செயற்படுகின்றது என்பது தொடர்பாக சகுன பின்வருமாறு விளக்கினார்.

#### கட்டம் 1: ஆரம்ப முதலீடு

ஒழுங்கமைப்பாளர்களினால் ஒழுங்குபடுத்தப்பட்ட கருத்தரங்கொன்றில் பங்குபற்றுமாறு தனஞ்சயவிற்கு அறிவுறுத்தப்பட்டது. இதற்கான தேவைப்பாடுகள் மிகவும் இலகுவானவையாகும்.

- திட்டத்தில் இணைந்துகொள்வதற்கான நுழைவுக் கட்டணமாக ரூ.5000 செலுத்துதல்.
- அவருடைய தலைமையில் ஏனையவர்கள் ஆட்சேர்ப்பு செய்வதனூடாக ஊக்கத்தொகைகளை பெறுதல்.

தனஞ்சய அதிக எண்ணிக்கையிலான நபர்களை ஆட்சேர்ப்பு செய்வதனூடாக பெருமளவு வருமானத்தை ஈட்டிக்கொள்ளலாம் என்பதையும் ஒழுங்கமைப்பாளர்கள் சுட்டிக் காட்டினர். இங்கே விற்பனையை மேற்கொள்வதற்கான தொட்டுணரக்கூடிய பொருட்கள் இல்லை, மாறாக செல்வதை ஈட்டிக்கொள்ளும் வாக்குறுதியே காணப்படுகின்றது.

#### கட்டம் 2: ஏனையவர்களை திட்டத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல்

திட்டத்தில் தொடர்வதற்கான இணக்கப்பாட்டின் அடிப்படையில், தனஞ்சய ஏனைய மூன்று நண்பர்களை (அமர, சமன் மற்றும் பியூமி) இத்திட்டத்திற்கு அறிமுகப்படுத்தினார். இத்திட்டத்தில் இணைந்துக்கொள்வதற்காக ஒவ்வொருவரும் ரூ.5000 செலுத்தினார்கள். ஒவ்வொரு அறிமுகத்திற்கும் ரூ.1000 வீதம் தனஞ்சய மொத்தம் ரூ.3000 வருமானத்தை ஈட்டிக்கொண்டார்.

மேலதிக நபர்களை திட்டத்திற்கு அழைத்துவருமாறு அமர, சமன் மற்றும் பியூமி ஆகியோருக்கு தெரிவித்ததனூடாக தனஞ்சய இத்திட்டத்தை தொடர்ந்து ஊக்கப்படுத்திக்கொண்டிருந்தார். ஒவ்வொரு முறையும் ஒருவரை திட்டத்திற்கு அறிமுகப்படுத்தும்போது தனஞ்சயவிற்கும் திட்ட ஒழுங்கமைப்பாளர்களுக்கும் ஓரளவு வருமானம் ஈட்டக்கூடியதாக இருந்தது.

#### கட்டம் 3: அதிவேக வளர்ச்சியும் முறிவும்

அமர, சமன் மற்றும் பியூமி ஆகியோர் நுழைவுக்கட்டணமாக ரூ.5000 செலுத்தி இணைந்த மூன்று நபர்களை ஆட்சேர்ப்பு செய்தனர். இப்புதிய இணைப்புகளினூடாக தனஞ்சய மேலதிக வருமானத்தை தற்போது ஈட்டுகின்றார்.

#### கட்டம் 4: அதிவேக வளர்ச்சியும் முறிவும் (தொடர்ச்சி)

திட்டம் தொடர்ந்து செயற்படுவதற்கு மேலும் அதிகளவான நபர்கள் திட்டத்தில் இணைய வேண்டும். பின்வரும் காரணங்களால் இது குழப்பத்திற்குரிய விடயமொன்றாக மாறும்:

- ஆற்றல் நிறைந்த பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டதாகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகவும் காணப்படல்.
- திட்டம் மேலும் வளர்ச்சியடையும் போது எதிர்காலத்தில் பங்கேற்பாளர்கள் குழாம் செயலற்றதாக மாற்றமடைதல்.

இறுதியில், ஆட்சேர்ப்பு செய்வதற்கான மேலதிக நபர்கள் காணப்படாதவிடத்து இத்திட்டம் முறிவினை சந்திக்கும். மேல்-மட்ட செயற்பாட்டாளர்கள் அதிகளவான ஊக்கத்தொகையுடன் திட்டத்திலிருந்து விலகிச் செல்லும் அதேவேளை பெருமளவான கீழ்-மட்ட உறுப்பினர்கள் குறிப்பிடத்தக்க நிதி இழப்புகளை சந்திப்பர்.

இவ்வாறான சட்டவிரோத திட்டத்தில் சிக்கியுள்ள தனஞ்சய போன்ற இளவயது நபருக்கு ஏற்படும் விளைவுகள் குறித்து தற்போது பார்ப்போம்.

- தனஞ்சயவின் இணைப்புக்கள் (நெருங்கிய நண்பர்கள்) ஏமாற்றப்பட்டதாக உணர்வதால் அவரின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படும்.
- தமது வருமானத்தை மீளப்பெறுவதற்காக போதியளவு நபர்களை ஆட்சேர்ப்பு செய்ய தவறுவதால் பலரும் தமது ரூ.5000 முதலீட்டினை இழக்க நேரிடும்.
- சட்ட அதிகாரிகள் திட்டம் தொடர்பான விசாரணை மேற்கொண்டால், சட்டவிரோத பிரமிட் கட்டமைப்பொன்றினை ஊக்கப்படுத்தியதாக கண்டறியப்படுமிடத்து தனஞ்சய தண்டப்பணம் செலுத்த வேண்டியிருக்கும்.

## பிரமிட் திட்டங்களை இனங்காண்பதற்கான துணுக்குகள்

அதிக சிரமமின்றி இலகுவாக செல்வந்தராகும் திட்டமொன்றில் இணைந்துக்கொள்ளும்படி உங்களை யாரவது அணுகியிருக்கின்றார்களா?

எச்சரிக்கையாக இருங்கள்: இது இலங்கையில் சட்டவிரோதமாக கருதப்படும் பிரமிட் திட்டமாக கூட இருக்கலாம்.

இலங்கை மத்திய வங்கியின் கண்ணோட்டத்தில், பிரமிட் திட்டங்களின் பின்வரும் பண்புகள் தொடர்பாக முதலீட்டாளர்கள் அறிந்திருக்க வேண்டும்.

1. க1. உழைப்புக்கள் தொடர்பாக தவறான/போலி உத்தரவாதங்கள் மற்றும் திட்டத்தில் இணைப்பதற்காக அவசர ஊக்குவிப்புக்கள்
2. விற்பனை செய்யப்படும் பொருட்கள் சந்தைக்கேள்வி அற்றவையாக இருத்தல்
3. கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மீள விற்பனை செய்யமுடியாதவையாகவும் மீள செலுத்த முடியாதவையாகவும் இருத்தல்
4. இத்திட்டத்தில் இணைவதற்கான நுழைவுக்கட்டணம் மிகவும் உயர்வாக இருத்தல்
5. ஊக்கத்தொகைகளும் கொடுப்பனவுகளும் புதிய உறுப்பினர்களை இணைப்பதில் தங்கியிருக்கும். பொருள் விற்பனையில் காணப்படாது
6. பொருட்களை விற்பதை விடவும் புதிய உறுப்பினர்களை இணைப்பதற்கே முக்கியத்துவம் வழங்கப்படும்.
7. வியாபாரத்தின் அமைவிடம் மற்றும் தொடர்பு விபரங்கள் கண்டுபிடிப்பதற்கு கடினமாக இருக்கும்.
8. பொருட்களை விற்பனை செய்வதற்கோ அல்லது புதிய உறுப்பினர்களை இணைப்பதற்கோ போதிய பயிற்சிகள் வழங்கப்படமாட்டாது.
9. செயற்பாட்டிற்கான பிரதேசம் வரையறுக்கப்படமாட்டாது.
10. பொருத்தமான வாடிக்கையாளர் சேவை வழங்கப்படமாட்டாது.

### பிரமிட் திட்டங்களின் வகைகள் என்ன?

இரண்டு வகை பிரமிட் திட்டங்கள் காணப்படுகின்றன.

1. வெறுமையான பிரமிட் திட்டங்கள்
2. உற்பத்தி அடிப்படையிலமைந்த பிரமிட் திட்டங்கள்

**வெறுமையான பிரமிட் திட்டங்கள்** என்பது மேலே குறிப்பிட்ட தனஞ்சயவின் உதாரணம் போன்ற பொருட்கள் ஏதும் வழங்கப்படாத திட்டம் ஆகும்.இது எவ்வாறு செயற்படும் என்பது தொடர்பாக இப்போது கலந்துரையாடுவோம்;

**திட்ட கட்டமைப்பு**

- ஒவ்வொருவரும் ரூ. 100 பங்களிப்பு வழங்குமாறு 10 நபர்கள் கொண்ட (1ஆம் மட்டம்) திட்டமொன்றை ஊக்குவிப்பாளரொருவர் ஆரம்பிப்பார்.
- ரூ. 100 செலுத்துமாறு 10 மேலதிக நபர்களை 1ஆம் மட்டத்திலுள்ள ஒவ்வொருவரும் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டும்.
- ஒவ்வொரு பங்கேற்பாளரும் 10 மேலதிக பங்கேற்பாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு பொறுப்பாகவிருக்கும் சந்தர்ப்பத்தில், ஒவ்வொரு மட்டங்களுக்கிடையிலும் ஆட்சேர்ப்பு செய்யும் மற்றும் கட்டணம் செலுத்தும் செயல்முறை தொடர்ந்து நடைபெறும்.

புதிய பங்கேற்பாளர்களை ஆட்சேர்ப்பு செய்ய முடியாத சந்தர்ப்பத்தில், பெரும்பாலான பங்கேற்பாளர்களை எவ்வித வருவாயுமின்றி அடிமட்டத்திற்கு இட்டுச்செல்வதனூடாக இத்திட்டம் முறிவினை சந்திக்கும்.

**உற்பத்தி அடிப்படையிலமைந்த பிரமிட் திட்டங்கள்** என்பது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பல்-மட்ட அல்லது வலையமைப்பு சந்தைப்படுத்தல் திட்டமாக செயல்படுவதாக அமையும். பங்கேற்பாளர் ஒருவர் இத்திட்டத்தின் மூலம் அதிகரித்த விலையொன்றிற்கு பொருளொன்றினை கொள்வனவு செய்வதனூடாக பின்வரும் நலன்களுக்கு உரித்துடையவராகின்றார்:

- பொருளொன்றை விற்பனை செய்வதற்கான உரிமை மற்றும்
- ஏனைய பங்கேற்பாளர்களை திட்டத்தில் ஆட்சேர்ப்பு செய்வதனூடாக வருவாயை பெற்றுக்கொள்வதற்கான உரிமை.

### திட்ட கட்டமைப்பு

அலகொன்றிற்கு ரூ.100,000 விலையிடப்பட்ட கடிகாரமொன்றினை விற்பனை செய்வதற்காக ஊக்குவிப்பாளரொருவர் திட்டமொன்றை அறிமுகப்படுத்துகிறார். வழமையாக இப்பொருளினுடைய உண்மை பெறுமதி அல்லது சந்தை பெறுமதியானது குறைவாகவே காணப்படுகின்றது.

இத்திட்டத்தில் இணைத்துக்கொள்வதற்காக, பங்கேற்பாளரொருவர்:

- ரூ. 60,000 சந்தை பெறுமதி கொண்ட கடிகாரமொன்றினை ரூ. 100,000 இற்கு கொள்வனவு செய்தல்.

- இதனையே மீள செய்வதற்காக மேலும் மூன்று நபர்களை ஆட்சேர்ப்பு செய்தல்.

- பிரமிட் திட்டமொன்றினை உருவாக்கும் வகையில், ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஒவ்வொரு நபரும் மேலும் மூன்று பங்கேற்பாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல்.

பொருட்களின் விற்பனையிலிருந்து பெறப்படும் நிதியானது எவ்வித முறையான வணிக நடவடிக்கைக்குமான பங்களிப்பினை வழங்காது. எவ்வாறாயினும், பொருட்களை விற்பனை செய்வதற்கும் திட்டத்திற்கான ஏனைய நபர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கும் முந்தைய பங்கேற்பாளர்களுக்கு ஊக்கத்தொகையாக செலுத்தவே பயன்படுத்தப்படுகின்றது. ஊக்கத்தொகைகள் இவ்வாறே கட்டமைக்கப்படுகின்றது:

1ஆம் மட்டம் (நேரடி ஆட்சேர்ப்புக்கள்): பங்கேற்பாளர்கள் 3 ஆட்சேர்ப்பாளர்களிடமிருந்து விற்பனை ஒன்றிற்கு ரூ.30,000இனை ஈட்டிக்கொள்வார்கள்.

2ஆம் மட்டம் (ஆட்சேர்ப்பாளர்களின் ஆட்சேர்ப்புக்கள்): பங்கேற்பாளர்கள் பின்வரும் ஒன்பது ஆட்சேர்ப்பாளர்களிடமிருந்து விற்பனை ஒன்றிற்கு ரூ.10,000இனை ஈட்டிக்கொள்வார்கள்.

3ஆம் மட்டம் (2ஆம் மட்டத்தின் ஆட்சேர்ப்புக்கள்): பங்கேற்பாளர்கள் பின்வரும் 27 ஆட்சேர்ப்பாளர்களிடமிருந்து விற்பனை ஒன்றிற்கு ரூ.5,000இனை ஈட்டிக்கொள்வார்கள்.

திட்டம் மேலும் வளர்ச்சியடையும் போது ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவைப்படும் நபர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரிக்கும்:

உதாரணமாக, 6ஆம் மட்டத்தின் போது, 6,729 பங்கேற்பாளர்கள் தேவைப்படுவதோடு, 10ஆம் மட்டத்தின் போது, 59,000இற்கும் அதிகமான பங்கேற்பாளர்கள் தேவைப்படுவதாக இருக்கும்.

ஆட்சேர்ப்பு குறைவடையும் போது அல்லது நிறுத்தப்படும் போது, பெரும்பாலான பங்கேற்பாளர்கள் பொருட்களை விற்பனை செய்யவோ அல்லது அவர்களது முதலீட்டினை மீளப் பெறமுடியாது, நிதியியல் இழப்பினை சந்திக்க நேரிடும்.

## ஏனைய நிதியியல் மோசடிகள்

மேற்குறிப்பிட்ட பிரமிட் திட்டங்களுக்கு மேலதிகமாக, சமகால பின்னனியில் ஏனைய சில நிதியியல் மோசடிகள் அல்லது கட்டமைப்புகள் தொழிற்படுகின்றன.

### முதலீட்டு திட்டங்கள் (பொன்சித் திட்டங்கள்)

பொன்சித் திட்டமானது முறையான இலாபத்திற்கு பதிலாக புதிய முதலீட்டாளர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் மூலதனத்தினை பயன்படுத்தி முந்தைய முதலீட்டாளர்களுக்கு வருவாய்களை செலுத்தும் மோசடியான முதலீட்டு திட்டமாகும். பொன்ஷித் திட்டத்தில் பிந்தைய பங்கேற்பாளர்கள் ஆரம்ப பங்கேற்பாளர்களின் வருவாய்களுக்கு நிதியளிக்கின்றனர்.

உதாரணமாக, நபரொருவர் முதலீட்டின் மீதான அதிக வருவாய்க்கான வாக்குறுதியளித்து முதலீட்டாளர்கள் பங்களிப்பினை மேற்கொள்வதற்கும் கேட்கின்றார்.

பின்னர் அவர்கள் புதிய முதலீட்டாளர்களிடமிருந்து பெரும் நிதியை முந்தைய முதலீட்டாளர்களுடைய வருவாயை செலுத்துவதற்காக பயன்படுத்தி, இலாபம் ஈட்டும் முயற்சியொன்றின் விம்பத்தை உருவாக்குகின்றனர்.

புதிய முதலீட்டாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படும் வரையில் இத்திட்டம் தொடர்ந்து செயற்படும். மாறாக, புதிய பணத்தின் ஊடுருவல் நிறுத்தப்படும் போது இத்திட்டம் முறிவடையும்.

இலங்கை மத்திய வங்கியிடமிருந்து உரிமம் பெறாமல் எந்தவொரு நபரும் பணவைப்பினை ஏற்றுக்கொள்ளலாகாது என்பதனால் இலங்கையில் பொன்ஷித் திட்டங்கள் சட்டவிரோதமானவையாக கருதப்படுகின்றன.

### சுழற்சி முறையில் பரிசில்களை வழங்குதல் அல்லது தொடர்ச்சியான முறையில் பரிசில்களை வழங்குதல்

பெரும்பாலான கலாசாரங்களில் ப்ளெசிங் லூம், சூ-சூ அல்லது பெண்களின் நட்பு வட்டாரம் என இத்திட்டம் அறியப்படுகின்றது. திட்டம் வளர்ச்சியடையும் போது குறிப்பிடத்தக்களவு நலன்களை எதிர்பார்த்து இந்த மோசடியின் பங்கேற்பாளர்கள் குழுக்களிலுள்ள ஏனைய நபர்களுக்கு பணம் அல்லது பரிசில்களை பங்களிப்பாக வழங்குவர். நம்பிக்கைக்குரிய நண்பர் அல்லது குடும்ப அங்கத்தவரொருவரின் அழைப்பின் பேரில் நீங்கள் இணைந்துகொள்வதால் இவ்வகையான முறைமை தொடர்பாக மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உதாரணமாக, மேல்மட்டத்திலிருக்கும் பங்கேற்பாளர்கள் நடுமட்டத்திலிருக்கும் நபரொருவருக்கு குறிப்பிட்ட தொகையொன்றினை (உ-ம்., ரூ.1,000) பரிசளிக்கும் ஒவ்வொரு பங்கேற்பாளர்களிடமிருந்தும் பங்களிப்பினை சேகரிப்பர். பின்னர் இந்த பங்கேற்பாளர்கள் வட்டாரத்திற்குள் இணைக்கப்பட்டு இந்த வரிசைக்கூடாக நகர்வதற்காக மேலும் நபர்களை இணைப்பதற்கும் ஊக்குவிக்கப்படுகின்றனர். நடுமட்டத்திலிருக்கும் நபர் ஆட்சேர்ப்பு செய்தவர்களிடமிருந்து பரிசில்களை சேகரித்ததன் பின்னர் திட்டத்திலிருந்து வெளியேறி பிரிவினை ஏற்படுத்துவதனூடாக புதிய வட்டாரத்தினை அமைப்பதற்கு அடுத்த வரிசைக்கு செல்வார். இது அனைவரும் இலாபமீட்டக்கூடிய அதிவேக ஆட்சேர்ப்பு தேவையினை கொண்ட நிலைத்திருக்கமுடியாததொரு முறைமையாக காணப்படும்.

பெண்களின் வலுவூட்டல், பின்னிப்பிணைந்த சமுதாயத்தில் செல்வத்தை உருவாக்குதல் மற்றும் பரஸ்பர ஆதரவின் பகிரப்பட்ட விழுமியங்கள் போன்ற உணர்வுரீதியான மற்றும் கலாசார தேவைகளுடன் கூடிய சமுதாய முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவதற்காக இவ்வாறான சுழற்சி முறையில் பரிசில்களை வழங்கும் குழுக்கள் அவசியமானவையாக காணப்படுகின்றது.

### மறைக்குறி நாணயத் திட்டங்கள்

ஊக்குவிப்பாளர்கள் நம்பத்தகாத வருவாய்களிலுக்கான வாக்குறுதிகளை வழங்கி நிலைத்திருக்கமுடியாததொரு வியாபார மாதிரிக்கு முதலீட்டாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக தொடரோடு அல்லது மறைக்குறியுடன் தொடர்புடைய சொற்பதத்தை உபயோகிப்பர். போலியான மறைக்குறி நாணயங்கள், முதலீட்டுத் திட்டங்கள் மற்றும் வார்ப்பு திட்டங்கள் இதில் உள்ளடங்கும்.

**பிரமிட் திட்டங்களில் பங்குபற்றுவது இலங்கையில் ஒரு தண்டனைக்குரிய குற்றம் என்பது உங்களுக்கு தெரியுமா?**

1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 83(இ) பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகத் திட்டமொன்றினை நேரடியாக அல்லது மறைமுகமாகத் தொடங்குகின்ற, வழங்குகின்ற, ஊக்குவிக்கின்ற, விளம்பரப்படுத்துகின்ற, நடாத்துகின்ற, நிதியளிக்கின்ற, முகாமைசெய்கின்ற அல்லது பணிக்கின்ற எவரேனும் ஆள் தண்டனைக்குரிய தவறொன்றிற்கு ஆளாதல் வேண்டும்.

தவறுக்கான தண்டனைகளானது மூன்று வருடங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு சிறைத்தண்டனை அல்லது ஒரு மில்லியன் ரூபாயை விஞ்சாத தண்டப்பணம் அல்லது சிறைத்தண்டனை மற்றும் தண்டப்பணம் ஆகிய இரண்டும் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

தவறானது வேண்டுமென்று அல்லது அறிந்துகொண்டு அல்லது செயற்பாடானது எவரேனும் வேறு ஆளுக்கு சேதத்தை விளைவிக்கும் அல்லது தீங்குபயக்கும் என்ற அறிவுடன் புரியப்படுகின்றவிடத்து, அவர்/அவள் மூன்று ஆண்டுகளுக்கு குறையாத மற்றும் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத காலமொன்றுக்கு கடூழிய சிறைத்தண்டனைக்கும் அத்துடன் ரூபாய் இரண்டு மில்லியன் அல்லது திட்டத்தில் பங்கேற்பாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றதாக வெளிப்படுத்தப்பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட இலங்கை நாணயத்திலான ஒன்றுகூட்டிய தொகையின் இருமடங்கு, இதில் எது உயர்வானதோ அதனைக் கொண்ட தண்டப்பணத்திற்கும் ஆளாதல் வேண்டும்.

அதற்கமைய, சட்டத்தினால் தண்டிக்கப்படக்கூடிய அத்தகைய நடவடிக்கைகளிலிருந்து விலகியிருக்குமாறு பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

## பிரமிட் திட்டங்கள் ஏன் தொடர்ந்து செயற்படுகின்றன

| | |
|---|---|
| பாதிக்கப்பட்டவர்களின் அமைதியும் அவமானமும் | பணத்தை இழந்த நபர்கள் தாம் ஏமாற்றப்படுவதால் உண்மைகளை வெளிப்படுத்துவதில்லை. பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் தங்களை தோல்வியுற்றவர்கள் எனும் பலியை ஏற்கின்றனர். |
| சுழலும் வாயில் குழு | ஒரு பிரமிட்டின் கீழ் அடுக்குகள் "சுழலும் வாயில் குழுவாக" மாற்றமடைவதோடு, திட்டத்திலிருந்து வெளியேறும் தோல்வியுற்ற நபர்களுக்கு பதிலாக புதிய உறுப்பினர்கள் திட்டத்தினுள் இணைவார்கள். |
| மிகுதியான அரசியலணைவு மற்றும் வலுவான அழுத்தம் | ஊக்குவிப்பாளர்கள் அரசாங்க அதிகாரிகளிடத்தில் அரசியலணைவினை நாடி அரசியல் கட்சிகளுக்கு பங்களிப்புகளை வழங்குவதன் மூலம் பிறரின் நன் மதிப்பை பெற்றுக்கொள்கின்றனர். |
| ஊக்குவிப்பாளர்களால் மேற்கொள்ளப்படும் ஏமாற்றுவேலை | ஊக்குவிப்பாளரொருவர் ஈட்டும் சராசரி தொகை தொடர்பாக பங்கேற்பாளர்களுக்கு வெளிப்படுத்துவதில்லை. மாறாக, பிரமிட் திட்டங்களிலிருந்து ஊக்கத்தொகைகளைப் பெற்றுக்கொண்ட குறைந்தளவிலான வாடிக்கையாளர்களின் (பொதுவாக ஊக்குவிப்பாளர்கள்) வருவாயில் மாத்திரமே கவனத்தினை செலுத்துகிறார்கள். |
| திட்டத்தின் சிக்கலானத்தன்மை | சாதாரண நபரொருவர் திட்டத்தின் உண்மைத் தன்மையைப் புரிந்துக்கொள்வதை கடினமாக்கும் வகையில் ஊக்குவிப்பாளர்கள் திட்டத்திற்கும் பங்கேற்பு விதிகளுக்கும் வேண்டுமென்றே சிக்கலான தன்மையை உருவாக்குகின்றனர். |

## பிரமிட் திட்டங்களால் ஏற்படும் பாதிப்புக்கள்

- இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ள விதத்தில், பிரமிட் திட்டங்களில் பங்குபற்றும் பெருமளவு எணிக்கையிலான நபர்கள் (சாதாரணமாக 90 சதவீதம் - 99 சதவீதமானவர்கள்) இழப்பினையே சந்திப்பர். இதன்விளைவாக திட்டங்கள் தவிர்க்கமுடியாத வகையில் முறிவினை சந்திக்கும். தீவிர சந்தர்ப்பங்களில், இவ்வாறான திட்டங்களின் முறிவானது சமூக குழப்பங்களையும் வன்முறையையும் உருவாக்கும்.

- நண்பர்களையும் உறவினர்களையும் திட்டத்தினுள் ஆட்சேர்ப்பு செய்வதால், இத்திட்டத்தின் முறிவானது மனித உறவுகளில் விரிசல்களை ஏற்படுத்தி நம்பிக்கையை அழிப்பதாக இருக்கும். பிரமிட் திட்டங்கள் விவாகரத்துகளை, மேலும் தற்கொலைகளையும் கூட ஏற்படுத்தக்கூடியது என அறியப்படுகின்றது.

- பிரமிட் திட்டங்களில் ஈடுபடுபவர்களில் சிலர் ஏற்கனவே நிதியியல் நிலைமைகளால் பாதிக்கப்பட்டவர்களாக காணப்படுவதால், திட்டம் முறிவடையும் போது அவர்கள் வறுமைக்குள் மூழ்கடிக்கப்படுகின்றார்கள். பிரமிட்டின் அடித்தளத்தின் பாரிய எண்ணிக்கையினரிலிருந்து மேல்மட்டத்திலிருக்கும் குறைந்தளவான எண்ணிக்கையினருக்கு நிதியினை கைமாற்றும் இத்திட்டங்களின் பாரியளவிலான தொழிற்பாடுகளின் காரணமாக, நாடொன்றில் வருமானப் பகிர்ந்தளிப்பில் குறிப்பிடத்தக்களவு மாற்றமும் சமத்துவமின்மையில் அதிகரிப்பும் ஏற்படக்கூடும்.

- திட்டத்தில் பங்குபெறும் நபர்கள் நிதியியல் நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொண்ட நிதிகளை இத்திட்டத்திலிருந்து பெறப்படும் வருவாயின் மூலம் மீளச் செலுத்தலாம் எனும் எண்ணத்தில் இந்நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக பயன்படுத்தலாம். இத்திட்டத்தின் முறிவானது பாரியளவு தவணை தவறல்களை ஏற்படுத்தி பொருளாதாரத்தின் நிதியியல் உறுதிப்பாட்டினை அச்சத்திற்குள்ளாக்கும்.

- பிரமிட் திட்டத்தில் பங்கேற்பு கட்டணமானது வெளிநாட்டு நாணயங்களினால் வெளிநாட்டில் செலுத்த வேண்டியிருந்தால், அவ்வாறான பிரமிட் திட்டங்களின் தொழிற்பாடு காரணமாக நாடொன்றின் வெளிநாட்டுச் செலாவணியில் குறிப்பிடத்தக்க வலுக்கேடு காணப்படும். இது வெளிநாட்டு வீதங்களில் தளம்பல்களையும், கொடுப்பனவுகளின் நிலுவையில் சிக்கல்களையும் ஏற்படுத்தி, நாட்டிற்கான வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளை குறைவடையச் செய்யும்.

- பிரமிட் திட்டங்களின் பங்கேற்பாளர்கள் இத்திட்டத்திலிருந்து நன்மைகளாக எதிர்கால வருமான எதிர்பார்க்கையின் அடிப்படையில் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான அவர்களுடைய கேள்வியை அதிகரிக்கக்கூடும். இது பணவீக்கத்தையும் நாட்டின் நடைமுறைக் கணக்கில் மோசமான தன்மையையும் ஏற்படுத்தக்கூடும் (இறக்குமதியின் கேள்வியினுடைய அதிகரிப்பு காரணமாக). இத்திட்டத்தின் தவிர்க்கமுடியாத முறிவுடன், அதிக எண்ணிக்கையிலான நபர்கள் இழப்பினை சந்திப்பர். இதன்விளைவாக, கேள்வியில் சுருக்கம் ஏற்பட்டு, பணச்சுருக்கம் மற்றும் குறைந்தளவு பெறுபேற்றிற்கு வழிவகுக்கும்.

- பங்கேற்பாளர்கள் திறன்மிக்க சொத்துக்களில் தமது ஈடுபாட்டினை வெளிப்படுத்துவதற்கு பதிலாக இவ்வாறான திட்டங்களில் அவர்களுடைய சேமிப்புக்களை முதலீடு செய்வதால், பிரமிட் திட்டங்கள் பொருளாதாரமொன்றின் சேமிப்புகளையும் முதலீட்டினையும் திரிபடையச் செய்கின்றன. மக்கள் திறன்மிக்க தொழில்களிலிருந்து விலகி இத்திட்டங்களில் முழுவீச்சாக ஈடுபடுவதால், அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் பெறுபேற்றில் இழப்பினை தோற்றுவித்து மனித வளம் மற்றும் நேரம் போன்ற வளங்களில் ஒதுக்கீட்டின்மையை ஏற்படுத்தும்.

**பிரமிட் திட்டங்களை எவ்வாறு இனங்காணலாம்?**

பெரும்பாலான பிரமிட் திட்டங்கள் தற்காலத்தில் பல்-மட்ட அல்லது வலையமைப்பு சந்தைப்படுத்தல் திட்டங்களாகத் தொழிற்படுவதாலும், குறிப்பாக இவ்வாறான திட்டங்களின் ஊக்குவிப்பு தற்போது சட்டத்திற்கு புறம்பானவை என்பதாலும், இவ்வாறான திட்டங்களில் பங்கேற்பது குறித்து மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். பிரமிட் திட்டங்களை நீங்கள் இனங்காண உதவுவதற்காக பின்வரும் துணுக்குகள் வழங்கப்பட்டுள்ளன.

1. சிறிய முயற்சியுடன் பாரியளவிலான பணத்தொகையை நீங்கள் உருவாக்கலாம் என்று யாரெனும் கூறுவது தொடர்பில் அவதானத்துடன் இருத்தல். பெரும்பாலும் அவர்கள் உண்மையை கூறுவதில்லை என்பதுடன் மோசடி செய்வதற்கும் ஏமாற்றுவதற்கும் முயற்சிக்கின்றனர். நீங்கள் பணத்தை மாத்திரம் இழப்பது மாத்திரமன்றி மோசடியில் ஈடுபட்டமைக்காக சட்டரீதியாக வழக்குத் தொடுப்பதற்கு நேரிடும்.

2. அதிகரித்த விலையில் (உற்பத்தியின் உள்ளார்ந்த பெறுமதியை விட அதிகமாக) உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்து ஏனைய கொள்வனவாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தரகுகளை வழங்குகின்ற ஏதேனும் விற்பனைத் திட்டங்களை தவிர்த்திடுதல். பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு இணைக்கப்பட்டுள்ள பல்வேறு நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு சாத்தியமற்றதாக இருக்கக்கூடும் என்பதால் அவதானத்துடன் இருத்தல் வேண்டும்.

3. “கீழ் மட்டக்குழுக்கள் (னழறடெைநெ)” அதாவது நீங்கள் மேற்கொள்ளும் விற்பனைகளுக்கு பதிலாக உங்களினால் ஆட்சேர்க்கப்பட்டவர்களின் மூலம் மேற்கொள்ளப்படும் விற்பனைகள் மீதான தரகுகள் போன்ற நடவடிக்கைகளின் தொடர்ச்சியான வளர்ச்சியினூடாக பணத்தை விரைவாகத் திரட்டுவதற்கு கோருகின்ற திட்டங்கள் தொடர்பில் அவதானத்துடன் இருத்தல் வேண்டும்.

4. சில்லறை விற்பனையை மேற்கொள்வதை விடவும் ஆட்சேர்ப்பினை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்பு மற்றும் பொது மக்களுக்கு பொருட்களை சில்லறை விற்பனை செய்வதை விடவும் உறுப்பினர்களை ஆட்சேர்ப்பு செய்வதில்.·.பதிவுசெய்வதில் கவனம்செலுத்தி ஊக்குவிப்பாளர்கள் பயிற்சியை.·.ஊக்குவிப்பு கருத்தரங்குகள் தொடர்பிலான திட்டங்களை தவிர்த்திடுதல் வேண்டும்.

5. பல்வேறு விற்பனைகளை மேற்கொள்ளும் நபர்கள் பெரும்பாலும் சில்லறை விற்பனையிலிருந்து வருமானத்தை ஈட்டுகின்றனர் என்பதற்கு ஆதரமின்றிய திட்டங்கள் தொடர்பில் தெளிவாக இருத்தல் வேண்டும். சட்டபூர்வமான பல்மட்ட சந்தைப்படுத்தல் திட்டங்கள் விநியோகத்தர்களின் வலையமைப்பினூடாக விற்பனைசெய்யப்பட்ட உற்பத்திகளையும் சேவைகளையும் வழங்குகின்றன. விநியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட ஏதேனும் தரகுகள் இறுதிப் பயனாளர்களுக்கான பொருட்களையும் சேவைகளையும் விற்பனைசெய்வதுடன் தொடர்புபட்டவையாகும் (தமது சொந்த நலனிற்காக பொருட்களை வாங்குகின்ற மற்றும் திட்டத்திற்கு ஏனையவர்களை ஆட்சேர்ப்பதற்கான உரிமையை பெற்றுக்கொள்ளாதவர்கள்). இறுதிப் பயனாளர்களுக்கான சில்லறை விற்பனையின்மையானது முதன்மை அம்சமாக இருப்பதனால் பிரமிட் திட்டங்கள் உண்மையான பல்மட்ட சந்தைப்படுத்தல் திட்டங்களிலிருந்து வேறுபடலாம்.

6. மோசடி தொடர்புகள் குறித்து அவதானத்துடன் இருத்தல் - சந்தைப்படுத்தல் திட்டத்தில் பங்கேற்பதன் மூலம் எதிர்பாராத வருவாய்களை ஈட்டுவதாக கூறும் நபர்கள். ஊக்குவிப்பாளர்கள் இவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு இத்தகைய நபர்களுக்கு பணத்தை செலுத்துகின்றனர்.

7. ஏதேனும் கருத்தரங்கில் அல்லது ஏனைய அழுத்தம் ஏற்படும் சூழ்நிலையில் சந்தைப்படுத்தல் திட்டத்தில் பங்கேற்பதற்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டாம் அல்லது ஒப்பந்தங்களில் கைச்சாத்திட வேண்டாம். திட்டமானது பிரமிட் திட்டமா எனக் கவனமாக கருத்திற்கொண்டு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு முன்னர் கணக்காளர், சட்டதரணி, அல்லது வங்கியாளர் போன்ற அறிவார்ந்த நபர்களுடன் இவ்விடயம் குறித்து கலந்துரையாடுதல் வேண்டும்.

8. இணையவழி அல்லது கோரப்படாத மின்னஞ்சல்கள் மூலம் வழங்கப்பட்ட “வியாபார வாய்ப்புக்கள்” மற்றும் “விரைவாக செல்வந்தராகலாம்” போன்ற கவர்ச்சிமிக்க வாசகங்களினால் ஏமாற்றமடையாது அதானத்துடன் இருத்தல் வேண்டும். இ-வர்த்தகத்தின் வளர்ச்சியுடன், பிரமிட் திட்டத்தின் தொழிற்பாட்டாளர்கள் ஒப்பீட்டளவில் குறைந்த செலவில் உலகளாவிய சாத்தியமானப் பங்கேற்பாளர்களை கவர்வதற்கு இலத்திரனியல் ஊடகத்தை அதிகளவில் பயன்படுத்துகின்றனர்.

9. இரகசியத் திட்டங்கள், வெளிநாட்டுத் தொடர்புகள், மற்றும் தனித்துவமான தொடர்புகளைக் கோருகின்ற திட்டங்கள் தொடர்பில் அவதானத்துடன் இருத்தல் வேண்டும்.







இணையவழி தளங்களினுடாக செயற்படும் சில திட்டங்கள் முதலீட்டாளர்களை இத்திட்டங்களின் மூலம் பணத்தை வைப்பிலிடுவதற்கு.'.முதலீடுசெய்வதற்கு தவறாக வழிநடத்துகின்றன என்ற பல்வேறு பொதுமக்கள் முறைப்பாடுகளை இலங்கை மத்திய வங்கி அண்மையில் பெற்றுள்ளது. இத்தகைய திட்டங்கள் சட்டரீதியிலான திட்டங்கள் என தம்மை நியாயப்படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்பான காரணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குவிதிகளைப் பின்பற்றுவதன் மூலம் முதலீட்டாளர்களின் நிதியங்களை இத்திட்டம் பாதுகாக்கின்றது
- அரசாங்கத்திற்கு உரிய வரிகளை இத்திட்டங்கள் செலுத்துகின்றன
- திட்டங்களின் பங்கேற்பாளர்கள் அவர்கள் ஈட்டுகின்ற நிதியங்களிலிருந்து எடுப்பனவு செய்வதற்கு தனியாள் வருமான வரியை இலங்கை மத்திய வங்கிக்கு செலுத்த வேண்டும் என்பதுடன் அவ்வாறு செலுத்தாதுவிடின், அவர்களின் நிதியங்கள் இலங்கை மத்திய வங்கியினால் முடக்கப்படும்
- இலங்கை மத்திய வங்கியுடன் திட்டம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டிருந்தது.

மேலே குறிப்பிடப்பட்ட கூற்றுக்களை இலங்கை மத்திய வங்கி கடுமையாக மறுப்பதுடன் இத்தகைய கூற்றுக்களில் உண்மைகள் எதுவுமில்லை எனப் பொதுமக்களுக்கு அறியத்தருகின்றது.

**தடைசெய்யப்பட்ட இத்திட்டங்களை ஒழிப்பதில் பொதுமக்களின் பொறுப்புக்கள் யாவை?**

- தடைசெய்யப்பட்ட திட்டங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ முன்னெடுத்தல், முன்வைத்தல், ஊக்குவித்தல், விளம்பரப்படுத்தல், நடாத்துதல், நிதியளித்தல், முகாமைசெய்தல், அல்லது வழிப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடலாகாது
- மோசடி நடவடிக்கைகளில் சிக்கிக்கொள்ள வேண்டாம்
- சட்ட மற்றும் நடைமுறைப்படுத்தல் அதிகாரிகளிடம் விரைவாக முறையிடுதல்
- அவதானமாக இருப்பதுடன் ஏனையவர்கள் குறித்தும் அவதானத்துடன் இருங்கள்

**பிரமிட் வகையிலான திட்டங்களை பொதுமக்கள் எங்கு முறையிட வேண்டும்?**

பொதுமக்கள்

- அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அல்லது
- இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் வாடிக்கையாளர்கள் தொடர்புகள் திணைக்களத்திற்கு முறையிடலாம்.

முகவரி,

பணிப்பாளர்,
நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01.
தொ.பே: 0112477966/1935
மின்னஞ்சல்: dfcrd@cbsl.lk

**பிரமிட் திட்டங்களை தவிர்ப்பதற்கான துனுக்குகள்: விழிப்புமிக்க வாடிக்கையாளராக இருங்கள்**

அண்மையில் நீங்கள் பிரமிட் திட்டங்கள் குறித்து அனுபவத்தைக் கொண்டிருக்கலாம். இல்லையெனில், உங்களது அன்பிற்குரியவர்கள், நெருங்கிய நண்பர்கள், மற்றும் குடும்ப உறுப்பினர்கள் போன்றோர் பிரமிட் திட்டங்களுக்கு ஆட்கொள்ளப்பட்டனர் என்பதால் அவர்கள் பாதிப்பிற்கு உள்ளாகுகின்றனர். மக்களை இவ்வாறான திட்டங்களில் பாதிக்கப்படுவதிலிருந்து தடுப்பதற்கு நிதியியல் திட்டங்களில் முதலீடுசெய்கின்ற போது நீங்கள் கருத்திற்கொள்ளவேண்டிய சில முக்கிய காரணிகளைப் பரீட்சிப்போம்.

- திட்டத்தின் அல்லது நிறுவனத்தின் செயற்பாடு சட்டரீதியானதா அத்துடன் அவற்றின் செயற்பாடுகளை கொண்டு நடாத்துவதற்கு உரிய அதிகாரிகளிடமிருந்து அல்லது ஒழுங்குபடுத்துநர்களிடமிருந்து அனுமதிகள் மற்றும் ஒப்புதல்கள் கிடைக்கப்பெற்றனவா என்பதை மதிப்பிடுதல்.
- இழப்பீடு, தரகுகள், மிகையூதியங்கள், கழிவிடல்கள் மற்றும் ஏனைய நன்மைகள் ஏனையவற்றுக்கு மத்தியிலிருந்து வாடிக்கையாளர்கள் அல்லது பங்கேற்பாளர்கள் எவ்வாறு இலாபத்தை ஈட்டுகின்றனர் என்பதை எடுத்துரைக்கின்ற முழுமையான வியாபாரத் திட்டத்தை கொண்டிருப்பதை உறுதிப்படுத்தல்.
- இத்திட்டங்கள் சந்தையில் இதுபோன்ற திட்டங்களின்.்.நன்மைகளின் மூலம் வழங்கப்படும் என்பது குறித்த நன்மைகளையும் வருவாய் வீதத்தையும் ஒப்பிடுவது சிறந்ததாகும்.
- கீழேயுள்ள திட்டங்களின் அம்சங்கள் தொடர்பில் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு பிரதிநிதிகளிடமிருந்து வினாக்களை கோருதல்
    - விலை, தரம், உற்பத்திகளின் அம்சங்கள், பொருட்களின் கிடைப்பனவு போன்ற உள்ளடங்கலாக வழங்கப்பட்ட உற்பத்திப் பொருளின் அல்லது வழங்கப்பட்ட சேவையின் தன்மை.
        - கம்பனியின் அமைவிடம், முகவரி, தொடர்பு விபரங்கள் போன்றன உள்ளடங்கலாக கம்பனியின் அடிப்படை தகவல்கள்.
        - சந்தையில் இதுபோன்ற பொருட்கள் அல்லது சேவைகள் கிடைக்கப்பெறுகின்றன.
        - சந்தையில் ஒரே மாதிரியான பொருட்களை மற்றும் சேவைகளை வழங்கும் வியாபாரத் திட்டங்களின் தன்மை
- விற்பனைக்குப் பிந்தைய சேவைகள்.்.வாடிக்கையாளர் நலச் சேவைகள் மற்றும் வாடிக்கையாளர் பாதுகாப்பு தொடர்பான நியாயமான மற்றும் ஏற்புடைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கிடைக்கும்தன்மை.
- சட்டப்பூர்வ கடமைகள் உள்ளடங்கலாக தேவையான அனைத்து தகவல்களையும் வழங்குவதன் மூலம் தொடர்புடைய தரப்பினர்களுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடும் போது வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்தல்.
- எளிதாகவும் விரைவாகவும் பணம் சம்பாதிப்பதற்கான சட்டப்பூர்வ.்.செல்லுபடியாகும் வழிகள் இல்லாததால், இணையவழி அல்லது கோரப்படாத மின்னஞ்சல்கள் மூலம் வழங்கப்பட்ட "வியாபார வாய்ப்புக்கள்" மற்றும் "விரைவாக செல்வந்தராகலாம்" போன்ற கவர்ச்சிமிக்க வாசகங்களினால் ஏமாற்றமடையாதிருத்தல்.
- குறைந்தபட்ச முயற்சியுடன் குறைந்தளவான அல்லது இடர்நேர்வின்றிய முதலீட்டு வாய்ப்புகளின் கோரிக்கை தொடர்பில் அவதானத்துடன் இருப்பதற்கு சமூகப் பொறுப்பை ஏற்று நடத்தல். தகைமை, திறன்கள் மற்றும் தலைமைத்துவப் பண்புகள் போன்றவற்றின் யதார்த்தத்தைப் புரிந்துகொள்வது ஒருவரின் பணத்தை ஈட்டும் இயலாற்றலை பெரும்பாலும் நிர்ணயிக்கின்றன.

அத்தியாயம் 07

# வரிகள் பற்றிய அறிவு

## 7.1 அறிமுகம்

### கற்றலின் பெறுபேறுகள்

- கற்றலின் பெறுபேறுகள்
- வரிகள் மற்றும் ஏன் நாம் வரிகளை செலுத்தவேண்டும் பற்றி அறிந்துகொள்ளல்
- வரிவிதிப்பு பற்றி 4 விதிகளை (4 Rs) அறிந்துகொள்ளல்
- வரிகள் எவ்வாறு ஒரு தேசத்தின் உயிர்நாடியாக மாறுகின்றது பற்றி அறிந்துகொள்ளல்
- வரி அடையாள இலக்கம் மற்றும் அதனை எவ்வாறு பெற்றுக்கொள்ளல் பற்றி கற்றல்
- இலங்கையில் பல்வேறு வரிகளின் வகைகளை தெரிந்துகொள்ளல்
- நுண்பாக, சிறிய, நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான வரிவிதிப்பு மற்றும் இலங்கையில் ஏற்புடைய வருமான வரி, அத்துடன் பெறுமதிசேர் வரி பற்றி அறிந்துகொள்ளல்.

## வரி என்பது என்ன?

1. Taxes are mandatory payments that individuals and businesses must make to the government based on their income, profits, wealth or consumption.
2. வரி என்பது தங்களுடைய பணம் எவ்வாறு செலவிடப்படுகின்றது என்பதற்கு அரசாங்கம் பிரசைகளுக்குப் பொறுப்புக்கூறும் பொறிமுறை அல்லது கருவி ஆகும்.
3. உள்ளூர், பிராந்திய அல்லது தேசிய மட்டத்தில் எதுவாயினும் சரி அரச நிறுவனத்தினால் தனியாட்கள் அல்லது நிறுவனங்களின் மீது விதிக்கப்படும் கட்டாய பங்களிப்புக்களே வரிகள் ஆகும்.
4. பாதைகள் மற்றும் பாடசாலைகள் அல்லது சிறுவர்களுக்குப் போசனையளிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற பொதுப் பணிகள் மற்றும் சேவைகள் உள்ளிட்ட அரச செயற்பாடுகளுக்கு வரி வருமானங்கள் நிதியளிக்கின்றன.

## நாம் ஏன் வரி செலுத்த வேண்டும்?

வரி செலுத்துவதன் மூலம் பாதைகள், பாலங்கள், புகையிரதப்பாதை வலையமைப்பு மற்றும் கல்வி மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளுக்கு நிதியளிக்க வரிசெலுத்துனர் பங்களிப்புச்செய்கின்றார்.

வரிகள் அறவிடப்படுவதற்கான நோக்கங்களைப் பல்வேறு பிரிவுகளாக வகைப்படுத்தலாம். அவற்றுள் பொதுவாக பயன்படுத்தப்படும் வகைப்பாடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்:

(1) அரச உட்கட்டமைப்பு மற்றும் இராணுவம் போன்ற அரச தொழிற்பாடுகளை வழங்கல்

(2) கல்வி மற்றும் சுகாதார பராமரிப்பு போன்ற பொதுப் பண்டங்களையும் சேவைகளையும் வழங்கல்

(3) ஓய்வூதியங்கள் மற்றும் வயது முதிர்ந்தவர்களுக்கான ஆதரவு போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

(4) மீள்விநியோகத் தொழிற்பாடுகள் ஊடாக சிறந்த சமத்துவத்தை ஏற்படுத்தல் மற்றும்

(5) சமூகத்தில் நடத்தைக்கு வழிகாட்டல் (ஏற்றுக்கொள்ளத்தக்க மற்றும் ஏற்றுக்கொள்ளத்தகாத நடத்தை பற்றிய வழிகாட்டலை வரி வழங்கலாம் என்பதனால்)

## வரிகளை அறவிடுவதன் ஊடாக அரசாங்கத்தினால் பல்வேறுபட்ட சமூக மற்றும் பொருளாதார குறிக்கோள்களை அடைந்துகொள்ள முடியும்.

(1) முதலீடுகளுக்கான வரி நன்மைகள் ஊடாக சேமிப்புக்கள் மற்றும் மூலதன உருவாக்கத்தை ஊக்குவித்தல்.

(2) ஐக்கிய நாடுகள் நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (ஞுனுபுள) அடைவதன் ஊடாக நிலைபேண்தகு அபிவிருத்தியை இயலச்செய்தல்.

(3) சலுகைகளைக் கொண்ட வரி வீதங்கள் ஊடாக சிறிய வணிகங்களை ஊக்கப்படுத்தல்.

(4) தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும் சூரிய பலகங்களைப் பொருத்துவதன் மீதான வரிக் குறைப்புக்கள் ஊடாக பசுமை சக்தி மூலங்களின் பயன்பாட்டை ஊக்குவித்தல்.

(5) வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறைகளைக் குறைப்பதன் ஊடாக இறைசார் மறுசீரமைப்புக்கள்.

(6) பின்தங்கிய பிரதேசங்களில் முதலீடுகளை மேற்கொள்வதற்காக வரி நிவாரணங்கள் ஊடாக பிராந்திய அபிவிருத்தியை ஊக்கப்படுத்தல்.

## வரிவிதிப்பின் 4 விதிகள் - வரிவிதிப்பின் அடிப்படை கோட்பாடுகள்

1. வருமானம்: சேவைகளுக்காகச் செலவிடுவதற்கான நிதிகளைத் திரட்டல்
2. மீள்விநியோகம்: செல்வந்தரிடமிருந்து வறியவருக்குச் செல்வத்தை மாற்றுதல்
3. மீள்விலையிடல்: வநுகர்வை ஊக்கப்படுத்தல்.'. ஊக்கமிழக்கச்செய்தல்
4. பிரதிநிதித்துவம்செய்தல்: ஆட்சியாளர்கள் பிரசைகளிடம் வரியை அறவிடுகின்றனர் பின்னர் அப்பிரசைகள் பொறுப்புக்கூறலைக் கோருகின்றனர்




## நியாயமான வரி விதிப்புக் கோட்பாடுகள்

(1) நடுநிலை
(2) சமத்துவம்
(3) முன்னேற்றகரமான தன்மை
(4) எளிமை
(5) நிலையான தன்மை
(6) வசதியானது



இரவு உணவு உட்கொள்ள குடும்பத்தினர் ஒன்றுகூடிய வேளை தனுஷ் அவரது நண்பரான நிரஞ்சன் அனுப்பிய வரிசெலுத்துவதன் முக்கியத்துவம் பற்றி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட இணையவழிக் காணொளி பற்றி விபரித்துக்கொண்டிருக்கின்றார்.

| | |
|---|---|
| தனுஷ் | எனது நண்பர் நிரஞ்சன் எனக்கு அனுப்பிய சுவாரஷ்யமான காணொளி ஒன்றை இன்று நான் உங்களுக்குக் காட்ட விரும்புகின்றேன். பாதைகள், அரச பாடசாலைகள், வைத்தியசாலைகளை அமைப்பதற்கும் ஏனைய அரச பயன்பாடுகளுக்கும் வரிகள் மூலம் கிடைக்கும் வருமானங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதை அக்காணொளி விபரிக்கின்றது. |
| தருஷி | மிகவும் சுவாரஷ்யமாக உள்ளது. |
| தனுஷ் | ஆம். நான் பெரும்பாலும் பணம்செலுத்தாமலேயே பாடசாலையில் 12 வருடங்களை நிறைவுசெய்தேன். தற்போது அரச பல்கலைக்கழகத்திலும் அவ்வாறே கல்விகற்றுவருகின்றேன். எனது கட்டணங்கள் பெயரளவில் மாத்திரமே உள்ளன. நான் கடந்தவாரம் ஊருக்குச்சென்றிருந்த வேளை எனது கல்லூரி சகமாணவர்களை சந்தித்தேன். அவர்கள் பிரத்தியேக வகுப்புக் கட்டணங்கள், நுழைவுக் கட்டணங்கள், களப்பயணக் கட்டணங்கள், தொழில்நுட்பக் கட்டணங்கள் போன்ற மேலும் பல கணிசமானளவு பணம் செலுத்த வேண்டியிருந்ததை அறிந்தேன். தனியார் பாடசாலைகளில் குறைந்தது 5-10 மடங்கு விலையுயர்ந்ததாக அதிகமான குடும்பத்தினரால் ஈடுசெய்ய முடியாதளவு இக்கட்டணங்கள் காணப்படுகின்றன. தனியார் பாடசாலைகளில் கட்டணங்களானவை தவணை ஒன்றுக்கு ரூபா. 30,000 தொடக்கம் ரூபா. 5 இலட்சம் வரை அறவிடப்படுகின்றன. தனியார் பல்கலைக்கழகங்களில் தவணை ஒன்றுக்கு 3 இலட்சம் மற்றும் 5 இலட்சத்திற்கும் இடைப்பட்ட கட்டணங்களுடன் சேர்த்து கற்கைநெறி ஒன்றுக்கு ரூபா. 2 மில்லியனுக்கும் அதிகமாக கட்டணம் அறவிடுகின்றனர். |
| அர்ஜுன் | உண்மையாகவா? ஆனாலும் இவ்வளவு பிள்ளைகளுக்கும் அரசாங்கத்தினால் எவ்வாறு இலவச கல்வியை வழங்க முடிகின்றது? |
| தனுஷ் | ஆம், கிட்டத்தட்ட 4இ000இ000 மாணவர்களைக் கொண்ட 10000 அரச பாடசாலைகள் காணப்படுகின்றன. ஆகையால், பாரிய அரச செலவினங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது. |
| நிமாலி | இது மிகப் பெரிய எண்ணிக்கை ஆகும். எமது கிராமத்திலுள்ள அதிக எண்ணிக்கையான மாணவர்கள் உள்ளனர். |
| தருஷி | இது சற்று புதிராக உள்ளது. எனக்குத்தெரிந்த இங்குள்ள ஒவ்வொரு மாணவரும் உள்ளூர் பாடசாலைக்குச் சென்றாலும், கிராமத்தில் வரிசெலுத்துபவர்கள் எவரையும் காணமுடிவதில்லை. |
| தனுஷ் | உண்மைதான், நாங்கள் நேரடியாக வரி செலுத்தாவிட்டாலும், அரசாங்கம் எங்களிடம் மறைமுகமாக வருமானத்தைத் திரட்டுகின்ற பல வழிகள் காணப்படுகின்றன. இதைப்பற்றிய மேலதிக விடயங்களை பின்னர் சொல்கின்றேன். இவ்வருமானத்தின் மூலமே இலவச கல்வியும் எல்லோருக்கும் பயனளிக்கின்ற ஏனைய சேவைகளும் வழங்கப்படுகின்றன. உதாரணமாக எமது அயல் ஊரான ஹபரகந்தவைப் பாருங்கள். அவ்வூரில் உள்ள அதிகமான தொழில்வாண்மையாளர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். அவர்கள் கிரமமாகத் தங்களது குடும்பத்தவர்களுக்குப் பணத்தை அனுப்பி, உள்ளூர் வணிகங்களில் அவற்றை முதலீடுசெய்கின்றனர். அவர்களின் கிராமமானது வளம்பெறத்தக்க சந்தை, பெரிய கடைகள் மற்றும் உன்னதமான வசதிகளுடன் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்துள்ளன. ஹபரகந்தவில் வசிப்பவர்களால் செலுத்தப்படும் வரிகளானவை பெரிய பாடசாலை ஒன்றையும் அச்சமூகத்தவர்களுக்கான விஷேடமான வைத்தியசாலை ஒன்றை கட்டுவதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. |
| தருஷி | பொதுச்சேவைகளுக்குப் பணம் செலவளிக்கும் வகிபாகத்தை மாத்திரமா வரிகள் செய்கின்றன? |
| தனுஷ் | இல்லவே இல்லை! சமூக மற்றும் பொருளாதார குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கான கருவிகளாகவும் வரிகள் காணப்படுகின்றன. உதாரணமாக, ஆராய்ச்சி முதலீடுகள், தகவல் தொழில்நுட்ப சேவைகளின் வளர்ச்சி மற்றும் உற்பத்தி தொழில்களில் மூலதன முதலீடு அளித்தல் போன்றவற்றை ஊக்கப்படுத்த அரசாங்கம் வரி ஊக்குவிப்புக்களை வழங்குகின்றது. |
| தருஷி | உண்மையில் வரி ஊக்குவிப்புக்கள் என்பது என்ன? |
| தனுஷ் | வரி ஊக்குவிப்புக்கள் என்பது குறைக்கப்பட்ட வரி வீதங்கள் அல்லது வரி விடுமுறைக்காலம் என்றழைக்கப்படும் முழுமையான வரி விலக்கு வடிவத்தில் காணப்படலாம். சில நடத்தைகளையும் செயற்பாடுகளையும் ஊக்குவிப்பதற்கு இவை வழங்கப்படுகின்றன. அவ்வாறே தருஷி, வரிகளானவை சில நடத்தைகள் அல்லது துறைகளுக்குத் தூண்டுதலைக் குறைக்க அல்லது ஊக்கமிழக்கச்செய்வதை நீங்கள் அறிவீர்களா?. உதாரணமாக, புகையிலைக்கும் மதுபானத்திற்கும் பாவ வரிகள் என்றழைக்கப்படும் 40மூ உயர்வீதத்தில் வரி அறவிடப்படுகின்றன. விளையாட்டு நிறுவனங்களுக்கும் 40மூ கொண்ட உயர்வீதத்திலே வரி அறவிடப்படுகின்றன என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள். |
| தருஷி | இது மிகவும் சுவாரஷ்யமாக உள்ளது. வரிகள் மனித நடத்தைகள் மீது செல்வாக்குச்செலுத்தும் என்பதை நான் அறிந்திருக்கவில்லை. புகையிலையும் மதுபானமும் இளைஞர்களுக்கும் வயதானவர்களுக்கும் பல்வேறு ஆரோக்கிய பிரச்சினைகளை ஏற்படுத்துவதனால் அவற்றிற்கு உயர்வாக வரி அறவிடல் சிறந்ததாகும். விளையாட்டு நிறுவனங்களுக்கும் அதிக வரி அறவிடல் சுவாரஷ்யமானதொரு விடயமாகும். நகரத்திலுள்ள அதிகமான சிறுவர்கள் காணொளி விளையாட்டுக்களில் பல மணி நேரங்களை செலவிடுவதனை காணொளிகளில் பார்த்திருக்கின்றேன். நிச்சயமாக இவை இச்சிறுவர்களின் கற்றலுக்குத் தடையாக அமையும் என்பது உறுதியான விடயமாகும். |
| நிமாலி | இது இளையவர்களுக்கு அபாயத்தை ஏற்படுத்தக்கூடிய பாதகமானதொரு பழக்கமாகும். |
| தனுஷ் | உண்மையான விடயம். விளையாட்டு நிறுவனங்கள் என்பது இணையவழி காணொளி விளையாட்டுக்கள் 40மூ வீத உயர் வரி விதிக்கப்படும் கெசினோ தொழில்படுத்துனர்களையும் உள்ளடக்குகின்றது. அதேபோன்று, பந்தய மற்றும் விளையாட்டு கம்பனிகள் அவர்களின் வருமான வரியின் நியாயமான பங்கை அரசாங்கத்திற்குச் செலுத்துகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது.<br><br>அதுமாத்திரமல்லாமல், செல்வத்தை மீளவழங்குவதன் ஊடாக வரிகளானவை பொருளாதார சமத்துவத்தையும் நியாயத்தையும் ஊக்குவிக்கின்றன. அதிக வருமானத்தை ஈட்டுபவர்கள் அதிக வரியைச் செலுத்துவதன் மூலம் மிகவும் சமனிலையான சமூகம் ஒன்றை உருவாக்க உதவுகின்றது. |

| | |
|---|---|
| நிமாலி | இது நியாயமாகத் தெரிகின்றது. ஆனாலும், உயர்வான வரிகளைச் செலுத்துவதன் மூலம் செல்வந்தர்கள் தமது செல்வத்தை இழக்கின்றார்கள் என என்னால் உறுதியாகக் கூற முடியாது. தாங்கள் எவ்வளவு வரியைச் செலுத்தி, மீதப்படுத்துகிறார்கள் என்பதற்கமையவே செல்வந்தர்களும் வறிய மக்களும் உள்ளனர் என்பதே எனது கருத்தாகும். |
| தனுஷ் | அவ்வாறு தென்படலாம். ஆனால், அதிக வரிகளைச் செலுத்துவதன் ஊடாக அரசாங்கத்தினால் திரட்டப்படும் வருமானத்திற்குச் செல்வந்தர்கள் அதிக பங்களிப்புக்களைச் செய்கின்றார்கள் என்பதே உண்மையான விடயமாகும். வறியவர்களும் கூட தமது சட்டைப்பைகளை வெறுமையாக்கிக்கொள்ளாமலும் அடிப்படைத் தேவைகளை நிவர்த்திசெய்துகொள்ளும் வகையிலும் மிகக்குறைந்த அளவிலேயே பங்களிப்புச்செய்கின்றனர். |

## தேசமொன்றின் உயிர்நாடியாக வரிகள்:



**பாதைகள், புகையிரதங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், அவசர சேவைகள் போன்றவற்றைப் பயன்படுத்துவதற்கு நாம் பணம் செலுத்துவதே வரிகள் எனப்படும்.**



**பொதுச் சேவைகள் அனைவருக்கும் கிடைக்கப்பெறுகின்ற அதேவேளை தனியார் பொருட்களும் சேவைகளும் அவற்றைச் சொந்தமாக வைத்திருப்பவர்கள் அல்லது அதற்காகப் பணம்செலுத்துபவர்களுக்கு வரையறுக்கப்பட்டிருக்கின்றது. 10இ096 அரச பாடசாலைகளும் கிட்டத்தட்ட 550 ஆரம்ப பராமரிப்பிற்கான வைத்தியசாலைகளும் சாதாரண குடும்பங்களுக்குக் குறைந்த செலவில் கல்வியையும் மருத்துவ கவனிப்பையும் வழங்குகின்றன.**



**புகையிலை மற்றும் மதுபானம் போன்றவற்றை பயன்படுத்துவதனால் உடல்நலத்திற்கு ஏற்படும் தீங்குகளை வரிகள் ஊக்கமிழக்கச்செய்கின்றன.**



**சூரிய பலகங்களைப் பயன்படுத்துவதற்கான நிவாரணங்களை வழங்குவதன் மூலம் வரிகளானவை பசுமை வலு மூலங்களை ஊக்கப்படுத்துகின்றன.**



**வரிகள் மூலம் கிடைக்கும் வருமானங்கள் நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு உதவுகின்றன.**



**வரிகள் சேமிப்புக்களையும் மூலதன உருவாக்கத்தையும் ஊக்குவிக்கின்றன.**

### சுருக்க வினாக்கள் - கற்றல் முகாமைத்துவ முறைமை

1. வரிசெலுத்துநரின் பணத்தினால் நிதியளிக்கப்படும் உங்களை அண்மித்து காணப்படுகின்ற பொதுப்பயன்பாடுகள் 5ஐ குறிப்பிடுக.
2. அதை ஒத்த சேவைகளை வழங்கும் தனியார் நிறுவனங்களில் இருந்து இவை எவ்வாறு வேறுபடுகின்றன?
3. வரிச் சலுகைகளைப் பெறும் 3 துறைகளை பட்டியலிடுக.
4. பொதுமக்களின் சிறந்த உடல் ஆரோக்கியத்திற்கு வரிகள் பங்களிப்புச்செய்யக்கூடிய 3 வழிகளைப் பட்டியலிடுக.
5. பெண்கள், கிராமிய வணிகங்கள் மற்றும் ஏனைய நலிவுற்ற வகுப்பினரின் பொருளாதார வலுவூட்டலுக்கான வாய்ப்புக்களை வழங்குவதன் ஊடாக வரிகள் சமத்துவத்தை ஏற்படுத்தக்கூடிய 3 வழிகளை பட்டியலிடுக.

# 7.2. வரி அடையாள இலக்கம்

### வரிசெலுத்துநர் அடையாள இலக்கம் (TIN) என்பது என்ன?

வரிகளை செலுத்துதல் அல்லது ஏற்றுமதி∴ இறக்குமதி அல்லது உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் இருந்து ஏதேனும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு TIN அல்லது வரிசெலுத்துநர் அடையாள இலக்கம் அவசியம் ஆகும்.

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் இலத்திரனியல் சேவைகளைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2ஆம் மாடியில் உள்ள ஆரம்ப பதிவு பிரிவு அல்லது ஏதேனும் பிராந்திய அலுவலகங்களுக்குச் சென்று வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

தனியாட்கள், பங்குடைமை வணிகங்கள், நிறுவனங்கள் மற்றும் ஏனையவர்களும் வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தைப் பெற்றுக்கொள்ளும் செயன்முறை இலகுவானதாகும்.

### Individuals must submit -

(i) தனிப்பட்டவர்கள் தேசிய அடையாள அட்டை/ செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம்/ சிரேஷ்ட பிரஜைகள் அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். வெளிநாட்டவர்கள் செல்லுபடியான கடவுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) வியாபார பதிவுச் சான்றிதழ் (தனியுரிமை சேர்க்கப்படுவதாயின்)

(iii) உபயோக கட்டண பட்டியல்/ நிலையான தொலைபேசிப் பட்டியல்/ வங்கிக் கணக்கு கூற்று அல்லது கணக்குப் புத்தகம்/ கிராம அலுவலர் சான்றிதழ் (தேசிய அடையாள அட்டையில் இருந்து முகவரி வேறுபடுமாயின்). வெளிநாட்டவர்களுக்கு உள்நாட்டு முகவரியின் உறுதிப்படுத்தல் அவசியமாகும்.

### வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தை வைத்திருக்க வேண்டும் என்பதன் மூலம் பொருள்படுவது என்ன? அதன் அவசியமும் நன்மைகளும்

2024ம் ஆண்டு சனவரி மாதம் 1ஆம் திகதி தொடக்கம் 18 வயது அல்லது அதற்கு மேற்பட்ட இலங்கையில் வதியும் தனியாட்கள் வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தைப் பெறுதல் கட்டாயம் ஆகும்.

1. வங்கி நடைமுறைக் கணக்கை ஆரம்பித்தல்.
2. கட்டட திட்டமிடலுக்கான அனுமதியைப் பெறல்.
3. மோட்டார் வாகனத்தைப் பதிவுசெய்தலும் அனுமதிப்பத்திரத்தைப் புதப்பித்தலும்.
4. காணி அல்லது காணி உரித்தைப் பதிவுசெய்தல்

போன்றவற்றிற்கு வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தைக் குறிப்பிடுதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தற்காலத்தில் வாகன அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பிக்கும் சந்தர்ப்பத்தில் இவ்வேற்பாடுகள் நடைமுறையில் இல்லாவிட்டாலும், இவ்வேற்பாடுகளானவை சட்டத்தின் ஓர் அங்கமாகவே காணப்படுகின்றன.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பணியாற்றும் அரச அலுவலர் திருமதி. பர்ணாந்து அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றிய உள்ளூர் கலைஞர்களுக்கான கூட்டமொன்றில் பங்குபற்றிவிட்டு அர்ஜுன் வீடு திரும்பினார். 2024ம் ஆண்டு சனவரி மாதம் 1ஆம் திகதி தொடக்கம் கட்டாயமாக்கப்பட்ட வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தை பதிவுசெய்தல் தொடர்பான புதிய சட்ட ஏற்பாடுகளைப் பற்றி தெளிவுபடுத்துவது கிராமத்திலுள்ள பாடசாலையின் அதிபரின் நண்பியான திருமதி. பர்ணாந்து அவர்களின் வருகையின் பிரதான நோக்கமாக அமைந்திருந்தது.

| | |
|---|---|
| திருமதி பர்ணாந்து | 18 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்திற்காக கட்டாயமாக பதிவுசெய்வதை அரசாங்கம் தளர்த்தியிருந்தாலும், பல சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இது முக்கியமானதாக தொடர்ந்தும் காணப்படுகின்றது என்பதைத் தயவுசெய்து ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்திற்காக இணையவழி அல்லது நேரடியாக சமர்ப்பித்தல் அல்லது படிவத்தை அஞ்சல்செய்வதன் ஊடாக விண்ணப்பிக்க முடியும். |
| சுனில் (மின்னியலாளர்) | ஆம். நீங்கள் வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தைப் பதிவுசெய்யத்தவறினால், ஏதேனும் அபராதத்தையோ அல்லது தண்டப்பணத்தையோ செலுத்தவேண்டிய அவசியம் இல்லை. ஆனாலும், இவ்வருட ஏப்பிறல் மாத 15 ஆம் திகதியின் பின்னர் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வரிசெலுத்துநர் அடையாள இலக்கம் கட்டாயம் என இத்திணைக்களம் அறிவித்துள்ளது. mandatory for DMT services from April 15 |
| சமிந்த (உள்ளூர் வாகன இயந்திரவியலாளர்) | என்றாலும், திருமதி. பர்ணாந்து அவர்களே, நான் உள்ளூர் வாகன இயந்திரவியலாளர். எனது மாத வருமானம் ரூபா. 100இ000 இற்குக் குறைவாக இருப்பதால் நானும் வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்திற்கு விண்ணப்பிக்க வேண்டுமா? |
| ரொஷான் (பலசரக்கு கடை உரிமையாளர்) | உண்மையாகவே நானும் அதைத்தான் கேட்க நினைத்தேன். கிராமப்பகுதிகளைச் சேர்ந்த எமக்கு மிகக் குறைந்த வருமானமே கிடைக்கின்றன. நாங்கள் வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்திற்காக பதிவுசெய்து வரிகளைச்செலுத்துவதால் எங்களுக்கும் ஏதாவது கிடைக்குமா? பாடுபட்டு உழைத்த வருமானத்திலிருந்து வரியாகச் செலுத்துவதால் எமக்கு ஏதேனும் அர்த்தமிருக்குமென எனக்குத் தோணவில்லை. வரிப்பணங்கள் ஏதேனும் நல்ல பயன்பாட்டிற்குப் பயன்படுத்தப்படுகின்றனவா? |
| திருமதி பர்ணாந்து | நல்ல கேள்வி. இவ்வடிப்படை அளவுகள் மாற்றமடையக்கூடியவை என்பதுடன் வருடாந்த பாதீடுகளிலும் மாற்றமடையும் என்பதை நினைவிற்கொள்ளுங்கள். எனவே, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணையத்தளத்திலுள்ள அண்மைய விகிதங்களை ஆராய்வது சிறந்ததாகும். Sri Lanka Tax Calculator 2024 \| iCalculator™ LK |

இதற்கு அப்பால் உங்களைச் சுற்றி உள்ளவற்றைப் பாருங்கள். கிராமத்திலுள்ள பிள்ளைகள் இலவசக் கல்வியைப்பெறுகின்ற பாடசாலைகள், இலவச அடிப்படைக் கவனிப்பைப் பெறும் மருந்தகம், அஞ்சல் அலுவலகம் மற்றும் இன்னும் பல பொது வசதிகளையும் பெறுகின்றனர். இவை அனைத்திற்கும் அரசாங்கத்தினால் திரட்டப்படும் வருமானத்திலிருந்தே நிதி வழங்கப்படுகின்றன. எனவே, வரிகளைச் செலுத்துவது மாத்திரம் எமது குடியியல் கடமையாக இருப்பதில்லை. அவை வெளிப்படையாகவும் வினைத்திறனான வகையிலும் அரசாங்கத்தினால் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதும் எமது கடமை ஆகும். வரி பற்றிய அறிவைப் பரப்பி அதுபற்றி தெரியப்படுத்தி வரிக் குற்றத்தை நாம் ஊக்கமிழக்கச்செய்ய வேண்டும்.

வரிசெலுத்துநர் அடையாள இலக்கம் பற்றிய விடயத்தில், வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்திற்காக விண்ணப்பிப்பது மாத்திரம் சட்டத்தினால் அவசியப்படுத்தப்படாமல் பின்வரும் சேவைகளைப் பெறுவதற்கும் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

1. வங்கி நடைமுறைக் கணக்கு ஒன்றை ஆரம்பித்தல்.
2. கட்டடத் திட்டத்திற்கான அனுமதியைப்பெறல்.
3. மோட்டார் வாகனத்தைப் பதிவுசெய்தலும் அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பித்தலும்.
4. காணி ஒன்றை அல்லது காணிக்கான உரித்தைப் பதிவுசெய்தல்.

வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தைப் பெறாமல் மேற்படி நன்மைகளை அடைந்துகொள்ள முடியாது.

**சமிந்த:** நன்றி. எமது அனைத்து வணிகமும் காசாகக் கையாளப்படும் போது நாம் ஏன் வங்கிக் கணக்கு ஒன்றைத் திறக்க வேண்டும்?

**திருமதி பர்ணாந்து:** அது இப்போது பலனளிக்ககூடியதாக இருப்பினும் எதிர்காலத்தைப்பற்றியும் சிந்தித்துப் பாருங்கள். உங்களது வணிகங்கள் வளர்ச்சியடைந்து செல்கின்ற போது வங்கிக் கணக்கை வைத்திருப்பதானது மேலதிகப்பற்றுக்கள், கொடுகடன் மற்றும் சிறிய வணிகங்களுக்கு உதவுவதற்கு வடிவமைக்கப்பட்ட அரசாங்கத் திட்டங்களுக்கும் கூட வங்கிக் கணக்கானது அனுகக்கூடியதாகவும் இருக்கும். இது ஒரு சலுகையாக மாத்திரம் காணப்படாமல் வளர்ச்சிக்கும் வாய்ப்புக்குமான திறவுகோளாகும்.

புதிய வரி விதிகளுக்கமைய, ஏதேனும் வரி நன்மையை அடைந்துகொள்வதற்கு ரூபா. 500இ000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவுகள் யாவும் வங்கிகள் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும்.

**சுனில்:** அதுவும் உண்மைதான், கடந்த வருடத்திலிருந்து நான் ஒரு சிறிய காணித்துண்டு ஒன்றைக் கொள்வனவுசெய்ய முயற்சித்துவருகின்றேன். எனினும், உரித்து உறுதி மற்றும் ஆவணப்பணிகளில் பல சிக்கல்களை எதிர்கொண்டுவருகின்றேன். வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தைப் பெற்றுக்கொள்ளாமல் இருந்துவிட்டேன். மிகவிரைவில் வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்திற்கான பதிவுப் படிவத்தைப் பெற்றுக்கொள்வேன்.

**சமிந்த:** சரி. விரைவில் எனது மோட்டார் சைக்கிளையும் புதுப்பிக்க வேண்டியுள்ளது. இதற்கும் வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தைப் பெற வேண்டும் என்பதைத் தெளிவாகப் புரிந்துவிட்டேன்.

**சுனில்:** தற்போது வரிசெலுத்துநர் அடையாள இலக்கம் இல்லாமல் வாகன அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பித்துக்கொள்ள முடிந்தாலும் மிகவிரைவில் அதற்கும் கட்டாயமாக்கப்படும் என நினைகின்றேன்.

**சமிந்த:** சரி

**முஹம்மட் (நிர்மாண ஒப்பந்தக்காரர்):** வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தின் அவசியம் பற்றி தெளிவுபடுத்தியமைக்கு திருமதி. பர்ணாந்து அவர்களுக்கு நன்றி. வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தைப் பெற்றுக்கொள்ள கிராமத்திலுள்ள இணைய வசதி வழங்கும் நிலையத்தில் இணையவழி முறையில் முயற்சிசெய்த போதிலும், இணையத் தொடர்பு மிகவும் மந்தமாகவும் நலிவாகவும் இருந்ததனால் சமர்ப்பிக்க முடியாமல் போய்விட்டது.

**திருமதி பர்ணாந்து:** கேட்பதற்குக் கவலையாக உள்ளது. வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்காக நீங்கள் கைமுறையாகப் பூரணப்படுத்திய வரிசெலுத்துநர் அடையாள இலக்க விண்ணப்படிவத்தை என்னிடம் தாருங்கள். நான் அதனை கொழும்பில் உள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களத் தலைமை அலுவலகத்திற்கு ஒப்படைப்பேன். ஏனையோர் றறற.சைன.பழஎ.டம எனும் அவ்வலுவலகத்தின் மின்னஞ்சலைத் தொடர்புகொள்ளலாம். அடுத்த படிமுறையானது இலத்திரனியல் சேவைகளைப் பெறுதல் மீது கிளிக்செய்து பின்னர் வரிசெலுத்துநர் பதிவு மீது கிளிக்செய்யவும். இங்கே காணப்படும் படிமுறைகளைப் பின்பற்றி, தேவையான தகவல்களைப் பூர்த்திசெய்து, தேசிய அடையாள அட்டையையும் ஏனைய துணை ஆவணங்களையும் பதிவேற்றம்செய்யவும். அவ்வாறே, கைமுறையாகப் பூரணப்படுத்திய படிவங்களைப் பெற்றுக்கொள்ள உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் பல பிராந்திய அலுவலகங்கள் காணப்படுகின்றன.

**சமிந்த:** இவ்வலுவலகங்கள் எங்கே அமைந்துள்ளன? எமது கிராமத்திற்கு மிக அருகில் அமைந்துள்ள அலுவலகம் எது?

**திருமதி பர்ணாந்து:** உங்களது கேள்விக்கு நன்றி. நாடு முழுவதும் பல பிராந்திய அலுவலகங்கள் காணப்படுவதுடன் கொழும்பு பெருநகர பிராந்தியத்தில் மூன்று பிராந்திய அலுவலகங்களும் காணப்படுகின்றன. ஆநவசழிழடவையெ யனெ சுநபழையெட முகககைநளை ஊடாக முழுமையான பட்டியலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**முஹம்மட்:** நிச்சயமாக, உங்களுக்கு நன்றி திருமதி. பர்ணாந்து அவர்களே, நான் வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தைப் பெற்றுக்கொண்டால் தானாகவே வரியைச் செலுத்த வேண்டுமா?

**திருமதி பர்ணாந்து:** அவ்வாறில்லை முஹம்மட். வெறுமனே வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தைக் கொண்டிருப்பது நீங்கள் தானாகவே வரிகளைச் செலுத்தத் தொடங்க வேண்டும் என அர்த்தப்படாது. உங்களால் ஈட்டப்படும் வருமானம் ஆண்டிற்கு ரூபா. 1இ800இ000 ஐ விட அதிகமாயின் (அல்லது மாதமொன்றுக்கு ரூபா. 150இ000 ஐ விட அதிகமாயின்) மாத்திரம் நடப்பு மதிப்பீட்டு ஆண்டிலிருந்து (2025 ஏப்பிறல் 1 ஆம் திகதி தொடக்கம் 2026 மாச்சு 31 ஆம் திகதி) அல்லது அதற்குப்பின்னர் நீங்கள் வரியைச் செலுத்த வேண்டியிருக்கும். எனினும், இவ்வளவு வீதங்கள் அடுத்துவரக்கூடிய பாதீடுகளில் மாற்றமடையக்கூடும் என்பதுடன் 2025 பெப்புருவரி பாதீட்டிலுள்ள தற்போதைய வீதங்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். ஐடெயனெ சுநஎநரெந (Amendment) Bill, 2025 - Lanka Law

| | |
|---|---|
| சுனில் | உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது இவ்வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தைப் பெற்றுக்கொள்ளும் செயன்முறையை இலகுபடுத்தியுள்ளதுடன் பதிவுசெய்யாதவர்களுக்கு ரூபா. 50இ000 தண்டப்பணத்தை விதிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது. நாங்கள் விரைவாக இதற்கு விண்ணப்பிக்க வேண்டும். |
| சமிந்த | கடந்த வருடத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணையத்தளம் செயலிழந்திருந்தது என்பது உண்மையற்ற விடயமல்லவா? நகரத்தில் வசிக்கும் நண்பர் ஒருவர் இதைச்சொன்னார். |
| திருமதி பர்ணாந்து | நீங்கள் சொல்வது சரி. கடந்த வருடத்தில் வரியைக் கோவைப்படுத்துவதற்கான இறுதித்திகதி தொடர்பில் சிறிய தொழில்நுட்ப கோளாறுகள் காணப்பட்டன. என்றாலும், உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது அதனை சில மணிநேரங்களில் சீரசெய்யக்கூடியதாகவிருந்தது. கடந்த ஆண்டு தொடக்கம் இணையத்தளமானது இற்றைப்படுத்தப்பட்டு பாவனையாளருக்கு மிகவும் சிநேகமிக்க வகையில் மாற்றம்செய்யப்பட்டுள்ளது. |
| சமிந்தவும் ஏனையோர்களும் | நன்றி |

## கிராமிய தொழில்முயற்சிகளுக்கான புதிய ஆரம்பம் - அர்ஜு னின் வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்துடனான பயணம்:



- TIN என்பது வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தைக் குறிக்கின்றது.
- 2024 சனவரி மாதம் 1 ஆம் திகதியின் பின்னர் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து வதிபவர்களும் வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தைப் பதிவுசெய்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதற்கு இணங்க மறுப்பவர்கள் ரூபா. 50,000 வரை தண்டப்பணத்தைச் செலுத்தவேண்டும்.
- வெறுமனே வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தைப் பெற்றுக்கொள்வது வரிகளைக் கோவைப்படுத்துவதெனக் குறித்துக்காட்டாது.



வங்கியில் நடைமுறைக்கணக்கு ஒன்றை ஆரம்பித்தல்

- கட்டட திட்டத்திற்கான அனுமதியைப் பெறல்
- மோட்டார் வாகனத்தைப் பதிவுசெய்தல் அல்லது அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பித்தல்
- காணி அல்லது காணி உரித்தைப் பதிவுசெய்தல்
- போன்றவற்றிற்கு வுஐபே கட்டாயமாக்கப்பட்டுள்ளது.



வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்திற்கான விண்ணப்பப்படிவங்களைக் கொழும்பில் உள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களத் தலைமைக் காரியாலயம் அல்லது ஏதேனும் பிராந்திய அலுவலகத்தில் நேரடியாக சமர்ப்பிக்கலாம்.

இணையவழி விண்ணப்பப்படிவங்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணையத்தளத்தின் ஊடாக சமர்ப்பிக்கலாம்.

**www.ird.gov.lk - > Access to e-services -> Taxpayer registration**

### சுருக்க வினாக்கள்/ மதிப்பீடு - கற்றல் முகாமைத்துவ முறைமை

1.. வரிசெலுத்துநர் அடையாள இலக்கம் என்பதன் முழு வடிவம் என்ன? அது ஏன் தேவைப்படுகின்றது?

(வரிகளைக் கோவையிடல், ஏற்றுமதி.:. இறக்குமதி மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சேவைகளைப் பெறுதல் போன்றவற்றிற்கானது என்பது விடையாக இருக்க வேண்டும்)

2. வரிசெலுத்துநர் அடையாள இலக்கம் இன்றி பெறமுடியாத 4 சேவைகளைப் பட்டியலிடுக.

3. வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தைப் பெறுவதானது வரிகள் கோவையிடப்பட வேண்டும் என்பதைக் குறிக்கின்றதா? ஆராய்க.

## 7.3. வரிகளின் வகைகள்

சில வரிகள் (தனியாள் வருமான வரி மற்றும் நிறுவன வருமான வரி) நேரடியாகச் சேர்க்கப்படுகின்ற அதேவேளை பெறுமதி சேர்க்கப்பட்ட வரி போன்றன நேரடியற்ற வரிகள் ஆகும்.

வரிசெலுத்துநரின் வருமானம் மற்றும் இலாபங்கள் மீதே நேரடி வரிகள் அறவிடப்படுகின்றன. தொழில் வருமானத்தை ஈட்டுகின்ற தனியாள், வருமானங்களை ஈட்டும் சிறிய வணிக உரிமையாளர், வைத்தியர் போன்ற தொழில் ரீதியான வருமானங்களை ஈட்டும் ஆள் ஒருவர், முதலீடுகள் மீது வட்டி அல்லது பங்கு இலாபங்களை ஈட்டும் நபர் போன்ற அனைவரும் அரசாங்கத்திற்கு நேரடியாக வருமான வரிகளைச் செலுத்துகின்றனர்.

அதிக வருமானத்தை ஈட்டுபவர்கள், நேரடி வரிகளின் அதிக சுமையைக் கொண்டுள்ளனர். நேரடி வரிகளின் அதிகரிக்கும் தன்மையை இது விபரிக்கின்றது.

நேரடியற்ற வரிகள் வருமானத்தின் மீதன்றி ஆனால், பொருட்களினதும் சேவைகளினதும் நுகர்வின் மீது செலுத்தப்படுகின்றது. உதாரணமாக, உணவகக் கட்டணங்கள், தனியார் வாடகை வாகனக் கட்டணங்கள், ஆடைக் கொள்வனவுகள் போன்றவற்றிற்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (ஏயுவு) சேர்க்கப்படுகின்றது. இவ்வகையில், ஒவ்வொரு ஆளும் அச்சேவைகளுக்கு அல்லது பொருட்களுக்குச் செலுத்துகின்ற போது பெறுமதி சேர்க்கப்பட்ட வரியைச் செலுத்துகின்றார். இவ்விதத்தில் இணங்குவது இலகுவானதும் எளிதானதும் ஆகும்.

வருமானத்தைப் பொருத்து நுகர்வு அதிகரித்தாலும், குறைந்த மற்றும் நடுத்தர வருமானத்தையுடைய குடும்பத்தினர் உணவு, உறையுள் மற்றும் சுகாதாரக் கவனிப்பு போன்ற அடிப்படைத் தேவைகளுக்குத் தங்களின் வருமானத்தின் அதிக விகிதாசாரத்தைச் செலவிடுகின்றனர். இவ்வகையில், நேரடியற்ற வரிகளானவை குறைந்துசெல்லும் போக்குடையதாகவும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு விகிதாசாரமற்ற சுமையையும் ஏற்படுத்துகின்றன.

பொருட்களின் உற்பத்தியாளர் அல்லது சேவைகளை வழங்குபவர்கள் போன்ற வரிசெலுத்துநர் அரசாங்கத்திற்கு மறைமுக வரிகளை செலுத்தினாலும், நன்மைகளைப் பெறுகின்ற வேறோர் ஆளிடமிருந்து அதாவது இறுதி நுகர்வோரிடமிருந்தும் வரித்தொகை அறவிடப்படுகின்றது.

பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (ஏயுவு), கலால் மற்றும் சுங்கத் தீர்வை என்பன நேரடியற்ற வரிக்கான உதாரணங்களாகும்.

கோதுமை, கோதுமைப் பொருட்கள் மற்றும் குழந்தைகளுக்கான உணவு போன்ற சில அத்தியாவசிய பொருட்களுக்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளன.

மதுபானம் மற்றும் பெற்றோலிய உற்பத்திகள் போன்ற சில பொருட்களைக் கொள்வனவுசெய்வதற்காக கலால்தீர்வை உள்ளடக்கப்பட்டுள்ளது.

| | நேரடி வரிகள் | மறைமுக வரிகள் |
|---|---|---|
| வரைவிலக்கணம் | வரிசெலுத்துநர்களால் அரசாங்கத்திற்கு நேரடியாகச் செலுத்தப்படுகின்றது. | நுகர்வோர்களிடமிருந்து இடையேற்பாட்டாளர்களால் மறைமுகமாக அறவிடப்படுகின்றது. |
| எடுத்துக்காட்டு | வருமான வரி, நிறுவன வரி, ஆதன வரி | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (ஏயுவு)இ கலால் தீர்வைகள், இறக்குமதி தீர்வைகள். |
| சுமை | வரிசெலுத்துநர் மீது நேரடியாக விதிக்கப்படுவதுடன் கைமாற்றம்செய்ய முடியாது. | பொருட்கள்.். சேவைகளின் வழங்கல் சங்கிலி ஊடாக ஏனையோருக்குக் கைமாற்றம் செய்யப்படலாம். |
| அடிப்படை | வருமானம், சொத்துக்கள் மற்றும் செல்வம் | நுகர்வும் கொடுக்கல்வாங்கல்களும் |
| நிர்வகிப்பதன் இலகுதன்மை | அதிக வளங்கலும் அறவீட்டுப் பொறிமுறையும் தேவைப்படும். | விற்பனை.். சேவை மையத்தில் அறவிடுவது இலகுவானது. |
| பரம்பல் தாக்கம் | அதிக வருமானம் என்பது அதிக வரிச் சுமை என்பதனால் அதிகரித்துச்செல்வதும் சமத்துவமானதுமாகும். | பொருட்களையும் சேவைகளையும் பயன்படுத்துவதற்காகத் தங்களின் வருமானத்தின் உயர்வீதத்தைச் செலவுசெய்யும் குறைந்த வருமானம்பெறும் வகுப்பினர்களை விகிதாசாரமற்ற வகையில் பாதிக்கின்றது. |

**(ஆ) உரையாடல்**

தனது பல்கலைக்கழக அனுமதிச் செயற்பாடுகளைப் பூரணப்படுத்துவதற்கு தனுஷ் அண்மையில் அவரது நண்பர்களுடன் நகரத்திற்கு மேற்கொண்ட பயணத்தைப் பற்றி தனுஷும் தருஷியும் உரையாடிக்கொண்டிருந்தனர்.

| | |
|---|---|
| தருஷி | கடந்த வாரம் நகரத்திற்குச் சென்ற உங்களது பயணத்தைப் பற்றி நீங்கள் குறிப்பிட்ட சுவாரஷ்யமான விடயம் என்ன? |
| தனுஷ் | ஆம், அது ஆச்சரியமானது! நேரடியற்ற வரி பற்றி கடந்த மாதம் நான் உங்களுக்குக் கூறிய விடயத்தை ஞாபகப்படுத்திப் பாருங்கள். நாங்கள் எம்மை அறியாமலே வரி செலுத்திக்கொண்டிருக்கின்றோம். |
| தருஷி | என்ன சொல்கிறீர்கள்? எனக்கு அவ்வாறு தோன்றவில்லை. 15 வயதுடைய எனக்கு எவ்வித வருமானமும் இல்லை. அத்துடன், வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் எந்த தேவையும் இல்லை. |
| தனுஷ் | நானும் அதைத்தான் நினைத்தேன். என்றாலும் இதைச் சற்று செவிமடுங்கள். அனுமதி அலுவலகத்தில் எமது ஆவணங்களைச் சமர்ப்பித்ததன் பின்னர் அருகிலுள்ள உணவகம் ஒன்றில் பகலுணவை உட்கொள்ளத் தீர்மானித்தோம். மொத்தமாக ரூபா. 2000 செலுத்தவேண்டியதால் ஒருவருக்கு ரூபா. 400 வீதம் ஐந்து பேரும் பங்களிக்க வேண்டும் எனக் கணக்கிட்டோம். உணவுக்கான பற்றுச்சீட்டைப் பெற்ற வேளையில் அது ரூபா. 2360 ஆக இருந்தது. |
| தருஷி | கொஞ்சம் இருங்கள். ஏன் மேலதிகமாக ரூபா. 360 எடுத்தார்கள்? |
| தனுஷ் | நிச்சயமாக, நாங்கள் நினைத்ததே நடந்தது. அது 18ூ வீத பெறுமதி சேர்க்கப்பட்ட வரி ஆகும். ஆகவே, நாங்கள் ஒவ்வொருவரும் ரூபா. 72 வரியாகச் செலுத்தினோம். |
| தருஷி | நீங்கள் இன்னும் வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தை எடுக்கவில்லை தானே. இருந்தாலும் எப்படி அந்த வரியைச் செலுத்தினீர்கள்? |
| தனுஷ் | நேரடி வரியான வருமான வரியைச் செலுத்துவதற்கு வரிசெலுத்துநர் அடையாள இலக்கம் அவசியமாகும். பெறுமதி சேர்க்கப்பட்ட வரி நுகர்வை அடிப்படையாகக் கொண்ட வரி ஆகும். உணவகத்தின் உரிமையாளரால் செலுத்தப்படும் நேரடியற்ற வரியாக இது காணப்பட்டாலும், வாடிக்கையாளர்களாகிய எம்மீது விலைப் பற்றுச்சீட்டில் சேர்ப்பதன் மூலம் எமக்குக் கடத்தப்படுகின்றது. |

| | |
|---|---|
| தருஷி | உண்மையாகவே சுவாரஷ்யமாக உள்ளது. அப்படியென்றால், எவ்வித வருமான வரியையும் இதுவரை நான் செலுத்தாவிட்டாலும், பொருளொன்றைக் கொள்வனவுசெய்கின்ற அல்லது சேவையொன்றைப் பயன்படுத்துகின்ற ஒவ்வொரு தடவையும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியைச் செலுத்துவதன் ஊடாக அரச வருமானத்திற்கு இன்னும் பங்களிப்புச்செய்து வருகின்றேன். ஆனாலும், இதைப்பற்றி எல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்? |
| தனுஷ் | பாடசாலை அதிபரான திரு. பெரேரா அவர்களின் புதல்வரான எனது நண்பர் நிரஞ்சனை ஞாபகமிருக்கின்றதா? வரிகள் பற்றிய விடயத்தில் அவர் மிகவும் ஆர்வமாக இருப்பதுடன் எதிர்காலத்தில் கணக்காளராகுவதற்கும் விரும்புகின்றார். மற்றுமொரு சுவாரஷ்யமான விடயம் என்னவென்றால் நாங்கள் மதிய உணவுக்கான விலைப்பற்றுச்சீட்டை பெற்றபோது, பற்றுச்சீட்டை வலியுறுத்திப் பெறாவிட்டால் ரூபா. 200 கொண்ட விலைக்கழிவை எமக்குத் தருவதாகக் காசாளர் எம்மிடம் கூறினார். ஆனாலும் நிரஞ்சன் "அதற்கு முடியாது" எனக்கூறினார். |
| தருஷி | ஏன் கழிவைப் பெறவில்லை? |
| தனுஷ் | ஏனெனில் இது சட்ட விரோதமானதாகும். பணத்தின் மூலம் கொடுக்கல்வாங்கல் செய்வதானது வருமானத்தைக் குறைத்து அறிக்கையிடுவதும் அது வரி ஏய்ப்புச்செய்வதுமாகும். இவ்விதத்தில் சேகரிக்கப்படும் பணம் ஒட்டுமொத்தமாகப் பணத்தின் மூலம் வர்த்தகம் செய்யப்படுவதைக் கண்டுபிடிப்பதைத் தவிர்க்க முயற்சிக்கின்ற ஊழல்செய்யும் அலுவலர்களுக்கு இலஞ்சமாக வழங்குவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது என நிரஞ்சன் விபரித்தார். இது அவ்வளவு விரும்பத்தகுந்த விடயமல்ல. |
| தருஷி | உண்மைதான்! கிராமத்திலுள்ள எங்களைப்போன்ற உண்மையான தேவைகளை உடையவர்களுக்குப் பல சேவைகளை வழங்குவதற்காக வரிகள் பயன்படுத்தப்படுகின்றன. வரி ஏய்ப்புக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதுடன் இத்தகைய செயற்பாடுகள் பற்றி சாதாரண மக்கள் வரி அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்வதற்கான சில வழிமுறைகள் காணப்படுதல் வேண்டும். |
| தனுஷ் | உண்மைதான். முழுமையானதும் நியாயமானதுமான வரி சேகரிப்புக்களை உறுதிசெய்வது எமது குடியியல் கடமை ஆகும். பற்றுச்சீட்டை மாத்திரம் வலியுறுத்திப்பெறுவதோடு நின்றுவிடாது அதிகாரிகளிடம் இதைப்பற்றி முறைப்பாடுசெய்யவும் வேண்டும்.<br><br>உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது இத்தகைய விடயங்களை உரிய ஆதாரத்துடன் முறைப்பாடுசெய்வதற்குப் பொதுமக்களை ஆர்வமூட்டி தகவல்வழங்குபவரின் அடையாளத்தைப் பாதுகாத்து இரகசியமாகப் பேணுவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது. விபரங்களை cgir@ird.gov.lk என்ற முகவரிக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு மின்னஞ்சல் செய்யலாம். பிரதேச அலுவலகங்களும் இவ்விபரங்களை வழங்க முடிவதுடன் அவற்றின் தொடர்பு இலக்கங்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம். Metropolitan and Regional Offices.<br><br>இம்முறைப்பாடுகளைக் கவனமாக ஆராய்ந்ததன் பின்னர், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் தலைமை அலுவலக வளாகத்தில் பொருத்தப்பட்டுள்ள முறைப்பாட்டுப் பெட்டியில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அனுப்பப்படும். பல்வேறு அலுவலர்களின் தொலைபேசி இலக்கங்கள் உள்ளடக்கிய தொடர்பு விபரங்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளமுடியும். |
| தருஷி | வரிக் குற்றங்களைத் தடுப்பதற்கு அது மிகச்சிறந்த நடவடிக்கை ஆகும். |
| தனுஷ் | மேலும் நிரஞ்சன் இன்னுமொரு விடயத்தையும் இதனோடு சேர்த்துக்கூறினார். இவ்வணிகங்கள் வரிச் சட்டங்களை மீறுவதைப் பற்றி நாம் முறைப்பாடுசெய்யத் தவறினால், அவர்கள் ஏனைய துறைகளிலுள்ள ஒழுங்குவிதிகளை மீறுவதற்கும் மோசமான தீங்குகளை ஏற்படுத்தக்கூடியவாறு உணவின் தரத்திலும் பாதுகாப்பிலும் விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்வதற்கு ஊக்கப்படுத்துவதாக அவர்கள் உணரலாம். ஆகையால், வரி செலுத்துவதை ஊக்குவித்தல் ஒவ்வொருவரினதும் சிறந்த நலனாக அமையும். |
| தருஷி | அவ்வாறே, நாங்கள் அறியாமலே பெறுமதி சேர்க்கப்பட்ட வரியைச் செலுத்துவதற்கு ஏதேனும் உதாரணங்கள் இருக்கின்றதா? |
| தனுஷ் | ஆம். உங்களுக்காக நான் நகரத்தில் கொள்வனவுசெய்த ஆடையிலுள்ள விலைப்பற்றுச்சீட்டைப் பாருங்கள். பஸ் தரிப்பிடத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் ˚ைஉைமஅந வாகன பயணமும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியை உள்ளடக்கியுள்ளது. |
| தருஷி | இது ஒரு சுவாரஷ்யமான விடயமாக இருந்தாலும் ஒரு வகையில் நியாயமற்றதாக உள்ளதென நினைக்கின்றீர்களா? நாங்கள் சொற்ப அல்லது வருமானமற்ற எளிமையான கிராமத்தவர்கள். இருந்தாலும், நகரத்திலுள்ள செல்வந்தர்கள் செலுத்துவதைப் போன்று சமமான பெறுமதி சேர்க்கப்பட்ட வரியைச் செலுத்துகின்றோம். |
| தனுஷ் | நீங்கள் கூறியது சரி. இதே விடயத்தைத்தான் நிரஞ்சனும் கூறினார். செலுத்தக்கூடிய இயலுமையின் அடிப்படையிலன்றி குறைவடையும் போக்குமிக்கதாக பெறுமதி சேர்க்கப்பட்ட வரி காணப்படும். அதே சமயத்தில், நேரடி வரிகளானவை உங்களது வருமானம் அதிகமாக இருப்பின் அதிகமாக செலுத்த வேண்டும் என்பதன் படி அதிகரிக்கும் போக்குடையதாகக் காணப்படும். |
| தருஷி | இதைக்கொஞ்சம் தெளிவுபடுத்த முடியுமா? |
| தனுஷ் | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி ஒவ்வொருவருக்கும் அதே வீதத்தில் ஏற்புடையதாகின்றது. ஆனால் நுகர்விற்காகச் செல்கின்ற வருமானத்தின் பங்கு வருமான அதிகரிப்பதற்கேற்ப குறைவடைகின்றது. ஆகையால், குறைந்த வருமானம்பெறும் குடும்ப அலகுகள் உயர்வருமானம்பெறும் குடும்ப அலகுகளை விட நுகர்வின் மீது தமது வருமானத்தின் பாரிய பாகத்தைச் செலவிடுகின்றனர். |
| தருஷி | அப்படியானால், நாம் ஏன் நேரடி வரிகளுக்கு எளிதாக மாறக்கூடாது? |
| தனுஷ் | அது அவ்வளவு இலகுவானதல்ல. நேரடி வரிகளானவை தமது வருமானத்தை மக்கள் தாமாக முன்வந்து அறிக்கையிடுவதிலும் தேவையான வரிகளைச் செலுத்துவதிலும் தங்கியிருக்கின்றது. அதை அமுல்படுப்படுத்திக் கண்காணிப்பது சிரமமாகும். |
| தருஷி | ஆம், வரிகள் செலுத்துவதனைத் தவிர்ப்பதற்கான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த விரும்பும் அவ்வுணவகத்தின் உரிமையாளரைப் போல ஆயிரக்கணக்கானவர்கள் உள்ளனர். |

| | |
|---|---|
| தனுஷ் | வரி ஊழல்களைப் பற்றி கண்காணிப்பது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மிகப்பெரிய பணி ஆகும். பெறுமதி சேர்க்கப்பட்ட வரி போன்ற நேரடியற்ற வரிகளானவை விற்பனை இடம்பெறும் மையத்திலே தன்னியக்கமாகச் சேகரிக்கப்படுவதனால் அவற்றை நிர்வகிப்பது மிகவும் எளிதாகும். அதனால் தான் வரி வருமானத்தின் மிகப்பெரிய மூலமாக பெறுமதி சேர்க்கப்பட்ட வரி காணப்படுகின்றது |
| தருஷி | இருந்தும் நேரடி வரிகள் நியாயமானவையாக இருப்பதாக நான் உணர்வதுடன், அவை எமது வருமானங்களின் பிரதான மூலமாக இருக்க வேண்டும். |
| தனுஷ் | சரியாகச் சொன்னீர்கள்! ஆனாலும், நேரடி வரிகளுக்கான வரித்தளம் விரிவுபடுத்தப்பட்டு அதிகமானவர்கள் அவர்கள் உழைக்கும் பல்வேறுபட்ட வருமான வகைக்கேற்ப வரிகளைச் செலுத்த ஊக்கப்படுத்தப்பட வேண்டும். இதனால் தான் நியாயமான வரி முறைமையின் முதற்கட்டமாக வரிசெலுத்துநர் இலக்கத்தைக் கட்டாயமாகப் பதிவுசெய்வதை அரசாங்கம் வலியுறுத்திவருகின்றது. |
| | விளங்கிவிட்டது. எனவே, வரிசெலுத்துநர் அடையாள இலக்கம் என்பது வரிகளைச் செலுத்துவது மாத்திரமல்லாமல் சிறந்த சமூகமொன்றை வழிநடாத்திச்செல்வதற்கு அனைத்துப் பணிமுறைகளும் சிறப்பாக உருவாக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றியதாகும். |
| தருஷி | முற்றிலும் சரியானது எனது சிறிய தங்கையே! |
| தனுஷ் | வரி தொடர்பான விடயம் மிகவும் ஆர்வமாக உள்ளது. உயர்தர வகுப்புக்களில் இதைப்பற்றி எமக்கு கற்பித்தல் வேண்டும். அல்லது எமது பாடசாலையில் உள்நாட்டு இறைவரித் திணைக்கள அலுவலர்களால் சில விழிப்புணர்வு அமர்வுகளை ஏற்பாடுசெய்யுமாறு எமது அதிபரிடம் நாம் கோரலாம். |
| | நல்லதொரு யோசனை! |

## பொருட்கள் மற்றும் சேவைகளின் வரிகளின் மறைகரம்

நேரடி வரி மற்றும் நேரடியற்ற வரி: நேரடி வரி என்பது யார் மீது வரி விதிக்கப்படுகின்றதோ (தனியாள்.'. வணிகம்.'. ஏனையவர்கள்) அவ்வரிசெலுத்துநரால் நேரடியாகச் செலுத்தப்படும் வரி ஆகும். நேரடி வரியை வேறொருவருக்கோ அல்லது நிறுவனத்திற்கோ கைமாற்ற முடியாது. மறுகரத்தில், நேரடியற்ற வரிகளை ஒரு வரிசெலுத்துநரிடம் இருந்து வேறொருவருக்குக் கைமாற்ற முடியும். நேரடியற்ற வரி என்பது பொருட்கள் அல்லது சேவைகளின் விலையுடன் சேர்த்து நுகர்வோர் வரியை உண்மையாகச் செலுத்துகின்ற விதத்தில் பொருளொன்றின் அல்லது சேவையொன்றின் விலையினை அதிகரிக்கின்ற வரி ஆகும். நேரடியற்ற வரியானது பொருட்கள் அல்லது சேவையை நுகர்வுசெய்யும் மையத்தில் சேகரிக்கப்படுகின்றது. சான்றாக. பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (ஏயுவு)இ கலால் தீர்வைகள் மற்றும் இறக்குமதித் தீர்வைகள்.

- **நேரடி வரிகளானவை வரிசெலுத்துநரால் ஈட்டப்படும் வருமானத்தின் அடிப்படையில் செலுத்தப்படுகின்றது.**
- **நேரடியற்ற வரிகளானவை நுகர்வுசெய்யும் போது செலுத்தப்படும் (உணவகம், பெற்றோல் நிரப்பு நிலையம், சினிமா திரையரங்கு, வாடகை வாகனம் போன்றன). நுகர்வின் போது அறவிடப்பட்டாலும் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குநரால் செலுத்தப்படும்.**
- **நேரடி வரிகளானவை அதிகரிக்கும் போக்குடையதாகவும் செலுத்தக்கூடிய இயலுமையின் அடிப்படையில் அமைந்திருக்கும். அதிக வருமானம் உயர்வான வரிகளாகக் காணப்படும்.**
- **நேரடியற்ற வரிகளானவை குறைந்த வருமானம் பெறுபவர்களின் வருமானத்தில் உயர்வான விகிதாசாரத்தில் அறவிடப்படுவதால் குறைவடையும் போக்குடையதாகக் காணப்படும்.**
- **நேரடி வரிகளைக் காட்டிலும் நேரடியற்ற வரிகளை நிர்வகிப்பது இலகுவாகும்.**



| நேரடியற்ற வரிகள் | | |
|---|---|---|
| பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (ஏயுவு)- பொருட்களுக்கும் சேவைகளுக்குமானது | கலால் தீர்வை- பெற்றோலியம் போன்ற உற்பத்திகளுக்கானது | சுங்கத் தீர்வை- இறக்குமதிகளுக்கானது |
| பொருட்களைக் கொள்வனவுசெய்கின்ற போதும் (கோதுமை, உள்நாட்டில் உற்பத்திசெய்யப்படும் பால் பொருட்கள் போன்ற சில அத்தியாவசிய பொருட்களுக்கு விலக்களிப்புக்கள்) உணவகங்கள், வணிக வளாகங்கள் மற்றும் வாடகை வண்டிகள் போன்றவற்றின் சேவைகளைப் பெறுகின்ற போதும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி சேகரிக்கப்படுகின்றது. | | |
|  |  |  |

### சுருக்க வினாக்கள்: மதிப்பீடு ☐ கற்றல் முகாமைத்துவ முறைமை

1. நேரடி மற்றும் நேரடியற்ற வரிகளுக்கிடையிலான வேறுபாடு என்ன? சுமை, அதிகரித்துச்செல்லும்போக்கு எதிர் குறைந்துசெல்லும்போக்கு, இணங்கியொழுகுவதன் இலகுதன்மை என்பவற்றிற்கான குறிப்பை விடை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

2. நேரடி மற்றும் நேரடியற்ற வரிகளுக்கு முறையே ஆகக்குறைந்தது இரண்டு உதாரணங்கள் வீதம் குறிப்பிட்டு விளக்குக.

3. ரூபா. 1இ300இ000 வருடவருமானத்தை உடைய திரு. அக்ரம் என்பவரும் ரூபா. 500இ000 வருட வருமானத்தைக் உடைய ரொஷான் என்பவரும் கிறிஸ்மஸ் ஆடை கொள்வனவிற்காகக் கடைக்குள் நுழைகின்றனர். திரு. அக்ரம் காலணிச் சோடி மற்றும் சேர்ட் ஒன்றை ரூபா. 3000 இற்கு கொள்வனவுசெய்ததுடன் அதேவேளை ரொஷான் அவரது முழுக் குடும்பத்திற்குமான ஆடைக்கொள்வனவிற்காக ரூபா. 3000 ஐ செலவிட்டார்.

   (i) திரு. அக்ரம் மற்றும் திரு. ரொஷான் என்பவர்களால் முறையே செலுத்தப்படும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (ஏயுவு) எவ்வளவு? (பெறுமதி சேர்க்கப்பட்ட வரி வீதம் 18மூ)?

   (ii) பெறுமதி சேர்க்கப்பட்ட வரியின் தன்மை பற்றி இது எமக்கு உணர்த்துவது என்ன?

## 7.4. நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கான வரிவிதிப்பு

### சிறிய வியாபாரங்கள் (நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள்) செலுத்தத்தக்க வரிகளிலிருந்து எவ்வாறு நன்மையடைகின்றன?

தொழில்நிலையை உருவாக்குவதில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் பொருளாதாரத்தின் ஊக்கிகளாக விளங்குகின்றன.

உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடிக் காலப்பகுதியில் இத்தொழில்முயற்சியாளர்கள் சிக்கல்களை எதிர்கொண்டனர்.

இத்தொழில்முயற்சிகள் அவற்றின் வியாபாரங்களை மீளக்கட்டியெழுப்பும் பொருட்டு, அவை சேமிப்புக்கள், கடன், காப்புறுதி மற்றும் சந்தைகள் என்பனவற்றிற்கான பெருவழியை அமைத்துத்தருகின்ற முறையான பொருளாதாரத்தினை நோக்கிச்செல்ல வேண்டும்.

குறிப்பாக, கிராமப் புறங்களிலுள்ள நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் தகவல் சமச்சீரின்மையைக் கடந்து, செலுத்தத்தக்க வரிகளின் நன்மைகள் குறித்து விழிப்புடன் இருப்பது அவசியமாகும்.

### நிலையான வீதங்கள்

சிறிதளவு வரி வீதங்கள் (ஆயசபலெைட வுயஓ சுயவநள) - வருமானம் அடைப்புக்குறிகளினுள் பிரிக்கப்பட்டுள்ளதுடன் அடைப்புக்குறியினுள் உள்ள ஏதேனும் வருமானம் அடைப்புக்குறியின் வீதத்தில் வரிசெலுத்தப்படுகின்றது.

உதாரணம்: (2025 சனவரியில் நிலவிய வீதங்களையும் விதிகளையும் அடிப்படையாகக் கொண்டது)

| வரிசெலுத்தத்தக்க வருமானம் | மிகக்குறைந்த வீச்சிற்குச் சமமான வரி வரிசெலுத்தத்தக்க வருமானத்தின் மீதான வரி (இ.ரூ) | மிகக்குறைந்த வீச்சிலான மிகையான வரிசெலுத்தத்தக்க வருமானம் மீதான வரி |
|---|---|---|
| முதல் 1,000,000 | 60,000 | 6% |
| அடுத்த 500,000 | 90,000 | 18% |
| அடுத்த 500,000 | 1,20,000 | 24% |
| அடுத்த 500,000 | 1,50,000 | 30% |
| நிலுவை | | 36% |

### மதிப்பிடப்பட்ட தகைமைவாய்ந்த கொடுப்பனவுகள் (உதாரணம்) - வருமானத்திலிருந்து கழிக்கக்கூடியது

m) அறக்கட்டளைகள், அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க நிறுவனங்களுக்கான நன்கொடைகள், மற்றும் சனாதிபதி நிதியம்.

M) சமுர்த்தியின் மூலம் நன்மைபெறும் குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்குக் கடையொன்றை நிறுவுவதற்கான குடியிருப்பாளரொருவர் வழங்கிய பங்களிப்பு

வேறுபட்ட மூலங்களின் தனிநபரொருவரின் மொத்த வருமானத்திலிருந்து தகைமையுடைய நிவாரணங்கள்

அ) நியதிச் சட்ட நிவாரணம் - ரூ.1,200,00

ஆ) சூரிய படல (solar panel) நிவாரணம்

இ) வாடகை நிவாரணம்

irrespective of actual repair done)

## Income Tax Rates applicable for companies

Standard rate – 30%

Business of liquor, betting and gambling – 45%

### பெறுமதிசேர் வரிகளைப் பதிவுசெய்வதற்கான மட்டங்கள் -

(i) பொருட்கள் மற்றும் பணிகளின் பெறுமதி (நிதியியல் பணிகளைத் தவிர) - காலாண்டிற்கு ரூ. 20 மில்லியனையும் ஆண்டிற்கு ரூ. 80 மில்லியனையும் விஞ்சுகின்றது.

(ii) நிதியியல் பணிகளுக்கான பெறுமதி - காலாண்டிற்கு ரூ.3 மில்லியனையும் ஆண்டிற்கு ரூ. 12 மில்லியனையும் விஞ்சுகின்றது.

தன்னார்வ பதிவும் அனுமதிக்கப்படுகின்றது.

எடுத்துக்காட்டாக -

திரு. கருணாநாயக்க “கேடிடி (KDT)” நிறுவனத்தின் பிரதான நிதியியல் கட்டுப்பாட்டாளராவார். 2023/.2024 மதிப்பீட்டு ஆண்டிற்கு அவரது எதிர்பார்க்கப்படும் வருமானம் பின்வருமாறு

- தொழில்நிலை வருமானம் ரூ.6,600 (ரூ.550,00012)
- 2023.05.01 அன்று கிடைக்கப்பெற்ற மொத்த வட்டி வருமானம் ரூ.2,200,000 (முற்பண வருமான வரி 5% வீதத்தில் கழிக்கப்பட்டுள்ளது)
- வியாபார வருமானம் ரூ.5,000,000

மதிப்பீட்டு ஆண்டின் போது தேசிய வைத்தியசாலையின் கண் அறுவைச் சிகிச்சைப் பிரிவிற்கான உபகரணங்களைக் கொள்வனவுசெய்வதற்கு அவர் ரூ.250,000 இனை நன்கொடையாக வழங்கியுள்ளார். இதற்கு மேலதிகமாக, திரு. கருணாநாயக்க தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட தனது குடியிருப்பில் ரூ.750,000 செலவில் சூரிய படலத்தை நிறுவியுள்ளார்.

He paid taxes of Rs. 250,000 per quarter on self-assessed basis.

செலுத்தவேண்டிய வரிக் கணிப்பீடு

| | | |
|---|---|---|
| தொழில்நிலை வருமானம் | | 6,600,000 |
| வட்டி வருமானம் | | 2,200,000 |
| வியாபார வருமானம் | | 5,000,000 |
| மதிப்பிடத்தக்க வருமானம் | | **13,800,000** |
| கழிக்க - நிவாரணங்கள் | | |
| - தனியாள் நிவாரணம் | | (1,800,000) |
| - சூரிய படலம் | | (600,000) |
| கழிக்க - தகைமை கொடுப்பனவுகள் | | |
| - தேசிய வைத்தியசாலைக்கான நன்கொடை | | (250,000) |
| **மதிப்பிடப்பட்ட வரி செலுத்தத்தக்க வருமானம்** | | **11,150,000** |
| மதிப்பிடப்பட்ட வரிப் பொறுப்பு (2025 சனவரியில் நிலவிய வீதங்களை அடிப்படையாகக் கொண்டது) | 1,000,000 x 6% = 60,000 | |
| | 500,000 x 18% = 90,000 | |
| | 500,000 x 24% = 120,000 | |
| | 500,000 x 30% = 150,000 | |
| | 8,650,000 x 36% = 3,114,000 | |
| **மொத்த வரிப் பொறுப்பு** | | **3,534,000** |
| கழிக்க - முற்பண தனியாள் வருமான வரி | | (1,494,000) |
| மதிப்பிடப்பட்ட செலுத்தத்தக்க வரி (அ) | | (220,000) |
| - Self-assessed payments | | (1,000,000) |
| **Estimated Tax Payable (A)** | | **820,000** |

## கிராமிய நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான முறைப்படுத்தலின் நன்மைகளை வழங்குதல்:

- **நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் டின்னை பதிவுசெய்தல் வேண்டும் என்பதுடன் முறையான பொருளாதாரத்திற்கு மாறுதலடைதல் வேண்டும்.**
- **டின் உடன், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் தமது வருமானத்தை வைப்பு செய்யக்கூடிய நடைமுறைக் கணக்கைத் திறப்பதற்குத் தகைமையைப் பெறுகிறார்கள்.**
- **அவர்களின் வருமானம் ரூ.1,200,000 கொண்ட வரையறையை விடவும் அதிகரிக்கின்ற போது, வரிசெலுத்துவதற்கு வேண்டப்படுகின்றார்கள்.**
- **சிறிய தொகையைத் தவறாமல் வைப்பிலிடுவதள் மூலம் அவர்கள் ஓய்வூதிய சேமிப்பில் முதலீடு செய்யலாம் மற்றும் அவர்களின் எதிர்காலத் தேவைகளுக்குத் திட்டமிடலாம்.**
- This includes one-time earnings such as gifts, lottery winnings, or inheritance.

### சுருக்க வினாக்கள்∴ மதிப்பீடு

1. சிறிதளவு வரி வீதங்கள் மற்றும் பயனுள்ள வரி வீதம் என்றால் என்ன?
2. சிறிய வியாபாரங்கள் எவ்வகையிலான வரிகளைச் செலுத்துகின்றன? (வருமான வரி, முற்பண தனியாள் வருமான வரி, பெறுமதிசேர் வரி உள்ளடங்கலாக பதிலளிக்கவும்)
3. அரிப் மோட்டார் வானங்களைப் பழுதுபார்க்கும் கடையொன்றினை வைத்திருக்கிறார், 5 மாதங்களுக்கு மாதத்திற்கு ரூ. 100,000 மற்றும் எஞ்சிய 7 மாதங்களுக்கு மாதத்திற்கு ரூ. 150,000 உழைக்கின்றார். அவரிடம் பழைய முதலீடுகள் காணப்படுவதுடன் 2024.03.31 அன்றுள்ளவாறு 400,000 மொத்த வட்டியைப் பெறுகிறார். 2023∴24 மதிப்பீட்டு ஆண்டிற்கு அரிப் செலுத்த வேண்டிய வரியைக் கணிப்பிடுங்கள்?
4. வைத்தியர். வசுமதி, கரப்பிட்டிய வைத்தியசாலையின் பொது அறுவைசிகிச்சை நிபுணராவார். மேலும், அவரது சொந்த மருத்துவ நிலையத்தை நடத்திவருகின்றார். தனியார் மருத்துவ செயற்பாடுகளில் ஈடுபட்டு மேலதிக வருமானத்தை அவர் ஈட்டுகின்றார். 2023∴2024ஆம் மதிப்பீட்டு ஆண்டிற்கான அவரது வருமானம் பின்வருமாறு

   i. தொழில்நிலை வருமானம் ரூ.9,200,000 ஆகும்.

   ii. அவரது சொந்த மருத்துவ நிலையத்திலிருந்தான தொழில்முறைசார் வருமானம் ரூ.31,000,000 ஆகும்.

   iii. 2023.06.01 அன்று கிடைக்கப்பெற்ற மொத்த வட்டி வருமானம் ரூ.5,000,000 ஆகும்.

   iv. தனியார் செயற்பாடுகளிலிருந்தான வருமானம் ரூ. 5,000,000 ஆகும்.

   v. வாடகை வருமானம் ரூ.900,000 ஆகும்

   vi. தொழில்நிலை வருமானம் மதிப்பிடப்பட்ட காசையும் காசல்லா நன்மைகளையும் உள்ளடக்கின்றது.

   vii. அங்கீகரிக்கப்பட்ட அறக்கட்டளையொன்றுக்கு ரூ. 200,000 நன்கொடை அளித்துள்ளார், அத்துடன் தனது வளாகத்தில் பொருத்தவும் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கவும் சூரிய படலத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இவ்வாண்டில் ரூ.1,200,000 செலவிட்டுள்ளார்.

2023/2024ஆம் மதிப்பீட்டு ஆண்டிற்கு அவர் செலுத்த வேண்டிய வரியைக் கணிப்பிடுக. (மூலம்: IRD SET வழிகாட்டல் 2023/24)

## References

Kotler, P., & Keller, K. L. (2016). Marketing management (15th ed.). Pearson.

Paul Anthony Samuelson. (1997). Economics: an introductory analysis. Mcgraw-Hill.

Porter, M. E. (1990). The Competitive Advantage of Nations.

Department of Census and Statistics. (2019). Department of Census and Statistics-Sri Lanka. Statistics.gov.lk. http://www.statistics.gov.lk

Central Bank of Sri Lanka. (2019). Central Bank of Sri Lanka. Cbsl.gov.lk. https://www.cbsl.gov.lk/

Pandey, I. M. (2015). Financial management. Vikas Publishing House Pvt Ltd.

Lipsey, R., & Chrystal, A. (2015). Economics (13th ed.). Oxford University Press.

Brealey, R. A., Myers, S. C., & Allen, F. (2014). Principles of corporate finance. (11th ed.). Mcgraw-Hill Education.

Smart, S. J., Gitman, L. J., & Joehnk, M. (2013). Fundamentals of Investing. Pearson Higher Ed.

Bodie, Z., Kane, A., & Marcus, A. J. (2018). Investments. McGraw-Hill Education, Cop.

Brigham, E. F., & Houston, J. F. (2009). Fundamentals of financial management. South-Western/Thomson Learning, Cop.

Charles Parker Jones, & Jensen, G. R. (2016). Investments: analysis and management. Wiley.

Securities & Exchange Commission – Just another WordPress site. (n.d.). https://www.sec.gov.lk/

Colombo Stock Exchange. (n.d.). Colombo Stock Exchange. http://www.cse.lk

Kapoor, J. R., Dlabay, L. R., & Robert James Hughes. (2017). Personal finance. Mcgraw-Hill Education.

Ryan, J. S. (1996). Managing Your Finances. South Western Educational Publishing.

Maslow, A. H. (1954). Motivation and personality. Harper & Row.

Abeysuriya, R. (n.d.). Financial Literacy to Achieve Your Financial Wellbeing (2nd ed.) [Review of Financial Literacy to achieve financial wellbeing]. CFA Society Sri Lanka.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**Regional Development Department**
**Central Bank of Sri Lanka**
No. 30, Janadhipathi Mawatha
Colombo 01, Sri Lanka
www.rdd.cbsl.lk

**United Nations Development Programme (UNDP)**
UN Compound,
202-204,
Bauddhaloka
Mawatha,
Colombo 7,
Sri Lanka.